APPOLO STUDY CENTRE

# POLITICAL SCIENCE
## TEST - 3

| | | |
|---|---|---|
| **12th Civics** | **Unit 3** | ஆட்சித்துறை |
| | **Unit 4** | இந்திய நீதித்துறை |
| | **Unit 5** | இந்தியாவில் கூட்டாட்சி |
| | **Unit 6** | இந்தியாவில் நிர்வாக அமைப்பு |
| | **Unit 7** | தேச கட்டமைப்பின் சவால்கள் |
| | **Unit 8** | திட்டமிடலும் வளர்ச்சி அரசியலும் |
| | **Unit 9** | இந்தியாவும் உலகமும் |
| | **Unit 10** | இந்தியாவும் அண்டை நாடுகளும் |
| | **Unit 11** | **சர்வதேசஅமைப்புகள்** |
| | **Unit 12** | **சுற்றுசூழல் அக்கறைகளும் உலகமயமாக்கலும்** |

12 ம் வகுப்பு
அலகு– 3

# ஆட்சித்துறை

**அறிமுகம்:**
**அரசின் கட்டமைப்பு:**
**ஒன்றிய ஆட்சித்துறை:**
- ❖ இந்தியக் குடியரசுத்தலைவர்
- ❖ இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர்
- ❖ பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைக் குழு

இந்திய அரசமைப்பின் முன்னுரையில் இந்தியாவை ஒரு இறையாண்மை, சமதர்ம, மதசார்பற்ற, மக்களாட்சி மற்றும் குடியரசு பெற்ற நாடு என்று அறிவிக்கிறது. இங்கு இங்கிலாந்தைப் போல் முடியாட்சியாக அதாவது அரசரோ, அரசியோ மன்னர்களாக ஆட்சியில் இல்லாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால்தான் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்தியக் குடியரசுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேசிய அரசின் அனைத்து அரசமைப்புத் துறைகளின் தலைவராக இந்தியக் குடியரசுத்தலைவர் விளங்குகிறார். (எ.கா) சட்டம், நிர்வாகம், நீதி மற்றும் ஆயுதப்படை ஆகிய துறைகளின் செயல்பாடுகளை குடியரசுத்தலைவர் மேற்பார்வையிடுகிறார். மேலும் அரசமைப்புச் சட்டங்களுக்குட்பட்டு இத்துறைகள் செயல்படுவதை இவர் உறுதிப்படுத்துகிறார்.

இந்திய நாட்டின் முழு அரசமைப்பு, பிரதிநிதித்துவம் மற்றும் மாநில செயல்பாடுகளை ஒவ்வொரு மண்டலத்திலும் குடியரசுத்தலைவர் நிலை நிறுத்துகிறார். ஆனால் அமெரிக்ககுடியரசுத்தலைவரை போல் உண்மையான செயல் அதிகாரம் இல்லாமல் பெயரளவில் மட்டும்அதிகாரத்தைக் கொண்டுள்ளார். குடியரசுத்தலைவரது பெயரால், அவரது தலைமையில் அல்லது மேற்பார்வையில் நிர்வாகம் நடைபெறுகின்றதே தவிர, நேரடியான, செயலளவிலான நிர்வாகம் பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவிடம்தான் உள்ளது. அந்த அமைச்சரவையும் நாடாளுமன்றத்திற்கு பொறுப்புடையது. இதைத்தான் நாடாளுமன்ற ஆட்சிமுறை என்கிறார்கள். மேலும் நடைமுறையில் உண்மையான அதிகாரங்கள் அனைத்தும் பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைக் குழுவிடம் உள்ளது. இவ்வாறு இந்தியக் குடியரசானது அமெரிக்க குடியரசிலிருந்து வேறுபடுகிறது.

**குடியரசுத்தலைவர்:**
இந்தியத் தேசத்தின் தலைவராக குடியரசுத்தலைவர் இருக்கிறார். அவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவர். மேலும், தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, மற்றும் நிலைத்தன்மை சின்னமாக அவர் திகழ்கிறார்.

**குயடிரசுத்தலைவர் தகுதி மற்றும் தேர்தல்:**
**உறுப்பு 58:**

1. இந்தியக் குடியரசுத்தலைவருக்கான தகுதிகள்:

    - ❖ இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
    - ❖ 35 வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.
    - ❖ ஒரு மக்களவை உறுப்பினராவதற்கான அனைத்து தகுதிகளும் கொண்டிருத்தல் வேண்டும்.

2. மத்திய மாநில அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ அவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள எந்த ஒரு அமைப்பிலோ ஆதாயம் தரக்கூடிய எந்த பதவியில் இருந்தாலும், அவர் குடியரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவராகிறார்.

    மேலும் அரசமைப்பின் 52-வது உறுப்பு குடியரசுத்தலைவர் பதவிக்கான குறைந்தபட்சம் 50 தேர்வுக்குழு வாக்காளர்களால் முன்மொழிவு செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் வேட்பாளர் தேர்வுக் குழுவின் 50 உறுப்பினர்கள் மூலம் வழிமொழியப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. மேலும் ஒவ்வொரு வேட்பாளரும் 15,000 ஐ இந்திய ரிசர்வ் வங்கியில் வைப்பு தொகையாக கட்ட வேண்டும்.

| இந்திய அரசமைப்பின் 52-வது உறுப்பு இந்தியாவிற்கு ஒரு குடியரசுத்தலைவர் இருக்க |
|---|

வேண்டுமென்கிறது. உறுப்புரிமையின் 53-வது உறுப்பு இந்திய ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தை அவருக்கு அளிப்பதுடன் அவற்றை நேரடியாகவோ மறைமுகமாகவோ செயல்படுத்த வகை செய்கிறது.

பதிவான வாக்குகளில் ஆறில் ஒரு பங்கை ஒரு வேட்பாளர் பெறவில்லையெனில் இந்த தொகை அவருக்கு திருப்பித்தரப்படாது.

இந்தியக் குடியரசுத்தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவதில்லை. மாறாக, கீழ்கண்டவர்களை உறுப்பினர்களாக கொண்ட வாக்காளர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

- நாடாளுமன்றத்தின் ஈரவைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.

- மாநிலங்களின் சட்டசபைகளின் கூட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.

- டெல்லி மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்.

குடியரசுத்தலைவர் தேர்தல், ஒற்றை மாற்றத்தக்க வாக்கெடுப்பு மற்றும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நடைபெறுகிறது. இந்த முறை வெற்றிகரமான வேட்பாளர் முழுமையான பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெறுகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது.

$$\text{தேர்தல் வெற்றி} = \frac{\text{தேர்தலில் வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை}}{\text{தேர்வு செய்யப்பட வேண்டிய வேட்பாளர் எண்ணிக்கை}}$$

தேர்தல்போது ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்குச்சீட்டு மட்டுமே தரப்படுகிறது. வாக்காளர், வாக்களிக்கும் வேட்பாளர்களின் பெயர்களுக்கு எதிராக 1,2,3,4 போன்றவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் தனது விருப்பங்களை சுட்டிக்காட்ட வேண்டும். வாக்காளர், வேட்பாளர்களை தமது விருப்பத்திற்குகேற்ப 1,2,3,4 என வரிசைப்படி முன்னுரிமைகளைக் குறிக்கிறார்கள். முதல் கட்டத்தில், முதல் விருப்பம் வாக்குகள் கணக்கிடப்படுகின்றன. ஒரு வேட்பாளர் இந்த கட்டத்தில் தேவையான ஒதுக்கீட்டைப் பெற்றால், அவர் தேர்ந்தெடுக்கப்படுவர். இல்லையெனில்,வாக்குகளை மாற்றுவதற்கான செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது. வாக்கெடுப்பில் முதல் விருப்பவாக்கில் குறைந்த வாக்குகள் பெற்று வேட்பாளரை நீக்கிவிட்டு அவர்களின் இரண்டாம் விருப்ப வாக்குகள் மற்றவர்களுக்கு மாற்றப்படுகிறது. ஒரு வேட்பாளர் தேவைப்படும் வாக்குகள் கிடைக்கும் வரை இந்தச் செயல்முறை தொடர்கிறது.

**குடியரசுத்தலைவரின் பதவிப் பிரமாணம்:**

குயடிரசுத்தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற ஒருவர் குடியரசுத்தலைவராக பதவி பிரமாணம் ஏற்கிறார். கீழ்க்கண்ட உறுதி மொழிகளைப் பதவி பிரமாணத்தின்போது அவர் அளிக்கிறார்.

- பதவியில் உண்மையுடன் பணியாற்றுவது.
- அரசமைப்பு மற்றும் சட்டத்தைப் பாதுகாப்பது.
- இந்தியாவின் மக்கள் சேவை மற்றும் நல்வாழ்விற்காக தன்னை அர்ப்பணிப்பது ஆகியவற்றை உறுதிமொழியாக ஏற்கிறார்.

இந்தியாவின் தலைமை நீதிபதி குடியரசுத்தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார். தலைமை நீதிபதி இல்லாதபோது உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி அப்பதவி பிரமாணத்தை செய்து வைக்கிறார்.

**குடியரசுத்தலைவருக்கான வசதிகள் அல்லது சலுகைகள்:**

- அவரது அதிகாரப்பூர்வ இல்லத்தினை (ராஷ்டிரபதி பவன்) வாடகையின்றி பயன்படுத்த அவருக்கு உரிமையுண்டு.

- நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து ஊதியம், படிகள், தனி உரிமைகளையும் அனுபவிக்க அவருக்கு உரிமையுண்டு.

❖ குடியரசுத்தலைவர் மேலும் சில சலுகைகளும் விதி விலக்குகளும் தரப்பட்டுள்ளன. அவர் தனது அதிகாரப்பூர்வ நடவடிக்கைளுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளினின்று தனிப்பட்ட விலக்கு பெறுகிறார். அவரது பதவி காலத்தின் போது,அவருக்கு அனைத்து குற்றவியல் நடவடிக்கைகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது.

**பதவிக்காலம், பதவி நீக்கம், பதவியை நிரப்புவது பற்றிய விதிமுறைகள் :**

**பதவிக்காலம்:**

குடியரசுத்தலைவர் தனது அலுவலகத்தில் நுழைந்த தேதி முதல் ஐந்து வருட காலத்திற்கு குடியரசுத்தலைவராக பதவி வகிப்பார் என்று இந்திய அரசமைப்பு உறுப்பு 56 கூறுகிறது. எனினும் குடியரசுத் துணைத்தலைவரிடம் பதவி விலகல் கடிதத்தை கொடுப்பதன் மூலம் எந்த நேரத்திலும் தனது பொறுப்பிலிருந்து விலக முடியும். நாடாளுமன்றத்தால் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலமும், இதைத்தவிர குற்றம் சாட்டப்படுவதன் மூலமும் அவரை பதவி நீக்கம் செய்ய முடியும். குடியரசுத்தலைவராக இருப்பவர் மீண்டும் அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட தகுதியுடையவராவார்.

தமது பதவியை குடியரசுத்தலைவர் ஐந்து வருட காலத்திற்கு அல்லது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர் பதவி ஏற்கும் வரை பொறுப்பில் தொடரலாம்.

**பதவி நீக்கம்:**
அரசமைப்பின் 61-வது உறுப்பு, குடியரசுத்தலைவர் மீது குற்றம் சாட்டி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஒரு விரிவான நடைமுறைகளை தந்துள்ளது.

குடியரசுத்தலைவர் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு முதலாவதாக, நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும், அதன் மொத்த உறுப்பினர்களில் நான்கில் ஒரு பகுதியினரால் கையொப்பமிடப்பட்ட தீர்மானத்தின் மூலம் ஒரு குற்றச்சாட்டை முன்வைக்க வேண்டும். குறைந்தபட்சம் 14 நாட்கள் முன்கூட்டியே அறிவிப்பு வழங்குவதன் மூலம் அத்தகைய தீர்மானம் ஒரு சபையால் விவாதிக்கப்படும் போது, அவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும். அது மற்ற அவையால் பின்னர் விசாரணை செய்யப்பட வேண்டும்.

விசாரணையின் பின்னர், அதன் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரின் ஒப்புதலுடன் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அந்த தீர்மானத்தை நிறைவேற்றும் நாள் முதல் அந்த குடியரசுத்தலைவர் பதவியில் இருந்து பதவி நீக்கம் செய்யப்படுவார்.

**பதவியை நிரப்புவது**

குடியரசுத்தலைவரின் பதவி கீழ்க்கண்ட வழிகளில் காலியாகலாம்.

1. ஐந்து ஆண்டுகளில் பதவிக் காலம் முடிவடைந்த நிலையில்
2. அவரது பதவி விலகல் மூலம்
3. நாடாளுமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்படுவதன் மூலம்
4. அவரது மரணத்தின் மூலம்
5. அவர் தகுதியை இழந்தால் அல்லது அவரது தேர்தல் செல்லாது என அறிவிக்கப்பட்டால்

நாடாளுமன்றத்தால் பதவி நீக்கம் அல்லது இறப்பு ஆகியவற்றில் குடியரசுத்தலைவர் பதவி காலியாகும் போது, ஆறு மாதங்களுக்குள் புதிய குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப்பட வேண்டும். இடைப்பட்ட காலத்தில் குடியரசுத் துணைத்தலைவர் குடியரசுத்தலைவராக செயல்படுவார். மேலும், பதவியில் இருக்கும் குடியரசுத்தலைவர், நோய், இயலாமை அல்லது வேறு காரணங்களால் தமது பதவிக்குரிய செயல்களை செய்ய முடியாத நிலை ஏற்பட்டாலும் குடியரசுத்தலைவர் திரும்பவும் தன் பொறுப்பினை செயல்படுத்த முன்வரும் வரை குடியரசுத் துணைத்தலைவர் அவரது பணிகளை மேற்கொள்வார்.

**குடியரசுத் தலைவரின் பணிகளும் அதிகாரங்களும்:**

குடியரசுத்தலைவரின் பணிகளும் அதிகாரங்களும் பரந்துபட்டவை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதும், உரையாற்றுவதும், ஒத்திவைப்பதும் அவரே. வெவ்வேறு துறைகளில் முன்னணியிலுள்ள 12 உறுப்பினர்களை மாநிலங்களவைக்கும் இரண்டு ஆங்கிலோ - இந்தியப் பிரதிநிதிகளை மக்களவைக்கும்

அவரே நியமனம் செய்கிறார். நாடாளுமன்றத்திலிருந்து வரும் நிதி சாராத முன்வரைவுகளை மீண்டும் மறுபரிசீலனை செய்வதற்காக திருப்பி அனுப்பவும் மறுதலிக்கவும் அவருக்கு அதிகாரமுள்ளது. நாடாளுமன்றத்தின் முன்வரைவுக்கு ஒப்புதல் பெறும்பொருட்டு ஈரவைகளின் கூட்டுக் கூட்டத்தை அழைக்கவும் அவருக்குள் உரிமை உண்டு. அவரால் ஆறு மாத காலத்துக் மிகாத அவசரச் சட்டத்தை அறிவிக்கவும் முடியும். மாநிலச் சட்டங்களை மறுதலிக்கவும் அவருக்கு அதிகாரமுள்ளது. பிரதமர் தலைமையிலான அமைச்சரவையை அமைக்க அவர் உந்துதலாகவும், அவர்களை நியமிப்பவராகவும் உள்ளார். அத்துடன் அத்தகைய அமைச்சரவை நாடாளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றதாக இருப்பதை உறுதி செய்பவராகவும் குடியரசுத்தலைவர் அதிகாரம் பெற்றுள்ளார். குடியரசுத்தலைவர் மட்டுமே அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கிறார். கூட்டத்தை அழைக்கவும் அவருக்குள் உரிமை உண்டு. அவரால் ஆறு மாத காலத்துக் மிகாத அவசரச் சட்டத்தை அறிவிக்கவும் முடியும். மாநிலச் சட்டங்களை மறுதலிக்கவும் அவருக்கு அதிகாரமுள்ளது. பிரதமர் தலைமையிலான அமைச்சரவையை அமைக்க அவர் உந்துதலாகவும், அவர்களை நியமிப்பவராகவும் உள்ளார். அத்துடன் அத்தகைய அமைச்சரவை நாடாளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றதாக இருப்பதை உறுதி செய்பவராகவும் குடியரசுத்தலைவர் அதிகாரம் பெற்றுள்ளார். குடியரசுத்தலைவர் மட்டுமே அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கிறார். மக்களவையின் ஆதரவை இழந்து விடுகின்றபோது அந்த அமைச்சரவையை கலைத்து விடவும் முடியும். அரசமைப்பின் படியான பல்வேறு உறுப்புகளுக்கு, குறிப்பாக நீதித்துறை, ஆயுதப்படைகள், தூதரகக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளார். நெருக்கடி (அவசர நிலை) நிலைக் காலத்தில் குடியரசுத்தலைவரின் எல்லையற்ற அதிகாரம் பெற்றுள்ளார். எந்தச் சட்டத்தையும் தற்காலிகமாக முடக்கிவிட முடியும். குறிப்பிட்ட காலத்திற்கு அமைச்சரவைகளையும், சட்ட மன்றங்களையும் கலைத்துவிடவும் முடியும். இவருக்கு மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்திடவும் அதிகாரமுள்ளது.

| ஆட்சித்துறை | சட்டத்துறை | நிதித்துறை | நீதித்துறை | நெருக்கடிக்கால அதிகாரங்கள் | இதர அதிகாரங்கள் |
|---|---|---|---|---|---|
| குடியரசுத் தலைவரது பெயரால் நிர்வாகத்தை நடத்துவது. அரசுப் பொறுப்புகளை நடைமுறைப் படுத்துவதற்கான விதிகளை உருவாக்குவது அமைச்சர்களுக்கு பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பது | நாடாளுமன்றத்தின் அவைகளின் கூட்டங்களைக் கூட்டுவது, மக்களவையை ஒத்திவைப்பது மற்றும் மக்களவையை கலைத்தல் | குடியரசுத்தலைவரது முன் அனுமதியுடன் மக்களவையில் நிதி முன்வரைவை அறிமுகப்படுத்துவது | தமது கருணைக்காட்டும் உரிமையைப் பயன்படுத்தி தண்டணைகளை மாற்றி அமைப்பது, விலக்குஅளிப்பது, மன்னிப்பு வழங்குவது, தண்டணையைக் குறைப்பது, ஒத்தி வைப்பது | மூன்று விதமான நெருக்கடிகளைச்சமாளிப் பதற்கு குடியரசுத் தலைவருக்கு தனிச்சிறப்பானஅதிகாரங் களை அரசமைப்பு வழங்கியுள்ளது. 1. தேசிய நெருக்கடி (உறுப்பு – 352) 2. குடியரசுத்தலைவரின் ஆட்சி(உறுப்பு–356அ365) 3. நிதி நெருக்கடி (உறுப்பு 360) | பொது மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு விவகாரத்தைப் பற்றியும் சட்டம் அல்லது உண்மைகளைப் பற்றி உச்ச நீதி மன்றத்தின் கருத்தினைக் கோருதல் |
| அமைச்சரவைக் குழு முக்கிய முடிவுகளைப் பற்றி அறிந்திருப்பதும், அமைச்சர்கள் குழுவின் கவனத்திற்கும் பரிசீலனைக்கும் எந்த ஒரு விஷயத்தையும் கொண்டு வருவது | மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களையும் மக்களவைக்கு இரு உறுப்பினர்களையும் நியமனம் செய்வது | இந்தியாவின் ஒதுக்கீடு செய்யப் படாத நிதியத்தின் மீது கட்டுப்பாட்டினை வைத்திருத்தல் | உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் முதன்மை நீதிபதிகளையும் ஏனைய நீதிபதிகளையும் நியமிப்பது | அசரமைப்பு 352 – வது உறுப்பு குடியரசுத் தலைவர் போர், வெளியிலிருந்து ஆக்ரமிப்பு மற்றும் உள்நாட்டுக் கலகங்கள் மூலம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது தேசிய அளவில் நெருக்கடி நிலையை அறிவிக்கிறார். | உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் எண்ணிக்கையை முடிவு செய்வது |
| முக்கியமான பொறுப்புகளுக்கு நியமனங்கள் செய்வதும், நீக்குவதும் | நாடாளுமன்றக் கூட்டங்களின் துவக்க உரையை நிகழ்த்துவது. நாடாளுமன்றத்திற்கு தகவல்கள் அனுப்புவது | நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கச் செய்தல் | எந்த ஒரு சட்டம் அல்லது பொருள் குறித்து உச்சநீதி மன்றத்தில் ஆலோசனையை நாடுவது | ஒரு மாநிலத்தில் அரசமைப்பு நிர்வாகம் செயலிழந்து போகும் போது அரசமைப்பு உறுப்பு 356-கீழ் குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்கிறார். | ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணைய அமைப்பு மற்றும் விதிகளை உருவாக்குதல் |
| அயல்நாடுகளுடனான உறவுகளைக் கையாள்வது | நீதிசாராத முன்வரைவுகள் மீது முழுமையான அல்லது தற்காலிக மறுதலிப்பு அதிகாரத்தைப் பயன்படுத்துவது | நிதிக் குழுவை நியமனம் செய்தல் | | எப்போதும் ஒரு மாநிலம் தேசிய அரசின் கட்டளைகளை அல்லாத அரசமைப்பு விதிகளுக்கு இணங்க மறுக்கிறாரோ அப்போது குடியரசுத்தலைவரின் ஆட்சியை அம்மாநிலத்தில் | ஆட்சி மொழிக் குழுவை அமைப்பது மற்றும் ஆட்சி நடத்துவதில் படிப்படியாக ஹிந்தி மொழியின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்யும் குழுவின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | புகுத்துவதற்கு உறுப்பு 365 வழிவகை செய்கிறது. | பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது. |
| முப்படைகளின் தலைவராக இருப்பது | சில வகையான முன்வரைவுகளை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கான அனுமதியை வழங்குவது | வருமான வரியிலிருந்து மாநிலங்களுக்கான பங்கினை முடிவு செய்தல், அசாம்,பீகார், ஒடிசா,மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சணற்பொருட்களுக்கான ஏற்றுமதி வரிகளுக்கு மாற்றாக தரவேண்டிய மானியங்களை முடிவு செய்தல் | | இந்தியாவின் நிதியில் நிலையற்ற தன்மையும் வருவாயும் அச்சுறுத்தலில் உள்ளதாக குடியரசுத் தலைவருக்குத் தோன்றினால் நிதி நெருக்கடி நிலைமையைப் பிரகடனம் செய்ய உறுப்பு 360 வகை செய்கிறது | ஜம்மு – காஷ்மீர் நிர்வாகத்திற்கான சிறப்பு ஒழுங்காற்று விதிகளை உருவாக்குவது |
| உச்சநீதிமன்றம் மற்றும் இதர சுயேட்சையான அமைப்புகளுக்கான நடைமுறை விதிகளையும் வரையறைகளையும் அங்கீகரிப்பது | நாடாளுமன்றம் நடப்பில் இல்லாத போது அவசரச் சட்டங்களைச் பிறப்பிப்பது. | | | | பட்டியலிடப்பட்டமற்றும் பழங்குடியினர் பகுதி களை நிர்வாகம் செய்வதற்கான சிறப்பு சட்டங்களையும் விதிக ளையும்உருவாக்குதல் |
| மாநிலஅரசுகளுக்கான வழிகாட்டுதல்களையும், ஆணைகளையும் அனுப்புவது மற்றும் அரசமைப்பு இயந்திரம் செயலற்றுப்போகும் போது மாநில அரசின் மீது அரசமைப்பு 356-வது உறுப்பை நிறைவேற்றுவது | வெவ்வேறு குழுக்களுடைய அறிக்கைகளையும், பரிந்துரைகளையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கச் செய்வது | | | | |
| ஒன்றியஆளுகைக்குட்பட்டப் பகுதி மற்றும் பட்டியலின மற்றும் பழங்குடியினப்பகுதிகளை நிர்வாகம் செய்வது | மக்களவையின் இடைக்கால அவைத் தலைவரை நியமிப்பது | | | | |
| | துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் தொடர்பான சட்டங்களை நீட்டிப்பதுமாற்றியமைப்பது அல்லது நீக்குவது | | | | |
| | சில குறிப்பிட்ட மாநிலச் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள் மீது முழுமை யான மறுதலிப்பு அதிகாரத்தைப் பயன்படுத்துவது | | | | |

**குடியரசுத் துணைத்தலைவர்:**

அமெரிக்க அரசமைப்பினைப் போன்று இந்திய அரசமைப்பும் துணைக் குடியரசுத்தலைவர் பதவியை (இந்திய அரசமைப்பு உறுப்பு – 63) வழங்குகிறது. இந்தியாவின் துணைத் குடியரசுத்தலைவர் பதவி நாட்டின் இரண்டாவது மிக உயர்ந்த பதவியாகும்.

**தேர்தல்:**

இந்தியத் குடியரசுத் துணைத்தலைவர் நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் விகிதாச்சார முறையில் மாற்றத்தக்க ஒற்றை வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**தகுதிகள்:**

இந்திய குடியரசுத் துணைத்தலைவர் பதவிக்கு போட்டியிடுபவர் கீழ்க்காணும் தகுதிகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1. இந்தியாவின் குடிமகனாக இருக்க வேண்டும்.
2. 35 வயதை நிறைவு செய்திருக்க வேண்டும்.
3. மாநிலங்களவை உறுப்பினராவதற்கு தகுதிவாய்ந்தவராக இருக்க வேண்டும்.
4. ஊதியம் பெறும் எந்த பதவியிலும் இருக்கக்கூடாது. மேலும் குடியரசுத் துணைத்தலைவருக்கான தகுதிகள், குடியரசுத்தலைவருக்கான தகுதிகள் ஒட்டியே உள்ளது.

**பதவிக்கான வரையறைகள்:**

குடியரசுத் துணைத்தலைவர் ஐந்து வருட காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவார். குடியரசுத்தலைவரிடம் தனது பதவி விலகல் கடிதத்தை கொடுப்பதன் மூலம் தனது பதவிக்காலம் முடிவதற்கு முன்னதாக அவர் தனது பதவியிலிருந்து தாமாகவே பதவி விலகலாம். மாநிலங்களவை உறுப்பினர்களின் அறுதிப் பெருபான்மை ஆதரவோடு, மக்களவையின் ஒப்புதலோடு அவருக்கெதிராக தீர்மானம் நிறைவேற்றப்படுவதின் மூலம் அப்பதவியிலிருந்து அவரை நீக்க முடியும். ஆனால் அத்தகைய தீர்மானத்திற்கு 14 நாட்கள் முன்னறிப்பு அவசியமாகும்.

**பொறுப்புகளும் பணிகளும்:**

குடியரசுத் துணைத்தலைவர் அப்பதவியினால் மாநிலங்களவையின் அலுவல்வழி தலைவராகிறார் (இந்திய அரசமைப்பின் 64-வது உறுப்பு). அவர் மாநிலங்களவைக் கூட்டங்களை நடத்துகிறார். மக்களவையில் சபாநாயகர் போன்றே, இவருக்கு மாநிலங்களவையில் அதிகாரம் உள்ளது. மாநிலங்களவையின் தலைவர் என்ற நிலையில் மட்டுமே இவர் ஊதியம் பெறுகிறார். ஏனெனில் குடியரசுத் துணைத்தலைவர் பதவிக்கு என எந்த ஊதியமும் இல்லை. குடியரசுத்தலைவரின் இறப்பு அல்லது பதவி நீக்கம் ஆகியவற்றின் காரணமாக காலியிடம் ஏற்பட்டால் அல்லது வேறு ஒரு குடியரசுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படும்வரை குடியரசுத் துணைத்தலைவரே அந்த பதவியை கூடுதலாக வகிப்பார். இந்த காலம் ஆறு மாதங்களுக்கு மட்டுமானது ஆகும். இந்தியக் குடியரசுத்தலைவராக செயல்படும் போது குடியரசுத் துணைத்தலைவரின் ஊதியம், இதர படிகள், நாடாளுமன்ற முடிவுகள் படி பெறுகிறார். அதேநேரத்தில் அவர் மாநிலங்களவையின் தலைவராக செயல்பட முடியாது.

**பிரதமர் மற்றும் அமைச்சர்கள் குழு:**

பிரதமர் என்பவர் சமமான (அமைச்சர்களில்) முதன்மையானவர். அத்துடன் காபினட் (அமைச்சர்கள் குழு) அமைப்பின் அடிப்படைத் தூணாகவும் உள்ளார். அப்பதவியும் பொறுப்பும், அப்பதவி இருக்கும் வரையிலும் ஒப்பிடமுடியாத ஒன்றாகவும். தனிச்சிறப்புமிக்க அதிகார மையமாகவும் விளங்குகிறது.

**பிரதமர்:**

**ஆட்சித்துறை:**
அரசமைப்பு ஒரு குழுவிடம் நிர்வாகப் பொறுப்பைத் தந்துள்ளது. அதாவது பிரதமரின் தலைமையிலான அமைச்சரவைக் குழுவிடம் நிர்வாக பொறுப்பு தரப்பட்டுள்ளது.

**பொருள்:**
நாட்டில் கொள்கைகளை உருவாக்கவும், முக்கிய முடிவுகளை எடுக்கவும், அவற்றை அமல்படுத்தவும் அரசமைப்பு மற்றும் சட்டங்களின் மூலம் ஒரு குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மத்திய அரசில் இரு முக்கியமான உறுப்புகள் உள்ளன.

- ஒன்றிய சட்டமன்றம் அல்லது ஒன்றிய நாடாளுமன்றம்
- ஒன்றிய ஆட்சித்துறை

இதற்கு முந்தைய பாடப்பிரிவில் ஒன்றிய சட்டமன்றம் (நாடாளுமன்றம்) பற்றி அறிந்து கொண்டிர்கள். இப்போது ஒன்றிய ஆட்சித்துறையைப் பற்றி பரிசீலிப்போம். இந்திய அரசமைப்பின் ஐஏ பகுதியிலுள்ள 52 முதல் 78 வரையிலான உறுப்புகள் ஒன்றிய ஆட்சித்துறையைப் பற்றிக்கூறுகின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற ஆட்சிமுறையை, அதாவது பிரதமரை அரசின் தலைவராகக் கொண்டுள்ள முறையை இந்திய அரசமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. பிரதமர் மிக முக்கியமான அரசியல் நிறுவனமாய் இருக்கிறார். ஆனாலும் அமைச்சரவையில் சமமானவர்களில் முதன்மையானவராக அவர் திகழ்கிறார்.

**நியமனம்:**
பிரதமரின் தேர்வு மற்றும் நியமனம் பற்றிய குறிப்புகள் எதுவும் அரசமைப்பில் இல்லை. பிரதமர் பதவிக்கு நேரடித் தேர்தல் எதுவும் இல்லை. அரசமைப்பின் 75-வது உறுப்பு பிரதமரை குடியரசுத்தலைவர் நியமனம் செய்வதாக கூறுகிறது. ஆனால் பிரதமரைத் தன்னிச்சையாக குடியரசுத்தலைவர் தேர்வு செய்ய இயலாது. மக்களவையில் பெரும்பான்மையுள்ள கட்சி அல்லது கட்சிகளின் கூட்டணியின் தலைவரையே பிரதமராகக் குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார். எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், பெரும்பான்மை ஆதரவைத் திரட்டக்கூடியவர் எனக் குயடிரசுத்தலைவரால் கருதப்படுகின்ற ஒருவரை பிரதமராக நியமனம் செய்வார். பிரதமருக்கென குறிப்பிட்ட பதவிக்காலம் எதுவும் இல்லை. பெரும்பான்மை கொண்ட கட்சி அல்லது கட்சிகளின் தலைவராக இருக்கும் வரையில் அவரே பிரதமராகத் தொடர்வார்.

**பணிகள்:**

பிரதமரின் முதன்மையானதும் முக்கியமானதுமான பொறுப்பு அவரது அமைச்சரவையின் உறுப்பினர்கள் பட்டியலைத் தயாரிப்பதே. அவர் அந்த பட்டியலுடன் குடியரசுத்தலைவரை சந்தித்து, ஒப்புதல் பெற்றவுடன் அமைச்சரவை அமைக்கப்படுகிறது. மிக முக்கியமான அமைச்சர்கள் காபினட் அந்தஸ்து கொண்ட அமைச்சர்களாக அறிவிக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் மாநில அமைச்சர்கள் என்றும் மூன்றாம் நிலையிலுள்ளவர்கள் துணை அமைச்சர்கள் என்றும் அறியப்படுவர். பிரதமர் விரும்பினால் ஓர் அமைச்சரை துணைப்பிரதமர்என அறிவிக்க முடியும். பிரதமரின் ஆலோசனையின்படி குடியரசுத்தலைவர் அமைச்சர்களுக்குரிய துறைகளை ஒதுக்குவார். பிரதமர் எந்த துறை அல்லது துறைகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியும். அவ்வப்போது அமைச்சர்களின் பொறுப்புகளை மாற்றியமைக்க குடியரசுத்தலைவருக்கு பிரதமர் ஆலோசனை வழங்கலாம். அதுபோன்று ஒரு துறையை இரண்டாகவோ மூன்றாகவோ பிரிக்கலாம் அல்லது இரண்டு. மூன்று துறைகளை ஒரே துறையாகவும் இணைக்கலாம்.

**பிரமரின் முதன்மை நிலை கீழே தரப்பட்டுள்ள காரணிகளால் தெளிவாகிறது:**

1. மக்களவையின் பெரும்பான்மை கொண்ட கட்சியின் தலைவராக அவர் உள்ளார்.

2. மற்ற அமைச்சர்களை தேர்வு செய்யக் குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை செய்யவும், எந்த ஒரு அமைச்சரையும் பதவி நீக்கம் செய்யப் பிரிந்துரைக்கவும் எந்த ஒரு அமைச்சரையும் பதவி விலகுமாறு கட்டளை இடவும் பிரதமருக்கே அதிகாரமுள்ளது.

3. அமைச்சர்களுக்கு பொறுப்புகளை ஒதுக்கீடு செய்வது பிரதமரின் பொறுப்பாகும். அதுபோன்று எந்த அமைச்சரையும் ஒரு துறையிலிருந்து வேறொரு துறைக்கு மாற்றவும் அவருக்கு உரிமை உள்ளது.

4. அமைச்சரவையின் தலைவர் பிரதமரே. அதன் கூட்டங்களைக் கூட்டவும், தலைமையேற்று நடத்துவதும்,மாநிலங்களின் கூட்டுக்குழு அணுசக்தி தலைமைக்குழு அது போன்ற இன்னும் பல குழுக்களின் தலைவரும் பிரதமரே ஆவார்.

5. அரசின் கொள்கை முடிவுகளை ஒருங்கிணைப்பவரும் அதனடிப்படையில் அனைத்து துறைகளின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் பொறுப்பும் பிரதமருக்கு உள்ளது.

6. ஓர் அமைச்சர் தாமாகவே பதவி விலகிவிட்டால், ஓர் அமைச்சர் பதவி காலியிடமாகிறது. ஆனால் ஒரு பிரதமர் பதவி விலகினாலோ, அல்லது இறந்து விட்டாலோ அவரது அமைச்சரவையே இல்லாமல் போய்விடுகிறது.

7. அமைச்சர்களுக்கும் குடியரசத் தலைவருக்கும் இடையில் தொடர்புப் பாலமாக இருப்பவர் பிரதமரே. அது போன்று நாடாளுமன்றத்துக்கும் அமைச்சர்களுக்கும் இடையில் பாலமாக இருப்பவரும் அவரே. அரசின் வெளிநாட்டு விவகாரங்களை வெளியிடும் முக்கிய நபராகவும் அவர் உள்ளார்.

**பிரதமரின் அலுவலகம்:**
**பொருள்:**

நடைமுறையில் அரசின் தலைவராகவும், உண்மையான நிர்வாகத் தலைவராகவும் இருக்கின்றபடியால், நாட்டின் அரசியல் - நிர்வாக அரங்கில் பிரதமர் மிக முக்கியமான பங்கு வகித்து வருகிறார். அவரது பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு பிரதமருக்கு உதவியாக பிரதமர் அலுவலகம் உள்ளது (PMO – Prime Minister Office) பிரதமர் அலுவலகம், செயலக உதவிகளையும் ஆலோசனைகளையும் பிரதமருக்கு வழங்குகிறது. இந்திய அரசின் உச்சகட்ட முடிவுகளை வடிவமைக்கும் நிலையிலுள்ள பிரதமர் அலுவலகம் அரசமைப்பால் குறிப்பிடப்படாத ஓர் அதிகார மையமாகத் திகழ்கிறது. பிரதமர் அலுவலகத்திற்கு இந்திய அரசின் துறைகளில் ஒன்று என்ற தகுதி உள்ளது. இந்த அலுவலகம் 1947-இல் உருவாக்கப்பட்டது. 1997-வரை இது பிரதமரின் செயலகம் (PMS – Prime Minister's Secretariat) என்றே அழைக்கப்பட்டு வந்தது. அரசியல் ரீதியாக பிரதமரும், நிர்வாக ரீதியாக முதன்மைச் செயலரும் இதன் தலைமையாகச் செயல்படுவர்.

**பிரதமர் அலுவலகத்தின் பல்வேறு பணிகள்:**

| | |
|---|---|
| 1. | அரசாங்கத்தின தலைவர் என்ற நிலையில் உள்ள பிரதமருக்குத் தேவையான உதவிகளைச் செய்வது, மத்திய அமைச்சகங்களுடன் / துறைகளுடன் மற்றும் மாநில அரசுகளுடன் தொடர்புகளைப் பராமரிப்பது. |
| 2. | நிதி ஆயோக் மற்றும் தேசிய வளர்ச்சி குழு போன்றவற்றிற்கு தேவையான உதவிகளைச் செய்வது |
| 3. | ஊடகங்களுடனும், பொதுமக்களுடனுமான பிரதமரின் தொடர்புகளைப் பராமரிப்பது |
| 4. | பிரதமரின் அலுவல்களுக்கு விதிகளின் படியான நடவடிக்கைகளை மேற்கொள்வது. |
| 5. | குறிப்பிட்ட விதிகளின்படி பிரதமருக்கு அனுப்படும் விவாகரங்களைப் பற்றி ஆராய்ந்தறிவதற்கு பிரதமருக்கு உதவுவது |
| 6. | குடியரசுத்தலைவர், ஆளுநர்கள், அயல்நாட்டுத் தூதர்கள் போன்றவர்களுடன் இணக்கமான உறவுகளுக்காக பிரதமருக்கு உதவுவது. |
| 7. | பிரதமரின் சிந்தனை ஊற்றாகச் செயல்படுவது பிறதுறைகளுக்கும் அமைச்சகங்களுக்கும் ஒதுக்கப்படாத அனைத்து விபரங்களையும் கையாள்வது. |

| | |
|---|---|
| 8. | அமைச்சரவைத் தொடர்பான விவகாரங்களில் பிரதமர் அலுவலகம் ஈடுபடுவதில்லை. அமைச்சரவை தொடர்பான விபரங்களை அமைச்சரவை செயலகம் நேரடியாகக் கையாள்கிறது. ஆனால் அந்த அமைச்சரவை செயலகமும் பிரதமரின் வழிகாட்டுதலின்படியே செயல்படுகிறது. |

**மத்திய அமைச்சர்கள் குழு:**
அரசமைப்பு 74-வது உறுப்பின்படி குடியரசுத்தலைவருக்கு உதவவும், ஆலோசனை வழங்கவும், அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஓர் அமைச்சர்கள் குழு இருக்கும். குடியரசுத்தலைவர் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இந்த அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைப்படி நடந்துகொள்வார். அமைச்சர்கள் குழுவின் ஆலோசனையை குடியரசுத்தலைவர் ஏற்றுக் கொள்கிறார். அமைச்சர்கள் குழுவில் மூன்று வகையான அமைச்சர்கள் இருப்பர். அவை 1. காபினட் அமைச்சர்கள் 2. அமைச்சர்கள் 3. துணை அமைச்சர்கள். காபினட் அமைச்சர்கள் கொள்கை முடிவுகளை எடுப்பதில் ஈடுபடுபவர்கள். மற்ற இரு பிரிவு அமைச்சர்களும் நிர்வாகப் பொறுப்புகளை மேற்கொள்பவர்கள். இந்த மூன்று பிரிவு அமைச்சர்களுக்கும் வெவ்வேறு விதமான பதவி, ஊதியம் உள்ளிட்ட படிகள் அரசியல் முக்கியத்துவம் ஆகியவைக் குறிப்பிடப்பட்டுள்ளன. அனைவருக்கும் உச்சமாகப் பிரதமர் நாட்டின் மிக உயர்ந்த ஆட்சி அதிகாரம் கொண்டவராக இருக்கிறார்.

**அமைச்சர்கள் குழுவின் நியமனம்:**

அரசமைப்பு 75-வது உறுப்பின்படி குடியரசுத்தலைவரால் பிரதமர் நியமிக்கப்படுகிறார். பிரதமரின் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்கள் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். குடியரசுத்தலைவரின் விருப்பம் உள்ளவரை அமைச்சர்கள் பதவியில் இருப்பர். குடியரசுத்தலைவரின் விருப்பத்தின் பேரிலேயே அமைச்சர்கள் நியமனம் என்று கூறப்பட்டாலும், நடைமுறையில் அவர்கள் பிரதமராலேயே தேர்வு செய்யப்படுகின்றனர். பிரதமரால் பரிந்துரைக்கப்படாத யாரையும் குடியரசுத்தலைவர் அமைச்சராக நியமனம் செய்ய முடியாது.

**நிழல் அமைச்சரவை:**
இங்கிலாந்து நாடாளுமன்றத்திலுள்ள எதிர்கட்சிகள் ஒவ்வொரு துறையிலும் உள்ள விவகாரங்களைப் பற்றி ஆராய தமது உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்கிறது. இதன் மூலம் எதிர்க்கட்சிகள் அரசு தொடர்பான பிரச்சனைகளை தெளிவாக அறிந்து கொள்ளவும் அரசினை விழிப்பாக இருக்கச் செய்யவும் முடிகிறது. இது நிழல் அமைச்சரவை என்று அழைக்கப்படுகிறது.

**அமைச்சர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டுப்பொறுப்பு:**
இந்திய அரசமைப்புபடி அமைச்சர்கள் தனியாகவும் கூட்டாகவும் மக்களவைக்கு பொறுப்பானவர்கள். கூட்டுப் பொறுப்பு என்றால், அரசின் நடவடிக்கைகளுக்கு அமைச்சரவையின் அனைத்து அமைச்சர்களும் கூட்டாக மக்களவைக்குப் பொறுப்பானவர்கள் ஆகின்றனர் என்று பொருள். அனைத்து அமைச்சர்களும் பொதுவெளியில் தங்களுக்குள்ளான வேறுபாடுகளை வெளிக்காட்டக் கூடாது என்பதும் இதன் பொருள் எனலாம். எந்த ஒரு பொதுப் பிரச்சனையிலும், பொது நிகழ்விலும் அனைத்து அமைச்சர்களும் அரசின் நிலைப்பாட்டை ஒருமித்து ஆதரிக்க வேண்டும்.

**ஒன்றிய (மத்திய) அமைச்சர்கள் குழு:**

அமைச்சரவையில் ஓர் உட்குழுவாக இது இருக்கிறது. அமைச்சரவையிலிருந்து அமைக்கப்படும் இந்த உட்குழு அரமைப்பில் குறிப்பிடப்படாத ஒன்றாகும். அமைச்சரவையில் உள்ள அனைத்து அமைச்சர்களும் ஒன்றாக அமர்ந்து கொள்கை முடிவுகளை எடுப்பதுவோ, அலுவர்களை விவாதிப்பதோ இல்லை. மாறாக ஒன்றிய அமைச்சரவைக் குழு எனப்படும். அமைச்சர் குழுவின் உட்குழுவைச் சேர்ந்தவர்கள்தான் பிரதமர் தலைமையில் ஒன்றாகக்கூடி அம்முடிவுகளை எடுக்கிறார்கள் அவற்றை அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைகளாக குடியரசுத்தலைவருக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். இந்திய அரசின் நிர்வாக விவகாரங்களைப் பார்த்துக்கொள்ளும் உச்சமான ஆட்சிக் குழுவாக அமைச்சரவைக் குழு விளங்குகிறது அமைச்சர்கள் குழுவின் கருவாக அது செயல்படுகிறது.

**அமைச்சர்கள் குழுவின் செயல்பாடுகள்:**

1. துறை நிர்வாகங்களை அடிப்படையாகக் கொண்ட நமது அமைப்பில் அமைச்சரவைக் குழுதான் உயர்ந்தபட்ச முடிவுகளை எடுப்பதற்கான மற்றும் கொள்கைகளை வகுப்பதற்கான அதிகாரம் பெற்ற அமைப்பாகும்.

2. இது அனைத்து மக்கியமான சட்ட, நிதி மற்றும் வெளியுறவு விவகாரங்களையும் கையாளுகிறது.

3. அரசமைப்பு ரீதியான அனைத்து நியமனங்களையும் மூத்த செயலக நிர்வாகிகளையும் இது கட்டுப்படுத்துகிறது.

4. நாடாளுமன்றம் நடைபெறாதபோது அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்க குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை செய்கிறது.

5. இது விசாரணைக் குழுக்களை நியமிக்கிறது மற்றும் துறைகளுக்கு இடையிலான சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறது.

6. நெருக்கடி நிலையை பிரகடனம் செய்வதற்கும், மக்களவையைக் கலைத்து விடவும், நாடாளுமன்றக் கூட்டங்களை முடித்த வைக்க அல்லது ஒத்தி வைக்குமாறு குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை செய்யவும் அதிகாரம் அமைச்சரவைக் குழுவுக்கு உள்ளது.

**அமைச்சரவைக் குழுச் செயலர்:**

அமைச்சரவைக் குழுவில் உள்ள ஒவ்வொரு அமைச்சருக்கும் உதவி செய்ய ஒரு செயலர் இருப்பர். அத்தகைய அமைச்சரவைக் குழு செயலர்களின் முதன்மை இடம் முதன்மைச் செயலருக்குத் தரப்பட்டுள்ளது. உயர்த் தேர்வுக் குழுவின் (Board) தலைவராக அவர் இருப்பர். அக்குழுதான் மத்திய தலைமைச் செயலகத்தின் இணைச் செயலர்களை நியமிக்கும். அந்த முதன்மைச் செயலர்தான் ஆண்டுதோறும் நடைபெறும் (மாநில) தலைமைச் செயலர்களின் மாநாடுகளுக்கு தலைமை வகிக்கிறார். நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களிலும், கொள்கைகளிலும் பல்வேறு நிர்வாகத்துறைகளுக்கும் நிர்வாகப் பணியினருக்கும் அரசியல் அமைப்புகளுக்கு இடையில் தொடர்பாகச் செயல்படுபவரும் முதன்மைச் செயலரே ஆவார்.

**ஆட்சித்துறை: மாநிலங்கள்:**

இந்திய அரசமைப்பின் ஏஐ-வது பகுதியிலுள்ள 153 முதல் 167 வரையிலான உறுப்புகள் மாநில நிர்வாகத்தைக் குறிப்பிடுகின்றன. மத்திய அரசில் காணப்படும் நாடாளுமன்ற நிர்வாக முறையே மாநிலத்திலும் உள்ளது. மாநில நிர்வாகமும், ஆளுநர் மற்றும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர்கள் குழு ஆகியவற்றைக் கொண்டது. மத்தியில் குடியரசுத்தலைவரைப் போன்று மாநிலத்திலும் ஆளுநரே நிர்வாகத்தின் தலைவராக உள்ளார். அனைத்து மாநிலங்களிலும் இதே முறைதான் உள்ளது. ஆனால் சில மாநிலங்களில் இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமன்றமும், மற்ற சில மாநிலங்களில் ஒற்றை அவையைக் கொண்ட சட்டமன்றமும் உள்ளன. ஆனால் VI – வது பகுதியில் காணப்படும் இப்பிரிவுகள் ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்குப் பொருந்தாது. அரசமைப்பு 370-வது உறுப்பின்படி அம்மாநிலம் சிறப்புநிலை கொண்ட ஒன்றாகவும், தனக்கென தனி அரசமைப்புக் கொண்ட ஒன்றாகவும் அது உள்ளது.

**மாநில நிர்வாகம்:**

- ஆளுநர்
- முதலமைச்சர் தலைமையிலான அமைச்சர்கள் குழு

**ஆளுநர்:**

**ஆளுநரின் தேர்வு முறை:**

அரசமைப்பின் 153-வது உறுப்பு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருப்பார் என்கிறது. பொதுவாக, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு ஆளுநர் இருப்பார். ஆனால் 1956-ஆம் ஆண்டின்

அரசமைப்பு திருத்தப்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக ஒருவரே இருக்க முடியும்.

**ஆளுநரின் நியமனம்:**

ஒரு மாநில ஆளுநர் இந்தியக் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார். (உறுப்பு – 155). அவர் ஆளுநராக நியமிக்கப்பட கீழ் கண்டதகுதிகள் வேண்டும்.

- இந்தியாவின் குடிமகன்
- 35 வயதை நிறைவு செய்தவர்
- ஊதியம் பெறும் எந்த பதவியிலும் இருக்கக்கூடாது.
- நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கக் கூடாது.

**பதவி மற்றும் காலம்:**

ஆளுநரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். (உறுப்பு – 156). அவர் எந்த நேரத்திலும் குடியரசுத்தலைவரால் பதவி நீக்கப்படலாம். குடியரசுத்தலைவரால் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றப்படலாம். நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை ஆளுநர் பெறுகிறார். அதன்படியே சில சலுகைகளையும் படிகளையும் பெறுகின்றார்.

இந்திய அரசமைப்பின்படி, மாநில அரசமைப்பு மற்றும் நிர்வாகத் தலைவராக ஆளுநர் இருக்கிறார். மாநில நிர்வாகத்தின் ஆட்சிப்பொறுப்பு ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து ஆட்சி நடவடிக்கைகளும் அவரது பெயரால் நடைபெறுகின்றன. ஆனால் நடைமுறையில், மாநிலத்தின் உண்மையான செயல் அதிகாரங்கள் முதலமைச்சரின் நடைமுறையில், மாநிலத்தின் உண்மையான செயல் அதிகாரங்கள் முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சர்கள் குழுவுக்கே உள்ளது. மாநிலத்தின் சட்டசபைக்கு ஒட்டுமொத்தமாக கூட்டுப் பொறுப்புள்ள அமைச்சர்களின் ஆலோசனைப்படி, ஆளுநர் செயல்படுகிறார்.

**ஆளுநரின் ஆதிகாரங்களும் பணிகளும் பின்வருமாறு:**

1. **நிர்வாக அதிகாரங்கள்:**

    1. சட்டமன்றத்தில் பெரும்பான்மை கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமிக்கிறார். முதலமைச்சரின் ஆலோசனையின்படி, பிற அமைச்சர்களை அவர் நியமிக்கிறார். முதலமைச்சர் விரும்பும் வரையில் மட்டுமே அமைச்சர்கள் அப்பதவியில் இருப்பர். ஏனெனில் முதலமைச்சரின் ஆலோசனைப்படிதான் ஆளுநர் செயல்படுகிறார்.

    2. மாநில அரசின் தலைமை வழக்குரைஞர், மாநிலப் பொதுப் பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை ஆளுநர் நியமிக்கிறார். துணை சார்பு நீதிமன்றங்களின் நீதிபதிகளின் நியமனங்கள், பதவிகள், பதவி உயர்வு போன்றவற்றை ஆளுநர் தீர்மானிக்கிறார்.

    3. மாநில நிர்வாகத்தை சீராக இயக்கும் பொறுப்பு ஆளுநருடையதாகும். மாநில அரசமைப்பு இயந்திரம் நிலைகுலைந்து விட்டாலோ அல்லது மாநில நிர்வாகம் அரசமைப்பின் விதிமுறைகளுக்கு இணக்கமாக செயல்படாவிட்டாலோ, அரசமைப்பு விதிகளின்படி அரசமைப்பு அவசர நிலையை பிரகடனப்படுத்தி குடியரசுத்தலைவர் ஆட்சியை அரசமைப்பு 356-வது உறுப்பின்படி பரிந்துரைக்க ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது. குடியரசுத்தலைவரது நேரடி ஆட்சி என்றால் மாநிலத்தில் ஆளுநர் ஆட்சி என்று பொருள்படும். அமைச்சரவை இல்லாத மாநில ஆட்சி என்றும் பொருள்படும்.

2. **சட்டமன்ற அதிகாரங்கள்:**

    ஆளுநர் மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு பகுதி (உறுப்பு – 168) ஆவார். எனவே, அவர் சட்ட அதிகாரங்களையும் கொண்டிருக்கிறார். அவரது சட்ட அதிகாரங்கள் பின்வருமாறு.

1. ஆளுநர் சட்டமன்றத்தை கூட்டவும். முடித்து வைக்கவும், ஒத்தி வைக்கவும். கலைத்து விடவும் அதிகாரம் படைத்தவர்.

2. ஆளுநர் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களிடையே உரையாற்றுகிறார்.

3. ஆளுநரின் அனுமதியின்றி, எந்த முன்வரைவும் சட்டமாக்க முடியாது. அது மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டாலும் அவரது ஒப்புதலின்றிச் சட்டமாகாது. சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் முன்வரைவுகள் அவரது ஒப்புதலுக்காக அனுப்பப்படும். அவற்றிற்கு ஒப்புதலைத் தரவோ அல்லது அந்த முன்வரைவை நிறுத்தி வைக்கவோ அல்லது குடியரசுத்தலைவரின் கருத்திற்காக முன்வரைவை ஒதுக்கி வைக்கவோ முடியும். மறுபரிசீலனை செய்யுமாறு ஆளுநரால் இந்த முன்வரைவுகள் அவை நடுவருக்கு திருப்பி அனுப்ப முடியும். முன்வரைவு மீண்டும் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டால் (திருத்தங்கள் இல்லாமலும்) ஆளுநர் தனது ஒப்புதலை அளித்தே ஆகவேண்டும்.

4. சட்டம் 213-ன் கீழ், சட்டமன்றம் அமர்வில் இல்லாத காலங்களில் ஆளுநர் அவசர சட்டங்களையும் பிறப்பிக்கலாம். (எனினும், இத்தகைய அவசர சட்டங்கள் தொடர்வதற்கு, அவை மாநிலச் சட்டமன்றம் மீண்டும் கூடியதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும்).

5. மாநிலச் சட்டமன்றம் இரண்டு அவைகளை கொண்டிருந்தால், அதன் மேலவைக்கு ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்களை இலக்கியம், அறிவியல், கலை, கூட்டுறவு இயக்கம், சமூகப்பணி போன்றவற்றில் சிறப்பு அறிவும் அனுபவமும் உள்ளவர்களை நியமிக்கலாம். அத்துடன் கீழவைக்கு ஆங்கிலோ- இந்திய பிரதிநிதியையும் நியமிக்கலாம்.

3. **நிதி அதிகாரங்கள்:**

ஆளுநருக்கு பின்வரும் நிதி அதிகாரங்கள் உள்ளன.

1. நிதி அமைச்சர் மாநிலச் சட்டமன்றத்தில் வரவு – செலவு திட்டத்தை அல்லது நிதிநிலை அறிக்கையை சமர்பிக்கிறார். ஆனால் எந்த நிதி முன்வரைவும் ஆளுநரின் முன் ஒப்புதலின்றி சட்டமன்றத்தில் கொண்டுவரமுடியாது.

2. ஆளுநரின் பரிந்துரையின்றி மானியங்களுக்கான கோரிக்கை எதுவும் கோரப்பட முடியாது.

3. மாநிலத்தின் ஒதுக்கு நிதியின் பாதுகாவலர் ஆளுநர் ஆவார். நிதி நெருக்கடியான கட்டங்களில் சட்டமன்றத்தின் முன் அனுமதியின்றியும் அவரால் இந்நிதியை பயன்படுத்த முடியும்

4. **நீதித்துறை அதிகாரங்கள்:**

ஆளுநரின் நீதித்துறை அதிகாரங்கள் பின்வருமாறு

1. மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட கிளை நீதிமன்றங்கள் உள்ளிட்ட சார்பு நீதிமன்றங்களின் பதவிகள், நியமனங்கள், பதவி உயர்வுகள் போன்றவற்றை தீர்மானித்தல்.

2. உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் நியமனம் செய்யும் போது அவர் இந்தியாவின் குடியரசுத்தலைவரால் கலந்தாலோசிக்கப்படலாம்.

3. மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட வழக்குகளில் தண்டிக்க தக்கவர்களில் குற்றம் சாட்டப்பட்ட எந்தவொரு நபரின் தண்டனையைக் குறைப்பதற்கும் மன்னிப்பு வழங்குவதற்கும், நிறுத்துவதற்கும், விலக்குவதற்கும் அல்லது மாற்றுவதற்கும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

5. **விருப்ப அதிகாரங்கள்:**

1. எந்தவொரு கட்சி அல்லது தலைவர் சட்டமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெறாத சூழ்நிலையில் ஒரு புதிய முதலமைச்சரை நியமித்தல்.

2. அவையின் பெரும்பான்மை ஆதரவை இழந்தபோதும் அல்லது நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் பதவி விலக மறுக்கும் நிலையில் அமைச்சரவையை பவி நீக்கம் செய்வது.
3. பெரும்பான்மை ஆதரவை இழந்த ஒரு முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் சட்டசபையைக் கலைத்துவிடுதல்.
4. அரசமைப்பு இயந்திரச் சீர்குலைவது பற்றி குடியரசுத்தலைவருக்கு அறிக்கை அனுப்புதல் மற்றும் குடியரசுத்தலைவர் ஆட்சியை மாநிலத்தில் கொண்டுவருதல்.
5. சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட முன்வரைவுகளுக்கு ஒப்புதல் அளித்தல்

**குடியரசுத்தலைவர் ஆட்சி:**
வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சியிலிருந்து எழும் நெருக்கடி நிலைகளை சமாளிப்பதற்கான அவசர நிலையை பிரகடனம் செய்யும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை. ஆனால் அரசமைப்பின் விதிமுறைகளுக்கு இணங்க மாநில அரசை நடத்த இயலாத சூழல் ஏற்பட்டால் அது பற்றி குடியரசுத்தலைவருக்கு அறிவுறுத்தி அறிக்கை தரும் அதிகாரம் உள்ளது. (உறுப்பு – 356). இதன் மூலம் குடியரசுத்தலைவர் தாமே மாநில அரசின் ஆட்சிப்பொறுப்பினை ஏற்று நடத்திச் செல்வதற்கு வகை செய்கிறார்.

**முதலமைச்சர் தலைமையில் அமைந்த அமைச்சரவைக் குழு:**
**முதலமைச்சரின் நிலை:**

அமைச்சர்கள் குழு மற்றும் அமைச்சரவையில் தலைவராக முதலமைச்சர் உள்ளார். நடைமுறையில், அவர் மாநிலத்தின் உண்மையான நிர்வாகத் தலைவராக இருக்கிறார். அவர் சட்டசபையின் தலைவராகவும் இருக்கிறார். இந்திய அரசமைப்பின் 164(1) உறுப்பின் படி மாநிலத்தின் முதல்வர் நியமிக்கப்பட வேண்டும்.

**முதலமைச்சரின் அதிகாரங்களும் பணிகளும்:**
மாநிலத்தின் உண்மையான நிர்வாகத் தலைவராக, முதலமைச்சர் பெருமளவில் அதிகாரங்களைப் பெறுகிறார் மற்றும் பல பொறுப்புகளை நிறைவேற்றுகிறார். முதலமைச்சரின் பணிகள் பின்வருமாறு.

1. அமைச்சர்கள் குழுவின் தலைவர் என்கிற முறையில், முதலமைச்சர். அதிக அதிகாரம் அமைச்சர்களை நியமனம் செய்வதற்கு ஆளுநருக்கு பரிந்துரை வழங்குகிறார். மேலும் அமைச்சர்களை பதவி நீக்கம் செய்ய அவருக்கு உரிமை உள்ளது.

2. அமைச்சரவை கூட்டங்களுக்கு அவர் தலைமை தாங்குகிறார், மேலும் அரசாங்கத்தின் முக்கிய கொள்கை முடிவுகளை எடுக்கிறார்.

3. அவர் அமைச்சர்கள் மற்றும் ஆளுநருக்கு இடையேயான ஒரே ஒரு இணைப்பாகச் செயல்படுகிறார். நிர்வாகம் மற்றும் சட்டங்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் ஆளுநரிடம் தெரிவிக்கிறார்.

4. சட்டமன்றத்தில் கொண்டு வரவேண்டிய அனைத்து ஆவணங்களையும், முன்வரைவுகள், தீர்மானங்கள் போன்றவற்றையும் அவர் பரிசீலனை செய்கிறார்.

5. அனைத்து முக்கிய நியமனங்களையும் ஆளுநரே செய்வதாக எழுத்தில் இருந்தாலும், நடைமுறையிலும் அத்தகைய நியமனங்கள் அனைத்துமே முதலமைச்சரின் ஆலோசனையின்படியே செய்யப்படுகின்றன.

**மாநில அமைச்சர்களின் குழு**
**அறிமுகம்:**
ஆளுநருக்கு உதவியாகவும் ஆலோசனை வழங்கவும் முதலமைச்சர் தலைமையில் அமைச்சர்கள் குழு நியமிக்கப்படுவதைப்பற்றி அரசமைப்பின் 163 (1)-வது உறுப்பு குறிப்பிடுகிறது. ஆனால்

அரசமைப்பு விதிகளின்படி, நெருக்கடிச் சூழலில் ஆளுநர் நேரடியாக ஆட்சியை மேற்கொள்ள இயலும்.

மத்திய அமைச்சர்கள் குழுவை போன்றே மாநில அமைச்சரவைக் குழுவும் போன்றே மாநில அமைச்சரவைக் குழுவும் அமைக்கப்படுகிறது. சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்ட கட்சியின் தலைவரோ அல்லது கூட்டணி கட்சிகளின் தலைவரோ முதலமைச்சராக ஆளுநரால் நியமிக்கப்படுகிறார். அமைச்சரவைக் குழுவில் உள்ள அனைத்து அமைச்சர்களும் முதலமைச்சரின் அறிவுரையின்படி ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.

**மாநில அமைச்சரவையின் பதவிக்காலம்:**

அரசமைப்பின்படி ஆளுநரின் விருப்பம் உள்ளவரை அமைச்சர்கள் பதவியில் தொடரலாம். ஆனால் நடைமுறையில் முதலமைச்சரின் விருப்பமுள்ளவரை அமைச்சர்கள் பதவியில் தொடர்வர். ஏனெனில் முதலமைச்சரின் பரிந்துரைப்படியே ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கவும், பதவி நீக்கம் செய்யவும் செய்கிறார். எனவே அமைச்சர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் முதலமைச்சருக்குப் பொறுப்பானவர்கள் ஆவர்.

**மாநில அமைச்சரவைக் குழு:**

மாநில அமைச்சரவைக் குழு என்பது அமைச்சரவைக் குழு, துணை அமைச்சர்கள் ஆகியோரை கொண்டதாகும், இவர்களின் அமைச்சரவைக் குழு எனப்படுவோர் முதலமைச்சர் தலைமையில் ஓர் உட்குழுவாக செயல்படுவர். மற்ற அமைச்சர்களை வட அமைச்சரவைக் குழுவில் உள்ள அமைச்சர்கள் முக்கியமானவர்கள், பிரபலமானவர்கள். அமைச்சரவையின் சார்பாக இறுதி முடிவுகளை, கொள்கை முடிவுகளை அமைச்சரவைக் குழு எடுக்கிறது. இதன் முடிவு அனைத்து அமைச்சர்களையும் கட்டுப்படுத்தும்.

அலகு– 4

## இந்திய நீதித்துறை

**இந்திய உச்ச நீதிமன்றம்:**
”உச்ச நீதிமன்றம், அனைத்து இந்திய நீதிமன்றமாகும். கட்சி அட்சியலில் இருந்தும், அரசியல் கோட்பாடுகளில் இருந்தும் உறுதியாக தனித்து நிற்கும். அது அரசுகள் மாறுவதைக் குறித்து அக்கறை கொள்வதில்லை. நீதிமன்றமானது, அந்த நேரத்தில் நடைமுறையில் இருக்கும் சட்டத்தின்படி, நிற்கிறது. அனைவரின் மீதும் பரிவு,நன்மதிப்பு கொண்டுள்ளது. எனினும் அது யாருடனும் அணி சேர்வது இல்லை”.

நீதித்துறையானது அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளில் ஒன்றாகும். மற்ற இரண்டு சட்டமன்றமாகவும், ஆட்சித்துறையாகவும் இருக்கின்றன. நீதித்துறையானது சட்டங்களுக்கு விளக்கம் அளிப்பதையும், அரசமைப்பை பாதுகாப்பதையும் பணியாகக் கொண்டிருக்கிறது. அது நீதித்துறை நிர்வாகத்தை உறுதிப்படுத்துகின்றது. தனி மனித உரிமைகள்,முன்னுரிமைகள் ஆகியவற்றின் மீது அரசு மற்றும் தனிமனிதர்களால் மேற்கொள்ளப்படும் மீறல்களில் இருந்து பாதுகாப்பு அளிப்பதை உறுதிப்படுத்துகிறது. சுதந்திரமான மற்றும்

**திருக்குறள்:**

1. **பிணையாக திருக்குறள் ஒப்புவித்தல்:**

கைகலப்பில் ஈடுபட்ட மூன்று கல்லூரி மாணவர்களுக்கு பிணையாக 100 திருக்குறள்களை தொடர்ந்து 10 நாட்கள் அப்பகுதியிலுள்ள குறிப்பிட்ட தமிழாரசிரியர் முன்பு ஒப்புவிக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்து தமிழ்நாடு நீதிமன்றம் பிப்ரவரி 2019 அன்று உத்தரவிட்டது.

ஒரு நபர் மீது தாக்குதல் நடத்தியதாக மூன்று கல்லூரி மாணவர்களுக்கு மேட்டுபாளையம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது, அவர்கள் சார்பில் பிணைக் கோரப்பட்டது. பிணையின் நிபந்தனையாக அப்பகுதி அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் முன்பு தினமும் 100 திருக்குறள்கள் ஒப்புவிக்க வேண்டுமென்று நீதிபதி கூறினார்.
இவ்வாறு தொடர்ந்து 10 நாட்கள் திருக்குறள் ஒப்புவித்தப் பின்பு இறுதி நாளில் அந்த மாணாக்கர்களுக்கு சான்றிதழ் வழக்கும்படியும் நீதிபதி அப்போது உத்தரவிட்டார்.

2. **திருக்குறளை ஆழமாகக் கற்பதற்கு வழிவகுத்த மதுரை உயர் நீதிமன்ற கிளை:**

சென்னை உயர் நீதிமன்றத்தில் மதுரை கிளை வழங்கிய தீர்ப்புகளில் தமிழக பள்ளிகளில் திருக்குறளை ஆழமாகக் கற்க வழிவகுத்து அளித்தத் தீர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மதுரைகிளை கடந்த 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறைக்கு அளித்த உத்தரவில் பள்ளிப் பாடத்திட்டத்தில் திருக்குறளின் 133 அதிகாரங்களில் 108 அதிகாரங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. இதன்மூலம் 2017 – 18 கல்வியாண்டிலிருந்து மாணவர்கள் 1050 திருக்குறள்களையும் கற்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஆணைப் பிறப்பிப்பதற்கு மதுரைகிளையின் உத்தரவு வழிவகுத்தது. 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்கள் முன்கூடிய திருக்குறள் பாக்கள் அனைத்தையும் கற்பதுடன் அதன் பொருளினையும் தெளிவாகப் புரிந்து கொள்வதை உத்தரவாதம் செய்யும்படியும் அது கூறியது. இதன்மூலம் தற்போது பள்ளிக் கல்வி மாணவர்கள் திருக்குறள் பாக்களை கற்று ஆழமாகப் புரிந்து வருகிறார்கள்.

தமிழில் பண்டைய இலக்கியங்களில் உலகின் 60 –க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட இலக்கியம் திருக்குறள் ஒன்றேயாகும்.

பாகுபாடற்ற நீதித்துறையை உருவாக்குவது ஒரு நாகரிக அரசு செயல்படுவதற்கு மன் நிபந்தனையாகும். இந்தியா போன்ற கூட்டாட்சி அரசு முறை கொண்ட நாடுகளில் கூட்டாட்சியின் பாதுகாவலனாகவும், மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே எழும் அதிகார வரம்பு கருத்துவேறுபாடுகளுக்குத் தீர்வ காண்பதனாலும் நீதித்துறை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

**இந்திய நீதித்துறையின் பரிணாம வளர்ச்சி:**
**பண்டைய இந்தியாவில் நீதிமுறையமைப்பு:**

இந்தியா பல்வேறு இனங்கள், பண்பாடுகள், மொழிகள் மற்றும் அரசியல், சமூக அமைப்புகளை கொண்ட ஒரு துணைக்கண்டமாக இருக்கிறது. இந்தியாவின் பண்டைய காலத்திலும் மற்றும் இடைக்காலத்திலும் அரசு எந்த ஒரு ஆட்சித்துறையிலிருந்தும் நீதித்துறை பணிகளைப் பிரித்து வைக்கப்படவில்லை. வேதகாலத்தின் போது (குலபா (அ) குலபாடோ), குடும்பத் தலைவனின் அதிகாரமானது மன்னர் வழி குறுக்கீடுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தது. அதேபோல் கிராமா, தோபா, வைசியா, ஜனம் மற்றும் கனம் போன்ற குலவகைப்பட்ட மற்றும் இனக்குழு அமைப்புகளும் தன்னாட்சி பெற்றுத் திகழ்ந்தன. பண்டைய இந்திய முடியாட்சிகளில் நீதித்துறை அதிகாரத்தில் அரசரே உயர்நிலையில் இருந்தார். அரசர் நினைத்ததே சட்டமாக இருந்தது. வழக்குகளில் அவர் வார்த்தையே உயர்ந்த நீதியாகவும் இறுதித் தீர்ப்பாகவும் இருந்தது.

எனினும், கிராமப்புறங்களில் பெரும்பாலான வழக்குகள் சாதி அமைப்புகள் அல்லது உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளின் சட்டத்திட்டங்களின் மூலமாகவே தீர்க்கப்பட்டு வந்தன. தேசத் துரோகம் போன்ற மிகத் தீவிரமான வழக்குகள் மட்டும் அரசவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு முறையான சட்ட அமைப்பு அல்லது நீதித்துறை வழி முறை இருந்ததில்லை. பெரும்பான்மையான நேரங்களில் குற்றம் சாட்டப்பட்டவர், தான் குற்றமற்றவர் என்பதை ஆதாரங்கள், சாட்சியங்கள் மூலமாக நிரூபிக்க வேண்டும். அல்லது தீக்குளித்தல், தண்ணீரில் மூழ்குதல், விஷம் அருந்துதல் போன்ற கடும் சோதனைகளுக்கு தன்னை ஆட்படுத்திக் கொள்ளுதல் மூலமாக தாம் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டும். தண்டனைகள் (தண்டனை முறை) மிகவும் கடுமையாக இருந்தது. மேலும். காட்டுமிராண்டித்தனம் கொண்டதாக இருந்தது. இதற்கு பரிகாரம் என்பது வழக்கத்தில் இல்லை. கசையடி, பிரம்படி, முழங்கால்களைத் துண்டித்தல், கழுமரத்தில் ஏற்றுதல், அடிமைப்படுத்துதல், சொத்துக்களை பறிமுதல் செய்தல். நாடு கடத்துதல், தலையை துண்டித்தல், யானை மூலம் தலையை இடரச்செய்தல் மற்றும் மிதிக்கச் செய்தல் போன்ற தண்டனைகள் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டன. அரசுகள் பிராமணர்களின் தாக்கத்தின் கீழ் வந்த பின்னர், ஸ்மிருதிகள் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு, தண்டனைகள் வழங்கப்பட்டன.

அக்காலத்தில் மனுஸ்மிருதி, நாரதர் ஸ்மிருதி, யக்ஞுவாக்கியர் ஸ்மிருதி போன்றவை இருந்தன. அவற்றுள் “மனுஸ்மிருதி” அடிப்படையாக இருந்தது. இந்த ஸ்மிருதிகள் பொதுவாக வர்ணம். சாதிபடிநிலைச் சமூக அமைப்பை உயர்த்திப் பிடிப்பதாக இருந்தன. ”சட்டத்தின் முன் அனைவரும் சமம்” என்ற கருத்து இருந்ததில்லை. பிராமணர்கள் பெரும்பாலும் தண்டனைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தனர். எந்தவிதத்திலும் பிராமணர்கள், அவர்கள் கொடிய குற்றங்களை செய்துவிட்டாலும் உடல் ரீதியான துன்புறுத்தல், உறுப்பு நீக்கம் செய்தல், கழுமரத்தில் ஏற்றுவது, மரணதண்டனை ஆகியவற்றில் இருந்து விதிவிலக்கு செய்யப்பட்டிருந்தார்கள். மற்றொருபுறம் ஒடுக்கப்பட்ட சாதியினரை கடுமையான துன்பங்களுக்கும் மற்றும் உச்சபட்ச தண்டனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர். சாதி அடிப்படையிலான தொழில்களை மாற்றிக் கொள்வது என்பது மிகக் கொடிய குற்றமாக (Varna Sangraha) கருதப்பட்டது.

அர்த்தசாஸ்திரம் குற்றங்கள் நிகழ்வதை கட்டுப்படுத்துவது என்ற பெயரில் அளவுக்கு அதிகமான தண்டனைகளைப் பரிந்துரைத்தன. குற்றவாளிகள் மீது அபராதங்கள் விதிப்பது, சொத்துக்களை பறிமுதல் செய்வது முதன்மையான அரசு வருமானமாக இருந்தன. ஸ்மிருதிகள் பெண்களை கீழ்நிலை மனிதர்களாகவே நடத்தியது. வாரிசுரிமை விவகாரங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டுடன் தீர்ப்பளித்தனர். சூத்திரர்களும்,பஞ்சமர்களும் நியாயமான விசாரணைக்கும், நியாயமான தண்டனைகளுக்கும் தகுதி இல்லாதவர்கள் ஆனார்கள். வர்த்தகத் தகராறுகள் பெரும்பாலும் வணிகக் குழு மூலம் தீர்க்கப்பட்டன. அதைப்போலவே ஒவ்வொரு கைவினைக் கலைஞர்கள் குழுவும் தங்களுடைய சொந்த பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள கைவினைஞர்கள் சங்கத்தைத் தமக்குள் வைத்து கொண்டனர். பல்லவர், பாண்டிய, சோழர்கால மகாசபைகள் நீதி விசாரணை நடைமுறைகளிலிருந்து பிராமணர்களைப் பாதுகாத்தன. மகாசபையின் வாரியம் (தர்ம வாரியங்கள், நியாய வாரியம்) மகாசபைகளுக்குள் எழும்பிரச்சனைகளை தீர்த்து வைத்தன. உள்ளூர் அமைப்புகளான ஊர், ஊரார், நகரத்தார் போன்றவை அவர்களுக்கு உரிய நீதித்துறை ஏற்பாடுகளைக் கொண்டிருந்தனர்.

அசோகப் பேரரசு போன்ற புத்த பேரரசுகள் பெரும்பாலும் ஸ்மிருதி முறைகளை புறம்தள்ளின. நீதி வழக்குகளில் சமூகக் குழுக்களுக்கிடையே ஓரளவுக்குச் சமமாக நடத்தப்பட்டன. அசோகர் கொடிய தண்டனைகளை நீக்கினார். மேலும், அவர் தனது அதிகாரிகளிடம் கைதிகளிடத்தில் மிகவும் மனிதாபிமானம் உடையவர்களாகவும், கருணை உள்ளவர்களாகவும் இருக்கும்படி அறிவுறுத்தினார். சிலப்பதிகாரத்தில் கோவலன் தூக்கிலிடப்படும் சம்பவமானது நீதித்துறை செயல் முறையிலுள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது. நீதித்துறையில் உயர் அதிகாரிகள் அறநெறியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இலக்கியங்கள் வலியுறுத்தினாலும், நீதி வழக்கு விசாரணைகளில் வரம்பு மீறி நடந்து தண்டனையில் இருந்து விதிவிலக்கு கொடுப்பதோ அல்லது அநீதியான தண்டனைகளை வழங்கியிருப்பதையோ நாம் அடிக்கடி கண்டிருக்கிறோம். பண்டைய இந்தியாவில் சட்டத்தின் ஆட்சி அங்கு இருந்தது இல்லை, ஆனால் அதிகாரம் கொண்டோரின் ஆட்சியையே நாம் காண்கிறோம்.

| **கடும் சோதனைகள்:** | | |
|---|---|---|
| **தராசு முறை:** ஒரு தராசில் ஒரு பக்கம் ஒரு பனை ஓலை கட்டு வைத்துவிட்டு இன்னொரு பக்கம் குற்றம் சாட்டப்பட்டவர் அமரும்படியாக செய்யப்பட்டு தராசு சமமாக இருக்கும்படி வேண்டிக் கொள்ளுப்படுகிறார்கள். வேண்டுதலுக்கு பிறகும் அவர் இருக்கும் தராசின் பகுதி கீழே வந்து விட்டால் அவர் குற்றம் செய்தவர் என்று அறிவிப்பார்கள். | **நெருப்பு சோதனை:** குற்றம் சாட்டப்பட்டவர் தீயின் நடுவே நடந்து வர செய்யப்படுவார். அந்த நபர் எந்த தீ காயமும் அடையவில்லை என்றால் மட்டுமே அவர் குற்றமற்றவராக கருதப்படுவார். | **தண்ணீர் முறை:** தெய்வ சிலையை சுத்தப் படுத்துவதற்கு உள்ள நீரை, குற்றம் கூறினால் குற்றம் சாட்டப்பட்டவர் அதை குடிக்கும்படி செய்யப்படுவார். அதனை தொடர்ந்து வரும் 14 நாட்களுக்குள் குடிக்கும் வரை அவருக்கு எந்த கேடான பாதிப்பும் ஏற்படவில்லை என்றால் அவர் குற்றமற்றவர் என கருதப்படுவார் |
| **நஞ்சு அருந்தும் சோதனை:** இம்முறையில் குற்றம் சாட்டப்பட்டவர்கருக்கு நஞ்சு அருந்தும்படியாக செய்யப்படுவார். அந்த நபருக்கு எந்த தீய விளைவும் ஏற்படவில்லை என்றால் அவர் குற்றமற்றவர் என கருதப்படுவார் | **குலுக்கல் சோதனை**: குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு தொகுப்பில் இருந்து ஒன்றை எடுத்து தரும்படி கேட்டுக் கொள்ளப்படுவார். அதில் அவருக்கு ”தர்ம கட்டு” வந்திருந்தால் அவர் குற்றமற்றவராக கருதப்படுவார். | **அரிசி தானிய சோதனை**: இம்முறையில் குற்றம் சாட்டப்பட்டவர் உமி நீக்கப்படாத நெல் தானியத்தை மென்று சாப்பிடும் படியாக செய்யப்படுவார். அவருடைய வாயில் இரத்தக்கறை காணப்பட்டால் அவர் குற்றம் செய்தவர் என்று அறிவிக்கப்படுவார். |
| **ஊற்றுநீர் சோதனை முறை:** இங்கு குற்றம் சாட்டப்பட்டவர் நஞ்சு போன்ற நீரை குடிக்கும்படியாக செய்யப்படுவார். அவர் உளறினால் அவர் குற்றம் செய்தவராவார் அல்லது குற்றத்தை அந்த நபர் ஒத்துக் கொண்டவராவார். | | |

இடைக்கால இந்தியாவில், முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஒருவித தனித்தன்மை கொண்ட சூழ்நிலையை எதிர்கொண்டனர். அங்கே அவர்கள் ஆட்சியின் கீழ் வாழ்ந்த மக்கள் பெரும்பான்மையானோர் முஸ்லீமல்லாதவர்கள். முஸ்லீம் மற்றும் முஸ்லீம் நலன்கள் சார்ந்த வழக்குகளில் இஸ்லாமிய சட்டங்களை பயன்படுத்தினர். அதேநேரம், முஸ்லீம் அல்லாதவர்களின் சமூக-மத விவகாரங்களில் தலையிடா கொள்கைக்கு முன்னுரிமை அளித்தனர். அங்கெல்லாம் கிராமப்புற பாரம்பரிய விசாரணை முறையை ஏற்றனர். முஸ்லீம் ஆட்சியாளர்கள் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை மிகவும் சரியாக வேறுபடுத்திக் காட்டியிருந்தனர். ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட முறைகளைக் கையாண்டனர். எனினும், இறைப்பழி போன்ற வழக்குகளில் மிகவும் கொடிய தண்டனைகளை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்தனர்.

**இடை காலத்தில் இந்தியாவில் நீதித்துறை அமைப்பு:**

இடைக்கால இந்தியாவில் பேரரசை நிர்வகிக்கும் சுல்தான் / சுல்தானா ஆகியோரே நீதி நிர்வாகத்தை நிர்வகிக்கும் உச்சபட்ச அதிகாரம் கொண்டவர்கள் ஆவர். அவர்கள் கீழ்க்கண்ட தகுதி நிலைகளில் இருந்து நீதி நிர்வாகத்தை நடத்தினர். அவற்றின் பெயர்கள் பின்வருமாறு:

- திவான்-இ-குவாசா (நடுவர்)
- திவான்-இ-மசலிம் (அதிகாரத்துவத்தின் தலைவர்) மற்றும்
- திவான்-இ-ரியாசத் (தலைமை தளபதி).

இடைக்கால இந்தியாவில் நிர்வாக அமைப்புமுறைகளே நீதித்துறை அமைப்புகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. நீதிமன்றங்களின் அதிகார வரம்பானது தலைநகரம், மண்டலம், மாவட்டம், பர்கானா (வட்டம்) மற்றும் கிராமம் என நிலப்பரப்பு அடிப்படையில் தெளிவாக பிரிக்கப்பட்டிருந்தது. பொதுவாக, சுல்தானத்தின் தலைநகரில் கீழ்க்கண்ட ஆறு வகையான நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு இருந்தன.

- மன்னர் நீதிமன்றம்
- மேல்முறையீட்டு உச்ச நீதிமன்றம் (திவான்-அல்-மசாலிம்)
- குடிமையியல் வழக்குக்கு உள்ள நீதிமன்றம் (திவான்-இ-ரிசாலட்)
- மாநிலத் தலைமை நீதிபதி நீதிமன்றம் (சத்ரே ஜகான் நீதிமன்றம்)
- தலைமை நீதிபதி நீதிமன்றம்
- தேசத்துரோக வழக்குகள் நீதிமன்றம் (திவான்-இ-ரியாசட்)

மன்னர் நீதிமன்றம் சுல்தானால் தலைமையேற்று நடத்தப்பட்டது. இந்த நீதிமன்றம் அசல் அதிகாரவரம்பு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் என இரண்டும் கொண்ட அமைப்பாகச் செயல்பட்டது. நீதி நிர்வாகத்தைப் பொருத்தவரை இதுவே உச்சபட்ச மேல்முறையீட்டுத் தீர்ப்பாகும். முப்தி (சட்டவல்லுனர்) எனப்படும் சட்டவல்லுனர்கள் சுல்தானுக்கு உதவியளித்தனர்.

திவான்-அல்-மசாலிம் மற்றும் திவான்-இ-ரிசாலட் நீதிமன்றங்கள் முறையே தேச துரோக வழக்குகள் மற்றும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் உச்ச நீதிமன்றங்களாகும்.

இந்த நீதிமன்றங்கள் அலுவலக ரீதியாக சுல்தானால் தலைமை தாங்கி நடத்தப்பட வேண்டும் எனினும், அவர் அதிகமாக குற்றவியல் நீதி விசாரணைகளின்போது மட்டுமே கலந்து கொண்டார். சுல்தான் இல்லாதபோது குவாசி-உல்-குசாட் எனும் அரசின் நீதிமன்ற தலைமை அலுவலர் தலைமை தாங்கி நடத்துவார். ஆனால், பின்னர் சத்ரே ஜகான் எனும் அலுவலர் பதவி உருவாக்கப்பட்டு நீதித்துறையின் உண்மையான தலைமை அலுவலராக செயல்பட்டார். இந்த சத்ரே ஜகான் நீதிமன்றமும் மற்றும் தலைமை நீதிபதி நீதிமன்றமும் பின்னர் அலாவுதீன் கில்ஜி ஆட்சியில் இணைக்கப்படும்வரை நீண்டகாலமாகத் தனித்தே இயங்கின. தலைமை நீதிபதியின் நீதிமன்றம் குடிமையியல் மற்றும் குற்ற வழக்குகளைக் கையாண்டது. தலைமை நீதிபதியின் கீழ் திறமையான, நேர்மையான மதிக்கப்பட்ட உதவி நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். முப்தி, பண்டிட், மொக்டாசிப் (அரசு வழக்கறிஞர் தரப்பு) தாத்பாக் (நிர்வாக அலுவலர்) போன்ற அலுவலர்கள் தலைமை நீதிபதியின் நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்டிருந்த அலுவலர்கள் ஆவர். திவான்-இ-ரியாசத் பெரும் தேச துரோக வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம் ஆகும்.

**நவீன இந்தியாவில் நீதித்துறை அமைப்பு:**

கிழக்கிந்திய கம்பெனி 1600 ஆண்டு முதலாம் ராணி எலிசபெத்தின் சாசன சட்டத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது. கிழக்கந்திய கம்பெனி வர்த்தகம் மேற்கொள்ளத் தேவையான ஒழுங்கு முறைகள் மற்றும் அங்கீகாரத்தை அரசு அளித்தது. மதராஸ் நிர்வாகத்தைப் பொருத்தவரை 1661-ஆம் ஆண்டு சாசன சட்டம் ஒரு ஆளுநர் அவருடன் தலா ஒரு குடியேற்றப்பகுதிக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒரு குழுநியமிக்க வழி வகுத்தது. இக்குழுவே வழக்குகளை விசாரித்தது. கிழக்கிந்திய கம்பெனி குறிப்பாக மதராஸ் பகுதியில் ஒரு ஆளுகை சக்தியாக உருவானது. இங்கு ஏற்கெனவே இயங்கிய உள்ளூர் நீதி நிர்வாக முறையைப் பின்பற்றும் வகையில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இங்கிலாந்து சட்டத்தின்படி ஆளுநரும் அவருடைய ஆட்சிகுழுவும் குடிமையியல், குற்ற வழக்குகளைத் தீர்மானிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டன. எனினும் உள்நாட்டு வழக்குகளில் உள்ளூர் பாரம்பரிய முறைகளே பின்பற்றப்பட்டன. இங்கிலாந்து அரசால் விசாரிக்கப்பட்ட முதல் வழக்கு அசென்டினா வழக்கு ஆகும்.

1665-ஆம் ஆண்டு இந்த வழக்கு நடந்தது. அப்போது, பாக்ஸ் க்ராப்ட் ஆளுநராக இருந்தார். 1678-ஆம் ஆண்டு ஸ்டிரெய்ன்ஷாம் மாஸ்டர் என்பவர் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டது. மதராஸ் நீதிமுறை அமைப்பு மறுசீரமைப்பு செய்யப்படுவதற்குக் காரணமானது. ஆளுநரும் அவருடைய குழுவும் சேர்ந்து நீதி வழங்கும் அதிகாரம் கொண்ட உயர் நீதிமன்ற ஆட்சி குழுவாக மாறியது. ஆங்கிலம் நீதிமன்ற மொழியாக அறிவிக்கப்பட்டது. வணிகர்கள் கடலில் மேற்கொள்ளும் குற்றங்களை விசாரிக்க ஒரு கடற்படை நீதிமன்றம் நிறுவ 1683-ஆம் ஆண்டு சாசன சட்டம் வழிவகுத்தது. 1687 – ஆம் ஆண்டு சாசன சட்டம் மதராஸ் மாநகராட்சி அமைப்பதற்கு கிழக்கிந்திய கம்பெனிக்கு அதிகாரமளித்தது. அதோடு மேயர் நீதிமன்றம் இணைக்கப்பட்டது. இதுவே மதராஸ் நகரத்தின் நீதிமன்றமாக (வழக்கு மன்றம்) இயங்கியது.

பம்பாயின் நீதி நிர்வாகத்தைப் பொருத்தவரை, பாம்பே மீது கிழக்கிந்திய கம்பெனி நீதிதுறை அதிகாரம் செலுத்த 1668 ஆம் ஆண்டு சாசன சட்டம் அதிகாரம் அளித்தது. 1672-ஆம் ஆண்டு பிரகடனம். ஆங்கிலேயச் சட்டத்தை பம்பாயில் அறிமுகப்படுத்தியது. மேலும், பம்பாய் நீதிவழக்கும் அதிகாரம் கொண்ட நீதித்துறை புதிய மத்திய நீதிமன்றத்தை நிறுவியது. ஆங்கில சட்டத்தின் பயன்பாடு என்பது ஐரோப்பியர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் நலன்கள் சார்ந்த விவகாரங்களுக்கு பொருந்தக் கூடியதாகும். இந்த நீதிமன்றமானது குடிமையியல், குற்றவியல் மற்றும் நிருபிப்பு வழக்குகளில் அதிகாரவரம்பைச் செயற்படுத்தியது. மேலும் குற்றச் சட்டங்களை நிர்வகிக்க அமைதிக்கான நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டனர். அதன்பிறகு சாட்சியங்களை விசாரணை செய்யவும், தொடக்கநிலை விசாரணைகள் செய்யவும், வழக்ககுகள் நீதிமன்றத்தை நோக்கி கொண்டு செல்லப்பட்டன. எனினும் சித்தி யாக்கூப் எனும் முகலாய கடற்படை தளபதியின் படையெடுப்பு 1690-ஆம் ஆண்டு பம்பாயில் நீதிமன்றம் கலைக்கப்படக் காரணமாகிறது. 12 ஆண்டுகளுக்குப் பிறகு, 1718 ஆம் ஆண்டு மீண்டும் நீதிவழங்கும் அதிகாரம் கொண்ட நீதிமன்றம் புதுப்பிக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு விவகாரங்கள் மீதான விசாரணை நடத்த அதிகாரம் கொண்டதாகும். இந்த நீதிமன்றமானது வாரத்திற்கு ஒரு முறை கூடினாலும், துரிதமான விசாரனைக்கும் பாகுபாடற்ற தீர்ப்புகளுக்கும் புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது.

கல்கத்தா மாகாணத்தைப் பொருத்தவரை, ஆளுநருக்கும், அவருடைய ஆட்சிக் குழுவுக்கும் நீதித்துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. குடிமையியல் மற்றும் குற்றவியல் விவகாரங்களைப் பொருத்தவரை, கிழக்கிந்திய கம்பெனியானது ஏற்கனவே வழக்கத்திலிருந்த முகலாய நீதித்துறை நிர்வாக முறையையே பின்பற்றியது. ஆங்கிலேயே மாவட்ட ஆட்சியரால் மூன்றாம் நடுவர் தீர்ப்பாயத்திற்குப் பரிந்துரைக்கப்படும் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பாஜ்தாரி நீதிமன்றம் தலைமையேற்று நடத்தியது. கல்கத்தா நீதித்துறை நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சியர் மிக முக்கியப் பங்கு வகித்தார். மேலும், அவருடைய அலுவலகம் குடிமையியல், குற்றவியல் மற்றும் வருவாய் வழக்குகளை விசாரிக்கும் அலுவலகமாகவும் இருந்தது.

இதேபோல் சாசன சட்டம் 1687 மதராஸ் மாகாணத்தில் பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் 1726-ஆம் ஆண்டு சாசன சட்டம் மூன்று மாகாணங்களிலும் ஒவ்வொரு மேயர் நீதிமன்றங்களை அமைத்தது. 1753-ஆம் ஆண்டு சாசன சட்டம், 1726-ஆம் ஆண்டு சாசனத்தில் நீதி தொடர்பான பகுதிகளை மேலும் சீர்த்திருத்தம் செய்தது. மேலும் இந்த சாசனம் சட்டம் ஐந்து நீதிமன்றங்களை நிறுவியது. அவைகள், முறையே கோரிக்கைகள் நீதிமன்றம், மேயர் நீதிமன்றம், குடியரசுத்தலைவர் நீதிமன்றம். ஆட்சிக்குழு கொண்ட நீதிமன்றம் மற்றும் அரசர் தலைமையிலான நீதிமன்றம் ஆகியனவாகும். இந்திய நிதித்துறையின் மற்றொரு வரலாற்றுச் சிறப்புமிக்க பரிணாம வளர்ச்சி 1772-ஆம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்கின் திட்டமாகும். இது நீதித்துறை நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்துவதாக இருந்தது. 1780-ஆம் ஆண்டுகளில் அவர் மாகாண நீதிமன்றங்களைச் சீரமைத்தார்.

காலனி ஆட்சிக் காலத்தில் நீதித்துறையில் ஏற்பட்ட மிக முதன்மையான மேம்பாடு என்பது உள்ளூர் சட்டங்களை தொகுத்தது ஆகும். முதலாவது கவர்னர் ஜெனரல் பதவி வகித்த வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்து சட்டங்களைத் தொகுப்பதற்கு காரணமானவர் ஆவார். அடுத்து கார்ன் வாலிஸ் தொகுத்த சட்டத் தொகுப்பு மற்றொரு முதன்மையான பங்களிப்பாகும். அதைப்போலவே இஸ்லாமிய சட்டங்களும் தொகுக்கப்பட்டு நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கல்கத்தாவில் ஒழுங்குமுறைச் சட்டம் 1773-ஆம் ஆண்டு. ஒரு உச்ச நீதிமன்ற நீதி நிர்வாகம் அமைக்க மன்னருக்கு அதிகாரம் அளித்தது. சாசன சட்டம் 1774 உச்ச நீதிமன்றத்தின் அதிகார

வரம்புகளை விரிவாக்கம் செய்தது. எனினும் மதராஸ், பம்பாய் உச்ச நீதிமன்றங்கள் உடனடியாக நிறுவப்படவில்லை. 1801 மற்றும் 1824 ஆம் ஆண்டுகளில் முறையே மதராஸ், பம்பாய் உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. 1793-ஆம் ஆண்டில் காரன்வாலிஸ் பிரபு "சட்ட விதிகள் தொகுப்பு" ஒன்றினைத் தயாரித்தார். இதுவே, "காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பு" எனப் புகழ்பெற்றது. அது குடிமை மற்றும் குற்றவியல் என இரு விசாரணை முறைகளையும் கையாளுவதாக இருந்தது. அவர் குடிமையியல் நீதிமன்றங்களை அங்கீகரித்தார். நீதிமன்றக் கட்டணங்களை ஒழித்தார். மேலும், குற்றவியல் நீதிமன்றங்களில் சீர்திருத்தம் செய்தார். வங்காளத்தின் கவர்னர் ஜெனரலாக 1807-ஆம் ஆண்டு பதவியேற்ற மின்டோ பிரபு பல்வேறு நீதிமன்றங்களின் அதிகாரங்களையும், அதிகார வரம்பினையும் அதிகரித்தார். 1813-ஆம் ஆண்டு ஹாஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் நாட்டின் குடிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நிர்வாகத்தில் மேலும் பல சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். நீதி நிர்வாகத்தில் நிலவும் சிவப்பு – நாடா முறையைத் தடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து பெண்டிங் பதவியேற்றார்.

இவர் இந்தியாவின் நீதித்துறை நிர்வாகத்தை மறுசீரமைப்பு மற்றும் தொகுக்கும் பணியை செய்தார். அவர் மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்களை மூடினார். அப்பணிகளை மாவட்ட நடுவர் நீதிமன்றங்களுக்கு மாற்றினார். 1834 – 1861 காலகட்டத்தில் இங்கிலாந்து மன்னர் நீதிமன்றமும், இந்தியாவில் கம்பெனி நீதிமன்றமும் தனித்தனி அதிகார வரம்புகளைக் கொண்ட இரட்டை நீதி அமைப்பை உருவாக்கி இருந்தது.

இந்திய உயர் நீதிமன்ற சட்டம் 1861, கல்கத்தா, மதராஸ், பாம்பாய் ஆகிய நகரங்களில் நீதி வழங்கும் அதிகாரம் கொண்ட உயர் நீதிமன்றங்களை அமைக்க மன்னருக்கு அதிகாரம் அளித்தது. இது உச்ச நீதிமன்ற முறை ஒழிப்புக்கு இட்டுச் சென்றது. இதுவே இந்தியாவில் உயர் நீதிமன்றங்கள் தோன்றுவதற்கான வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகக் கருதப்படுகிறது. பின்னர், இந்திய அரசாங்கச் சட்டம் 1935, இந்திய உயர் நீதிமன்றங்களின் தன்மை, அதிகார வரம்பில் குறிப்பிடத்தக்க மாறுதல்களைச் செய்தது. இந்தியா விடுதலை அடைந்து அரசமைப்பு ஏற்கப்பட்ட காலகட்டத்தில் பஞ்சாப், அசாம், ஒடிசா, ராஜஸ்தான், திருவாங்கூர், மைசூர் மற்றும் ஜம்மு காஷ்மீர் என ஏழு உயர் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டிருந்தன. பிற உயர் நீதிமன்றங்கள் பின்னர் உருவாயின. இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர், ஏற்கெனவே இயங்கிய உயர் நீதிமன்றங்கள் அங்கீகரிக்கப்பட்டன. மேலும், அனைத்து மாநிலங்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்டப் பகுதிகளும் உயர் நீதிமன்றம் பெறும் வகையில் ஒவ்வொரு மாநிலம் அல்லது இரண்டு, மூன்று பகுதிகள் இணைத்து உயர் நீதிமன்றங்களை நிறுவ நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. 1976-ஆம் அ்ணடு 42-வது அரசமைப்பு திருத்தச்சட்டம் உயர் நீதிமன்றங்களின் அதிகார வரம்பில் பெருமளவு மாற்றத்தினை கொண்டு வந்தது.

இவ்வாறாக, தொடக்கக் காலத்தில், கல்கத்தா, சென்னை, பம்பாய் என மூன்று உயர் நீதிமன்றங்களே அன்று இருந்தன. சுதந்திரத்திற்கு முன் இருந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் மட்டுமல்லாமல், உயர் நீதிமன்றங்கள் அமைப்பு மற்றும் அதிகாரவரம்பிலும் பெயரளவில் மாற்றங்களைக் கொண்டுவந்தன. இதன்மூலம் அவற்றின் சுதந்திரத் தன்மை பாகுபாடற்றத் தன்மை போன்றவை உறுதி செய்யப்பட்டன. அரசமைப்பை நடைமுறைக்கு கொண்டு வந்த பின்பே உயர் நீதிமன்றங்களின் நிலையானது வலிமையடைந்தது மேலும் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் அசல் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற என்ற நிலையைக் கடந்து, அரசமைப்பின் பாதுகாவலனாகவும், அரசமைப்பு குறித்து விளக்கமளிக்கும் அதிகாரம் கொண்டதாகவும் வலுவடைந்தது.

இந்திய உச்ச நீதிமன்றத்தை பொருத்தவரை, இந்திய அரசாங்கச் சட்டம் 1935 ல் ஓர் மைல்கல் சட்டமாகும். இந்திய அரசாங்கத்தின் அமைப்பை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி இச்சட்டம், ஒற்றையாட்சி முறையில் இருந்து கூட்டாட்சி முறைக்கு மாறிக் கொண்டிருந்த அத்தருணத்தில் ஒரு கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றம் தேவை அதிகரித்தது. எனவே, இது தொடர்பாக, அச்சட்டத்தில் ஒரு வதி சேர்க்கப்பட்டது. அதன்படி 1937-ஆம் ஆண்டு கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் ஆறு நீதிபதிகளையும் கொண்டிருந்தது. 1950-ஆம் ஆண்டு இந்நீதிமன்றம் இந்தியாவின் உச்ச நீதிமன்றமாக ஆனது.

இடைப்பட்ட 12 ஆண்டுகள் எனும் குறுகிய காலத்தில் கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றம் இந்திய சட்ட வரலாற்றில் அழியாத விளைவுகளை விட்டுச் சென்றது. தேசிய அதிகார வரம்பு கொண்ட முதல் நீதிமன்றமும் இதுவே ஆகும். இந்த கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றத்தில் இருந்துதான் அதன் நீதிபதிகள் சுதந்திரம், நேர்மை, பாகுபாடற்ற விசாரணை என்ற மரபைப் பெற்றெடுத்தனர். மேலும், 1726 மற்றும் 1883-ஆம் ஆண்டுகளுக்கிடையே பிரபுக்களின் நீதிமன்ற மேலவை (Privy Council) ஆற்றிய பங்கு குறித்தும் இங்கு சிறப்பாக குறிப்பிட்ட வேண்டியது தேவையாகிறது. இது இந்திய நீதித்துறை முறைக்கு இன்றியமையாத அளவிற்கு பங்களித்தது. இன்றளவும் நீதிமன்றங்களில் ஒளிவிளக்காக உள்ள அடிப்படையான இந்திய சட்டக் கோட்பாடுகளை வகுத்துக் கொடுத்தது இதுவே ஆகும்.

**சர் ஹரி சிங் கோர்:**
இறுதிக்கட்ட மேல்முறையீட்டுக்காக பிரிந்து செல்லாமல் இந்தியாவிலேயே மேல்முறையீடு ஒரு அனைந்திந்திய தலைமை நீதிமன்றத்தின் தேவையை 1921 ல் உணர்ந்தவர்.

இந்திய சுதந்திரச் சட்டம், 1947-ஆம் ஆண்டு மூலம் அரசியல் அதிகாரம் மாற்றப்பட்டது. இந்தியாவில் தனித்த, சுதந்திரமான நீதித்துறை அமைப்பு நிறுவுவதன் தேவையை ஏற்படுத்தியது. இந்த நோக்கத்துடன் கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பு இது விரிவாக்கப்பட்டது. இதையொட்டி, பிரபுக்கள் நீதிமன்ற மேலவை ஒழிப்பு, கூட்டாட்சி முறை சார்ந்த நீதிமன்ற அதிகார விரிவாக்கம் சட்டம் 1949 இயற்றப்பட்டது. இதன்படி, இந்தியக் கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்றம் நாட்டின் உயர்ந்தபட்ச நீதி அதிகார வரம்பு கொண்டதாக வலுவடைந்தது. ஜனவரி 26. 1950 – ஆம் ஆண்டு அரசமைப்பு அமலாக்கத்துடன், அரசமைப்பு உறுப்பு 124 இந்திய உச்ச நீதி மன்றத்தை நிறுவ வழி செய்தது. இவ்வாறு, மெதுவாகவும், சீராகவும் படிப்படியாகவும் இந்திய நீதி அமைப்பு பரிணாமம் அடைந்தது. இது காலத்தோடு பொருந்தி சிறப்பாக வளர்ந்து தன்னை நிரூபித்துக் கொண்டுள்ளது.

**இந்திய உச்ச நீதிமன்றம்:**

தனித்தன்மை – சட்ட மூலவளங்கள் - அதிகார வரம்பு மற்றும் அதிகாரங்கள் - நிறுவனமயம்.

இந்திய அரசமைப்பு மூன்று அடுக்கு நீதித்துறை அமைப்பினை வழங்குகிறது. அவை வருமாறு:

1. இந்திய உச்ச நீதிமன்றம்
2. அரசமைப்புப்படி உருவாக்கப்பட்ட மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்கள்.
3. ஒவ்வொரு மாநிலத்திலும் நீதி மாவட்டங்களில் வாரியாக மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்

இந்திய அரசமைப்பு நீதித்துறைக்கு சுதந்திரம் வழங்கியுள்ளது. அதாவது, ஆட்சித்துறை சட்டமன்றங்களின் தலையீடுகளில் இருந்து நீதித்துறைக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா போன்ற கூட்டாட்சி மக்களாட்சியில், உச்ச நீதிமன்றமே அரசமைப்பின் காவலன் ஆகும். மத்திய, மாநில அரசுகளுக்கு இடையில் எழும் சிக்கலுக்கு, தீர்வு காண்பது, மாநிலங்களுக்கு இடையே எழும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பது, குற்றவியல், குடிமையியல் வழக்குகளில் உயர்ந்தபட்ச மேல்முறையீடு நீதிமன்றம் ஆகிய மிகப் பெரிய பொறுப்புகளை நிறைவேற்றுகிறது. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் அடிப்படை உரிமைகள் அமலாக்கம் மற்றும் அனைத்து இந்தியக் குடிமக்களின் சுதந்திரம் ஆகிய பெரும் பொறுப்புகளை உச்ச நீதிமன்றம் சுமக்கிறது. எனினும் அமெரிக்க, ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சி அமைப்பு போன்று (ஒன்று கூட்டாட்சிக்காக மற்றொன்று மாநிலங்களுக்காக) என இரண்டு தொகுப்பு நீதித்துறை அமைப்பினை இந்திய அரசமைப்பு வழங்கவில்லை. இந்தியா ஒரு ஒருங்கிணைந்த நீதித்துறை முறையினை மட்டுமே கொண்டிருக்கிறது. இதன்படி, உச்ச நீதிமன்றம் தலைமை நீதிமன்றமாக (Apex) இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்கள் மீதும் அதிகாரம் செலுத்துகிறது.

**சட்ட மூலவளங்கள்:**

இந்தியாவில் சட்ட ஆட்சியின் மூல ஊற்றாக அரசமைப்பு அமைந்திருக்கிறது. அரசமைப்பின் அடிப்படைகளுக்கு ஏற்ப நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்கள், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் சட்டமன்றங்கள் சட்டங்கள் இயற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது. தவிர, உறுப்புகள், ஒழுங்குமுறைகள், நிர்வாக அமைப்புச் சட்டங்கள் என துணைச் சட்டங்கள் இயற்றவும் அனுமதிக்கப்படுகிறது. அதே சமயம், இவை மூன்றாவது சட்ட மூலங்கள் எனக் கருதப்படும்.

**ஒருங்கிணைந்த நீதித்துறை:**

இந்தியக் கூட்டாட்சி, இரட்டை ஆட்சி அமைப்புமுறை கொண்டிருந்தாலும் இரட்டை நீதித்துறை அமைப்பைக் கொண்டிருக்கவில்லை.

உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும், அரசமைப்பின் கீழ் ஒருங்கிணைந்த நீதித்துறையாகச் செயல்பட்டு அனைத்து குடிமையியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கு தீர்வு காண்கிறது. தீர்வு வழங்கும் முறையில் வேறுபாடுகளைக் களைவதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

**உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பும் அதிகாரங்களும்:**

உச்ச நீதிமன்றமே அசல், மேல்முறையீட்டு மற்றும் ஆலோசனை வழங்குதல் என மூன்று அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது. அசல் நீதி அதிகாரவரம்பு என்பது உச்ச நீதிமன்றங்களில் அனைத்து வழக்குகளுக்கும் மூலதாரமாகிவிடுகிறது என்பதாகும். இவை மத்திய அரசாங்கங்களுக்கும் அல்லது இதர மாநில அரசுகளுக்கும் இடையே எழும் கருத்து வேறுபாடுகள் அல்லது மாநிலங்களுக்கு இடையே எழுகின்ற சிக்கல்களையும் உள்ளடக்கியது ஆகும். அடிப்படை உரிமைகள் தொடர்புடைய வழக்குகளில் உச்ச நீதிமன்றமானது அசல் நீதித்துறை, மேல்முறையீட்டு அதிகார வரம்பு என இரண்டு அதிகாரங்களையும் கொண்டிருக்கிறது. மேலும் நீதிப்பேராணைகள் முறையே, ஆட்கொணரவு, நெறியுறுத்தும் நீதிப்பேராணை, தகுதிமுறை வினவுதல், தடை, கீழமை நீதிமன்றங்களுக்கு ஆணையிடுதல், விளக்கம் கோரி ஆணையிடுதல் போன்ற ஆணைகளை உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கிறது.

உச்ச நீதிமன்றம்தான் இந்தியாவில் உள்ள உச்சபட்ச மேல் முறையீட்டு நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றங்களுக்கு எதிரான மேல்முறையீடுகளை இங்கு தான் செய்ய முடியும் (குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் இரண்டிற்கும்). குறிப்பிட்ட விவகாரங்களில் வழிகாட்டுதல் வழங்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு உள்ளது.

**தாமதமாகும் நீதி, மறுக்கப்படும் நீதியே**

- கீழமை நீதிமன்றங்களில் 2.91 கோடி வழங்குகள் நிலுவையில் உள்ளது. நீதி பரிபாலனம் தாமதம்.
- 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக வழக்குகள் அதிகம் தேக்கம் அடைந்துள்ள மாநிலங்களில் மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களில் மட்டும் 8 கோடி வழக்குகளை நிலுவையாகக் கொண்டு உத்திரப்பிரதேச மாநிலம் முதலிடம் வகிக்கிறது.
- தேசிய நீதித்துறை தகவல் அமைப்பின்படி, நாடு முழுவதும் மாவட்ட மற்றும் துணை நிலை நீதிமன்றங்களில் 2.91 கோடி வழக்குகள் தேக்கமடைந்துள்ளன. இவற்றில் 21.9 லட்சம் வழக்குகள் 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக நிலுவையில் உள்ளன.
- வழக்குகள் அதிகமாக தேக்கமடைந்த மாநிலங்களில் உத்திரப்பிரதேச மாநிலத்திற்கு அடுத்தப்படியாக பீகார் மாநிலத்தில் மூன்று லட்சம் வழக்குகளும் மஹாராட்டிர மாநிலத்தில் இரண்டு லட்சம் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. சிக்கிம் மாநிலத்தில் இரண்டு வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளது. அந்தமான் நிக்கோபார் மாநிலத்தில் ஒரு வழக்கும் நிலுவையில் இல்லை.

தாமதமாகும் நீதி மறுக்கப்படும் நீதி என்ற தலைப்பில் மாணவர்களை இருப்பிரிவுகளாகப் பிரித்து உரையாடுவதற்கு ஆசிரியர் ஏற்பாடு செய்யலாம். ஒருக் குழுவினர் தலைப்பிற்கு ஆதரவாகவும் மற்றக் குழுவினர் தலைப்பிற்கு எதிராகவும் வாதிடும்படி குடியரசுத்தலைவர் உச்ச நீதிமன்றத்திடம் எந்த ஒரு

சட்ட விவகாரம் குறித்தும் ஆலோசனை கேட்டு அணுக முடியும். ஆனால் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைகளை குடியரசுத்தலைவர் ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை.

உச்ச நீதிமன்றம் இந்திய அரசமைப்பின் பாதுகாவலனாக இயங்குகிறது அரசமைப்புக்கு விளக்கம் அளிப்பதில் உச்ச நீதிமன்றமே இறுதி அதிகாரம் கொண்டுள்ளது. நிர்வாக நடவடிக்கையோ, கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகளோ அரசமைப்பின் அடிப்படை நோக்கங்களுக்கு எதிராக உள்ளது என உச்ச நீதிமன்றம் கருதுமானால் அதனை ரத்து செய்யும் அதிகாரம் கொண்டுள்ளது.

**உச்ச நீதிமன்றம் அமைப்பு:**

உச்ச நீதிமன்றமானது இந்திய அரசமைப்புப் பகுதி 5 அத்தியாயம் 4 முதல் நிறுவப்பட்டுள்ளது. அரசமைப்பு உறுப்புகள் 124 முதல் 147 வரை இந்திய உச்ச நீதி மன்றத்தின் வடிவம் மற்றும் அதிகார வரம்புகள் குறித்து கூறுகின்றன. அரசமைப்பு ஆரம்பத்தில் ஒரு நீதிபதி, ஏழு கீழ்நிலை நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத்தினை அனுமதித்தது. இந்த எண்ணிக்கையை அதிகரிக்கவும் நாடாளுமன்றத்திற்கு அரசமைப்பு அதிகாரம் கொடுத்திருந்தது. 2008-ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்தது.

உச்ச நீதிமன்ற நீதிபதியை நியமனம் செய்வதற்கு, தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத்தின் இதர நான்கு மூத்த நீதிபதிகள் கொண்ட “குழு” – வுடன் (Collegium) கலந்தாலோசிக்க வேண்டும். புதிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குறித்து குழு ஒருமித்த கருத்து அடிப்படையில் பரிந்துரைக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் ஒவ்வொரு நீதிபதியும் அமைச்சரவை மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுடன் கலந்தாலோசனை செய்த பின்னர் குடியரசுத்தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். அவ்வாறு நியமனம் செய்யும் உச்ச நீதிமன்ற நீதிபதி 65 வயது அடையும் வரை பதவியில் இருக்கலாம். எந்த ஒரு நீதிபதியாவது பதவி விலக நினைத்தால், தன்னால் கைப்பட எழுதிய பதவி விலகல் கடிதத்தில் கையொப்பமிட்டு குடியிரசுத்தலைவருக்கு சமா்ப்பிக்க வேண்டும். ஒரு நீதிபதியை நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் பதவி நீக்கம் செய்ய முடியும்.

குடியரசுத்தலைவருக்க சமர்ப்பிக்க வேண்டும். ஒரு நீதிபதியை நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் பதவி நீக்கம் செய்ய முடியும்.

ஒருவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட அவர் இந்தியக் குடியுரிமை பெற்றிருத்தல், உயர் நீதிமன்ற நீதிபதியாக ஐந்து ஆண்டுகள், பணியாற்றிய அனுபவம் அல்லது குறைந்தது 10 ஆண்டுகள், தொடர்ந்து ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராகப் பணியாற்றிய அனுபவம் இவற்றுடன் நாடாளுமன்றம் விதித்துள்ள தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும் அல்லது அத்தகைய ஒரு நபர் கட்டாயம் குடியரசுத்தலைவர் கருத்தில் தலைசிறந்த சட்ட நிபுணராக இருக்க வேண்டும்.

**கண்டனத் தீாமானம்:**

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதிக்கப்பட்டு ஒட்டு மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாமல் கலந்து கொண்டு, அதே அமர்வில் வாக்கெடுப்பில் ஆதரவு பெரும்பான்மை பெற்றால் உச்ச நீதிமன்ற நீதிபதியை விசாரிக்க குடியரசுத்தலைவர் ஆணையிடுவார்.

**நியமனங்கள் அனைத்தும் பொதுவாக பணிமூப்பு அடிப்படையில் செய்யப்படுகிறது.**

பட்டியலினத்தவர் சமுதாயத்தில் இருந்து ஒருவர் முதல் முறையாக 2000-இல் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார். அவர் நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் ஆவார். இவர் 2007-இல் பட்டியலினத்தைச் சார்ந்த முதல் தலைமை நீதிபதியாக உயர்ந்தார்.

தற்போதுள்ள அரசமைப்பின் கீழ் இந்திய உச்ச நீதிமன்றம் ஜனவரி 28, 1950-ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது. தொடக்கத்தில் நாடாளுமன்றத்தின் இளவரசர்கள் மாடத்தில் செயல்பட்டது. 1958-ஆம் ஆண்டு தற்போது உள்ள வளாகத்துக்கு மாற்றப்பட்டது.

நீதிபதி ஹரிலால் ஜெ.கனியா, உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி ஆவார். அவருடன் நீதிபதிகளாக பதவியேற்றவர்கள் முறையே, நீதிபதி சையத் பாசல் அலி, பதஞ்சலி சாஸ்திரி, நீதிபதி மெகர்சந் மகாஜன், நீதிபதி பிஜன் குமார், நீதிபதி முகர்ஜி மற்றும் நீதிபதி எஸ்.ஆர். தாஸ் ஆகியோர்கள் ஆவர்.

**உயர்நீதிமன்றங்கள்:**

உயர் நீதிமன்றங்கள் மாநிலங்களின் தலைமை நீதித்துறை நிர்வாக அமைப்பு ஆகும். அரசமைப்புப்படி ஒவ்வொரு மாநிலமும் ஒரு உயர் நீதிமன்றத்தை பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதும், தற்போது நான்கு மாநிலங்கள் ஒன்றுக்கு அதிகமான மாநிலங்களுடன் இணைந்த உயர் நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளன. ஆறு ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் அருகே அமைந்த மாநிலத்தின் உயர் நீதிமன்றத்தின் நீதி அதிகார வரம்பின் கீழ் வருகின்றன. ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் டில்லி மட்டுமே தனக்கான உயர் நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் ஒரு தலைமை நீதிபதியையும் இதர நீதிபதிகளையும் கொண்டிருக்கிறது.

குறித்த இடைவெளிகளில் குடியரசுத்தலைவர் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்கின்றார். உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியினை உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மாநிலத்தின் ஆளுநர் ஆகியோரை கலந்தாலோசித்து குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார். பிற நீதிபதிகள் நியமனத்தில் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் பிரிந்துரைகளும் ஆலோசனை கேட்கப்படும். உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் 62வயது நிரம்பும் வரை பதவியில் இருப்பார். பதவி நீக்கத்தை பொருத்தவரை உச்ச நீதிமன்ற நீதிபதியின் பதவி நீக்க நடைமுறை போலவே இருக்கும். உயர் நீதிமன்ற நீதிபதி நியமனத்திற்கு ஒருவர். இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும் 10 ஆண்டுகள் நீதித் துறையில் பணிபுரிந்திருக்க வேண்டும் அல்லது 10 ஆண்டுகள் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக பணியாற்றி இருக்க வேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் வழக்குகள் மாநில ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அசல் நீதித்துறை மற்றும் மேல்முறையீட்டு அதிகார வரம்பு ஆகியனவற்றை உள்ளடக்கியது. ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தனது கீழ் உள்ள கீழமை நீதிமன்றங்களின் மீது மேலாதிக்க அதிகாரம் கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றங்கள் தனித்த, ஒருங்கிணைந்த நீதித்துறை அதிகார அமைப்பாக இருந்தாலும் அவை இன்னும் முழுமையான சுதந்திரமான நீதித்துறை நிறுவனங்கள் எனக் கூறமுடியாது.

உச்ச நீதிமன்றம் அவைகளின் மீது நேரடியான நிர்வாக கட்டுப்பாடு எதுவும் கொண்டிருக்கவில்லை, அவை எந்த விதத்திலும் சட்டமன்றத்தாலோ அல்லது மாநில ஆட்சித்துயைாலோ கட்டுப்படுத்தப்படுவதில்லை. ஆனால் அவற்றின் நீதிபதிகள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உடனான ஆலோசனைக்கு பிறகு குடியரசுத்தலைவரால் ஒரு உயர் நீதிமன்றத்தில் இருந்து மற்றொரு உயர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட முடியும். உயர் நீதிமன்றங்களும் கூட அடிப்படை உரிமைகள் தொடர்புடைய வழக்குகளில் நீதிப் பேராணைகள் வழங்கும் அதிகாரங்கள் கொண்டவைகளாகும்.

**அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்ட வழித்தீர்வுகள்:**

உரிமைகள் மீறப்பட்ட நபர்களுக்கு விரைந்து நீதி வழங்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் பார்வையில் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் இரண்டும் நீதிப் பேராணைகள் இடைக்கால உத்தரவு வழங்கும் அதிகாரங்கள் கொண்டிருக்கின்றன. அவைகள் ஐந்து வகைப்படும்.

1. **ஆட்கொணர்வு நீதிப்பேராணை:**

   இதன் பொருள் ஒரு நபரை உயிருடன் கொண்டு வந்து நிறுத்தும்படி கூறுவதாகும். இந்த நீதிப்பேராணை ஒரு நபர் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு வழக்கிற்கு பொருந்தக் கூடியதாகும். இந்த நீதிப்பேராணையானது ஒவ்வொரு தனிநபரின், தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது.

2. **நெறியுறுத்தும் நீதிப்பேராணை:**

இந்த பேராணையானது, சட்டப்படி இயங்கும் படியும், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் இடப்படும் ஆணையாகும். இதன் பொருள் எந்த ஒரு அதிகாரம் கொண்டோரையும் அவரின் சட்டபூர்வமான கடமையை செய்ய உத்தரவிடுவதை குறிக்கும். இந்த நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையானது, சட்டபூர்வ கடமையை வலியுறுத்துவதுடன், பொது மக்கள் நலன்காக்கும் கடமையை செய்ய மறுக்கும் அதிகாரி, அலுவலர்கள், அரசு என நீதிமன்ற அமைப்புகளுக்கு எதிராகக் கூட ஆணையிடக் கூடியதாகும்.

3. **தடை நீதிப்பேராணை:**

இந்த நீதிப் பேராணையானது உயர்மட்ட நீதிமன்றம், கீழ்நிலை நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்கள் தங்களின் அதிகார வரம்பை மீறி நடப்பதைத் தடுக்கும் விதமாக வழங்கப்படுவதாகும். இந்த தடை விதமாக வழங்கப்படுவதாகும். இந்த தடை ஆணை நீதித்துறை சார்ந்த அமைப்புகள் அல்லது பகுதி அளவு மட்டுமே நீதித்துறை அமைப்புகளுக்கு எதிராக மட்டும் வழங்கப்படும் தடை ஆணைகள் ஆகும்.

4. **தகுதி முறை வினவும் நீதிப் பேராணை:**

இதன் பொருள், எந்த அதிகாரத்தின் அடிப்படையில் அல்லது பணி சான்றிதழ் ஆணை அடிப்படையில் என வினா எழுப்புவதை குறிப்பிடுவதாகும். இதன் பொருள் ஒரு நபர், ஒரு அரசு அலுவலக பதவியில், எந்தத் தகுதியின் அடிப்படையில் அமர்ந்திருக்கிறார் என வினா எழுப்பும் படியான விவகாரத்தில் வழங்கப்படும் நீதிப்பேராணையாகும்.

5. **விளக்கம் கோரும் ஆணை:**

ஒரு பொது அலுவலில் சட்டபூர்வ நிலையை ஒருவர் எதன் அடிப்படையில் அல்லது எந்த அதிகார அமைப்பின் அடிப்படையில் அதில் அமர்த்தப்பட்டார் என்று கேள்விக்கேட்பது ஆகும்.

மேற்கண்ட நீதிப் பேராணைகளோடு, உயர் நீதிமன்றமானது சட்டஉறுப்பு 266-ன் கீழ் பொது மக்கள் நலன்கருதி வழிகாட்டுதல்கள், உத்தரவுகள் பிறப்பதாகும்.

**நீதித்துறைச் சீராய்வு பொது நல வழக்கு மற்றும் நீதித்துறை செயல்பாட்டு முறை**

**நீதித்துறைச் சீராய்வு:**

தனி நபர்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள நீதிமன்றச் சீராய்வு அதிகாரம் மிகவும் முக்கியமானது. இந்திய உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு இருக்கும் இத்தகைய நீதித்துறைச் சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டம் இயற்றுவது மற்றும் அதனைச் செயல்படுத்துவது என இரண்டின் மீதும் அரசமைப்புப்படி மறு ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கும் வகையில் இந்த அதிகாரம் விரிவான வரம்புகளைக் கொண்டுள்ளது.

நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் அரசமைப்பிற்கு முரணாக இருக்குமானால் அச்சட்டம் செல்லாது என்று நீக்கப்படும். இவ்வாறு மிகவும் துணிச்சலான, முரண்பாடான ஒரு தீர்ப்பு, வங்கிகள் தேசியமயமாக்கும் சட்டம் செல்லாது என அறிவித்ததாகும். சிறுபான்மையினர் தங்களுக்கான கல்வி நிறுவனங்கள் நிறுவவும் நிர்வகிக்கவும் வழங்கப்பட்ட உரிமைகளைப் பறிக்கும் வகையில் இயற்றப்பட்ட சட்டங்கள் செல்லாதது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தலும் நீதித்துறைச் சீராய்வு முறையீடு மனு மீது வழங்கப்பட்ட முக்கிய தீர்ப்பாகும்.

இதே அடிப்படையில் ஒரு அரசமைப்புத் திருத்தச் சட்டம் மீதே சீராய்வு மனு தாக்கல் செய்யும் அளவுக்கு நீதத்துறைச் சீராய்வு அதிகார வரம்பு விரிவடைந்ததாகக் காணப்படுகிறது. இந்த வழக்குகள் அரசமைப்பு திருத்தச்சட்டம் ஒரு அரசமைப்பின் அடிப்படை கோட்பாட்டுக்கு பாதிப்பிற்குள்ளாகிறதா என்று மறு ஆய்வு செய்வதாகும். உதாரணமாக மதச்சார்பற்றத்தன்மை,

மக்களாட்சி, கூட்டாட்சி முறை போன்றவை மீதான திருத்தச்சட்டம், அரசமைப்பிற்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் கருதினால் அத்திருத்தச்சட்டம் அரசமைப்புக்கு விரோதமானது எனவே செல்லாது என்று அறிவிக்கப்படும்.

இந்தியாவில் சட்ட நிர்வாகத்தில் நீதித்துறைச் சீராய்வு அதிகாரம் முக்கியப் பங்காற்றுகிறது. இந்திய அரசமைப்பு உறுப்பு 13(2)-வது, நாடு முழுவதும் ஒரே மாதிரியான விதிகளை அமல்படுத்துவது சரியல்ல என்று நம்புகிறது. குறிப்பாக, அத்தகைய நாடு தழுவிய விதிகள் அரசமைப்பு பாகம் 3இல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிப்பதாகும் எனக் கருதுகிறது. அரசமைப்பில் இந்தப் பிரிவுக்கு எதிராக விதிக்கப்படும் எந்த விதிமீறலாகக் கருதப்பட்டு, சீராய்வுக்கும் பின்னர் அந்த விதி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்படும்.

விதிகளை அமல்படுத்துவது சரியல்ல என்று நம்புகிறது. குறிப்பாக, அத்தகைய நாடு தழுவிய விதிகள் அரசமைப்பு பாகம் 3இல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிப்பதாகும் எனக்கருதுகிறது. அரசமைப்பில் இந்தப் பிரிவுக்கு எதிராக விதிக்கப்படும் எந்த விதிமீறலாகக் கருதப்பட்டு, சீராய்வுக்கும் பின்னர் அந்த விதி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்படும்.

எனினும், 24.04.1973 க்குப் பின்னர் அரசமைப்பின் ஒன்பதாவது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சட்டங்கள் தொடர்பாக மறுசீராய்வு கோர முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், தற்போது சீராய்வுக்கு உட்பட்டதாகத் தோன்றும் சட்டங்கள் ஒன்பதாவது பட்டியலில் சேர்க்கப்பட்டாலும் அவற்றின் மீது மறுசீராய்வு கோர முடியாது. நீதிமன்ற மறுசீராய்வு என்பது சட்டம் குறித்த வினாக்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடியது ஆகும். அரசியல் சம்பந்தமாக எழும் பிரச்சினைகளுக்கு சம்பந்தமாக எழும் பிரச்சினைகளுக்கு இதனை செயல்படுத்த முடியாது. உச்ச நீதிமன்றமும் தானாகவே எந்த ஒரு சட்டத்தையும் மறுசீராய்வுக்கு உட்படுத்த முடியாது. ஒரு குறிப்பிட்ட விதி அல்லது சட்டம் ஆகியவற்றை எதிர்த்து வரும் வழக்கில் மட்டுமே பயன்படுத்த முடியும்:

**பொது நல வழக்கு:**
பொது மக்கள் நலன் கருதி எந்த ஒரு தனிநபரும் நீதிமன்றத்தை நாடி மனு அளிக்க முடியும். இது பொதுநலன் மனு எனப்படுகிறது. இதன்படி, அரசமைப்பு உறுப்பு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்திலும், அரசமைப்பு உறுப்பு 226- இன் கீழ் உயர் நீதிமன்றங்களிலும், குற்றவியல் நடைமுறைச் சட்டம் 133-ன் படி நடுவர் நீதி மன்றங்களிலும் பொது நல வழக்கிற்கான மனுவைத் தாக்கல் செய்ய முடியும். மேலும், இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி கீழ்க்கண்ட வகைகளில் பொது நல வழக்குகள் தொடர முடியும்.

1. கொத்தடிமை தொழிலாளர்கள் முறை தொடர்பான விவகாரங்கள்
2. கைவிடப்பட்ட (ஆதவற்ற) குழந்தைகள்
3. குறைந்தபட்ச கூலி வழங்காமை
4. சிறைச்சாலையில் நிகழும் மரணம், வன்கொடுமைகள் தொடர்பான புகார்கள், விரைவான நீதி அடிப்படை உரிமை என்பதால் துரித விசாரணை கோருதல்.

5. வழக்குப் பதிவு செய்ய மறுக்கும் காவல் துறை அதிகாரிக்கு எதிராக வழக்கு மனுதாக்கல் செய்தல், வரதட்சனை கோரி பெண் வன்கொடுமை, மணப்பெண் தீவைப்பு, பாலியல் வன்கொடுமை, கடத்தல், கொலை, வதை போன்ற குற்றங்களுக்கு எதிரான புகார்கள்.

6. பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை புகார்.

7. சுற்றுச்சூழல் மாசுபாடு தொடர்புடைய புகார்கள் என வகைப்படுத்துகின்றன.

அரசமைப்பு உறுப்பு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் பொது நல மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் தமக்குள் இணைத்துக் கொண்டுள்ளது. பொது நல வழக்கு என்பது ஒரு பகைத் தன்மையில் வழக்கு தொடுக்கும் முறையல்ல. மாறாக, ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிப்புக்குள்ளாகும் சமூகப் பிரிவினர்களுக்கு மனித உரிமைகளை அர்த்தமுள்ளதாகவும்,அவர்களுக்கு அரசமைப்பு வழங்கியுள்ள சமூக – பொருளாதார நீதியை உறுதிப்படுத்தவும் அரசு மற்றும் அரசு அதிகாரிகளுக்கு வாய்ப்பு

வழங்குவதுடன் அவ்வாறு செயல்படாத அரசு மற்றும் அரசு அதிகாரிகளுக்கு எதிராகவும் விசாரிக்கிறது. மாநில அரசுகள், மத்திய அரசு, மாநகராட்சி ஆகியவற்றிக்கு எதிராக பொது நல வழக்கு தொடர முடியும். ஆனால், தனிநபருக்கு எதிராக பொது நல வழக்கு பதிவு செய்ய முடியாது.

அண்மையில் இந்தியாவில் ஏராளமான பொது நல மனுக்கள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படுவதைக் காணமுடிகிறது. உச்ச நீதிமன்றம் 2005-ஆம் அண்டு ஒரு வழக்கை பொது நல வழக்காகத் தீர்மானித்தது. பொது நலனுக்கான சமூகம் எதிர் இந்திய அரசு (Common Cause Society Vs Union of India), என அவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது. பெருகி வரும் சாலை விபத்துகளை கருத்திற்கொண்டு சாலை பாதுகாப்பு சட்டங்களை இயற்றும்படி அரசுக்கு உத்தரவிட வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அந்த மனுவே பொது நல வழக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதேபோல அங்கம்மாள் பாண்டே எதிர் உத்தரபிரதேச மாநில அரசு என்ற வழக்கில், உயர்நிதிமன்றத்தின் லக்னோ அமர்வு, கன்சிராம் நினைவு அரங்கம் அருகே நடைபெறும் கட்டுமானப் பணிகளைக் குறிப்பிட்ட காலத்துக்கு தடை செய்தது.

இதேபோல மக்களாட்சி உரிமைக்களுக்கான மக்கள் ஒன்றியம் எதிர் இந்திய அரசு (Peoples' Union for Democratic Rights vs. Union of India) என்ற வழக்கினையும் உச்ச நீதிமன்றம் பொது நல வழக்காக எடுத்துக் கொண்டது. சமூக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள மக்கள் தமக்கான நிவாரணம் கோரி நீதிமன்றங்களை அணுக இயலாத நிலையில் இருப்பதால் இத்தகைய தனிநபர் அல்லது குழுவினருக்கு அரசமைப்பு ரீதியான தீர்வு கோரி “பொது ஆர்வம் கொண்ட குடிமக்கள்“ நீதிமன்றத்தை நாடும்போது அதனை பொது நல வழக்காகக் கருதலாம் என்று கூறிய உச்ச நீதிமன்றம் இதனை பொது நல வழக்காக அனுமதித்தது. பொது நல வழக்குகள் என்பவை ”பங்களிப்பு நீதி” எனும் செயல்முறையின் ஒரு பகுதியாகும் குடிமை வழக்குகளாக இவை நீதிமன்றங்களால் தாராளமாக வரவேற்கப்படுகிறது.

பரமானந் கட்டாரா எதிர் இந்திய அரசு என்ற வழக்கு (Parmanand Katara Vs. Union of India) பொதுமக்கள் நலனுக்காகப் பாடுபடும் மனித உரிமை செயற்பாட்டாளர் தொடுத்த பொது நல வழக்கு ஆகும். இதில் மருத்துவ தொழிலில் உள்ள ஒவ்வொரு நபரும், காயமடைந்த என்ற வழக்கு பொதுமக்கள் நலனுக்காகப் பாடுபடும் மனித உரிமை செயற்பாட்டாளர் தொடுத்த பொது நல வழக்கு ஆகும். இதில் மருத்துவ தொழிலில் உள்ள ஒவ்வொரு நபரும், காயமடைந்த எந்த ஒரு குடிமகனுக்கும் வழக்கமான நடைமுறைகளைக் காரணங்காட்டி (Procedural Formalities) காத்திருக்க வைக்காமல் மருத்துவ உதவியினை செய்ய வேண்டும் எனும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

**நீதித்துறை செயல்பாட்டு முறை:**
மாறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் நீதித்துறை மேற்கொள்ளும் வீரியமிக்க செயற்பாடுகள் நீதித்துறை செயல்பாட்டு முறை எனப்படுகிறது. அமெரிக்காவில் 1947 ஆம் ஆண்டு ஆர்தர் சன் சிங்கர் ஜுனியர் என்பவர் ”உச்ச நீதிமன்றம்” 1947 என்று தலைப்பிட்ட கட்டுரை ஒன்றில் "Judicial Activism" (நீதித்துறை செயல்பாட்டு முறை) என்ற சொல்லினை அறிமுகப்படுத்தினார். பிளாக்ஸின் சட்ட அகராதி (Black's Law Dictionary), "Judicial Activism" - என்பது ஒரு ”நீதித்துறை தத்துவம்” என்று கூறுகிறது. அது நீதிபதிகளை பழமைவாதத்திலிருந்து பிரித்து புதிய முற்போக்கான சமூக கொள்கைகளுக்கு ஆதரவாக ஊக்கப்படுத்துவதாகும்.

சட்ட ஆக்கமானது நீதித்துறை செயல்பாட்டு முறை மூலம் (Judicial Activism) புதிய பரிணாமத்தை பெற்றிருக்கின்றது. சமூகக் கண்ணோட்டத்தில் சட்டங்களுக்கு விளக்கமளிக்கும் ஆரோக்கியமான போக்கு நீதித்துறையில் காணப்படுகிறது. அமலில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் அல்லாமல் தனிநபர் அல்லது அரசியல் சக்திகளுக்கு சாதகமாக மேற்கொள்ளப்படும் நீதிமன்ற உத்தரவுகளை நீதித்துறை செயல்பாட்டு முறை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. நீதித்துறை செயல்பாட்டு முறை என்பது அரசமைப்பின் விளக்கம், சட்டப்பூர்வ அடித்தளங்கள் மற்றும் அதிகாரப் பிரிவினை ஆகியன தொடர்புடையதாகும்.

நீதித்துறையில் காணப்படுகிறது. அமலில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் அல்லாமல் தனிநபர் அல்லது அரசியல் சக்திகளுக்கு சாதகமாக மேற்கொள்ளப்படும் நீதிமன்ற உத்தரவுகளை நீதித்துறை செயல்பாட்டு முறை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. நீதித்துறை செயல்பாட்டு முறை என்பது அரசமைப்பின் விளக்கம், சட்டப்பூர்வ அடித்தளங்கள் மற்றும் அதிகாரப் பிரிவினை ஆகியன தொடர்புடையதாகும்.

இந்திய அரசமைப்பு 1950 –ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் பெரும்பான்மையான கோட்பாடுகள் மேற்கு உலக மாதிரிகளிலிருந்து நாடாளுமன்ற மக்களாட்சியும், தனித்துவ நீதித்துறையும் இங்கிலாந்திலிருந்து, அடிப்படை உரிமைகள், முன்வரைவு, கூட்டமைவு, கூட்டாட்சி அமெரிக்க அரசமைப்பிலிருந்து, மாநிலக் கொள்கைகள் நேரடி கோட்பாடுகள், அயர்லாந்து நாட்டிலிருந்தும் பெறப்பட்டதாகும். இருந்தபோதும், இந்தியாவில் அப்போது நிலவிய பகுதி அளவு நிலப்பிரபுத்துவ பிற்போக்கு நிலையில் இருந்து ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் காண்பதற்காகப் பெறப்பட்டதாகும்.

இந்திய நீதித்துறையானது. அரசின் ஒரு அங்கமாக இருக்கின்றபடியால், அதன் அமெரிக்க நீதித்துறைப் பிரிவைக் காட்டிலும் மிகுந்த செயலாக்க மிக்க பணியினை ஆற்றுகிறது. அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள கொள்கைகள், கோட்பாடுகளைக் கடைபிடிப்பதன் மூலம் இந்திய சமூகத்தை ஒரு நவீன சமூகமாக மாற்றும் தீர்ப்புகளை வழங்குகின்றன. இந்திய அரசமைப்பு உறுப்பு 21 அடிக்கடி உச்ச நீதிமன்றத்தில் எடுத்தாளப்படுகிறது. இந்த அரசமைப்பு உறுப்பின் மீதான தீர்ப்புகள் யாவும் நீதித்துறை செயல்பாட்டு முறைப் போக்கினை பிரதிபலிக்கின்றன.

ஏ.கே. கோபாலன் எதிர் மதராஸ் மாநில அரசு எனும் வழக்கில், ஒரு மனிதனின் வாழ்க்கை அல்லது சுதந்தரம் ஒடுக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள செயல்முறைகள் அடிப்படையில் மட்டுமல்லாமல் பகுத்தறிவு மற்றும் நீதியின் அடிப்படையிலும் உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. எனினும். அதனைத் தொடர்ந்து மேனகா காந்தி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில், மேற்கண்ட நியாய வாதத்தினை நீதிமன்ற விளக்கம் மூலம் அரசமைப்பு உறுப்பு 21-ல் துணைப்பிரிவாகச் சேர்க்கப்பட்டது.

இது, அரசமைப்பு உருவாக்கத்தின் போது தவிர்க்கப்பட்ட பிரிவாகும். எனினும், அடுத்தடுத்த வழக்குகளில் உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை உறுதி செய்தும் இருக்கிறது. உதாரணமாக, சாதிக்கு வெளியே திருமணம் செய்து கொண்ட காரணத்திற்காக, ஆண் - பெண் இருவரை கௌரவக் கொலை செய்த பகவான் தாஸ் வழக்கில், (பசவான்தாஸ் எதிர் தில்லி மாநில அரசு) அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

**அரசமைப்பும், நிர்வாகச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம்:**
**அரசமைப்பு:**

மக்கள், மனிதன் அனைவருக்கும் விதிகளால் ஆளப்படுகிறார்கள் என்பது நன்கு தெரிந்தது. உதாரணமாக, விளையாட்டு போட்டிகளுக்கும் சமூக மன்றங்களுக்கும் விதிகள் உள்ளதை கூறலாம். நமது அன்றாட வாழ்வைத் தீர்மானிப்பதில் ஒழுக்க விதிகளும், வழக்காறுகளும் முக்கிய பங்காற்றுகின்றன. நாட்டிற்காகச் சட்ட மன்றங்களில் இயற்றப்படும் விதிகள் யாவும் ”சட்டங்கள்” என்று அழைக்கப்படுகின்றன. சமூகம், அதன் பணிகளை முறையாக செய்வதற்குச் சட்டங்கள் மிகவும் அவசியமாகும். அவைகள் நமது சொத்துக்களை முறையாகப் பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்டவைகள் ஆகும், மற்றும் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் முறையாக நடந்து கொள்வதை உறுதிபடுத்துகிறது.

அடிப்படையில், அரசமைப்பு மேலான சட்டமாகும். மற்ற எல்லா சட்டங்களும் அரசமைப்பிற்கு பொருந்தி வர வேண்டும். அரசமைப்பானது அரசு தொடர்புடைய சட்டங்களையும், மக்கள் தொடர்புடைய சட்டங்களையும் உள்ளடக்கியதாகும். அரசமைப்பு விதிகள் என்பது அரசின் பல்வேறு நிறுவனங்களின் வரையறை, பணிகள், அதிகாரங்கள், மற்றும் அவற்றின் அமைப்புகள் குறித்த தொகுப்பு விதிகள் ஆகும். அதாவது சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதிதுறை போன்றவைகள் மற்றும் குடிமக்களின் அடிப்படை உரிமைகள், மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையிலான உறவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

அரசமைப்பு என்பது வழியுறுத்துவதும் வழிகாட்டுவதுமான விதிகளின், ஒரு தொகுப்பு ஆகும். இது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு விதிமுறைகளின் தொகுப்பை முன்மொழிவதன் மூலம் தேசத்தை ஒழுங்குபடுத்துகிறது. அவை நாட்டைச் சரியான திசை வழியில் வழி நடத்துகிறது. அவை பல்வேறு அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசு வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளிட்டவைகள் ஆகும். நாட்டில் நிலவும் அமைப்பு முறையை ஒழுங்குபடுத்துவதற்கு நமக்கு அரசமைப்பு விதிகள் தேவைப்படுகின்றன. நாட்டு மக்கள் அடிப்படை உரிமைகளைக் கடந்து போகாமல் இச்சட்ட விதிகளே நாடு முழுவதும் கண்காணிக்கின்றன.

அரசமைப்பு விதிகள் குடிமக்களுக்கிடையே சமத்துவ உணர்வினை உருவாக்குகின்றன. இவை குழந்தைகள் நலனுக்காக குழந்தைகள் மீது பெற்றோர்கள் செலுத்தும் கட்டுப்பாடுகளைப் போன்றவையே ஆகும். அதைப்போலவே அசரமைப்பு விதிகள் எல்லா குடிமக்கள் மீதும் செயலாற்றுகிறது. அதே வழியில் அரசமைப்பு வழங்கியுள்ள வழிகாட்டுதளின்படி சட்டங்கள் இயற்றுவதற்காக சிலரைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கவும் சிலரை நியமனம் செய்யவும் அரசமைப்பு விதிகள் வழிவகை செய்கின்றன. அரசமைப்பு விதியின்படிதான், பல்வேறு மொழிகள் பேசும் வேறுபட்ட பண்பாடுகள் கொண்ட மிகப் பரந்த இந்நாட்டை அதன் தலைவர் நிர்வாகம் செய்கிறார்.

**சட்டத்தின் ஆட்சி:**

இந்தியாவில் ”சட்டத்தின் ஆட்சி” என்ற ஆங்கிலக் கருத்தை காலனி ஆட்சி அறிமுகப்படுத்தியது. சட்டத்தின் ஆட்சியில் மூன்று முதன்மையான சிறப்புகள் உள்ளன. அவைகள்,

- சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- சட்டத்திற்கு மேல் யாரும் இல்லை
- சட்டம் அனைவருக்கும் பொருந்தக்கூடியது
- சட்டத்தின் ஆட்சியானது நீதிவழங்குவதில் குடிமக்களின் சமத்துவத்தை உறுதிபடுத்துகிறது. சொந்த உறவுகளுக்காகச் சாதகமாக நடப்பது, குறிப்பிட்ட நபருக்குச் சலுகை அளிப்பது நீதித்துறை முறைகேடுகள் ஆகியவற்றை குறைக்கின்றன. இத்துடன் அதிகார, நிர்வாக முறைகேடுகளையும் கட்டுப்படுத்துகின்றன. அரசு நிர்வாகத்தினை ஆளுகை செய்வதுடன் செயல்முறை சட்டங்களும், அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளும் சட்டத்தின் ஆட்சி உறுதிபடுத்துவதை வலியுறுத்துகின்றன.

**நிர்வாகச் சட்டம்:**

நிர்வாகச் சட்டம் என்பது நிர்வாகச் செயல்முறைகளை ஆளுகை செய்வதற்கான சட்டமாகும். நிர்வாகச் சட்டங்கள் என்பவை, நிர்வாகத்துடன் தொடர்புடையவை என ஐவோர் ஜென்னிங்ஸ் விளக்கம் அளிக்கிறார். ஒரு நிர்வாக அமைப்பு, அதன் அதிகாரம் மற்றும் அதன் அதிகாரிகளின் கடமைகளை அது தீர்மானிக்கிறது. நிர்வாக அமைப்புகளின் சட்டம் இயற்றும் அதிகாரம், பாதியளவு நீதித்துறை அதிகாரம் கொண்ட நிர்வாக முகமைகள் அரசு அதிகாரிகளின் சட்ட வரம்பு, நிர்வாக அதிகாரிகளைக் கண்காணிக்கும் சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரம் என அனைத்தையும் கட்டுப்படுத்துகின்றன. மக்களிடம் நியாயமாக நடந்து கொள்வதை உறுதிப்படுத்துகின்றன.

நிர்வாகச் சட்டம் என்பது பொதுசட்டத்தில் ஒரு பிரிவு ஆகும். அது அரசாங்கத்திற்கும் தனிமனிதனுக்கும் உள்ள உறவு குறித்தும் பேசுகிறது. அது சட்டத்தை அமலாக்கம் செய்யும் அமைப்பைத் தீர்மானிக்கும் உயர்மட்டத்தினர் மற்றும் பகுதியளவு நீதித்துறை அதிகாரம் கொண்டோரை வரையறை செய்கிறது. நிர்வாகச் சட்டமானது முதலாவதாக அதிகாரிகளின் செயல்கள் மற்றும் செயல்முறை ஆகியவற்றையும், நிர்வாக தன்மைக் கொண்ட அமைப்புகளையும் அதற்குரிய கட்டுப்பாடு எந்திரத்திகுள்ளாகவே வைக்கப்படும்படியாக செய்வதாகும். இந்தியாவில் நிர்வாகச் சட்டங்கள் வளர்ச்சிப் பெறுவதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன.

முதலில், இந்தியா ஒரு ”மக்கள் நல அரசு” ஆகும். அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிக அதிகரித்த வண்ணம் இருக்கிறது. எனவேஅவற்றினை ஒழுங்குப்படுத்தும் தேவை உருவாகிறது. எனவே, நிர்வாகச் சட்டப் பிரிவு தோன்றியது. இரண்டாவதாக, சட்டங்கள் இயற்றுவதில் (Legislation)

போதாமை நிலவுகிறது. அன்றாடம் மாறிக் கொண்டிருக்கின்ற சமூகத்திற்கு ஏற்ப சட்டங்களை இயற்ற சட்டமன்றங்களுக்கு கொண்டிருக்கின்ற சமூகத்திற்கு ஏற்ப சட்டங்களை இயற்ற சட்டமன்றங்களுக்கு போதிய நேரம் இருப்பதில்லை. அவ்வாறு அது செய்யப்பட்டாலும், சட்டம் இயற்றுவதற்கான நடைமுறை நீண்டதாகவும், அதிக காலம் எடுத்துக் கொள்ளும்படியாக இருப்பதாலும், அவ்வாறு உருவாக்கப்பட்ட விதிகள் யாவும் தேவைக்கு பயன்படுத்தும் போது, மாறிவிடுகின்றன.

மூன்றாவதாக, இந்தியாவில் நீதிமன்ற காலதாமதம் நிலவுகிறது. மந்தமான வேகம், அதிக செலவு மற்றும் சிக்கலான நடைமுறைகள் போன்றவை இதன் காரணங்களாகும். இதனால் நீதி பெறுவதற்கான செயல்முறைகள் தாமதமடைகின்றன. ஏற்கனவே வழக்குகள் தேங்கிக்கிடப்பதால் விரைவான விசாரணை சாத்தியமற்றதாக உள்ளது. இதனால்தான் நிர்வாகத் தீர்பாயங்கள் உருவாகின்றன. நான்காவதாக, நிர்வாகச் சட்டங்கள் என்பவை தொகுக்கப்பட்டவைகள் (Codified) அல்ல. எனவே, அரசு இயந்திரத்தின் தேவைக்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்துக் கொள்ளும் செயற்பரப்பைக் கொண்டுள்ளன. எனவே, இது மிகவும் நெகிழ்வுத் தன்மைக்கொண்டதாகும். நெகிழ்வற்ற திடமான சட்ட நடைமுறைகளை மீண்டும் மீண்டும் பின்பற்றத் தேவை இல்லை. நிர்வாகச் சட்டத்திற்கும், அரசமைப்பிற்கும் இடையே வேறுபாடு இருக்கின்றது. அரசமைப்பு என்பது இந்த மண்ணின் மேம்பட்ட உயர்வான சட்டமாகும். எந்த ஒரு சட்டமும் அரசமைப்பிற்கு மேலானது இல்லை. எனவே இதர சட்டங்கள் அதன் உறுப்புக்களை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும். அதனை மீறும்படியாக இருக்கக்கூடாது.

எனவே நிர்வாகச் சட்டங்களும் அரசமைப்பிற்குக் கீழான சட்டமே ஆகும். அரசமைப்பானது அரசின் அமைப்பு (Structure) மற்றும் அதன் பல்வேறு உறுப்புகளைப் பற்றிப் பேசுகிறது. நிர்வாகச் சட்டங்கள் என்பவை நிர்வாகத்தைப் பற்றி மட்டுமே செயலாற்றுகிறது (Deals). நிர்வாக அதிகாரிகள் முதலில் அரசமைப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் தொடர்ந்து நிர்வாகச் சட்டங்களின்படி பணியாற்ற வேண்டும்.

**இந்திய தண்டனைச் சட்டம்:**

இந்திய தண்டனைச் சட்டம் என்பது இந்தியாவின் குற்றவியல் சட்டமாகும். அது குற்றவியல் சட்டத்தின் உள்ளார்ந்த அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சட்டமாகும். 1834-ஆம் ஆண்டு இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் கீழ் 1860 – ஆம் ஆண்டு இச்சட்டம் தயாரிக்கப்பட்டது. இது தொடக்கக்கால பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் கீழ் 1862-ல் அமலுக்கு வந்தது. இதன் நோக்கம் இந்தியாவிற்கு ஒரு பொதுத் தண்டனைச் சட்டத் தொகுப்பை அளிப்பதாகும். இந்திய தண்டனைச் சட்டம் ஒரு அடிப்படையான வடிவத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு நபர் மேற்கொள்ளும் அனைத்து குற்றங்களுக்கான வழக்குகள், அவற்றுக்கான தண்டனைகள் ஆகியனவற்றின் பட்டியல் கொண்ட ஆவணமாகும். இது அனைத்து குடிமக்களையும் உள்ளடக்கியது. இராணுவத்தினரும் இதர படைகளின் வீரர்களும் விலக்களிக்கப்பட்டுள்ளனர். அவர்களை இந்தியக் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்க முடியாது. அவர்களுக்கு பல்வேறு தனி விதிகள் உள்ளன. பல ஆண்டுகள் சோதனைகளுக்கு பின்னர் பரிசோதிக்கப்பட்டு பரிணாமம் பெற்ற நியாயமான, திடமானக் குற்றத்தடுப்பு அமைப்பைக் கொண்டுள்ள ஒரு நீதித்துறை அமைப்பு என்ற சிறப்பினை இந்திய நீதித்துறை பெறுகிறது.

இந்திய தண்டனைச் சட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பியல்பானது, அந்த ஆவணம் வளர்த்தெடுக்க நினைத்த பாரபட்சமற்ற தன்மை கொண்ட தீர்ப்புமுறை ஆகும். இந்திய தண்டனைச் சட்டம் ஒவ்வொரு அரசு ஊழியர், ஒவ்வொரு பொதுமக்கள் ஏன் நீதிபதியைக்கூட உள்ளடக்குவதாக இருக்கிறது. நாட்டின் சட்டம் இயற்றும், சட்டத்தை அமலாக்கம் செய்யும் அமைப்புகள் பொதுமக்களின் நம்பிக்கையைத் தட்டி எழுப்புகிறது மேலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதையும் தடுக்கிறது.

இந்திய தண்டனைச் சட்டமானது, அரசுக்கு எதிரான குற்றங்கள், பொது இடங்களில் நடைபெறும் குற்றங்கள், ஆயுதப்படைகளின் குற்றங்கள், கற்பழிப்பு மற்றும் கொலை, ஆட்கடத்தல் போன்ற குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து குற்றங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் மதம் தொடர்புடைய குற்றங்கள், சொத்துடைமை குற்றங்கள், திருமண குற்றங்கள், கணவர்கள் மற்றும் உறவினர்களால் செய்யப்படும் கொடுமைகள் மற்றும் அவதூறுகள் போன்றவற்றையும்

கையாளுகின்றது. இந்திய தண்டனைக் குறியீட்டுக் கீழ் பிரிவு 34, ஒரு குழச் செயல்பாட்டில் கலந்து கொண்ட ஒரு நபர் ஆற்றிய பங்களிப்பு எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அக்குழுவினர் மேற்கொண்ட செயல்களின் பொது நோக்கிற்கும் முழுமையான பொறுப்பானவராகவே கருதப்படுவார். சாட்சிகளின் அடிப்படையில் இவர்கள் சமமான குற்றவாளிகள் கருதப்படுவர்.

இதே சட்டம் பிரிவு 149-ன் கீழ், சட்ட விரோதமாகக்கூடிய ஒரு குழுவைச் சேர்ந்த நபர்கள் அனைவரும் அந்த சட்ட விரோத குழுச் செயலின் உள்நோக்கம் அல்லது சட்டவிரோதக் கூடுதலில் ஏற்படக் கூடிய கெடு விளைவு அடிப்படையில் தண்டனைக்குரியவர்கள் ஆவர். மேலும், குற்றச் சதி தயாரிப்பில் பங்கேற்றல், உடந்தையாக இருந்ததல் போன்ற செயல்களும் தண்டனைக்குரியவையாகும்.

இந்திய தண்டனைக் சட்டமானது, பல முறை தேவையின் அடிப்படையில் திருத்தப்பட்டிருக்கிறது. தேசத் துரோகம் போன்ற தண்டனைச் சட்டத்திற்கு வெளியே இருந்து கருத்தாக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குடிமகன்களின் எதிர்பார்ப்புகளில் மாறுதல்கள் ஏற்படுவதாலும், அது சமூக மாற்றங்களில் முடிவதாலும்,குற்றவியல் நீதி அமைப்பு முறைகளை அடிக்கடி மாற்றி அமைக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. சில நேரங்களில் இதுவே மிகுந்த மன உளைச்சல்கள், மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றன. குற்றவியல் புலன்விசாரணை செயல்முறைகள், குற்றங்களை முறையாக நீதிமன்றத்தில் வைத்து குற்றம் சாட்டுதல் மற்றும் தீர்ப்பு வழக்குதல் போன்றவையெல்லாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் ஏற்படும் மாறுதல்கள் மற்றும் உருமாற்றங்களுக்கு இசைவானதாக மாற வேண்டியதன் அவசியத்திற்கு சாட்சியாக இருக்கிறது.

**தகவல் தொடர்பு:**

தொழில்நுட்ப வளர்ச்சிக்காலமான தற்போது, குற்ற நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள நவீனமுறைச் செயல்கள், நவீன புலனாய்வு முறை மற்றும் குற்றம் நிரூபிக்கும் புலனாய்வு முறை மற்றும் குற்றம் நிரூபிக்கும் முறைகளை உருவாக்கக் கோரியது. இதற்காக புதிய குற்றவியல் சட்டம் தேவைப்பட்டது. இதையொட்டி, இந்திய அரசு 2000-ஆம் ஆண்டு ஒரு குழு அமைத்தது. இந்த குழு தனது அறிக்கையை 2003-ஆம் ஆண்டு அளித்தது. குற்ற நீதிமுறை அமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தக் கோரி பல பரிந்துரைகளை இக்குழு அறிக்கையில் வலியுறுத்தியது. இவற்றில், சில பரிந்துரைகளை அரசு ஏற்றுக் குற்றவியல் சட்டத்தோடு நடைமுறைப்படுத்தி வருகிறது.

---

## அலகு– 5

## இந்தியாவில் கூட்டாட்சி

**கூட்டாட்சியின் பொருள்:**

ஒரு மத்திய அரசாங்கத்திற்கும் பல மாநில அரசாங்கங்களுக்கும் இடையில் அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள, பாதுகாக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வை உடைய அரசியல் முறையை கூட்டாட்சி என்று அழைக்கிறோம். மாநில அரசாங்கங்கள் இருந்தால் மட்டுமே ஒரு அரசியல் முறையை கூட்டாட்சி என அழைக்கக்கூடாது. மாநில அரசாங்கங்கள் அரசமைப்பால் தோற்றுவிக்கப்பட்டால் மட்டுமே நாம் ஒரு அமைப்பை கூட்டாட்சி முறை என்று கூறலாம். பொதுவாக பல வகையான மக்கள் வகிக்கும் நாடுகளில் கூட்டாட்சி முறை பின்பற்றப்படுகிறது. ஒரு நாட்டின் பகுதிகள் இனம், மொழி, மதம் போன்ற காரணங்களால் பல வகை மக்களை பெற்றிருந்தால் கூட்டாட்சி முறை அரசாங்கம் பின்பற்றப்பட வேண்டும். ”வேற்றுமையில் ஒற்றுமை” உருவாக்குவதற்கு கூட்டாட்சி முறை மக்களாட்சி நாடுகளில் பின்பற்றப்படுகிறது.

மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே அதிகாரப் பகிர்வை அரசமைப்பு கூட்டாட்சி முறையில் அமல்படுத்துகிறது. மிகவும் தெளிவாக அதிகாரப் பகிர்வு அரசமைப்பால் உருவாக்கப்படுகிறது.

**கூட்டாட்சி முறையின் பொருள்:**

அரசமைப்பு (பெற்றோர்)

மத்திய அரசாங்கம் (குழந்தை) மாநில அரசாங்கங்கள் (குழந்தைகள்)

**கூட்டாட்சியின் பரிணாமம்:**

வட அமெரிக்காவில் 13 காலனிகள் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாக்கின. கூட்டாட்சி அடிப்படையில் அரசமைப்பைஉருவாக்கின. உலக வரலாற்றில் முதல் கூட்டாட்சி அரசமைப்பாக அமெரிக்கா தோன்றியது. பின்னர் ஆஸ்திரேலியா, கனடா ஆகிய ஆங்கிலேய காலனிகளும் கூட்டாட்சி முறையை அமைத்துக் கொண்டன. மூன்று மொழிகளை பின்பற்றும் சுவட்சர்லாந்து கூட்டாட்சி முறையை கொண்டு வந்தது. தற்போது உள்ள ஐரோப்பிய யூனியன் விருப்பத்தின் அடிப்படையில் அமைந்த கூட்டாட்சி முறைக்கு எடுத்துக்காட்டாகும்.

**இந்தியாவில் கூட்டாட்சி முறையும் வளர்ச்சியும்:**

இந்தியாவில் ஒழுங்குமுறைச் சட்டம் 1773 கூட்டாட்சி முறையின் தோற்றத்தை உருவாக்கியது. சென்னை, கல்கத்தா, மும்பை ஆகிய பிரதேசங்களை கல்கத்தாவில் உள்ள கவர்னர் ஜெனரலின் ஆளுமையின் கீழ்ச் சட்டம் கொண்டு வந்தது. இந்திய தேசிய இயக்கம் இந்தியாவின் பன்முகத் தன்மையை உணர்ந்து கூட்டாட்சி முறையை ஆதரித்தது. இந்திய அரசாங்கச் சட்டம் 1919 இரட்டை ஆட்சியை அறிமுகம் செய்தது. 1935 இந்திய அரசாங்கச் சட்டம் மாநிலங்களுக்கு சுயாட்சியை வழங்கியது. நேரு குழுவின் அறிக்கையும் (1928) ஜவஹர்லால் நேருவின் கருத்துக்களும் கூட்டாட்சி அமைப்பை இந்தியாவிற்கு வலியுறுத்தின. பாகிஸ்தான் உருவாக்கமும் அதன்பின் துயரமான சம்பவங்களும் வலுவான மத்திய அரசு உள்ள கூட்டாட்சி முறையை உருவாக்க காரணமாக இருந்தன. ஜம்மு காஷ்மீர் வரலாற்று காரணங்களில் சிறப்பு அந்தஸ்துடன் உள்ளது.

விடுதலை இந்தியாவின் அரசமைப்பு ஆறாவது பகுதியில் கூட்டாட்சி முறையை வழங்குகிறது. அரசமைப்பின் ஏழாவது அட்டவணை மூன்று பட்டியல்களை உருவாக்கி அதிகாரப்பகிர்வை மத்திய மாநில அரசாங்கங்களுக்கு வழங்குகின்றன.

**இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி தன்மைகள்**
**இந்திய அரசமைப்பு கீழ்க்கண்ட கூட்டாட்சி தன்மைகளைப் பெற்றுள்ளது.**

1. **எழுதப்பட்ட அரசமைப்பு:**
   கூட்டாட்சி முறைக்கு எழுதப்பட்ட அரசமைப்பு இன்றியமையாததாகும். பல மாநில மத்திய அரசாங்கங்கள் கூட்டாட்சி அரசமைப்பு இன்றியமையாததாகும். பல மாநில மத்திய அரசாங்கங்கள் கூட்டாட்சி முறையில் செயல்படுவதால் அவைகளின் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு இருக்க வேண்டும். தற்போது இந்தியாவில் ஒரு மத்திய அரசும், 29 மாநில அரசாங்கங்களும் உள்ளன. இவைகளின் அதிகாரங்களையும் பணிகளையும் அரசமைப்பு தெளிவாக வரையறுக்கின்றது.

2. **அரசமைப்பின் உயர்வு:**

   அரசமைப்பு நாட்டின் மிக உயர்ந்த ஆவணமாகும். எல்லா அரசாங்கங்களும் அரசமைப்பின் கருத்துக்கள், வழிமுறைகள் மற்றும் பகுதிகள் ஆகியவற்றை பின்பற்ற வேண்டும். எந்த ஒரு அரசாங்கமும், அரசமைப்பை மீறிச் செயல்படக் கூடாது.

3. **அதிகாரப் பகிர்வு:**
   மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையேயான அதிகாரப் பகிர்வு கூட்டாட்சி முறையின் அடிப்படைத் தன்மையாகும். இந்திய அரசமைப்பு மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரப் பகிர்வை விரிவாக வழங்குகிறது. நமது நாட்டில் மூன்று பட்டியல் மூலமாக அதிகாரப் பகிர்வு வழங்கப்படுகிறது. ஆனால் அமெரிக்காவின் கூட்டாட்சி முறையில் ஒரு பட்டியல் மூலமாகத்தான் அதிகாரப் பகிர்வு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

4. **ஈரவை நாடாளுமன்றம்:**
கூட்டாட்சி முறையில் ஈரவை நாடாளுமன்றம் காணப்படுகிறது. நாடாளுமன்றத்திற்கு இரண்டு வகைகள் உள்ளன. இந்தியாவில் நாடாளுமன்றத்தில் மேலவை மாநிலங்களவை என அழைக்கப்படுகிறது. நாடாளுமன்றத்தின் கீழ் அவை மக்களவை என அழைக்கப்படுகிறது. மாநிலங்களவை மாநில பிரதிநிதிகளை கொண்டுள்ளது. மாநில உரிமைகளின் பாதுகாவலனாக அது கருதப்படுகிறது. உலகம் முழுவதும் நாடாளுமன்றத்தின் மேலவை மாநில உரிமைகளின், நலன்களின் பாதுகாவலனாகச் செயல்படுகிறது.

5. **நெகிழா அரசமைப்பு:**

அரசமைப்பின் கருத்துகளை மாற்றுவதற்கு அரசியல் சாசன திருத்தச் சட்ட முறையோ அல்லது தனி அமைப்போ உள்ள அரசமைப்புகளுக்கு நெகிழா அரசமைப்பு முறை என்பது பெயராகும். சாதாரண சட்டம் இயற்றும் முறை மூலமாக அரசமைப்பில் மாற்றங்களை செய்ய இயலாது. இங்கு மாற்றங்களை கொண்டு வருவதற்கு அறுதி பெரும்பான்மையுடன் அரசமைப்பு திருத்தச்சட்டத்தை கொண்டு வர வேண்டும். அரசமைப்பை மாற்றுவதற்கு சாதாரண சட்டம் இயற்றும் முறை போதுமென்றால் மாநிலங்கள் உரிமைகளுக்கு பாதுகாப்பு இருக்காது. மத்திய அரசாங்கமே அரசமைப்பை திருத்தி மாநில உரிமைகளை பறிக்கலாம் என்ற ஆபத்து உள்ளது. நமது அரசமைப்பின் இருபதாவது பகுதியின் 368 உறுப்பில் அரசமைப்பை மாற்றுவதற்கான சிறப்பு திருத்தச்சட்ட முறைகள் வழங்கப்பட்டுள்ளதால் அது நெகிழா அரசமைப்பு என அழைக்கப்படுகிறது.

6. **உச்ச நீதிமன்றம்:**

இந்திய உச்ச நீதிமன்றம் கூட்டாட்சி முறையின் நடுவணாகவும், அரசமைப்பின் பாதுகாவலனாகவும் விளங்குகின்றது. அரசமைப்பை விளக்கும் உரிமையை இது பெற்றுள்ளது. மத்திய மாநில உரிமைகளுக்கிடையே முரண்பாடுகள் அல்லது சிக்கல்கள் இருந்தால் உச்ச நீதிமன்றம் தீர்த்து வைக்கின்றது. உச்ச நீதிமன்றத்திடம் தனிபட்ட அதிகாரம் உள்ளது. உச்ச நீதிமன்றம் மட்டும்தான் கூட்டாட்சி வழங்குகளை விசாரித்து தீர்ப்பாளிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது. மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கங்களுக்கிடையிலும் அல்லது வெவ்வேறு மாநில அரசாங்கங்களுக்கிடையிலும் சிக்கல்கள் இருந்தால் உச்ச நீதிமன்றம் மட்டுமே தீர்த்த வைக்கும்.

அதாவது, தமிழ் நாட்டிற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் அல்லது வேறு மாநில அரசாங்கத்திற்கும் இடையே பிரச்சனை தோன்றினால் அதனை தீர்த்து வைக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திடம் மட்டுமே உள்ளது.

மேற்கண்ட காரணிகளின் அடிப்படையில் இந்திய அரசமைப்பை கூட்டாட்சி அரசமைப்பு என கூறுகிறோம்.

**இந்திய நிலப்பரப்பு:**
இந்திய ஒன்றியம் என்ற கருத்து இந்திய நிலப்பரப்பு என்பதிலிருந்து வேறுபட்டதாகும். இந்திய ஒன்றியம் என்பது கூட்டாட்சி முறையில் உள்ள 29 மாநில அரசாங்கங்களையும், மத்திய அரசாங்கத்தையும் குறிக்கும். இந்திய நிலப்பரப்பு என்பது கீழ்க்கண்டவற்றை குறிக்கும்.

- 29 மாநிலங்கள்
- 7 ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள்
- பெறப்பட்ட பகுதிகள் (சுதந்திரத்திற்குப்பின் இந்திய அரசாங்கத்தினால் முயன்று பெறப்பட்ட பகுதிகள். பாண்டிச்சேரி, டாமன் டையூ பகுதிகள் இந்திய அரசால் முயன்று பெறப்பட்டன. அவைகள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் ஆவதற்கு முன்னால் பெறப்பட்ட பகுதிகள் என அழைக்கப்பட்டன).

**இந்திய அரசமைப்பின் ஒற்றையாட்சி தன்மைகள்:**

இந்திய அரசமைப்பின் ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சிக்கு எதிரான தன்மைகளை பல்வேறு அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். அமெரிக்காவில் உள்ள பாரம்பரிய கூட்டாட்சி முறையிலிருந்து இந்தியக் கூட்டாட்சி முறை மிகவும் வேறுபடுகிறது.

1. **ஒற்றை அரசமைப்பு:**

மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு ஒரே ஒரு அரசமைப்பு தான் உள்ளது. தேசிய அரசமைப்பே மாநிலங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. மாநிலங்களுக்கென்று தனி அரசமைப்பு கிடையாது. ஜம்மு – காஷ்மீர் மாநிலம் இதற்கு விதிவிலக்காகும். வரலாற்று காரணங்களுக்காக ஜம்மு – காஷ்மீர் மாநிலம் தனி அரசமைப்பை பெற்றுள்ளது. இதர மாநிலங்களுக்கு தனி அரசமைப்பு கிடையாது. ஆனால் பாரம்பரிய கூட்டாட்சி நாடான அமெரிக்காவில் மாநிலங்கள் தங்களுக்கான அசரமைப்பை பெற்றுள்ளன.

2. **ஒற்றைக் குடியுரிமை:**

நமது நாட்டில் இந்தியக் குடியுரிமை மட்டுமே உள்ளது. தேசியக் குடியுரிமை மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கென்று தனி குடியுரிமை கிடையாது. ஆனால் அமெரிக்காவில் தேசியக் குடியுரிமை மட்டுமல்லாது மாநில குடியுரிமையும் காணப்படுகிறது.

3. **நெகிழும் அரசமைப்பு:**

சாதாரண சட்டம் இயற்றும் முறை மூலமாக அரசமைப்பின் பகுதிகளை மாற்ற முடிந்தால் அந்த அரசமைப்பிற்கு நெகிழும் அரசமைப்பு என்பது பெயராகும். இங்கு அரசமைப்பில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு சிறப்பு அரசமைப்பு திருத்தச்சட்டங்கள் தேவையில்லை. இங்கிலாந்தில் நெகிழும் அரசமைப்பு காணப்படுகிறது. இந்திய அரசமைப்பில் சில முக்கிய பகுதிகளை மாற்றுவதற்கு சாதாரண சட்டம் இயற்றும் முறை அதிகாரத்தை பெற்றிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் இப்பகுதிகளை மாற்ற முடியும்.

4. **மாநிலங்களுக்கு வாழ்வுரிமை இல்லை:**

நமது அரசமைப்பு மாநிலங்களுக்கு பெயர் உரிமை மற்றும் வாழ்வுரிமையை வழங்கவில்லை. நாடாளுமன்றம் சாதாரண சட்டங்கள் மூலமாக மாநிலங்களின் பெயர்களையும் நிலப்பரப்புகளையும் மாற்றி அமைக்க முடியும். அரசமைப்பின் 3-வது மற்றும் 4-வது உறுப்புகள் மாநிலங்களை மாற்றவும் புதிய மாநிலங்களை உருவாக்கவும் வழி முறையை வழங்குகின்றன. குடியரசுத்தலைவர் சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு தகவலை தகவலை அனுப்புவார். அந்த மாநிலத்தின் பெயரையோ, நிலப்பரப்பையும் மாற்றுகிறோம் என தகவல் அனுப்புவார். அந்த மாநில சட்டமன்றத்தின் கருத்தை அனுப்புமாறு கூறுவார். ஆனால் மாநில சட்டமன்றத்தின் கருத்து அவரை கட்டுப்படுத்தாது.

பின்னர் ஒரு சாதாரண சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தின் மக்களவையிலோ, மாநிலங்களவையிலோ குடியரசுத் தலைவரின் பரிந்துரையின்படி அறிமுகப்படுத்தப்படும். நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பின் அந்த சட்ட முன்வரைவு சாதாரண சட்டமாக அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படும். இவ்வாறு மாநிலங்களின் பெயர், நிலப்பரப்பு ஆகியவை மாற்றப்படுகின்றன.

ஆனால் அமெரிக்காவில் மாநிலங்களின் பெயர் மற்றும் வாழ்வுரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம் அந்நாட்டின் கூட்டாட்சியை ”உடைக்க முடியாத மாநிலங்களால் உருவாக்கப்பட்ட உடைக்க முடியாத நாடு” என்று கூறியது. அமெரிக்காவில் மத்திய அரசை மாநிலங்கள் அழிக்க முடியாது. மாநிலங்களை மத்திய அரசு அழிக்க முடியாது. ஆனால் இந்தியாவில் மாநிலங்களின் நிலப்பரப்பையும் பெயரையும் மத்திய அரசாங்கம் எளிதில் மாற்ற முடியும்.

5. **கூட்டாட்சிக்கு எதிரான மாநிலங்களவை:**

பொதுவாக நாடாளுமன்றத்தின் மேலவை மாநில உரிமைகளின் பாதுகாவலனாக பணியாற்றுகின்றது. இந்தியில் ராஜ்ய சபா என்றால் தமிழில் மாநிலங்களவை என்பது பொருளாகும். மாநிலங்களவை மாநிலங்களின் பிரதிநிதிகளால் உருவாக்கப்படுகிறது. மாநில உரிமைகளின் பாதுகாவலனான பணிபுரிகிறது. ஆனால் மூன்று முக்கிய தளங்களில் மாநில உரிமைகளுக்கு எதிராக மாநிலங்களவை செயல்படுகிறது. மாநிலங்களவையின் அமைப்பு முறையில் சமத்துவம் பின்பற்றப்படவில்லை. இடங்கள் மாநிலங்களின் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டிருக்கின்றன. மிகப்பெரிய மாநிலமாகிய உத்தர பிரதேசத்திற்க்கு 31 இடங்கள் மாநிலங்களவையில் உள்ளன. ஆனால் நாகாலாந்து போன்ற சிறிய மாநிலங்களுக்கு ஓரிடம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய கூட்டாட்சி நாடாகிய அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இரு இடங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. சிறிய மாநிலங்கள் பெரிய மாநிலங்கள் என்ற வேறுபாடு கிடையாது.

**தமிழ்நாட்டிற்கு 18 இடங்கள் மாநிலங்களவையில் உள்ளன:**

அரசமைப்பின் 249-வது உறுப்பின் படி ஒரு அதிகாரத்தை மாநில பட்டியலிலிருந்து மத்திய பட்டியலுக்கு மாநிலங்களவையால் மாற்ற முடியும். தேசிய நலன் கருதி மாநிலங்களவை இம்மாற்றத்தை செய்யலாம். வருகை தந்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு முறையின்படி மாநிலங்களவை ஒரு தீர்மானத்தை இயற்றினால் மாநில அதிகாரத்தை மத்தியப் பட்டியலுக்கு ஒரு வருட காலத்திற்கு மாற்றலாம். தேவைப்பட்டால் மீண்டும் மீண்டும் மாற்றத்தை நீட்டிக்கலாம். ”வேலியே பயிரை மேய்வது போல” மாநில உரிமைகளின் பாதுகாவலனாகிய மாநிலங்களவையே மாநில உரிமையை பாதிக்கின்றது.

அரசமைப்பின் 312-வது உறுப்பின் கீழ் புதிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரம் மாநிலங்களவைக்கு வழங்கப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் மொத்த உறுப்பினர்களின் அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் புதிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவை பெற்றிருக்கின்றது. அனைத்து இந்தியப் பணிகள் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தை உருவாக்குகின்றன என்று மாநிலங்கள் குற்றம் சாட்டுகின்றன. இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்) இந்தியக் காவல் பணி (ஐ.பி.எஸ்), இந்திய வனப் பணி (ஐ.எ.ஃ.ப், எஸ்) ஆகியவை முக்கிய அனைத்து இந்தியப் பணிகளாகும். மாநில உரிமைகளை பாதிக்க கூடிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவை பெற்றிருப்பதை பல மாநிலங்கள் எதிர்க்கின்றன.

1. **சமமற்ற அதிகாரப் பகிர்வு:**

நமது அரசமைப்பு சமமற்ற அதிகாரப் பகிர்வை உருவாக்கியுள்ளது என மாநிலங்கள் குற்றம் சுமத்துகின்றன. மத்திய அரசிற்கு சாதகமாகவும், மாநிலங்களுக்கு எதிராகவும் அதிகாரப் பகிர்வு உள்ளதாக பல மாநிலங்கள் கூறுகின்றன. மத்திய அரசாங்கம் மாநிலங்களை விட எண்ணிக்கையில் அதிக அதிகாரங்களை பெற்றுள்ளது. முக்கியமான அதிகாரங்களும் மத்திய அரசிடமே உள்ளன. அதிக வருமானத்தை ஈட்டித் தரும் அதிகாரங்களும் மத்திய அரசிடமே உள்ளன. எண்ணிக்கை, முக்கியத்துவம், வருமானம் ஆகிய காரணிகளில் மாநிலங்கள் பலவீனமான நிலையில் உள்ளன. நிதி ஆதாரத்திற்கு மத்திய அரசையே மாநிலங்கள் சார்ந்துள்ளன. பொதுப் பட்டியல் அதிகாரங்களில் மத்திய அரசு சொல்வதை மாநில அரசாங்கங்கள் கேட்க வேண்டிய நிலை உள்ளது. பட்டியலில் இல்லாத இதர அதிகாரங்கள் நமது அரசமைப்பில் மத்திய அரசாங்கத்திடம் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பாரம்பரிய கூட்டாட்சி நாடான அமெரிக்காவில் இதர அதிகாரங்கள் மாநிலங்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

2. **அவசர காலங்கள்:**

நமது அரசமைப்பின் 18-ஆவது பகுதியில் உறுப்புகள் 352 முதல் 360 வரை மூன்று விதமான அவசர காலங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. உறுப்பு 352-ன் படி போர், அந்நிய ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி போன்றவைகள் இந்தியாவின் ஒற்றுமையை பாதித்தால் குடியரசுத்தலைவர் தேசிய அவசர காலத்தை பிறப்பிக்கலாம். உறுப்பு 356-ன் படி எந்த ஒரு

மாநிலத்திலும் அரசியல் சாசன அமைப்பு முறை பாழ்படுத்தப்பட்டால் குடியரசுத்தலைவர் மாநில அரசை நீக்கிவிட்டு அவசர காலத்தை கொண்டு வரலாம். உறுப்பு 360-ன் படி நாட்டின் நிதி நிலைமை மோசமடைந்தால் குடியரசுத்தலைவர் நிதி அவசர காலத்தை பிறப்பிக்கலாம். அவசர காலங்கள் அமலில் இருந்தால் கூட்டாட்சி முறை ரத்து செய்யப்பட்டு ஒற்றை ஆட்சி முறை பின்பற்றப்படும். மாநில உரிமைகள் பாதிக்கப்படும்.

3. **ஒருங்கிணைந்த நீதித்துறை:**

இந்திய அரசமைப்பு நீதித்துறையில் கூட்டாட்சி முறையை வழங்கவில்லை. நீதித்துறை ஒருங்கிணைந்த துறையாக உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் கீழ் உயர் நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்கள் இயங்குகின்றன. ஒருங்கிணைந்த, படிநிலை அமைப்பு அடிப்படையில் நீதித்துறை உள்ளது. ஆனால் அமெரிக்காவில் நீதித்துறையிலும் கூட்டாட்சி முறை பின்பற்றப்படுகிறது. இந்தியாவில் சட்டமன்றம், ஆட்சித்துறை, நிதி தளங்களில் மட்டுமே கூட்டாட்சியில் இயங்குகிறது. நீதித்துறையில் கூட்டாட்சி இல்லை.

4. **தேர்தல் ஆணையம்:**

தேசிய தேர்தல் ஆணையம், நாடாளுமன்ற தேர்தலையும், மாநிலச் சட்டமன்றத் தேர்தலையும் நடத்துகின்றது.

மாநில சட்டமன்றத்திற்கான தேர்தல்களை நடத்துவதற்கு தனி தேர்தல் ஆணையம் கிடையாது. தேர்தல் முதன்மை அதிகாரி தேசிய தேர்தல் ஆணையம் தலைமையின் கீழ் செயல்படுவார். பாரம்பரிய கூட்டாட்சி நாடுகளில் மத்திய தேர்தலை, தேசிய தேர்தல் ஆணையம் நடத்துகின்றது. ஆனால் நமது அரசமைப்பு ஒருங்கிணைந்த தேர்தல் ஆணையத்தை உருவாக்கியுள்ளது.

**மாநில தேர்தல் ஆணையம்:**
சென்னையில் உள்ள மாநில தேர்தல் ஆணையம் கூட்டாட்சி முறையின் அங்கம் இல்லை. அவ்வாணையம், 73-வது, 74-வது அரசியல் சாசன திருத்தச் சட்டங்கள் அடிப்படையில் சுயாட்சி அமைப்புகளுக்கு (பஞ்சாயத்து, நகராட்சி அமைப்புகள்) தேர்தலை நடத்துகின்றது.

5. **ஒருங்கிணைந்த தணிக்கை:**

இந்திய அரசமைப்பு மத்திய – மாநில அரசாங்கங்களுக்கு ஒருங்கிணைந்த தணிக்கை முறையையும், அமைப்பையும் உருவாக்கி உள்ளது. சி.ஏ.ஜி. எனப்படும் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அரசமைப்பின் 148-வது உறுப்பின் படி தேசிய மற்றும் மாநில அளவிலான தணிக்கை அதிகாரத்தை பெற்றுள்ளார். இந்தியக் கூட்டாட்சி முறையில் மாநிலங்களுக்கென்று தனியான தணிக்கை அமைப்பு இல்லை.

- ❖ நிர்வாக வசதிக்காக நமது நாடும் மக்களும் பல்வேறு மாநிலங்களாக பிரிக்கப்பட்டிருந்தாலும் நமது நாடு ஒருங்கிணைந்த ஒற்றுமையான நாடாகும். ஒரே ஆதாரத்திலிருந்து ஆட்சியின் கீழ் அனைத்து மக்களும் ஒன்றாக ஒற்றுமையாக வசிப்பார்கள்.
- ❖ டாக்டர். பி.ஆர். அம்பேத்கர், தலைவர் வரைவுக்குழு, அரசியல் சாசன நிர்ணயச் சபை.

**முடிவுரை:**

நமது தேசத்தின் அரசியல், வரலாறு, பொருளாதாரம் சமூக நிலைகளை பிரதிபலிக்கும் வகையில் நமது கூட்டாட்சி முறை உருவாக்கப்பட்டுள்ளது. அரசியல் சாசனக் குழு நமது நாட்டின் பன்முக மக்கள் முன்னேற்றத்திற்கு கூட்டாட்சி முறை அவசியம் என்று கருதியது. இருந்தபோதிலும் பிரிவினைவாத சக்திகளை தடுப்பதற்கு வலிமையான மத்திய அரசாங்கம் தேவை என்று அரசியல் சாசனக் குழு முடிவு செய்தது. 1947-ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரிந்து பிறகு ஏற்பட்ட துயரமான கலவரங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என அரசியல் தலைவர்கள் முடிவு செய்தனர். ஆகவே தேசிய ஒற்றுமைக்கு முதலிடத்தையும், மாநில உரிமைகளுக்கு இரண்டாம் இடத்தையும் கூட்டாட்சி

முறையில் வழங்கியிருந்தார்கள். மாநில உரிமையோ, கூட்டாட்சியோ இருந்தபோதிலும் தேசிய ஒற்றுமை நிலைபெற வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும்.

பேராசிரியர் வேர் இந்தியக் கூட்டாட்சி முறையை பற்றி “இந்தியா ஒரு பாதியளவு கூட்டாட்சி முறையான அரசாங்கம் உள்ள நாடாகும். இந்தியா ஒரு வலுவில்லா கூட்டாட்சி தன்மைகள் உள்ள ஒற்றையாட்சி நாடாகும். அது வலுவான கூட்டாட்சி உள்ள ஒற்றையாட்சி நாடு கிடையாது என்று கூறிப்பிடுகிறார்.

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த அரசியல் சாசன அறிஞரான பேராசிரியர் அலெக்ஸாண்ட்ராவிக்ஸ் இந்தியாவின் கூட்டாட்சியை “தனித்துவமானது“ என்று வர்ணித்தார்.

**மத்திய – மாநில அதிகாரப் பகிர்வு:**

அதிகாரப் பகிர்வு மத்திய மாநில உறவுகளின் அச்சாணியாக உள்ளது. மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே அதிகாரப் பகிர்வு மூன்று தளங்களில் காணப்படுகிறது.

1. சட்டமன்ற அதிகாரப் பகிர்வு
2. ஆட்சித்துறை அதிகாரப் பகிர்வு
3. நிதி அதிகாரப் பகிர்வு

**சட்டமன்ற அதிகாரப் பகிர்வு:**

மத்திய மாநில உறவுகளில் சட்டமன்ற அதிகாரப் பகிர்வு இரண்டு தளங்களில் வழங்கப்பட்டுள்ளது.

1. அதிகாரப் பகிர்வின் எல்லை
2. அதிகாரங்கள் பகிர்வு

**அதிகாரப் பகிர்வின் எல்லை:**

மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் தேசத்தின் எல்லை முழுவதும் காணப்படுகின்றது. மாநில அரசாங்கங்களின் அதிகாரம் மாநில எல்லை மீது காணப்படுகின்றது. மேலும் மத்திய அரசு எல்லைகளை தாண்டிய அதிகாரத்தையும் பெற்றிருக்கின்றது. அதாவது மத்திய அரசு இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் இந்தியக் குடிமகன்கள் மற்றும் அவர்கள் சொத்துக்கள் மீதும் அதிகாரம் செலுத்துகின்றது. ஆனால் மாநில அரசாங்கங்கள் அந்தந்த மாநில எல்லைக்குள் மட்டுமே அதிகாரம் செலுத்துகின்றன. இருந்தபோதிலும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் பட்டியல் பகுதிகள் மீது பயன்படுத்தும் போது அரசமைப்பே சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

**அதிகாரங்கள் பகிர்வு:**
மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே அரசமைப்பு அதிகாரத்தை மூன்று பட்டியல்கள் மூலம் பகிர்ந்து அளிக்கின்றது.

**பட்டியல் (ஒன்றியப் பட்டியல்):**

இங்கு ஒன்றிய அரசு முழு அதிகாரத்தை பெற்றிருக்கும். பாதுகாப்பு, வங்கித்துறை, நாணயம், வெளியுறவுத் துறை உள்ளிட்ட நூறு அதிகாரங்கள் இப்பட்டியலில் உள்ளன.

**பட்டியல் (மாநிலப் பட்டியல்):**
இப்பட்டியலில் உள்ள துறைகளில் மாநில அரசாங்கங்கள் முழு அதிகாரத்தை பெற்றிருக்கும். இங்கு 59 அதிகாரங்கள் உள்ளன. சட்டம், ஒழுங்கு, பொது சுகாதாரம், சுயாட்சி அமைப்புகள், விவசாயம், வனங்கள் போன்றவைகள் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

**பட்டியல் (பொதுப் பட்டியல்):**

இப்பட்டியலில் 52 அதிகாரங்கள் உள்ளன. கல்வி, திருமணம், குடிமைச் சட்டம் போன்றவைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. மத்திய மாநில அரசாங்கங்கள் இரண்டுமே இப்பட்டியலில் அதிகாரம் செலுத்துவதால் இப்பட்டியலுக்கு பொதுப் பட்டியல் என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் உள்ள அதிகாரத்தில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே முரண்பாடுகள் ஏற்பட்டால் மத்திய அரசாங்கத்தின் சட்டமே செல்லுபடியாகும்.

இம்மூன்று பட்டியல்கள் தவிர இதர அதிகாரங்கள் என்ற வகையும் உள்ளது. இம்மூன்று பட்டியல்களில் இடம்பெற்ற அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் ஆளுமையின் கீழ் வருகின்றன. மேற்கண்ட அதிகாரப்பகிர்வை வழங்குவதில் நமது அரசமைப்பு இந்திய அரசாங்கச் சட்டம் 1935-யை பின்பற்றுகின்றது.

**விதிவிலக்குகள்:**
மேற்கண்ட அதிகாரப் பகிர்வு பொதுவாக இந்தியாவில் பின்பற்றப்படும். ஆனால் சில சிறப்பு சமயங்களில் மேற்கண்ட அதிகாரப் பகிர்வு நிறுத்தி வைக்கப்படும். இச்சமயங்களில் மாநில அரசாங்கங்களின் அதிகாரங்கள் நீக்கப்பட்டு மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் அதிகரிக்கப்படும்.

1. **தேசிய அவசர காலம்:**

குடியரசுத்தலைவர் தேசிய அவசரகால சட்டத்தை பிறப்பித்தால் நாடாளுமன்றம் மாநில அதிகாரங்கள் மீது சட்டம் இயற்றும் அதிகாரத்தைப் பெறும். போர், அந்திய ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி போன்ற காரணங்கள் அடிப்படையில் குடியரசத்தலைவர் தேசிய அவசர சட்டத்தை பிரகடனம் செய்வார். நாட்டிற்கு எதிரான சவால்களை சமாளிப்பதற்கு நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மாநில பட்டியலிலும் செலுத்தப்படும்.

2. **மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தம்:**

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள் தங்களின் நன்மை கருதி ஒரு குறிப்பிட்ட அதிகாரத்தில் மத்திய அரசு தங்களுக்கான பொதுச் சட்டத்தை நிறைவேற்றி தருக என கோரினால் நாடாளுமன்றம் அச்சட்டத்தை நிறைவேற்றித் தரும்.

3. **சர்வதேச ஒப்பந்தம்:**

சர்வதேச ஒப்பந்தங்களை அமல் படுத்துவதற்காக நாடாளுமன்றம் மாநில பட்டியலில் உள்ள அதிகாரத்தில் சட்டங்களை இயற்றலாம்.

4. **உறுப்பு 356 அவசர காலம்:**
அரசமைப்பின் 356 உறுப்பின்படி அவசர காலத்தை ஒரு மாநிலத்தில் பிறப்பித்தால் குடியரசுத்தலைவர் அந்த மாநிலத்திற்கான சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றலாம் என அதிகாரம் வழங்குவார்.

**ஆட்சித்துறை அதிகாரப் பகிர்வு:**

நமது அரசமைப்பு மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே நிர்வாக அதிகாரங்களை பகிர்கின்றது. ஏற்கனவே விவரிக்கப்பட்ட சட்டமன்ற அதிகாரப்பகிர்வை பிரதிபலிக்கும் வகையில் ஆட்சித்துறை அதிகார பகிர்வு அமைந்துள்ளது. மத்திய அரசாங்கம் முதலாவது பட்டியலிலுள்ள விஷயங்கள் மீது ஆட்சித்துறை அதிகாரத்தை பெற்றிருக்கின்றது.

இரண்டாவது பட்டியலில் உள்ள விஷயங்கள் மீது மாநில அரசாங்கங்கள் அதிகாரத்தை பெற்றுள்ளன. தேசம் முழுவதும் மத்திய அரசாங்கம் ஆட்சித்துறை அதிகாரம் பெற்றிருக்கின்றது. மாநில அரசாங்கங்கள் அந்தந்த மாநிலங்களில் அதிகாரத்தை பெற்றிருக்கின்றன.

மூன்றாவது பட்டியலான பொதுப் பட்டியலில், ஆட்சித்துறை அதிகார பகிர்வு சற்றே வித்தியாசமாக உள்ளது. பொதுவாக பொதுப் பட்டியலில் விஷயங்களில் நிர்வாக அதிகாரத்தை மாநிலங்கள் பெற்றிருக்கும். ஆனால் தேவைப்பட்டால் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிக்கும். மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கம் வழங்கும் கட்டளைகளை கண்டிப்பாக இங்கு நிறைவேற்ற வேண்டும்.

பொதுப் பட்டியலில் விஷயங்களில் நிர்வாக அதிகாரத்தை மாநிலங்கள் பெற்றிருக்கும். ஆனால் தேவைப்பட்டால் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிக்கும். மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கம் வழங்கும் கட்டளைகளை கண்டிப்பாக இங்கு நிறைவேற்ற வேண்டும்.

நமது கூட்டாட்சி முறையில் மத்திய,மாநில அரசாங்கங்கள் இடையே பணி ஒப்படைப்பு முறை காணப்படுகின்றது. மத்திய அரசாங்கம் மாநில ஆளுநரின் இசைவுடன் தனது நிர்வாகப் பணிகளை நிறைவேற்றுமாறு மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம். மாநில அரசாங்கம் குடியரசுத்தலைவரின் ஆதரவுடன் தனது நிர்வாகப் பணிகளை மத்திய அரசிடம் ஒப்படைக்கலாம். மத்திய அரசு மாநில ஆளுநரின் இசைவு இல்லாமல், நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் தனது நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றுமாறு மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம்.

**நிதி அதிகாரப் பகிர்வு:**

கூட்டாட்சி முறையின் வெற்றிக்கு நிதி அதிகார பகிர்வு மிகவும் முக்கியமானதாகும். இந்திய அரசமைப்பு மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே நிதி அதிகாரப் பகிர்வை விரிவாக வழங்குகின்றது. இப்பகிர்வானது இந்திய அரசாங்கச் சட்டம் 1935-யை பெரிய அளவில் பிரதிபலிக்கின்றது. இரண்டு வகையான வருமானங்கள் நிதிப் பகிர்வில் காணப்படுகின்றன.

1. வரி வருமானப் பகிர்வு
2. இதர வருமானப் பகிர்வு

**வரி வருமானப் பகிர்வு:**

மத்திய மாநில நிதி பகிர்வில் வரி வருமான பகிர்வு ஐந்து வகைகளில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. சுங்கவரி போன்றவைகள் முற்றிலும் மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.
2. விற்பனை வரி போன்ற வரிகள் முற்றிலும் மாநில அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.
3. சில வரிகளை மத்திய அரசாங்கம் விதிக்கின்றது. மாநில அரசாங்கங்கள் அவ்வரிகளை வசூலித்து பயன்படுத்திக்கொள்கின்றன. முத்திரை வரி, மதுவினால் தயாரிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் மீதானக் கலால் வரி போன்றவற்றை எடுத்துக்காட்டுகளாக நாம் கூறலாம்.
4. சில வரிகளை மத்திய அரசாங்கம் விதித்து வசூலிக்கிறது. ஆனால் அந்த வருமானம் மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக செய்தித்தாள்களில் வரும் விளம்பரங்கள் மீதான வரி.
5. சில வரிகள் மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக விவசாய வருமானம் தவிர்த்த பிற வருமானங்கள் மீதான வரி.

**இதர வருமானப் பகிர்வு:**

வரி தவிர இதர வருமான வழிகள் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அரசாங்கம் தனக்கான வணிக மற்றும் தொழில் நிறுவனங்களை நடத்தி வருமானத்தை ஈட்டலாம்ட. எடுத்துக்காட்டாக தொழில் நிதி நிறுவனம், ரயில்வே துறை, ஒளிப்பரப்பு, அஞ்சல் துறை போன்றவற்றை நாம் கூறலாம்.

மாநில அரசாங்கங்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வணிக, தொழில் நிறுவனங்கள் மூலமாக வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம். மின்சாரம், நீர்ப்பாசனம், வனங்கள், தரைவழி போக்குவரத்து போன்ற துறைகளில் மாநில அரசாங்கங்கள் வருமானத்தை ஈட்டலாம்.

**நிதிக்குழு:**

ஒவ்வொரு ஐந்தாண்டிற்கும் குடியரசுத்தலைவர் ஒரு நிதிக் குழுவை அமைப்பார். அரசமைப்பின் 280-வது உறுப்பு குழுவின் அமைப்பை விவரிக்கின்றது. நிதிக் குழுவ ஒரு தலைவரையும் நான்கு உறுப்பினர்களையும் பெற்றிருக்கும். நிதிக் குழுவின் தலைவர் பொது நடவடிக்கைகளில் (விவரங்கள்) அனுபவம் பெற்றவராக இருப்பார். நிதிக் குழுவின் மூன்று உறுப்பினர்கள் நிதி நிர்வாகம், பொருளாதாரம், பொதுக் கணக்குகள் மற்றும் அரசு நிதி துறை ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றிருப்பார்கள். நிதிக் குழுவின் நான்காவது உறுப்பினர் உயர் நீதிமன்ற நீதிபதியாக தகுதிப் பெற்றவர்.

**நிதிக் குழு அரசிற்கு பரிந்துரைகளை கீழ்க்கண்டவாறு வழங்கும்.**

1. வருமானத்தை மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்தல்.
2. உதவி மானியம் வழங்கப்படும் வழிமுறைகள்.
3. பஞ்சாயத்து அமைப்புகளின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தும் நோக்குடன் இந்தியாவின் தொகுப்பு நிதி அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்.
4. நகராட்சி அமைப்புகளின் நிதி அதாரங்களை வலுப்படுத்தும் நோக்குடன் இந்தியாவின் தொகுப்பு நிதி அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்.
5. குடியரசுத்தலைவரால் நிதி சம்பந்தப்பட்ட விஷயத்தில் கோரப்படும் பரிந்துரைகள்.

இதுவரை 14 நிதிக் குழுக்கள் இந்தியாவில் குடியரசுத்தலைவரால் அமைக்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவுக் கூட்டாட்சி:**

அமெரிக்காவின் புகழ்பெற்ற அரசமைப்பு நிபுணரான கிரான்வில் ஆஸ்டின் இந்திய கூட்டாட்சியை கூட்டுறவுக் கூட்டாட்சி என வர்ணித்தார். மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்கும் நோக்கத்தில் இந்திய கூட்டாட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா போன்ற கூட்டாட்சி நாடுகளில் கூட்டுறவு கொள்கை அமல்படுத்தப்படுகிறது. அரையளவு கூட்டாட்சி கொள்கை கொண்ட நமது அரசமைப்பில் மாநிலங்கள் மத்திய அரசிற்கு ஒத்துழைப்பை நல்க வேண்டும். குடியரசுத்தலைவர் பெற்றிருக்கும் அவசர கால அதிகாரங்களும் அரசமைப்பின் சில பகுதிகளும் மாநில அரசாங்கங்கள் மத்திய அரசுடன் கூட்டுறவு உணர்வுடன் செயல்பட வைக்கின்றன. இந்திய அரசியலில் பல்வேறு பகுதிகள் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் கூட்டுறவுக் கூட்டாட்சியின் விழுதுகளாக உள்ளன. அவைகளை மூன்று வகைகளாக வகைப்படுத்தலாம்.

1. அரசமைப்பு நிறுவனங்கள்
2. சட்ட அமைப்புகள்
3. அரசமைப்புகள்

**1. அரசமைப்பு பகுதிகள்:**

அரசமைப்பே பல்வேறு அமைப்புகளை உருவாக்கி கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை ஆதரிக்கின்றது.

1. **மாநிலங்களுக்கிடையேயான குழு:**
அரசமைப்பில் 263 உறுப்பு குடியரசுத்தலைவர் பொது நலனுக்காக மாநிலங்களுக்கிடையேயான குழுவை உருவாக்கலாம் என்று கூறுகின்றது.

மூன்று பணிகளை இக்குழு பெற்றிருக்கின்றது.

- ❖ மாநிலங்களுக்கிடையேயான சிக்கல்களை ஆராய்ந்து ஆலோசனை வழங்குவது.
- ❖ மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையிலான பொதுவான விஷயங்களை விவாதிப்பது.
- ❖ ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு பரிந்துரைகளை வழங்குதல்.

மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு பல குழுக்கள் இதுவரை உருவாக்கப்பட்டுள்ளன. மத்திய சுகாதாரக் குழு, போக்குவரத்து வளர்ச்சி மன்றம். தல சுயாட்சி மத்தியக் குழு போன்றவைகள் எடுத்துக்காட்டுகளாகும்.

சர்க்காரியா குழுவின் பரிந்துரைப்படி 1990-களில் கூட்டாட்சி முறையில் உள்ள அரசாங்கங்கள் இடையே எல்லா துறைகளிலும் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காக மாநிலங்களுக்கிடையேயான குழு தோற்றுவிக்கப்பட்டது. பிரதமர் இக்குழுவின் தலைவராக இருக்கின்றார். எல்லா மாநிலங்களின் முதல்வர்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் முதல்வர்களும், ஆறு ஒன்றிய அமைச்சரவை குழுக்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் நிர்வாகத் தலைவர்களும், குடியரசுத்தலைவர் ஆட்சியில் இருக்கும் மாநிலங்களின் ஆளுநர்களும் இக்குழுவில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். மாநிலங்கள் இடையில் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிக்க மத்திய உள்துறை அமைச்சர் தலைமையில் ஒரு நிலைக் குழுவும் உருவாக்கப்பட்டது. இக்குழுவில் மத்திய உள்துறை அமைச்சர் தவிர ஐந்து மத்திய அமைச்சர்கள் குழு, ஒன்பது மாநில முதல்வர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

2. **சட்ட அமைப்புகள்:**
நாடாளுமன்றத்தின் சடடங்களால் உருவாக்கப்பட்ட பல அமைப்புகளும் கூட்டுறவுக் கூட்டாட்சியை வலுப்படுத்துகின்றன.

1. **மண்டலக் குழுக்கள்:**

மண்டலக் குழுக்கள் மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழு 1956 சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டன. மொழிவாரியான மாநிலங்கள் உருவானபோது மண்டலக் குழுக்களும் உருவாயின. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு மண்டலக் குழுக்களின் நோக்கம் கூட்டுறவுக் கூட்டாட்சி வழக்கத்தை வளர்ப்பது என்றார்.

ஆரம்பத்தில் ஐந்து மண்டலக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1971 ஆம் ஆண்டு வட கிழக்கு மாநிலங்களுக்காக சிறப்பு மண்டலக் குழு உருவாக்கப்பட்டது. தற்பொழுது அறு மண்டலக் குழுக்கள் இயங்குகின்றன.

1. வடக்கு மண்டலக் குழு
2. தெற்கு மண்டலக் குழு
3. கிழக்கு மண்டலக் குழு
4. மேற்கு மண்டலக் குழு
5. மத்திய மண்டலக் குழு
6. வட கிழக்கு மண்டலக் குழு

மத்திய உள்துறை அமைச்சர் எல்லா மண்டலக் குழுக்களின் பொதுத் தலைவராக உள்ளார். மேலும் ஒவ்வொரு மண்டலக் குழுவிலும் ஒவ்வொரு மாநிலத்தின் முதல்வர் மற்றும் இரண்டு அமைச்சர்களும் ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதியில் நிர்வாகத் தலைவரும் உறுப்பினர்களாக இருப்பார்.

மண்டலங்களில் உள்ள மாநிலங்களுக்கிடையேயான எவ்வாறு ஒத்துழைப்பையும் முன்னேற்றத்தையும் உருவாக்கி வளர்ப்பது என்று மண்டலக் குழுக்கள் பரிந்துரை வழங்கும். பொருளாதார, சமூகத் திட்டமிடல், எல்லை பிரச்சனைகள், போக்குவரத்து போன்ற துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வழங்க மண்டலக் குழுக்கள் செயல்படும்.

2. **நதி ஆணையம்:**
   நதி ஆணையங்கள் சட்டம் 1956 மாநிலங்களுக்கிடையேயான நதிகளை மேலாண்மை செய்வதற்கு மாநிலங்களுக்கு பரிந்துரைகள் வழங்குவதற்கு நதி ஆணையத்தை உருவாக்கியது.

3. **நதிநீர் தீர்ப்பாயம்:**
   மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல் சட்டம் 1956 அரசமைப்பின் உறுப்பு 262 இன் படி உருவாக்கப்பட்டது. சமவெளி மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் குறைகளை ஒழுங்குபடுத்துவது இச்சட்டத்தின் நோக்கமாகும். இவ்வகையான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு தீர்பாயங்களை இச்சட்டம் உருவாக்குகின்றது.

**அரசமைப்புகள்**

## நிதி ஆயோக் (NITI AAYOG)

மத்திய அரசாங்கம் 2015-ம் ஆண்டு நிதி ஆயோக் என்ற அமைப்பை தோற்றுவித்தது. இந்தியாவின் மாற்றத்திற்கான தேசிய குழு என்பது இதன் பொருள் ஆகும். திட்டக் குழு நீக்கப்பட்டப் பிறகு இப்புதியக் குழு தோற்றுவிக்கப்பட்டது. பிரதமர் இக்குழுவின் தலைவராக இருப்பார். மாநிலங்களின் முதல்வர்கள், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் முதல்வர்கள் (புதுச்சேரி, புதுதில்லி), அந்தமான் நிக்கோபர் தீவுகளின் துணை ஆளுநர் ஆகியோர் இக்குழுவின் நிரந்தர உறுப்பினர்களாக செயல்படுவார்கள். மாநிலங்களுக்கிடையேயான அமைப்பு ரீதியாக தொடர்ச்சியாக கூட்டுறவுக் கூட்டாட்சியை வளர்ப்பது இக்குழுவின் நோக்கமாகும். உறுதியான மாநிலங்கள் உறுதியான தேசத்தை உருவாக்கும் என்பது இக்குழுவின் எண்ணமாகும். வருமான ஆதாரங்கள் இல்லாததாலும் அரசமைப்பு சக்தி இல்லாததாலும் மாநிலங்கள் மத்திய அரசை சார்ந்து இயங்குகின்றன. இயற்கை பேரழிவுகளை சமாளிப்பதற்கு கூட மத்திய அரசை சார்ந்து இருக்கின்றன. இந்நிலையை மாற்ற வேண்டும் என்பது நிதி ஆயோக்கின் நோக்கமாகும்.

**மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனை:**

இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி முறையை மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் சிக்கல்கள் பெரிய அளவில் பாதிக்கின்றன. பல்வேறு நதிநீர் சிக்கல்கள் நமது நாட்டில் காணப்படுகின்றன. தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகியவை காவிரி பிரச்சனையில் சம்பந்தப்பட்டுள்ளன. ஆண்டாண்டு காலமாக நதிநீர் பிரச்சனையில் ஒடிசா, ஆந்திரப் பிரதேசம் சம்பந்தப்பட்டுள்ளன. சட்லெஜ் ஆறு பிரச்சனையில் பஞ்சாப், அரியானா சம்பந்தப்பட்டுள்ளன. கோவா, மஹாராஷ்டிரா, கர்நாடகம் ஆகியவை மகாதயி ஆற்றுப் பிரச்சனையில் சம்பந்தப்பட்டுள்ளன.

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இந்திய அரசியலில் கீழ்கண்ட அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

1. **அரசமைப்பும் மாநிலங்களுக்கிடையேயான நிதி நீர் சிக்கல்களும்:**

   அரசமைப்பின் 262 இன் உறுப்பு மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பிரச்சனைகள் தீர்ப்பதற்கு வழிமுறையை வழங்குகின்றது. இவ்வகையான பிரச்சனைகள் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பில் இருந்து நாடாளுமன்றம் விலக்கி வைக்கலாம். நாடாளுமன்றம் நிதி நீர்ப் பிரச்சனைகள் சம்பந்தமாக ஒரு சட்டத்தை இயற்றலாம். நதி நீர் பிரச்சனை பல இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்றது. நீதிமன்றங்கள் தீர்ப்பை

வழங்கினால் மக்களிடையே கசப்புணர்வும் பிளவும் அதிகரிக்கலாம். ஆகவே சுமூகமான பேச்சு வார்த்தை மூலமாக நதிநீர்ப் பிரச்சனைகளை நாம் தீர்க்க வேண்டும் என்பது அரசமைப்பின் உறுப்பு 262 இன் நோக்கமாகும்.

2. **மாநிலங்களுக்கிடையேயான நிதி நீர் சிக்கல்கள் சட்டம் 1956:**

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்கள் சட்டம் 1956 நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. நதி நீர்ப் பிரச்சனையை தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் தீர்ப்பாயங்களை அமைக்கலாம் என்று இச்சட்டம் வழிவகுக்கின்றது. நதி நீர்ப் பிரச்சனைகள் பேச்சு வார்த்தைகள் மூலமாக தீர்க்கப்பட வேண்டும். பேச்சு வார்த்தை முயற்சிகள் தோல்வி அடைந்தால் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மத்திய அரசாங்கத்தை நாடலாம். மத்திய அரசாங்கம் குறிப்பிட்ட நதிநீர்ப் பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு தீர்ப்பாயத்தை அமைக்கும்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அந்த தீர்ப்பாயத்திற்கான தலைவரை நியமிப்பார். ஆரம்பத்தில் தீர்ப்பாயம் அல்லது நடுவர் மன்றம் ஒரே ஒரு உறுப்பினரைத் தான் கொண்டிருந்தன. பின்னர் நடுவர் மன்றங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை பெறுவதற்கு சட்டம் மாற்றப்பட்டது. நடுவர் மன்றத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்ற அல்லது உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் அல்லது ஒய்வு பெற்ற நீதிபதிகளை நியமிப்பார். நடுவர் மன்றத்தின் தீர்ப்பு நீதமன்றத்தின் தீர்ப்புக்கு சமமானதாகும். நடுவர் மன்றம் விசாரிக்கும் நதிநீர் பிரச்சனையில் வேறு எந்த நீதிமன்றமும் தலையிட முடியாது. மேலும் நதிநீர் ஆணையம் சட்டம் 1956 இன் கீழ் வரும் நதிகளில் மீது நடுவர் நீதிமன்றங்களை அமைக்க முடியாது.

சுருக்கமாக கூற வேண்டுமென்றால் நமது நாட்டில் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் சிக்கல்கள் அணுகுமுறையில் இரண்டு தன்மைகள் காணப்படுகின்றன. பேச்சுவார்த்தைகள் மூலமாக இப்பிரச்சனைகளை தீர்க்க வேண்டும். பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் நடுவர் நீதிமன்றம் அமைத்து தீர்வைக் காண வேண்டும்.

**இந்தியக் கூட்டாட்சியில் பிரச்சனைகளும் தேவைகளும்:**

கூட்டாட்சி முறையில் காணப்படும் பல்வேறு சிக்கல்கள் மத்திய – மாநில உறவுகளை பாதிக்கின்றன.

**ஆளுநரின் நியமனம் மற்றும் பணி:**

மத்திய அரசாங்கத்தின் முகவராக ஆளுநர் மாநிலத்தில் செயல்படுவதை மாநில அரசாங்கங்கள் எதிர்க்கின்றன. ராஜமன்னார் குழு மாநில ஆளுநர்கள் கூட்டாட்சி முறைக்கு எதிராக இருப்பதாக விமர்சித்தது. தமிழகத்தின் முன்னாள் முதல்வர் அண்ணாதுரை அவர்கள் காலத்தில் இருந்து ஆளுநர்களின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வந்தது.

மாநில கட்சிகள் அரசியலில் தீவிரமாக இயங்கும் தலைவர்களை மாநில ஆளுநராக நியமிக்க கூடாது என கூறுகின்றன. ஆளுநர்களின் நியமனத்தில் மாநில அரசாங்கங்களையும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்று மாநில கட்சிகள் வலியுறுத்துகின்றன. இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பாடுபட்ட, மிகச்சிறந்த ஆளுநர்களாக நியமிக்க வேண்டுமென கோரப்படுகிறது.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் செயல்பாடுகள் அதிருப்தியை உருவாக்கியுள்ளன. மாநிலங்களில் ஆளும் கட்சி உடைந்து போனாலோ, அல்லது தொங்கு சட்டமன்றம் உருவானாலோ ஆளுநர்களின் முடிவுகள் சர்ச்சைகளை உருவாக்குகின்றன.

**கல்வி:**

ஆரம்ப காலத்தில் கல்வி இரண்டாவது பட்டியலான மாநிலப் பட்டியலில் தான் இடம் பெற்றிருந்தது. 1976-ஆம் ஆண்டு நாடாளுமன்றம் 42 வது அரசியல் சாசன திருத்தச்சட்டத்தின் மூலம் கல்வியை மூன்றாவது பட்டியலான பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. மாநில அரசுகளின் தனிப்பட்ட அதிகாரம்

மத்திய மாநில அரசாங்கங்களுக்கு பொதுவானதாக மாற்றப்பட்டது. பொதுப் பட்டியலில் தற்போது கல்வி இருப்பதால் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே முரண்பாடுகள் தோன்றினால் மத்திய அரசின் அதிகாரமே செல்லுபடி ஆகும். ஆகவே தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என கூறுகின்றன.

**மாநில சுயாட்சிபிரச்சனைகள்:**

கல்வி இடமாற்றம்
ஆளுநர் நியமனம்
உறுப்பு 356
சட்ட முன்வரைவுகள் தேக்கிவைப்பு
அனைத்து இந்தியப் பணிகள்

**மாநில சட்ட முன்வரைவுகளை குடியரசுத் தலைவரின் கவனத்திற்கு தேக்கி வைத்தல்:**

மாநிலங்கள் நிறைவேற்றும் சட்ட முன்வரைவுகளை ஆளுநர்கள் குடியரசுத்தலைவரின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம். மாநிலத்தின் நிதி சட்ட முன்வரைவுகளை ஆளுநர்கள் தேக்கி வைத்தால் குடியரசுத்தலைவர் அவைகளை நிராகரிக்கலாம் அல்லது அவைகளுக்கு தனது இசைவைத் தெரிவித்தது அவைகளை சட்டமாக்கலாம். மாநிலத்தின் சாதாரண சட்ட முன்வரைவுகள் ஆளுநர்களால் தேக்கி வைக்கப்பட்டால் குடியரசுத்தலைவர் அந்த முன்வரைவுகளை திரும்பவும் விவாதிக்குமாறு மாநில சட்டமன்றத்திற்கே அனுப்பிய வைக்கலாம்.

மறுபரிசீலனை செய்து மீண்டும் அந்த முன்வரைவுகளை மாநில சட்டமன்றம் அனுப்பினாலும் குடியரசுத்தலைவர் முன்வரைவை நிராகரிக்கலாம். நமது நாட்டின் ஒற்றுமையை காப்பதற்காக அரசமைப்பு இவ்வழிமுறைகளை உருவாக்கியுள்ளது.

ஆனால் பல மாநில அரசாங்கங்கள் இவ்வழிமுறை மீது அதிருப்தி தெரிவித்துள்ளன. அரசியல் காரணத்திற்காக ஆளுநர்கள் இப்பிரிவை தவறாக பயன்படுத்துவதாக குற்றம் சுமத்துகின்றன. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசாங்கங்களுக்கு எதிராக ஆளுநர்கள் இவ்விவகாரத்தை பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

**உறுப்பு 356 தவறாக பயன்படுத்தப்பட்டால்:**

அரசமைப்பின் 18 – வது பகுதியில் 356 உறுப்பு ஒரு மாநிலத்தில் அரசமைப்பு ஆட்சி முறை சீர்குலைந்து விட்டால் குடியரசுத்தலைவர் அவசர காலத்தை அமல் படுத்தலாம் என்று கூறுகின்றது. ஆளுநரின் அறிக்கையின் அடிப்படையிலோ அல்லது ஆளுநரின் அறிக்கை இல்லாமலோ குடியரசுத்தலைவர் உறுப்பு 356-ஐ அமல்படுத்தலாம். நமது நாட்டின் ஒற்றுமையை பாதுகாப்பதற்காக இப்பிரிவை அரசமைப்பு உருவாக்கியுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆளும் பல்வேறு மாநிலங்கள் உறுப்பு 356 மத்திய அரசாங்கத்தினால் தவறாக பயன்படுத்தப்படுகிறது என்று விமர்சித்துள்ளனர்.

மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு எதிராக இவ்வுறுப்பை தவறாக பயன்படுத்தியுள்ளதாக பல மாநிலங்கள் தெரிவித்துள்ளன. கட்சி அரசியல் காரணங்களுக்காக இவ்வுறுப்பு தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே பல மாநில கட்சிகள் அரசமைப்பின் உறுப்பு 356-ஐ அகற்ற வேண்டும் என கோருகின்றன.

**அனைத்து இந்தியப் பணிகள்:**

அரசமைப்பின் உறுப்பு 312 வழியாக அனைத்து இந்தியப் பணிகள் உருவாக்கப்படுகின்றன. இப்பணிகளின் அதிகாரிகள் மத்திய அரசாங்கத்தினால் தேர்வு செய்யப்படுகின்றனர். மாநிலங்களுக்கு மத்திய அரசினால் இவ்வதிகாரிகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். மாநில அரசாங்கங்கள் அனைத்து இந்தியப் பணி அதிகாரிகளை இடமாற்றம் செய்யலாம். ஆனால் மத்திய அரசாங்கம் மட்டுமே அனைத்து இந்தியப் பணி அதிகாரிகளை பதவியில் இருந்து நீக்க முடியும். ஆகவே இவ்வதிகாரிகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மாநில அரசாங்கங்களின் மீது மத்திய அரசு

இவ்வதிகாரிகள் மூலம் ஆதிக்கம் செலுத்துவதாக குற்றம் சாட்டப்படுகிறது. தமிழ்நாடு அரசாங்கம் அமைத்த இராஜமன்னார் குழு அனைத்து இந்தியப் பணிகளை அகற்ற வேண்டும் என பரிந்துரைத்தது.

**நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு:**

நமது நாட்டின் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்காக இதுவரையில் இரண்டு நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதல் நிர்வாகச் சீர்திருத்தக் குழு 1966-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மொரார்ஜி தேசாய் தலைமையிலும் பின்னர் கே. அனுமந்தையா தலைமையிலும் உருவாக்கப்பட்டது. இக்குழு 20 அறிக்கைகளை வழங்கியது. அவைகளில் ஒரு அறிக்கை மத்திய மாநில உறவுகளை பற்றி பரிந்துரைகளை வழங்கியது.

இரண்டாவது நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு 2005-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் வீரப்ப மௌலியும் பின்னர் வி. இராமச்சந்திரனும் தலைவர்களாக இருந்தனர்.

**மத்திய மாநில உறவுகள் குழுக்கள்:**

1. நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு
2. இராஜாமன்னார் குழு
3. சர்க்காரிய குழு
4. புன்ச்சி குழு
5. வெங்கட செல்லையா குழு

**இராஜமன்னார் குழு:**

தமிழ்நாடு அரசாங்கம் நமது அசரமைப்பின் மத்திய மாநில உறவுகளை ஆய்வு செய்து பிரிந்துரைகள் வழங்குவதற்கு இராஜமன்னார் குழுவை அமைத்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி பி.வி. இராஜமன்னார், சென்னை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஏ. இலட்சுமண சுவாமி, ஆந்திர உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி முனைவர் பி சந்திர ரெட்டி ஆகியோர் இக்குழுவில் இருந்தனர். தங்களது பரிந்துரைகளை இக்குழு அரசாங்கத்திற்கு 1971 ஆம் ஆண்டு வழங்கியது. மாநில சுயாட்சி வரலாற்றில் மிகவும் முக்கிய மைல்கல்லாக இக்குழுவின் அறிக்கை உள்ளது.

**இக்குழுவின் முக்கிய பரிந்துரைகள் கீழ்க்கண்டவைகள் ஆகும்.**

1. அரசமைப்பின் 263 உறுப்பு உடனடியாக அமல் படுத்தப்பட வேண்டும். மாநிலங்களுக்கிடையேயான குழு உருவாக்கப்பட வேண்டும். இக்குழுவின் தலைவராக பிரதமர் பணிபுரிய வேண்டும். மாநில முதல்வர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் உறுப்பினர்களாக பணியாற்ற வேண்டும். மாநிலங்களுக்கிடையேயான குழுவிடம் அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தின் முக்கிய முடிவுகளையும் நாடாளுமன்றத்தின் சட்டங்களையும் இக்குழுவில் ஆலோசிக்க வேண்டும். தேசத்தின் பாதுகாப்பு,வெளியுறவு ஆகிய இரண்டு அதிகாரங்கள் தவிர, இதர எல்லா அதிகாரங்களையும், பயன்படுத்தும் முன் மத்திய அரசு மாநிலங்களுக்கிடையேயான குழுவை ஆலோசிக்க வேண்டும்.

2. தற்பொழுது உள்ள மத்திய மாநில உறவுகள் மத்திய அரசுக்கு சாதகமாக உள்ளது. ஆகவே அரசமைப்பின் உறுப்புகள் 256, 257, 339(2) ஆகியவைகளை நீக்க வேண்டும். இந்த உறுப்புகள் மாநில உரிமைகளை பாதிப்பதால் அவைகளை நீக்கி மாநில உரிமைகளை வலுப்படுத்த வேண்டும் என இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.

3. மூன்று பட்டியல்களில் இல்லாத இதர அதிகாரங்கள் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும். வரி விதிக்கும் அதிகாரமும் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

4. அரசமைப்பின் XVIII பகுதியில் உள்ள உறுப்பு 356 மத்திய அரசால் கவனமாக பயன்படுத்தப்பட வேண்டும். மாநிலத்தில் அரசியல் சாசன அமைப்பு முற்றிலும் சீர்குலைந்தால்

மட்டுமே, கடைசி ஆயுதமாக மத்திய அரசு இவ்வுறுப்பை பயன்படுத்த வேண்டும். சாதாரண சட்ட ஒழுங்கு பிரச்சனைகளுக்கு இவ்வுறுப்பை மாநிலங்களில் மத்திய அரசு பயன்படுத்தக்கூடாது.

5. இராஜாமன்னார் குழு அனைத்து இந்தியப் பணிகளில் பெரிய அளவில் மாற்றங்களை பரிந்துரைத்தது. நமது நாட்டில் இரண்டு வகையான பணிகள் மட்டுமே இருக்க வேண்டும். மத்தியப் பணிகள் மத்திய அரசிற்கும் மாநிலப் பணிகள் மாநில அரசிற்கும் நிர்வாகத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். இரண்டிற்கும் பொதுவான, மத்திய அரசுக்கு சாதகமான, மாநில அரசுகளுக்கு எதிரான அனைத்து இந்தியப் பணிகள் தேவையில்லை. கூட்டாட்சி முறைக்கு எதிராக இருப்பதால் இந்திய ஆட்சிப்பணி (ஐ.ஏ.எஸ்) உள்ளிட்ட அனைத்து இந்தியப் பணிகளை அரசமைப்பிலிருந்து நீக்குவதற்கு இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.

6. நிதி ஆதாரங்களை மத்திய அரசாங்கத்திடம் இருந்து மாநில அரசாங்கத்திற்கு அதிக அளவில் மாற்றித்தர வேண்டும் என இக்குழு கூறியது. மாநிலங்களின் நிதி சக்தியை அதிகரிப்பதற்கு தொழில் நிறுவனங்கள் வரி, ஏற்றுமதி வரி, சுங்க வரி போன்றவற்றை மத்திய அரசாங்கத்திடம் இருந்து மாநிலங்களுக்கு மாற்ற வேண்டும். நிதி ஆற்றல் தான் மாநில உரிமைகளின் அச்சாணி என்று இக்குழு கருதியது. ஆகவே அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் திருத்தங்கள் பெரிய அளவில் செய்ய அச்சாணி என்று இக்குழு கருதியது. ஆகவே அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் திருத்தங்கள் பெரிய அளவில் செய்ய வேண்டும். மத்தியப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு அதிக அதிகாரங்களை மாற்ற வேண்டும். தேசிய ஒற்றுமை, வளர்ச்சி, மாநில உரிமைகள் மற்றும் அடையாளங்கள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு நிதிக் குழு ஒரு நிரந்தர, பாகுபாடு இல்லாத அமைப்பாக மாற வேண்டும் என இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.

**சர்க்காரியா குழு:**

மத்திய அரசாங்கம் பல கூட்டாட்சி கோரிக்கைகள் மாநிலங்களால் எழுப்பப்பட்டதால் 1983 ஆம் ஆண்டு நீதியரசர் ஆர்.எஸ். சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை உருவாக்கியது. இக்குழுவில் பி. சிவராமன், முனைவர் ஆர்.எஸ்.எஸ். சென் ஆகிய நிபுணர்களும் உறுப்பினர்களாக இருந்தனர். இக்குழு 247 பரிந்துரைகளை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கையை ஐந்து வருடங்கள் கழித்து மத்திய அரசிற்கு சமர்ப்பித்தது.

1. **மாநிலங்களுக்கிடையேயான குழு:**
மாநிலங்களுக்கிடையேயான குழு உருவாக்கப்பட வேண்டும். அரசமைப்பின் உறுப்பு 263(பி) மற்றும் (சி) பணிகளை செய்யும் அதிகாரம் இக்குழுவிடம் வழங்கப்பட வேண்டும். மாநிலங்களின் பொதுவான நலன் கருதி மாநிலங்களுக்கிடையேயான குழு பரிந்துரைகளை வழங்க வேண்டும். ஆனால் அரசமைப்பின் உறுப்பு 263 (அ)-யின் அதிகாரம் இக்குழுவிற்கு வழங்கப்படக்கூடாது. அதாவது மாநிலங்கள் இடையில் எழும் சிக்கல்களில் தலையிடும் அதிகாரம் மாநிலங்களுக்கிடையேயான குழுவிற்கு வழங்கக் கூடாது. மேலும் ஒரு நிரந்தர, சுயாட்சி பெற்ற செயலகத்தை மாநிலங்களுக்கிடையேயான குழுவிற்கு உருவாக்கித் தர வேண்டும்.

2. **அரசமைப்பின் உறுப்பு 356:**
மிகவும் கவனமாக, மிகவும் குறைவாகவே பயன்படுத்தப்பட வேண்டும். கடைசி ஆயுதமாக இவ்வுறுப்பு பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு மாநிலத்தில் அரசமைப்பு ஆட்சி முறை முற்றிலும் சீர்குலைந்தால் மட்டுமே இவ்வுறுப்பை பயன்படுத்த வேண்டும். உறுப்பு 356 அமல்படுத்துவதற்கு முன் எல்லா மாற்று உத்திகளையும் பயன்படுத்த வேண்டும்.

3. **ஆளுநர்**:
ஆளுநர் பதவியை ரத்து செய்ய வேண்டும். ஆளுநரை நியமிக்கும் முன் சம்பந்தப்பட்ட மாநில அரசை கலந்தாலோசிக்க வேண்டும் என்ற சில அரசியல் கட்சிகளின் கருத்துக்களை சர்க்காரியை குழு நிராகரித்தது. கூட்டாட்சி முறை நன்கு செயல்படுவதற்கு அரசியல் தலைவர்களை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது என்று இக்குழு பரிந்துரைத்தது. இந்தியாவின் முன்னேற்றத்துக்கு பாடுபட்ட பெருமை மிக்க இந்தியக் குடிமகன்களை ஆளுநர்களாக நியமிக்க வேண்டும். வெவ்வேறு கட்சிகள் மத்தியிலும் மாநிலத்திலும்

ஆட்சியில் இருக்கும் பொழுது, மத்தியில் ஆளும் கட்சியின் தலைவர்களை மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கக்கூடாது.

4. **மொழி:**

மும்மொழிக்கொள்கையை கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் என்று சர்க்காரிய குழு பரிந்துரைத்தது. மும்மொழிக் கொள்கை தேசிய ஒற்றுமையை வளர்க்கும் என்று இக்குழு கூறியது.

**புன்ச்சி குழு:**

புதிய அரசாங்கம் 2007 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் முன்னால் தலைமை நீதிபதி மதன் மோகன் புன்ச்சி தலைமையில் ஒரு புதிய குழுவை அமைத்தது. இக்குழுவில் மூன்று நிபுணர்களும் ஒரு செயலரும் இருந்தார். இக்குழு 2010 ஆம் ஆண்டு தனது பரிந்துரைகளை மத்திய அரசுக்கு வழங்கியது.
புதிய அரசாங்கம் 2007 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் முன்னால் தலைமை நீதிபதி மதன் மோகன் புன்ச்சி தலைமையில் ஒரு புதிய குழுவை அமைத்தது. இக்குழுவில் மூன்று நிபுணர்களும் ஒரு செயலரும் இருந்தார். இக்குழு 2010 ஆம் ஆண்டு தனது பரிந்துரைகளை மத்திய அரசுக்கு வழங்கிறது. மாநில ஆளுநர்கள் குறிப்பிட்ட பதவிக்காலத்திற்கு நியமிக்கப்படவேண்டும். குடியரசுதலைவரை பதவி நீக்கம் செய்யும் முறை போல மாநில ஆளுநர்களும் நாடாளுமன்றத்தின் பதவி நீக்க தீர்மானம் மூலம் மட்டுமே பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும். ஒரு மாநிலத்தில் கிளர்ச்சியில் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அல்லது பகுதிகளில் மட்டுமே குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்தலாம். மாநிலம் முழுவதும் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதற்காக அரசமைப்பின் உறுப்புகள் 355, 356 ஆகியவற்றில் மாற்றம் செய்ய வேண்டும். மதக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாநில அரசாங்கத்தின் ஒப்புதல் பெறாமலே மத்திய அரசு தனது காவல் படைகளை அனுப்பி அமைதியை நிலைநாட்டலாம்.

**எஸ்.ஆர். பொம்மை வழக்கு உச்ச நீதிமன்ற தீர்ப்பு:**

சோமப்ப ராயப்ப பொம்மை (6 ஜூன் 1924 முதல் 10 அக்டோபர் 2007 வரை) கர்நாடக மாநிலத்தின் பதினோராவது முதல்வராக பணியாற்றினார். ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் 1996 முதல் 1998 வரை மனிதவள முன்னேற்ற அமைச்சராகவும் இருந்தார். எச்.டி. தேவகவுடா, ஐ.கே. குஜரால் ஆகிய இரண்டு பிரதமர்களின் அமைச்சரவையில் அவர் பணியாற்றியுள்ளார்.

எஸ்.ஆர். பொம்மை அவர்கள் முதல்வராக இருந்த கர்நாடக அரசாங்கம் மத்திய அரசால் பதவி நீக்கம் செய்யப்பட்டது. இதனை எதிர்த்து முதல்வர் எஸ்.ஆர். பொம்மை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் 1994 ஆம் ஆண்டு புகழ்பெற்ற பொம்மை வழக்குத் தீர்ப்பை வழங்கியது. மத்திய மாநில உறவுகளில், மாநில உரிமைகளை காப்பதில் பொம்மை வழக்குத் தீர்ப்பு மிக முக்கிய திருப்புமுனையாக கருதப்படுகிறது.

மத்திய அரசாங்கம் தன்னிச்சையான முறையில், அசரமைப்பிற்கு எதிராக மாநில அரசாங்கங்களை பதவி நீக்கம் செய்யக்கூடாது என்பது இத்தீர்ப்பின் மையக் கருத்தாகும். அரசியலமைப்பின் 356-வது உறுப்பை கவனத்துடன்,கடைசி ஆயுதமாக மத்திய அரசாங்கம் பயன்படுத்த வேண்டும். அரசியல் சாசன ஆட்சி சீரழிந்தால் மட்டுமே இவ்வுறுப்பை மத்திய அரசு பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக சட்டப்பேரவை தேர்தலுக்கு பின் எந்த ஒரு கட்சிக்கும் கூட்டணிக்கும் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. மத்திய அரசாங்கத்தின் கட்டளைகளை மாநில அரசாங்கம் மதிக்கவில்லை போன்ற காரணங்களுக்கு மாநில அரசாங்கத்தை மத்திய அரசு பதவி நீக்கம் செய்யலாம்.

சாதாரண காரணங்களுக்காக மத்திய அரசு 356-வது உறுப்பை பயன்படுத்தக்கூடாது. எடுத்துக்காட்டாக மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் மாநிலத்தில் ஆளும் கட்சி தோற்றுவிட்டது.

மாநிலத்தில் அரசியல் சாசன ஆட்சிமுறை சீரழிந்து விட்டது என்ற ஆளுநரின் அறிக்கை

நாடாளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்பட வேண்டும். மாநிலத்தில் நிலவும் அசாதாரணமான சூழ்நிலையை ஆளுநரின் அறிக்கை தெளிவாக விவரிக்க வேண்டும். மாநிலத்தின் சட்டப்பேரவை கலைக்கப்படுவதற்கு முன் குடியரசுத்தலைவா் ஆட்சிக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒப்புதல் வழங்கப்பட்டு இருக்க வேண்டும்.

நீதிமன்றம் உறுப்பு 356 கீழ் மாநில அரசை மத்திய அரசாங்கம் பதவி நீக்கம் செய்தது சரியா, தவறா என ஆராயும் அதிகாரத்தை பெற்று இருக்கின்றது. உறுப்பு 356 தவறாக மத்திய அரசால் பயன்படுத்தப்பட்டால் உச்ச நீதிமன்றம் நீதி சீராய்வு அதிகாரத்தை பயன்படுத்தும். பதவி நீக்கம் அரசமைப்பிற்கு எதிராக இருந்தால் உச்ச நீதிமன்றம் பதவி நீக்கப்பட்ட மாநில அரசாங்கத்தை மீண்டும் பதவியில் அமா்த்தும்.

பொம்மை வழக்கு உச்ச நீதிமன்றத் தீா்ப்பு வந்த பிறகு மத்திய அரசின் தன்னிச்சையான பதவி நீக்க நடவடிக்கையில் இருந்து மாநில அரசாங்கங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

அண்ணல் அம்பேத்கா் அரசமைப்பின் உறுப்பு 356-யை (தேவையற்ற வாா்த்தை) என்று வா்ணித்தாா். மக்களால் தோ்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களுக்கு எதிராக இவ்வுறுப்பு உள்ளதை அவா் கசப்புடன் ஏற்றுக்கொண்டாா்.

**வெங்கட செல்லையா குழு:**

பிரதமா் அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய மக்களாட்சிக் கூட்டணி அரசாங்கம் 2000 – ஆம் ஆண்டு நீதியரசா் நாராயணராவ் வெங்கடசெல்லையா தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இந்த அரசமைப்பு மதிப்பாய்வு தேசிய குழு (NCRWC) அரசமைப்பில் பல சீா்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் எனக் கூறியது.

## அலகு– 6

## இந்தியாவில் நிா்வாக அமைப்பு

**சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்திய நிா்வாக அமைப்பின் பரிணாமம்:**

நவீன இந்தியாவின் நிா்வாக அமைப்பின் தொடக்கம் காலனிய காலத்திலேயே தொடங்குகிறது. இந்தியாவில் காலனி ஆட்சியிலும் 1773-ஆம் ஆண்டு வரை முறையான நிா்வாகம் இருந்தது இல்லை. முகலாயப் பேரரசரின் அல்லது நவாப்களின் முகவா்களாகவே கிழக்கு இந்திய கம்பெனி செயல்பட்டு வந்தது. வருவாய் விவகாரங்களை நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் உள்ளூா் துணைப் பணியாளா்களை கொண்டு நிா்வகித்தாா்கள். இராணுவ மற்றும் காவல் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து வந்தனா். பெரும்பான்மையான அதிகாரிகள் வந்தனா். பெரும்பான்மையான அதிகாரிகள் கல்வியறிவு அற்றவா்களாகவும், போதிய அனுபவம் மற்றும் பயிற்சி பெறாதவா்களாகவும் இருந்தனா்.

அவா்கள் வெளிநாட்டு அதிகாரிகள் என்பதால் உள்ளூா் மக்கள் மீது மரியாதையின்றியும், இரக்கமற்ற முறையிலும் நடந்த கொண்டனா் அவா்கள் எந்த சட்டமன்றத்திற்கும் பதிலளிக்க வேண்டியதில்லை என்பதால், ஊழல் மற்றும் முறைகேடுகள் அன்றாட நடவடிக்கைகள் ஆயின. ஆங்கில நாடாளுமன்ற உறுப்பினா் எட்மண்ட் பா்க், நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு இப்பிரச்சனையைக் கொண்டு சென்றாா். பெரும் விமா்ச்சனங்களுக்குப் பிறகு,1773 ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் தொடா் சாசனங்கள் மூலம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் கிழக்கிந்திய கம்பெனியின் இந்திய நிா்வாகம் கொண்டுவரப்பட்டது. இயக்குநா்கள் குழு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியன நாடாளுமன்றம் மற்றும் பிரிட்டிஷ் அமைச்சரவையின் கீழ் கொண்டுவரப்பட்டன. எனவே, இந்தியாவில் உள்ள கிழக்கிந்திய கம்பெனி நிா்வாகங்கள், ஒழுங்குபடுத்தப்பட்டு நாடாளுமன்றத்திற்குப் பதில் சொல்லும் நிலை உருவாக்கப்பட்டது.

அதன் பின்னரே இந்தியாவிற்கான ஆங்கில அதிகாரிகளுக்கு ஹெய்லிபிரி கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டது. உயர் அதிகாரி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒப்பந்தப் பணி உறுப்பினர்களாக அறியப்பட்டனர். அவர்கள் கவர்னர் ஜெனரல் மற்றும் ஆளுநர்களுக்கு நிர்வாக ரீதியிலும் உதவினார்கள். இந்தியர்கள் நடுநிலை பணியாளர்களாகவும் தொலைதூரப் பணிகளுக்கும் நியமிக்கப்பட்டனர். உள்நாட்டுப் பழக்க வழக்கங்களில் கம்பெனி தலையிட விரும்பவில்லை. இதன் மூலம் மக்கள் ஆதரவைப் பெற விரும்பியது. நடுநிலைப் பணிகளுக்கும் தொலை தூரப்பணிகளுக்கும் அப்பகுதிகளின் நடுநிலை, கீழ்நிலை சாதியினர் நியமிக்கப்பட்டனர்.

1840-ஆம் ஆண்டு வரை பாரசீக மொழியே அலுவல் மொழியாக இருந்து வந்தது. ஆங்கில மக்கள் எல்லா உயர் பதவிகளிலும் ஏகபோக உரிமையாளர்களாக தங்களை வைத்துக்கொண்டு இங்கு உள்ள மேன்மக்களை கீழ்மட்ட அலுவலகத்தில் அமர்த்திக் கொண்டனர்.

இந்தியர்களையும் உயர் பதவிகளில் அமர்த்துவதற்கான தேவைகளும் மெதுவாக எழுந்தன. ஐரோப்பிய மாதிரி கல்வி மற்றும் ஆங்கில மொழிவழிக் கல்வி அறிமுகம் மெக்காலே முறையில் இந்தியர்கள் கல்வி கற்க தூண்டியது. ஆங்கிலக் கல்வி கற்பதன் மூலம் உயர் பதவிகளில் பணியாற்ற விரும்பினர். 1858-ஆம் ஆண்டில் இந்திய நிர்வாகத்தை முடியாட்சி ஏற்ற பின்பு, இந்திய ஆட்சி முறை மாற்றியமைக்கப்பட்டு இந்திய உயர்மட்ட நிர்வாகிகள் நீதித்துறை பணியாளர்கள் இந்தியக் குடிமைப் பணி போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டனர். மிகச் சிறந்த பிறப்புரிமையுள்ள உயர்ச் சாதி இந்தியர்கள் தங்களுக்கும் இந்திய குடிமைப்பணி தேர்வில் கலந்து கொள்ள வயது வரம்பை தளர்த்த வேண்டும் என்றும் குடிமைப் பணி தேர்வுகள் இந்தியாவிலேயே நடத்தப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். இவையெல்லாம் இந்திய தேசிய இயக்கத்தின் தொடக்க காலக் கோரிக்கைகள்.

இந்திய அரசாங்கச் சட்டம் 1919- நிறைவேற்றப்படும்வரை, இந்தியர்களால் உயர்ந்த ஆட்சித்துறை பதவிகளை அடைய முடிவில்லை. இரட்டை ஆட்சிச் சட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாற்றப்பட்ட துறைகள் வழங்கப்பட்டன. ஆனால் ஆட்சித்துறை அதிகாரிகள் தொடர்ந்து ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். இந்த காலகட்டத்தில், சிறு பணிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதைத் தொடர்ந்து அரசுப் பணிக்கு பொதுப் பணி தேர்வு ஆணையம் அமைப்பது குறித்துச் சிந்திக்கத் தொடங்கினர். இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு, பணிகள் சீர்திருத்தப்பட்டன. இந்தியக் குடிமைப் பணிக்கு (ICS) பதிலாக இந்திய ஆட்சிப் பணி (IAS இ.ஆ.ப) கொண்டுவரப்பட்டது. இதன் மூலம், நிர்வாகப் பணிகள் அரசுப் பணிகள் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கும் முறை அடிப்படையானது.

**சுதந்திரத்திற்கு பிந்தைய இந்தியாவில் நிர்வாக அமைப்பு:**
இந்திய நிர்வாகத்தின் பணிகள் மற்றும் பொறுப்புகளில் சுதந்திர இந்தியாவில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சட்டம் இயற்றும் அமைப்புகளுக்கும், அமலாக்கம் செய்யும் அமைப்புகளுக்கும் பதில் சொல்லவும், பொறுப்பேற்கும்படியும் செய்தது. இந்திய அரசாங்கம் ஒரு மக்கள் நல அரசை விரும்பியதனால் அதனுடைய நிர்வாக பொறுப்புகள் பன்மடங்கு அதிகரித்தது.

ஜவஹர்லால் நேருவின் தலைமையின் கீழ் உருவான புதிய அரசு, மக்களாட்சி சமதர்மம் அமைப்பைத் தேர்ந்தெடுத்து, சமத்துவம், நவீனமயமாக்கல் போன்றவற்றை அடைய "கலப்பு பொருளாதாரத்தை" அறிமுகப்படுத்தியது. மக்களாட்சி முறை மற்றும் சமதர்மம் முறை இரண்டினையும் உறுதிப்படுத்த "கலப்பு பொருளாதாரத்தை" தேர்வு செய்தது. அடிப்படை தொழில்துறைகள் (எ்.கு மற்றும் இரும்பு போன்றவை) அரசுத் துறை மூலமாக வளர்ச்சியடைந்தது. நடுத்தர தொழில்கள், போக்குவரத்து, விமான போக்குவரத்து ஆகியவற்றில் தனியார் துறை ஈடுபட அனுமதிக்கப்பட்டது. ஒவ்வொரு திட்டத்திலும் இலக்குகளை அடைய நிர்வாக அமைப்பு மேன்மேலும் அதிகரிக்க வேண்டியிருந்தது. முதல் மூன்று "ஐந்தாண்டு திட்டம்" மிகப்பெரிய பலன்களை அளித்தன. ஆனால், அதன் பிறகு முதலாளித்துவம் குழுமங்களாக மாறிப் பெரும் வெற்றி பெற்றன.

சோவியத் மற்றும் இதர சோசியலிச நாடுகள் பின்னடைவு அடைந்தன. 1990-களில் ஏற்பட்ட புதிய சவால்களை எதிர்கொள்ள இந்தியா உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கையைப் பின்பற்றியது. இந்திய நிர்வாக அமைப்புத் தன்மை

மாற்றிக்கொண்டுள்ளது ஊழல் பெரும் பிரச்சனையாக இருந்தது. உயர்மட்டங்களில் ஊழலும், ஊழல்வாதிகளும் அதிகமாகக் காணப்பட்டாலும், நமது பொருளாதார முறையில் தவறேதும் கிடையாது. நேரு காலத்துக்கு முன்பும் இது போன்ற ஊழல்கள் காணப்பட்டன. தற்போதைய பொருளாதார முறையிலும் காணப்படுகிறது. ஒவ்வொரு நிலையிலும் ஊழல் அதிகாரிகளும் காணப்பட்டாலும், நமது மக்களாட்சி முறையை அதற்கு காரணமாக்க முடியாது.

கணக்கெடுப்பு, கருத்துக்கணிப்பு, குறிப்பிட்ட பிரச்சனைகளுக்காக என காலனி ஆட்சியில் நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதையொட்டி சில துறைகள் உருவாக்கப்பட்டன ஆனாலும், தற்போது விடுதலைக்கு பிந்தைய இந்தியாவில் நிர்வாக அமைப்பில் இருந்தது. நீதித்துறை வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதேபோல் கல்வி, விரிவான நீர்ப்பாசனம், தொற்றுநோய்த் தடுப்பு, மின்மயமாக்கம், பொதுச் சுகாதாரம், சாலை – ரயில்வே போக்குவரத்து வசதிகள் என ஏராளமான மக்கள் நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இந்திய நிர்வாக அமைப்புகள் மூலம் அமலாக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற நிர்வாகத்தின் ஒவ்வொரு திட்டத்திலும் நமது நிர்வாக அமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், ஒரு பயிற்சிபெற்ற, அனுபவமிக்க, நிர்வாகச் செயல்திறன் மிக்க ஒரு அமைப்பை உருவாக்குவதில் பின்னடைவு இருந்தது. இதற்கான மேம்பாட்டுத்திட்டங்கள் வெற்றி பெறவில்லை. இந்திய நிர்வாக அமைப்பை மனிதநேயமிக்க, நவீன, மக்களாட்சி மையப்படுத்தப்பட்ட அமைப்பாக மாற்றும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் கால மாற்றத்துக்கு ஏற்ற நிர்வாக அமைப்பை உருவாக்க முடியும். மக்களாட்சி முறையில் நிர்வாக அமைப்பானது விமர்சனத்திற்கும் நீதித்துறையின் கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டதல்ல. அதே நேரத்தில் தேவையற்ற அரசியல் தலையீட்டையும் தவிர்த்தல் வேண்டும். கட்டுப்பாடுகள், சமநிலைப்படுத்தல் மூலம் மேலான நிர்வாகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதே சமயம் நாட்டுக்கு வெளியே இருந்துவரும் அச்சுறுத்தல்கள், நாடுதாண்டிய அழுத்தங்களில் இருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் அரசமைப்பானது மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பையே வழங்குகிறது. அரசு வகைமைகளில் பணியாளர் இரண்டு உயர்நிலை நிர்வாகங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஒன்று மத்திய அரசு நிர்வாகம், இரண்டு மாநில நிர்வாகம் நிர்வாகப் பணிகள் அனைத்தும் மத்திய அரசின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்டவைகள். தாராளமயமாக்கல் என்பதன் பொருள், அதிகாரவர்க்கம் அதிக வேலைப்பளுவில் இருந்து விடுபடும் என்பதல்ல. மாறாக, தனியார் துறை மீதான அரசுக் கட்டுப்பாடுகளைக் குறைப்பதாகும். அதேநேரத்தில் கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை அமலாக்கம் ஆகியவற்றில் அண்மைக்காலத்தில் அதிகம் மையப்படுத்தும் போக்கினை நாம் காண்கிறோம். மக்களாட்சி சமதர்மம் மற்றும் கலப்புப் பொருளாதார அமைப்புக்காக பணியாற்றிய இந்திய நிர்வாக அமைப்பின் கரங்களில் தற்போது அதிக தனியார்மயமாக்கத்துக்காகவும் மேலும் அதிக மையப்படுத்தப்பட்ட வரி அமைப்புக்காகவும் பணியாற்றும் பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. இப்புதிய ஏற்பாடே தற்போது புதிய அரசு மேலாண்மை (என்.பி.எம்) என அழைக்கப்படுகிறது.

இந்தியாவில் நிர்வாக அமைப்பு மாறிவரும் பொருளாதார கட்டமைப்பிற்கு ஏற்றவாறு தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். இந்தியப் பொருளாதாரம் புதிய தனது உள்நாட்டு சந்தையை உள்ளூர் தனியார் நிர்வனங்களுக்கும் பன்னாட்டு நிர்வனங்களுக்கும் திறந்துவிட வேண்டும். வணிகம் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், அரசு முதலீடுகளை திரும்பப் பெறுதல், வரிவிதிப்பை மையப்படுத்துதல், மானியங்கள் நீக்க நடவடிக்கை போன்றவற்றில் இந்திய நிர்வாக அமைப்பு ஈடுபட வேண்டும். தனியார்மயமாக்கலின் எதிரொளியாக சுரங்கம், துறைமுகம், பெட்ரோலியம், விமான போக்குவரத்து போன்றவை அமைப்பு ரீதியாக குழுமமையமாக்கப்பட்டுள்ளன. அன்னிய முதலீட்டுக்காக பன்னாட்டு நிர்வனங்களையும், உள்நாட்டு தனியார் முதலீடுகளையும் எல்லாம் சேர்த்துள்ளது. மேலும் இந்திய அதிகாரவர்க்கம் சர்வதேச

முதலீட்டுக்காக பன்னாட்டு நிர்வனங்களையும், உள்நாட்டு தனியார் முதலீடுகளையும் எல்லாம் சேர்த்துள்ளது. மேலும் இந்திய அதிகாரவர்க்கம் சர்வதேச அமைப்புகளான உலக வங்கி, உலக வர்த்தக அமைப்பு மற்றும் சர்வதேச நிதி ஆணையம் போன்றவற்றின் வழிகாட்டுதலையும் பின்பற்ற வேண்டியுள்ளது.

**இந்த வழிகாட்டுதலின்படியே கீழ்க்கண்ட ஒழுங்குமுறை ஆணையங்கள் இந்தியாவில் உருவாக்கப்பட்டன. அவை**

1. இந்தியக் காப்பீடு மற்றும் ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை (IRDA)
2. இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI)
3. இந்தியப் போட்டிகள் ஆணையம் (CCI)
4. ஓயவூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA)
5. இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

மேலும் புதிய ஒழுங்குமுறை ஆணையங்களை உள்கட்டமைப்பு, சுரங்கம் ஆகிய துறைகளில் தொடங்கவும் ஆலோசனைகள் நடந்து வருகின்றன. இவ்வகையான சீர்த்திருத்தங்கள் வரி நிர்வாகத்திலும் தொடர்கின்றன. உதாரணமாக, மதிப்புக் கூட்டுவரி (VAT) மற்றும் பொருள்கள் மற்றும் சேவை வரியை (GST) குறிப்பிடலாம். இந்த நடவடிக்கைகளுக்கு தொழில் துறை மற்றும் சந்தையில் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு வளர்ச்சியின் அறிகுறிகளைக் காட்டின. இதிலிருந்து பொருளாதார சீர்திருத்தம் மாற்றத்தின் அறிகுறி என நம்பப்பட்டது. இம்முயற்சிகளின் பலனாக தொழில்துறை வளர்ந்தது. சந்தை மேம்பட்டது. பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்தது. பொருளாதார சீர்திருத்தம் நல்ல விளைவுகள் அளிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. மேற்கூறிய முயற்சிகளால் இந்தியாவில் கடந்த 20 வருடங்களில் 300 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். தற்போதைய காலகட்டத்தில் உயர்மட்ட அதிகாரிகள் அதிக அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். இதற்கு அவர்களின் அதிகார மோகம் காரணமல்ல. நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அவை தேவைப்பட்டன. தொழில்நுட்ப முன்னேற்றம், பெரும் அளவில் அதிகாரப்பரவலாக்கம், சமூக செயல்பாட்டு முறை ஆகியவற்றால் இவை நிறைவேற்றப்பட்டன. இவற்றின் விளைவுகளை மேலும் சிறந்த சேவைகள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, சட்டத்தின் ஆட்சி ஆகியனவற்றை மக்கள் எதிர்பார்ப்பதில் இருந்து அரசு உணர்ந்தது. இருந்தாலும், குடிமைப் பணி அதிகாரிகளை நிர்வாகத்திறன் அற்ற கூடுதல் சுமையாகவே மக்கள் கருதினர். தகவல் உரிமைச்சட்டம், குடிமக்கள் சாசனம், சமூகத்தணிக்கை போன்றவற்றால் கூடுதல் பொறுப்புகளும், கடமைகளும் உருவாக்கப்பட்டு குடிமைப் பணி அலுவலர்கள் மக்களுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாகியுள்ளனர்.

**அமைச்சகம், துறைகள், வாரியங்கள் மற்றும் ஆணையங்கள்**

**ஒன்றிய அரசு அமைச்சகம் / துறைகள்**

ஒன்றிய தலைமை செயலகம் என்பது இந்தியாவிற்கான கொள்கைகள் உருவாக்கும் முக்கிய அமைப்பாகும். மத்திய தலைமை செயலகம் என்பது பல அமைச்சகங்களையும் துறைகளையும் உள்ளடக்கியது ஆகும். இவையனைத்தும் அவற்றின் செயல்பாடுகள் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

**அமைச்சகத்தின் கட்டமைப்பு:**

மத்திய அரசாங்கத்தின் அமைச்சகம் மூன்று அடுக்குகளை கொண்டது.

1. **அரசியல் தலைமை:**
   அமைச்சகத்தின் அரசியல் தலைமை என்பவர் கேபினட் அமைச்சராகவோ, துணை அமைச்சராகவோ இருக்கலாம். சில நேரங்களில் தனிப் பொறுப்பு கொண்ட துணை அமைச்சராகவும் இருப்பர்.

2. **செயலகம் (Secretariat):**
   இதன் தலைவர் செயலாளராக இருப்பார் இவர் குடிமைப் பணி சார்ந்த அதிகாரியாவார். செயலாளருக்கு உதவி புரிய இணைச் செயலர், கீழ் நிலைச் செயலர், துணைச் செயலர் போன்றோர் இருப்பர்.

3. **நிர்வாக அமைப்பு (Directorate):**

இதன் தலைவர் இயக்குநர், தலைமை இயக்குநர், தலைமை ஆய்வாளர் (ஐ.ஜி) ஆணையர் மற்றும் தலைமை கட்டுப்பாட்டாளர் போன்ற பெயர்களால் அழைக்கப்படுவர்.

ஒவ்வொரு அமைச்சகமும் பல துறைகளாக பிரிக்கப்படும். ஒவ்வொரு துறையும் பல தொகுதியாக பிரிக்கப்படும். தொகுதி பகுதிகளாக பிரிக்கப்படும் பகுதிகள் கிளைகளாக பிரிக்கப்படும், கிளைகள் பிரிவுகளாக பிரிக்கப்படும்.

| |
|---|
| துறை (செயலாளர்)<br>தொகுதி (இணைச் செயலாளர்)<br>பகுதி (துணைச் செயலாளர்)<br>கிளை (கீழ்நிலைச் செயலாளர்)<br>பிரிவு (பிரிவு அலுவலர்) |

இந்திய அரசு அலுவல் விதிகள் 1961-இன்படி, அமைச்சகமும் துறைகளும் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

**மத்திய தலைமைச் செயலகம்:**

மத்திய ஆட்சியின் அனைத்து அமைச்சகம் மற்றும் துறைகளின் ஒட்டுமொத்த தொகுப்பே மத்திய தலைமைச் செயலகம் என்று அழைக்கப்படுகிறது. அரசமைப்பின் உறுப்பு 7 இன் படி குடியரசுத்தலைவர் பல்வேறு அமைச்சகத்திற்கு பணியை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

1. அமைச்சர்களின் கொள்கையாக்கம் மற்றும் நாடாளுமன்றச் செயல்பாடுகளில் உதவி புரிதல்
2. சட்டங்கள் வரைதல், விதிகள் மற்றும் கொள்கைகளின் செயல் முறைகள்
3. திட்டமிடல், திட்ட உருவாக்கம்
4. அமைச்சகத்தின் செலவினங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை சார்ந்த பணிகள்
5. கொள்கைகள் மற்றும் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடுதல் கட்டுப்படுத்துதல்.
6. அமைச்சகம் மற்றும் துறை பணியாளரின் பணிகளை மேமம்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.
7. அமைச்சகத்தின் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து மேற்பார்வையிடல் மற்றும் மாநில நிர்வாகத்துடன் தொடர்பில் இருத்தல்.

**மத்திய அரசு அமைச்சகங்கள் / துறை:**

1. **விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்:**
   - ❖ விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வி துறை
   - ❖ விவசாயம், ஒத்துழைப்பு மற்றும் விவசாயிகளின் நலத்துறை
   - ❖ கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை
2. **ஆயுஷ் அமைச்சகம், இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகம்**
   - ❖ இரசாயனம் மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ் துறை
   - ❖ உரத்துறை
   - ❖ மருந்துகள் துறை
3. **உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம், நிலக்கரி அமைச்சகம், வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம்**

❖ வர்த்தகத் துறை
❖ தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்பு துறை

4. **தொடர்பு அமைச்சகம்**
❖ தபால் துறை
❖ தொலைத்தொடர்பு துறை

5. **நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்:**
❖ நுகர்வோர் விவாகரத் துறை
❖ உணவு மற்றும் பொது விநியோகத் துறை

6. **பொதுநிறுவன விவகார அமைச்சகம், கலாச்சார அமைச்சகம் பாதுகாப்பு அமைச்சகம்:**
❖ பாதுகாப்புத் துறை
❖ பாதுகாப்பு தயாரிப்புத் துறை
❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறை
❖ முன்னாள் ராணுவத்தினர் நலத்துறை

7. **வட கிழக்கு மண்டல மேம்பாட்டு அமைச்சகம், குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம், புவியியல் அமைச்சகம்:**
❖ இந்திய வானியல் துறை

8. **உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகம், சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்:**
❖ சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை
❖ சுகாதார ஆராய்ச்சி துறை, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை

9. **மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், வெளிவிவகார அமைச்சகம், நிதி அமைச்சகம்:**
❖ பொருளாதாரம் துறை
❖ செலவுத் துறை
❖ நிதி சேவைகள் துறை
❖ முதலீட்டு மற்றும் பொது சொத்து மேலாண்மைத் துறை

10. **கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை அமைச்சகம்:**
❖ கனரகத் தொழிற்துறை
❖ பொது நிறுவனங்கள் துறை வருவாய்த் துறை

11. **சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம், சுரங்கங்கள் அமைச்சகம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்,நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சகம், பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகம்**
❖ நிர்வாக சீர்திருத்த மற்றும் பொது குறைபாடுகள் துறை (DARPG)
❖ ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் நலத்துறை
❖ பணியாளர் மற்றும் பயிற்சித் துறை

12. **பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், மின்வலு அமைச்சகம், ரயில்வே அமைச்சகம், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம்**

❖ கனிம வளங்கள் துறை
❖ கிராம மேம்பாட்டுத் துறை

13. **அணு சக்தி துறை விண்வெளித்துறை**

14. **அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்**
   - ❖ பயோடெக்னாலஜி துறை (DBT), இந்திய அரசு
   - ❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST)
   - ❖ அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறை (DSIR)

15. **உள்நாட்டு விவகார அமைச்சகம் நிறுவனக் கட்டமைப்பு:**
   - ❖ மத்திய ஆயுதப்படை
   - ❖ மத்திய போலீஸ் அமைப்பு
   - ❖ எல்லை மேலாண்மைத் துறை
   - ❖ வீட்டுவசதித் துறை
   - ❖ உள்நாட்டு பாதுகாப்புத் துறை
   - ❖ ஜம்மு மற்றும் காஷ்மீர் விவகாரத் துறை (ஜம்மு மற்றும் காஷ்மீர்)
   - ❖ அதிகாரபூர்வ மொழித் துறை
   - ❖ மாநிலங்கள் துறை

16. **தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்ச சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்.**

17. **நுகர்வோர் விவகாரங்கள். உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்**

18. **கப்பல் அமைச்சகம் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முயற்சி அமைச்சகம் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்**
   - ❖ குறைபாடுகள் கொண்ட நபர்களின் அதிகாரமளித்தல் துறை
   - ❖ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை

19. **புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இரும்பு அமைச்சகம் ஜவுளி அமைச்சகம் சுற்றுலா அமைச்சகம் பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம் நீர்வள ஆதார, நதி அபிவிருத்தி மற்றும் கங்கா புத்துணர்வு அமைச்சகம் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்கம்**
   - ❖ விளையாட்டு துறை
   - ❖ இளைஞர் விவகாரங்கள் துறை

20. **வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் மனித வள மேம்பாட்டு அமைச்சகம்**
   - ❖ உயர் கல்வித் துறை
   - ❖ பள்ளி கல்வி மற்றும் எழுத்தறிவு துறை

**உள்துறை அமைச்சகம் நிர்வாகக் கூட்டமைப்பு**

**இணை அமைச்சர்** **துணை அமைச்சர்** **இணை அமைச்சர்**

**உள்துறை செயலாளர்**

1. உள்துறை
2. உள்நாட்டு பாதுகாப்புத் துறை
3. மாநிலங்கள் துறை
4. செயலாளர் அலுவல் மொழி
5. அலுவல் மொழித் துறை
6. ஜம்மு மற்றும் காஷ்மீர் வெளியுறவுத் துறை

சிறப்புச் செயலாளர்கள்

↓
இணைச் செயலாளர்கள்
↓
இயக்குநர்கள்
↓
துணைச் செயலாளர்கள்
↓
கீழ்நிலைச் செயலாளர்கள்
↓
வகுப்பு III மற்றும் IV பணியாளர்கள்

| ஒன்றியப் பட்டியல் | மாநிலப் பட்டியல் | பொதுப் பட்டியல் |
|---|---|---|
| தேசிய முக்கியத்துவம் கொண்டவை | உள்ளூர் மற்றும் மாநில முக்கியத்துவம் பெற்றவை | மத்திய மற்றும் மாநிலம் ஆகிய இருவருக்கும் பொதுவானப் பட்டியல் உள்ளது. |
| மத்திய அரசு மட்டும் சட்டங்களை உருவாக்க முடியும் | மாநில அரசு மட்டும் சட்டங்களை இயற்ற முடியும் | மத்திய மற்றும் மாநில அரசு சட்டங்களை சட்டப்பூர்வமாக்கலாம் |
| பாதுகாப்பு, வங்கி, பொதுவாக, வெளியுறவு மற்றும் தொடர்பு | காவல், வர்த்தகம், வணிகவியல், விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் | கல்வி, முதலீடு தொழிற்சங்கம் திருமணம், தத்தெடுப்பு மற்றும் வாரிசு |

**அமைச்சரவைச் செயலகம் (Cabinet Secretariat):**
**பணிகள்:**

அமைச்சரவைச் செயலகம் பிரதமரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இதன் நிர்வாகத் தலைவர் அமைச்சரவை செயலாளர் (Cabinet Secretary)ஆவார். அவரே இந்தியக் குடிமைப் பணி அலுவலர்களின் தலைவராக கருதப்படுகிறார். இந்திய அரசு (அலுவலகள் ஒதுக்கீடு) 1961 சட்டப் படி அமைச்சரவைச் செயலகத்தின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

**அமைச்சரவை செயலகத்தின் அமைப்பு முறை:**

**அமைச்சரவை செயலகத்தின் மூன்று முக்கிய பிரிவுகள்:**
1. குடிமைப் பிரிவு 2. இராணுவப் பிரிவு 3. நுண்ணறிவுப் பிரிவு

**குடிமைப் பிரிவு:**

இப்பிரிவே மத்திய அமைச்சரவைக்கு ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்குகின்றன.

**இராணுவப் பிரிவு:**

இப்பிரிவு அமைச்சரவையின் இராணுவக் குழு செயலக உதவிகளை வழங்குகின்றது.

**நுண்ணறிவுப் பிரிவு:**

இப்பிரிவு அமைச்சரவையின் கூட்டுப் புலனாய்வுக் குழு சார்ந்த செயல்பாடுகளை கையாளுகின்றது.

**பிற அமைப்புகள்:**

ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு (RAW), பாதுகாப்பு இயக்குநர், சிறப்பு பாதுகாப்புக் குழு (SPG), கூட்டு நுண்ணறிவுக் குழு இயக்குநர், பொதுமக்கள் குறைகள் டி.ஜி.பி. (1998), தேசிய ஆணையம், இராசயன ஆயுத ஒப்பந்தங்கள்.

**பள்ளிக் கல்வித்துறை – நிர்வாக பொதுப் பட்டியல்**

↓

**மனிதவள மேம்பாட்டு துறை**

தேசிய அளவில்

**மனிதவள மேம்பாட்டு துறை (MHRD): கொள்கைகள்**

↓

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (ஊேநுசுவு):
பாடத்திட்டம், பாடநூல்கள் மற்றும் பணியில் உள்ள – ஆசிரியர் பயிற்சிகள்

↓

தேசிய சான்றிதழ் இடைநிலைக் கல்வி (CSE)

↓

மத்திய இடைநிலை கல்வி வாரியம் (CBSE)

**மாநில அளவில் - பள்ளிக் கல்வித்துறை**
**பள்ளிக்கல்வித்துறை**

ஆசிரியர் தேர்வு வாரியம்
பதின்மப் பள்ளிகளின் இயக்குநகரம்
தொடக்க கல்வி இயக்குநரகம்
அரசு தேர்வு இயக்குநகரம்
பள்ளிக் கல்வி இயக்குநகரம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
முறைசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி
பொது நூலகங்கள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

சமக்கிரா சிக்ஷா மாநிலத் திட்ட அலுவலகம் (SPD)

**மாவட்ட அளவில்**

↓

முதன்மைக் கல்வி அலுவலகம் (CEO)
↓
மாவட்ட கல்வி அலுவலகம் (DEO)
↓
வட்டாரக் கல்வி அலுவலகம் (BEO)
↓
தலைமை ஆசிரியர் (HM) பள்ளி

மாவட்ட கல்வி ... நிறுவனம் (DIET)
↓
ஒருங்கிணைந்த கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
↓
அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (GTTI)

... அலுவலகம் (DPO)
↓
உதவித் திட்ட அலுவலகம் (APO)
↓
வட்டார வள மையம் (BRC)
↓
குறு வள மையம் (CRC)

தலைமைச் செயலகமானது இந்திய அரசாங்கச் சட்டம் (அலுவல் பரிமாற்றம்) 1961 விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்புடையது. இச்செயலகம் அரசு கொள்கை முடிவு எடுப்பதில் அமைச்சகத்திற்கிடையேயான ஒருங்கிணைப்பு ஏற்படுத்துதல், அமைச்சகங்கள் / துறைகள் இடையே

காணப்படும் வேறுபாடுகளைக் களைதல், செயலக நிலைக் குழுக்கள் / தற்காலிகக் குழுக்கள் மூலம் ஒருமித்த கருத்து உருவாக்குதல் ஆகிய வழிகளில் அமைச்சரவைச் செயலகம் அரசுக்கு உதவுகிறது. நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் காலங்களில் மேலாண்மை செய்தல், அத்தகைய காலங்களில் பல்வேறு அமைச்சரகங்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியனவும் அமைச்சரவைச் செயலகப் பணிகள் தாம்.

**அமைச்சரவைக் குழுக்களுக்கு ஆதரவு:**

அமைச்சரவைச் செயலகம், அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்களுக்கு கீழ்காணும் உதவிகளை நல்கிறது.

- பிரதமரின் ஆணைப்படி, அமைச்சரவை மற்றும் அரச்சரவைக் குழுக்களின் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- கூட்ட நிரல்களை முடிவு செய்து சுற்றுக்கு அனுப்புதல்
- கூட்டப்பொருள் தொடர்பு கோப்புகளை தயார் செய்து சுற்றுக்கு அனுப்புதல்.
- பிரதமரின் ஒப்புதலுக்குப் பின் கூட்ட விவாதங்களைத் தொகுத்தல் சுற்றறிக்கையாக அனுப்புதல்.
- அமைச்சரவை மற்றும் அதன் குழுக்கள் எடுத்த முடிவுகள் நடைமுறைப் படுத்துவதை மேற்பார்வையிடுதல்.
- அமைச்சரவைக் கூட்ட ஆவணங்களை அமைச்சரவைச் செயலகப் பாதுகாப்பில் பராமரித்தல்

**அமைச்சரவைச் செயலாளர்:**

இந்தியாவில் அமைச்சரவைச் செயலாளர் அலுவலகம் பதவியானது 1950-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தியாவின் முதல் அமைச்சரவை செயலாளர் என்.ஆர். பிள்ளை ஆவார். அமைச்சரவை செயலரே அமைச்சரவை செயலகத்தின் தலைவர் ஆவார். இந்திய குடிமைப் பணிகளில் அமைச்சரவை செயலர் பதவியே உயரியது. இதனால் குடிமைப் பணி அலுவலர்கள் மத்தியில் இவரே முதன்மையானவர்.

**மத்திய அரசு – உயர்மட்ட நிர்வாகம்:**

- குடியரசுத்தலைவர்
- துணைக் குடியரசுத்தலைவர்
- அமைச்சரவைச் செயலகம்
- இந்தியத் தேர்தல் ஆணையம்
- ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம்
- தேசிய மனித உரிமைகள் ஆணையம்
- இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி)
- இந்தியக் கணக்கு தணிக்கை துறை
- இந்தியக் கணக்கு தணிக்கை துறை
- நிதி ஆயோக்
- தேசிய மகளிர் ஆணையம்
- தேசிய பழங்குடி மக்கள் ஆணையம்
- பதினைந்தாவது நிதி ஆணையம்
- சிறுபான்மையோர் தேசிய ஆணையம்
- காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்
- முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆணையம்

**பிரதமர் அலுவலகம் (PMO):**

பல்வேறு வகை ஆதார அலுவலர்கள் பிரதமருக்கு அறிக்கைகள் அளிக்க வேண்டியுள்ளதால், பிரதமர் அலுவலகம் என்பது அவரின் கீழ் பணிபுரியும் அத்தகைய பல்வேறு அலுவலர்களை உள்ளடக்கியது. பிரதமர் அலுவலகம் முதன்மைச் செயலரின் கீழ் செயல்படுகிறது. 1977 ஆம் ஆண்டு வரை பிரதமர் அலுவலகம் பிரதமரின் செயலகம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் மொரார்ஜி தேசாய் காலத்தில் பிரதமர் அலுவலகம் என்று மாற்றப்பட்டது.

**தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம்:**

தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நவம்பர் 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவற்றின் பணிகள்:

- ❖ படைப்பாக்க செயல்பாடுகள் மற்றும் பன்முனைச் செயல்பாடுகளுக்கான ஆதார அமைப்புகளை உருவாக்கும் வகையில் அறிவியல்சார் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் உத்திகளை உருவாக்குவது.

- ❖ அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழில் அமைப்புகளுடன் இணைந்து உள்கட்டமைப்பு பொருளாதார மற்றும் சமூகம் போன்ற முக்கியத் துறைகளில் அறிவியல் தொழில்நுட்ப இலக்குகளை நிர்ணயித்தல்.

- ❖ பிரதமரின் அறிவியல் தொழில்நுட்ப ஆலோசனை குழுவிற்கும் தனது பங்களிப்பை வழங்குதல்.
- ❖ தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நிர்வாக ரீதியாக ஆகஸ்ட் 2018 முதல் அமைச்சகச் செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பிரதமர் அலுவலகம் பிரதமருக்கு செயலக ரீதியான உதவிகளை வழங்குகின்றது. இதன் தலைவர் பிரதமரின் முதன்மைச் செயலர் ஆவார். பிரதமர் அலுவலகம் ஊழல் எதிர்ப்பு பிரிவு மற்றும் பொதுமக்கள் குறை கேட்டல் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியது. செயலர் ஆவார். பிரதமர் அலுவலகம் ஊழல் எதிர்ப்பு பிரிவு மற்றும் பொதுமக்கள் குறை கேட்டல் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியது. இவ்வலுவலகம் பிரதமர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில குடிமைப் பணி அலுவலர்கள் துணையுடன் அரசை ஒருங்கிணைக்கின்றது. மேலும், பிரதமர் பிரதம அலுவலக உதவியுடன் தான் அனைத்து அமைச்சகங்கள், ஆளுநர்கள் மற்றும் மாநிலங்களுடன் ஆலுவல்பூர்வ தொடர்பில் இருக்கிறார்.

**பணியாளர் நிர்வாகம்**
**பணியாளர் நிர்வாகம் - கருத்துரு:**

அரசின் செயல்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகளின் அதிகரிப்பால் நிர்வாகக் கட்டமைப்பு பெருகிக்கொண்டே இருக்கிறது. இக்காரணிகளினால் ஒவ்வொரு நிலைகளிலும் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாளர்களின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பணியாளர் நிர்வாகத்தின் முக்கியப் பணி என்பது தொடர்ந்து ஒரு நிறுவனத்திற்குத் தேவையான தொடர்ந்து ஒரு நிறுவனத்திற்குத் தேவையான மற்றும் தகுதி வாய்ந்த பணியாளர்களை வழங்குவதே ஆகும். பணியாளர் நிர்வாகத்தை புரிந்து கொள்வதற்கு அதன் பொருள் மற்றும் தன்மையை அறிந்து கொள்வது மிக அவசியம்.

**பணியாளர் நிர்வாகத்தின் நோக்கங்கள்:**

- ❖ மனித வளத்தை திறம்பட பயன்படுத்துதல்.

- ❖ நிறுவனத்தின் அனைத்து பணியாளர்கள் இடையே ஆக்கபூர்வமான உறவுகளை உறுதி செய்தல்.

- ❖ நிறுவனத்தின் சமூக மற்றும் சட்ட ரீதியான கடமைகளை நிவர்த்தி செய்தல்.

**பணியாளர் நிர்வாகத்தின் பரப்பு மற்றும் எல்லை:**

பணியாளர் நிர்வாகம் என்பது ஓர் அமைப்பில் உள்ள அனைத்து விதமான பணியாளர் மேலாண்மைகளை உள்ளடக்கியது. இதன் அடிப்படை நோக்கம் மனித வளத்தினை திறம்பட பயன்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களைத் திட்டமிட்டபடி அடைவதாகும். பணியாளர் நிர்வாகத்துறை ஓர் அமைப்பில் உறுப்பினர்களுக்கிடையே சரியான வகையில் உறவுகள் மேம்பட கட்டமைப்பை ஏற்படுத்துதல் வேண்டும். மேலும் பணியாளர்களிடையே வேலை செய்வதற்கான உந்துதல் அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் விசுவாசம் போன்ற பண்புகளை வளர்த்தல் வேண்டும். பணியாளர்களின் சுய லாபம், பேராசை தேவையற்ற பகை உணர்வு ஆகியவற்றை அறவே நீக்குதல் வேண்டும். பணியாளர் நிர்வாகம், பணியாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்களிடம் சாதகமாக நடந்து கொள்ளுதல் அவர்களிடம் பரிகாரம் பெறுதல் போன்றவற்றை அறவே ஒழித்தல் வேண்டும்.

**பணியாளர் நிர்வாகத்தின் பணிகள்:**
பணியாளர் நிர்வாகத்தின் முக்கிய பணிகள்.

1. மனித வளத்தை திட்டமிடுதல்
2. பணியமர்த்தல்
3. பயிற்சி அளித்தல்
4. பதவி உயர்வு
5. ஊதிய கட்டமைப்பு
6. பணியாளர் நலம்

**குடிமைப் பணிகள் - பொருள் மற்றும் சிறப்பியல்புகள்:**

சுதந்திரமான, நிலையான பாகுபாடற்ற குடிமைப் பணியின் நல் அம்சங்கள் வருமாறு.

1. நம்பகமான பணியாளர் நியமனத்தில் ஊழல் பேர்வழிகள் மற்றும் சொந்த பந்தங்களை நியமிப்பதை தவிர்க்கின்றது. அழுகிய நிர்வாகத்தில் பாகுபாடுகள், முறைகேடுகள், ஊழல்கள் மலிந்துள்ளன.

2. தற்காலத்தில் கொள்கை உருவாக்கம் என்பது ஆழமான அறிவும், பொது விவகாரத்தில் நிபுணத்துவமும் கோருவதாக உள்ளது. நிரந்தரமான குடிமைப் பணி மூலம் கொள்கை உருவாக்கத்தில் தொடர் நினைவாற்றலும், திறன் கட்டுதலும்ட நிறுவனமயப்படுத்துகிறது.

3. நிரந்தரமான பாகுபாடற்ற குடிமைப் பணியால் மட்டுமே நீண்ட கால சமூக நலன் இலக்குகளை திட்டமிட்டு அடைய முடியும். அரசியல்வாதிகள் பெரும்பாலும் அரசியல் லாபம் கருதி குறுகிய கால சமூக நலன் திட்டத்திற்கே முன்னுரிமை அளிப்பர்.

4. நிலையான குடிமைப் பணி பெரிய நாடுகள் மற்றும் பல்வேறு கலாச்சாரங்கள் உடைய நாடுகளின் ஒருங்கிணைப்பில் முக்கிய பங்களிக்கின்றது. மேலும் நாடு முழுவதும் சீரான பொது நிர்வாகத்தை வழங்க இயலும்.

5. நிலையான குடிமைப் பணி இதர நம்பகத்தன்மை கொண்ட தொழில்கள் போன்றே நாளடைவில் தனது செயல்பாடுகளுக்கு அற ரீதியான நெறிகளை உருவாக்கிக் கொள்ளும்.

**குடிமக்கள் மற்றும் அதிகாரவர்க்கம்:**

மக்களாட்சியின் அடிப்படை முடிமக்களே ஆவர். பண்டையக் காலத்தில் ஒரு நாட்டின் முக்கியப் பணி எதிரிகளிடம் இருந்து எல்லையைப் பாதுகாத்தல், உள்ளாட்சி அமைதி மற்றும் தயார்நிலை என மூன்றடுக்கு கொண்டதாக மட்டுமே இருக்கும். அக்காலக்கட்டத்தில் அதிகாரவர்க்கத்தின் பணிகள் கட்டுக்குள்ளாகவும், வாளின் வலிமை அதிகாரமிக்கதாகவும் இருக்கும். நில உறவுகள் சிக்கலடைந்து ராணுவத்துடன் பெரிய அதிகாரவர்க்கமும் தேவைப்பட்டது. தற்போதைய நவீன காலக்கட்டத்தின் அதிகாரவர்க்கத்தின் பணிகள் மேலும்

பன்மடங்கு அதிகரித்துள்ளன. 20 ஆம் நூற்றாண்டில் பொதுமக்களின் திறன்களுக்கு வாய்ப்பளித்தல், துன்பங்களை நீக்குதல் போன்றவை நாகரிக அரசின் முத்திரைகளாக ஆகின. சுயமரியாதை, சமவாய்ப்புகள், நீதி ஆகியன அதிகாரவர்க்கத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது.

இந்தியா மக்களாட்சி என்ற போதிலும் அதிகமாக மையப்படுத்தப்பட்ட ஒரு அரசு ஆகும். நூறு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டில் மிகக் குறைவான நபர்களே முக்கியமான முடிவுகளை எடுக்கும் நிலையில் உள்ளனர். இவ்வாறான கட்டமைப்பில் பி.எம்., சி.எம்., டி.எம். அறிகுறிகள் இன்னமும் நமது அமைப்பையும் மக்களின் உளவியலையும் ஆட்டிப்படைப்பதாக உள்ளது.

வாக்குக்கும் பொது நலனுக்கும் தொடர்பு இல்லாத நிலை முழுமையாக உருவாகியுள்ளது. தொலைதூர மையப்படுத்தப்பட்ட அரசால் மக்களுக்கு இன்றியமையாத தேவைகளான குடிநீர், சுகாதாரம். கல்வி, உடல் நலம், மின்சாரம், சாலைகள், போக்குவரத்து, வேளாண்மை உற்பத்தி, சந்தை இணைப்பு, கூடுதல் மதிப்பு, திறன் மேம்பாடு உள்ளிட்ட முக்கிய தேவைகளை நிறைவேற்றித் தரும் மன உறுதியோ தகுதியோ இல்லாமல் இருக்கிறது.

மாவட்ட ஆட்சியரே ஆட்சி அதிகாரத்தின் உருவகமாக இருக்கிறார். இதனால் அவ்வப்போது அரசுகள் மாறினாலும் அரசு சேவைகளின் தரத்தில் எவ்வித மாறுதலும் காணப்படவில்லை. அரசியல் என்பது ஆட்சி அதிகார விளையாட்டாகவும் அதிகாரம் என்பது தனிப்பட்ட நலன்களுக்கானதாகவும் மாறியுள்ளது. வாக்கு என்பது விலை கொடுத்து வாங்கத்தக்க நுகர்பொருளாகவோ அல்லது எந்த விளைவுகளும் அற்ற பண்டமாற்றாகவோ மாறிவிட்டது. மக்களாட்சி என்பது அதிகாரத்துக்கான தேர்தல் போட்டி என்பதாகவும், தேர்தல் என்பது மக்கள் நலனுக்கானதாக அல்லாமல் போட்டியிடுவோரின் சுயநலனுக்கானதாகவும் சுருங்கி விட்டது. வரி செலுத்தும் சாமானியர் மூல வளங்களைப் பயன்படுத்தும் வழி வகைகளோ, அதற்கான உரிமைக் குரலோ அற்றவர்களாக உள்ளனர். தொலைவில் அற்றவர்களாக உள்ளனர். தொலைவில் இருந்து இயக்கப்படும் அதிகாரவர்க்கம் தாம் யாருக்காகப் பணியாற்றுகிறதோ அந்த மக்களுக்குக் கடமைப்பட்டதாக இல்லை.

**குடிமைப் பணியினை குடிமக்கள் மையப் பணியாக மாற்றுவதற்கான முக்கிய கொள்கை நெறிகள்:**

1. சட்டத்தின் ஆட்சி
2. நிறுவனங்களை பொறுப்புணர்வும் கடமைப்பாடும் உள்ளவையாக மாற்றுதல்.
3. குடிமக்களின் ஆக்கப்பூர்வ பங்களிப்பு – அதிகாரபரவலாக்குதல் மற்றும் பிரதிநிதித்துவம்
4. வெளிப்படைத்தன்மை
5. குடிமைப் பணிச் சீர்த்திருத்தம்
6. ஆளுகையில் அறநெறி
7. தொடர்ச் சீர்திருத்தம்

**அனைத்து இந்தியப் பணிகள், மத்தியப் பணிகள் மற்றும் மாநிலப் பணிகள்:**

இந்திய நிர்வாக அமைப்பின் தனிச்சிறப்பு என்னவெனில், இப்பணிகள் மத்திய – மாநில அரசுப் பணிகளுக்கும் பொதுவான இந்திய ஆட்சிப் பணி உருவாக்கப்பட்டதாகும். மத்திய,மாநில அரசுகள் இரண்டிலும் இல்லாத நிர்வாகப் பணியாளர்களைக் கொண்டது. இது, இவர்கள் எந்த நேரத்திலும் எந்த அரசுப் பணிக்கும் மாற்றப்படலாம். இந்த அலுவலர்கள் அனைத்து இந்திய அளவில் நியமிக்கப்படுகின்றார்கள். ஆனால், பொது தகுதியும் ஒரே ஊதிய விகிதமும் கொண்டவை. இவர்கள் ஊதியம் மாநிலத்துக்கு மாநிலம் மாறுவதில்லை. ஒரு சீரான உரிமைகள், சன்மானங்கள் என ஒரு சீரான தகுதியுடன் ஒரு சீரான பணி வடிவத்தினைப் பெற்றுள்ளது.

இதர கூட்டாட்சிகள் போன்றே இந்திய அரசமைப்பில் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் எனும் அடிப்படையில் பிரிக்கப்பட்டு தமக்கான அரசுப் பணிகளை நிர்வகித்து வருகின்றன. பாதுகாப்பு, வருமான வரி, அஞ்சல் மற்றும் இரயில் போக்குவரத்து ஆகியத் துறைகள்

மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் வரும். இதற்கான பணியாளர்கள் மத்திய அரசின் கட்டுபாட்டில் வருவர். இதே போன்று, மாநில அரசு தனக்கென தனியான துறைகளைக் கொண்டுள்ளது.

**அனைத்து இந்தியப் பணிகள்:**

அனைத்து இந்தியப் பணிகள் மத்திய மாநில அரசுகளுக்குப் பொதுவாக உருவாக்க வேண்டும் என அரசமைப்பு விதிகள் கூறுகிறது. அனைத்து இந்தியப் பணிகள் சட்டம் 1951 மூலம் அனைத்து இந்தியப் பணிகளுக்கான நியமன விதிமுறைகள் மற்றும் பணி நிலைமை குறித்து மத்திய அரசு விதிமுறைகளை உருவாக்கலாம். தற்போது இந்தியாவில் மூன்று அனைத்து இந்திய பணிகள் உள்ளன. அவைகள் முறையே இந்திய ஆட்சிப் பணி (IAS), இந்தியக் காவல் பணி (IPS) மற்றும் இந்திய வனப் பணி (IFS). இ.ஆ.ப/இ.கா.ப/இ.வ.ப பதவி உயர்வு விதிகளின் படியே அனைத்து இந்தியப் பணிகள் கிளை கடைப்பிடிக்கிறது.

**அனைத்து இந்தியப் பணி விதிமுறைகள் அடிப்படையில் இருவழிகளில் நியமிக்கப்படுகின்றனர்.**

இரண்டு வழிமுறைகளில் அகில இந்தியப் பணிக்கு பணியமர்த்தப்படுகின்றன.

1. நேரடி நியமனம்: ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்தும் குடிமைப் பணிகள் தேர்வுகள் மூலம் செய்யப்படுகின்றது.

2. பணி உயர்வு: அரசுத் துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளை பதவி உயர்வு அடிப்படையில் அனைத்து இந்தியப் பணிக்கு தேர்வு செய்தல்.

**இந்திய ஆட்சிப் பணி (IAS):**

இந்திய ஆட்சிப் பணி என்பது இந்திய குடிமைப் பணியிலிருந்து தோன்றியதாகும். அனைத்து இந்தியப் பணி எனும் அளவில் இறுதியில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வந்தாலும் உடனடியாக அவர்களின் எஜமான் மாநில அரசுதான். இந்த அலுவலர்களுக்கான ஊதியம், ஓய்வூதியம் மாநில அரசால் வழங்கப்படும். ஆனால் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம், அபராதம் விதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடமே உள்ளது. இது, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணைய ஆலோசனையின்படி வழிநடத்தப்படுகிறது. மாநிலப் பிரிவின் எண்ணிக்கை முடிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் பணி நியமனத்தின் போதே மாநிலப் பிரிவுகளாக நியமிக்கப்படுகிறார்கள். இருப்பினும், ஒன்று அல்லது இரண்டு பணிக்காலங்கள் மூன்று முதல் ஐந்து பணிக்காலங்கள் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த மாநிலப் பிரிவு அலுவலர்கள் மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்பட முடியும். பெரும்பாலான அனைத்து இந்தியப் பணியாளர்கள் பணிக்காலத்தில் ஒரு முறையாவது மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்படும் வாய்ப்பு உள்ளது. பலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளும் இவ்வாய்ப்பு கிடைக்கின்றன. மூத்த அதிகாரிகளை செயலகத்துக்கு உள்ளும் வெளியிலும் மாற்றும் நடைமுறை அதிகாரப்பூர்வ நிறுத்தம் என்று அழைக்கப்படுகிறது.

இது மத்திய மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பணியைச் சார்ந்த அதிகாரியின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் மாநில அரசால் வழங்கப்படும். ஆனால், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசணையின் பெயரில் மத்திய அரசால் மட்டுமே எடுக்க முடியும். இவ்வதிகாரிகள் நியமனம் செய்யப்படும் போது, மாநில அடிப்படையில் அவர்களுக்கு பணி ஒதுக்கப்படுகின்றது. மாநிலங்களில் பணிபுரியும் இவ்வதிகாரங்களில் மத்திய அரசியலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதவி (Tenure) காலத்திற்கு பணிபுரியலாம். ஒரு பதவிக்காலம் என்பது மூன்று அல்லது நான்கு அல்லது ஐந்து ஆண்டாக இருக்கலாம்.

இந்திய ஆட்சிப் பணி பன்முகத் தன்மைக் கொண்டது. இப்பணியில் அமர்த்தப்படும் அதிகாரிகள் பல்வேறுபட்ட பணிகளை மேற்கொள்வார்கள். உதாரணமாக, சட்டம் ஒழுங்கு, வரிவசூல், வியாபாரங்களை ஒழங்குமுறை செய்தல், வாணிபம் மற்றும் தொழில், மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சி பணிகள், காலனி ஆதிக்கக்கால குடிமைப் பணியை ஒப்பிடுகையில் நீதித்துறை சார்ந்த பணிகளை தவிர அனைத்து பணிகளையும் கையாளுகின்றனர்.

எனவே, இப்பணி பொதுமைப்பட்ட பணி என்றழைக்கப்படுகிறது. இப்பணியை சார்ந்த அதிகாரிகள் எந்த துறையிலும் பணியமர்த்தப்படலாம்.

**இந்தியக் காவல் பணி (IPS):**

இந்தியக் காவல் பணியானது, சுதந்திர காலக்கட்டத்திற்கு முன்பே தோன்றியது. இப்பணி இந்திய ஆட்சிப்பணியிலிருந்து இரண்டு வழிகளில் வேறுபடுகிறது.

1. பெரும்பான்மையான அதிகாரிகள் மாநிலத்திலேயே பணிபுரிகின்றனர். ஏனெனில், மத்தியில் காவல் துறை சார்ந்த மிகச் சில பணிகளே உள்ளன.

2. இவர்களின் ஊதியம் மற்றும் நிலை இந்திய ஆட்சிப் பணியைவிடக் குறைவானது.

இவர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இ.ஆ.ப.(IAS). இ.கா.ப.(IPS), இ.வ.ப(IFS) ஆகிய பதவிகளுக்கு பொதுவான ஒரு தேர்வின் மூலம் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கின்றனர். இந்தியக காவல் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் ஐந்து மாத அடிப்படைப் பயிற்சி பெற்ற பின்னர், சர்தார் பட்டேல் தேசிய காவல் பயிற்சி நிலையத்தில் (ஹைதராபாத்) சிறப்புப் பயிற்சி பெறுகின்றனர். குற்ற உளவியல், குற்றங்களை கண்டுணர்தல், ஊழல் தடுப்பு மற்றும் பேரிடர் கால செயல்பாடுகள் ஆகியவற்றில் பயிற்சி பெறுகின்றனர். அவர்களுக்கான பாடத்திட்டம் குற்ற உளவியல், குற்றங்களைத் தடுப்பதற்கான அறிவியல் உபகரணங்களைக் கையாள்வது, ஊழலைத் தடுப்பதற்கான முறைகள், நெருக்கடிகால நிவாரணங்களைக் கற்றல் ஆகியன உள்ளடக்கியதாக இருக்கும். ஓராண்டு பயிற்சியை நிறைவுசெய்த பின்னர் தகுதிகாண் நிலையினர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். பின்னர் அந்த நபர் காவல்துறை உதவி கண்காணிப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஆனால், இதற்கு முன் அவர் ஓராண்டு பயிற்சி நிரலை நிறைவு செய்தாக வேண்டும். இக்கால கட்டத்தில் ஓர் இளநிலை அதிகாரி மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சி நிறைவுற்ற பின் உதவிக் காவல் கண்காணிப்பாளராக (ASP) பணியில் அமர்த்தப்படுகின்றனர்.

இந்தியக் காவல் பணி ஓர் அனைத்து இந்தியப் பணி என்பதால் அவர்கள் மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றனர். அதே நேரம் மாநில பதவி நிலைகளில் அமர்த்தப்படுகின்றனர். இந்தியக் காவல் பணியானது, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் மேற்பார்வையிடப்படுகிறது. இருப்பினும், பணியாளர் கொள்கைகள் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தங்களின் மூலமே வரையறை செய்யப்படுகிறது.

**இந்திய வனப் பணி:**

விடுதலைக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஒரே அனைத்து இந்ததியப் பணி இந்திய வனப் பணி ஆகும். நாடாளுமன்ற சட்டம் 1963 இன் கீழ் இது நடைமுறைக்கு வந்தது. இதன் ஊதியம் மற்றும் பணி தகுதி மற்ற இரு பணிகளுக்கும் (இ.ஆ.ப., இ.கா.ப) கீழானவை ஆகும். இதற்கான தேர்வுகள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தனியாக நடத்தப்படும் அவை, எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு என இரு நிலைகளைக் கொண்டவை. இது அனைத்து இந்தியப் பணி என்றபோதிலும் அதன் தன்மை பொதுவான குடிமைப் பணி போன்றதே. ஆனாலும், தனிச்சிறப்பு ஆக்கப்பட்டதும், அதிகாரம் கொண்டதுமாக இருக்கிறது. இப்பணிகள் பணியாளர் மற்றும் சீர்திருத்தத்துறை மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. அனைத்து இந்தியப் பணிகளுக்கான நியமனம், ஒழுங்குமுறைகள், பணி நிலைகள் ஆகியனவற்றை இத்துறையே உருவாக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நியமனம் பெற்ற நபர்கள் இதர அனைத்து இந்திய மத்தியப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட நபர்களுடன் மூன்று மாத அடிப்படைப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அடிப்படை பயிற்சிகளை நிறைவு செய்த பின்னர் தகுதிகாண் நிலை பயிற்சிகளை டேராடூனில் உள்ள இந்திய வனத் துறை பயிற்சி மையத்தில் இரண்டு ஆண்டுகள் மேற்கொள்ள வேண்டும். அங்கு கடுமையான பயிற்சிகள் அளிக்கப்படும். பயிற்சியைத் தொடர்ந்து அதற்கான தேர்விலும் தேர்ச்சி பெற்ற பின்னரே

பணி ஒதுக்கப்படும். அனைத்து இந்தியப் பணிகள் போன்றே இந்திய வனப் பணிகளும் பிரிவு அடிப்படையிலான பணி ஆகும். மத்திய பணிகளில் ஓராண்டு மாற்றுப்பணியாளராக பணி செய்த பின்னர் அவரவர் பிரிவு மாநிலங்களுக்கு அனுப்பப்படுவர்.

பிற அனைத்து இந்தியப் பணிகள் போல் இல்லாமல் மத்திய குடிமைப் பணிகள் மத்திய அரசின் தனிக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. இதன் உறுப்பினர்கள் மத்திய அரசில் இருந்தே நியமிக்கப்படுகின்றனர். மத்திய அரசின் குடிமைப் பணிகள் நிறுவப்பட்ட பணிகளான மத்திய குடிமைப் பணிகளும் நிறுவப்பட்ட குடிமைப் பணிகளுக்கு வெளியில் உருவாக்கப்படும் குடிமைப் பணிகளையும் உள்ளடக்கியது ஆகும். இவை பொது மத்தியப் பணிகளாகத் தொகுக்கப்பெறுகின்றன. இவை இரண்டுமே பிரிவுகள் 1,2,3 மற்றும் 4 என கீழிறக்க நிலை பணிநிலையிடங்களைக் கொண்டுள்ளன.

இரண்டு குடிமைப் பணிகளுக்கும் நியமன அதிகார அமைப்பு ஒன்றுதான் என்பதால் அனைத்து இந்திய பணிகள், மத்திய குடிமைப் பணிகள் என இரு பிரிவுகள் வகைப்படுத்தல் ஏன் எனக் கேட்கலாம். ஆனால், ஒரே ஒரு முக்கிய வேறுபாடு காணப்படுகிறது. அது என்னவென்றால், அனைத்து இந்திய பணிகளின் கீழ் மத்திய அரசு, மாநில அரசுகள் இரண்டின் கீழும் பணியாற்ற நேரிடும். மேலும், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் எந்த பணிக்கும் நியமிக்கப்படலாம். ஆனால், மத்திய அரசு பொதுப் பணிகள் குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே நியமிக்கப்படுகின்றன. இதன் மூலம் வேறுபாடு நியாயப்படுத்தப்படுகிறது.

**பணி அமர்த்தல்:**

மத்திய அனைத்து இந்தியக் குடிமைப் பணித் தேர்வுகளால் வகுப்பு I மற்றும் II சார்ந்த அதிகாரிகள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்படுகின்றனர்.

**இந்திய வெளியுறவுப் பணிகள்:**

மத்திய குடிமைப் பணிகள் வகுப்பு 1 – பிரிவின் கீழ் வரும் இந்திய வெளியுறவுப் பணிகள் நாட்டு விடுதலைக்குப் பின்னர் உருவாக்கப்பட்டவை ஆகும். இப்பணிகள் முழுமையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வருபவை. அனைத்து இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுகளில் மேல் நிலைத் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மத்தியக் குடிமைப் பணிகளிலேயே மிக உயர்ந்த கவுரவமும், தகுதிநிலையும்,ஊதியமும், ஆதாயமும் கொண்டவை இந்திய வெளியுறவுப் பணிகள் ஆகும். இப்பணிகளில் நியமிக்கப்படுபவர்கள் உள்நாட்டிலும் அயல் நாடுகளின் தூதரகங்களிலும் பணியாற்றக் கடமைப்பட்டவர்கள். இத்துறை இந்திய வெளியுறவு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்திய வெளியுறவுப் பணியாளர்கள் நிர்வாகத்தில் மத்தியப் பணியாளர் துறையும் பங்கெடுக்கிறது. மத்திய நிதி அமைச்சத்தின் பணியாளர்களையும் நிர்வகிக்கும் இத்துறை வெளியுறவுப் பணியாளர்களின் பணி வரைகளையும் ஊதிய அலகுகளையும் இதர நிதி அம்சங்களையும் வரையறை செய்கிறது. சலுகைகள், படிகளைப் பொறுத்தவரையில் இதர துறைப் பணியாளர்களைவிட வெளியுறவுப் பணியாளர்கள் மிகவும் அதிர்ஷடசாலிகள் ஆவர்.

அன்னிய நாட்டுப் படிகள் பெற இவர் தகுதியானவர்கள். இது கீழ்க்காணும் நிலைகளில் வழங்கப்படுகின்றன. 1. உள்ளூர் வாழ்க்கைச் செலவு 2. இதர தேவையான செலவுகளுக்கான படிகள் அவர்கள் உள்நாட்டில் பணியாற்றினாலும் அயல் நாட்டில் பணியாற்றினாலும் உள்நாட்டில் அவருக்கு நிகரான பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்க்களுக்கு அனுமதிக்கப்பட்ட விதத்திலேயே அனுமதிக்கப்படும்; கூடுதல் செலவினங்களைப் பணியாளர்களே ஏற்க வேண்டும். அயல்நாடுகளின் பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்களின் பிரதிநிதித்துவ செலவினங்கள் அயல் நாடுகளில் ஒரு தனியாக எதிர்கொள்ளும் வீதத்திலேயே அவரது அலுவலக நிலைத் தகுதியினால் வழங்கப்படும்.

இந்திய வெளியுறவுப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மூன்று ஆண்டுகள் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்கு அவர் ஒரு மாவட்டத்தோடு இணைக்கப்பட்டு நடைமுறைப்பணிகளில் பயிற்சி மேற்கொள்வார். மேலும், செயலகப் பயிற்சியும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பெற வேண்டும்.

**ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் - அமைப்பு, அதிகாரங்கள், பணிகள் மற்றும் விதிகள்**

**வரலாற்றுப் பார்வை:**
இந்தியாவில் அரசு பணியாளர் தேர்வாணையம் உருவாவதற்கான வித்து எப்போது நடப்பட்டது என்றால் 1919 மார்ச் 5 அன்று இந்திய அரசமைப்பு சீர்திருத்தப்பட்ட நாளை குறிப்பிடலாம். அப்போது அரசு அறிவித்த முதல் சீர்திருத்தங்களில் சில நிரந்தரமான அரசு பணிகளுக்கு ஒழுங்குமுறைகளுடன் கூடிய நியமன முறையின் தேவை உணரப்பட்டு, இதற்கான நிரந்தர பணி ஆணைய அமைப்பினை உருவாக்கப் பரிந்துரைக்கப்பட்டது. இதன்படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்க இந்திய அரசாங்கச் சட்டம், 1919 உறுப்பு 96 (சி) வழிவகுத்தது. இதன்படி ஆளுநர்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு செயலர் உருவாக்கும் விதிகளின்படி இந்திய அரசு பணியாளர்கள் நியமனங்களும் கட்டுப்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அச்சட்டம் தெளிவுபடுத்தியது.

சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தேர்வாணையம் அமைப்பு, செயல்பாடுகள். குறித்து பல மட்டங்களில் தொடர் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. தொடர்ந்து தீர்வுகாண லீ ஆணையம் என அழைக்கப்படும் ராயல் ஆணையம் உருவாக்கப்பட்டது. லீ ஆணையம் தமது அறிக்கையை 1924 இல் வழங்கியது. ஒரு சட்டப்பூர்வ அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசாங்கச் சட்டம், 1919-இன் படி தாமதமின்றி உருவாக்கப்பட வேண்டும் என ஆணையம் ஆணையிட்டது.

இந்திய அரசாங்கச் சட்டம் 1919 உறுப்பு 96(சி) படியும், உடனடியாக தேர்வாணையம் அமைக்க லீ ஆணையம் ஆணையிட்டதன் படியும் இந்தியாவில் முதல் முறையாக அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் 01.10.1926 ல் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் ஒரு தலைவரும் நான்கு உறுப்பினர்களும் கொண்டிருந்தது. ஐக்கிய ராஜ்ஜியத்தின் உள்துறை குடிமைப் பணிகள் உறுப்பினர் சர்ராஸ் பார்க்கர் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்திய அரசாங்கச் சட்டம், 1919, உறுப்பு 96(சி) துணைப்பிரிவு (2) ன் கீழ் வழங்கப்பட்டுள்ள விதிகளின் படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் (பணிகள்) விதிகள், 1926 உருவாக்கப்பட்டது. இந்திய அரசாங்கச் சட்டம், 1935 மேலும் விரிவு படுத்தப்பட்ட கூட்டாட்சி (மத்திய) மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் உருவாக வழிவகுத்தது. இதன்படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் கூட்டாட்சி (மத்திய) பணியாளர் தேர்வாணையமாக 01.04.1937 ல் மாறியது.

இந்திய அரசமைப்பு செயல்முறைக்கு வந்த ஜனவரி 26, 1950 அன்று கூட்டாட்சி பணியாளர் தேர்வாணையம் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் என பெயர் மாற்றப்பட்டது. அரசமைப்பு உறுப்பு 378 (1) ன் கீழ் கூட்டாட்சி பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்களாக ஆனார்கள்.

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசமைப்பு உறுப்பு 315 இன்படி உருவாக்கப்பட்ட அரசமைப்பு நிறுவனம் ஆகும். தேர்வாணையம் ஒரு தலைவர், 10 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு ஆகும். போட்டித்தேர்வுகள், நேர்முகத் தேர்வுகள் மூலம் பணியாளர்கள் நியமனம், பதவி உயர்வு மற்றும் அயல்நாட்டுப் பணி மாறுதல்களுக்கான பொருத்தமான அறிவுரைகள் வழங்குவது, பல்வேறு அரசு பணிகள் நியமனங்கள் குறித்து அரசு கோரும் ஆலோசனைகள் வழங்குவது, நியமன விதிகள் உருவாக்கம், திருத்தம் மேற்கொள்வது, பல்வேறு குடிமைப் பணிகளுக்கான நடத்தை விதிகள் உருவாக்குவது, கூடுதல் சிறப்பு நிலை ஓய்வூதியம், வழக்குச் செலவுகள் அளித்தல் போன்ற விவகாரங்களில் ஆலோசனை வழங்குவது, விளக்கம் கோரி குடியரசு தலைவராலும் மாநில அரசுகளின் ஆளுநர்களும் அனுப்பப்படும் விவரங்களுக்கு ஆலோசனைகள் வழங்குவது, தவிர பணி நியமனம் தொடர்பாக அரசு கோரும் அனைத்து விவரங்களையும் வழங்குவது ஆகிய பணிகளை தேர்வாணையங்களுக்கு அரசமைப்பு பொறுப்பளித்துள்ளது.

அரசமைப்பு பொறுப்பளித்துள்ள அனைத்துக் கடமைகளையும் ஆற்ற ஒரு செயலர் தலைமையில் எண்ணற்ற அலுவலர்கள் / ஊழியர்களைக் கொண்ட ஒரு செயலகம் மூலம் தேர்வாணையங்கள் இயங்குகின்றன. ஆணைய செயலகத்தின் நிர்வாகச் செயல்பாடுகளுடன் ஆணையத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஆணைய ஆலுவர்கள் / ஊழியர்கள் தொடர்பான அனையத்துப் பணியாளர் விவகாரங்களையும் ஆணைய நிர்வாகப் பிரிவு மேற்கொள்ள வேண்டும்.

**ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டப்பூர்வ கடமைகள்:**

இந்திய அரசமைப்பு உறுப்புகள் 320, 321 இன் படி வழங்கப்பட்டுள்ள ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டப்பூர்வ கடமைகள் வருமாறு

1. போட்டித் தேர்வுகள் மூலம் நியமனங்கள்
2. நேர்காணல்கள் மூல நியமனங்கள்
3. பதவி உயர்வு மற்றும் அயல்நாட்டுப் பணி மாறுதல்களுக்கான பொருத்தமான அறிவுரைகள் வழங்குதல்
4. பல்வேறு அரசு பணிகள் நியமனங்கள் குறித்து அரசு கோரும் ஆலோசனைகள் வழங்குவது, நியமன விதிகள் உருவாக்கம், திருத்தம் மேற்கொள்வது, பல்வேறு குடிமைப் பணிகளுக்கான நடத்தை விதிகள் உருவாக்குவது
5. பல்வேறு குடிமைப் பணிகள் தொடர்பான ஒழுங்கு நடவடிக்கைகள்
6. கூடுதல் சிறப்பு நிலை ஓய்வூதியம், வழக்குச் செலவுகள் அளித்தல்
7. குடியரசுத்தலைவரால் தேர்வாணையத்துக்கு அனுப்பப்படும் அனைத்து விவகாரங்கள் குறித்தும் ஆலோசனைகள் வழங்குவது
8. பணி நியமனம் தொடர்பாக அரசு மற்றும் மாநில ஆளுநர்கள் கோரும் அனைத்து விவரங்களையும் வழங்குவது

**நியமனங்கள் கீழ்க்காணும் நான்கு வழிகளில் ஒன்றில் மேற்கொள்ள வேண்டும்.**

1. நேரடி நியமனம்
2. பதவி உயர்வு
3. இந்திய வெளியுறவுப் பணி / இணைப்பு
4. இரண்டும் இணைந்த முறை (வெளியுறவுப் பணி + இணைப்பு)

**நேரடி நியமனம்:**

நேரடி நியமனங்கள் பெரும்பாலும் கீழ்க்காணும் இரு வழிகளில் நடைபெறுகின்றன.

1. போட்டித் தேர்வுகள் மூலம்
2. தேர்வு மூலம் பல்வேறு குடிமைப் பாதுகாப்புப் பணிகளுக்கு நாட்டின் பல இடங்களில் அமைந்துள்ள தேர்வு மையங்களில் கீழ்க்காணும் தேர்வுகளை ஆணையம் நடத்துகிறது.

1. குடிமைப் பணிகள் (அடிப்படை நிலை) தேர்வு
2. குடிமைப் பணிகள் (முதன்மை நிலை) தேர்வு
3. பொறியியல் பணிகள் தேர்வு
4. ஒருங்கிணைந்த மருத்துவப் பணிகள் தேர்வு
5. இந்திய வனப் பணிகள் தேர்வு
6. நிலவியலாளர் தேர்வு
7. இந்திய பொருளியல் பணிகள் / இந்திய புள்ளியியல் பணிகள் தேர்வு
8. சிறப்பு நிலை ரயில்வே பயிற்சியாளர் தேர்வு (ஒரு ஆண்டு விட்டு ஒரு ஆண்டு)
9. ஒருங்கிணைந்த பாதுகாப்புப்படைகள் தேர்வு (ஆண்டு தோறும்)
10. தேசியப் பாதுகாப்பு அகாதமி, நேவல் (கடல் படை) அகாதமி தேர்வு (இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை)
11. மத்தியக் காவல் படைகள் (உதவி கமாண்டென்ட்) தேர்வு
12. பிரிவு அலுவலர் / சுருக்கெழுத்தர் (கிரேட் பி / கிரேட் 1)
13. துறை வாரி போட்டித் தேர்வுகள்
    போட்டித் தேர்வுகள் கால அட்டவணை எப்பிளாய்மெண்ட் நியூஸ், ரோஜ்கர் சமாச்சார் இதழ்களில் வெளியாகிறது. எதிர்வரும் தேர்வுகளின் பெயர்கள், அறிவிப்பானை வெளியாகும் தேதி, விண்ணப்பிக்கும் கடைசி நாள், தேர்வு நாள் ஆகிய தகவல்களை வெகு முன்பாக பெரும்பாலும் முந்தைய ஆண்டு அக்டோபர் மாதமே அறிவிக்கப்படுகிறது.

**பெண் விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக் கட்டணத்தில் இருந்து விலக்கு**

15.07.2009 வெளியான டி.ஓ.பி.டி கடிதம் எண் 36020/03/2009 படி ஆணைய தேர்வுகளுக்கான கட்டணத்தில் இருந்து பெண் விண்ணப்பதாரர்களுக்கு கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**அரசமைப்பு உறுப்புகள்:**

| | |
|---|---|
| உறுப்பு 315 | ஒன்றிய, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் |
| உறுப்பு 316 | உறுப்பினர் நியமனம், பதவிக் கால வரம்பு |
| உறுப்பு 317 | தேர்வாணையம் உறுப்பினர் நீக்கம் மற்றும் இடை நீக்கம் |
| உறுப்பு 318 | தேர்வாணையம் உறுப்பினர்கள், ஊழியர்களுக்கான ஒழுங்குமுறைகளை உருவாக்குதல் |
| உறுப்பு 319 | நடவடிக்கைக்குள்ளாகும் உறுப்பினர்கள் பணியில் தொடர்வதைத் தடுத்தல் தேர்வாணையம் பணிகள் |
| உறுப்பு 320 | தேர்வாணையம் பணிகளை விரிவாக்கம் செய்யும் அதிகாரம் |
| உறுப்பு 321 | தேர்வாணையம் செலவினங்கள் |
| உறுப்பு 322 | தேர்வாணையம் அறிக்கைகள் |
| உறுப்பு 323 | |

**மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்:**

மத்தியில் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருப்பதுபோல் ஒரு மாநிலத்தில் அரசுப் பணியாளர் தேர்வாணையமும் இயங்குகிறது. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைய வழிவகுத்த அரசமைப்பு உறுப்புகளே (315 முதல் 323 வரை) இதற்கும் வழி வகுக்கிறது. அமைப்பு, உறுப்பினர்கள் நியமனம், நீக்கம், அதிகாரம், பணிகள் மற்றும் சுதந்திரத்தன்மை அனைத்தும் அரசமைப்பு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களுக்கும் வழங்குகிறது.

**அமைப்பு:**

ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆளுநரால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். ஆணையத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை அந்தந்த அரசுகளே நிர்ணயம் செய்துகொள்ள அசரமைப்பு அனுமதிக்கிறது. ஆனால், அது ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டது. மேலும், ஆணைய உறுப்பினர்களில் பாதி பேர் மத்திய மாநில அரசுகளின் நிர்வாகத்தில் 10 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என்ற நிபந்தனை தவிர உறுப்பினர்கள் தகுதி குறித்து அரசமைப்பு எதுவும் கூறவில்லை.

மேலும் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிலைகள் குறித்து ஆளுநரே வரையறை செய்து கொள்ள அனுமதி வழங்குகிறது.

மாநில அரசுப்பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் அல்லது 62 வயது இதில் எது முந்தியதோ அது ஆகும். ஆனால் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் இந்த வயது வரப்பு 65 ஆகும். அதேநேரம் ஆளுநருக்கு முறைப்படி பதவி விலகல் கடிதம் அளிப்பதன் மூலம் பதவி விலக முடியும்.

கீழ்க்காணும் இரண்டு சூழ்நிலைகளில் தேர்வாணைய உறுப்பினர்களில் ஒருவரை தற்காலிக உறுப்பினராக ஆளுநர் நியமனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

1. தலைவர் பதவி காலியாக இருக்கும் போது
2. ஏற்கனவே தலைவர் பதவியில் இருப்பவரால் மாநில அரசுப் பணியாளர் நிறைவு செய்ய இயலாத சூழ்நிலை உருவாகும்போது, புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை அல்லது ஏற்கனவே பதவியில் இருக்கும் தலைவர் தனது அலுவல்களை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும் வரை தற்காலிக தலைவர் தலைவர் அலுவல்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்.

**நீக்கம்:**

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையதின் தலைவர், உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்ட போதும் குடியரசுத்தலைவரால் மட்டுமே ஒருவரை நீக்க முடியும் (ஆளுநரால் அல்ல) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், உறுப்பினர்களை நீக்கும் முறையிலேயே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்.

உறுப்பினர்களை நீக்கும் முறையிலேயே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்களையும் குடியரசுத்தலைவர் நீக்கலாம். அவை வருமாறு:

1. நொடித்துப்போதல் அல்லது கடனில் மோசடி
2. தனது அலுவலகப் பணிகளுக்கு வெளியே ஊதியம் பெறும் ஊழியராகப் பணியாற்றும் போது
3. உடல் நலம் குறைவு காரணமாக ஒருவரால் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை என குடியரசுத்தலைவர் கருதும் போது,

இவைதவிர முறைகேடு குற்றத்தின் கீழும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அல்லது உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நீக்க முடியும். இருந்தபோதும் இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் கருத்துரை கேட்டும் குடியரசுத்தலைவர் செயல்படலாம். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் நீக்கத்துக்கான காரணத்தை உறுதி செய்தால் அதனடிப்படையிலும் குடியரசுத்தலைவர் நீக்கம் செய்வார். அரசமைப்பு வழங்கியுள்ள உறுப்புகளின் படி உச்ச நீதிமன்றம் இந்த விவகாரத்தில் வழங்கும் ஆலோசனை குடியரசுத்தலைவரின் முடிவைக் கட்டுப்படுத்தும். இருந்தபோதும், உச்ச நீதிமன்ற விசாரணை நடைபெறும் காலத்தில் மாநில ஆளுநர் குடியரசுத்தலைவரின் நீக்கத்தை நிறுத்தி வைத்து பணி இடை நீக்கம் மட்டும் செய்யலாம்.

மேலும், இப்பொறுத்தப்பாட்டில் அரசமைப்பு "தவறான நடத்தை" எனும் சொல்லாடலைப் பயன்படுத்துகிறது. ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது ஏதேனும் உறுப்பினர்கள் தவறான நடத்தையில் ஈடுபடும் குற்றத்தில் ஈடுபடுவார்களானால் என கூறுகிறது. அவர் 1. மத்திய அல்லது மாநில அரசின் ஏதேனும் குறிப்பிட்ட ஒப்பந்தம், உடன்படிக்கையில் ஆர்வம் காட்டுபவரானால், 2. இத்தகைய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் பங்கேற்பதன் மூலம் உறுப்பினர் வருவாய் அல்லாமல் கூடுதல் வருவாய் அல்லது இதர உறுப்பினர்களுடன் இணைந்து ஆதாயம் கிடைக்கும் என்று கூறுகிறது.

**சுதந்திரத் தன்மை:**

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களும் சுதந்திரமாகச் செயல்படுவதை உறுதி செய்யவும் பாகுபாடான செயல்பாடுகளில் இருந்து பாதுாக்கவும் அரசமைப்பு உறுப்புகளில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. அரசமைப்பில் கூறப்பட்டுள்ள முறைகளில் அல்லது வழிகளில் நடந்துகொண்டால் மட்டுமே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அல்லது உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நீக்க முடியும். இதனால் அவர்கள் பதவிக்காலம் உறுதிப்படுத்தப்படுகிறது.
2. மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பணி நிலைகள் ஆளுநரால் முடிவு செய்யப்படுகின்றன எனினும் பதவி நியமனத்துக்குப் பின்னர் அவரது சாதகமற்ற நிலைமைக்கு ஏற்ப மாறுதல் செய்ய இயலாது.
3. மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஊதியம், சலுகைகள், ஓய்வூதியம் என அனைத்தும் அரசின் தொகுப்பு நிதியில் இருந்து வழங்கப்பட வேண்டும். இதனால் சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட வேண்டியதில்லை.

4. ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் (நீக்கப்படும்போது) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அல்லது ஏதேனும் ஒரு மாநிலத்தின் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது உறுப்பினராக நியமனம் பெறும் தகுதியுடையவராகிறார். ஆனால், அரசின் வேறு பதவிகளுக்கு நியமிக்கப்பட முடியாது.

5. மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வாணையத்தில் ஒரு முறை பதவி வகித்தபின்னர் மீண்டும் அதே பதவியில் மறு நியமனம்செய்யப்பட முடியாது. அதாவது இரண்டாவது முறை அப்பதவியில் நியமிக்கப்பட முடியாது.

**பணிகள்:**
மத்திய அரசுப் பணியிடங்கள் தொடர்பில் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேற்கொள்ளும் பணிகள் போன்றே மாநில அரசுப் பணியிடங்கள் தொடர்பில் அனைத்து பணிகளையும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழங்குகிறது. அவை பின்வருமாறு:

அரசுப் பணியிடங்கள் தொடர்பில் அனைத்து பணிகளையும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழங்குகிறது. அவை பின்வருமாறு:

1. மாநில அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகள் நடத்துவது
2. பணியாளர் மேலாண்மை தொடர்பாக கீழ்க்காணும் ஆலோசனைகள் வழங்குகிறது.

1. குடிமைப் பதவிகள், குடிமைப் பணிகள் தொடர்பான அனைத்து பணிகளுக்கான நியமன முறைகள்.

2. குடிமைப் பணிகள் மற்றும் பதவிகளுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகள், இதர துறைகளுக்கு பணியிட மாறுதல்கள் போன்றவற்றில் கோட்பாடுகள் கடுமையாகப் பின்பற்றப்படுதல்

3. குடிமைப் பணிகள் / பதவிகளுக்குப் பொறுத்தமான நபர்கள் நியமனம். மாறுதலிலும் இதே நிலை. அயல்நாட்டுப் பணிகள் மாறுதல்களிலும் பொறுத்தமான நபர்கள். பதவி உயர்வுக்கான பரிந்துரைகளை தொடர்புடைய துறைகள் தேர்வாணையத்துக்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டும்.

4. ஒரு மாநில அரசில் பணியாற்றும் பணியாளர்களின் பணியினைப் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள்

   - ❖ எச்சரிக்கை விடுத்தல்
   - ❖ ஊதிய உயர்வு பிடித்தம்
   - ❖ பதவி உயர்வு நிறுத்தம்
   - ❖ இழப்பை ஈடு செய்தல்
   - ❖ கீழ்நிலைப் பணிக்கு இறக்குதல்
   - ❖ கட்டாய ஓய்வு
   - ❖ பணியில் இருந்து விலக்குதல்
   - ❖ பணியில் இருந்து நீக்குதல்

5. ஒரு குடிமை ஊழியர் தமது கடமைகளில் இருந்து தவறியதற்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள அந்த ஊழியர் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கான செலவுகள்.

6. பணியின் போது ஏற்படும் காயங்கள் காரணமாக ஓய்வூதியம் வழங்கக்கோரும் எவ்விதமான கோரிக்கைகள், அல்லது தொடர்பில் கோரப்படும் ஏதேனும் தொகை.

7. பணியாளர் மேலாண்மை தொடர்பான இதர அனைத்து விவகாரங்கள்.

இந்த விவகாரங்களில் ஒரு மாநில அரசு தமது மாநில பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கவில்லை எனில் பாதிக்கப்பட்ட அரசு பணியாளருக்கு நீதிமன்றமும் தீர்வு வழங்க இயலாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதாவது, தேர்வாணையத்துடன் கலந்தாலோசிப்பது அல்லது தேர்வாணைய ஆலோசனை இல்லாமல் செயல்படுவது ஆகிய தருணங்களில் மாநில அரசின் நடவடிக்கைகளை நீதிமன்றங்களால் ரத்து செய்ய இயலாது என்பது இதன் பொருளாகும். இதனால், மேற்கூறியவை வழிகாட்டுதல்களாகக் கொள்ளப்பட வேண்டுமேயொழிய சட்டப்பூர்வக் கடமையாகக் கொள்ளப்படக் கூடாது. அதாவது மேலே குறிப்பிட்ட விவகாரங்களில் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசிக்க வேண்டும் என்பது வழிகாட்டு நெறிகள் தாம் சட்டப்பூர்வ கடமைகள் அல்ல. இதேபோல, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்வு செய்துள்ளது என்பதாலேயே அந்த நபருக்கு பணி வழங்குவது உரிமை என்று கோர முடியாது என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருந்தபோதும் அரசு நியாயமாகவும் பாகுபாடற்றும் நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசிக்க வேண்டும் என்பது வழிகாட்டு நெறிகள் தாம். சட்டப்பூர்வ கடமைகள் அல்ல.

அரசுப் பணிகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு ஒதுக்கப்படும் கூடுதல் பொறுப்புகளை மாநிலச் சட்டமன்றங்கள் முடிவு செய்கின்றன. மாநிலச் சட்டமன்றங்கள் மூலம் உள்ளாட்சி பணியாளர் நியமனம், பெருநிறுவன அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்வது தொடர்பான கூடுதல் பொறுப்புகளையும் ஒரு மாநில அரசு தமது தேர்வாணையத்துக்கு அளிக்க முடியும். மாநிலச் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றுவதன் மூலம் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகார வரம்புகள் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

தமது செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையை ஆண்டுதோறும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் மாநில ஆளுநரிடம் அளிக்கிறது. இந்த அறிக்கையைப் பரிசீலித்து தேர்வாணையத்தின் ஆலோசனைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதற்கான காரண – காரிய விளக்கங்களுடன் கூடிய தமது விளக்கத்துடன் மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் ஆளுநர் முன் வைப்பார்.

**வரம்புகள்:**

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நிர்வாக வரம்புக்கு வெளியிலும் சில விவகாரங்கள் நிறுத்தப்படுகின்றன. அதாவது இவ்விவகாரங்களில் மாநில அரசு தமது தேர்வாணையத்தின் ஆலோசனைகளைப் பெற வேண்டியதில்லை. அவை வருமாறு

1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பதவிகள் நியமனங்கள் இட ஒதுக்கீடு செய்யப்படும்போது
2. பதவிகள், நியமனங்கள் ஒதுக்கீட்டில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் கோரிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது.

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்புக்குள் வராத பதவிகள், பணியிடங்கள், இதர விவகாரங்களை ஆளுநர் நீக்குகிறார். மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கத் தேவையில்லை எனக் கருதும் அரசு பணியிடங்கள், பதவிகள் தொடர்பாக ஆளுநரே ஒழுங்குமுறைகளை உருவாக்கிக்கொள்ள அரசமைப்பு அனுமதிக்கிறது. ஆனால், குறைந்தது 14 நாட்களுக்கு முன் மாநிலச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அவையின் ஒப்புதல் பெற்றே அறிவிக்கப்பட வேண்டும். இதில் சட்டமன்றம் எந்த திருத்தமும் மேற்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். அதாவது, இறுதி முடிவை சட்டமன்றமே மேற்கொள்ளும்.

**பங்களிப்பு:**

ஒரு மாநில அரசுப் பணியிடங்கள் தகுதி அடிப்படையில் நிரப்பப்படுவதைக் கண்காணிக்கும் அமைப்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைய வேண்டும் என அரசமைப்பு கருதியது. அரசு பணியிடங்களுக்கான நியமனம், மற்றும் பதவி உயர்வு, ஒழுங்குநடவடிக்கை

விவகாரங்களில் ஆலோசனை கோரும்போது ஆலோசனை வழங்குவது ஆகியன தேர்வாணையத்தின் பணிகளாகக் கருதப்பட்டன. பணியிடங்களை வகைமைப்படுத்துதல், ஊதிய விகிதம், பணி நிலைகளை வகுத்தல், பதவி நிலை மேலாண்மை பயிற்சி போன்றவை தேர்வாணையத்தின் பொறுப்பல்ல. இந்த விவகாரங்களை மாநில அரசின் பொது நிர்வாகத் துறை அல்லது பணியாளர் (தனி) துறை மேலாண்மை செய்கிறது. எனவே, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் என்பது மையப்படுத்தப்பட்ட நியமன முகமை மட்டுமே. மாநிலத்தின் பணியாளர்கள் மேலாண்மை என்பது மாநில அரசின் பணியாளர் (தனி) துறை அல்லது பொது நிர்வாகத் துறையின் பணிகள் ஆகும்.

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையப் பணிகள் வரம்புக்கு உட்பட்டவை மட்டுமல்லாமல் அவை அளிக்கும் ஆலோசனைகளும் அரசைக் கட்டுப்படுத்தாது. ஆணைய ஆலோசனைகளை ஏற்பதும் நிராகரிப்பதும் திருத்துவதும் அரசின் முடிவு ஆகும். ஆனால், இவ்வாறு நிராகரிப்பது அல்லது திருத்துவதும் ஏன் என்பதற்கு அரசு சட்டமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டும். என்பது ஆணைய ஆலோசனைகளுக்கு உள்ள ஓர் பாதுகாப்பு அம்சம் ஆகும். மேலும் ஒரு சட்டம் இயற்றுவதன் மூலமும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனை செயல்பாடுகளுக்கான விதிகளை உருவாக்க முடியும்.

1964 இல் மாநில கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட்ட பின்னர் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பங்களிப்பு பாதிப்புக்குள்ளானது. ஏனெனில் ஒரு குடிமைப் நடவடிக்கைகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பங்களிப்பு பாதிப்புக்குள்ளானது. ஏனெனில் ஒரு குடிமைப் பணியாளருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதில் இரண்டு அமைப்புகளும் ஆலோசிக்கப்படுகின்றன. அப்போது இரண்டு அமைப்புகளும் முரண்பாடான முடிவை மேற்கொள்ளும்போது பிரச்சனை எழுகிறது. இருந்தபோதும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒரு சுயாட்சியான அமைப்பு என்பதால் அதன் முடிவுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இறுதியாக, நீதித்துறையில், மாவட்ட நீதிபதிகள் அல்லாத பிற நீதித்துறை பணியிடங்களுக்கான நியமன விதிமுறைகளை வகுக்க மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆலோசிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் மாநில உயர் நீதிமன்றமும் ஆலோசிக்கப்பட்டது.

**பணியாளர் தேர்வாணையத்தின் பணிகள்:**

1. i. மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான பதவிகளில் அதிகபட்சம் 10,500 அல்லது அதற்குக்கீழுள்ள குரூப் “பி“ பிரிவு பணியிடங்களுக்கான நியமனங்கள்
   ii. மேற்கூறிய பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான பதவிகளில் பணியாளர் தேர்வாணைய (ஸ்டாப் செலக்சன் கமிஷன்) வரம்பிலிருந்து விலக்கப்பட்ட பதவிகள் நீங்கலாக தொழில்நுட்பம் சாராத குரூப் “சி“ பிரிவு பணியிடங்களுக்கான நியமனங்கள் மேற்கொள்ளுதல்.

2. தனது வரம்புக்குட்பட்ட பதவிகள் / பணியிடங்கள் நியமனங்களுக்கான தேர்வுகள், நேர்காணல்கள் மேற்கொள்ளல் வேண்டும். இத்தேர்வுகள் கூடுமானவரை நாட்டில் பல இடங்களில் நடத்தப்பட வேண்டும். அதேபோல, நியமனங்களும் தொடர்புடைய தேர்ச்சிபெற்ற நபர்களின் சொந்த மாநிலம் / பகுதிகளுக்கு அருகமைந்த பணியிடங்களில் அமர்த்தப்படுதல் வேண்டும்.
3. குறிப்பாக, கீழ்க்காணும் பணியிடங்களுக்கான நியமனம் திறந்த நிலை போட்டித் தேர்வுகள் மூலம் நியமிக்கப்பட வேண்டும்.
   i. கீழ்நிலை பிரிவு எழுத்தர் (எல்.டி.சி. லோயர் டிவிசன் கிளார்க்) பணியிடங்கள் - மத்திய அமைச்சரவைச் செயலக எழுத்தர் ∴ இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலக பணியிடங்கள், ஆயுதப்படைகள் தலைமையகங்களின் எழுத்தர் பணியிடங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான எழுத்தர் பணியிடங்கள்.

ஐ. கிரேட் மற்றும் டி சுருக்கெழுத்தர் பணியிடங்கள் - மத்திய அமைச்சரவைச் செயலகம் / இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலகம், அயுதப்படைகள் தலைமையகங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சங்கள்,துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் கீழ்நிலை கிளைகளுக்கான சுருக்கெழுத்தர் பணியிடங்கள், மேலும், முன்னர் குறிப்பிட்ட அலுவலகங்கள், துறைகள் அல்லாத பிற துறைகளிலும் மேற்குறிப்பிட்ட பணியிடங்கள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கியது இப்பட்டியல்.

ஐை. உதவியாளர்கள் - மத்திய அமைச்சரவைச் செயலகம் ∴ இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலகம், ஆயுதுப்படைகள் தலைமையகங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான உதவியாளர் பணியிடங்கள்.

ஐை. ஆய்வாளர்கள் - நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மத்திய கலால் வரி (எக்ஸைஸ்) துறை மாவட்ட அலுவலகங்கள், வருமான வரித்துறை மாவட்ட அலுவலகங்களின் ஆய்வாளர் பணியிடங்கள் மற்றும் பல்வேறு கலால் துறை அலுவலகங்களின் தடுப்பு அலுவலர்கள், சோதனையாளர்கள் (பிரிவெண்டிங் அலுவலர்கள் மற்றும் எக்ஸாமினர்கள்), அமலாக்கத் (என்போர்ஸ்மெண்ட்) துறையின் உதவி அமலாக்க அலுவலர்கள்.

ஏ. துணை ஆய்வாளர்கள் - மத்திய புலனாய்வுத் துறை மற்றும் மத்தியக் காவல்துறை அமைப்புகள்.

ஏை. பிரிவு கணக்காளர்கள், தணிக்கையாளர்கள், கணக்காளர்கள் - இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம், மற்றும் பிற கணக்காளர் துறைகள் ஆகியவற்றின் பிரிவு கணக்காளர்கள், தணிக்கையாளர்கள், கணக்காளர்கள், மத்திய அரசின் கீழ்நிலை அலுவலகங்கள், கிளைகளின் உயர் பிரிவு எழுத்தர் (அப்பர் டிவிசன் கிளார்க்) பணியிடங்கள்.

ஏைை. துணை நிலை பொறியாளர் (சிவில், மின்னியல்) – பொதுப் பணித்துறை பணியிடங்கள், குரூப் “சி“ பிரிவு (தொழில்நுட்பம்) நான் கெஜட்டட், அமைச்சுத் துறை சாராத, பொது மத்திய பணிகள் சார்ந்த பணியிடம்

ஏைைை. புள்ளியியல் ஆய்வாளர் (ஸ்டேட்டிஸ்டிக்கல் இன்வெஸ்டிகேட்டர்) – புள்ளியியல் மற்றும் நிரல் (புரோக்கிராம்) அமலாக்கத் துறையின் குரூப் - “4“ துணை நிலை புள்ளியியல் பணியிடங்கள் (எஸ்.எஸ்.சி) பணியிடம்.

ஐை. வரி உதவியாளர் - நேரடி வரிகள் வாரியம் மற்றும் கலால், சுங்க வாரியத்தின் கீழுள்ள பல்வேறு ஆணையகங்களின் பணியிடங்கள், நான் கெஜட்டட், அமைச்சுத் துறை சார்ந்த பணியிடம்

ஒ. பிரிவு அலுவலர் (வணிக தணிக்கை) - இந்தியத் தணிக்கை மற்றும் தணிக்கைத் துறை நான் - கெஜட்டட் குரூப் “பி” பணியிடம்

ஒை. பிரிவு அலுவலர் (தணிக்கை) – தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் துறை நான் - கெஜட்டட் குரூப் “பி“ பணியிடம்.

4. பதவி உயர்வுக்கான துறை சார் தேர்வுகளையும் ஆணையம் மேற்கொள்கிறது.
   ை. மத்திய அமைச்சரவை செயலக குரூப் டி பிரிவு பணிகள் மற்றும் இந்திய வெளியுறவு பணிகள், ரயில்வே வாரிய செயலக எழுத்தர் பணிகள் / ஆயுதப்படைகள் எழுத்தர் பணிகளிருந்து எல்.டி.சி. ஆக பதவி உயர்வு பெற இத்தேர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஐ. குரூப் "சி" சுருக்கெழுத்தர்கள் - மத்திய அமைச்சரவைச் செயலக குரூப் "டி" பிரிவு சுருக்கெழுத்தர்கள் பணிகள் மற்றும் இந்திய வெளியுறவு பணிகள், ரயில்வே வாரிய செயலக எழுத்தர் பணிகள் / ஆயுதப்படைகள் சுருக்கெழுத்தர்கள் பணிகளில் இருந்து குரூப் "டி" பிரிவு சுருக்கெழுத்தர்கள் ஆக பதவி உயர்வு பெற இத்தேர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5. ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளுக்கான தட்டச்சுத் தேர்வுகள் கால இடைவெளியில் நடத்தப்படுகின்றன.

6. ₹ 9,300 முதல் 34,800 வரை ஊதிய அலகு கொண்ட 42,000 வரை கிரேட் ஊதியம் பெறும் அனைத்து குரூப் "பி" பணியிடங்களுக்கும் பல்வேறு மத்திய அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த கிளை அலுவலகங்களுக்கான குரூப் "சி" பிரிவு தொழில்நுட்பம் சாராத பணியிடங்கள் நியமனங்களுக்கான திட்டங்களையும் உருவாக்குகிறது.

7. 10,500 அதிகபட்ச ஊதிய அலகு கொண்ட குரூப் "பி" பணியிடங்களுக்கும் அமைச்சகங்கள் / துறைகள் வாரியான தொழில்நுட்பம் சாராத குரூப் "சி" பணியிடங்களுக்கும் அவ்வப்போது தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

8. அவ்வப்போது மத்திய அரசால் பணிக்கப்படும் இதர பணிகளையும் ஆணையம் மேற்கொள்கிறது.

**தேர்தல் ஆணையம்:**

நாட்டில் நியாயமான, நேர்மையான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்திட அரசமைப்பால் நேரடியாக உருவாக்கப்பட்ட நிரந்தரமான, சுயாட்சியான அமைப்பு தேர்தல் ஆணையம். அரசமைப்பு உறுப்பு 324. நாடாளுமன்ற இரு அவைகள், மாநிலச் சட்டமன்றங்கள், குடியரசுத்தலைவர், துணைக் குடியரசுத்தலைவர் தேர்தல்களைக் கண்காணித்தல், வழிகாட்டுதல், கட்டுப்படுத்துதல் ஆகிய அதிகாரங்களை தேர்தல் ஆணையத்துக்கு முழுமையாக வழங்குகிறது. இவ்வாறு, இந்திய தேர்தல் ஆணையம் மத்திய – மாநில அரசுகள் இரண்டுக்குமான பொது அமைப்பாக இயங்குகிறது.

மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளான பஞ்சாயத்துகள், நகராட்சிகளுக்கான தேர்தல்களை இந்திய தேர்தல் ஆணையம் நடத்துவதில்லை. என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இதையொட்டி மாநிலத் தேர்தல் ஆணையங்கள் அமைத்துக்கொள்ள அரசமைப்பு வழி வகுத்துள்ளது.

**இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம்:**

இந்திய அரசமைப்பு உறுப்பு 148, ஒரு சுயாட்சி அதிகாரம் கொண்ட இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம் (சி.ஏ.ஜி) அமைக்க வழிவகை வழங்கியுள்ளது. தலைமைக் கணக்குத் தணிக்கையாளரே இந்திய கணக்குக் மற்றும் தணிக்கைத் துறையின் தலைவர் ஆவார்.

அவரே அரசுக் கருவூலத்தின் பாதுகாவலர் எனலாம். மத்திய, மாநில அரசுகள் அனைத்தின் கீழ் இயங்கும் மொத்த நிதி அமைப்பினையும் கட்டுப்படுத்துகிறார்.

நிதி நிர்வாகம் தொடர்பில் இந்திய அரசமைப்பு வகுத்தளித்துள்ள விதிகள், இதனை அமலாக்கம் செய்ய நாடாளுமன்றம் இயற்றியுள்ள சட்டங்கள் ஆகியனவற்றின் படி கண்காணிப்பது இவர் கடமையாகும். இதனால் தான் அரசமைப்புப்படி "முக முக்கியத்துவம் கொண்ட அலுவலர் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்" என டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் கூறினார். இந்திய அரசின் மக்களாட்சி அமைப்பின் அரண்களில் அவர் ஒருவர். இதர அரண்கள்: உச்ச நீதிமன்றம், தேர்தல் ஆணையம், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகும்.

**நிதி நிர்வாகம்:**
**நிதி நிர்வாகத்தின் நோக்கங்கள்:**

வளர்ந்த நாடுகளின் கட்டுப்படுத்த இயலாத சந்தை வளர்ச்சி நிதி நிர்வாகத்துக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தியுள்ளது. இச்சந்தைகள் நிதி பற்றாக்குறைகள், பெரும் கடன்சுமை, மூலதன நிதி

பற்றாக்குறை இவையே இதன் பண்புகளாகும். அதேநேரம், நிலைத்த பொருளாதாரம், வளர்ச்சி, சுய – சார்பு, வருவாய் - செல்வப் பகிர்வு வீதத்தில் சமநிலை அனைத்துப் பகுதிகளில் வளர்ச்சி போன்றவற்றை இலக்காக கொண்டு நிதி கௌர்கைகள், நிர்வாகம் ஆகிய துறைகளில் ஊக்கங்களை ஏற்படுத்தும் முனைப்பில் வளரும் நாடுகள் உள்ளன. அரசு விவகாரங்கள் மேலாண்மையில் அரசியல் கொள்கைகள், பொருளாதார வல்லமை முக்கியம் என்ற போதிலும் நிதி நிர்வாகமும் முக்கியத்துவம் வாய்ந்த பங்கினைக் கொண்டுள்ளது.

1. பொதுத்துறை நிறுவனங்கள் நிதி மேலாண்மை
2. திட்டங்கள், நிரல்கள் அமலாக்கம்
3. பொது நலன் மற்றும் சமூக பணிகளுக்கான வழிகள்
4. வளர்ச்சி, வேலை வாய்ப்பு, விலைவாசி கட்டுப்பாடு
5. மூலதன உருவாக்கம்
6. தேசிய நிதியை படைப்பாக்கத்துடன் முதலீடு செய்தல்
7. நாடாளுமன்ற செயல்முறைகளை சீராக்குதல்
8. சமத்துவமும் சம பங்கும்

**நிதி நிர்வாகக் கோட்பாடுகள்:**

நிதி நிர்வாகத்தில் முக்கியக் கோட்பாடுகளாகக் கீழ்க்கண்டவற்றைப் பட்டியலிடலாம்.

1. பொது நலன், மக்கள் தேர்வு, மக்கள் கொள்கை ஆகியனவற்றை முதன்மையாகக் கொண்ட கொள்கை
2. அரசியல் வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டுக் கோட்பாடு
3. தொடர்புக் கோட்பாடு
4. நிறுவனத்தினையும் மேலாண்மையையும் ஒருங்கிணைக்கும் கோட்பாடு
5. நீடித்த தன்மை, சமநிலை கோட்பாடு
6. எளிமை, நெகிழ்வுத்தன்மை கோட்பாடு
7. நடத்தை, ஒழுக்கம், சீர்மை கோட்பாடு
8. மக்கள் நம்பிக்கை, கடமைப்பாடு கோட்பாடு

**இந்திய நிதி நிர்வாக வரலாற்றின் நான்கு முக்கியக் கால கட்டங்கள்:**

**கால கட்டம் 1 (1765 – 1858) –**அமைப்பு உருவாக்கம் மற்றும் ஸ்திரப்படுத்துதல்

**கால கட்டம் 2 (1860 – 1919)** – முறைமைகள், செயல்பாடுகள் மேம்பாடு.

**கால கட்டம் 3 (1919 – 1947) –**மக்களாட்சிப் படுத்துதல், அதிகாரப்பரவலாக்கல்

**காலகட்டம் 4 (1950 முதல் இன்று வரை)** - மக்கள் மயப்படுத்துதல்.

**புதிய வளரும் போக்குகள் - இந்திய நிதி நிர்வாகம்:**

1. நீதிப்பாற்றாக்குறையை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல்.
2. வளர்ச்சிசாரா செலவினங்களைக் குறைத்தல்
3. பற்றாக்குறை இல்லாத (ஜீரோபேஸ்) நிதிநிலை கண்ணோட்டம் உருவாதல்
4. பொதுத் துறை மீதான அழுத்தம் குறைத்தல்.

5. மக்கள் நலன்கள், பணிகளில் அதிகாரவர்க்க மனோநிலை நீக்கம்
6. நிதி மேலாண்மை திட்டங்களில் மைய நீக்க பொறுப்புணர்வில் கவனப்படுத்துதல்.
7. தாராளமயம், கட்டுப்பாடுகளை அகற்றுதல்

**நிதிநிலை அறிக்கை தாக்கலும் அமலாக்கமும்**

**நிதிநிலை அறிக்கை சுற்று:**
ஒரு நிதிநிலை அறிக்கையின் செயலாக்கம் அதற்கான சட்டம் இயற்றும் நடைமுறைகளைக் கணக்கில் கொண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் ஒரு காலச்சுற்று முறையைக் கணக்கில் கொள்கிறது. நிதிநிலை அறிக்கை நாடாளுமன்ற ஒப்புதல் பெறுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

காலச்சுற்று கீழ்க்காணும் கட்டங்களைக் கொண்டுள்ளது.

- ❖ தயாரிப்பு மற்றும் தாக்கல்
- ❖ ஒப்புதல்
- ❖ நிர்வாகம், தணிக்கை

ஒரு குறிப்பிட்ட காலத்தில் பல சுற்றுகள் நடைபெறலாம். மீறப்படலாம். பல சுற்றுப்பிரிவுகள் வெவ்வேறு காலகட்டங்களைக் கொண்டுள்ளன.

**நிதிநிலை அறிக்கை தாக்கல்:**

நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் செயல்முறைகள், நிதிநிலை அறிக்கை தாக்கல் காலத்திலிருந்து ஆறு மாதங்கள் முன்பாக, பொதுவாக செப்டம்பர் ∴ அக்டோபர் மாதங்களில், நிதி அமைச்சகத்திடமிருந்து சுற்றறிக்கை பெறப்பட்டதும் தொடங்குகிறது. அந்த சுற்றறிக்கை நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் திட்டம் சார் அம்சங்கள், திட்டம் சாரா அம்சங்கள், வழிகாட்டுதல்கள் என ஒவ்வொன்று குறித்தும் இறுதி மதிப்பீடுகள் சமர்பிக்க தொடர்புடைய துறைகளுக்கு ஒரு கால அளவை நிர்ணயம் செய்து அறிவிக்கும். பொதுவான விதி என்னவென்றால் யார் நிதியை செலவளிக்கப்போகிறார்களோ அவர்களே நிதிநிலை மதிப்பீடுகளையும் உருவாக்க வேண்டும் என்பது ஆகும். நிதி அறிக்கை முன்மொழிவுகள் கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டிருக்கும்.

1. கணக்குகள் வகைமைப்படுத்துதல்
2. நடப்பு ஆண்டின் நிதிநிலை மதிப்பீடுகள்
3. நடப்பு ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகள்
4. கடந்த ஆண்டின் அசல் செலவினங்கள்
5. அடுத்த நிதி ஆண்டுக்கான முன்மொழிவுகள் மதிப்பீடுகள்

**நிதி ஆண்டு**

1860 இல் முதல் நவீன நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட போது நிதி ஆண்டு என்பது மே 1 முதல் ஏப்ரல் 30 வரை என்பதாக இருந்தது. இது 1866-இல் இங்கிலாந்து அரசின் நடைமுறையை ஒட்டி ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை என மாற்றிக் கொள்ளப்பட்டது.

**அமர்த்தியா சென் - ஜெகதீஷ் பகவதி இரு மேதைகளின் விவாதம்:**

பொருளாதார கொள்கை குறித்த விவாதங்கள் இன்று நடப்பதுபோல் என்றும் நடந்ததில்லை. உலக, பொருளியல் கல்விப் புலத்தில் இரு பெரும் வல்லுனர்கள் எனக் கருதப்படும் அமர்த்தியா சென் - ஜெகதீஷ் பகவதி இருவரும் இந்திய ஆளும் அமைப்பு எதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என கடும் விவாதங்களில் ஈடுபட்டனர். ஹார்வர்டு பல்கலைக்கழக பொருளாதார, தத்துவ துறை பேராசிரியர் சென் பொருளாதாரத்துக்கான நோபல் விருது பெற்றவர். கொலம்பியா பல்கலைக்கழக பொருளாதார பேராசிரியர் பகவதி உயர் விருதுகளுக்காகப் பல முறை பரிந்துரைக்கப்பட்டவர். இருவருடன் அவினேஷ் தீட்சித் என மூவரும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களாகக் கருதப்படுகிறார்கள்.

**சென் :** பகவதி விவாதங்கள் இந்திய அரசியல் தலைவர்கள் மத்தியில் பெரும் கேள்விகளை எழுப்பின.

மக்களின் உற்பத்தித் திறனும் வளர்ச்சியும் அதிகரிக்க வேண்டுமானால் இந்தியா தனது சமூக கட்டமைப்பில் அதிக முதலீடு செய்யவேண்டும் என சென் வலியுறுத்தினார். பொருளாதார வளர்ச்சி அதிகரித்தால் மட்டுமே போதும், அதன்மூலம் சமூகத் திட்டங்கள் தொடங்கத் தேவையான மூலதனம் கிடைத்துவிடும் என பகவதி வாதிட்டார். மனித செயலாற்றலை அதிகரிக்க சுகாதாரம் மற்றும் கல்வியில் அதிக முதலீடு தேவை என்பது சென் சிந்தனையின் மையமாக இருக்கிறது. இத்தகைய முதலீடுகள் இல்லாமல் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முடியாது என சென் நம்புகிறார். ஆனால் வளர்ச்சியால் தொடக்கத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கலாம், தொடக்கத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கலாம். அனால், தொடர் வளர்ச்சி மூலம் அரசுக்கு தேவையான வளங்கள் பெருகும். மறு பகிர்வு மூலம் தொடக்க ஏற்றத்தாழ்வினைக் கட்டுப்படுத்த முடியும் என பகவதி கூறுகிறார்.

| வரி வகைகள் | |
|---|---|
| **அரசுக்கு நேரடியாக வரி செலுத்துவோர்** | **உற்பத்தி மற்றும் பொருள்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட் வரிகள்** |
| **நேரடி வரிகள்** | **மறைமுக வரிகள்** |
| வருமான வரி | சேவை வரி |
| செல்வ வரி | பொழுதுபோக்குவரி |
| நிறுவன வரி | சுங்க வரி |
| மூலதன ஆதாயங்கள் வரி | பொருள்கள் மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) |
| பங்கு பரிவர்த்தனை வரி | முத்திரை வரி |
| | கலால் வரி |
| | விற்பனை வரி |
| | ஆடம்பர வரி |
| | குறிப்பு: சரக்கு மற்றும் சேவை வரி |

**ஜி.எஸ்.டி. அளவு:**

**ஜி.எஸ்.டி வரி அளவு 5%** - ஸ்கீம்மர், பால் பவுடர், மீன் உரங்கள், தேயிலை உள்ளிட்டவை.

**ஜி.எஸ்.டி. வரி அளவு 12%** - வெண்ணெய், பாலாடைக்கட்டி, ஊறுகாய், பழச்சாறுகள், பற்பசை, மருத்துவம்.

**ஜி.எஸ்.டி. வரி அளவு 18%** - பனிக்கூழ், கைப்பெட்டி, குடிநீர், கைகடிகாரம், கதவு

**ஜி.எஸ்.டி. வரி அளவு 28%** - பான் மசாலா, சலவை இயந்திரம், வெற்றிட சுத்தப்படுத்திகள், இயந்திர வாகனங்கள், இயந்திர மிதிவண்டி.

**ஜி.எஸ்டி. – க்குள் வராத பொருள்கள்:**

சமையல் எரிவாயு, பெட்ரோல்,டீசல், வான் எரிபொருள், இயற்கை எரிவாயு. மது ஆகியவை

## அலகு– 7

## தேச கட்டமைப்பின் சவால்கள்

**சுதேச அரசுகள் ஒன்றிணைப்பு**
**இந்தியாவில் சுதேச அரசுகளின் தோற்றம்**

பெரிய அளவிலான நிர்வாக மாகாணத்தில் ஒரு சிறிய அரசியல் அமைப்பே சுதேச அரசு என்பதாகும். அது பெரும் முடியாட்சியில் நேரடியாகவோ அல்லது துணைக் கூட்டமைப்பாகவோ ஆட்சி செய்வதாகும். இந்த சிறிய நிர்வாகப் பகுதியானது அரசியல், கலாச்சார, மொழி மற்றும் பூகோள அமைப்பு அடிப்படையில் அமைந்திருக்கும் கி.பி. (பொ.ஆ) 200-ல் மத்திய ஆசிய பகுதியிலிருந்து இந்தியக் துணைக் கண்டத்திற்கு புலம் பெயர்ந்து வந்த இராஜபுத்திரர்களால் சுதேச அரசுகள் தொடங்கப்பட்டது. இராஜபுத்திரர்கள் என்றால் அரசர்களின் இளவரசர்கள் என்பது பொருளாகும். எனவே இந்தியாவில் சுதேச அரசுகள் முகலாயர் மற்றும் ஆங்கிலேயர் வருகைக்கு முன்னரே ஏற்படுத்தப்பட்டுவிட்டது. இராஜபுத்திரர்கள் அல்லாமல் நவாப் மற்றும் நிஜாம்களாலும் சுதேச ஆட்சிகள் நடைபெற்றன. மைசூர், திருவிதாங்கூர் மற்றும் புதுக்கோட்டை பகுதிகள் உள்ளூர் அரச வம்சங்களால் ஆட்சி செய்யப்பட்டன. இந்த அனைத்து வகை முடியாட்சி முறைகளும் பிரிட்டிஷ் இந்தியாவில் சுதேச அரசுகள் என்றழைக்கப்பட்டன. இந்த வகை அரசுகள் பிரிட்டன் ஆளுகைக்குகீழ் கட்டுப்பட்டது என்பதனை குறிக்க இந்த சுதேச அரசுகள் என்ற சொல் வேண்டுமென்றே கையாளப்பட்டது.

**சுதேச அரசுகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகள்:**

முன்பே குறிப்பிட்டது போன்று துண்டுதுண்டாகக் காணப்பட்ட சுதேச அரசுகளை ஒருங்கிணைக்கும் முயற்சி சுதந்திரத்திற்கு முன்பிருந்தே குறிப்பாக காலனிய ஆதிக்கத்திற்கு முன்பே நீண்ட வரலாற்றை கொண்டிருக்கிறது. பல சிறிய அரசுகளை இணைத்து பேரரசுகளாக மாற்றும் முயற்சியானது ஆறாம் நூற்றாண்டிலேயே தொடங்கியது. மகத பேரரசு காலத்தில் பிம்பிசாரர் மற்றும் அஜய்சத்ரு ஆகியோரால் இம்முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. பின்பு வந்த மௌரியர்கள் காலத்தில் அசோகர் மற்றும் 5ஆம் நூற்றாண்டுகளுக்கு பின்னர் வந்த சந்திரகுப்தர், அவரது மகன் சமுத்திரகுப்தர் போன்றவர்களால் சிற்றரசுகள், தங்கள் பேரரசின் கீழ் செயல்படும் சுதந்திர அரசுகளாக நிர்வகிக்கப்பட்டனர். பல சுதேச அரசுகள் தங்களின் தன்னாட்சி உரிமையை முழுமையாக அனுபவிப்பதுடன் போர்க்காலங்களின் போது பேரரசுகளுக்கு விசுவாசமாக நடந்து கொண்டனர். இருந்தபோதிலும், பேரரசர்களுக்கும், சிற்றரசர்களுக்கும் இடையே அதிகாரப் போட்டி, பொறாமை மற்றும் வெறுப்புணர்ச்சி ஆகியன நம்பிக்கையின்மையையும், ஒற்றுமையின்மையையும் எற்படுத்தின. இதன் விளைவாக அரபு மற்றும் பாரசீக படையெடுப்புகளுக்கு வாய்ப்பளித்தன. வடஇந்தியா முழுவதும் முகலாய பேரரசு தனது ஆதிக்கத்தினை நிலைபெறச் செய்துக் கொண்டது.

**பிரிட்டிஷ் ஆட்சியில் சுதேச அரசுகள்**

1. **குண்டு முழங்கி மரியாதை செய்யும் முறை:**

   இம்முறையானது ஐரோப்பியர்களின் காலனி ஆதிக்கத்தின்போது ஆங்கிலேயர்கள், போர்த்துகீசியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களால் கடைபிடிக்கப்பட்டது. முதலில் தங்கள் வியாபாரத் தொடர்புப் பகுதிகளிலும் பின்பு பிறபகுதிகளிலும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதற்கான குறியீடாக இதனை பயன்படுத்தினர். குறிப்பாக இம்மூன்று காலனிய அரசுகளில் பிரிட்டிஷ் அரசானது சில சுதந்திர அரசுகளுக்கான இறைமை உரிமையை தங்கள் மன்னராட்சி முறைக்கு உள்பட்டு வழங்கின. சுதந்திரத்துக்கு முன்னர் இந்தியாவில் சுதேச அரசுகளின் எண்ணிக்கை 565 ஆக இருந்தது. இதன் அதிகாரமானது பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியால் வழங்கப்பட்ட குண்டு முழங்கும் மரியாதை அடிப்படையில் அமைந்திருந்தன. இவை இரண்டு விதமாக காணப்பட்டன. ஒன்று குண்டு முழுங்கி மரியாதை செய்யும் சுதேச அரசுகள் என்றும், மற்றொன்று குண்டு முழங்கும் உரிமை அற்ற சுதேச அரசுகள் என்று பிரிந்திருந்தன.

2. **குண்டு முழங்கும் மரியாதை பெற்ற அரசர்கள்:**

பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தால் குண்டு முழங்கும் மரியாதை வழங்கப்பட்ட சுதேச அரசுகளின் எண்ணிக்கை சுமார் 117-லிருந்து 120-வரை இருக்கலாம். இந்த அரசுகளின் தலைவர்கள், ஆட்சியாளர்கள் அல்லது இளவரசர்கள் அம்மரியாதைக்கு உட்பட்டவர்களாக இருந்தனர். இவர்களுக்கு வழங்கப்படும் இவ்வுரிமையானது முழங்கப்படும் குண்டுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதன் சிறப்பு நிலை அறியப்பட்டது. மிக அதிக மரியாதைக்குரிய சுதேச அரசுகளுக்கு 21 குண்டுகள் எனவும் அதனிலும் குறைவான சுதேச அரசுகளுக்கு 9குண்டுகள் எனவும் இது அமைந்திருந்தது. சில சுதேச அரசுகள் 21 குண்டுகளை முழங்கும் உரிமை பெற்று இருந்தன. அவையாவன

- ❖ மாட்சிமை தாங்கிய மகாராஜா குவாலியர் மன்னர் சிந்தியா
- ❖ மாட்சிமை தாங்கிய பரோடா மகாராஜா கேக்வார்
- ❖ மாட்சிமை தாங்கிய ஜம்மு – காஷ்மீர் மகாராஜா
- ❖ மாட்சிமை தாங்கிய மைசூர் மகாராஜா
- ❖ மாட்சிமை தாங்கிய ஐதாராபாத் மற்றும் பிரார் நிஜாம்கள்

சில சுதேச அரசுகள் 9 குண்டுகள் முழங்கும் உரிமையை பெற்றிருந்தன. அவையாவன

- ❖ சச்சின் நவாப்
- ❖ பாட்னா மகாராஜா
- ❖ வாத்வான் மகாராஜா
- ❖ லாகரு நவாப்

**3. குண்டு முழங்கும் உரிமை பெறாத சுதேச அரசுகள்:**

565 சுதேச அரசுகளில் 117 முதல் 120 வரை மட்டுமே குண்டு முழங்கப்படும் உரிமையை பெற்றிருந்தன.

பிற சுதேச அரசுகள் பிரிட்டிஷ் அரசுகளுக்கு கீழ் இருந்தபோது குண்டு முழங்கும் உரிமை வழங்கப்படவில்லை. குண்டு முழங்கும் உரிமையோ அல்லது முழங்காத உரிமையோ, குண்டுகளின் எண்ணிக்கை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காணப்பட்டது. அரசின் உண்மை நிலையை பிரதிபலிக்கவில்லை. சில சுதேச அரசுகள் எந்தவித குண்டு மரியாதையையும் பெறாமல் இருந்ததற்கான வேறு காரணங்களும் இருந்தன. அவையாவன:

1. சில சுதேச அரசுகள் இம்முறையை தங்களுக்கான மரியாதைக் குறைவாகக் கருதினர்.
2. சில சுதேச அரசுகளின் ஆட்சி மாறின. ஆனால் தங்களது அரசப் பட்டங்களையும் ஓய்வூதியத்தையும் பயன்படுத்தினர்.

**இந்தியாவில் சுதேச அரசுகள்:**

விடுதலைக்கு முன்பு பல சுதேச அரசுகள் காலனிய பிரிட்டன் அரசின் ஆதரவுடன் இயங்கின. பிரிட்டிஷ் அரசின் கீழ் சுதேச அரசுகளாக இயங்கியதால் இதுவரை பெற்றிருந்த சலுகைகளை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் சுதேச அரசுகள் ஒருங்கிணைப்பு என்ற யோசனையை அவர்கள் ஏற்கவில்லை. பல அரசர்கள் விடுதலைக்குப் பின்னர் தன்னாட்சியுடன் கூடிய சுதந்திர அரசுகளை அமைத்துக்கொள்ளும் வாய்ப்புக்காக காத்திருந்தனர். இந்த சுதேச அரசுகள் ஒருங்கிணைப்பு என்பது பிரிட்டனின் ஆட்சிக்கு முடிவு கட்டவும். சுதேச அரசுகள் மற்றும் மாகாணங்கள் கலைக்கப்படுவதுடன் பிரிட்டிஷ் காலனிய ஆட்சிக்கு முடிவு கட்டுவதையும் நோக்கமாக கொண்டதாகும். அரசயில், இராஜதந்திர பேச்சு வார்த்தைகள் மற்றும் வன்முறை ஆகியவற்றுக்கு இடையே சுதேச அரசுகள் ஒருங்கிணைப்பு செயல்கள் 1947-இல் நிகழ்ந்தன. பிரிட்டனின் அன்றைய பிரதமர் கிளெமென்ட் அட்லி பொதுச்சபையில் மார்ச் 15, 1946 அன்று உரையாற்றும் போது இந்தியாவிற்கான விடுதலையை அங்கிகரித்தார். அப்போது விடுதலைப் போராட்டத்தையும், அதில் உயிர்த்தியாகம் செய்தோரையும் நினைவு கூர்ந்தார். மேலும் புதிய இந்தியாவில் அதன் பன்முகப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் கட்டிக்காப்பதில் ஏற்பட உள்ள சவால்களை குறிப்பிட்டு பேசினார். ”இந்தியா பல இனங்கள், மதங்கள் மற்றும் மொழிகள் கொண்ட நாடு என்பதையும் அதனால் உருவாகும் பல்வேறு பிரச்சனைகள் குறித்தும் நன்கு அறிவேன். ஆனால், இத்தகைய தடைகளை இந்தியர்களே எதிர்கொண்டு வெற்றி பெறவேண்டும். சிறுபான்மையோர் உரிமைகள் எப்போதும் நமது சிந்தனையில்

இருக்க வேண்டும். அவர்கள் அச்சம் இல்லாமல் வாழும் சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்” என்றார்.

இருந்தபோதிலும் தேச கட்டமைப்பு செயல்பாடுகளும் சுதேச அரசுகள் ஒருங்கிணைப்பும் பேச்சுவார்த்தைகளும் ஏப்ரல் 1947-இல் தொடங்கின. தேச கட்டமைப்பின் போது மதக்கலவரம், தேசப் பிரிவினை மற்றும் அகதிகள் பிரச்சனை ஆகிய பிரச்சனைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. சர்தார் வல்லபாய் பட்டேல் துணை பிரதமராகவும் உள்துறை அமைச்சராகவும் பதவியேற்றவுடன் 565 சுதேச அரசுகளின் ஒருங்கிணைப்பு தொடங்கியது. மூன்று பிரிட்டிஷ் வைசிராய்களுடன் பணியாற்றிய வி.பி. மேனன் பட்டேலின் செயலாளராக பொறுப்பேற்று அதற்கான களப்பணிகளை மேற்கொண்டார்.

பட்டேலும், வி.பி. மேனனும் சுதேசி அரசர்களிடம் அரசியல் நிர்ணய சபையில் இணைய செய்தனர். அவர்களின் சுதேச அரசுகளின் சொத்துக்கள் உடமைகள் பறிமுதல் செய்யப்படாது என்று உறுதிமொழி அளிக்கப்பட்டது. பல சுதேச அரசுகள் இந்தியாவுடன் இணைய ஒப்புதல் அளித்தனர். ஜூனாகத், காஷ்மீர் மற்றும் ஐதராபாத் சுதேச அரசர்கள் தனித்திருக்க விரும்பினர்.

**ஜூனாகத் :**
ஜூனாகத் நவாப் அல்லது அவரின் திவான் ஷா நவாஸ் (பாகிஸ்தான் முன்னாள் அதிபர் ஜில்பிகார் அலி பூட்டோவின் தந்தையார்) இணைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. ஜூனாகத்தை சுற்றியுள்ள மற்ற மூன்று அரசுகள் இந்தியாவின் அங்கமாக இருந்தன. நான்காவது பகுதி அரபிக்கடல் அந்த பகுதி மக்கள் பெரும்பாலோர் முஸ்லிம் அல்லாதோர். இருந்தபோதிலும் திவான் பூட்டோ பாகிஸ்தானோடு ஆகஸ்ட், 15 1947 அன்று இணைந்து விட்டார். இதனைக் கண்டித்து பொதுமக்கள் எதிர்த்து போராட்டங்கள் நடத்தினர். ஜூனாகத் இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று கோரினார். திவான் தனது குடும்பத்தினருடனும் அரசு கஜானாவுடனும் பாகிஸ்தானின் அன்றைய தலைநகர் கராச்சிக்கு தப்பி சென்று விட்டார். நீண்ட போராட்டத்திற்கு பிறகு ஜூனாகத் இந்தியாவோடு இணைந்தது.

**ஐதராபாத்:**

நிஜாம் தலைமையிலான ஐதராபாத் மற்றொரு சுதேச அரசாகும். முஸ்லிம்கள் அல்லாதோர் பெரும்பான்மையினராக இருந்தனர். அவர் தன்னாட்சி உரிமையை எதிர்பார்த்தார். இது குறித்து நீண்ட வாதங்கள் நடைபெற்றன. மவுண்ட்பேட்டன் பிரபு ”டொமினியன்” நிலை அளிக்க மறுத்து விட்டார். ”டொமினியன்” என்றால் பிரிட்டிஷ் காமன்வெல்த் கூட்டமைப்பில் தன்னாட்சி அரசாக விளங்கும் நிலையைக் குறிப்பதாகும். உண்மையில் அப்போது காசிம் ரஷ்வி எனும் மதவாதத் தலைவரின் செல்வாக்குக்கு நிஜாம் அடிமைப்பட்டிருந்தார். ஆயுதம் தாங்கிய அமைப்பான இந்தேகத்-உல்-முசுல் மான் எனும் அமைப்பின் தலைவராக ரஷ்வி இருந்தார். இந்த அமைப்பினர் “ரசாக்கர்“ என அழைக்கப்பட்டனர். மேலும் 1943-இல் கம்யூனிஸ்ட் கட்சி மீதிருந்த தடையையும் நீக்கினார் நிஜாம். ராசாக்கார்களும் கம்யூனிஸ்ட்களும் இணைந்து வன்முறையில் முடிந்தது. ரயில் வண்டிகள் தாக்கப்பட்டது. இதன் பின்பு, செப்டம்பர் 1948-இல் இந்திய ராணுவம் ஐதராபாத்திற்குள் நுழைந்து கலவரத்தை அடக்கியது. இந்தியாவுடன் இணைவதாக நிஜாம் அறிவித்தார். நிஜாமுக்கு ஏராளமான செல்வமும் சலுகைகளும் அளிக்கப்பட்டன.

தெலுங்கானாவில் நில் உடைமையாளருக்கு எதிராக கம்யூனிஸ்ட்கள் கிளர்ச்சி செய்தனர். இதன் விளைவாக வினோபாபாவே ஆரம்பித்த பூமி தானம் இயக்கம் தொடங்கப்பட்டது. பூமி தானம் என்றால் அதிகமான நிலம் வைத்திருப்போரிடம் கோரிக்கை வைத்து தானமாக நிலம் பெறுவதாகும். மகாத்மா காந்தியின் சீடரான வினோபாபாவே இவ்வியக்கத்தினை ஆரம்பித்து அதன் மூலம் பல நிலங்கள் பெற்று நிலமற்ற விவசாயிகளுக்கு அளித்தார்.

**ஜோத்பூர்:**

ஜோத்பூர் அரசு முதலில் இந்தியாவுடன் இணைவதாக இருந்தது. ஹன்வந்த் சிங் அரசு பொறுப்பேற்றதும் பாகிஸ்தானுடன் இணைய முடிவு செய்தது. பாகிஸ்தான் சார்பில் கராச்சி துறைமுகத்தை சுதந்திரமாக பயன்படுத்திக் கொள்ளவும், ஆயுதங்களை உற்பத்தி செய்து கொள்ளவும் மற்றும் ஆயுதங்களை இறக்குமதி செய்துக் கொள்ளவும் ஹன்வந்த் சிங்க்கு உரிமை வழங்குவதாக முகமது அலி ஜின்னா அறிவித்தார். இதனை அறிந்த பட்டேல், மகாராஜா ஹன்வந்த் சிங்கிற்கு சிறப்பு சலுகைகள் வழங்குவதாக கூறினார். அச்சலுகைகளின் படி ஆயுதங்கள் இறக்குமதி

செய்து கொள்ளவும், ஜோத்பூர் - கத்திவார் இடையே இரயில் போக்குவரத்து அமைத்துக் கொள்ளவும், பஞ்சகாலங்களில் தமது விவசாயிகளுக்கு உணவு தானியங்களை விநியோகித்துக் கொள்ளவும் உரிமைகள் வழங்குவதாக அறிவித்தார். மேலும் இந்துக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஜோத்பூர் பாகிஸ்தானில் இணைந்தால் மதக்கலவரம் ஏற்படும் என்ற அச்சத்தின் காரணமாக இந்தியாவுடன் இணைய சம்மதித்தது.

**காஷ்மீர்:**

சுதந்திரத்திற்கு பின்பு இந்து மகாராஜா ஹரிசிங் ஆட்சி செய்த காஷ்மீர் மட்டுமே சுதேச அரசாக இருந்தது. காஷமீரில் பெரும்பான்மையாக முஸ்லிம் மக்கள் இருந்ததால் அப்பகுதி, தங்கள் நாட்டோடு இணைந்துவிடும் என்று பாகிஸ்தான் நினைத்தது. ஆகஸ்டு 15, 1947 அன்று மகாராஜா ஹரிசிங்கினால் முன்மொழியப்பட்ட நிரந்தர ஒப்பந்தமானது, பாகிஸ்தானில் மக்கள் குடியேறவும், பொருள்களை கொண்டு செல்லவும் அனுமதித்தது. இதனை இந்தியா கண்டித்த போதும், பாகிஸ்தான் அலட்சியம் செய்தது. காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் தொடர்ந்த அத்துமீறியது. இதனால் பதற்றமான சூழல் உருவாகியது.

மகாராஜா ஹரிசிங் இந்தியாவிடம் இராணுவ உதவி நாடினார். இதனை அறிந்த மவுண்ட்பேட்டன் பிரபு பன்னாட்டு சட்டங்களின்படி இந்திய இராணுவத்தை அனுப்புவதற்கு இந்தியாவும், காஷ்மீர் மகாராஜாவும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டார். இதன்படி 1954 அக்டோபர் 26-ம் நாள் ஹரிசிங் உடன்படிக்கை மேற்கொண்டார். அதற்கு மறுநாள் 1954 அக்டோபர் 27-ம் நாள், இந்திய இராணுவம் காஷ்மீருக்கு அனுப்பப்பட்டு அங்கு அமைதி ஏற்படுத்தப்பட்டது.

**மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் மறுசீரமைப்பு:**

**விடுதலைக்கு முன்பு:**

விடுதலைப் போராட்ட இயக்கத்தின் போது மக்களைத் திரட்டுவதில் மொழி உணர்வு குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தது. எனவே விடுதலைக்கு பின்னர் தேசத்தைக் கட்டியமைப்பதிலும் மொழிவாரி மாநிலங்கள் அமைப்பதன் இன்றியமையாமையை உணர்ந்து செயல்படுத்தப்பட்டது. அன்னிபெசன்ட் அம்மையார், தன்னாட்சி இயக்கம் (ஹோம் ரூல்) தொடங்கிய போதே தென்னிந்தியாவின் பங்கேற்பு அதிகமாக இருந்தது. மொழி அடிப்படையில் மறுசீரமைப்பு என்பது 1917-ல் காங்கிரஸ் கட்சியால் தொடங்கப்பட்டது. 1920-களில் மாநிலங்கள் மொழி அடிப்படையில் அமைய திட்டமிடப்பட்டது. நிர்வாகத்திற்கும் அடிப்படைக் கல்விக்கும் உள்ளூர் மொழிகளின் தேவை அப்போதே உணரப்பட்டது.

பல மாநிலத் தலைவர்கள் மொழிவாரி மாநிலங்களை விரும்பினர். குறிப்பாக, அன்றைய சென்னை மாகாணத்தில் தெலுங்கு தேச மக்களைக் கொண்ட பகுதிகளை இணைத்து தனி ஆந்திர பிரதேச காங்கிரசு குழு அமைக்கவேண்டுமென்று அப்பகுதி காங்கிரசு தலைவர்கள் கோரினர். மொழிவாரி மாநிலங்களுக்கான கோரிக்கைகள் அதிகரித்ததை கவனத்தில் கொண்டு மொழி அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைக்கும் பணிகள் 1927-இல் தொடங்கின. நீண்ட போராட்டத்திற்கு பிறகு 1895-இல் ஒடிசா மாநிலத்திலிருந்து பீகார் தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று போராட்டம் எழுந்தது. நீண்ட போராட்டத்திற்கு பின்னர் ஒரிசா மாகாணத்திலிருந்து பீகார் பிரிக்கப்பட்டது. ஆகவே விடுதலைக்கு முன்பு 1936-ஆம் ஆண்டு மொழி அடிப்படையில் ஒடிசா மாநிலம் அமைக்கப்பட்டது. இதுவே மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்ட முதல் மாநிலமாகும். லோகமான்ய திலகர், அன்னி சென்ட் மற்றும் மகாத்மா காந்தி ஆகியோர் மொழி வாரி அடிப்படை மாநிலங்களுக்கு ஆதரவு அளித்தனர்.

**விடுதலையின் போது:**

இந்தியா விடுதலை அடைந் போது, மொழி அடிப்படையில் மாகாணங்கள் அமைந்தால் மதப்பிரச்சினை போன்று இதுவும் பதற்றத்தை உருவாக்கிவிடுமோ என்று அச்சமுற்றனர். இறுதியில் 1948-ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில், மொழிவாரி மாகாண ஆணையம் (LPC) அமைத்து நீதிபதி எஸ்.கே.தர் தலைமையில், மொழிவாரி மாகாண அமைப்புக்கான நடைமுறை குறித்து மதிப்பீடு செய்யப்பட்டது. இந்த ஆணையமே ”தர்“ ஆணையம் என்றழைக்கப்பட்டது. ஆனால் தேச

ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதாலும் நிர்வாக சிக்கல் ஏற்படும் என்பதாலும் மொழிவாரிய மாநிலங்கள் பிரிக்கப்படுவதை தர் ஆணையம் ஆதரிக்கவில்லை.

ஆனால் இந்த முடிவினை இந்திய மக்கள் ஏற்கவில்லை. குறிப்பாக தனித்த மொழி அடையாளம் உள்ள மாநிலங்கள் இதனை விரும்பவில்லை. இதன் காரணமாக, 1948-ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவரான பட்டாபி சீத்தாராமையா ஆகியோரைக் கொண்ட ஜே.வி.பி. (JVP) குழுவினை உருவாக்கி மொழிவழி மாநில அமைப்பு கோரிக்கை குறித்து பரிசீலிக்க உத்தவிட்டார்.

**ஜே.வி.பி. குழு:**

தொடக்கத்தில் இக்குழு மொழிவாரி அடிப்படையிலான மாநிலங்கள் உருவாவதை பிடிவாதமாக எதிர்த்தது. ஒற்றுமை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை காரணம் காட்டியது. ஆனால் மக்கள் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு இயக்கங்களும் எழுந்து 1960-கள் வரை நீடித்தது. ஆகவே இக்குழு பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு இணங்க மொழிவாரி மாநிலங்கள் அமைக்க பரிந்துரைத்து அறிக்கை தயாரித்தது.

**முதல் மொழிவாரி மாநிலம்:**

சுதந்திர இந்தியாவில் முதல் மொழிவழி மாநிலமாக ஆந்திரபிரதேசம், தெலுங்கு பேசும் மக்களின் விருப்பத்திற்கேற்ப உருவாக்கப்பட்டது. ஆந்திர மாநிலம் அமைக்கச் கோரி பொட்டி ஸ்ரீராமலு சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார். போராட்டத்தின் 65-வது நாள் உயிர் நீத்தார். இதன் பிறகு போராட்டம் மேலும் தீவிரமானது. தெலுங்கு பேசும் மக்களின் நெருக்கடிக்கு நேரு பணிந்தார். தெலுங்கு பேசும் மக்களைக் கொண்ட ஐதராபாத், ஆந்திர பகுதிகளை இணைத்து 1956-இல் ஆந்திர மாநிலமாக ஜவஹர்லால் நேரு அறிவித்தார்.

**மாநில மறுசீரமைப்பு ஆணையம்:**

மொழிவாரி மாநில கோரிக்கைகளுக்காக நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் பெரும் கலவரங்களும், எதிர்ப்பு இயக்கங்களும் நடைபெற்ற காரணத்தினால் பிரதமர் ஜவகர்லால் நேரு, தனி மாநில கோரிக்கைகளை பரிசீலிக்க பசல் அலி தலைவராகவும் ஹெச்.என். குன்ஸ்ரு மற்றும் கே.எம். பணிக்கர் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழுவை அமைத்தார். இக்குழு தனது அறிக்கையை 22.10.1953 அன்று சமர்ப்பித்தது. இக்குழு மொழிவாரி மாநிலம் அமைப்பதற்கு நான்கு அம்சங்களை வரையறுத்தது. இதற்கான பரிந்துரைகள் 1955 செப்டம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது.

1. **மொழி மற்றும் பண்பாட்டு ஒத்த தன்மை:**

   ஒரே மொழி பேசும் மக்களைக் கொண்ட மாநிலமாக இருப்பின் தனி மாநிலக் கோரிக்கையை நிராகரிக்கலாம். ஏனெனில், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் மாநிலங்கள் உள்ளன. மேலும், பல மாநிலங்களின் ஒரே மொழிப் பேசும் சமூகம் காணப்படுகிறது. உதாரணத்திற்கு, பல வட இந்திய மாநிலங்களில் இந்தி மொழி பேசப்படுகின்றது.

2. **நிதி, பொருளாதார மற்றும் நிர்வாக கருதுகோள்கள்:**

   அரசியல் பொருளாதார மற்றும் நிர்வாக செயல்பாடுகள் அனைத்து பகுதி மக்களும் சரிசமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். ஏனென்றால் இந்திய அரசமைப்பு சட்டம், சம உரிமைகள் மற்றும் அனைவருக்குமான வாய்ப்புகள் என்ற நிலைப்பாட்டினை வலியுறுத்துகிறது. மொழி நிர்வாகப் பயன்பாட்டில் உதவிகரமானது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இருந்தபோதும் பிற நிர்வாக, நிதி மற்றும் அரசியல் போன்ற அம்சங்களைப் புறக்கணித்து விட்டு மொழியை மட்டுமே ஒருங்கிணைப்பு அம்சமாகக் கொள்ளக்கூடாது.

3. **தேசத்தின் ஒற்றுமை மற்றும் பாதுகாப்பினை வலுப்படுத்தி பராமரித்தல்:**

   மொழிவாரி மாநிலங்கள் அமைந்தால் குறிப்பிட்ட பிரிவு மீது மட்டும் அனுதாபம் கொள்ளும் நிலை உருவாகும் என்பதையும், நமது தேசிய உணர்வுக்கும், பன்மைத்துவத்துக்கும் எதிரானது

என்பதையும் ஒற்றை மொழி பேசும் மாநிலங்கள் புரிந்து கொண்டால் தான் தேசப் பற்றினை ஆழமாக வளர்க்க முடியும்.

4. ஒரே மொழி பேசுபவர்களோ அல்லது பல மொழி பேசும் சமுதாயத்தினரோ குறிப்பிட்ட நிர்வாகத்தின் கீழ் வசித்தாலும் பல்வேறு மொழிகள் பேசும் சமுதாயங்களின் மக்கள் தகவல் தொடர்பு கல்வி மற்றும் கலாச்சார தேவைகளை மேம்படுத்தும் வகையில் மக்கள் நலத் திட்டங்களை அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒட்டு மொத்த நாட்டின் மக்களையும் கருத்தில் கொள்வதாக இருக்க வேண்டும்.

**மாநில மறுசீரமைப்பு ஆணையம்:**

இறுதியாக இந்த ஆணையம் 16 மாநிலங்கள் மற்றும் மூன்று ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட மாநிலங்களை மறுசீரமைப்பு செய்ய பரிந்துரைத்தது. மத்திய அரசாங்கம் சிறு மாற்றத்துடன் இதனை ஏற்றுக்கொண்டு, 1956-இல் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய பிறகு மத்திய அரசாங்கம் 14 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள் என்ற அளவில் மாநில மறுசீரமைப்பினை நம்பர் 1, 1956 அன்று நடைமுறைப்படுத்தியது.

அந்த மாநிலங்கள் வருமாறு, ஆந்திர பிரதேசம், அஸ்ஸாம், பீகார், பம்பாய், ஜம்மு காஷ்மீர், கேரளா, மத்திய பிரதேசம், சென்னை, மைசூர், ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான் உத்தர பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம், 6 யூனியன் பிரதேசங்களான, அந்தமான் நிக்கோபார் தீவுகள், தில்லி, இமாச்சல பிரதேசம், லட்சத்தீவு – மினிகாய் தீவு – அமிந்திவி தீவுகள், மணிப்பூர் மற்றும் திரிபுரா.

**மேலும் உருவான மாநிலங்கள்:**

1956-க்கு பிறகும் மொழிவாரி மாநிலங்கள் அமைப்பது தொடர்ந்தது. குறிப்பாக மொழிவாரி அடிப்படையில் மட்டுமல்லாமல் வேறுபல அம்சங்களைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்றம் பரிசீலித்து புதிய மாநிலங்கள் உருவாக்கியது. 1956-க்குப் பின்னர் உருவான மாநிலங்களின் பெயர்கள் பின்வருமாறு

- பம்பாய் மறுசீரமைப்புச் சட்டம் 1960. குஜராத் மாநில உருவாக்கம்.
- நாகாலாந்து மாநிலச் சட்டம் 1962 – நாகாலாந்து மாநிலம் அசாம் மாநிலத்தில் இருந்து பிரிக்கப்பட்டது.
- பஞ்சாப் மறுசீரமைப்புச் சட்டம் 1966 – அரியானா மாநில உருவாக்கம்
- புதிய இமாச்சல பிரதேச மாநிலம் சட்டம் 1970.
- வடகிழக்கு மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1971 – மணிப்பூர், திரிபுரா, மேகாலயா, மிசோரம் மாநிலங்கள் உருவாக்கம். அருணாச்சலப் பிரதேசம், மிசோரம் ஆகிய யூனியன் பிரதேசங்கள் உருவாக்கம்.

- சிக்கிம் மாநிலச் சட்டம் 1975
- அருணாச்சல பிரதேசம் சட்டம் மற்றும் மிசோரம் மாநிலச் சட்டம் 1986. மிசோரம், அருணாசல பிரதேசம் மாநிலங்கள் உருவாக்கம்
- கோவா மாநிலச் சட்டம் 1987.
- மறுசீரமைப்புச் சட்டம், 2000 சத்தீஸ்கர் மாநில உருவாக்கம்.
- மறு சீரமைப்பு சட்டம் 2000, உத்தரகாண்ட் மாநில உருவாக்கம்
- பீகார் மறசீரமைப்புச் சட்டம் 2000, ஜார்கண்ட் மாநில உருவாக்கம்
- ஆந்திரப் பிரதேசம் மறுசீரமைப்புச் சட்டம் 2014, தெலுங்கானா மாநில உருவாக்கம்

**மீதமுள்ள மாநிலங்கள்:**

மேலும் பல பகுதி மக்களிடமிருந்து தனி மாநில கோரிக்கை எழுகின்ற காரணத்தினால் மொழிவழி மாநில சீரமைப்பு செயல்பாடுகள் தொடர்ந்து வருகின்றது.

- ஹாரித் பிரதேஷ் (மேற்கு உத்தரப் பிரதேசம்)
- பூர்வாஞ்சல் (கிழக்கு உத்தரப் பிரதேசம்)
- போடா லாண்ட் (வடக்கு அசாம்)
- சௌராஷ்டிரா (தெற்கு குஜராத்)
- கூர்க்கலாண்ட் (வட மேற்கு வங்காளம்)
- விதர்பா (கிழக்கு மகாராஷ்டிரா)
- கோசல் (ஒடிசா)

புதிய மாநிலங்கள் அமைப்பது இன்றும் சிக்கல்கள் நிறைந்ததாகவே இருக்கின்றது. பண்பாடு, சாதி, மதம், மொழி, இனம், குறிப்பிட்ட நில அமைப்பு என்று பல வடிவங்களில் சிக்கல்கள் எழுகின்றன. ஆகவே தனி மாநில கோரிக்கைகள் தனித்த அடையாள வெளிப்பாடாகவும், வளங்கள் பயன்பாடு சார்ந்ததாகவும் உள்ளது.

**மாநிலங்கள் மறுசீரமைப்புக்கு பிறகு இந்தியா:**
**1947-க்கும் பின்னர் சுதந்திர இந்தியா**

பிரிட்டனின் காலனி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இங்கு சுமார் 600 நிர்வாக அமைப்புகள் சுதேச அரசுகள் என்ற பெயரில் இருந்தன. நிலவியல் அமைப்பு, கலாச்சார, மத முன்னுரிமையில் மக்கள் இந்தியாவிலோ அல்லது பாகிஸ்தானிலோ இருந்து கொள்ளலாம் என்ற நிலை எற்பட்டது. இதற்கிடையே பூட்டான் போன்ற சில நாடுகள் உருவானது. தற்போது உள்ள நிர்வாக அமைப்பு 1947-க்கும் 1950-க்கும் இடையே அமைக்கப்பட்டதாகும். ஒரு சில பகுதிகள் அதாவது மைசூர், ஹைதராபாத், போபால் ஆகியவை பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்தே தங்களது எல்லைகளை மாற்றம் செய்யாமல் தக்கவைத்துக் கொண்டன.

மத மோதல்களுக்கு மத்தியில் விடுதலைக்குப் பின்னர் இந்தியா இரண்டு நாடுகளை அதாவது இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் உருவாவதைக் கண்டன. இந்திய விடுதலை காலனி ஆட்சிக்கு முடிவுகட்டி, மாநிலங்கள் மறுசீரமைப்புக்கு வழிவகுத்தது. அது பெரும்பாலும் மொழி அடிப்படையில் அமைந்தது. நிலவியல் அடிப்படையிலும், கலாச்சார அடிப்படையிலும் சில மாநிலங்கள் அமைந்தன. இவ்வாறு புதிய இந்தியா மறு கட்டமைக்கப்பட்டு மறு சீரமைப்பும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் ஆட்சியும், நிர்வாகமும் எளிமைப் படுத்தப்பட்டது. புதிதாக மறுசீரமைக்கப்பட்ட இந்தியா, கலாச்சார பன்முகத்தன்மை, மொழிகள், உன்னத பாரம்பரியம் ஆகியவற்றை பராமரித்து வருகிறது. இந்திய மக்களிடையே, ஒற்றுமை உணர்வையும், இந்த நாடு நமது என்ற மனப்பாங்கினையும் ஊட்டுகின்ற பொறுப்பு இந்திய அரசாங்கத்திற்கு உள்ளது. விடுதலை இயக்கத்தின் போது, மக்களை அணி திரட்ட மாநில / வட்டார மொழிகள் ஆற்றல் மிக்க சக்தியாகத் திகழ்ந்தன என்பதனை காங்கிரசு இயக்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டது.

காலனிய ஆட்சியில் இந்திய வரைபடமானது உள்ளூர் மொழிகள், வரலாறு மற்றும் கலாச்சார பன்மைத்துவ நிலப்பகுதியை கணக்கில் கொள்ளாது அமையப் பெற்றிருந்தது.தற்போது மாநிலங்கள் உள்ளாட்சி அரசாங்கத்துடன் சீரமைக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் மறுசீரமைப்பு என்பது மாநிலங்களின் சுயாட்சியை பாதுகாப்பதுடன் மத்திய – மாநில அரசுகளுக்கிடையில் அதிகார சமநிலையை நிலவச் செய்தது. இருந்த போதிலும் மொழிவழிப் போராட்டங்கள் பல நடந்ததன் விளைவாக மாநில அரசுகளைக் காட்டிலும் மத்திய அரசு வலிமையானதாக இருக்க வேண்டியிருந்தது. இதனால்,தேசக் கட்டமைப்புப் பணிகள் புதிய சோதனையை எதிர் கொண்டது. மாநிலங்கள் அதிக அதிகாரங்களுடன் சுயாட்சி அந்தஸ்துடன் தங்களின் மொழி, இனம், நில எல்லைகள், மொழியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஆகியனவற்றையே விரும்பின.

ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் உள்ளிட்ட தலைவர்கள் தேசக் கட்டமைப்புக்கு வழிவகுத்தனர். நாடு பிரிவினையைத் தொடர்ந்து எழுந்த வேதனைமிக்க சூழ்நிலைகள் அவர்களுக்குக் கடும் வலியை ஏற்படுத்தின. எனவே, நாடு மேலும் துண்டாடப்படுவதை விரும்பவில்லை. ஏனெனில், மேலும் ஒற்றுமை கொண்ட நாட்டினை உருவாக்கும் கனவு கொண்டிருந்தனர். எனவே, மொழி, இனம், மதம் அடிப்படையில் மக்கள் மத்தியில் மேலும் பிரிவினையோ, அடையாளப் பிரச்சனையோ உருவாகுவதை விரும்பவில்லை. கடந்த கால

அனுபவத்தின் அடிப்படைகளைக் கணக்கில் கொண்டு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். முன்பு காலனி ஆட்சிக்கு உட்பட்ட மாகாணங்கள் இன்று தனிச்சிறப்பு வாய்ப்பு கலாச்சார அடையாளம், தனித்தன்மை வாய்ந்த மொழி, பொருளாதார, நிலவியல் அமைப்பு, அரசியல் மேம்பாடு, நிர்வாக வசதி பெற்ற மாநிலங்களாக அமைந்துள்ளன.

**சவால்களும் பேச்சு வார்த்தைகளும்:**

பல மாநிலங்கள் உருவாக்கப்பட்ட பின்பும், சில தனி மாநில கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன. இந்திய அரசியல் மற்றும் நிர்வாக வரலாறானது மாநிலங்கள், மக்களாட்சி பிரதிநிதித்துவப்படுத்தலுக்கான இடத்தினை வழங்குகிறது. அரசமைப்பு சட்டப்படி அரசியல் தன்னாட்சிக்கான சட்ட ரீதியான உரிமையை கொண்டிருக்கிறது. புதிதாக மாநிலங்கள் அமைக்கப்பட்ட பிறகு, வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதும் அவ்வளங்களை பெறுவதற்கான உரிமைகளை அடைவதும் முன்னுரிமைப் பணியாக இருந்தன. பல மாநிலங்கள் பெரியதாகவும், சில மாநிலங்கள் சிறிய அளவிலும் இருந்தன. சில மாநிலங்கள் பெரிதோ, சிறிதோ ஆனால் பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது அதிக வலுவுடன் திகழ்ந்தன. வளர்ந்த மாநிலங்களுக்கும், வளர்ச்சி குறைந்த மாநிலங்களுக்கும் இடையே சமநிலைப் படுத்துதலை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. மாநிலங்களுக்கான முதலீடு செய்வது, வளர்ச்சி திட்டங்கள், வேலை வாய்ப்புகள் ஆகியவற்றில் முன்னுரிமையுடன் பாரபட்சமாக பகிர்வதன் மூலம் இச்சமநிலை உறுதி செய்யப்பட்டது. இருந்தபோதும் மாநிலங்கள் பல அளவுகளில் இருப்பதால் பெரிய மாநிலங்கள் வளங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முயலும் என்பதால் சிறிய மாநிலங்கள் வளங்களை அணுகும் உரிமைகள் பறிக்கப்படும் என சிறிய மாநிலங்கள் குரல் எழுப்பின. இதனால் ஒருவித வெறுப்புணர்ச்சி, பொருளாதார ஏற்றத்தாழ்வு, வளங்களை பயன்படுத்திக் கொள்வதில் முறையற்ற தன்மை ஆகிய மனப்பான்மை மாநிலங்களுக்கிடையெ உருவாகியது.

விடுதலைக்குப் பிறகு குறிப்பிட்ட அரசியல் காரணங்களுக்காக சமூக கலாச்சார, அரசியல், பொருளாதார மற்றும் மொழி அடிப்படையில் கட்டமைப்பு செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டன. மறு கட்டமைப்பு ஏற்பாடுகள் மொழி அடிப்படையில் மட்டும் செய்யப்படவில்லை. ஏனென்றால் இது தேச ஒருமைப்பாடு வழியில் நின்றது. சில மொழிகள் மற்ற மொழிகளைக் காட்டிலும் சிறப்பு நிலையில் இருந்தது. இது மற்ற மொழிகள் பேசும் மக்களிடையே ஆதிக்கம் செய்யும் நிலையும் இருந்தது. ஆகவே மாநில கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு மொழியை அடிப்படையாகக் கொள்வது குறித்த விவாதங்கள் நடைபெற்றன.
தேசிய அடையாள மற்றும் மொழி, கலாச்சார அடையாளங்களுக்கிடையே உள்ள நிலை பற்றி இவ்விவாதங்கள் நடைபெற்றன. அஸ்ஸாமின் போட்டோ-வும் கர்நாடக கூர்க்கும் இதற்கு உதாரணமாக கூறலாம். ஒரே மொழி பேசும் இரண்டு மாநிலம் அருகருகே இருந்தாலும் அம்மாநிலங்களில் இருந்த சாதி, மத மற்றும் இன வேறுபாடுகள் தேசிய அடையாளம் பெறுவதற்கு பிரச்சினைகளாக இருந்தன. எனினும் 1956 ஆம் ஆண்டு 12 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டன. பிறகு 22 மொழிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது மொழி கலாச்சார சமுதாயங்களின் இடையே அரசியல் அடையாள கோரிக்கைகள் அதிகரித்து வருவதைக் காட்டுகிறது.

**எல்லைகள்:**

விடுதலைக்கு முன்பு இந்த நாடு மாகாணங்கள், சுதேச அரசுகள், ராஜதானிகள் எனப் பிரிக்கப்பட்டிருந்தன. மாநிலங்கள் அமைப்பு அறிவிக்கப்பட்டவுடன் அதன் எல்லைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. குறிப்பாக கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா, மற்றும் குஜராத், அரியானா மற்றும் பஞ்சாப், ஒரிசா மற்றும் மேற்கு வங்கம், ஆந்திரா பிரதேசம் மற்றும் சென்னை மாகாணம் ஆகியவற்றிற்கிடையே எல்லைகள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடந்தன.

பல்வேறு வேறுபாடுகளைத் தாண்டி மொழியால் ஆதிக்கம் செலுத்தக் கூடிய சமுதாயங்கள் தங்களுக்கான தனித்த பிராந்திய மற்றும் கலாச்சார வடிவங்களை வலியுறுத்தினர். இந்த கலாச்சார, மொழி ரீதியிலான சிறுபான்மையினர் பேசும் மொழிகளும் அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது.

எதிர்பார்க்கப்பட்டதைப் போல மொழி அடிப்படையில் அமைந்த பெரும்பான்மை சமூகம், மொழி சிறுபான்மை சமூகத்தின் மீது நிர்வாகம், கல்வி, வேலைவாய்ப்பு, நீதி மன்றம் பொருளாதார துறைகளில் ஆதிக்கம் செலுத்தியதன் மூலம் பெரும்பான்மை சமுதாய மக்கள் ஆதிக்கம்

செலுத்தினர். காலாச்சார ஆதிக்கத்தன்மை, மேம்பாடு குறித்த பிரச்சனைகள், மற்றும் வட்டார சமத்துவமின்மை ஆகியன தீர்க்கப்பட சமுதாய மக்கள் ஆதிக்கம் செலுத்தினர். காலாச்சார ஆதிக்கத்தன்மை, மேம்பாடு குறித்த பிரச்சனைகள், மற்றும் வட்டார சமத்துவமின்மை ஆகியன தீர்க்கப்பட வேண்டியிருந்தன. மாநிலங்கள் அனைத்து பகுதி மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு நிரந்தரமான யுக்தியை கையாள வேண்டியிருந்தது. அரசாங்கம் இதனை நீக்க சீரான ஒற்றைத்தன்மை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டதில், மேல்தட்டு மக்கள் சாதாரண பொதுமக்கள் என இரு பிரிவுகள் தோன்றிவிட்டன.

**மண்டலக் கட்சிகளின் தோற்றம்:**

நாடு முழுவதும் மண்டலக் கட்சிகள் தோன்ற ஆரம்பித்தன. ஏனென்றால் தங்களின் சொந்த மண்ணின் மீதான விசுவாசமும் மண்டல அடிப்படையிலான அடையாள இயக்கங்களும் இத்தகைய மண்டலக் கட்சிகள் உருவாகுவதற்கு காரணங்களாக அமைந்தன. பெரும்பாலான கட்சிகள் உள்ளூர் அளவில் பலம் பெற்றன. மண்டலக் கட்சிகளின் தொடக்கம் மத்திய அரசாங்கத்திற்கு பெரும் சவாலாக அமைந்தது. ஏனென்றால் பிரச்சனைகளின் ஆணிவேர் நாடு முழுவதும் ஒரே விதமாக இல்லை.

**மாநிலங்கள் உருவாக்கம்:**

அண்மைக்கால பொருத்தப்பாட்டில் ஒரு மாநிலத்தின் குறிப்பிட்ட நிலப்பகுதியைப் பிரிப்பதன் மூலம் நாடாளுமன்றம் புதிய மாநிலங்களை உருவாக்க முடியும். பெயர் மாற்றம் செய்வது, எல்லைகளை மாற்றியமைப்பது உள்ளிட்ட அதிகாரங்கள் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இருந்தாலும், இவை நாடாளுமன்றத்தில் முன்வரைவு மூலம் நிறைவேற்றப்பட்டு குடியரசுத்தலைவரின் ஒப்புதலை பெற வேண்டும். இது தொடர்புடைய மாநில அரசாங்கத்தின் கருத்துக்களும், அந்த மாநில அரசாங்கத்தின் சட்டமன்றத் தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மாநில அரசாங்கம் இது தொடர்பாக முன்வரைவு நிறைவேற்றி குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பும் போது, குடியரசுத்தலைவர் இது தொடர்பான தனி முன்வரைவு ஒன்றினை நாடாளுமன்றத்தில் இயற்ற பரிந்துரை செய்வார். பிறகு நாடாளுமன்றத்தில் முன்வரைவு இயற்றி தனக்கு அனுப்பப்படும் போது குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளிப்பார். பின்பு தான் புதிய மாநிலங்கள் உருவாகும்.

**தேச கட்டமைப்பில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சவால்கள்:**

**சவால்கள்:**

தேச கட்டமைப்பிற்கான சவால்களில் தேசத்திற்கும் அரசுக்கும் உள்ள வேறுபாடுகளை முதலில் ஆராய வேண்டும்.

**அரசு:**

நிலப்பரப்பு, மக்கள், அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய நான்கு அலகுகளும் இருக்கும் போது அரசு என்பது உருவாகும். அதில் தேசிய உணர்வோ அல்லது நாம் அனைவரும் ஒருவரே என்ற உணர்வோ இல்லாமல் இருக்கலாம். ஆயினும் அது அரசு என்றழைக்கப்படுகிறது. நாட்டு மக்கள் அனைவரும் ஒருவரே என்ற உணர்வு அவர்களுக்கிடையே நிலவும் போது மற்ற வேறுபாடுகள் அனைத்தும் ஒருமைப்பாட்டிற்கு கீழானது என்றாகிவிடும். பொது நலமே மேலானது என்ற நிலை உருவாகும்.

**தேசம்:**

தேசம் என்ற பொருள்படும் "Nation" என்ற சொல் லத்தீன் மொழியிலிருந்து வந்ததாகும். அனைவரும் ஒரு ரத்த பந்தம் உடையவர் என்ற பொருளில் இந்த கருத்துரு உருவாகியது. ஆகவே "Nationem" என்ற லத்தீன் சொல் ”இனம்” என்ற பொருளில் தேசத்தை குறிப்பிட்டது. மக்களிடையே நிலவும் ஒற்றுமை என்பதனை குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது. பழமை கருத்துப்படி ஒரு தேசம் அரசாக இருக்க வேண்டிய தேவை இல்லை என்பதாகும்.

**தேசியம்:**

தேசியம் என்ற கருத்துருவை வரையறுப்பது சுலபம் அல்ல. தனிப்பட்ட ஒரு காரணியை வைத்து ஆராய முடியாது. முக்கியமாக ஒற்றுமை உணர்வு, பலதரப்பட்ட செயல்களின் முடிவு இனம் மற்றும் மொழிக் குழுமம், பொது அரசியல் விருப்பம் எல்லாவற்றிற்கும் மேலாக வரலாற்று வளர்ச்சி ஆகியன தேசியம் அமைவதற்கு காரணமாகின்றன. அரசியல் கோட்பாடுகள், குறிப்பாக தேசியவாதம் மற்றும் தேசிய அடையாளம் ஆகிய அம்சங்களின் முன்னோடி ஆராய்ச்சியாளர் எர்னஸ்ட் ரெனான். தேசம் என்பது அறவியலின் ஒரு வடிவம் என்பதனையும் தனிமனித சுதந்திரத்தை அடக்கி நாட்டின் சமுதாய கொள்கையை நிறுவும் கோட்பாடு என்பதனையும் எதிர்க்கிறார் எர்னஸ்ட் ரெனான். தேசம் என்பது தனித்தன்மை வாய்ந்த வரலாற்று உணர்வியல் அடிப்படையின் ஒட்டுமொத்த தொகுப்பாகும்.

தேசமானது குறிப்பாக பொருளியல் வாழ்வு, மொழி மற்றும் நிலப்பரப்பு என பல அலகுகள் ஒருங்கே அமைக்கப்பட்டு தேசம் உருவாகியது என்று எர்ன்ஸ்ட் ரெனான் வாதிக்கிறார். இவரின் கருத்துப்படி ”தேசம்” என்பது ஒரு ஆன்மா அது ஒரு ஆன்மீக கோட்பாடு – அதில் இரண்டு விதமான அம்சங்கள் அடங்கி உள்ளது. ஒன்று கடந்த கால அம்சம்: மற்றொன்று நிகழ்கால அம்சம் என்று விளக்கம் கூறுகிறார். ஒன்று கடந்த கால வளமிக்க மரபுகளின் நினைவுகள் மற்றொன்று நிகழ்காலத்திய நடப்புகள். கூடி வாழ வேண்டும் என்ற விருப்பம், பாரம்பரியத்திற்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற எண்ணம் ஆகியன தேசிய உணர்வு அமைவதற்கு உள்ள பொது பங்களிப்பாகும்.

**சவால்கள்**
**வழிவகை:**

உற்பத்தியை அதிகரிப்பது மட்டும் பிரச்சனை அல்ல மாறாக வேறுபாடுகளை களைவதும் ஆகும்.

நமது மக்களாட்சி மற்றும் கூட்டாட்சி ஆகிய அடிப்படையில் எந்தவித சமரசமும் கொள்ளாமல், திட்டமிட்ட மற்றும் கலப்பு பொருளாதாரம் மூலம் இந்தியாவை ஒரு சுயசார்பு நவீன நாடாக உருவாக்குவதை ஜவஹர்லால் நேரு தேர்ந்தெடுத்தார். ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் ஏராளமான நீர்பாசன திட்டங்கள், அடிப்படை தொழில்களை நிறுவினார். விரைவான மின்மயமாக்கல் மற்றும் உள்கட்டுமான வசதிகளை விரிவுபடுத்துதல். மலேரியா போன்ற நோய்களை ஒழித்தல், உணவு உற்பத்தியில் சுய-தேவையை பூர்த்தி செய்தல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட நிலையை அடைதல் என்று பலவகை திட்டங்களை நிறைவேற்றினார்.

60-களின் இறுதியிலும் 70-களின் தொடக்கத்திலும் ஒரு மந்தமான சூழ்நிலை உருவாகியது. பல அரசியல் பிரச்சினைகள் எழுந்தன. பாகிஸ்தான் மற்றும் சீனா உடனான போர்கள் இந்தியாவின் பொருளாதாரத்தைப் பாதித்தது. இந்திரா காந்தி மேற்கொண்ட வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட நடவடிக்கை, ராஜீவ் காந்தி செய்த மின்னணுவியல் புரட்சி ஆகியன இந்தியாவில் நல்விளைவுகளை ஏற்படுத்தின. 1990-ஆம் ஆண்டுக்கு பிறகு இந்தியா சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி பயணிக்கத் தொடங்கியது. எனவே தா.த.உ. (LPG) என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்ற தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கைகளுக்கு இந்தியாவின் கதவு திறக்கப்பட்டது.

**1953-ஆம்ஆண்டு எவரெஸ்ட் பயணம் வெற்றி பெற்றவுடன் தேசியவாதம் குறித்து முதலமைச்சர்களுக்கு நேரு எழுதிய கடிதம்:**

”எவரெஸ்ட் உச்சியை அடைந்தது மாபெரும் சாதனை ஆகும். அது குறித்து நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளலாம். இங்கே சில மனிதர்கள் அற்பமான, குறுகிய தேசியவாத கண்ணோட்டத்தினை வெளிப்படுத்துகின்றனர்.

எவரெஸ்டை முதலில் அடைந்த டென்சிங் இந்தியரா அல்லது நேபாளியா என்று கேள்வி எழுப்பப்படுகிறது. மற்றவர் உதவி இன்றி எதையும் செய்து முடிக்க முடியாது.

உண்மையில் இருவரும் இணைந்தே இத்தகைய சாதனையை நிகழ்த்தியுள்ளனர். ஏற்கனவே பெறப்பட்ட அனுபவங்கள், உழைப்பு மற்றும் பயண தியாகங்கள் ஆகியன இவர்களின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தன.

மாபெரும் மனித சாதனைகள் யாவும் எண்ணிடலங்கா மக்களின் கடுமையான தொடர் முயற்சியின் விளைவே ஆகும். ஒரு மனிதனின் கடைசி படிக்கட்டு மற்றொருவரின் தொடக்கமாகும் என்பதனை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறு விவாதிப்பது இந்த விஷயங்கள் குறுகிய மற்றும் கண்டனத்திற்குரிய தேசியவாதம் ஆகும். இது நமது நாட்டிற்கு பெருமை சேர்க்காது என்பதனை உணர வேண்டும். மேலும் அது மக்களை குறுகிய மனப்பான்மையோடு ஒரு விதமான தாழ்வு மனப்பான்மைக்கு இட்டுச் செல்லும்.

**வேளாண்மை:**

1990-களின் மத்தியில் வேளாண்மை துறையில் பின்தங்கிய நிலை உருவாகியது. ஏராளமான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். ஏற்றுமதி தொடர்பான விவசாயம் கடுமையாக பாதித்தது. குறிப்பாக மகாராஷ்டிரா மாநிலத்தின் விதர்பா பகுதியைச் சேர்ந்தப் பருத்தி விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகினர்.

இந்தியாவில் 60 விழுக்காடு மக்கள் விவசாய தொழிலில் ஈடுபட்டுள்ளனர். வேளாண்மைத்துறை வளர்ச்சிவீதம் 1996 – 97 முதல் 2004 – 05 வரை 1.65 விழுக்காடு அதிகரித்தது. இந்தியாவில் இரண்டாவது விவசாய நெருக்கடி உருவாக இதுவே காரணம் ஆகும். (முதல் விவசாய நெருக்கடி 1960-களின் தொடக்கத்தில் நிகழ்ந்தது) பணக்கார மற்றும் நருத்தர விவசாயிகளுக்கான மானியம், இலவச மின்சாரம், ஆதார விலை நிர்ணயம், இலவச பாசனம் மற்றும் இலவச உரம் ஆகியனவற்றுக்கான மானியம் குறைக்கப்படவில்லை, ஆனால் இத்துறையில் அரசு முதலீடு என்பது குறைக்கப்பட்டது.

2008-09 ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அமெரிக்க மதிப்பிடு 15 பில்லியன் டாலர் மதிப்பிலான விவசாயிகள் கடன் ரத்து செய்யப்பட்டது. அதே சமயம் 80 சதவிதம் சிறு விவசாயிகளால் விவரசாயக் கடன்களைப் பெறமுடியவில்லை. 60 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் தரிசாகப் போடப்பட்டதால் பஞ்சம் ஏற்பட்டது. அதே சமயத்தில் அது அளவுகதிகமான பொருளாதார இழப்பை ஏற்படுத்தும், விவசாயிகளை மேம்படுத்தும் அரசு உதவி குறைக்கப்பட்டது.

**தொழிற்சாலை:**

தொழில்துறை தகராறு சட்டம் - ஆனது இந்தியாவில் பணியாற்றும் மொத்தத் தொழிலாளர்களில் 10 விழுக்காட்டுக்கும் குறைவான தொழிலாளர்களையே பாதுகாத்துள்ளது. 90 விழுக்காடு தொழிலாளர்கள் அமைப்பு ரீதியானத் திட்டப்படாத தொழில்களில் உள்ளனர்.
பொதுத்துறை நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தொழிற்சங்கம் அமைத்து கூட்டு பேரம் மூலம் பலனடைகின்றனர். பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்துக் கொள்ளவும் கூட்டுப் பேரத்தில் ஈடுபடவும் உரிமைக் கொண்டுள்ளனர். ஆனால் தனியார் தொழிற் துறைகளில் பணியாற்றும் ஊழியர்கள் தங்களுக்கென சங்கம் அமைக்கவும் தங்கள் பிரச்சனைகளுக்காக கூட்டுப்பேரத்தில் ஈடுபடவும் தனியார் நிறுவனங்களின் மேலாண்மை தடுத்து வருகின்றன. இந்திய தொழிற்துறையானது தொடர்ந்து முதலீட்டு நலன் சார்ந்த தொழிற்துறையாக இருப்பதால் அதிக வேலையில்லா திண்டாட்டம் நிலவுகிறது. இந்நிலையானது முறைசாரா மற்றும் தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கிறது.

நிலம் கையகப்படுத்துதல் என்பது முக்கியப் பெரும்பிரச்சனையாக உள்ளது. பழங்குடி மக்களை இடம்பெறச் செய்ய முடியவில்லை. தொழிற்சாலை அமைப்பதற்கு தேவையான நிலங்கள் கிடைக்கவில்லை. உள்ளூர் மக்களின் ஒப்புதலில் தான் நிலங்கள் பெற வேண்டிய நிலை உள்ளது. நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கைகளைத் தகுந்த இழப்பீடு வழங்குதல் மற்றும் நலத் திட்டங்கள் மூலம் நிறைவேற்ற வேண்டியுள்ளது. தற்போதைய சட்டம், அரசாங்கம் நிலம் கையகப்படுத்துவதற்குப் போதுமான அதிகாரங்களை கொடுத்துள்ளது. சில இடங்களில் வலுக்கட்டாயமாக இதனை செய்யும்போது வன்முறை நிகழ்வு வெடிக்கின்றன.

**அரசியல் ரீதியிலான சவால்கள்:**

1990-ஆண்டுக்கு பின்னர் மாநிலங்களுக்கிடையே சமத்துவமின்மை அதிகரித்தது. மத்திய அரசாங்கத்தின் நிதி மாநிலங்களுக்கு அளிப்பது குறைக்கப்பட்டது. இதனால் மாநில அரசாங்கங்கள் தனியார் நிறுவனங்களை நாடவேண்டியுள்ளது. சில மாநிலங்கள் அன்னிய முதலீட்டை ஈர்க்க முயற்சிக்கின்றன. சில மாநிலங்களால் இதனைச் செய்ய முடியவில்லை. இதனால் மாநிலங்களிடையே ஏற்றத்தாழ்வான வளர்ச்சி உருவானது.

**மத்திய – மாநில உறவுகள்:**

வறுமை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதன் மூலம் சாத்தியமாகும். மத்திய மாநில உறவுகள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள், பிராந்திய கட்சிகளின் ஆட்சிக்குட்பட்டுள்ளன. இதனால் மத்திய மாநில உறவுகளில் தடங்கல் வந்துள்ளது.

ஆட்சிக்குட்பட்டுள்ளன. இதனால் மத்திய மாநில உறவுகளில் தடங்கல் வந்துள்ளது.

முன்பு மாநிலங்களுக்கிடையேயான குழு அமைந்த அமைப்பில் மாநிலங்கள் தங்களுக்கு அதிக அதிகாரங்கள் கோரின. மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிக நிதி பங்கீட்டினை கேட்டனர். மத்திய மாநில உறவுகளில் நிதி உறவு மட்டுப்படுத்தப்படுகிறது.

**பொருளாதார சவால்கள்:**

இந்தியாவில் வாழும் மக்களில் பெரும்பாலோர் நாள் ஒன்றுக்கு ஒரு டாலருக்கும் கீழ் வருமானம் உள்ளவர்கள் என்பதை டீட்டன் மற்றும் ட்ரெசி சுட்டிக்காட்டியுள்ளனர். இருந்தாலும், இந்தியாவில் வறுமை விகிதம் குறைந்து வருவதாக விவாதிக்கப்படுகிறது. 1993 – 94 – 1999 – 2000 காலகட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு டாலருக்கும் குறைவான வருமானம் ஈட்டுவோர் விகிதம் 36 விழுக்காட்டிலிருந்து 26 விழுக்காடாகக் குறைந்துள்ளதாக ஒரு மதிப்பீடு குறிப்பிடுகிறது. அதாவது இன்னமும் 270 மில்லியன் இந்தியர்கள் ஏழ்மையில் உள்ளதை இது குறிக்கிறது. சீனாவில் 110 மில்லியன் ஏழைகள்தான் உள்ளனர். அடிப்படைக் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் மனித மேம்பாடு இன்னமும் நிறைவுறாததாக இருக்கிறது. வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்கள் எண்ணிக்கை குறைந்தபோதிலும், உள் இணைக்கும் வளர்ச்சி எனும் செயல்திட்டத்தினை பயன்படுத்தி இன்னம் துரிதமாக வறுமை ஒழிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க முடியும்.

**உலக மயமாதல்:**

1990 முதல் தாராளமயமாதல், தனியார்மயமாதல், உலகமயமாதல் (தா.த.உ/LPG) கொள்கைகளுக்கு மாறியதால் ஏற்றத்தாழ்வுகள் மேலும் அதிகரித்து நாட்டின் பல பகுதிகளில் சமூக – அரசியல் பதற்றநிலை எழுவதற்கு வழிவகுத்தது. நாட்டு ஒற்றுமை, சமூக ஒருமைப்பாடு ஆகியனவற்றை உறுதிப்படுத்த இதரபிற்படுத்தப்பட்ட மக்களுடன் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகிய பிரிவினர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தும் அவசியம் உருவானது.

**சமூக சவால்கள்:**

இந்த சீர்திருத்த காலத்தின் போது இந்தியா மேற்கொண்ட பொது உடல்நல ஆரோக்கியத்திட்டம் குறித்த அறிக்கை கவலை அளிக்கக்கூடிய சித்திரத்தை வழங்குகிறது. குழந்தை இறப்பு விகிதம் 1980-களில் 30 சதவீதம் இருந்தது 1990-களில் 12.5 சதவீதமாக குறைந்துள்ளது. இந்தியாவின் (80/1000) குழந்தை இறப்பு விகிதம், பங்களாதேஷ் (91/1000) நாட்டைக்காட்டிலும் குறைவாக உள்ளது. ஆனால் 1999-ஆம் ஆண்டு பங்களாதேஷின் (61/1000) குழந்தை இறப்பு விகிதத்தை விட இந்தியா (71/1000) பின்னடைந்துள்ளது.

**வகுப்புவாதம்:**

பிரிவினைக் காலத்தில் இருந்தே நாடு வகுப்புவாதத்தைச் சந்தித்து வருகிறது. தீய நோக்கம் கொண்ட அரசியல் கட்சிகள், அடிப்படைவாத குழுக்கள், வெறுப்பை உருவாக்கும் வதந்திகளை பல்வேறு சமுதாயத்தினரிடையே பரப்பி வருகின்றனர். இத்தகைய மத வெறுப்பு கட்டுக்கதைகளால்

சமூகங்களுக்கு இடையே மோதல்கள் உருவாக்குகின்றன. இதனால் சிறுபான்மையினரே அதிகம் பாதிப்பு அடைவதுடன் தங்களின் வாழ்வாதாரத்தையும் சொத்துக்களையும் இழக்கின்றனர்.

**சாதி மற்றும் பால் பாகுபாடு :**

சாதிய மோதல்கள் சாதிய பாகுபாடுகள் தொடர்ச்சியாக தேசக் கட்டமைப்பிற்கு சவாலாக உள்ளன. தீண்டாமைக்கு எதிராக கடுமையான சட்டங்கள் இருந்தும் அத இன்றும் தொடர்கின்றது. கலப்பு திருமணம் செய்து கொள்வோர் ஆணவப் படுகொலைகளுக்கு உள்ளாகின்றனர்.

நடைமுறையில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக நடத்தப்படுவதில்லை. அரசியலில் அவர்களின் பிரதிநிதித்துவம் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் அதிகரித்துள்ளது. சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு இன்னும் நடைமுறைப்படத்தப்படவில்லை.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது பெரும் சவாலாக உள்ளன. வளர்ச்சி என்பது அய்யத்துக்கு இடமில்லாமல் வறுமையைக் குறைத்து வாழ்க்கை நிலையை மேம்படுத்தியுள்ளது என்பது உண்மைதான். இருப்பினும், பலன்கள் ஏழை மக்களிடம் சென்றடைவதைகாட்டிலும் நடுத்தர மற்றும் பணக்கார பகுதி மக்களிடம் தான் அதிகமாகச் சென்றடைகின்றன. தகவல் தொடர்புத் துறை, வங்கிகள், பங்கு சந்தை, விமான போக்குவரத்து, வணிகம் மற்றும் தொழில் கொள்கை ஆகிய துறைகளில் செய்யப்படுகின்ற சீர்திருத்தங்கள்,சென்றடைகின்றன. தகவல் தொடர்புத் துறை, வங்கிகள், பங்கு சந்தை, விமான போக்குவரத்து, வணிகம் மற்றும் தொழில் கொள்கை ஆகிய துறைகளில் செய்யப்படுகின்ற சீர்திருத்தங்கள்,அளவுக்கு வேளாண்மை மற்றும் மனித மேம்பாட்டிற்குச் செல்லவில்லை. மூலவளங்கள் திரட்சியும், அறிவுப்பெருக்கமும் கொண்டு இந்திய தொழில்மயமாக்கல் தொடரும் அதே நிலையில் 250 மில்லியன் மக்ளக் நாளொன்றுக்கு ஒரு டாலருக்கும் கீழ் வருமானம் உள்ள நிலையில் வாழ்கின்றனர்.
இதே நிலையில் தொடருமானால் இந்தியாவில் வறுமை, கல்லாமை, சரிவிகித உணவின்மை ஆகியவற்றை ஒழிப்பதற்கு மிக நீண்ட காலமாகும். மேலும் மனித மேம்பாட்டுக் கூறுகளான கல்வி மற்றும் பொது சுகாதாரம் போன்ற துறைகளின் வளர்ச்சி மேலும் காலதாமதமாகும்.

மேலே விளக்கப்பட்டுள்ள சமுக, பொருளாதார மற்றும் அரசியல் சவால்களே தேச கட்டமைப்பின் பெரும் சவாலாக நீடிக்கின்றன.

**தமிழ்நாடு மாநிலம் உருவாக்கப்படுதல்:**

1802-ஆம் ஆண்டு வெல்லெஸ்ஸி பிரபு சென்னை மாகாணத்தை உருவாக்கினார். 18-ஆம் நூற்றாண்டு இரண்டாவது பகுதி வரை தென்னிந்தியாவை பல்வேறு சிற்றரசர்கள் ஆட்சி செய்து வந்தனர். பிரிட்டிஷாரின் தென்னிந்தியப் படையெடுப்பின் விளைவாக இவைகள் ஒன்றிணைக்கப்பட்டன. பிரிட்டிஷ் இந்தியாவின் கீழ் ஒரு நிர்வாக அமைப்பாக சென்னை மாகாணம் இருந்தது.

இந்த நிர்வாக அமைப்பு இன்றைய தமிழகம், ஆந்திர பிரதேசம், ஒரிசாவில் சில பகுதிகள். கேரளா, கர்நாடகா மற்றும் லட்சத் தீவு ஆகிய பகுதிகளைக் கொண்டிருந்தது. விடுதலைக்கு பிறகு சென்னை மாகாணம் சென்னை மாநிலமாக மாறியது. நவம்பர் 1, 1956-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மொழிவாரி மாநில அமைப்பு நடவடிக்கைக்கு பின்பு தமிழர்களுக்கான தனி மாநிலமாக சென்னை மாநிலம் உருவாக்கப்பட்டது. நீண்ட போராட்டத்திற்கு பிறகு இதன் பெயர் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**மொழி அடிப்படை தேசியவாதம் உருவாக்கம்:**

20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தேசிய உணர்வு வளர்ந்து வரும் போதே நாட்டின் பல பகுதிகளில். மாநில மொழிகள் பத்திரிகைகள் மற்றும் வட்டார அடிப்படையிலான அரசியல் இயக்கங்கள் மூலம் வட்டார விழிப்புணர்வு வளரத் தொடங்கியது. தேசிய இயக்கத்தில் முன்னணியில் இருந்த இந்திய தேசிய காங்கிரசு உருவாக்கிய "தேசியம்" என்று கருதுகோள் பல பிரச்சனைகளை எதிர்கொண்டது. இந்தி மொழிக்கு முன்னுரிமை வழங்கியது முக்கியப் பிரச்சனையானது 20-ஆம்

நூற்றாண்டின் இரண்டாவது பத்தாண்டுகளில் தமிழ்மொழி துணை தேசியவாதம் வளர்வதற்கு இது காரணமானது. காங்கிரசின் சாதிய கண்ணோட்டம் காரணமாக சாதிப்பிரிவினை, மொழிவாரி தேசியவாதம், வர்க்க போராட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய, பிராமண அல்லாதோர் இயக்கம் தொடங்கியது.

டி. மாதவன், தியாகராயர் மற்றும் பல பிராமணரல்லாதோர் தலைவர்கள் தென்னிந்திய நல உரிமை கூட்டமைப்பினை உருவாக்கினர். பிற்காலத்தில் இவ்வியக்கம் ”நீதிக்கட்சி” என்ற பெயரில் புகழ் பெற்றது. 1920-ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாகாணத் தேர்தலில் நீதிக் கட்சி போட்டியிட்டு வெற்றிப் பெற்று ஆட்சி அமைத்தது. 1920 முதல் 1937 வரை நடைபெற்ற 5 தேர்தல்களில் நான்கு முறை வென்று அமைச்சரவை அமைத்தது. பின்பு 1937 தேர்தலில் காங்கிரசு கட்சியிடம் தோல்வியுற்றது. பிறகு பெரியார் ஈ.வே.ராமசாமி தலைமையில் சுய மரியாதை இயக்கமாக மாறியது. இந்த இயக்கம் தமிழ் மக்களின் பண்பாடு மற்றும் அரசியல் வாழ்வில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. தென்னிந்தியாவில் தமிழ் தேசியவாதம் வளர்வதற்கு இவ்வியக்கம் காரணமானது.

**திராவிட நாடு சிந்தனை:**

ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் காங்கிரசு கட்சி தமிழகத்தில் தன்னை பலப்படுத்தியது. 1937 ஆம் ஆண்டு சென்னை சட்ட மன்றத் தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்றது. ராஜாஜி முதலமைச்சராக பதவியேற்றார். அவர் இரண்டு அரசு கொள்கைகளை உருவாக்கினார். முதலாவதாக தீண்டாமை ஒழிப்பு, இரண்டாவது இந்தி மொழியை தேசிய மொழியாக அறிவிப்பது. பள்ளிகளில் இந்தி கட்டாய மொழிப்பாடமாக்கப்பட்டது. இது பிராமணரல்லாத தமிழர் / திராவிடர்களின் சுயமரியாதையை இழிவுபடுத்தியதாகக் கருதப்பட்டது. தந்தை பெரியார் மற்றும் பல சுயமரியாதை இயக்கத் தலைவர்கள் இந்தி எதிர்ப்பு மாநாடுகளையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர்.

தமிழறிஞர்களான மறைமலை அடிகள், திரு.வி.கல்யாண சுந்தரம் மற்றும் பலர் இந்தி மொழிக்கு எதிராக கண்டனப் பொதுக்கூட்டங்களை நடத்தி மக்களிடையே விழிப்புணர்வு எற்படுத்தினார். ஈ.வே.ரா.பெரியார் இப்போராட்டத்துக்கு தனது மனப்பூர்வமான ஆதரவினை நல்கினார். ”தமிழ்நாடு தமிழருக்கே” என்ற முழக்கத்தினை எழுப்பும் அளவுக்கு இப்போராட்டத்தை ஆதரித்தார். 1939-ஆம் ஆண்டு ”திராவிட நாடு” மாநாட்டினை நடத்தி ”திராவிட நாடு” கோரிக்கையை முன்வைத்தார்.

**காமராஜர் மற்றும் இராஜாஜி:**

தமிழர், தெலுங்கர், கன்னடர் மற்றும் மலையாளர் ஆகியோரை உள்ளடக்கிய திராவிட நாடு என்கிற தனி நாடு கோரிக்கை இயக்கம் பிராமணரல்லாதோர் மத்தியில் வளரத் தொடங்கியது. 1944-ஆம் ஆண்டு ஈ.வே.ராமசாமி, நீதிக் கட்சியினை திராவிடர் கழகம் என பெயர் மாற்றம் செய்யும் தீர்மானத்தினை சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நிறை வேற்றினார். தமிழர் வாழ்வினை மேம்படுத்துவதற்காக இதைச் செய்வதாகக் கூறினார். பொதுமக்கள் பெரும் அளவில் திரண்டது மற்றும் தொண்டர்களின் போர்க்குணம் இரண்டுக்குமாக சேலம் மாநாடு புகழப்பட்டது.

திராவிட நாடு என்பது, சுய ஆட்சியும் அதிக அதிகாரங்களும், சுதந்திர இறையாண்மை உரிமையும் கொண்ட, மொழி அடிப்படையில் நான்கு அலகுகளை மாநில உரிமைகளுடனும் சுயாட்சியுடனும் கொண்ட கூட்டாட்சி குடியரசாக திராவிட நாடாகத் திகழும் என்று கூறப்பட்டது. இருந்தபோதிலும் திராவிட நாடு கோரிக்கை தமிழ் மொழி பேசுவோர் அல்லாத மக்களின் ஆதரவினைப் பெறவில்லை.

**தட்சிண பிரதேசம் எனும் மாநிலக் கொள்கை:**

திராவிட கருத்தாக்கத்துக்கு எதிர்நிலையில் இருந்த தென்னிந்தியாவைக் களமாகக் கொண்டு ஒரு புதிய அரசியல் நிலைக்குருத்தினை இராஜாஜி உருவாக்கினார். தட்சிண பிரதேசம் என்பது அதன் பெயர். இது தமிழ்நாடு மற்றும் கேரளாவை உள்ளடக்கியதாகும். சி. சுப்பிரமணியம், பக்தவச்சலம் போன்ற தனது சீடர்கள் மூலம் இக்கருத்தினைப் பரப்பினார். ராஜாஜியின் இந்த அரசியல் கருத்தினை பெரும்பாலான தென்னிந்திய அரசியல் கட்சியினர் எதிர்த்தனர்.

புரட்சிகர சோசலிச கட்சியை சார்ந்த ஸ்ரீகண்டன், கொச்சின் கம்யூனிஸ்ட் கட்சியை அச்சுதமேனன், திருவிதாங்கூர் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த ஏ.கே. கோபாலன் ஆகியோர் “தட்சிணபிரதேச“

கோரிக்கையை கடுமையாக எதிர்த்தனர். விடுதலை பத்திரிகையில் பெரியார் இது குறித்து தலையங்கம் எழுதினார். அனைத்து தமிழர்களும் தட்சிண பிரதேச அமைப்பை எதிர்த்து முதலமைச்சருக்கு தந்தி அனுப்புங்கள் என்று அறைகூவல் விடுத்தார். இதற்கிடையே கர்நாடகாவும் எதிர்த்தது. குறிப்பாக கர்நாடகா மக்கள் கட்சியை சார்ந்த சர்தார் சரனா கவுடா இதனை எதிர்த்தார். இருந்தபோதிலும் 1956-ல் அமிர்தசரசில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இராஜாஜியும் அவரது ஆதரவாளர்களும் "தட்சிணபிரதேசம்" குறித்து பேசினர். ஆனால் அப்போதைய தமிழக முதல்வர் காமராஜர் அந்த மாநாட்டிலேயே இக்கருத்தினை கடுமையாக எதிர்த்தார். தமிழ்நாட்டிலும் தாம் கலந்து கொண்ட அனைத்து பொதுக் கூட்டங்களிலும் தட்சிண பிரதேச கருத்தினை எதிர்த்து முழங்கினார். இது தமிழ் மக்களிடையே பெரும் எழுச்சியை உருவாக்கியது. இக்கருத்திற்கு எதிராக போராடவும் தயாரானார். மக்களும் தட்சின பிரதேசம் உருவாவதற்கு எதிராகப் போராடத் தயாராகினர்.

**விடுதலைக்கு பின்பு மொழிவாரி மாநிலங்கள் மறுசீரமைப்பு:**

விடுதலைக்கு முன்பே பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்திலேயே மொழிவாரி மாநிலங்கள் அமைக்கும் கோரிக்கைகள் எழுந்தன. விடுதலைக்கு பின்பு முதல் பத்தாண்டுகளில் (1947 – 1956) தேச கட்டமைப்பு குறித்து இரண்டு விதமான கொள்கை வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டன. ஒன்று அலுவல் மொழி பற்றியது. மற்றொன்று மாநிலங்கள் மறு சீரமைப்பு பற்றியது. அதாவது கூட்டாட்சி மறு கட்டமைப்பு, தேச கட்டுமானம் மற்றும் ஒருங்கிணைப்பு முயற்சியில் மொழி அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைப்பு செய்வது விடுதலைக்கு பின் முதல் பணியாக ஆனது.

இருநூறு ஆண்டுகால பிரிட்டிஷ் ஆட்சியில், 1947-க்கு முன்பு மாகாணங்களில் எல்லைகள் சரிவர நிர்ணயிக்கவில்லை. மொழி மற்றும் பண்பாட்டுக்குக் கவனம் செலுத்தப்படாததால் மாகாணங்கள் பலமொழிகள் பேசக் கூடியதாகவும், பல பண்பாடுகளை உள்ளடக்கியதாகவும் இருந்தன.

மொழி என்பது மக்களின் பண்பாடு மரபுகள் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையது. மட்டுமல்லாமல் பெருமளவிலான கல்வி வளர்ச்சி மற்றும் அதிகளவிலான எழுத்தறிவித்தல் தாய்மொழி கல்வி மூலம் மட்டுமே நிகழ்ந்தன. அதிக மக்கள் பேசும் மொழி அடிப்படையில் மாநிலம் அமைக்கப்பட்டு, அரசியல் மற்றும் ஆட்சித்துறை அல்லது நீதித்துறை செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்போது மட்டுமே மக்களாட்சி உண்மையிலேயே அடித்தட்டு மக்களுக்கானதாக இருக்கும்.

**தமிழ்நாடு மாநிலம் உருவாக்கம்:**

தமிழ்நாடு மாநில அமைக்கப்பட்டது முக்கியமாக அப்போதைய அரசியல் நிகழ்ச்சி போக்கும் மொழிவழி அடிப்படையில் அமைந்த மறுசீரமைப்பும் ஆகும். சென்னை மாநிலத்தின் சமூக – பொருளாதார அரசியல் நிகழ்வு போக்கு மற்றும் அதன் வளர்ச்சி என்பது மொழி இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புடையது. தமிழ் மொழியின் பெருமை மற்றும் அதன் தொன்மை தமிழ் அறிஞர்களாலும் தமிழ் மக்களாலும் போற்றப்பட்டது. சுதந்திர இந்தியாவில் அவர்கள் ஒன்றிணைய ஏதுவானது. மாநில மறுசீரமைப்பு ஆணையம் தனத இறுதி அறிக்கையை 1955-ஆம் ஆண்டு சமர்பித்தது. அதில் சென்னை, மைசூர் மற்றும் கேரளா மாநிலங்கள் அமைய பரிந்துரை செய்தது. புதிய சென்னை மாநிலம் நவம்பர் 1, 1956-ல் உருவாக்கப்பட்டது.

ஆனால் மறுசீரமைப்பு ஆணையம் இதை ஏற்கவில்லை. பொதுவாக, ஒரு பகுதி வட்டத்தில் எந்த மொழி பேசுபவர்கள் அதிக விழுக்காட்டில் வாழ்கிறார்களோ அந்த மொழி மாநிலத்துடன் அப்பகுதி இணைக்கப்பட வேண்டும் என்பதை ஆணையம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், தேவிகுளம் உள்ளிட்ட நான்கு வட்டங்களைப் பொறுத்து வேறு அளவீட்டினைப் பயன்படுத்தியது. நிலப்பரப்பு காரணம் காட்டி அவை திருவிதாங்கூருடனே நீடித்தல் என அறிவித்தது. ஆனால் திருவிதாங்கூர் பகுதியில் தமிழ்மொழி பேசுவோர் சதவீத அடிப்படையில் நான்கு வட்டங்களான அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு சென்னை மாநிலத்தோடு சேர்க்க வேண்டுமென கோரினர். அதே அளவீடு செங்கோட்டை வட்டம் சென்னை மாநிலத்தில் அமைய கோரப்பட்டது. அதிக தமிழ் மொழி பேசும் மக்களிருந்தும் அந்தப் பகுதி சட்டமன்ற பிரதிநிதிகள் தமிழர்களாக இருந்தபோதிலும் புவியியல் காரணங்களுக்காக திருவிதாங்கூர் பகுதிகள் கொச்சின் மாநிலத்தோடு இணைக்கப்பட்டு விட்டன.

## தமிழ்நாடு என பெயர் மாற்றப் போராட்டம்:

தமிழர்களுக்கென தனிமாநிலம் அமைந்த பிறகும் அவர்கள் முழுவதுமாக திருப்தி அடையவில்லை. அவர்கள் தங்கள் மாநிலத்திற்கு சென்னை மாநிலம் என்றிருக்கும் பெயரை "தமிழ்நாடு" என்று மாற்ற விரும்பினர். இந்த பெயர் மாற்றத்திற்கான போராட்டம் பத்தாண்டுகளாக நடைபெற்றது. மாநில மறுசீரமைப்பு ஆணையம் இந்த பெயர் மாற்றத்திற்கு பரிந்துரைக்கவில்லை. மா.பொ.சி. (மா.பொ.சிவஞானம்) அவர்கள் இடைவிடாத முயற்சியின் விளைவாக அனைத்து கட்சிகளின் மாநாடு ஜனவரி 27, 1956 அன்று ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. ஏராளமான ஆர்ப்பாட்டங்கள் முற்றுகை போராட்டங்கள் சென்னை மாநிலத்தில் நடத்தப்பட்டன. மகாத்மா காந்தியின் சீடரும், சுதந்திர போராட்ட வீரருமான விருதுநகர் சங்கரலிங்கனார் இந்த பெயர் மாற்றக் கோரிக்கைக்காக சாகும் உண்ணா நோன்பினை ஜூலை 27, 1956 அன்று ஆரம்பித்தார் அக்டோபர் 13, 1956 அன்று 76-வது நாள் காலமானார். சங்கரலிங்கனாரின் தியாகம் சென்னை மாநிலத்தின் பல பகுதிகளில் பெரும் எழுச்சியை உருவாக்கியது. கல்லூரி மாணவர்கள், தொழிலாளர்கள், பெண்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர் வெளிப்டையாக இந்த எழுச்சி இயக்கங்களில் பங்கு பெற்றனர். இது சென்னை மாநில அரசியலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் காங்கிரசு கட்சி மக்களிடம் செல்வாக்கினை இழந்தது. மற்றும் பல்வேறு அமைப்பினர் வெளிப்படையாக இந்த எழுச்சி இயக்கங்களில் பங்கு பெற்றனர். இது சென்னை மாநில அரசியலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் காங்கிரசு கட்சி மக்களிடம் செல்வாக்கினை இழந்தது. இறுதியில் 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தோல்வியை தழுவியது. திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) அரசியல் அதிகாரத்தை கைப்பற்றியது. சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது.

## பன்முக கலாச்சாரம், வேற்றுமை மற்றும் தேசக் கட்டமைப்பு செயல்பாடுகள்:

புதிய இந்திய தேசம், முதல் சுதந்திரப் போருக்கு பிறகான காலனி ஆட்சியில் எழுந்த தேசிய எழுச்சி இயக்கத்தின் மூலம் உருவாகியது. இந்த தேசிய இயக்கமானது கடந்து வந்த பாதைகளின் ஊக்கத்தினாலும், சுதந்திரம், மக்களாட்சி மற்றும் கூட்டாட்சி கருத்துக்களின் அடிப்படையிலும் அமைந்தது. மன்னராட்சி காலமும், மத ஆட்சியும் மறைந்துவிட்டது. சுதந்திரம், மக்களாட்சி. மக்களின் விருப்பம், உரிமைகள், அவர்களின் மொழி மற்றும் கலாச்சார அடையாளங்கள் மற்றும் அவர்களின் பொருளாதார மேம்பாடு ஆகியன தேச கட்மைப்புக்கு அடிப்படைகளாகக் கொள்ளப்பட்டன. மாபெரும் தேச கட்மைப்பாளர்களான மகாத்மா காந்தியும், ஜவஹர்லால் நேருவும் மதவாத கலாச்சார தேசியவாதம் (இந்து தேசியவாதம் அல்லது முஸ்லிம் தேசியவாதம் இரு நாடுகள் கொள்கை) இரண்டுக்கும் எதிராக இருந்தனர். பன்மைச் சமூக அமைப்பை ஏற்றுக்கொண்டனர். ஆகவே அவர்கள் மக்களாட்சி, தாராளவாத கூட்டாட்சி இந்தியாவிற்காக வாதிட்டனர். ஆனால் பல அறிஞர்கள், இந்தியாவில் மாநிலங்களுக்கு போதிய நிதி மற்றும் அரசியல் அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டுகின்றனர். அதிகார குவியல், ஒரே தேசிய அலுவல் மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டு ஆங்கிலத்தை நீக்கியது. மாநிலங்களின் கலாச்சார மற்றும் மொழி அடையாளங்களை சிதைப்பதாக அமைந்தது. ஜவஹர்லால் நேரு இந்த ஆபத்தை உணர்ந்த காரணத்தினால் இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகின்ற வரை இந்தி திணிப்பு இருக்காது. அதுவரை ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்கும் என்ற உறுதிமொழியினை வழங்கினார்.

# Political Science

## இணைப்பு

1. இந்தியாவின் அரசமைப்புத் திருத்தச்சட்டங்கள் (1 முதல் 103 வரை திருத்தச்சட்டம்)

| திருத்தச்சட்டம் | ஆண்டு | நோக்கங்கள் |
|---|---|---|
| 1-வது திருத்தச்சட்டம் | 1951 | நில சீர்திருத்தத்தை பாதுகாப்பதற்காக ஒன்பதாவது அட்டவணை சேர்க்கப்பட்டது, பேச்சு மற்றும் வெளிப்பாடு சுதந்திரம், பொது ஒழுங்கு, வெளிநாட்டு அரசுகளுடன் நட்புறவுகள் மற்றும் ஒரு குற்றத்திற்காக தூண்டுதல் ஆகியவற்றின் மீது மூன்று தடைகள் விதிக்கப்பட்டன. சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய வகுப்புகளின் முன்னேற்றத்திற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்ய மாநிலத்திற்கு அதிகாரம் வழங்குவதாகம். |
| 2-வது திருத்தச்சட்டம் | 1952 | ஒரு உறுப்பினரை 7,50,000 க்கும் அதிகமான நபர்களை பிரதிநிதித்துவப்படுத்தலாம் என்று மக்களவையில் பிரதிநிதித்துவப்படுத்தும் அளவை சரி செய்யப்பட்டது. |
| 3-வது திருத்தச்சட்டம் | 1954 | பொதுமக்களின் நலன் கருதி உணவு பொருள்கள், கால்நடை தீவனம், கச்சா பருத்தி, பருத்தி விதை மற்றும் மூல சணல் உற்பத்தி மற்றும் விநியோகத்தை கட்டுப்படுத்த நாடாளுமன்றத்திற்கு தரப்படும் அதிகாரம். |
| 4-வது திருத்தச்சட்டம் | 1955 | நீதிமற்றங்களுக்கு அப்பால் கட்டாயமாக கையகப்படுத்தப்படும் தனியார் சொத்துகளுக்கு கொடுக்கப்படும் பதில் இழப்பீட்டு அளவு. |
| 5-வது திருத்தச்சட்டம் | 1955 | மாநிலச் சட்டமன்றங்களுக்கு காலவரையறையை சரி செய்ய குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் அளித்தது. பட்டியல் இனத்திற்கான மற்றும் பழங்குடி இனத்திற்கான இட ஒதுக்கீடுகளை விரிவுபடுத்தவும் மற்றும் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு மக்களவையில் பிரத்யேக பிரதிநிதித்துவம் மாநில சட்ட மன்றக் கூட்டங்களை பத்து ஆண்டுகள் வரை (அதாவது 1970 வரை) விரிவாக்கப்படுத்துதல். |
| 6-வது திருத்தச்சட்டம் | 1956 | பத்திரிகைகளைத் தவிர்த்து விற்பனை அல்லது கொள்முதல் செய்யும் மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வர்த்தம் மற்றும் வாணிபத்திற்கு விதிக்கப்படும் வரி. |
| 7-வது திருத்தச்சட்டம் | 1956 | மாநில மறுசீரமைப்பு |
| 8-வது திருத்தச்சட்டம் | 1959 | ஜமீன்தார் முறை அகற்றம். |
| 9-வது திருத்தச்சட்டம் | 1960 | இந்திய-பாகிஸ்தான் உடன்படிக்கை (1958) படி, மேற்கு வங்கத்தில் அமைந்திருக்கும் இந்திய ஒன்றிய எல்லைக்குட்பட்ட பெருபரி பகுதி பாகிஸ்தானுக்கு விட்டுக்கொடுக்க ஏற்படுத்தப்பட்டது. |
| 10-வது திருத்தச்சட்டம் | 1961 | இந்திய ஒன்றியத்தில் தத்ரா மற்றும் நகர் ஹவேலி இணைக்கப்பட்டது |
| 11-வது திருத்தச்சட்டம் | 1961 | நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டு கூட்டத்திற்குப் பதிலாக ஒரு தேர்வாரள் குழு உதவுவதன் மூலம் துணைக் குடியரசுத்தலைவரின் தேர்தல் நடைமுறைகளை மாற்றினார். குடியரசுத்தலைவரின் அல்லது துணைக் குடியரசுத்தலைவரின் தேர்தலில் தேர்வாளர் குழு |

| | | |
|---|---|---|
| | | காலியிடத்தில் அடிப்படையில் எதிர்க்க முடியாது என்று வழங்கப்பட்டது. |
| 12-வது திருத்தச்சட்டம் | 1962 | இந்திய ஒன்றியத்தில் கோவா, டாமன் மற்றும் டையு இணைக்கப்பட்டது. |
| 13-வது திருத்தச்சட்டம் | 1962 | நாகாலாந்திற்கு ஒரு மாநில அந்தஸ்து வழங்கியதோடு அதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்தன |
| 14-வது திருத்தச்சட்டம் | 1962 | இந்திய ஒன்றியத்தில் புதுச்சேரி இணைக்ந்தது. |
| 15-வது திருத்தச்சட்டம் | 1963 | உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 60 முதல் 62 ஆண்டுகள் வரை அதிகரித்தது. |
| 16-வது திருத்தச்சட்டம் | 1963 | சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், நீதிபதிகள் மற்றும் இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி) ஆகியோரின் உறுதிமொழியில் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு போன்ற வடிவில் இருக்கும். |
| 17-வது திருத்தச்சட்டம் | 1964 | நிலத்தின் சந்தை மதிப்பை இழப்பீடாக வழங்கப்படவில்லை என்றால், நிலத்தை கையகப்படுத்தப்படுவதை தடைசெய்தது. |
| 18-வது திருத்தச்சட்டம் | 1966 | ஒரு புதிய மாநிலத்தை உருவாக்க இது வழிவகுக்கிறது. மேலும் ஒரு யூனியன் பிரதேசத்தையோ அல்லது ஒரு மாநிலத்தினுடைய யூனியன் பிரதேசத்தையோ ஒன்றாக இணைத்து ஒரு புதிய மாநிலத்தையோ அல்லது ஒரு புதிய யூனியன் பிரதேசத்தையோ உருவாக்கவும் அதிகாரமளிக்கிறது. |
| 19-வது திருத்தச்சட்டம் | 1966 | தீர்ப்பாயங்களின் தேர்தல் முறையை ஒழித்து, தேர்தலை நடத்த அதிகாரத்தை வழங்கியது. |
| 20-வது திருத்தச்சட்டம் | 1966 | உச்சநீதிமன்றத்தால் செல்லாதென்று தீர்ப்பளிக்கப்பட்ட உத்திரபிரதேச மாவட்ட நீதிபதிகளின் நியமனங்கள் உறுதிப்படுத்தப்பட்டது. |
| 21-வது திருத்தச்சட்டம் | 1967 | எட்டாவது அட்டவணையில் சிந்தி-யை 15-வது மொழியாக சேர்க்கப்பட்டுள்ளது |
| 22-வது திருத்தச்சட்டம் | 1969 | ஆசாம் மாநிலத்தின் உள்ளேயே, மேகாலயா-வை ஒரு புதிய சுயாட்சி மாநிலமாக உருவாக்க உதவியத. |
| 23-வது திருத்தச்சட்டம் | 1969 | பட்டியல் இனத்தவர் மற்றம் பழங்குடியினர்களின் இட ஒதுக்கீட்டை விரிவுபடுத்துவது மற்றும் மக்களவையில் ஆங்கிலோ-இந்தியர்களக்கான பிரத்தியேக பிரதிநிதித்துவம் மற்றும் மாநில சட்டமன்ற கூட்டங்களுக்கு பத்து ஆண்டுகள் வரை (அதாவது 1980 வரை) விரிவுபடுத்துதல். |
| 24-வது திருத்தச்சட்டம் | 1971 | அடிப்படை உரிமைகள் உட்பட அரசமைப்பின் எந்த ஒரு பகுதியையும் திருத்தி நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்தியது. அரசமைப்பு திருத்தச்சட்டம் முன்வரைவுக்கு ஒப்புதல் கொடுப்பதை குடியரசுத்தலைவரிடம் கட்டாயமாக்கியது. |
| 25-வது திருத்தச்சட்டம் | 1971 | இது அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் ஒன்றாகிய உறுப்பு 39 (பி) அல்லது (சி) யைச் செயல்படுத்த கொண்டுவரப்படும் சட்டம் உறுப்புகள் 14, 19 மற்றும் 31 ஆகியவைகளுக்கு முரணாக இருந்தாலும் செல்லும் என்பதை கூறுகிறது. |
| 26-வது | 1971 | சுதேச அரசுகளின் முன்னாள் ஆட்சியாளர்களின் |

| | | |
|---|---|---|
| திருத்தச்சட்டம் | | தனிச்சிறப்பு மற்றும் சலுகைகள் அகற்றப்பட்டன |
| 27-வது திருத்தச்சட்டம் | 1971 | சில ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் நிர்வாகிகளுக்கு அவசர சட்டம் பிரசுரிப்பதற்காக அதிகாரமளித்தனர். |
| 28-வது திருத்தச்சட்டம் | 1972 | இந்திய குடிமைப் பணி அதிகாரிகளின் சிறப்பு சலுகைகள் அகற்றப்பட்டு, அவர்களின் பணி நிலைமைகளை நிர்ணயிக்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளித்தது. |
| 29-வது திருத்தச்சட்டம் | 1972 | ஒன்பதாவது அட்டவணையில் நில சீர்திருத்தங்கள் பற்றிய இரண்டு கேரளா சட்டங்களை சேர்த்தது. |
| 30-வது திருத்தச்சட்டம் | 1972 | 20,000 தொகையை உள்ளடக்கிய சிவில் வழக்குகளில் உச்ச நீதிமன்றம் மேல் முறையீடு செய்ய அனுமதித்திருந்த விதிமுறையை நீக்கி அதற்கு பதிலாக சட்டம் தொடர்பான கேள்வி எழும்போது மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படலாம். |
| 31-வது திருத்தச்சட்டம் | 1972 | மக்களவையின் எண்ணிக்கையை 525-ல் இருந்து 545 ஆக அதிகரித்தது. |
| 32-வது திருத்தச்சட்டம் | 1973 | ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கானா பகுதி மக்களுடைய விருப்பங்களை பூர்த்தி செய்ய சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. |
| 33-வது திருத்தச்சட்டம் | 1974 | நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி விலகலை சபாநாயகர்/தலைவர் மட்டுமே ஏற்க முடியும் அதுவும் அவர்கள் திருப்தி அடைந்தால் மட்டுமே. |
| 34-வது திருத்தச்சட்டம் | 1974 | ஒன்பதாவது அட்டவணையில் பல்வேறு மாநிலங்களின் 20க்கு மேற்பட்ட நிலப்பகுதி மற்றும் நில சீர்திருத்த நடவடிக்கை சட்டங்கள் சேர்க்கப்பட்டது. |
| 35-வது திருத்தச்சட்டம் | 1974 | சிக்கிமின் பாதுகாப்பற்ற நிலையை நிறுத்தி, அது இந்திய ஒன்றியத்தின் ஒரு இணை மாநிலத்தின் நிலையை வழங்கியது. இந்திய ஒன்றியத்துடன் சிக்கிம் சங்கத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குள் பத்தாவது அட்டவணை சேர்க்கப்பட்டது. |
| 36-வது திருத்தச்சட்டம் | 1976 | சிக்கிமை, இந்திய ஒன்றியத்தில் முழு மாநிலமாக மாற்றி, பத்தாவது அட்டவணையை தவிர்த்தது. |
| 37-வது திருத்தச்சட்டம் | 1975 | அருணாச்சல பிரதேசம் ஒன்றிய ஆளுகையிலிருந்து சட்டசபை மற்றம் அமைச்சர்கள் குழுவை வழங்கியது. |
| 38-வது திருத்தச்சட்டம் | 1975 | ஒரே நேரத்தில் வெவ்வேறு அடிப்படையில் தேசிய அவசரகால பிரகடனத்தை பிரகடனப்படுத்த குடியருசுத்தலைவருக்கு அதிகாரம் தரப்பட்டது. |
| 39-வது திருத்தச்சட்டம் | 1975 | குடியரசத்தலைவர், துணைக் குடியரசுத்தலைவர், பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோருடன் நீதித்துறையின் எல்லைக்கு அப்பால் உள்ள கருத்துவேறுபாடுகள் இடம்பெற்றிருந்தன. அத்தகைய அதிகாரத்தை அவர்கள் முடிவு செய்ய நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படும். |
| 40-வது திருத்தச்சட்டம் | 1976 | அவ்வப்போது நீர்ப்பகுதி, கண்டத் திட்டு, சிறப்பு பொருளாதார மண்டலம் (EEX) ஆகியவற்றை வரையறுக்க நாடாளமன்றத்திற்கு அதிகாரம் அளித்தது. |
| 41-வது திருத்தச்சட்டம் | 1976 | மாநிலப் பொது ஆணைக்குழு மற்றும் இணைப் பொதுப் பணி ஆணைக்குழுவின் ஓய்வு வயதை 60 முதல் 62-ஆக உயர்த்தியது. |
| | | இதை ஒரு சிறு அரசமைப்பு என்றழைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 42-வது திருத்தச்சட்டம் | 1976 | ஸ்வரன் சிங் குழுவின் பரிந்துரைபேரில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இதன் முன்னுரையில் மூன்று புதிய சொற்களை சேர்த்துள்ளது (மதசார்பற்ற, ஒருமைப்பாடு, சமதர்மம்). குடிமக்களுக்கான அடிப்படை கடமைகளை சேர்த்தது (புதிய பகுதி IV-A). அமைச்சரவையின் ஆலொசனை முடிவுகள் மூலம் குடியரசுத்தலைவரை கட்டுப்படுத்தவும் வழிவகை செய்தது. மூன்று புதிய உறுப்புகள் 32அ (சம நீதி மற்றும் இலவசச் சட்ட நீதி), 43அ (தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்கேற்பு) ஆகியவை சேர்க்கப்பட்டன. மற்றும் சுற்றுக்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு மற்றும் காடுகள், வன விலங்குகளின் பாதுகாப்பு, நீதிமன்றங்களின் நீதி, அரசமைப்பு மற்றும் அமைப்பின் நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகம் ஆகியவை குறித்த உறுப்புகள் சேர்க்கப்பட்டன. நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் சட்ட ஒழுங்கு பிரச்சனை நிலவினால், அப்பகுதிக்கு ஆயதப்படையை அனுப்பி சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலைநாட்டவும் அதிகாரமளிக்கிறது. |
| 43-வது திருத்தச்சட்டம் | 1977 | உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் நீதித்துறையின் மறு ஆய்வு மற்றும் நீதிப்பேராணை ஆகியவற்றின் மூலம் அதிகாரத்தை மீட்டெடுக்கின்றன. |
| 44-வது திருத்தச்சட்டம் | 1978 | இது குடியரசுத்தலைவருக்கு, மறுசீராய்விற்கு அமைச்சரவையின் ஆலோசனையை திருப்பி அனுப்பி வைக்க அதிகாரமளிக்கிறது. எனினும், மறுசீராய்வு ஆலொசனை குடியரசுத்தலைவர் கட்டுப்பட்டவர் ஆவார். தேசிய அவசரத்தை பொறுத்தவரை ‘ஆயத கிளர்ச்சி’ என்ற சொற்களுக்கு பதிலாக ‘உள்ளநாட்டு அமைதிக் குலைவு’ என்ற சொற்கள் கொண்டு வரப்பட்டன. எழுத்து வடிவிலான அமைச்சரவையின் முடிவு அன்றி நெருக்கடி நிலையைக் குடியரசுத்தலைவர் பிறப்பிக்கக் கூடாது. அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை நீக்கப்பட்டு, அதனை சட்டப்பூர்வ உரிமையாக மாற்றியது. |
| 45-வது திருத்தச்சட்டம் | 1980 | இது மக்களவை மற்றும் மாநிலச் சட்டப் பேரவைகளில் பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர், ஆங்கிலோ இந்தியர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டை மேலும் 10 ஆண்டுகளுக்கு நீட்டித்தது. பஞ்சாபில் குடியரசுத்தலைவர் ஆட்சியை ஓராண்டிற்கு மேல் நீட்டிக்க வழிவகை செய்தது. இது போன்ற நீட்டிப்பிற்கு, எந்தவொரு சிறப்பு நிபந்தனைகள் இல்லாமல் இருக்கலாம். |
| 46-வது திருத்தச்சட்டம் | 1983 | மாநிலங்களுக்கிடையேயான விற்பனை வரி |
| 47-வது திருத்தச்சட்டம் | 1984 | அசாம், பீகார், ஹரியானா, தமிழ்நாடு, உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு நிலம் சீர்திருத்தங்கள் இயற்றப்பட்டன |
| 48-வது திருத்தச்சட்டம் | 1984 | பஞ்சாபில் நெருக்கடிநிலை இரண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| 49-வது திருத்தச்சட்டம் | 1984 | திரிபுரா மாநிலத்திலுள்ள தன்னாட்சி மாவட்ட சபைக்கு ஒரு அரசமைப்பை வழங்கியது. |
| 50-வது | 1984 | ஆயுதப்படை அல்லது உளவுத்துறை அமைப்புகளுக்காக அமைக்கப்பட்ட புலனாய்வு அமைப்புகள் மற்றும் தொலைத் தொடர்பு அமைப்புகள் ஆகியவற்றில் |

| | | |
|---|---|---|
| திருத்தச்சட்டம் | | பணியாற்றும் நபர்களின் அடிப்படை உரிமையைக் கட்டுப்படுத்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளித்தல். |
| 51-வது திருத்தச்சட்டம் | 1984 | மேகாலயா, அருணாச்சல பிரதேசம், நாகலாந்து மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பழங்குடியினவர்களக்கான இடஒதுக்கீட்டை மக்களவையிலும் அதேபோல மேகாலயா மற்றும் நாகாலாந்தை சேர்ந்தவர்களக்கு சட்டமன்ற கூட்டத்திலும் இடஒதுக்கீடு தரப்பட்டது. |
| 52-வது திருத்தச்சட்டம் | 1985 | இந்த திருத்தச்சட்டமானது நன்கு அறியப்பட்ட “கட்சி தாவல் தடை சட்டம்” ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவல் காரணமாக பதவி இழப்பார்கள். இது தொடர்பான புதிய விவரங்களைப் பத்தாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. |
| 53-வது திருத்தச்சட்டம் | 1986 | மிசோரம் சம்பந்தமாக சிறப்பு ஏற்பாடுகள் செய்து, குறைந்தபட்சம் 40 உறுப்பினர்கள் கொண்ட சட்ட சபையை உறுதிப்படுத்தப்பட்டது. |
| 54-வது திருத்தச்சட்டம் | 1986 | உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளத்தை உயர்த்தி, அதனை சாதாரண சட்டத்தின் மூலம் நாடாளுமன்றமே எதிர்காலத்தில் மாற்றிக்கொள்ள உதவியது. |
| 55-வது திருத்தச்சட்டம் | 1986 | அருணாச்சல பிரதேசத்தை பொறுத்தவரையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு குறைந்தபட்சம் 30 உறுப்பினர்கள் கொண்ட அதன் சட்டசபை உறுதிப்படுத்தப்பட்டது. |
| 56-வது திருத்தச்சட்டம் | 1987 | குறைந்த 30 உறுப்பினர்களை கொண்டு கோவா சட்டமன்றத்தின் வலிமையை நிர்ணயம் செய்யப்பட்டது. |
| 57-வது திருத்தச்சட்டம் | 1987 | அருணாச்சல பிரதேசம், மேகாலயா, மிசோரம் மற்றும் நாகலாந்து ஆகிய மாநிலங்களின் சட்டமன்ற கூட்டங்களில் பழங்குடியினர்களுக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. |
| 58-வது திருத்தச்சட்டம் | 1987 | அரசமைப்பின் அதிகாரப்பூர்வ உரைக்கு இந்தி மொழியில் வழங்கப்பட்டதோடு அரசமைப்பின் இந்திப் பதிப்பிற்கு அதே சட்டபூர்வமான புனிதத்தன்மையை வழங்கியது. |
| 59-வது திருத்தச்சட்டம் | 1988 | பஞ்சாப்பில் ஏற்படும் உள்நாட்டு பிரச்சனையின் அடிப்படையில் தேசிய அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது. |
| 60-வது திருத்தச்சட்டம் | 1988 | தொழில், வர்த்தகம், அழைப்புகள் மற்றும் வேலைகள் மீதான வருடாந்திர வரிகளின் உச்சவரம்பை ரூபாய் 250-ல் இருந்து ரூபாய் 2500 ஆக உயர்த்தப்பட்டது. |
| 61-வது திருத்தச்சட்டம் | 1989 | மக்களவை மற்றும் மாநில சட்டசபை தேர்தல்களுக்கு வாக்களிக்கும் வயது வரம்பை 21 வயதிலிருந்து 18 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. |
| 62-வது திருத்தச்சட்டம் | 1989 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீடு மற்றும் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு பிரத்தியேக பிரதிநிதித்துவம் மேலும் பத்து ஆண்டுகள் கூடுதலாக (அதாவது, 2000 வரை) மக்களவை மற்றும் மாநில சட்ட மன்றக் கூட்டங்களை விரிவுபடுத்தியது. |
| 63-வது திருத்தச்சட்டம் | 1989 | 1988-ஆம் ஆண்டின் 59-வது திருத்தச்சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களை பஞ்சாப் தொடர்பானதை நீக்கியது. வேறு வார்த்தைகளில் உட்பட்ட பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டது. |

| | | |
|---|---|---|
| 64-வது திருத்தச்சட்டம் | 1990 | பஞ்சாபில் குடியரசுத்தலைவர் மொத்தம் மூன்றாண்டு ஆறு மாதம் வரை நீட்டிப்பு செய்ய வழிகுத்தது. |
| 65-வது திருத்தச்சட்டம் | 1990 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு அலுவலருக்கு பதிலாக பல உறுப்பினர்கள் கொண்ட தேசிய ஆணையத்தை விரிவாக்கத்திற்காக வழங்கப்பட்டது. |
| 66-வது திருத்தச்சட்டம் | 1990 | மேலும் பல்வேறு மாநிலங்களுக்கான 55 நில சீர்திருத்த சட்டங்களை ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. |
| 67-வது திருத்தச்சட்டம் | 1990 | பஞ்சாபில் குடியரசுத்தலைவர் ஆட்சியை மொத்தம் நான்காண்டு காலம் வரை நீட்டிப்பு செய்ய வழிவகுத்தது |
| 68-வது திருத்தச்சட்டம் | 1991 | பஞ்சாபில் குடியரசுத்தலைவர் ஆட்சியை மொத்தம் ஐந்தாண்டு காலம் வரை நீட்டிப்பு செய்ய வழிவகுத்தது. |
| 69-வது திருத்தச்சட்டம் | 1991 | தில்லியை தேசிய தலைநகரப் பகுதியாக வடிவமைத்ததன் மூலம் தில்லி ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிக்கு சிறப்பிடம் வழங்கப்பட்டது. |
| 70-வது திருத்தச்சட்டம் | 1992 | தில்லி தேசிய தலைநகரப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் புதுச்சேரி ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதி ஆகியவற்றின் உறப்பினர்களை குடியரசுத்தலைவர் தேர்தலில் தேர்வாளர் குழுவில் சேர்க்க வேண்டும் |
| 71-வது திருத்தச்சட்டம் | 1992 | எட்டாவது அட்டவணையில் கொங்கனி, மணிப்புரி மற்றும் நேபாளி மொழிகள் சேர்க்கப்பட்டன. இதில், திட்டமிடப்பட்ட மொழிகளின் மொத்த எண்ணிக்கை 18-ஆக அதிகரித்துள்ளது. |
| 72-வது திருத்தச்சட்டம் | 1992 | திரிபுராவின் சட்டமன்றத்தின் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. |
| 73-வது திருத்தச்சட்டம் | 1992 | பஞ்சாயத்து-ராஜ் நிறுவனங்களுக்கு அரசமைப்பு தகுதியும் மற்றும் பாதுகாப்பும் அங்கீகரிக்கப்பட்டது. இதற்காக, ‘பஞ்சாயத்துகள்’ என்ற தலைப்பில் ஒரு புதிய பகுதி-IX ஐ சேர்த்துள்ளது மற்றும் 29 பொருண்மைகளை உள்ளடக்கிய ஒரு புதிய பதினோராம் அட்டவணை சேர்க்கப்பட்டுள்ளது |
| 74-வது திருத்தச்சட்டம் | 1992 | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசமைப்பு தகுதி மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட்டது. இந்த நோக்கத்திற்காக ‘நகராட்சிகள்’ என்ற தலைப்பில் ஒரு புதிய திருத்தம் பாகம்-IX இணைத்து, நகராட்சியின் 18 பொருண்மைகளை பன்னிரண்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. |
| 75-வது திருத்தச்சட்டம் | 1994 | குத்தகைக்காரர், உரிமையாளர், உரிமைகள் போன்றவற்றின் மீதான கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்டவைகளுக்கு தீர்வுகான வாடகை தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டன. |
| 76-வது திருத்தச்சட்டம் | 1996 | 1994-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஒதுக்கீட்டுச் சட்டத்தை (கல்வி நிறுவனங்களில் 69 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது மற்றம் மாநில பணிகளில் பதவிகள் வழங்கப்பட்டது) நீதிபதி மறுபரிசீலனையிலிருந்து பாதுகாக்கும் ஒன்பதாவது அட்டவணையில் இது சேர்க்கப்பட்டது. 1992 இல் உச்ச நீதிமன்றம், மொத்த ஒதுக்கீடு 50 சதவிகிதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று தீர்ப்பளித்தது. |

| | | |
|---|---|---|
| 77-வது திருத்தச்சட்டம் | 1995 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு அரசாங்க வேலைகளில் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. |
| 78-வது திருத்தச்சட்டம் | 1995 | ஒன்பதாவது அட்டவணையில் பல்வேறு மாநிலங்களின் 27 சட்டத்திருத்தங்கள் அடங்கிய சட்டங்கள் உள்ளன. இத்துடன், இந்த அட்டவணையின் மொத்த எண்ணிக்கையானது 282 ஆக அதிகரித்தது, ஆனால் கடைசி நுழைவு 284 எனக் கணக்கிடப்பட்டது. |
| 79-வது திருத்தச்சட்டம் | 1999 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு மற்றும் மக்களவையில் ஆங்கிலோ-இந்தியர்களுக்கான பிரத்யேக பிரதிநிதித்துவம் பத்து ஆண்டுகளுக்கு மேலும் (அதாவது, 2010 வரை) விரிவாக்குதல். |
| 80-வது திருத்தச்சட்டம் | 2000 | மத்திய அரசுக்கும் மாநிலத்திற்கும் இடையில் வருவாய்க்கு 'அதிகாரப் பகிர்வுக்கான மாற்று திட்டம்' வழங்கப்பட்டுள்ளது. |
| 81-வது திருத்தச்சட்டம் | 2000 | தனித்தனி வகுப்பகளுக்கு ஒரு வருடத்தின் நிரப்பப்படாத ஒதுக்கப்பட்ட காலியிடங்களை அடுத்த ஆண்டு அல்லது ஆண்டுகளில் நிரப்பப்பட பரிசீலிக்க மாநிலத்திற்கு அதிகாரமளித்தல். |
| 82-வது திருத்தச்சட்டம் | 2000 | எந்தவொரு தேர்விலும் தகுதி மதிப்பெண்களில் தளர்த்தல் அல்லது மதிப்பீட்டுத் தரங்களைக் குறைத்தல், ஒன்றியம் மற்றும் மாநிலங்களின் பொதுச் பணிகளுக்கு ஊக்கமளிக்கும் விஷயங்களில் இட ஒதுக்கீட்டிற்கான பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்களுக்கு ஆதராவக எந்தவொரு ஏற்பாட்டையும் செய்வதற்கு வழங்கப்பட்டது. |
| 83-வது திருத்தச்சட்டம் | 2000 | அருணாச்சல பிரதேசத்தில் உள்ள பட்டியல் இனத்தவருக்கு பஞ்சாயத்துகளில் இட ஒதுக்கீடு இல்லை. |
| 84-வது திருத்தச்சட்டம் | 2001 | மக்கள் தொகை குறைப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் அதே குறிக்கோள்களோடு மற்றொரு 25 ஆண்டுகளுக்கு (அதாவது, 2026 வரை) மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் இடங்களை சீர்படுத்துவதற்கான தடை நீட்டிக்கப்பட்டது. |
| 85-வது திருத்தச்சட்டம் | 2001 | 1995- ஆம் ஆண்டு முதல் அரசு ஊழியர்களாக இருக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினை சார்ந்தவர்களுக்கு இட ஒதுக்கீட்டின் கீழ் அளிக்கப்படும் பதவி உயர்வு. |
| 86-வது திருத்தச்சட்டம் | 2002 | ஆரம்பக் கல்வியை ஒரு அடிப்படை உரிமையாக்கியது. இதில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள உறுப்பு 21-அ படி, மாநிலமானது 6 முதல் 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதை உறுதிப்படுத்துகிறது. உறுப்பு 51-அ கீழ் அடிப்படை கடைமைகளை சேர்த்துள்ளது அவையாதெனில், இந்திய குடிமகன்களாகிய ஒவ்வொரு பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தங்களது (6 முதல் 14 வயது வரையிலுள்ள) குழந்தைகளுக்கு கல்வி கற்கும் வாய்ப்பினை கட்டாயம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். |
| 87-வது திருத்தச்சட்டம் | 2003 | மாநிலங்களில் உள்ள தொகுதிகளை 2001-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சரிபார்பதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்டதாகும். முன்னர் 84-வது |

| | | |
|---|---|---|
| | | திருத்தச்சட்டத்தின் மூலம் 1991-ஆம் ஆண்டில் பெறப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு அல்ல |
| 88-வது திருத்தச்சட்டம் | 2003 | (உறுப்பு 268-அ)- சேவைகளக்கு சேவை வரி விதிக்கிறது. இருப்பினும், இதன் வருமானம் சேகரிக்கப்பட்டு, மத்திய மற்றும் மாநிலங்கள் ஆகியவற்றால் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. |
| 89-வது திருத்தச்சட்டம் | 2003 | தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் இரண்டாக பிரிக்கப்பட்டது அவைகள் தாழ்த்தப்பட்டவருக்கான தேசிய ஆணையம் (உறுப்பு 338) மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் (உறுப்பு 338-அ). இந்த ஆணையத்திற்கான ஒரு தலைவர், துணைத் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நியமிப்பார். |
| 90-வது திருத்தச்சட்டம் | 2003 | போடோலாந்து ஆளுகைக்குட்பட்ட மாவட்டத்திலிருந்து (உறுப்பு 332 (6)) அசாம் சட்டமன்றத்தில் உள்ள பழங்குடியினர் மற்றும் பழங்குடியினர் அல்லாத பிரதிநிதித்துவத்தை பராமரிப்பதற்கு வழங்கப்பட்டது. |
| 91-வது திருத்தச்சட்டம் | 2003 | அமைச்சர்கள் அமைச்சரவையில் மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை (பிரதமர் உட்பட), மக்களவையின் மொத்த வலிமையின் 15% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது (உறுப்பு 75 (1அ)). ஒரு மாநிலத்தின் அமைச்சரவையின் அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை (முதலமைச்சர் உட்பட), மாநிலத்தின் சட்டமன்றத்தின் மொத்த வலிமையின் 15% க்கும் அதிகமாக இருக்கக்கூடாது. எனினும், ஒரு மாநிலத்தின் அமைச்சர்களின் எண்ணிக்கை (முதலமைச்சர் உட்பட), 12க்கும் குறைவாக இருக்கக் கூடாது (உறுப்பு 164 (1அ)). |
| 92-வது திருத்தச்சட்டம் | 2003 | எட்டாவது அட்டவணையில் நான்கு மொழிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்கள் போடோ, டோக்ரி (டோங்க்ரி), மைதிலி (மைத்திலி) மற்றும் சந்தாலி. இதன் மூலம் அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளது. |
| 93-வது திருத்தச்சட்டம் | 2005 | தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் சமூக மற்றும் கல்வி ரிதியாக பின்தங்கிய வகுப்பினர் அல்லது பட்டியல் இனத்தவர் அல்லது பழங்குடியினர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்ய அதிகாரம் அளித்துள்ளது. இனாம்தார் வழக்கில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை (2005) ரத்து செய்வதற்கு இந்த திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. அதில் சிறுபான்மையினர் மற்றும் சிறுபான்மையினர் அல்லாத, உதவிபெறாத தனியார் கல்லூரிகள், தொழில்சார் கல்லூரிகள், போன்றவற்றிற்கு இது பொருத்தாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. |
| 94-வது திருத்தச்சட்டம் | 2006 | பழங்குடி நலத்துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க பீகாரை விடுவித்து அதனை ஜார்கண்ட் மற்றும் சட்டீஸ்கராக விரிவுபடுத்தியது. இது இப்பொழுது, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாநிலங்களான மத்தியப் பிரதேசம் மற்றும் ஒரிசா ஆகியவற்றிற்க பொருந்தும். |
| 95-வது | 2009 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு விரிவாக்கப்பட்டது மற்றும் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு மக்களவையில் பிரத்யேக பிரதிநிதித்துவம் அளிப்பது மற்றும் மாநில சட்டமன்ற |

| | | |
|---|---|---|
| திருத்தச்சட்டம் | | கூட்டங்களை மேலும் பத்து ஆண்டுகள் வரை விரிவுபடுத்துவது அதாவது 2020 ஆம் ஆண்டு வரை (உறுப்பு 334) |
| 96-வது திருத்தச்சட்டம் | 2011 | 'ஒடியா'- வை ஒரியா என மாற்றி ஒரியா மொழியை எட்டாவது அட்டவணையில் ஒடியா என்று உச்சரிக்கப்பட்டது. |
| 97-வது திருத்தச்சட்டம் | 2011 | ஒரு அரசமைப்பு அந்தஸ்து மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு பாதுகாப்பம் அளிக்கின்றது. உறுப்பு 19-ன் கீழ் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குவதற்கான ஒரு அடிப்படை உரிமையை அளிக்கிறது. இது உறுப்பு 43-பி-ன் வாயிலாக கூட்டுறவு சங்கங்களின் மேம்பாட்டிற்காக புதிய மாநிலக் கொள்கையின் வழிகாட்டு கோட்பாடுகளை சேர்த்துள்ளது. இது 'கூட்டுறவு சங்கம்' (உறுப்பு 243-ZH to 243-ZT) என்ற தலைப்பின் அரசமைப்பில் புதிய பகுதி IX-பி ஐ சேர்த்துள்ளது. |
| 98-வது திருத்தச்சட்டம் | 2013 | ஹைதராபாத் - கர்நடாக மண்டலத்தை மேம்படுத்துவதற்கு கர்நாடக ஆளுநருக்கு தரப்படும் அதிகாரம். |
| 99-வது திருத்தச்சட்டம் | 2014 | இது தேசிய நீதி ஆணையத்தை நிறுவுவதற்கா வழங்கப்பட்டது |
| 100-வது திருத்தச்சட்டம் | 2014 | இந்த திருத்தச்சட்டமானது இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையில் நில எல்லை ஒப்பந்தம் (LBA) ஆகும். |
| 101-வது திருத்தச்சட்டம் | 2016 | பொருள்கள் மற்றும் சேவை வரி |
| 102-வது திருத்தச்சட்டம் | 2018 | பின்தங்கிய வகுப்புகளின் தேசிய ஆணையத்திற்கு அரசமைப்பு தகுதி. |
| 103-வது திருத்தச்சட்டம் | 2019 | பொது வகுப்பினருக்கு பொருளாதார ரீரியில் பலவினமான பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீடு. |

# 12th POLITICAL SCIENCE
# VOL – 2
## அலகு– 8

## திட்டமிடலும் வளர்ச்சி அரசியலும்

**திட்டமிடல்: பொருள், பரிமாணம் மற்றும் நோக்கங்கள்**
**விடுதுலைக்கு முன்பு திட்டமிடல் முறை:**

அனைத்துப் பொருளாதாரங்கள் மற்றும் அரசியல் அமைப்புகள் அனைத்திலும் ஏதோ ஒரு வடிவத்தில் திட்டமிடும் முறை நிலவத்தான் செய்கிறது. திட்டமிடல் அமைப்பின் நோக்கம் என்பது, ஓர் அரசின் அணுகத்தக்க மூலவளங்களை நீண்டக்காலத்திற்கு பயன்படுத்தும் வகையில் ஒருமுறைபடுத்தப்பட்ட பயன்பாட்டு முறைகளை உருவாக்குவதாகும். அது ஒரு செயல்முறையாகும். உற்பத்தி அதிகரிப்பு, தேசிய பங்கீடு அதிகரிப்பு மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிப்பு மட்டுமல்லாமல் மக்கள் சமூக நலன்கள் அதிகரிப்பு ஆகியவற்றை பயன்படுத்தும் வகையில் ஒரு முறைபடுத்தப்பட்ட பயன்பாட்டு முறைகளை உருவாக்குவதாகும். அது ஒரு செயல்முறையாகும். உற்பத்தி அதிகரிப்பு, தேசியப் பங்கீடு அதிகரிப்பு மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிப்பு மட்டுமல்லாமல் மக்கள் சமுகநலன்கள் அதிகரிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அரசு இச்செயல்முறைகளைக் கொண்டுள்ளது. ஒரு அரசின் கீழ் அதன் வழிகாட்டுதல்கள் மற்றும் கண்காணிப்பின் கீழ் அனைத்து தொழில் உற்பத்தி அமைப்புகளும் தங்கள் மூலவளங்களைப் பயன்படுத்துகின்றன. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்படும் விலக்குகளும் இதில் அடங்கும். ஒரு அரசின் அனைத்து தனியார் மற்றும் பொது நிறுவனங்களின் செயல்பாடுகளை அரசே ஒழுங்குபடுத்தி கண்காணிக்கிறது. ஒரு அரசின் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் நாட்டின் முன்னேற்றம் மற்றும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்படுகின்றன.

நவீன அரசு என்பது மக்கள் நல செயல்பாடுகளை நோக்கமாகக் கொண்டது என்றே பொருள் கொள்ளப்படுகிறது. முந்தையக் காலங்கள் போல தற்கால நவீன அரசுகள் “காவல் அரசுகளாக“ மட்டுமே செயல்பட முடியாது. முந்தையக் காலங்களில் மக்களின் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு பாதுகாப்பது மட்டுமே அரசின் செயல்பாடாக கருதப்பட்டு வந்தது. ஆனால், தற்கால மக்கள் நல அரசுகளில் பங்களிப்பு மிகவும் விரிவானதாகும். அது நல்ல ஆட்சியை தருவது மட்டுமல்லாமல் மக்களின் சமூக – பொருளாதார நீதியையும் உறுதிப்படுத்துகிறது. நவீன அரசின் இலக்காக மக்கள் நல அரசு என்ற நிலையை எட்டுவதற்கான வாய்ப்புகளை ஒரு மக்களாட்சி வடிவிலான அரசே வழங்குகிறது. ஒரு நாடு தமது பின்னடைந்த நிலையிலிருந்து விடுபட்டு முன்னேற்றத்தை நோக்கி நகர்வதற்கான சமூக - பொருளாதாரச் சீர்திருத்தங்களை அரசே முன்மொழிந்து நடை முறைப்படுத்துகிறது. இந்தியாவில், தற்காலம் மட்டுமல்லாமல் எதிர்கால வளர்ச்சிக்குமான தேவைகளை எட்டும் வகையில் நாட்டின் மூலவளங்களை உரிய வகையில் பயன்படுத்தி மக்களின் பொதுநலன்களைக் காட்டிலும் செயல்திட்டங்களை உருவாக்குவதற்காக திட்ட ஆணையம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பாகவே பொருளாதாரத் திட்டமிடலில் தேவைக் குறித்து அறிந்திருந்தது. 1936 இல் எம்.விஸ்வேசுவரய்யா “இந்தியாவுக்கான திட்டமிட்ட பொருளாதாரம்“ என்னும் தலைப்பில் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார். அதில் இந்தியாவுக்கான ஒரு பத்தாண்டு திட்டத்தினை முன்பொழிந்திருந்தார். அவரே, இந்தியாவுக்கான பொருளாதாரத் திட்டமிடலின் முன்னோடி என்று கருதப்படுகிறார். 1938 இல் நடைபெற்ற அனைத்து இந்திய காங்கிரசு கமிட்டி இந்திய காங்கிரசு கமிட்டி கூட்டத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முயற்சியால் தேசியத் திட்டக்குழு உருவாக்கப்பட்டது. இந்திய நாடு எதிர்கொள்ள உள்ள பல்வேறு பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு விடைக் காணும் வகையில் ஒரு நாடு தழுவிய பொருளாதாரத் திட்டத்தினை தயாரிப்பதே இதன் நோக்கமாகும். உடனடியாக, இரண்டாம் உலகப் போர் வெடித்ததாலும் அதனைத் தொடர்ந்து தேசியத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதனாலும் இக்குழுவால் அத்திட்டத்தினை உருவாக்க முடியவில்லை. 1944இல் இந்திய தொழிலதிபர்களால் ஒரு பொருளாதார வளர்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டது.

இது பம்பாய் திட்டம் என்று அழைக்கப்பட்டது. மக்கள் திட்டம் என்று அழைக்கத்தக்க இத்திட்டத்தினை எம்.என்.ராய் முன்மொழிந்தார் இத்திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கும் சிறுதொழில் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 1944 இல் ஸ்ரீமன் நாராயண அகர்வால் காந்தியத் திட்டம் ஒன்றை முன்மொழிந்தார். பின்னர், 1950 இல் முன்மொழிந்தத் திட்டம் சர்வோதயத்திட்டம் என்று அழைக்கப்பட்டது. இந்த அனைத்து திட்டங்களுமே இந்தியப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டிருந்தன.

**விடுதலைக்கு பின்பான திட்டமிடல்:**

விடுதலைக்கு பின்னர் உருவாக்கப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அனைத்து மக்களுக்கும் சமூக – பொருளாதார நீதியை உறுதிப்படுத்தும் வண்ணம், அரசமைப்பு பிரிவு IV இல் அரசு கொள்கைக்கான வழிகாட்டு கொள்கை நெறிமுறைகள் இணைக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதி உறுதி அளிக்கப்படுவதும் இணைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை அரசமைப்பை உருவாக்கியவர்கள் நன்கு புரிந்திருந்தனர். இதனால், திட்டமிடல் நீண்டக்கால வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று கருதினர். இதன்படி, பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கான கருவியாக திட்ட்டமிடுதலை இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. நாட்டின் வருவாயும் தனிநபர் வருவாயும் உயர்மட்ட அளவுக்கு அதிகரிக்கும் வகையில் உற்பத்தியை பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு இந்திய திட்ட ஆணையம் உருவாக்கப்பட்டது. வேலைவாய்ப்பு உத்திரவாதம், பணக்காரர் ஏழைகளுக்கிடையேயான பொருளாதார இடைவெளியைக் குறைப்பது ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. நாட்டில் சமத்துவத்தை உருவாக்குவதில் அரசுக்கு முக்கியப் பங்கு இருக்க வேண்டும் எனும் நோக்கத்தில் திட்ட ஆணையம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் சமூக – பொருளாதார நீதியை உறுதிப்படுத்த முடியும் என்றும், பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்றும் எதிர்பார்த்தது.

**இந்தியத் திட்ட ஆணையம்:**

இந்தியத் திட்ட ஆணையம் 1950 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில உருவாக்கப்பட்டது. இந்தியாவின் முதல் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு தலைமையில் இது உருவாக்கப்பட்டது. இந்திய அரசு தீர்மானத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட இந்திய திட்ட ஆணையம் “நாட்டின் வளங்களை மிகுந்த திறனுடனும் சமநிலையுடனும்” பயன்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கும் நோக்கமாக கொண்டுள்ளது. திட்டங்களை உருவாக்குவது தொடர்பான ஒரு ஆலோசகர் என்ற பங்களிப்பினை திட்ட ஆணையம் ஆற்றுகிறது. அத்திட்டங்களை நடைமுறைபடுத்துவது மத்திய, மாநில அரசுகளின் கடமையாகும்.

**திட்ட ஆணைய பணிகள்:**

நாட்டின் எதிர்கால வளர்ச்சி தேவைகளுக்கும் பயன்படும் வகையில் தேசிய மூலவளங்களை மதிப்பீடு செய்வது திட்ட ஆணைய பணியாகும். மனித வளங்கள், மூலதனம், கச்சா பொருள்கள் ஆகியனவும் இதில் அடங்கும். மூலவளங்களை மிகுந்த திறனுடனும் சமநிலைத் தவறாமலும் பயன்படுத்துவற்கான திட்டங்களை வகுப்பது ஆணையத்தின் முதன்மை பணியாகும். முன்னுரிமை அடிப்படையில் துறைகள் இனங்காணப்பட்டு மூலவளங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேலும், திட்டங்களை ஒவ்வொரு கட்டமாக நிறைவேற்றி முழுமைப்படுத்துவதிலும் ஆணையத்தின் பொறுப்பாகும். எனவே, வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் சூழ்நிலைகளை அடையாளம் காண வேண்டியது ஆணையத்தின் பொறுப்பு ஆகும்.

நாட்டில் அவ்வப்போது நிலவும் சூழ்நிலைகளுக்கு தக்கவாறு திட்டங்களை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கான வலிகளையும் திட்ட ஆணையம் ஆராய்கிறது. ஒரு திட்டத்தின் பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளை ஆணையம் வரையறை செய்கிறது. எனவே, திட்டச் செயல்பாடுகள் உரிய கால இடைவெளிகளில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இதன்மூலம் உரிய செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த செயல்முறைகளில் உரிய செயல்திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் வகுக்கும் வகையில் ஆலோசகராக திட்ட ஆணையம் இயங்குகிறது. ஒரு குறிப்பிட்ட பிரச்சனைகள் எழும்போது அதனை ஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதும் திட்ட ஆணையப் பணியாகும். மேலும், ஒவ்வொரு துறையிலும் குறிப்பிட்ட காலத்தில் எட்ட வேண்டிய இலக்குகளை வகுத்து, பொருளாதார வளர்ச்சி விகிதத்தை வரையறை செய்வதும் ஆணையத்தின் பணி ஆகும்.

## நிறுவனமும் அமைப்பும்:

பிரதமர், நான்கு முழு நேர உறுப்பினர்கள், கேபினட் அமைச்சர் நிலையிலுள்ள நான்கு பகுதி நேர உறுப்பினர்கள் ஆகியோரை திட்ட ஆணையம் கொண்டுள்ளது. முழுநேர ஊழியர்களை பொருத்தமட்டில் தொழில்நுட்பத்துறை, பொருளாதாரம், நிர்வாகம் ஆகியத் துறைகளில் வல்லமைமிக்கவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். திட்ட ஆணையத்தின் தலைமைப் பொறுப்பை பிரதமர் ஏற்று, ஆணையப் பணிகள் சுமூகமாக நடைபெற ஒத்துழைக்கிறார்.

இதில், பின்னர் நிர்வாக சீர்திருத்த ஆணையம் வழங்கிய பரிந்துரைகளை ஏற்று ஆணையம் மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி, பிரதமர் தலைவராக இருந்து கூட்டங்களை தலைமை ஏற்று நடத்துவார். ஆணைய துணைத் தலைவர் பொறுப்பில் நியமிக்கப்படும் ஒருவர் ஆணையத்தின் நிர்வாகத் தலைவராக செயல்படுவார். திட்ட வரைவுகளை தயாரித்து மத்திய அமைச்சகம், செயலகம், நான்கு முழு நேர உறுப்பினர்கள், பகுதி நேர உறுப்பினர்களாக உள்ள சம்மந்தப்பட்ட கேபினட் அமைச்சர்கள் ஆணையத்தின் இதில், பின்னர் நிர்வாக சீர்திருத்த ஆணையம் வழங்கிய பரிந்துரைகளை ஏற்று ஆணையம் மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி, பிரதமர் தலைவராக இருந்து கூட்டங்களை தலைமை ஏற்று நடத்துவார். ஆணைய துணைத் தலைவர் பொறுப்பில் நியமிக்கப்படும் ஆணையத்தின் நிர்வாகத் தலைவராக செயல்படுவார். திட்ட வரைவுகளை தயாரித்து மத்திய அமைச்சகம், செயலகம், நான்கு முழு நேர உறுப்பினர்கள், பகுதி நேர உறுப்பினர்களாக உள்ள சம்மந்தப்பட்ட கேபினட் அமைச்சர்கள் ஆணையத்தின் அலுவல்சாரா உறுப்பினர்களான நிதி அமைச்சர், திட்ட அமைச்சர், உறுப்பினர் மற்றும் செயலர் (இவர் பொதுவாக இ.ஆ.ப. அலுவலர் ஆவர்) ஆகியோருக்கு அனுப்ப வேண்டியது திட்டக்குழு உதவித் தலைவரின் பொறுப்பாகும். ஆணையத்தின் நிர்வாகச் செயல்பாடுகள் கூடுதல் செயல்பாடுகள் மூலம் ஒருங்கிணைக்கப்படுகிறது. திட்டங்களை கண்காணிக்கும் பொறுப்பில் துறைச் செயலாளர்கள், கீழ்நிலைச் செயலாளர்கள், நிலையிலான உயர் அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். திட்ட ஆணைய நிர்வாகத்தில் மாநில அரசுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதில்லை. இது முழுவதும் மத்திய அரசு அமைப்பாகும்.

கூட்டுப் பொறுப்பு எனும் நெறியின் கீழ் திட்ட ஆணையம் இயங்குகிறது. பொதுப் பிரிவு, பொருள் பிரிவு, நிர்வாகப் பிரிவு என மூன்று பிரிவுகளாக ஆணையம் பிரிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் தொடர்பான அனைத்து பணிகளையும் இப்பிரிவு மேற்கொள்கிறது. குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த திட்டங்கள் உதாரணமாக, உணவு, வேளாண்மை, மின்சாரம், நீர்பாசனம், போக்குவரத்து போன்ற தனிப்பட்ட துறைகளுக்கான திட்டங்கள் பொருள் பிரிவின் கீழ் வருகின்றன. நிர்வாகப் பணிகள் நிர்வாகப் பிரிவின் கீழ் வருகின்றன.

இதைத் தவிர, வேறு சில பிரிவுகளும் திட்டங்கள் உருவாக்கம் மற்றும் அமலாக்கம் தொடர்பாக இயங்குகின்றன. அவை பின்வருமாறு

### 1. தேசிய திட்டக்குழு:

4-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் 1965 இல் தேசிய திட்டக்குழு அமைக்கப்பட்டது. அறிவியல், பொறியியல், பொருளாதாரம் ஆகிய துறை வல்லுநரைக் கொண்டு உருவாக்கப்படும் இக்குழு வேளாண்மை, நிலச்சீர்திருத்தம்,நீர்பாசனம், கல்வி, வேலைவாய்ப்பு, தொழிற்துறை, வர்த்தகம், மேலாண்மை, குடும்பக்கட்டுப்பாடு, சமுக நலம், இயற்கை வளங்கள், போக்குவரத்து, பன்னாட்டு வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் பணியாற்றுகிறது. இந்த ஒவ்வொரு துறையிலும் தேவைகள் குறித்து விரிவான ஆய்வு செய்து திட்ட ஆணையத்திற்கு அறிக்கை அளிக்க வேண்டியது இக்குழுவின் கடமையாகும். திட்ட ஆணையம் திட்டங்களை உருவாக்க, இது உதவுகிறது.

### 2. தேசிய வளர்ச்சிக் குழு:

பிரதமர் தலைமையிலான தேசிய வளர்ச்சிக் குழுவில் அனைத்து முதலமைச்சர்களும் உறுப்பினர்கள் ஆவர். இக்குழுவில் மாநிலங்கள் இணைக்கப்பட்டதன் மூலம் ஒவ்வொரு மாநிலங்களிலும் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகிறது. தேசிய வளர்ச்சிக் குழு கூட்டங்களின் பொது மத்திய அரசின் கேபினட் அமைச்சர்கள் சில நேரங்களில் பங்கேற்பதில்லை. திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை அவ்வப்போது சீராய்வு செய்வதும் மாநில வளர்ச்சி குறித்த பல்வேறு பிரச்சனைகளை விவாதிப்பதும் இக்குழுவின் பங்காகும். திட்டங்களை

திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகளை உருவாக்குவதும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மக்களின் பங்களிப்பு உறுதிப்படுத்துவதும் இக்குழுவின் பணிகளாகும். எதிர்கால வளர்ச்சிக்கு அசியமான மூலவளங்களை கருத்தில் கொண்டு, நிர்வாகப் பணிகளை திறம்பட செயல்படுத்தும் வகையில் இக்குழு பணியாற்றுகிறது.

**வறுமை ஒழிப்பை நோக்கி:**

இந்தியாவின் முக்கியப் பிரச்சனைகளில் ஒன்று வறுமையாகும். நாட்டில் தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதுடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதையும் திட்ட ஆணையம் நோக்கமாகக் கொண்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி என்பது அனைத்து பிரிவினர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். பொது மக்களின் வாழ்க்கைத்தரம் அவரது பொருளாதார நிலையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற கருத்து புரிந்து கொள்ளத்தக்கது. அனைவருக்கும் உணவு, உடை, உறைவிடம் வழங்குவதுடன் அவர்கள் ஒரு நாகரிகமான வாழ்க்கையை நடத்துவதற்கான தேவையை கல்வி, சுகாதாரம் ஆகியவற்றையும் பெரும் வகையில் தரமான வாழ்க்கையை உறுதிப்படுத்துவது அரசின் முக்கியமான கடமையாக உணரப்பட்டுள்ளது. ஆனாலும், பொருளாதார வளர்ச்சியிலும் வறுமை ஒழிப்பை இணைப்பது என்பது இன்னமும் சவாலாகவே நீடிக்கிறது. எனவே, 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு இப்பிரச்சனையில் கவனம் செலுத்தி வருகிறது. 1970-களின் தொடக்கத்தில் வறுமையை ஒழிப்போம் என்ற முழக்கத்தின் கீழ் தீவிரப்படுத்தப்பட்டது.

வறுமை ஒழிப்புக்கான வழிகளில் வேலைவாய்ப்புகள் உருவாக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. வேலையின்மை மற்றும் முழுமையான வேலையின்மை காரணமாக ஏராளமான பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அனைத்து ஐந்தாண்டு திட்டங்களும் வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் அளித்தன.

**சமூக நீதியினை உறுதிப்படுத்துதல்:**

அசரமைப்பின் 38(2)-வது உறுப்பு இவ்வாறு கூறியது. “அரசு குறிப்பாக, வருமானத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை குறைப்பதையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் பிரிவினர் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபடும் மக்கள் குழுக்கள் ஆகியோரிடையிலும் தனிநபரிடையிலும் தகுதி, வசதி, வாய்ப்புகள் ஆகியவற்றில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதையும், நோக்கமாகக் கொள்ள வேண்டும்”. திட்டங்களை வகுப்போர் இப்பிரிவினை மனதில் கொண்டு திட்டங்களை வகுக்கின்றனர்.

**மனிதக் கழிவுகளை மனிதரே அகற்றும் நிலை:**

மனிதக்கழிவுகளை மனிதரே அகற்றும் நிலைத் தொடர்வது அரசமைப்பில் வழங்கியுள்ள உரிமைகளுக்கு எதிரானது என்றும் எனவே இதுபோன்ற அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவோருக்கு உரியப் பாதுகாப்புகளை உறுதிப்படுத்துவது தொடர்புடைய அரசுகள், நிறுவனங்களின் கடமை என்று உச்ச நீதிமன்றம் கடந்த 2011-ஆம் ஆண்டே முக்கியத் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால் இன்றும் கூட இந்தியாவின் பல நகரங்களில் இந்நிலை நீடிக்கிறது.

சமூக நீதியை உறுதிப்படுத்துதல் என்பது பொருளாதாரத்தை திட்டமிடும் நிலையிலேயே இணைந்து உள்ளது. வளர்ச்சிக்கான வழிமுறைகளை வகுக்கும்போது கல்வி, வேலைவாய்ப்பு தொடர்பாக அனைவருக்கும் சமவாய்ப்புகளை உருவாக்குவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சமூக மயப்படுத்தப்பட்ட சமூக வடிவங்களை உருவாக்குவதன் மூலம் செல்வங்கள் ஒரு சிலர் கைகளில் மட்டுமே குவிவது தடுக்கப்படுவதுடன் சுரண்டல், ஒடுக்குமுறை ஆகிய கொடுமைகளுக்கு முடிவு கட்ட இயலும்.

வரலாற்று பூர்வமாகவே இந்திய சமுதாயம் என்பது சமூகத்தின் ஒரு பிரிவால் மற்ற பிரிவு ஒடுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வந்திருக்கிறது. எனவே தான், இத்தகைய பழைமை வாய்ந்த சக்திகள் மற்றும் சமூகத் தீமைகளை தடுக்கும் வழிவகைக் காண்பது அரசமைப்பை உருவாக்கியவர்களுக்கு சவாலாகவே அமைந்தது. அடிப்படை உரிமைகள் குறித்து பேசும் அரசமைப்பின்

**உலகளாவிய பலபரிமாண வறுமை பட்டியல் 2018 (MPI): 2018 ஆீடு மதிப்பீடுகள் (மில்லியனில்)**
பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் கடந்து வறுமைகளை ஒழிப்பதற்காக பலபரிமாண அணுகு முறைகளின் முக்கியத்துவம் வளம் குன்றா வளர்ச்சிக்கானச் செயல்திட்டம் 2030 இல் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. வளம் குன்றா வளர்ச்சி இலக்கு – 1 வறுமையை அனைத்து வடிவங்களிலும் முடிவுக்கு கொண்டுவருமாறு அறைக்கூவல் விடுக்கிறது. இதற்கான சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான முயற்சிகளில் உலகளாவிய பலபரிமாண வறுமை பட்டியல் 2011 இல் இறங்கியது. இதையொட்டி வறுமையை அனைத்து வடிவங்களிலும் ஒழிப்பற்கான புதிய சாளரம் திறக்கப்பட்டது. 2018 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி 105 நாடுகளில் வறுமை பல்வேறு பரிமாணங்களில் இருப்பதை உலகளாவிய பலபரிமாண வறுமை பட்டியலை மதிப்பீடு செய்தது. உலக மக்கள் தொகையில் 77 விழுக்காடு மக்கள் இவ்வாறே வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர்.

**2008 உலகளாவிய பலபரிமான வறுமை பட்டியல்: பரிமாணங்கள், சுட்டி, ஏற்றத் தாழ்வு குறைப்பு, எடை:**
மக்கள் எவ்வாறு பல்வேறு காரணங்களால் பல்வேறு சூழல்களில் வறுமைக்கு ஆளாகின்றனர் என்பதை பொருளாதார காரணங்கள் தாண்டியும் உலகாளவிய பலபரிமாண வறுமை பட்டியலை ஆய்வு செய்தது. அப்போது மூன்று முக்கிய பரிமாணங்களான சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றில் மக்கள் பின்தங்கியிருப்பது அடையாளம் காணப்பட்டது. இவற்றின் தரம் 10 கட்டிகளாக அளவிடப்பட்டது. வறுமையில் வாடும் மக்களில் குறைந்தது மூன்றில் ஒரு பகுதி மக்களாவது கீழ்க்காணும் கட்டிகளில் மிகவும் கீழ்நிலையில் வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டது.

| வறுமையின் பரிமாணம் | சுட்டி | ஒவ்வொரு வீட்டிலும் வறுமைக்கான காரணம் | எடை |
|---|---|---|---|
| சுகாதாரம் | ஊட்டச்சத்து | 70 வயது கடந்த முதியோர் அல்லது குழந்தை ஊட்டச்சத்து குறைவால் பாதிப்புக்குள்ளாவது | 1/6 |
| | குழந்தை இறப்பு விகிதம் | பிறந்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஒரு குழந்தை இறப்பது. | 1/6 |
| கல்வி | பள்ளி ஆண்டுகள் | 10வயது அல்லது அதை கடந்த உறுப்பினரில் 6 ஆண்டுகள் பள்ளியில் கழித்தவர்கள் | 1/6 |
| | பள்ளி வருகை | பள்ளிக் கல்வி வயதில் 8 ஆம் வகுப்பைக்கூட நிறைவு செய்ய இயலாத இடைநிற்றல் குழந்தைகள் | 1/6 |
| | எரிபொருள் | விறகு, சாணம், கரி போன்றவற்றைப் பயன்படுத்தி சமையல். | 1/18 |
| வாழ்க்கைத்தரம் | பொதுச் சுகாதாரம் | வளம் குன்றா வளர்ச்சி இலக்குகள் வழிகாட்டுதலின் படியான பொதுச் சுகாதாரம் வசதியின்மை அல்லது சற்று மேம்பாட்டு இருந்தாலும் சுற்றுப்பகுதியில் இருக்கும் அளவிற்கு மேம்படாத நிலைமை | 1/18 |
| | குடிநீர் | வளம் குன்றா வளர்ச்சி இலக்குகள் வழிகாட்டுதலின்படியான மேம்பட்ட குடிநீர் வசதியின்மை அல்லது வீட்டிலிருந்து குறைந்தது 30 நிமிடங்கள் நடந்து சென்றால் மட்டுமே குடிநீர் பெறும் நிலைமை. | 1/18 |
| | மின்சாரம் | மின்வசதி இல்லாத வீடு | 1/18 |
| | வீட்டுவசதி | முறையான கூரை, சுவர், தளம் இல்லாத வீடு, இயற்கையாக கிடைக்கும் பொருள்களை கொண்டு கூரை, சுவர் மற்றும் தளங்களை அமைத்தல் | 1/18 |
| | உடமைகள் | வானொலி, தொலைக்காட்சி, தொலைப்பேசி, கணினி, மாட்டுவண்டி, இருசக்கர மிதிவண்டி, இருச்சகர மோட்டார் வாகனம், ரெப்ரிஜிரோட்டர் போன்ற பொருள்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் வீட்டில் இல்லாதது சொந்த கார் இல்லாது | 1/18 |

பிரிவு III-ன் கீழ் வழங்கப்பட்டுள்ளவாறு ஒருவர் முழுமையான வாழ்வதற்கு தேவையான அனைத்து உரிமைகளும் அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாக்கப்படுவது அடிப்படை உரிமைகள் ஆகும் என்று நியாயப்படுத்தப்பட்டுள்ளது. பிரிவு IV அரசு கொள்கைக்கான வழிகாட்டு நெறிமுறைகளும் மக்களின் வருமானத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை குறைத்து ஒரு சமத்துவ சமுதாயம் உருவாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் அரசின் பணிகள் அமைய வேண்டும் என்று கூறுகிறது.

திட்ட ஆணையம் கவனம் செலுத்த வேண்டியுள்ள மற்றொரு முக்கிய பகுதி கிராம நகர்ப்புற ஏற்றத்தாழ்வாகும். பொருளாதார வளர்ச்சி, தொழில்மயமாக்கல், நகர்மயமாக்கல் ஆகியவற்றிற்கான செயல்பாடுகள் அதிகரிக்கும்போது, இந்திய சமூகத்திலும் பொருளாதாரத்திலும் அதன் பாதிப்பு ஏற்படுகிறது. கிராமங்கள் மற்றும் நகரங்களில் வாழும் மக்களின் வளர்ச்சியில் காணப்படும் ஏற்றத்தாழ்வு அரசமைப்பில் கூறப்பட்டுள்ள கொள்கை நெறிக்கு எதிராக சமத்துவமின்மையை ஊக்குவிக்கிறது. எனவே, இந்த ஏற்றத்தாழ்வினை அகற்றி சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் கிராம பொருளாதாரத்தினை முன்னேற்றுவதற்கான பல திட்டங்களை திட்ட ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

**மக்களாட்சி சமதர்மம்:**

இந்தியா விடுதலைப் பெற்ற தருணத்தில் தேசத்தை எவ்வாறு ஆள்வது எவ்வாறு திட்டமிடுவது என்பது பல்வேறு பிரச்சனைகள் இருந்தன. இவற்றில் ஒன்று நீண்டக்கால வளர்ச்சிக்கான சிறந்த செயல்திட்டம் எது என்பதை கண்டுபிடிப்பதாகும். இந்திய வளர்ச்சிக்கான திட்டமிடுதலின் சிற்பி ஜவஹர்லால் நேரு ஆவார். அவரை பொறுத்தவரை சோவியத் யூனியன் பின்பற்றிய திட்டமிடல் முறையில் மட்டுமல்லாமல் முதலாளியம் பின்பற்றி தாராளவாத கொள்கைகளாலும் கவரப்பட்டிருந்தார். இந்த இரண்டு கோட்பாடுகளும் இணைந்து இந்தியாவில் பின்பற்றப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். இதுவே மக்களாட்சி சமதர்மம்

ஜவஹர்லால் நேரு ஆவார். அவரை பொறுத்தவரை சோவியத் யூனியன் பின்பற்றி திட்டமிடல் முறையில் மட்டுமல்லாமல் முதலாளியும் பின்பற்றிய தாராளவாத கொள்கைகளாலும் கவரப்பட்டிருந்தார். இந்த இரண்டு கோட்பாடுகளும் இணைந்து இந்தியாவில் பின்பற்றபட வேண்டும் என்று அவர் விரும்பினார். இதுவே மக்களாட்சி சமதர்மமம் என்று அழைக்கப்படுகிறது. நேருவை பொறுத்தவரை மக்களாட்சி முறையில் திட்டமிடலும் இணைந்து பின்பற்றப்பட வேண்டும். திட்டமிடல் என்பது சமுதாயத்தில் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஒருங்கிணைந்த வழிமுறையாகும். அது உற்பத்தி நுகர்வு, வேலைவாய்ப்பு, போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், சமூகப்பணிகள் போன்றவற்றோடு உற்பத்தியை இணைப்பதாகும். இத்தகைய ஒரு சமுதாயமே தனிநபர் ஆளுமை வளர்ச்சியை முழுமையாக வழங்க இயலும். இதையொட்டி சமுதாயத்தில் பொருள் வளங்களை சிறப்பாக கட்டுப்படுத்துவது, சிறப்பான உடைமை விநியோகத்தினை உறுதிப்படுத்துவது ஆகியவற்றிற்கான கொள்கை வழிமுறைகளை உருவாக்குவது அரசின் கடமையாகும். கீழ்தட்டு மக்கள் பிரிவுகளை பாதுகாப்பதற்கு அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தினையும் அரசு கட்டுப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கலப்புப் பொருளாதாரம்:**

இதையொட்டி தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் தாராளவாத கொள்கைகளை, சமூகத்தைப் பாதுகாக்கும் வகையில் பொதுத்துறை நிறுவனங்களை ஊக்கப்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கிய கலப்புப் பொருளாதாரக் கொள்கை ஏற்கப்பட்டது. இதன்மூலம் உற்பத்தி அமைப்புகள் சமூக மயப்படுத்தப்படுவதுடன் பொருளாதாரத்தை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்களும் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்தியா பின்பற்றி வரும் இந்த கலப்புப் பொருளாதாரக் கொள்கை உலகில் பல நாடுகளை கவர்ந்துள்ளது. அரசமைப்பின் 38-வது உறுப்பு இவ்வாறு கூறுகிறது. "சமூக-பொருளாதார அரசியல் நீதியை சமூக ஒழுங்காகக் கொண்டிருக்கக்கூடிய வகையில் மக்கள் நலன்களை உறுதிப்படுத்தி பாதுகாப்பதற்கான ஊக்குவிப்பதை இந்த அரசு நோக்கமாகக் கொள்ளும் என்பது நாட்டின் அனைத்து நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தப்பட வேண்டும். அரசமைப்பு இக்கோட்பாட்டினை நிறைவு செய்யும் நோக்குடன் கலப்புப் பொருளாதாரம் பின்பற்றப்பட்டது. 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொழிற்கொள்கை தீர்மானம் இந்திய நாடாளுமன்றத்தில் ஏற்கப்பட்டது. நாட்டின் பொருளாதாரக் கொள்கையின் வழிக்காட்டுதலாக இது பின்பற்றப்படுகிறது. இத்தீர்மானத்தின் அடிப்படையிலேயே ஐந்தாண்டுத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. சமதர்ம

சமுதாயத்தை எட்டும் ஒரு பொருளாதார சமுதாயம் நிறைவேற்றும் வகையில் அரசு நிர்வாகத்திற்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தொழிற்துறை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, முழுவதும் அரசுடைமை ஆக்கப்பட்ட தொழில்களாகும். இரண்டாவது பிரிவு, அரசுடைமை ஆக்கப்பட்டபோதிலும் பொதுத்துறை நிறுவனங்களையும் உள்ளடக்கும் வாய்ப்புகளை கொண்ட தொழில்களாகும். மூன்றாவது பிரிவு, தனியார் தொழில் நிறுவனங்களாகும். அனைத்து தொழில் பிரிவுகளையும் அரசுக் கட்டுப்படுத்துகிறது. மூன்றாவது பிரிவான தனியார் தொழில்கள் இலாபம் அல்லது சுயநலனை மட்டுமே நோக்கமாக கொள்ளாமல் ஒட்டு மொத்த சமூகத்தின் நலனும் பாதுகாக்கும் வகையில் ஒழுங்குபடுத்தப்படுகிறது. சமுதாய நலனே உச்ச முன்னுரிமையாகும்.

ஒரு கலப்புப் பொருளாதாரத்திற்கான முன் நிபந்தனையாக திட்டமிடல் கருதப்படுகிறது. பொதுத்துறை மற்றும் தனியார்துறைகளின் பயன்கள் சமுதாய நலனுடன் இணைக்கப்பட வேண்டும். இதையொட்டி ஐந்தாண்டு திட்டமிடல் உருவாக்கப்பட்டு பொருளாதார வளர்ச்சியையும் சமூக நீதியையும் எட்டும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. உரிய முறையில் வளர்ச்சியை கொண்டு வருவதற்கான உரிய திட்டங்களை உருவாக்குவது மற்றும் அதற்கான உரிய செயல்திட்டங்களை தகவமைப்பது ஆகிய பொறுப்புகளும் அரசை சார்ந்ததாகும்.

P.V. நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசு அரசு அமைந்ததை தொடர்ந்து 1991 இல் ஜூலையில் பொருளாதார சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய பொருளாதாரத்தின் மீது நிலவிய அதிகாரவர்க்கத்தின் கட்டுப்பாடுகளை குறைத்து இந்திய பொருளாதாரத்தை உலக பொருளாதாரத்துடன் இணைக்கும் வகையில் தாராளமயப்படுத்துவதை இது நோக்கமாக கொண்டிருந்தது. இதன்படி, உருவாக்கப்பட்ட சீர்திருத்தங்கள்,தொழிற்துறை உரிமம் வழங்குதல், அந்நிய முதலீடு அனுமதி, அந்நிய தொழில்நுட்பங்கள் மற்றும் பொதுத்துறை கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தியது. ஏழாவது ஐந்தாண்டு திட்டம் 1990 இல் நிறைவேறியது. அன்றைய நாட்டின் பொருளாதார நிலையை கருதி அடுத்த எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அறிமுகப்படுத்தவில்லை. அடுத்து வந்த 1990 – 91, 1991 – 92 ஆகிய இரு ஆண்டுகளில் ஆண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. எட்டாவது ஐந்தாண்டு திட்டம் 1992 இல் கொண்டு வரப்பட்டது.

**நிதி ஆயோக்**

**மாற்று இந்தியாவிற்கான தேசிய நிறுவனம் (NITI Aayog):**

திட்டமிடல் அணுகுமுறையில் இந்திய அரசு 2015 ஆம் ஆண்டு பெரும் மாற்றத்தை கொண்டு வந்தது. திட்ட ஆணையத்திற்கு பதிலாக நிதி ஆயோக் (மாறும் இந்தியவிற்கான தேசிய நிறுவனம்) எனும் புதிய ஆணையத்தினை அறிமுகப்படுத்தியது. ஒட்டுமொத்த திட்டமிடல் செயல்முறைகளையும் மேலும் அதிகார பரவலாக்கம் செய்யும் நோக்குடன் இந்த ஆணையம் உருவாக்கப்பட்டது. இந்த முறையின் மூலம் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதில் மாநில அரசுகள் சிறப்பான முறையில் பங்கேற்க முடியும். மாநிலங்கள் விரிவான அளவில் பங்களிக்கும் வகையில் கூட்டுறவு கூட்டாட்சி அமைப்பை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. அது, தேவை அடிப்படையிலான திட்டங்களை கவனம் செலுத்துவதுடன் ஒட்டுமமொத்த செயல்களிலும் மக்கள் தொகையில் அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கி வளர்ச்சி செயல்முறையில் ஒரு பகுதியாக பங்கேற்க செய்கிறது. ஆனால் மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்காமல் போதிய அதிகாரங்களை அளிக்காமல் இந்த மாநில அரசுகள் திட்டமிடலில் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கமுடியும் என்று கூறுவது பலனளிக்காது. மேலும் திட்ட ஆணையத்தை கலைத்ததன் மூலம் பொருளாதார வளர்ச்சியில் இதுவரை அரசுக்கு இருந்து வந்த கட்டுப்பாடுகள் குறைக்கப்பட்டு தனியார் நிறுவனங்களின் கைகளில் விடப்பட்டது. இருப்பினும், தற்போதைய உலக நிலவரங்கள் மற்றும் பொருளாதார அம்சங்களை உற்று நோக்கும்போது “சந்தை அடிப்படையிலான பொருளாதாரம் தவிர்க்க முடியாத ஒன்றாகவே படுகிறது.

அரசின் சிந்தனை பிரிவாக மட்டுமே நிதி ஆயோக் செயல்படுகிறது. அது, அரசுக் கொள்கை உருவாக்கத்தில் பொருத்தமான தொழில்நுட்ப அறிவுரைகளை மட்டுமே மத்திய, மாநில அரசுகளுக்கு வழங்குகிறது. தேசிய மற்றும் சர்வ தேசிய முக்கியத்துவம் கொண்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் அது அறிவுரை வழங்கி தமது நாட்டுக்கும் உலகில் பிற நாடுகளுக்கும் எவை சிறந்த நடைமுறைகளாக இருக்க முடியும் என்பதையும் ஆராய்ந்து கூறுகிறது. 2015, ஜனவரி 1 அன்று

மத்திய அமைச்சரவை நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றதன் மூலம் திட்ட ஆணையம் கலைக்கப்பட்டு நிதிஆயோக் உருவாக்கப்பட்டது.

**நிதி ஆயோக் இலக்குகள்:**

| |
|---|
| கூட்டுறவு கூட்டாட்சியை முன்னிலைப்படுத்துதல் அரசுகளின் தீவிர ஈடுபாடு. |
| கிராம அளவிலான மேம்பாட்டிற்கான திட்டங்களை உயர் அளவில் ஒருங்கிணைத்தல் |
| பொருளாதார வளர்ச்சியிலிருந்து உரிய பயன்களை பெற இயலாத பிரிவினருக்கு சிறப்பு கவனம் |
| தேசிய பாதுகாப்புநலன்களை ஒருங்கிணைக்கும் பொருளாதாரக் கொள்கை |
| தொடர்படைப்பாக்க மேம்பாடுகளுக்கான பின்னூட்டம் |
| பங்குதாரர்களாக தேசிய மற்றும் சர்வதேச சிந்தனையாளர்கள் |
| அறிவு, படைப்பாக்கம் மற்றும் தொழில் முனைவோர் ஆதரவு அமைப்பை உருவாக்குதல் |
| பிரிவுகள் மற்றும் துறைகளுக்குள் எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் மேடை |
| நல்ல ஆளுகை வழங்குவதற்கான ஆய்வுக்கான மிகச்சிறந்த வளமையம் |
| தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தகுதிப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல் |

**அமைப்பு:**
நிதி ஆயோக் தலைவராக பிரதமர் செயல்படுவார். அவர் ஒரு துறைத் தலைவரை நியமனம் செய்வார். ஐந்து முழுநேர மற்றும் இரண்டு பகுதி நேர உறுப்பினர்கள் இருப்பார். அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் ஒன்றிய பகுதிகளின் துணை நிலை ஆளுநர்களைக் கொண்ட ஆளுநர் குழுவைக் கொண்டிருக்கும். மாநிலங்கள் அல்லது மண்டலங்களின் குறிப்பிட்ட பிரச்சனை தொடர்பாக விவாதிக்க மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது குறிப்பிட்ட கால வரம்பிற்குள் செயல்படும். குறிப்பிட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள், வல்லுநர்கள், துறை வல்லுநர்கள் போன்றோரை சிறப்பு அதிகாரிகளாக அழைக்கும் உரிமை பிரதமருக்கு உண்டு. பகுதி நேர உறுப்பினர்களாக முன்னணி பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பகுதி நேர உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர். அலுவல் சாரா உறுப்பினர்களாக மத்திய அமைச்சரவையிலிருந்து நான்கு மத்திய அமைச்சர்கள் நியமிக்கப்படுவர். ஒரு தலைமை செயல் அதிகாரியும் நிதி ஆயோக் கொண்டிருக்கும்.

**திட்ட ஆணையத்திருக்கு பதிலாக நிதி ஆயோக் கொண்டு வரப்பட்டதன் காரணங்கள்:**

1. ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி அதன் பொருளாதார இலக்குகளை எட்டும் வகையில் ஆதாரங்களை திட்ட ஒதுக்கீடு செய்ததற்கு மாறாக, மாறும் இந்தியாவுக்கான தேசிய நிறுவனம் என்ற புதிய அமைப்பு ஒரு சிந்தனைக் குழுவாகச் செயல்படும்.

2. நிதி ஆயோக் அமைப்பு இந்தியாவில் 29 மாநிலங்கள் மற்றும் ஏழு ஒன்றிய பகுதிகளில் தலைவர்களை உள்ளடக்கியது. அதன் முழு நேர நிர்வாகிகளான துணைத் தலைவர், தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிபுணர்கள் நிதி ஆயோக் தலைவர் பிரதமருக்கு நேரடியாக பதில் சொல்வர். இது திட்ட ஆணைய நடைமுறைக்கு மாறுபாடானதாகும். திட்ட ஆணையத்தில் தேசிய வளர்ச்சிக் குழுவிடம் அதன் அறிக்கை அளிக்கப்படும்.

3. திட்டமிடல் தொடர்பான முக்கிய வேறுபாடு என்னவென்றால் நிதி ஆயோக் திட்டமிடலில் பெரும் ஆர்வம் காட்டுமாறு மாநில அரசுகளுக்கு வாய்ப்புகள் அளிக்கும். மாறாக, திட்ட ஆணையத்தின் அணுகுமுறையோ அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே அளவினைக் கொண்டதாக இருக்கும்.

4. திட்ட ஆணைய பங்களிப்பு என்பது விரிந்த திட்டங்களை உருவாக்குவது என்றாலும் அதன் தகுதி ஆலோசனை வழங்குதல் என்ற அளவிலேயே இருந்தது. நிதி ஆயோக் மாநிலங்களின் தேவைக்கேற்ப ஆதாரங்களை ஒதுக்கீடு செய்யும் அதிகாரங்களைக் கொண்டு இருக்கிறது.

5. திட்டமிடல் கொள்கை வகிப்பதில் மாநில அரசுகளுக்கு அறிய வாய்ப்புகள் அளிப்பதில்லை. இதுவே திட்ட ஆணையத்தின் அணுகுமுறையாக இருந்தது. மாநிலங்கள் நேரடியாக இல்லாமல் தங்கள் தேசிய வளர்ச்சி குழுவின் மூலம் மட்டுமே தங்கள் கருத்துக்களை கூற முடியும். நிதிஆயோக்கில் இது தொடராது.

இந்தியா பன்மைத்துவமும் மாறுபாடுகளும் கொண்ட நாடு என்பதை இந்திய அரசு அங்கீகரித்துள்ளது. ஒவ்வொரு மாநிலங்கள் அல்லது ஒன்றியப் பகுதியின் இயல்பு வேறுபாடு கொண்டவை. மக்களின் தேவைகளும் வேறுபாடு கொண்டவை. ஒவ்வொரு பகுதியில் புவியியல் நிலைமைகளும் பொருளாதார நிலைமைகளும் வேறுபாடு கொண்டவை. சில மாநிலங்கள் மற்ற மாநிலங்களைவிட அதிக வளர்ச்சி அடைந்தவை. எனவே, ஒருங்கிணைந்த சீரான திட்டத்தின் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை எட்ட முடியாது என்பதையும் நல்ல பயன்களைக் கொடுக்காது என்பதையும் இந்திய அரசு உணர்ந்துள்ளது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலம் அல்லது மண்டலத்தின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் நிதி ஆயோக் அமைக்கப்பட்டது. ஒரு வளரும் நாடு என்ற நிலையிலிருந்து எழுச்சிபெற்ற உலக நாடு என்ற நிலைக்கு இந்தியா மாறியுள்ளது என்று அமைச்சரவை தீர்மானம் தெரிவிக்கிறது. ஆனாலும் வறுமை ஒழிப்பு என்பது இன்னமும் மிகப் பெரிய சவாலாக நீடிக்கிறது. எனவே, ஏழைகளுக்கு பயன் அளிக்ககூடிய கொள்கையை உருவாக்கக் கூடிய தேவைகளை அரசு உணர்ந்தது. நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமக்களும் வளர்ச்சியின் பயனை அனுபவித்து இருக்க வேண்டும். மக்கள் சுயமரியாதையோடும் கண்ணியத்துடனும் நாகரிகத்துடனும் வாழ வேண்டும்.

வளர்ச்சி செயல்பாடுகளில் கிராமங்களை ஒருங்கிணைக்க வேண்டியதின் முக்கியத்துவம் உணரப்பட்டது. அதே நேரத்தில் நாட்டின் வளர்ச்சியில் தொழிற்துறை மற்றும் சேவைத்துறைகளின் பங்களிப்பும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்துறைகளின் சிறப்பான செயல்பாட்டிற்கு அரசு வழிவகைகளை காண வேண்டியுள்ளது. எனவே, இந்த துறைகளை வழிநடத்துவதற்கான சட்டங்கள், கொள்கைகள், நெறிமுறைகள் ஆகியவற்றை உருவாக்குவதில் அரசு கவனம் செலுத்த வேண்டியிருந்தது. கல்வி அறிவற்ற திறன் குறைந்த நபர்களுக்கும் வேலை வாய்ப்புகளை வழங்கும் சிறிய நிறுவனங்கள் மீதும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. இத்தகைய நிறுவனங்கள் நிதி மூலதனத்தை அணுகுவதற்கும் திறன் மற்றும் அறிவு மேம்பாடு அடைவதற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டியிருந்தது. பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு மாறி வருவதால், பங்கேற்பு குடிமக்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குகிறது. இதன்மூலம் வளர்ச்சி செயல்பாடுகளின் மூலம் அதிக மக்கள் உள்ளிணைக்கப்படுகிறார்கள்.

எந்த வகை வளர்ச்சியாக இருப்பினும், அனைத்து மக்களின் ஆற்றல்கள் பயன்படுத்தப்பட வேண்டும். மக்களின் ஆற்றல், கல்வி, திறன்கள், பாலினச் சமத்துவம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றைக் கொண்டு மதிப்பிடப்படுகிறது. தேசக் கட்டுமானத்தில் பெண்களுக்கு ஒவ்வொரு வாய்ப்பும் வழங்கப்பட வேண்டும். தேச நலனைக் கட்டமைக்கும் அனைத்து வாய்ப்புகளும் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர் உள்ளிட்ட கீழ்தட்டு சமுதாயத்தைச் சேர்ந்த அனைத்து பிரிவனருக்கும் வழங்கப்பட வேண்டும். இதன் மூலமே, உண்மையான உள்ளடக்கிய ஆளுகையை எட்ட முடியும்.

இவற்றோடு சுற்றுச்சூழல் மற்றும் சூழியல் பிரச்சனைகள் இணைக்கப்பட வேண்டும். இதன்மூலமே வளம் குன்றா வளர்ச்சி எட்டப்பட முடியும் என்பதோடு இயற்கை வளங்களை அழிக்காமல் அடுத்த தலைமுறைக்கு இயல்பு இயற்கையை ஒப்படைக்க முடியும். ஆனால், லாப நோக்கம் கொண்ட தனியார் மையம் இயற்கை வளங்களை முறையின்றி சுரண்டுவதையும் மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து இடமாற்றம் செய்வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். (பெரும்பாலும் மலைப் பகுதி, வனப்பகுதி, கடலோரப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்). இயற்கையை அளவுக்கு அதிகமாக சுரண்டுவது வருங்காலத்திற்கு ஆபத்தாக முடியும். அரசும் மக்களும் இது குறித்து விழிப்புணர்வுடனும் கண்காணிப்புடனும் செயல்பட வேண்டும். தற்கால வாழ்க்கைதளத்திற்கு மட்டுமல்லாமல் எதிர்கால தலைமுறையினருக்கும் சேர்த்து முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். முன்சொன்ன அனைத்துப் பிரச்சனைகளையும் கவனத்தில் கொண்ட அரசு திறமையான ஆட்சி நிர்வாகமே உடனடி தேவை என்பதை உணர்ந்தது. அத்தகைய ஒரு ஆட்சி நிர்வாகம் என்பது தனிநபர்கள் மற்றும் சமுதாய விருப்பங்களை நிறைவேற்றும் மக்கள் நல செயல்திட்டத்தை உள்ளடக்கியதாகவே இருக்க முடியும். மக்கள் தேவைகளை உணர்ந்து எதிர்வினை ஆற்றுவதிலும் மக்கள் நல செயல்திட்டத்தினைக் கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. மக்களின் பங்கேற்பு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். மக்கள் தொகையில் அனைத்து பிரிவுகளும் உள்ளிணைக்கப்பட வேண்டும். இதன்மூலமே மக்கள் சமமான வாய்ப்புகளை பெற முடியும். சிறந்த ஆட்சி நிர்வாகத்தில் மற்றும் ஒரு முக்கிய அம்சமாக வெளிப்படைத் தன்மை கருதப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் மூலம் ஆட்சி நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவர

முடியும். முன்கூடிய கருத்துகள் அனைத்தையும் செயல்படுத்துவதற்கான ஒரு நிறுவனமாக நிதி ஆயோக் கருதப்படுகிறது.

**நிதி ஆயோக்கின் நோக்கங்கள்:**

முன்னுரிமை திட்டங்களை அடையாளம் காண்பதில் மாநில அரசுகளையும் மத்திய அரசு இணைத்துக் கொள்வதன் மூலம் திட்டமிடல் செயல்முறையின் மாநிலங்களும் இணைக்கப்படுகின்றன. திட்டமிடல் செயல் முறையில் மாநிலங்களும் பங்களிக்க உள்ளதால் இது கூட்டுறவு கூட்டாட்சி அமைப்பாக செயல்படும். கிராமங்கள் அளவிலான நம்பகமானத் திட்டங்களை உருவாக்கி அவை வளர்ச்சியோடு ஒருங்கிணைக்கப்படும். பொருளாதார செயல்திட்டத்துடன் தேசப்பாதுகாப்பு இணைக்கப்படுவது உறுதி செய்யப்படும். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் முறைகேடுகளை தடுப்பதற்கு தேவையான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும். பொருளாதார வளர்ச்சியின் அனைத்து பிரிவு மக்களும் பயனடைகிறார்களா என்பது கண்காணிக்கப்படும்.

தொலைநோக்கு கொள்கைகளும் திட்டங்களும் உருவாக்கப்பட்டு அவற்றின் வளர்ச்சியை நிதி ஆயோக் கண்காணிக்கும். படைப்பூக்கம் கொண்ட வளர்ச்சிகள் உருவாக்கப்படும். பயனாளர்கள், சிந்தனையாளர்கள், கல்வி மற்றும் கொள்கையாட்சி நிறுவனங்கள் போன்ற பங்காளர்களின் பங்கேற்பு ஊக்கப்படுத்தப்படும். தேசிய, சர்வதேச வல்லுநர்களைக் கொண்ட சமுதாயத்தின் மூலமாக அறிவும் ஊக்கமும், தொழில் முனைப்பும் கொண்ட ஆதரவு அமைப்பு உருவாக்கப்படும்.

வளர்ச்சித் திட்டங்களைத் துரிதப்படுத்தும் வண்ணம் பிரிவுகள் மற்றும் துறைகள் இடையிலான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான தளத்தினையும் வழங்குகிறது. நீடித்த மற்றும் சமத்துவமான வளர்ச்சியை அடைவதற்கான சிறந்த நடைமுறைகளை உருவாக்குவதிலும் நல்ல ஆட்சி நிர்வாகத்தை உருவாக்குவதிலும் ஆராய்ச்சி சிறப்பாக மேற்கொள்வதற்கான திறன் மிக்க வளமையம் ஒன்றையும் அது பராமரிக்கிறது. தேவையான மூலவளங்களை அடையாளம் காண உதவும் வகையில் திட்ட அமலாக்கம் வடிவமைக்கப்பட்டு கண்காணிக்கப்படும்.

**நிறுவன அமைப்பின் வேறுபாடுகள்**

| | **நிதி ஆயோக்** | **திட்ட ஆணையம்** |
|---|---|---|
| தலைவர் | பிரதமர் | பிரதமர் |
| துணைத்தலைவர் | பிரதமரால் நியமிக்கப்படுகிறார் | துணைத்தலைவர், கேபினர் அமைச்சர் தகுதி கொண்ட ஒருவர் நியமிக்கப்படுவார். |
| ஆளுநர் குழு | முதலமைச்சர்களும் மற்றும் துணை நிலை ஆளுநர்கள் | தேசிய வளர்ச்சிக் குழு |
| உறுப்பினர் செயலர் | பிரதமரால் நியமிக்கப்படும் இவர்தலைமை நிர்வாக அதிகாரி என்று அழைக்கப்படுகிறார் | செயலர்கள் அல்லது உறுப்பினர் செயலர்கள் வழக்கமான செயல் முறைகளின் கீழ் நியமிக்கப்படுகிறார்கள் |
| பகுதிநேர உறுப்பினர்கள் | தேவையைப் பொறுத்து அவ்வப்போது பகுதி நேர உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர் | திட்ட ஆணையத்தில் பகுதிநேர உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கான பகுதி வழங்கப்படவில்லை |
| முழு நேர உறுப்பினர்கள் | திட்ட ஆணையத்தை விட குறைவான எண்ணிக்கையில் முழுநேர உறுப்பினர்கள் எண்ணிக்கையில் இருக்கும் | கடைசி திட்ட ஆணையத்தில் எட்டு முழு நேர உறுப்பினர்கள் இருந்தனர். |

புதிய திட்டங்களை முன்னெடுப்பது மற்றும் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான தொழில்நுட்பங்களை பயன்படுத்திக் கொள்ளுதல் மற்றும் தகுதிபடுத்தலுக்கு நிதி ஆயோக் அதிக அழுத்தம் தருகிறது. தேசிய வளர்ச்சி செயல்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு தேவையான இதர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

நிதி ஆயோக் தொடங்கப்பட்ட பின்னர் முன் முயற்சி மேற்கொண்ட சில திட்டங்கள் வருமாறு: பதினைந்தாண்டு செயல்திட்டம், ஏழு ஆண்டு கண்ணோட்டம், நகர்புற மாற்றம் மற்றும் மறு உருவாக்கத்திற்கான அடல் திட்டம், டிஜிட்டல் இந்தியா, அடல் புத்தாக்க திட்டம் போன்றவை. 2018

– 2022 காலக்கட்டத்திற்கான வளம் குன்றா வளர்ச்சி வடிவமைப்பு ஒன்றில் நிதி ஆயோக் கையொப்பமிட்டுள்ளது. வளம் குள்றா வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் அரசின் உறுதிபாடு இதில் பிரதிபலிக்கிறது. வறுமை ஒழிப்பு மற்றும் நகர்மயமாக்கம், உடல்நலம், குடிநீர் மற்றும் பொது சுகாதாரம், கல்வி, வேலை உருவாக்கம், பாலினச் சமத்துவம், இளைஞர் மேம்பாடு போன்ற பகுதிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு நிலைகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது மற்றும் ஒரு சில கைகளில் செல்வம் குவிவதை தடுப்பது ஆகியவற்றை செயல்படுத்தக்கூடிய கையொப்பமிட்டுள்ளது. வளம் குன்றா வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில்

குடிநீர் மற்றும் பொது சுகாதாரம், கல்வி, வேலை உருவாக்கம், பாலினச் சமத்துவம், இளைஞர் மேம்பாடு போன்ற பகுதிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு நிலைகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது மற்றும் ஒரு சில கைகளில் செல்வம் குவிவதை தடுப்பது ஆகியவற்றை செயல்படுத்தக்கூடிய அம்சங்கள் தற்போதைய பொருளாதார கொள்கைகளிலும் மற்றும் செயல் அமைப்புகளிலும் காணப்படுவதில்லை. மேலும், திட்டக்குழு கலைக்கப்பட்டதால் தமது வருவாய் ஆதாரங்கள் பறிக்கப்பட்டுள்ளதாக பல மாநில அரசுகள் தங்கள் கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நடவடிக்கையின் காரணமாக தமது மக்களுக்கு தேவையான தமது சொந்த திட்டங்களை உருவாக்கும் ஆற்றலும் செயல்படுத்தும் திறனும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசுகள் தெரிவித்துள்ளன.

வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நடவடிக்கையின் காரணமாக தமது மக்களுக்கு தேவையான தமது சொந்த திட்டங்களை உருவாக்கும் ஆற்றலும் செயல்படுத்தும் திறனும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

**இந்தியாவில் நிலச் சீர்திருத்தங்கள்**
**அறிமுகம்:**

நிலம் ஒரு முக்கிய செல்வமாக எப்போதும் கருதப்படுகிறது. அரிசி, கோதுமை போன்ற வேளாண் பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் செல்வம் ஈட்டித் தருவதோடு தொழிலாளர்கள் மற்றும் குத்தகை விவசாயிகள் ஆகியோரை அதிகாரம் செய்வதற்கான கருவியாகவும் நிலம் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனை கட்டுப்படுத்தும் விதமாக காலனிய ஆட்சியின்போதே நிரந்தர குடியிருப்புச் சட்டம், நில ஒழுங்குமுறை சட்டம் போன்றவைகள் அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளரால் கொண்டுவரப்பட்ட போதிலும் நில உடமையாளர்க்கும், குத்தகை விவசாயிகளுக்கும் இடையேயான மோதல்கள் தொடர்ந்தவாரோ இருந்தன. விடுதலைக்குப் பின்னரும் கூட இந்த மோதல்கள் தொடர்ந்தன. விடுதலை இந்தியாவில் இது ஒரு சிக்கலான பிரச்சனையாக எழுந்ததை தொடர்ந்து நில உடமையாளர்கள், குத்தகை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோர்களுக்கான மோதல்களைத் தவிர்த்து ஒரு உடன்பாடு கொண்டு வருவதற்கான தீவிரமான முயற்சிகள் விடுதலை இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டன. மோதல்கள் தொடர்ந்தன. விடுதலை இந்தியாவில் இது ஒரு சிக்கலான பிரச்சனையாக எழுந்ததை தொடர்ந்து நில உடமையாளர்கள், குத்தகை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோர்களுக்கான மோதல்களைத் தவிர்த்து ஒரு உடன்பாடு கொண்டு வருவதற்கான தீவிரமான முயற்சிகள் விடுதலை இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டன. நாடு விடுதலை அடைந்த போது, நிலம் ஒரு சில கைகளில் மட்டும் குவிந்து இருந்தது. இதுவே, நிலமற்ற விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதற்கு விட்டுச் சென்றது. இதனால் கிராமப்புற வாழ்க்கையில் சமூக – பொருளாதார சமத்துவமின்மை அதிகரித்தது. இந்தியா விடுதலை அடைந்ததருணத்தில் நாட்டில் பல இடங்களில் (தெலுங்கானா, திருவிதாங்கூர், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டங்கள்) விவசாயப் போராட்டங்ள் வெடித்தன. இத்தருணத்தில் நில உடமையாளர்கள் தங்களிடம் அதிகமாக உள்ள உபரி நிலங்களை தானமாக வழங்கும் பூமிதான இயக்கத்தினை வினோபா பாவே தொடங்கினார். அரசும் தேவையான சட்டங்களை இயற்றியது.

இவ்வாறு பெறப்பட்ட உபரி நிலங்கள் நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்பட்டன. ஏழை விவசாயிகளுக்கு உதவும் வகையில் சர்வோதயா இயக்கம் கூட்டுறவு சங்கங்களை அமைத்து வலுப்படுத்தின. தமிழ்நாட்டில் கிராமப்புற மக்கள் மத்தியில் பூமிதான இயக்கமும் சர்வவோதயா இயக்கமும் வலுப்பெற ஜெகன்நாதன், கிருஷ்ணம்மாள் தம்பதியா அரும்பாடுப்பட்டனர். நிலம் சமமாக பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுதான் சுதந்திர இந்தியாவில் கவனம் பெற்ற முதல்

பிரச்சனையாக அமைந்தது. 1950 – 60 களில் நில உச்சவரம்பிற்கான சட்டங்கள் பல்வேறு மாநிலங்களில் இயற்றப்பட்டன. மத்திய அரசும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டது.

புதிய இந்தியாவிற்கான கொள்கைகளை உருவாக்குவதில் ஈடுபட்ட தலைவர்களில் நாட்டில் வறுமை ஒழிப்பு, பொருளாதார சமத்துவம், தன்னிறைவு ஆகியவற்றை எட்ட விவசாய உற்பத்தியை பெரிதும் அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தினர். இதன்மூலம் பொருளாதார வளர்ச்சியில் சமநிலையை எட்ட முடியும் என்று நம்பினர். புதிய அரசமைப்பில் அந்தந்த மாநிலங்களே தமக்கான நிலச்சீர்திருத்தச் சட்டங்களை உருவாக்கி கொள்ளும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் மத்தியில் நிலவும் வறுமை, ஏழை – பணக்கார ஏற்றத்தாழ்வு, ஆகியவற்றிற்கு முடிவு கண்டு சமூக – பொருளாதார சமத்துவத்தை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு கொள்கைக்கான வழிகாட்டு நெறிகள் அரசுக்கு அதிகாரம் அளிக்க வழிவகை செய்துள்ளது. மேலதிக்கமாக 1976 இல் இந்திய அரசமைப்பு முகப்புரையில் சமதர்மம் என்ற சொல் சேர்க்கப்பட்டது. இருந்தபோதிலும் நடைமுறையில் நிலச்சீர்திருத்தத்தை நடைமுறைபடுத்துவதை மாநிலங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகிறது.

நிலச்சீர்திருத்தங்கள் பொருத்தவரை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட முடியும்.

முதல் பிரிவு குத்தகை விவசாய முறை தொடர்பான சட்டங்களை இயற்றுவதாகும். இச்சட்டங்கள் மூலமாக குத்தகை விவசாய ஒப்பந்தங்கள் முறைப்படுத்தப்பட்டன. ஒப்பந்த விதிமுறைகளை வரையறைபடுத்துவது விளைச்சலில் உரிய பங்கினை உறுதிப்படுத்தலின் குத்தகை ரத்து மற்றும் மாற்றம் போன்ற நடவடிக்கைகளை தடைவிதிப்பது போன்ற குத்தகை சட்ட சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

இரண்டாவது, இடைத்தரகர்களை தடைசெய்யும் நிலச்சீர்திருத்த சட்டங்கள் ஆகும். காலனி ஆட்சியில் ஜமீன்தார்களின் கீழ் பணியாற்றிய இந்த இடைத்தரகர்கள் குத்தகை வாரம் வசூலிக்கும்போது அரசுக்கு அளிக்க வேண்டியதைவிட மிக அதிகமான பங்கினை எடுத்துக்கொண்டு உபரியை தமக்காக வைத்து கொண்டனர். இந்த இடைத்தரகர்முறை பெரும்பாலும் அனைத்து மாநிலங்களிலும் 1958-க்கு முன்னதாகவே தடை செய்யப்பட்டுவிட்டது.

மூன்றாவது, நிலச்சீர்திருத்த சட்டங்கள் ஒருவர் எவ்வளவு நிலத்தை உரிமையாக வைத்துக் கொள்ளலாம் என்பதை வரையறை செய்வதாகும். இதன்மூலம் உபரி நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு மறுபங்கீடு செய்யப்பட்டது.

நான்காவது, பிரிவு நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் நாம் மாறுபட்ட நிலங்களை வைத்திருப்பது தொடர்பானதாகும். இவ்வாறான நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் வேளாண்மையில் அதிக விளைச்சல் பெறுவதையும் வறுமை குறைப்பையும் நோக்கமாக கொண்டவையாகும்.

**விடுதலைக்கு பிறகான நிலச் சீர்திருத்தங்கள்:**

இந்திய வேளாண்மைத் துறையில் காணப்பட்ட தனிப்பட்ட அம்சங்கள் என்னவெனில் பொருளாதார வளர்ச்சியை கொண்டுவருவதுடன் சமூக நீதியை வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இதையொட்டியே விடுதலைக்கு பிறகு ஒருங்கிணைந்த நீலச்சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இதற்கு முன்னர் நிலவிய நிலத்தகராறுகள் மோதல்கள் ஆகியவற்றை கணக்கில் கொண்டு இந்த சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

**நிலச் சீர்திருத்தங்களின் நோக்கங்களை சுருக்கமாக கீழ்கண்டவாறு கூறலாம்.**

**சுருக்கமாக கீழ்க்கண்டவாறு கூறலாம்:**

- ஜமீன்தாரி முறை ஒழிப்பு, இடைத்தரகர் முறை ஒழிப்பு
- நில உச்ச வரம்பு கொண்டுவருதல்

❖ குத்தகை விவசாயிகள், உழவர்கள், விவசாய தொழிலாளர்கள் பாதுகாப்பு
❖ விவசாய சமுதாயங்கள் இடையே கூட்டுறவு

## 1. இடைத்தரகர் முறை ஒழிப்பு:

நிலச்சீர்திருத்தச் சட்டங்களின் முதன்மை நோக்கங்களில் ஒன்று வேளாண் விளைச்சலைப் பகிர்வதில் காணப்பட்ட முரண்பாடுகளுக்கு காரணமான இடைத்தரகர்கள் எனப்படும் ஜமீன்தாரர்கள், ஜாகிர்தார்கள் போன்றோரை அகற்றுவதாகும். இதன் மூலம் உழுபவனக்கே நிலம் சொந்தம் என்னும் முறை கொண்டுவரப்பட்டது. ஜமீன்தாரர்முறை ஒழிப்பு மற்ற மாநிலங்களைவிட உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் தற்காலிகமாகவாவது அமல்படுத்துவது எளிதாக அமைந்தது. அங்கு பத்திரிப்பதிவுகள் முறை மற்றும் நிர்வாக இயந்திரம் ஏற்கனவே இருந்தது காரணமாகும்.

## 2. நில உச்ச வரம்பு:

நில உடமை மற்றும் பயன்பாட்டில் சமத்துவத்தை எட்டும் வகையில் நில உடமைக்கு உச்சவரம்பு விதிக்கும் உச்சவரம்பு சட்டங்கள் அனைத்து மாநிலங்களிலும் கொண்டுவரப்பட்டன. இதன்மூலம் எதிர்காலத்தில் நிலம் பிரிக்கப்படுவதும் தவிர்க்கப்பட்டது. இருந்தபோதும், அளவுகள் நிர்ணயிப்பது, உடமை மாற்றங்கள், விதிவிலக்குகள் ஆகியன குறித்த சட்டங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டன. அசாம், ஜம்மு காஷ்மீர், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் நில உச்சவரம்பு முறையே 50 ஏக்கர், 22.75 ஏக்கர், 25 ஏக்கர் என ஒரே சீராக அமைந்தது. ஆனாலும் மாநிலங்களுக்குள் நிலவிய இந்த வேறுபாடுகள் காரணமாக இது ஒரு அரசியல் பிரச்சனையாக மாறியது. இதனால் இந்த நிலஉச்சவரம்பு சட்டங்கள் முறையாக அமல்படுத்த இயலவில்லை.

**தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் 1952**

நாடு விடுதலையடைந்தபோது அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை பகுதியில் நில உடமைத்துவ பண்ணையடிமை நிலவியதால் பாதிக்கப்பட்ட சிறு குத்தகை விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாக்க பண்ணையாள் பாதுகாப்பு சட்டம், 1952 நிறைவேற்றப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டது. இச்சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது. இதன் மூலம் சிறு குத்தகை விவசாயிகள் தங்கள் விளைச்சலில் நியாயமான பங்கினைப் பெறுகிறார். அவ்வாறு குத்தகை விவசாயிகளுக்கு விளைச்சலில் நியாயமான பங்கினை வழங்காதவர்களிடம் இருந்து நிலம் பெறப்பட்டு உழுபவருக்கே நிலம் சொந்தம் எனும் அடிப்படையில் வழங்கப்பட்டது. வேளாண் தொழில்களில் ஈடுபடும் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டு, அவ்வப்போது உயர்த்தப்படுகிறது. இதேபோல நில உச்சவரம்புச் சட்டம், 1961 நிறைவேற்றப்பட்டு அவ்வப்போது காலத்தின் தேவைக்கேற்ப விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களிடம் இருந்து நிலம் பெறப்பட்டு நிலமற்ற விவாசயிகளுக்கு வழங்கப்பட்டது.

**இந்திய கூட்டுறவுச் சட்டம் 1904:**

இந்திய கூட்டுறவுச் சட்டம் 1904 இல் இயற்றப்பட்டதன் அடிப்படையில் அன்றைய சென்னை மாகாண கூட்டுறவுச் சட்டம் 1932 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. விடுதலை பெற்றபின் இச்சட்டம் காலப்போக்கில் மேலும் பலப்படுத்தப்பட்டது. கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள் என மூன்று வழிகளில் கூட்டுறவு அமைப்புகள் இயங்குகின்றன. வேளாண் தொழில்கள் மட்டுமல்லாமல் கைத்தறி நெசவு, பட்டு நெசவு, மண்பாண்டம் செய்தல் போன்ற பல கைவினைத் தொழில்களுக்கும் கூட்டுறவு அமைப்புகள் இயங்குகின்றன. இவ்வாறு தமிழ்நாட்டில் 10,000 –க்கும் அதிகமான கூட்டுறவு அமைப்புகள் இயங்குகின்றன.

## 1. குத்தகை வாரம் ஒழுங்குபடுத்துதல்:

விவசாய குத்தகை மற்றும் தொழிலாளர் தொடர்பான அம்சங்களை சீர்படுத்தவும், நெறிமுறைப்படுத்தவும் மூன்றாவது முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கடுமையான குத்தகை நிபந்தனைகள் காரணமாகவும் குறைவான கூலி காரணமாகவும் வேளாண்மை தொழிலில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகள் குறித்து வேளாண்மை தொழிலில் நிலவிய சுரண்டலை தடுக்கும் நோக்கத்துடன் காங்கிரசு அரசு மத்திய – மாநில அரசுகளில் விவசாயக் கொள்கை கொண்டுவந்தது. விவசாய பிரிவினர் அனைவருக்கும் வாய்ப்புகள் வழங்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட இச்சட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் திட்ட ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டன. அவற்றுள் குத்தகை வார விதிமுறைகள், குத்தகைவார பாதுகாப்பு, குத்தகைத்தாரர்களின் நில உரிமை பாதுகாப்பு ஆகியன முக்கிய அம்சங்களாகும்.

2. **கூட்டுறவு விவசாயம்:**
நான்காவது முயற்சியாக, விவசாய நிலங்களை குத்தகைக்கு எடுத்து அனைவரும் இணைந்து பயிரிட்டு குத்தகை வாரம் மற்றும் செலவீனங்கள் போக விளைச்சலில் கிடைப்பதை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் கூட்டுறவு விவசாயமுறை கொண்டு வரப்பட்டது. 1960-களின் இறுதிவரை 1.88 இலட்சம் உறுப்பினர்களுடன் 7,294 கூட்டுறவு விவசாய சங்கங்கள் இயங்கின. இவற்றின் கீழ் 3.93 இலட்சம் ஹெக்டர் பயிரிடப்பட்டது. இருந்தபோதும், இவற்றின் பெரும்பாலான கூட்டுறவு சங்கங்கள் செயலிழந்துவிட்டன. சில சங்கங்கள் மட்டும் அரசு மானியத்தை பெறுவதற்காக பெயரளவில் இயங்குகின்றன. அதுவும் பழைய முறையில் விவசாயம் செய்கின்றனர். இதில் நிலங்களில் கூட்டு நடவடிக்கையோ வளங்கள் திரட்சியோ இருப்பதில்லை. பல மாநிலங்களில் நிலச்சீர்திருத்தங்கள் நீர்த்துப்போவதற்கு இவை வழிவகுத்தன.

**தமிழகத்தின் வளர்ச்சி அனுபவம்:**

”வருவாயில் தொடர்ந்து உயர் வளர்ச்சி விகிதத்தை எட்டியதன்மூலம் அண்மை காலமாக இந்தியாவின் தனிநபர் வருமானம் அதிகரித்து வந்தபோதும் இந்தியாவை போன்ற வருவாயுடைய பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதன் மனித மேம்பாட்டு தர நிர்ணயங்களில் இன்னமும் பின்தங்கியே உள்ளது. இதற்கு சிறந்த உதாரணம் அண்டை நாடான வங்கதேசமாகும். அந்நாட்டில் தனிநபர் வருமானம் இந்தியாவைவிட குறைவாக உள்ளபோதும் மனித மேம்பாட்டு தரங்களில் பல துறைகளில் வங்கதேசத்தில் சிறப்பாக காணப்படுகிறது. இந்த வகையில் இந்தியாவிற்குள் தமிழ்நாடு மாநிலம் ஒப்பீட்டு அளவில் மிக சிறப்பாக செயல்பட்டுள்ளது.

மற்ற மாநிலங்களைவிட வளர்ச்சி விகிதத்தில் உயர்ந்து காணப்படுவதுபோல மனித வளர்ச்சியிலும் உயர் எல்லைகளைத் தொட்டுள்ளது. உண்மையில் தெற்கு ஆசியா நாடுகளிலேயே சுகாதாரம் மற்றும் கல்வி வழங்குவதில் தமிழ்நாடு மாநிலமும் கேரளா மாநிலமும் மிக உயர்ந்த நிலையில் காணப்படுகின்றன. அமர்தியசென், ஜீன் டிரெஸ் இருவரும் எழுதிய நிச்சயமற்ற பெருமை - இந்தியாவும் அதன் முரண்பாடுகளும் என்ற புத்தகத்தில் வறுமை ஒழிப்பு, சுகாதாரம், கல்வி போன்ற மனித மேம்பாடுகளின் பல்வேறு அம்சங்களில் தமிழகம் எவ்வாறு முன்னேறியுள்ளது என்பதை தெளிவாக விவரித்துக் கூறியுள்ளனர்.

இதற்கு வழிவகுத்த அம்சங்களும் தொடர்ந்து மேம்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களும் கவனத்தை ஈர்க்கின்றன. தமிழ்நாடு அடைந்துள்ள ஒப்பீட் அளவிலான வளர்ச்சிக்கான அனுபவங்கள் நாட்டின் வளர்ச்சிக் குறைந்த பிற மாநிலங்களுக்கு பாடமாகவும் அமைகின்றன. முக்கியமாக கடந்து வந்த பாதையில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்த தடைக்கற்கள் கவனிக்கப்பட்டு பிற மாநிலங்களில் வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அந்த தடைகள் மிக எச்சரிக்கையாக தவிர்க்கப்பட உதவியது. வருவாய் வளர்ச்சிக்கு மனித மேம்பாட்டிற்கும் இடையில் ஒருங்கமைவின்மை காணப்பட்டப்போதிலும் வளர்ச்சி, விநியோகம் ஆகியனவற்றை கட்டுப்படுத்தும் நிறுவன அமைப்புகளின் முக்கியத்துவத்தை உணர்வது அதிகரித்து வந்துள்ளது. இந்தியாவை பொருத்தவரை வளர்ச்சிக்கு தடையாக சாதி என்னும் அமைப்பு எவ்வாறு செயல்பட்டுள்ளது என்பதை ஏராளமான உதாரணங்களுடன் அப்புத்தகத்தில் டிரெஸ் மற்றும் சென் (2013) எழுதியுள்ளனர். சாதி என்பது உழைப்பு பிரிவினையில் இல்லை. ஆனால் மூலவளங்களை அணுகுவதற்கும் சுதந்திர நடமாட்டத்திற்கும் எதிராக உருவாக்கப்பட்ட தடைகள் என்று அம்பேத்கர் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

வளர்ச்சியை உறுதிப்படுத்துவதில் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட அரசு நிறுவனங்களை உள்ளிணைக்கப்பட்டதாக மாற்றுவது முக்கியமாகும். அதைவிட வளர்ச்சியினால் கிடைக்கும் பயன்களை மிகப்பரந்த அளவில் பயின்று கொள்வதை உறுதிப்படுத்துவது மிக முக்கியமாகும். இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமானால் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான தூய்மையான சூழற்சி நீடிக்கச் செய்வதில் மனித மூலதனத்தில் மூதலீடு செய்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. சாதிய படிநிலை மேலாதிக்கத்திற்கு எதிராக சமூக அரசியல் போராட்டங்களை மேற்கொள்வதில் தமிழ்நாட்டிற்கு ஒரு நீண்ட வரலாற்று பெருமை உண்டு. இத்தகைய கூட்டு செயல்பாடுகளின் வாயிலாகவே வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் மனித மேம்பாடுகளில் பிற பகுதிகளைவிட தமிழகம் முன்னேற்றம் காணமுடிந்தது.
1980 வரை நாட்டின் பிற பகுதிகளைக் காட்டிலும் தமிழ்நாட்டில்தான் வறுமையில் வாடுவோர் விகிதம் தொடர்ந்து அதிகமாகவே காணப்பட்டு வருகின்றது. 1990-களுக்கு பின்னரே, வறுமை தொடர்ந்து குறைந்து வந்ததையும் தனிநபர் வருமானம் உயர்ந்தையும் நாம் கண்டோம். சென் மற்றும் டிரெஸ் (2013) சுட்டிக் காட்டுவதைப் போல சமூக முரண்களுக்கான மூலவேர்களை தேடிய பொதுமக்கள் எழுச்சி, பொதுவெளிகளில் சாதிய படிநிலைகளில் மேலாதிக்கம் நிலவுவதை எதிர்ந்து கேள்விகள் எழுப்பி பொதுவெளியை மக்களாட்சிப்படுத்தியது ஆகியவற்றின் காரணமாகவே பள்ளிக் குழந்தைகளுக்கான மதிய உணவு திட்டம் போன்ற சமூக உள்கட்டமைப்புகளில் அரசு முதலீடுகள் செய்தது. இந்த முன்னேற்றத்திற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

மேலும், சமூக நலத்திட்டங்களில் அரசு முதலீடுகள் செய்வதால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முதலீடுகள் மடைமாற்றம் செய்யப்பட்டு வளர்ச்சி தடுக்கப்படுகிறது என்று பொதுவாக கூறப்படுகிறது. ஆனால், சமூக நலத்திட்டங்களில் முதலீடு செய்வதால் வளர்ச்சி தடுக்கப்படாது மாறாக, வளர்ச்சி வீதம் அதிகரிக்கும் என்பதற்கான உதாரணமாக தமிழ்நாடு அனுபவம் விளங்குகிறது. உண்மையில் கூட்டுச் செயல்பாடுகள் மக்களாட்சிப்படுத்தக்கூடிய இத்தகைய சமூக நிலத்திட்டங்கள் வளர்ச்சி விகிதம் அதிகரிப்பதற்கான தூண்டுதலாக அமைகிறது. முக்கியமாக வளர்ச்சி மேம்பாட்டின் காரணமாக அரசால் எதிர்காலத்திற்கு தேவையான மூலவளங்களை திரட்டிக் கொள்வதும் அனுமதிக்கப்படுகிறது".

**தமிழ்நாட்டில் நில உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்:**
தமிழ்நாடு அண்மைக் காலங்களில் ஒரு முன்மாதிரியான மாநிலமாக வளர்ந்துள்ள போதிலும் நிலச்சீர்திருத்தங்களை மோசமாக நடைமுறைப்படுத்துவதற்காக அவ்வப்போது விமர்சிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில், குறிப்பாக குத்தகைமுறை விவசாயம் அதிகமாகக் காணப்படும் காவிரி டெல்டா பகுதிகளில் உயரளவு குத்தகைப் பங்கு மற்றும் கடுமையான நில வாடகை ஆகிய காரணங்களால் நில உடமைத்துவம் நீடிக்கவே செய்யும் என்பது பொதுவான எதிர்ப்பார்ப்பாக காணப்படலாம்.

இருப்பினும், பொதுவாக டெல்டா பகுதிகளில் உடமைத்துவம் குறைந்து காணப்படுகிறது. மேலும், குத்தகை நிலைமைகளும் வெகுவாக மாறிவிட்டது. நில உடமையாளர்களுக்கும் குத்தகை விவசாயிகளுக்கும் இடையேயான உறவுகள் முன்பு இருந்தததை விட தலைகீழாக மாறியுள்ளது. குத்தகை விவசாயிகளில் பேரம்பேசும் அதிகாரம் பெற்றுள்ளனர். குத்தகை நிலத்தில் விவசாயம் செய்யும் உரிமையை விட்டுக்கொடுக்க இழப்பீடுகள் பெற உரிமைப் பெற்றனர்.

இங்கு நிலவிய நிலப்பிரபுத்துவ அதிகாரத்திற்கு எதிராக போராட்டங்களையும் கூட்டு நடவடிக்கை பண்பாட்டினையும் இங்கு உருவாக்குவதற்கு மக்களை திரட்டுவதில் பொதுவுடைமைக் கட்சியும் திராவிட இயக்கமும் குறிப்பாக திராவிட கழகமும் முக்கிய பங்காற்றினர். மேலும், 1967 இல் திராவிடக் கட்சிகள் அதிகாரத்திற்கு வர தொடங்கியதும் கீழ் சாதி குத்தகை விவசாயிகளின் நிலைமைகளை மேம்படுத்துவதற்குரியத் நடவடிக்கைகள் உருவாகின. இதனால், பிராமணிய நில உடமைத்துவதற்கு எதிரான கூட்டு நடவடிக்கைகள் அதிகரித்தன.

உலகின் பழமையான டெல்டா பகுதிகளில் காவிரி டெல்டா பகுதியும் ஒன்றாகும். எனவே, இங்கு நீண்ட காலந்தொட்டே வேளாண் உறவுகள் உருவாகி பரிணாமமிட்டன. இதையொட்டி, உருவான நில குத்தகை முறைகளில் குத்தகை, வாரம் போன்ற குத்தகைமுறைகள் பயன்படுத்தப்பட்டன. இப்பகுதியில் 1952 இல் ஆய்வு செய்த கேதலீன் ஹாக் அச்சமயத்தில் 7 – 10% பங்கு மட்டுமே குத்தகை விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டதாக பதிவு செய்துள்ளனர். இது மேற்கு டெல்டா

பகுதியில் அனைத்து செலவீனம் போக விளைச்சலில் அளிக்கப்பட்ட பங்காகும். இத்தகைய சுரண்டலுக்கும் முறைக்கேடான பகிர்மானத்திற்கும் எதிரான இம்மாவட்டத்தில் 1943 இல் இந்திய பொதுவுடமைக் கட்சியால் விவசாயிகள் சங்கம் தொடங்கப்பட்டது. தொடர்ந்து திராவிடக் கழகத்தாலும் சில பகுதிகளில் இந்நோக்கத்துடன் விவசாயிகள் திரட்டப்பட்டனர். இதை முன்னிட்டு திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் என்னும் அமைப்பினை திராவிடக் கழகம் உருவாக்கியது.

தொடர்ந்து பொதுவுடமைக் கட்சியால் 1952 இல் விவசாயத் தெழிலாளர் சங்கமும் தொடங்கப்பட்டது. கிழக்கு டெல்டா பகுதியில் இது வலுவாக வளர்ந்தது. திராவிடக் கொள்கைகள் ஆட்சி அதிகாரம் பெற்றதை தொடர்ந்து குத்தகை விவசாயிகளுக்கு ஆதரவான நிலைமை உருவானது. சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மற்றும் கீழ்சாதிகளின் அரசியல் அதிகார திட்சி இவற்றின் மூலமாக பயனடைந்தனர். முன்னர் காங்கிரசு ஆட்சிகளின் போதும் குத்தகை விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களின் நலன் காக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டபோதும், திராவிடக் கொள்கைகள் அரியணை ஏறியதைத் தொடர்ந்து தீர்மானகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1968 இல் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு பயிரிடும் குத்தகைத்தாரர்கள் (தனிப் பிரிவுகள்) சட்டம் குத்தகைப்பாக்கிகளை எளிமையான தவணைமுறைகளில் செலுத்துவதை அனுமதித்தது. இதனால் குத்தகை விவசாயிகளின் சுமை குறைந்தது. முன்னர் நிறைவேற்றப்பட்ட குத்தகைப் பாதுகாப்புச் சட்டங்கள் திறமையாக நடைமுறைப்படுத்தப்படாததற்கு குத்தகை விவசாயிகளை பதிவு செய்யும் முறை இல்லாமலிருந்தது காரணமாக இருந்தது. இதனை, நிறைவு செய்யும் வகையில் குத்தகை விவசாயிகளைப் பதிவு செய்வதற்கான பிரிவுகள் குத்தகை பாதுகாப்புச் சட்டங்களில் திராவிட ஆட்சிகளின் போது சேர்க்கப்பட்டன.

தமிழ்நாடு விவசாய நிலங்கள் (குத்தகை உரிமைகள் பதிவு) சட்டம், 1969 குத்தகை விவசாயிகள் விவரங்களை பதிவு செய்வதை கட்டாயமாக்கியது. இந்த சட்டத்தின் கீழ் அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் மட்டும் குத்தகை விவசாயிகளாக சுமார் ஐந்து இலட்சம் விவசாயிகளும், குத்தகை நிலங்களாக சுமார் ஏழு இலட்சம் ஏக்கர் நிலமும் பதிவு செய்யப்பட்டன. 1979 இல் குத்தகைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் குத்தகை விவசாயிகள் அளிக்க வேண்டிய பங்கினை 25% ஆக குறைத்ததுடன் இயற்கைப் பேரிடர் காரணமாக குத்தகை செலுத்த முடியாத நிலைமைகள் ஏற்படின் அதற்கான குத்தகை விவசாயிகள் வெளியேற்றப்படுவதையும் தடை செய்தது. குடியிருப்போர் உரிமை உறுதிப்படுத்தும் சட்டம், 1971 இல் குத்தகை விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் முக்கிய மைல்கல்லாகும். இந்த முக்கிய சட்டம் நில உடமைத்துவத்தில் இருந்து நிலமற்ற விவசாயிகளை விடுதலை செய்தது. அடுத்தாண்டு 1972 இல் தமிழ்நாடு அரசு மற்றொரு சட்டம் இயற்றி அனைத்து குத்தகைப் பாக்கிகளை ரத்துச் செய்தது.

இவ்வாறு, திராவிடக் கோட்பாடுகள் அரசு அதிகாரம் பெற்றதை தொடர்ந்து குத்தகை விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் அதிகாரம் பெறுவதற்கான நுட்பமான சீர்திருத்தங்களும் புதுமைகளும் பல வழிவகைகள் உருவானது. குத்தகைப் பதிவுமுறை, குத்தகை வாரக் குறைப்பு, வருவாய் நீதிமன்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, குத்தகை நிலங்களை குத்தகைத்தாரர்கள் வாங்கும் வசதி குடியிருப்போர் குடியுரிமை உறுதிபடுத்துதல் ஆகிய சட்ட நடவடிக்கைகள் குத்தகை விவசாயிகளின் பேர உரிமையை பன்மடங்குகள் அதிகரிக்கச் செய்தது. பின்தங்கிய சாதிகளின் அரசியல் அதிகாரம் உருவானது. புதிய சமுதாய எழுச்சி ஆகிய நிலைமைகள் உருவாக இயல்பாகவே குத்தகை உரிமைச் சட்டங்கள் காரணங்களாக அமைகின்றன.

இதன்விளைவாக குத்தகை விவசாயிகளின் குத்தகை குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் வெகுவாக குறைந்தது. குத்தகை உரிமையை திருப்பி அனுப்புவதற்கான இழப்பீடு வழங்குதல் நிறுவனம் மையப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு வரலாற்றுப்பூர்வ அரசியல் மற்றும் சமூகப்பூர்வ கூறுகளின் கூட்டிணைவு நில உடமைத்துவத்தை அகல வழிவகுத்தது இன்று குத்தகை என்பது ஒரு பிரச்சனை அல்ல என்ற நிலைமை உருவாகியுள்ளது.

**கூட்டுறவு விவசாயம்:**

நான்காவது முயற்சியாக, விவசாய நிலங்களை குத்தகைக்கு எடுத்து அனைவரும் இணைந்து பயிரிட்டு குத்தகை வாரம் மற்றும் செலவீனங்கள் போக விளைச்சலில் கிடைப்பதை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் கூட்டுறவு விவசாயமுறை கொண்டு வரப்பட்டது. 1960-களின் இறுதிவரை 1.88 இலட்சம் உறுப்பினர்களுடன் 7,294 கூட்டுறவு விவசாய சங்கங்கள் இயங்கின. இவற்றின் கீழ் 3.93 இலட்சம் ஹெக்டர் நிலங்களில் பயிரிடப்பட்டன. இருந்தபோதும், இவற்றின் பெரும்பாலான கூட்டுறவு சங்கங்கள் செயலிழந்துவிட்டன. சில சங்கங்கள் மட்டும் அரசு மானியத்தை பெறுவதற்காக பெயரளவில் இயங்குகின்றன. அதுவும் பழைய முறையில் விவசாயம் செய்கின்றனர். இதில் நிலங்களில் கூட்டு நடவடிக்கையோ வளங்கள் திரட்சியோ இருப்பதில்லை. பல மாநிலங்களில் நிலச்சீர்திருத்தங்கள் நீர்த்துப்போவதற்கு இவை வழிவகுத்தன.

**நிலச்சட்டம்: நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய ஆறு அம்சங்கள் (2013):**

உள்கட்டமைப்பு உள்ளிட்ட அரசு மற்றும் தனியார் திட்டங்களுக்கு நிலம் தேவைப்படும் போது அந்நிலங்களை வைத்திருப்போரிடமிருந்து கையகப் படுத்துவதற்குகாக மத்திய அரசு சட்டங்களில் திருத்தம் (2013) கொண்டு வந்தது. இது நிலச்சட்டம் என அழைக்கப்படுகிறது.

1. நிலம் கையகப்படுத்தும்போது வெளிப்படைதன்மை, நியாயமான இழப்பீடு பெறும் உரிமை மற்றும் மறுக்குடியிருப்பு (திருத்தம்) சட்டம் 2015. இது 2013 சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தமாகும் (LARR Act, 2013).
2. இச்சட்டம் நிலப்பயன்பாட்டில் ஐந்து வகைமைகளை உருவாக்கியது.
    1. பாதுகாப்பு
    2. ஊரக உள்கட்டமைப்பு
    3. எளிய மக்கள் வீட்டு வசதித் திட்டங்கள் (Affordable housing)
    4. தொழிற்சாலைத் தொகுப்பு
    5. அரசு, தனியார் பங்கேற்புடனான உள்கட்டமைப்புத் திட்டங்கள் (Public Private Partnership) மத்திய அரசு நிலங்களில்.

3. இந்த ஐந்து வகைமை பிரிவுகளும் 2013 சட்டத்திலிருந்து விலக்கு (LARR Act, 2013) அளிக்கப்பட்டன. அதாவது, 2013 சட்டத்தின் படி தனியார் நிலங்களுக்கு நிலம் கையகப்படுத்த அந்நிலத்தின் உரிமையாளர்களில் 80 விழுக்காடு உரிமையாளர்களின் ஒப்புதல் பெறுவது, அரசு தனியார் பங்களிப்புத் திட்டங்களில் 70 விழுக்காடு நில உரிமையாளர்களின் ஒப்புதல் (Public Private Partnership) பெறுவது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. முன்கூடிய ஐந்து பிரிவுகளுக்கும் இந்த நிபந்தனை விலக்கப்படுகிறது.

4. பல்போக நிலங்களை கையகப்படுத்துவதற்கு நிலச்சட்டம் 2013 விதித்திருந்த நிபந்தனைகளிலிருந்து முன்கூறிய ஐந்து பிரிவுகளுக்கு இச்சட்டம் விலக்கு அளிப்பதுடன் இத்திட்டங்களால் ஏற்படும் சமூகப் பாதிப்புகளை மதிப்பிடுவதற்கான சமூக பாதுகாப்பு மதிப்பீட்டாய்வு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது. (LARR Act, 2013).

5. தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், இரயில்வே சட்டம் போன்ற இதர சட்டங்களின் கீழ் இழப்பீடு, புனர்வாழ்வு, மறுக்குடியிருப்பு வழங்குவது தொடர்பான பிரிவுகளும் இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன (LARR Act).

6. நிலச்சட்டம் 2013 இன் கீழ் குறிப்பிட்டுள்ளப்படி தனியார் நிறுவனங்களுக்கான நில கையகப்படுத்தல் பிரிவில் மாற்றங்கள் ஏற்படுத்தியது. இதன்படி “தனியார் பிரிவின் கீழ் கம்பெனிகள், குழும நிறுவனங்கள் இலாப நோக்கற்ற அமைப்புகள் ஆகியவற்றையும் சேர்க்க முடியும்.

**பசுமைப் புரட்சியும் வெண்மைப் புரட்சியும்**
**பசுமைப் புரட்சி:**
**அறிமுகம்:**

இந்தியாவின் பொருளாதாரச் செயல்பாடுகளில் வேளாண்மைத் தொழில்தான் மிகவும் அடர்த்தியாகச் செயல்படும் தொழிலாக உள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு 12 – 15மூ ஆகும். அதிகரித்துவரும் மக்கள் தொகைப் பெருக்கத்தால் அதிகரித்துவரும் உணவு தானியங்களின் தேவையைத் தொடர்ந்து நிறைவு செய்வதற்காக மட்டுமல்லாமல் மிகப்பெரும் எண்ணிக்கையில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் தொழிலாகவும், உணவுப் பொருள்கள் உற்பத்தியின் மூலமாக வேளாண் தொழில்கள் பெருகவும், ஏற்றுமதி மூலம் அன்னிய செலவாணி ஈட்டவும் பெரும் பங்களிப்பு ஆற்றுகிறது. வேளாண்மை என்பது வெறும் உணவு தானிய விளைச்சலை மட்டும் குறிக்கவில்லை. மாறாக, தென்னை வளர்ப்பு, தோட்டங்கள், முந்திரி, காபி, தேயிலை, மிளகு, காய்கனிகள் என பணப் பயிர்கள் வளர்ப்பையும் உள்ளடக்கியது ஆகும்.

இந்தியா விடுதலை அடைந்ததைத் தொடர்ந்து அதிகரித்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப இந்திய வேளாண் துறையை வளர்ப்பதன் அவசியம் குறித்து உணரப்பட்டது. இருந்தபோதும் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட 1 முதல் 12 ஐந்தாண்டுத் திட்டங்களிலும் வேளாண் துறைக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் வேறுபாடானவை ஆகும். ஏனெனில், விடுதலையைத் தொடர்ந்த தொடக்க ஆண்டுகளில் புதிய தொழில்கள் தொடங்கவும் தொழிற்துறையைப் பலப்படுத்தவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. விடுதலையை அடுத்த 10 ஆண்டுகளில் மக்கள் தொகை ஆண்டுக்கு 2.5மூ அதிகரித்து வந்தது. இதனால் பாரம்பரிய முறை விவசாயம் மூலம் உணவுப் பொருள்கள் தேவையை ஈடுகட்ட முடிந்தது. ஆனால், 1960-களில் மக்கள் தொகைப் பொருக்கத்துக்கு ஏற்ப உணவுத் தேவையை ஈடுகட்டுவதில் பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியது. இதையொட்டியே பசுமைப் புரட்சி உருவானது.

**இந்தியாவில் பசுமைப் புரட்சி:**

இந்தியா அடிப்படையில் ஒரு வேளாண்மை நாடு என்பதும் அதிகரித்துவரும் மக்கள் தொகை வேளாண்மையைச் சார்ந்துள்ளது என்பதும் நாம் அறிந்ததே. நாட்டின் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் அளித்த அனுபவங்கள் காரணமாக வேளாண்மையில் நிலவும் தீவிரமான பற்றாக்குறை உணரப்பட்டது. அவை வருமாறு:

- ❖ மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க இயலவில்லை.
- ❖ பாரம்பரிய விவசாய முறைகளே பின்பற்றப்பட்டதால் இந்த பற்றாக்குறை ஏற்பட்டது.
- ❖ பாரம்பரிய வேளாண்மை முறைகளைப் பின்பற்றியதோடு மட்டுமல்லாமல் நீண்ட கால சாகுபடி முறையையே விவசாயிகள் தேர்ந்தெடுத்தனர். இதனால் விளைச்சல் காண அதிக நாள்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.
- ❖ இந்தியா ஒரு பருவமழை சார்ந்த நாடு என்பதால் மழைப்பொழிவைப் பொருத்தே விளைச்சல் இருந்தது. மழைப் பற்றாக்குறை ஏற்பட்டபோது வறட்சி உருவாகி, உணவு தானிய விளைச்சலைப் பாதித்தது. இதனால் பஞ்சம், பட்டினி, இறப்பு ஏற்பட்டன.

1960-களின் போது ஃபோர்ட் அறக்கட்டளை பரிந்துரைகள் அடிப்படையில் புதிய வேளாண் கொள்கை உருவாக்கப்பட்டது. “இந்தியாவின் உணவு நெருக்கடியும் அதை எதிர்கொள்ளும் வழிகளும் “எனும் தலைப்பில் அளிக்கப்பட்ட அந்த பரிந்துரை அறிக்கையில் பயன்படுத்துதல், வேளாண் நடவடிக்கைகளை இயந்திரமயமாக்குதல் மூலம் உற்பத்திமுறைகள் தீவிரமாதல், போதுமான உரங்களைப் பயன்படுத்துதல், விளைச்சலைச் சேமிக்கும் முறைகள், விளைபொருள் வீணாவதைத் தவிர்க்கும் முறைகள் போன்ற முன்னேற்றம் காணப்பட்டு உணவுத் தேவையை நிறைவு செய்ய இயலும் என்று வல்லுநர்கள் கூறியிருந்தனர். இப்பரிந்துரைகளை ஏற்று அமல்படுத்தி மெக்சிகோ

பெரும் வளர்ச்சி கண்டிருந்தது. பிலிப்பைன்ஸ் நாடும் விவசாய உற்பத்தியில் தன்னிறைவு காண பரிந்துரைகளை ஏற்றது.

∴போர்ட் அறக்கட்டளையின் பரிந்துரைகளை இந்திய அரசு 1959 – 60 ஆம் ஆண்டு ஏற்று வேளாண் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தது. இச்சீர்திருத்தங்கள் ஒரு கலப்புத்திட்டமாக அமைந்தன. ஏற்கனவே நடைமுறையில் உள்ள பாசன முறைகளுடன் புதிய பாசன வசதிகள் ஏற்படுத்துவது உரமிடல் முறை, அதிக மகசூல் தரும் வீரிய விதைகள் அறிமுகம், பூச்சுக்கொல்லிகள் போன்ற இடுபொருள்கள் அறிமுகம் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக சீர்திருத்தங்கள் அமைந்தன. பசுமைப்புரட்சி என அழைக்கப்படும் ஆண்டு ஏற்று வேளாண் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தது. இச்சீர்திருத்தங்கள் ஒரு கலப்புத்திட்டமாக அமைந்தன. ஏற்கனவே நடைமுறையில் உள்ள பாசன முறைகளுடன் புதிய பாசன வசதிகள் ஏற்படுத்துவது உரமிடல் முறை, அதிக மகசூல் தரும் வீரிய விதைகள் அறிமுகம், பூச்சிக்கொல்லிகள் போன்ற இடுபொருள்கள் அறிமுகம் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக சீர்திருத்தங்கள் அமைந்தன. பசுமைப்புரட்சி என அழைக்கப்படும்

இத்திட்டம் வேளாண் அறிவியலாளர் M.S. சுவாமிநாதன் அவர்களால் உருவாக்கப்பட்டது. இதனால் இவர் "பசுமைப் புரட்சியின் தந்தை" என அழைக்கப்படுகிறார். சுருக்கமாகக் கூறினால் பாசன வசதிகள் அதிகரிப்பு, புதிய உரங்களின் பயன்பாடு ஆகியனவே இந்திய பசுமைப் புரட்சி என அறியப்படுகிறது. பசுமைப் புரட்சியின் மூலம் 1967 – 78 இல் வேளாண் உற்பத்தி 50% அதிகரித்தது.

முதல் கட்டமாக, 1960 இல் ஏழு மாநிலங்களில் ஏழு மாவட்டங்கள் முன்மாதிரி மாவட்டங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அடர்த்தியான பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IADP) எனும் பெயரில் செயல்படுத்தப்பட்டது. இதன் விளைவுகள் திருப்தியாக இருந்தால் பிற மாநிலங்களுக்கும் மாநிலத்துக்கு ஒரு மாவட்டம் என விரிவுபடுத்தப்பட்டது. இது 1965 இல் 144 மாவட்டங்கள் என மேலும் விரிவடைந்தது.

தொடக்கத்தில் 2 மில்லியன் ஹெக்டேர் நிலங்களில் செயல்படுத்தப்பட்டது. படிப்படியாக மேலும் விரிவுபடுத்தப்பட்டு 70 மில்லியன் அதாவது 7 கோடி ஹெக்டேர் நிலங்களில் செயல்படுத்தப்பட்டது. இது, இந்தியாவின் மொத்த நிலங்களில் 40% ஆகும். இந்த மாபெரும் வெற்றியே பசுமைப்புரட்சியாக எழுச்சி கண்டது. இதன் விளைவாக ஆண்டு முழுவதும் வேளாண் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுக்கு ஒரு போகம் என்ற நிலை மாறி இரண்டு போகம், மூன்று போகம் மகசூல் காணப்பட்டன. மேலும் ஊடு பயிரிடும் முறையும் பின்பற்றப்பட்டன. இதனால் நெல், கோதுமை போன்ற பாரம்பரிய பயிர்கள் மட்டுமல்லாமல் மற்ற பயிர்களும் அறிமுகம் செய்யப்பட்டன. நாட்டின் பல பகுதிகளில் மாறுபட்ட தட்ப வெப்ப நிலைகள் நிலவும் நாட்டில் மாறுபட்ட பயிரிடும் முறைகள் பின்பற்றப்படுகின்றன. கோதுமை விளைவிக்கும் பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம் போன்ற வட மாநிலங்களில் துரிதமாகவே நல்விளைவுகள் காணப்பட்டன. நெல் பயிரிடும் தென் மாநிலங்களான தமிழ்நாடு கர்நாடகம் போன்ற மாநிலங்கள் குறைவான வெற்றி காணப்பட்டன. இருப்பினும், ஒட்டுமொத்தமாக விளைச்சல் அதிகரித்து உணவுப் பற்றாக்குறை சிறப்பாகத் தணிக்கப்பட்டது.

**பசுமைப் புரட்சியின் முக்கிய தாக்கங்கள்:**
**வேளாண் உற்பத்தி தொடர் அதிகரிப்பு:**

1950-களில் காலக்கட்டத்தோடு ஒப்பிடுகையில் வேளாண் உற்பத்தி இரண்டிலிருந்து மூன்றுமடங்குகள் அதிகரித்தது. 1950-களில் நிலவிய உணவு பற்றாக்குறை காரணமாக உணவு தானியங்களை PL40 திட்டத்தின் கீழ் அமெரிக்காவிலிருந்து உணவுத் தானியங்களை இந்தியா இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது.

அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக இன்று நிலைமை மாறியது. மேலும் வெளிசந்தையிலும் விவசாய உற்பத்திப் பொருள்கள் தாராளமாக கிடைக்கின்றன.

**வேளாண் வேலைவாய்ப்புகள் அதிகரிப்பு:**

ஆண்டு முழுவதும் விவசாய நடவடிக்கைகள் தொடர்ந்தால் விவசாய வேலைவாய்ப்புக்கான தேவை அதிகரித்தது. இந்த தேவை இரண்டு குழுக்களில் உணரப்பட்டது. முதலாவதாக, விவசாய நிலங்களில் பாரம்பரிய முறைகளில் பணியாற்றும் திறனற்ற விவசாய தொழிலாளர்களின் வேலைவாய்ப்புகள் அதிகரித்தன. இரண்டாதாக, அறிவியல் முறையில் வேளாண் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு தகுதி பெற்ற வேளாண் பொறியாளர்களின் தேவையும் அதிகரித்தது.

**வேளாண்மை தொழிற்துறை சந்தை:**

இந்தியாவில் கொண்டுவரப்பட்ட பசுமைப் புரட்சியின் விளைவாக வேளாண் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டது மட்டுமல்லாமல் சந்தைக்கும் தொழிற்துறைக்கும் இடையிலான ஆரோக்கியமான உறவுகள் ஏற்பட்டது. அறிவியல் முறை, வேளாண்மை, டிராக்டர்கள், பண்ணை உபகரணங்கள் போன்ற வேளாண் பொறியியல் சார்ந்து இருந்ததால் அதிகரித்து வரும் தேவையை உணர்ந்த தொழிற்துறையும் இத்தகைய வேளாண் உபகரணங்களை குறைந்த விலைக்கு உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டினர். அதேபோல், வேளாண் உற்பத்திப் பொருள்களை நுகர்வோருக்கு கொண்டு சேர்க்கும் வகையில், பதப்படுத்துதல் மற்றும் விநியோகத்தில் சந்தையும் தனது பங்கினை திறம்பட ஆற்றத் தொடங்கியது.

**மாநிலங்களுக்கிடையிலான பரிமாற்றம் மற்றும் சந்தைமுறை:**

பசுமைப் புரட்சியின்போது இந்தியாவில் பல மாநிலங்கள் எதிர்கொள்ள நேர்ந்த முக்கிய பிரச்சனை என்பது மண் வளமிக்க மாநிலங்களில் மட்டுமே பசுமைப் புரட்சி பயனளிக்கக்கூடியதாக இருந்தது என்பதாகும். இதனால் உபரி உற்பத்தி அடைந்த மாநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட விதர்பா பகுதி மற்றும், தெலுங்கானா மாநிலத்திற்கு தங்கள் உபரியை விநியோகித்தனர். இதன்மூலமாக நுகர்வு தேவையை நிறைவு செய்யும் வண்ணம் மாநிலங்களுக்கிடையேயான வேளாண்மை சந்தை அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் உணவுத் தானியங்களை இறக்குமதி செய்யும் நிலை குறைந்தது.

**சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் இடையேயான ஏற்றத்தாழ்வு:**

பசுமைப் புரட்சியால் ஏற்பட்ட மற்றொரு முக்கிய பாதிப்பு என்னவென்றால், சிறு விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டனர். சிறு விவசாயிகள் நிதி வசதியின்மை, உள்கட்டமைப்பு வசதியின்மை, சந்தையை அணுகும் ஆற்றலின்மை காரணமாக சிறு விவசாயிகளால் பெரிய விவசாயிகளுடன் போட்டியிட இயலவில்லை. இதனால் சிறு விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டனர். சிறு விவசாயிகளாலும், புதிய வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்ட இயலவில்லை. இதனால் வேளாண் பொருளாதாரத்தைப் பொருத்தவரை மாநிலங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது போன்றே விவசாயிகள் மத்தியிலும் ஏற்றத்தாழ்வுகள் உருவாயின.

**வெகுமக்கள் இயக்கம்:**

பசுமைப் புரட்சியால் ஏற்பட்ட முக்கிய சிறப்பம்சங்களுள் ஒன்று இந்தியாவின் பெரும்பான்மை வேளாண் சமுதாயம் தனிப்பட்ட மற்றும் தேசிய சமூகப் பொருளாதார நலன்களுக்காக ஒன்றுப்படுத்தப்பட்டனர். இதனால் விவசாய உற்பத்தி அதிகரித்துடன் விவசாய சமுதாயத்தின் வருவாயும் அதிகரித்தது. விவசாய சந்தைகளில் ஏற்பட்ட போட்டிகளின் காரணமாக விவசாய விளைப்பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்தது. இதனால் இந்தியாவின் ஒட்டு மொத்த வேளாண் சமுதாயமும் பசுமைப் புரட்சியில் பங்கெடுத்தது. தொழிற்துறை போல் அல்லாமல் வேளாண்மைத்துறை குறுகிய கால வளர்ச்சியும் இலாபமும் பெறவல்லது. இதனால் விவசாய சமுதாயத்தினர் மத்தியில் பசுமைப் புரட்சியில் பங்கெடுப்பது புரட்சிகரமாகப் பார்க்கப்பட்டது.

**பசுமைப்புரட்சியின் முக்கிய பின்னடைவுகள்:**

- ❖ இந்தியாவில் நிலவிய புவி – காலநிலை அம்சங்கள் காரணமாக கீழ்க்காணும் பின்னடைவுகள் ஏற்பட்டன.

- பகுதி சார்ந்த, மகசூல் சார்ந்த, பண்ணைமுறை சார்ந்த வேறுபாடுகள்.
- ஏழை, பணக்கார விவசாயிகளிடம் காணப்பட்ட நீண்ட இடைவெளி.
- வேளாண் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேவையான தொடக்க முதலீடு, சிறு விவசாயிகளிடம் இல்லாதது.
- மகசூலை அதிகரிப்பதற்காக கேடு விளைவிக்கும் உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளை அதிகமாக பயன்படுத்தியது.
- புதிய தொழில்நுட்பப் பயன்பாட்டை சமூக மயப்படுத்துவதிலும் முன் தயாரிப்பிலும் பின்னடைவு.
- மக்கள் தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்த இயலாததால் இதில் ஒரு முடிவில்லா செயல்முறையாக நீண்டது.

**பசுமைப் புரட்சியின் சாதனைகள்:**

- உணவுத் தானிய பற்றாக்குறை முடிவுக்கு வந்தது. உணவுத் தானியங்களை இறக்குமதி செய்யும் நாடு என்ற எதிர்மறை நோக்கு மறைந்தது.
- உயர் மகசூல் அளிக்கும் விதைகளும் பயிரிடும் முறைகளும் விவசாயிகளுக்கு ஊக்கமளித்தன.
- நீலம், மஞ்சள், வெண்மைப் புரட்சிகளின் மூலமாக மீன் வளம், கோழி வளர்ப்பு மற்றும் பால்பண்ணை தொழில்கள் மிகப்பெரிய மாற்றம் கொண்டு வரப்பட்டன.
- பணப்பயிர்கள் மற்றும் நறுமணப் பொருள்கள் உற்பத்திக்கும் சம முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால் பணப்பயிர்களை பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதிச் செய்யும் நாடாக இந்தியா உருவானது. இதனால் அந்நிய செலவாணி வரவு அதிகரித்தது. இருந்தபோதும், கரும்பு, எண்ணெய் வித்துகள், பருப்பு வகைகள் போன்ற பயிர்கள் பயிரிடுவதில் விவசாயிகள் போதிய ஆர்வம் காட்டவில்லை. இதன் முக்கியத்துவம் 1970-களிலும் 1980-களின் தொடக்கத்திலும் உணரப்பட்டது.

**வெண்மைப் புரட்சி:**

விவசாய உற்பத்தியில் மட்டுமல்லாமல் பால், தயிர், நெய் போன்ற குழந்தைகளுக்குத் தேவையானபால் பொருள்கள் உற்பத்தியிலும் 1950 இன் வாழ்க்கையில் இந்தியாவில் தன்னிறைவு காண இயலவில்லை. பால்பவுடர், வெண்ணெய் மற்றும் குழந்தைகளுக்கான பால் பொருள்களை அப்போது இந்தியா இறக்குமதி செய்து வந்தது.

வேளாண்மை துறையில் ஏற்பட்டது போன்றே கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தியிலும் ஒரு புரட்சியின் தேவையென உணரப்பட்டது.

**வெண்மைப் புரட்சிக்கான முக்கிய காரணங்கள்:**

பசு, எருமை போன்ற கால்நடை வளர்ப்பு வேளாண்மைக்கு அடுத்த நிலையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. பழமையான தொழில்நுட்பம், மோசமான பராமரிப்பு போன்றவை காரணமாக கால்நடை வளர்ப்பு தொழில் இலாபமற்ற சிறு தொழிலாகவே இருந்தது. பசு, எருமை போன்ற கறவை மாடுகள் இந்திய வகை நாட்டு இனங்களாக இருந்ததால் மக்கள் தொகைக்கு ஏற்ப உற்பத்தி செய்ய இயலவில்லை.

இந்தியாவில் பண்ணை தொழில் இன்னமும் கிராமத் தொழிலாகவே இருந்து வருகிறது. போக்குவரத்து, பராமரிப்பு, பால் மற்றும் பால்பொருள்கள் விநியோகம் போன்றவற்றில் போதுமான ஆதரவு அளிக்கப்படவில்லை. இதனால் சந்தை தொடர்பற்று நலிவடைந்திருந்தது.

பழமையான தொழில்நுட்பம் மற்றும் கால்நடை மருத்துவ வசதியின்மை ஆகியவையின் காரணமாக பண்ணை தொழில் பாதிக்கப்பட்டது. தொற்று நோய்கள் காரணமாக கறவை மாடுகள் இறப்பது தொடர்கதையாக இருந்ததால் இந்த தொழிலை விரிவுபடுத்துவதில் ஆர்வம் காணப்படவில்லை. இதை உணர்ந்து 1970 இல் தேசிய பால்வளம் மேம்பாட்டு வாரியம், ஊரக வளர்ச்சி திட்டமாக தொடங்கப்பட்டது. இந்த மத்திய அமைப்பு பால் உற்பத்தியை அதிகப்படுத்தி நாடு முழுவதும் விநியோகிப்பதால் பால்பொருள் பற்றாக்குறை தடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

**தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்மைப்பு (TCMPE):**
தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் பால் வளத்தைப் பெருக்கும் வகையில் 1972 இல் தமிழ்நாடு பால்வள மேம்பாட்டுக் கழகம் தொடங்கப்பட்டது. இது டாக்டர் குரியன் வழியில் 1981 இல் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பாக விரிவுபடுத்தப்பட்டது. ஊரக, ஒன்றிய, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மூலம் இது இயங்கியது. தற்போது ஆவின் எனும் வணிக முத்திரையுடன் தமிழகம் முழுவதும்ட பால் தேவையை தன்னிறைவு செய்கிறது. மேலும் ஆவின் செயல்பாடுகளால் தமிழ்நாட்டில் தனிநபர் பால் நுகர்வு 19993 – 94 இல் நாள் ஒன்றுக்கு 169 கிராம் என்று இருந்ததும் 2018 – 19 இல் 268 கிராமாக அதிகரித்துள்ளது.

"இந்தியாவில் வெண்மைப் புரட்சி தொடங்கப்பட்டு பால் உற்பத்தில் தன்னிறைவு காணப்பட்டது. இச்சாதனை முழுவதும் கூட்டுறவு முறையில் எட்டப்பட்டது".

1950 இல் ஆனந்த் பால் ஒன்றிய நிறுவனம் (அமுல்) வர்கீஸ் குரியன் அவர்களால் குஜராத் மாநிலத்தில் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் இதில் 200-க்கும் குறைவானவர்களே உறுப்பினர்களாக இருந்தனர். இந்த விவசாயிகளிடம் இருந்து பால் சேகரிக்கப்பட்டு மும்பை நுகர்வோர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இதில் நல்ல இலாபம் காணப்பட்டதால் விவசாய சமுதாயத்தினர் மத்தியில் ஆர்வம் ஏற்பட்டு ஏராளமானோர் இதில் உறுப்பினர்கள் இணைந்தனர்.

1955 இல் நாம் ஆண்டுக்கு 500 டன் வெண்ணெய் இறக்குமதி செய்து வந்தோம். இன்று நமது கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே ஆண்டுக்கு 12,000 டன்களுக்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றன. இதேபோல் 1955 இல் நாம் 3,000 டன் குழந்தைகளுக்கு உணவு இறக்குமதி செய்து வந்தோம். இன்று நமது கூட்டுறவு சங்கங்கள் 38,000 டன்களுக்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றனர். அனைத்து வகையான பால் மற்றும் பால் பொருள்களை இறக்குமதி செய்யும் நிலைமை 1975-ல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

1960 இல் இந்தியாவிலேயே வளர்ச்சியடைந்த பால் கூட்டுறவு சங்கமாக வளர்ந்தது. இதனை தொடர்ந்து இந்திய அரசு இந்த முறையினை பின்பற்ற முடிவு செய்து தேசிய பால் வள மேம்பாட்டு வாரியம் தொடங்கியது. 1966 இல் அன்றைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி நாடு தழுவிய வெண்மைப் புரட்சியை தொடங்கி வைத்தார். இந்த தேசிய முயற்சிக்கு வர்கீஸ் குரியன் தலைமையாக நியமிக்கப்பட்டார். நாடு முழுவதும் 1970-களில் எழுச்சிக்கண்ட வெண்மைப்புரட்சியின் தந்தை வர்கீஸ் குரியன் ஆவார். அவரின் வழிகாட்டல், திட்டமிடல் மற்றும் தொழில்முறை அணுகுதல் காரணமாக இந்தியாவின் வெண்மைப்புரட்சி வெற்றிக் கண்டது.

**வெண்மைப்புரட்சியின் முக்கிய இலக்குகள்:**

1. பால் உற்பத்தியை அதிகரித்தல் (பால் வெள்ளம்)
2. கிராமப்புற பால் பண்ணைகளில் வருவாய் அதிகரித்தல்
3. நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்குதல்
4. நாட்டில் அந்நிய செலவாணி இருப்புக்கு சுமையாக இறக்குமதி செய்வதைக் குறைத்தல்
5. தேசிய பால் தொகுப்பு உருவாக்குதல்
6. நுண்ணூட்டத் தேவைகளை சமாளித்தல்

வெண்மைப் புரட்சி மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக (1970 – 79), நாட்டின் முக்கிய பால் பண்ணைகளில் 18 பண்ணைகள் தேர்வுச் செய்யப்பட்டு மும்பை, டெல்லி, கொல்கத்தா, சென்னை ஆகிய நான்கு முக்கிய நகரங்களில் நுகர்வோரோடு இணைக்கப்பட்டன. இதன் மொத்த மதிப்பீடு ₹116 கோடி ஆகும்.

இரண்டாம் கட்டத்தில் (1981 – 1985), பால் பண்ணைகளின் எண்ணிக்கை 18 – லிருந்து 136 ஆக அதிகரிக்கப்பட்டு 290 நகர்ப்புற சந்தைகளில் நுகர்வோருடன் இணைக்கப்பட்டு பால் விநியோகம் வழங்கப்பட்டது. 1985 இறுதியில் 43 ஆயிரம் தன்னிறைவு கிராமக் கூட்டுறவு சங்கங்கள் இதில் இணைந்தனர். இவ்வாறு நாடு முழுவதும் 42.5 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு முறையில் இணைக்கப்பட்டனர். உள்நாட்டு பால் பவுடர் உற்பத்தியின் அளவு திட்டத்திற்கு முந்தைய ஆண்டு 22 ஆயிரம் டன்களாக இருந்தது 1989 இல் 1 இலட்சத்து 40 ஆயிரம் டன்களாக உயர்ந்தது.

மூன்றாவது, கட்டத்தில் (1985 – 1996) கூட்டுறவு பால் சங்கங்கள் தமக்கு தேவையான இடுபொருள்களை கொள் முதல் செய்வதற்கும் சந்தையை அதிகரிப்பதற்கும் ஏற்ற வகையில் வலுப்பெற்று விரிவடைந்தன. கால்நடை மருத்துவ விழிப்புணர்வு, கால்நடைகளுக்கான நுண்ணூட்டச்சத்துகள், செயற்கை விந்தணு சேவை போன்றவை கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு விரிவான அளவில் சென்றடைந்ததுடன் பால் பண்ணையை தொழில்கல்வியும் விவசாயிகளுக்கு ஊட்டப்பட்டது. இரண்டாம் கட்ட இறுதியில் இயங்கிய 42 ஆயிரம் கூட்டுறவு சங்கங்களுடன் மூன்றாம் கட்டத்தில் மேலும் 30 ஆயிரம் புதிய கூட்டுறவு சங்கங்கள் உருவாகின. கூட்டுறவு சங்கங்களில் ஆண்களும், பெண்களும் உறுப்பினர்களாக சேர்வது மிகப் பெருமளவில் அதிகரித்தது. 1988 –89 இல் பால் பண்ணைகளின் எண்ணிக்கை 173 ஆக அதிகரித்தது.

**வெண்மைப் புரட்சியின் முக்கிய சாதனைகள்:**

இந்தியாவில் பால் உற்பத்தி 40 ஆண்டுகளில் 20 மில்லியன் மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 100 மில்லியன் மெட்ரிக் டன் என்ற அளவிற்கு உயர்ந்தது. பால் கூட்டுறவு இயக்கத்தின் காரணமாகவே இந்த சாதனை சாத்தியமானது என்று கூறுவது மிகையல்ல. இன்று இதன் காரணமாகவே உலகின் மிகப் பெரிய பால் உற்பத்தி நாடாக இந்தியா வளர்ந்துள்ளது. நமது நாட்டுக்கான தேவையை தன்னிறைவு செய்துள்ளதுடன், குழந்தைகளுக்கான பால்பவுடர் உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளன. இந்திய கால்நடை வளர்ப்பாளர்களின் மத்தியில், பசு, எருமை போன்ற பால் மாடுகளை வளர்ப்பதில் அரிய ஆர்வம் ஏற்பட்டதால் தற்போது நாட்டில் 500 மில்லியன் அதாவது 50 கோடி பால் மாடுகள் உள்ளன. இதன் மூலம் உலகின் மிகப்பெரிய பால் மாடுகள் வளர்ப்பு நாடாக இந்தியா திகழ்கிறது. இந்தியாவின் நீள – அகலங்களில் குறுக்கு – நெடுக்கிலுமாக 22 மாநிலங்களில் 180 மாவட்டங்களில் 1 இலட்சத்து 25 ஆயிரம் கிராமங்களில் பால் கூட்டுறவு இயக்கம் பரந்து விரிந்துள்ளது. இந்த வெற்றி கொள்முதல் மற்றும் விநியோக அமைப்பினை நாடு முழுவதும் பலப்படுத்துவதற்கு மத்திய மாநில உள்ளாட்சி அரசுகள் ஆதரவு அளித்ததன் காரணமாகவே சாத்தியமாய் உள்ளது.

**தொழில்மயமாக்கல்:**

இந்திய விடுதலைக்கு பின்னர், பொருளாதார வளர்ச்சியின் தொழில்மயமாக்கல் ஒரு முக்கிய செயல்பாடாக திகழ்கிறது. விடுதலைக்கு பின்னர், நமது நாடு தொழில் மயமாக வேண்டியதன் தேவையை நமது தலைவர்கள் உணர்ந்தனர். இதையொட்டி 1956 இல் தொழிற்கொள்கை தீர்மானம் கொண்டுவரப்பட்டு நாட்டை தொழில்மயப்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. அனைத்து ஐந்தாண்டு திட்டங்களிலும் தொழில்மயமாக்கலுக்கு நமது மக்கள் மன்றத்தினர் முக்கியத்துவம் அளித்து வந்துள்ளனர். தொழில்மயமாக்கல் தொடர்பாக நமது அரசுகள் மேற்கொண்ட முன் முயற்சிகள் காரணமாக இன்று இந்தியா உலகின் ஆறாவது பெரிய தொழிற்துறை நாடாக வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சியென்பது சிறு தொழில்கள் முதல் பெரும் தொழில்கள் வரை அனைத்து விதமான தொழில்கள் ஊடாக விரிந்து பரந்து நுகர்வோருக்கான பொருள்கள் மட்டுமல்லாமல் இடைநிலை மற்றும் மூலதன பொருள்களையும் உற்பத்தி செய்கிறது.

இந்த தொழிற்துறை முன்னேற்றத்தின் காரணமாக இந்திய அந்நிய வர்த்தகத்திலும் ஒரு மாற்றம் விரிவாக நிகழ்ந்தது. இந்தியரிவன் பொறியியல் பொருள்கள் ஏற்றுமதி அதிகரித்தது. இதற்கு இணையாக தொழில்நுட்ப வளர்ச்சியும், வோண்மை உற்பத்தியும் மேம்பாடு அடைந்தன. இதனால் தொழிற்சாலைகள் திறம்பட மேலாண்மை செய்யும் வகையில் திட்டமிடல், வடிவமைப்பு ஆகிய திறன்கள் மேம்பாடு கண்டன. கனரக தொழில்களும் வளர்ந்தன. உள்கட்டமைப்பு வளர்ச்சி நவீன தொழில்நுட்பங்கள் உரிய உற்பத்தி சாதனங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான உயர் தொழில்நுட்ப ஆற்றலும் மேம்படுத்தப்பட வேண்டியிருந்தது. இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சியில் பொறியியல் தொழிற்துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் தொழில் மயமாக்கலை விரைவுபடுத்தும் வகையில் திட்டமிடுவோர் தயாரித்த செயற்திட்டங்களுக்கு ஏற்ப வளர்ச்சி முடுக்கிவிடப்பட்டது.

இவ்வாறு, திட்டமிட்டு செயல்பட்டதன் காரணமாக அடிப்படை மற்றும் மூலதனப் பொருள்கள் உற்பத்தி தொழில்கள் வளர்ச்சி கண்டன. இத்தகைய தொழிற்சாலைகளின் உற்பத்தி 1959 இல் 50 விழுக்காடாக இருந்தது. 1990 –91 இல் 79 விழுக்காடாக அதிகரித்தது. இதனால் வேலைவாய்ப்புகள் அதிகரித்தன. மதிப்பு கூடுதல் தயாரிப்புகளும் மேம்பட்டன. ஆலைகளிலும் சுரங்கங்களிலும் பணியாற்றிய தொழிலாளர்களின் எண்ணிக்கைகள் பிரம்மாண்டமாக உயர்ந்தது. தொழில்மயமாக்கல் எ∴கு, இரும்பு, உரம், இரசாயனம், சிமெண்ட் மற்றும் ∴பெரஸ் அல்லாத உலோகங்கள் தொழில்களை மேம்படுத்தியது. புதிய மூலதன பொருள்களும் தொடங்கப்பட்டு வளர்ச்சியடைந்தன.

இக்காலக்கட்டத்தில் தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கங்கள் பயன்படுத்திய மின்சாரத்தின் சராசரி அளவு பன்மடங்கு அதிகரித்தது. நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகள் பெருமளவிற்கு விரிவாக்கப்பட்டன. திறன்மிக்க சுத்திகரிப்பு ஆலைகள், குழாய் பதித்தல், சேமிப்பு மற்றும் விநியோக அமைப்புகள் உருவாக்கப்பட்டு, பெட்ரோ கெமிக்கல் ஆலைகள் வளர்ச்சி கண்டன. இதனால் பொருளாதாரத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டதுடன் நாட்டின் பாசன அமைப்புகள், சேமிப்பு பணிகள், கால்வாய்கள் அனல் - நீர் மின் உற்பத்தி நிலையங்கள், இரயில்வே அமைப்பு மற்றும் தேசிய, மாநில நெடுஞ்சாலைகள் ஆகியன மேம்பாடடைந்தன. இந்தியாவின் உலகின் பிற பாலங்களுடன் இணைப்பதில் போக்குவரத்து மற்றும் தொலை தொடர்பு வசதிகள் முக்கிய பங்காற்றின.

இந்தியாவில் பொருளாதார சீர்திருத்தம் அறிமுகபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து. இந்தியாவின் தொழிற்துறை வடிவம் மாற்றங்களை கண்டது. மூலதனப் பொருள்கள் மற்றும் நுகர்பொருள்கள் தொழில்கள் பெரும் வளர்ச்சிக் கண்டதுடன் அடிப்படை தொழில்களின் வளர்ச்சி பின்னடைவு கண்டது. வங்கி, காப்பீடு மற்றும் வணிக தொழில்கள் வளர்ச்சி அடைந்தன. துறைமுகங்கள் கப்பல் கட்டுதல் மற்றும் உள்நாட்டு பன்னாட்டு விமான சேவைகள் நவீனப்படுத்தப்பட்டன. இவையாவும் பொருளாதார மாற்றத்தின் காரணமாக நிகழ்ந்து தொழில்மயமாக்கலுக்கு இட்டு சென்றது. இந்த மாற்றங்களின் விளைவாக நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களை சேர்ந்த செல்வந்தர்கள் மேலும் வளர்ச்சி கண்டனர்.

அறிவியல் தொழில்நுட்பத்துறைகளிலும் பெரும் மாற்றமடைந்தது. வேளாண்மை, தொழிற்துறை, தொழில்நுட்பம், தொலை தொடர்பு போன்ற பல்வேறு துறைகளை சார்ந்த இந்திய அறிவியலாளர்களின் பங்களிப்பு வரவேற்கத்தக்க பிரம்மாண்டமாக இருந்தது. சிமெண்ட், இரசாயனம், உர ஆலைகள் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், மின் உற்பத்தி ஆலைகள், இரும்பாலைகள் இரயில் பெட்டித் தொழிற்சாலைகள், பொறியியல் தொழில்கள் உள்ளிட்ட பல துறைகளிலும் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றனர்.

**தொழிற் கொள்கை:**

ஒரு நாடு தொழிற்மயமாக திறமையான தெழிற்கொள்கை அவசியமாகும். இதன் மூலமாகவே உரிய கொள்கைகள். சட்டங்கள், விதிமுறைகள் இயற்றப்பட்டு தொழிற்சாலைகள் ஒழுங்குப்படுத்தப்பட முடியும். உரிய தொழிற்கொள்கை மூலமாகவே தொழில் மயமாக்கத்தின் பயன்கள் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் சென்றடைகிறது. இதற்கான விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை தொழிற்கொள்கை வகுக்கிறது.

**தொழிற்கொள்கை தீர்மானம் 1948:**
இந்தியா கலப்புப் பொருளாதாரக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டதை தொடர்ந்து 1948 இல் நிறைவேற்றப்பட்ட தொழிற்கொள்கை தீர்மானம் பொதுத்துறை மற்றும் தனியார் துறைகள் தங்களுக்கான பகுதிகளில் தொடர்ந்து இயங்கும் என்பதை வலியுறுத்தியது. அனைத்து முக்கிய தொழில்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. ஆயுதங்கள், வெடிப்பொருள்கள் உற்பத்தி, மின்னணு ஆற்றல் உற்பத்தி, கட்டுப்பாடு மற்றும் இரயில்வே போன்றவற்றை பொதுத்துறை நிறுவனங்கள் கட்டுப்படுத்தின. இத்துறையில் மத்திய அரசு ஏகபோகம் செலுத்தியது. நிலக்கரி, இரும்பு, ஸ்டீல், விமானம் உற்பத்தி, கப்பல் கட்டுதல் போன்ற துறைகளிலும் அரசு கட்டுப்பாடு செலுத்தியது. மீதமுள்ள துறைகளில் தனியார் நிறுவனங்களும் கூட்டுறவு நிறுவனங்களும் இயங்கின.

**தொழிற்கொள்கை தீர்மானம் 1956:**
தொழிற்கொள்கை தீர்மானம் 1948 ஏற்கப்பட்டதை தொடர்ந்து தொழிற்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவு செய்யப்பட்டது. தொடர்ந்து சமதர்ம சமுதாயம் அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய தொழில்கொள்கை தீர்மானம் 1956 ஏப்ரலில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி மூன்று வகை தொழில்கள் வகைமைப்படுத்தப்பட்டன. அவை, முழுவதும் அரசுக்கட்டுப்பாட்டின் கீழ் வரும் நிறுவனங்கள், அரசும் தனியாரும் இணைந்து நிர்வகிக்கும் நிறுவனங்கள், மூன்றாவதாக, முழுவதும் தனியாருக்கு ஒதுக்கப்பட்ட தொழில்கள். மேலும், தொழில்கள் தொடங்குவது தனியாரை ஊக்கப்படுத்தும் வகையில் போக்குவரத்து, மின்சாரம் உள்ளிட்ட இதர சேவைகள் அரசால் மேம்படுத்தப்பட்டன. சிறு மற்றும் குறு தொழில்களும் அரசால் மின்சாரம் உள்ளிட்ட இதர சேவைகள் அரசால் மேம்படுத்தப்பட்டன. சிறு மற்றும் குறு தொழில்களும் அரசால் ஊக்கப்படுத்தப்பட்டன. அனைத்து மக்கள் பிரிவுகளுக்கும் வளர்ச்சியின் பயன்கள் சமமாக சென்று சேர வேண்டுமானால் அனைத்து பகுதிகளிலும் சீரான வளர்ச்சி ஏற்பட வேண்டும்.

1977, டிசம்பரில் ஜனதா அரசு புதிய தொழிற்கொள்கையை அறிவித்தது. இதன் முக்கிய அம்சம் சிறு தொழில்கள் துறை, குறுந்தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் வீட்டுத் தொழில்கள் என பிரிக்கப்பட்டன. சிறு தொழில்கள் மூலம் வேலைவாய்ப்புகள் பெருகும் என்பதும் செல்வமும் அதிகாரமும் பெரிய தொழில்களின் கைகளில் குவிவதைத் தடுக்கும் என்பது காரணமாகும். இருந்தபோதும், பெரிய தொழில்கள் விரிவாக்கம் செய்ய அல்லது புதிய தொழில்களை தொடங்க ஜனதா அரசு விரைவில் கவிழ்ந்ததால் இக்கொள்கை மாற்றம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**தொழிற்கொள்கை 1980:**
1980, ஜூலையில் ஒரு புதிய தொழிற்கொள்கை காங்கிரசு அரசால் அறிவிக்கப்பட்டது. தொழிற்கொள்கை தீர்மானம், 1956 இல் ஏற்பட்ட வளர்ச்சியினை அங்கீகரிக்கும் விதமாக இத்தொழிற்கொள்கை கொண்டுவரப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்கள் பலப்படுத்தப்பட வேண்டிய தேவையைக் இக்கொள்கை வலியுறுத்தியது. தொழில்ரீதியாக பின்தங்கிய பகுதிகளில் அணுமின் நிலையங்கள் அமைத்து தொழில் வளர்ச்சியை ஒருங்கிணைப்பதற்கு இது அழுத்தம் கொடுத்தது. வளர்ந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சிறு தொழில் நிறுவனங்களும் குறு தொழில் நிறுவனங்களும் தொடங்கப்பட வேண்டுமென்று ஊக்கப்படுத்தியது. ஒரு பொருளாதார கூட்டாட்சியை கொண்டு வருவது நோக்கமாக கொண்டிருந்தது.

தொழிற்கொள்கை 1980 லைசன்ஸ் ராஜ்ஜியம் எனப்படும் உரிமம் முறையிலிருந்து பெரிய தொழில்களை விடுவிப்பதை நோக்கமாக கொண்டிருந்தது. இந்த தாராளவாதக் கொள்கையால் ஏகபோகக் கட்டுப்பாட்டுச் சட்டம் (MRTP), அந்நிய செலவாணிச் சட்டம் போன்றவற்றின் பிடியிலிருந்து பெரும் நிறுவனங்கள் விடுவிக்கப்பட்டது. மேலும், பின்தங்கிய பகுதியென்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் புதிய தொழில்களை தொடங்குவோருக்கு உரிமங்களிலிருந்து முழுவிலக்கு அளிக்கப்பட்டது. அகல அலைவரிசை எனும் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் சந்தையின் தேவைக்கேற்ப உற்பத்திப் பொருள்களை தம் விருப்பம்போல் வடிவமைத்துக் கொள்ள உற்பத்தியாளர்களுக்கு நெகிழ்வு தன்மையுடன் கூடிய சலுகைகள் அளிக்கப்பட்டன. உரிம வரம்புக்குள் உட்பட்டு புதிய சந்தை செயல்திட்டங்களுக்கு ஏற்ப பொருள்களின் எண்ணிக்கையை நிர்ணயித்துக் கொள்ளவும் இதன் மூலம் தங்கள் வருவாயைப் பெருக்கம் பெரும் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டன. மூலதனத் தடுப்பு சட்டத்தின் கீழ் மூலச் சொத்து வரம்பு ₹20 கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது ₹100 கோடியாக அதிகரிக்கப்பட்டது.

இதனால் இச்சட்டத்தின் கீழ் கட்டாய உரிமம் பெறும் நிறுவனங்களாக 56 பெரும் நிறுவனங்கள் இருந்தது 26 ஆக குறைந்தன.

**தொழிற்கொள்கை 1991:**

P.V. நரசிம்மராவ் அரசு பதவியேற்றத்தை தொடர்ந்து 1991 ஜுலையில் ஒரு புதிய தொழிற்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. அதில் தாராளமயமாக்கக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதால் நாட்டின் பொருளாதார வரலாற்றில் ஒரு மைல்கல் என்று அழைக்கப்படுகிறது.

**பொருளாதாரக் கொள்கையின் தந்தை:**
அன்றைய பிரதமர் P.V. நரசிம்மராவ் 24.07.1991 அன்று புதிய பொருளாதாரக் கொள்கை அறிவித்தப்போது டாக்டர் மன்மோகன் சிங் நிதி அமைச்சராக இருந்தார். இந்தியாவின் புதிய பொருளாதாரக் கொள்கையின் தந்தை என்று இவர் அழைக்கப்படுகிறார்.

புதிய பொருளாதாரக் கொள்கையின் சிறப்பு அம்சம் என்பது அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து இந்தியப் பொருளாதாரம் விடுவிக்கப்பட்டதாகும். வளர்ச்சி வீதம் குறைவாக காணப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் மறுசீராய்விற்கு உட்படுத்தப்பட்டன. மூலதன கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (MRTP Act) கட்டுப்பாடுகளிலிருந்து தொழில்முனைவோர் விடுவிக்கப்பட்டனர். அதேபோல் நேரடி அந்நிய முதலீட்டிற்கு தடையாக இருந்த கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. தாராளமயமாக்கல் கொள்கையின் வாயிலாக, இந்திய பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. இதையொட்டி தொழில் உரிமம் பெறுதல், அந்நிய முதலீடு, அந்நிய தொழில்நுட்பம், பொதுத்துறை நிறுவனங்களின் கொள்கை, மூலதன கட்டுப்பாட்டுச் சட்டம் ஆகியனவற்றில் பெரும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

தொழில் உரிமம் பெறுவதில் பெரும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. பல தொழில்கள் உரிமம் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டன. புதிய சட்டத்தின்படி கட்டாயம் உரிமம் பெறவேண்டிய தொழில்களின் பட்டியலில் 18 தொழில்கள் மட்டுமே மிஞ்சின. இவற்றில் நிலக்கரி, லிக்னைட், பெட்ரோலியம், சர்க்கரை, தொழில்துறை வெடிமருந்துகள், கேடு விளைவிக்கும் இரசாயனப் பொருள்கள், விமானப்படை மற்றும் இராணுவத்திற்கு தேவையான மின்னணுப் பொருள்கள், மருந்துகள் முக்கியமானவையாகும். அதாவது பாதுகாப்பு, உடல்நலம், சுற்றுச்சூழல் போன்றவை தொடர்பான தொழில்கள் மட்டும் உரிமம் பெறும் தொழில்களின் கீழ் கொண்டு வரப்பட்டன. இந்த பட்டியலிலிருந்து 1993 இல் மேலும் மூன்று தொழில்கள் விடுவிக்கப்பட்டன. அவை மோட்டார் வாகனங்கள், வெள்ளை பொருள்கள் என்று அழைக்கப்படும் குளிரூட்டும் சாதனங்கள், சலவை எந்திரம், குளிரூட்டும் பெட்டிகள் மற்றும் காப்புரிமைப் பெற்ற தோல் பொருள்கள் ஆகும். பொதுத்துறை பட்டியலிலிருந்து இவ்வாறு தொழில்கள் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அத்தொழில்களை நோக்கி மூலதனம் பாய்ந்தது.

பெரும் மூலதனமும், முன்னேறிய தொழில்நுட்பங்களும் தேவைப்படும் தொழில்களில் அந்நிய மூலதனம் 51 விழுக்காடு அளவிற்கு அனுமதிக்கப்பட்டது. இந்திய பொருள்களை உலக சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்ய உதவும்படி அந்நிய நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டனர். பொதுத்துறை நிறுவனங்கள் தமது பயன்களை விரிவு செய்யும் வகையில் பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறன் சீராய்வுச் செய்யப்பட்டு தொழில்நுட்பமும் கட்டமைப்பு வசதிகளும் நவீனப்படுத்தப்பட்டன. அவ்வாறு மேம்படுத்திக் கொள்ள இயலாத நலிந்த நிலையில் இயங்கிய பொதுத்துறை நிறுவனங்கள் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தொழில் மற்றும் நிதி மறுகட்டமைப்பு வாரியம் (BIFR) உதவியுடன் மறுகட்டமைப்பு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மறுகட்டமைப்பு செயல்முறைகளின்போது அத்தொழில்களில் பணியாற்றிய தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டது.

**போட்டிச் சட்டம், 2002:**

வர்த்தக நடவடிக்கைகள் ஏகபோக தடுப்புச் சட்டம் (MRTP Act), 1969 இல் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக போட்டிச்சட்டம் 2002 மத்திய குழும நிறுவனங்கள் அமைச்சகத்தால் கொண்டுவரப்பட்டது. இது, மீண்டும் 2007 மற்றும் 2009 ஆண்டுகளில் திருத்தப்பட்டது. மூலதன தடுப்புச் சட்டம் என்பது

ஏகபோக நடிவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் நிதி ஒரே இடத்தில் குவிவதையும் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகளையும் தடுக்கும் சட்டமாகும். ஆனால் புதிய போட்டிச் சட்டம் இத்தகைய வர்த்தக கட்டுப்பாடுகளை விலக்கியது. இதன்மூலம் ஆரோக்கியமானப் போட்டி நிலவச் செய்து நுகர்வோருக்கு சிறந்தப் பொருள்களை வழங்குகிறது. அதே நேரத்தில் நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் அழுத்தம் அளிக்கப்பட்டது. நிறுவனங்கள் தமது அமைப்பில் மாற்றங்கள் கொண்டு வரும்போது அரசிடம் முன் அனுமதிப் பெறவேண்டிய தேவை இல்லை.

தாராளமயமாக்கலை நோக்கி பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், தொழில்மயமாக்கல் செயல்முறையில் போதாமைகளும் காணப்பட்டன. வேலையின்மை மற்றும் அரைகுறை வேலைவாயப்பு போன்ற பிரச்சனைகளால் இந்தியா இன்னமும் பாதிக்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள அனைத்து பகுதிகளும் சீரான வளர்ச்சி காண்பது இன்னமும் சவாலாகவே நீடிக்கிறது. தொழில்மயமாக்கல் முயற்சிகள் ஒவ்வொரு முறையும் பெரும் தொழில்கள் வளர்ச்சிக் காண்பதிலேயே முடிவடைகின்றன. ஆனால் சிறிய, நடுத்தர தொழில்கள் இன்னமும் பின்தங்கிய நிலையிலே உள்ளன. புதிய தொழில்கள் மேலும் நகர்ப்புற பகுதிகளை மையப்படுத்தியே தொடங்கப்படுகின்றன. இதனால் வளர்ச்சி என்பது நகர்ப்புறம் - கிராமப்புறங்களை ஒப்பிடும்போது ஏற்றத்தாழ்வுடனேயே ஏற்படுகிறது. நகர் தொழில்கள் இன்னமும் பின்தங்கிய நிலையிலே உள்ளன. புதிய தொழில்கள் மேலும் நகர்ப்புற பகுதிகளை மையப்படுத்தியே தொடங்கப்படுகின்றன. இதனால் வளர்ச்சி என்பது நகர்ப்புறம் - கிராமப்புறங்களை ஒப்பிடும்போது ஏற்றத்தாழ்வுடனேயே ஏற்படுகிறது. நகர்மயமாக்கல் மற்றும் இடப்பெயர்வு என்பது இன்று அரசு எதிர்கொள்ளும் முக்கிய சவாலாக வளர்ந்துள்ளது.

---

## அலகு– 9 - இந்தியாவும் உலகமும்

### இந்திய வெளியுறவுக் கொள்கையின் பரிணாம வளர்ச்சி (1947-54)

**சுதந்திரமும் பிரிவினையும்**

சுதந்திரத்திற்கு முன் இருந்த காலகட்டத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ஆங்கிலேய அரசாங்கத்தின் பொறுப்பு மற்றும் கட்டப்பாட்டில் இருந்தது. இரண்டாம் உலகப்போரில் பிரிட்டனின் வெற்றிக்காக இந்தியா தேவையான அளவு மனித சக்தி மற்றும் இதர கருவிகளை பங்களித்தது. 1945ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் முடிந்து, 1947ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் இந்தியா ஆங்கிலேய அரசாங்கத்திடம் இருந்து விடுதலையடைந்ததைத் தொடர்ந்து, இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை வடிவமைத்தக்கொள்ள முடிந்தது. சுதந்திரத்திற்கு பின்னர் உருவான வெளியுறவுக் கொள்கையில் பல்வேறு காரணிகளின் தாக்கம் இருந்தன. போருக்கு பின்னர் ஏற்பட்ட உலக அரசியல் நிகழ்வுகள் மற்றும் இந்தியாவின் சொந்த அரசியல் சூழல் போன்றவை வெளியுறவுக் கொள்கையினை வடிவமைத்தன.

உலக நாடுகள் ராணுவ ரீதியாக இரண்டு துருவங்களாக பிரிந்திருந்தன. அவை தங்களைப் பாதுகாப்பதற்காக ராணுவ கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டன. இரு ராணுவ கூட்டணிகளிலும் பல நாடுகள் இணைந்தன. இந்த இரு கூட்டணிகளும் ஒன்றையொன்று வெற்றிக்கொள்ள எடுத்த முயற்சிகளே பனிப்போர் என்றழைக்கப்படுகிறது. இரண்டு முகாம்களும் ராணுவங்களை கட்டியெழுப்ப பெருமளவு பணம் செலவழித்தாலும், பெரியளவிலான போர் தவிர்க்கப்பட்டது. மிகவும் பதட்டமான சூழ்நிலை நிலவியது. புதிதாக விடுதலையடைந்த நாடுகள் இந்த இரண்டு இராணுவ முகாம்களின் சண்டைகளுக்கிடையே தங்களுடைய வளங்களை வீணாக்கிக் கொள்ளும் நிலையில் இல்லை. அந்நாடுகள் தங்களைக் கட்டமைப்பதற்கு அனைத்தையும் பாதுகாக்க வேண்டியிருந்தது. அதேநேரத்தில் இரண்டு வல்லரசுகளான அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையே நடைபெற்ற கருத்து ரீதியான சண்டை பனிப்போரை உச்சத்திற்கு கொண்டு சென்றது. காலனியாதிக்கத்தின் பிடியில் இருந்து புதிய எல்லைகளுடன் தோன்றிய நாடுகளுக்கு உலகளாவிய அளவில் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியது. மேற்கத்திய சக்திகள் புதிய உலக ஒழுங்கமைப்பை ஏற்படுத்த வேலை செய்து கொண்டிருந்த நேரத்தில், கண்டங்களுக்கிடையே பெருமளவிலான மனித இடப்பெயர்வு நிகழ்ந்து கொண்டிருந்தது. 1945ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அட்லாண்டிக் சாசனம் மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பு தோன்றுவதற்கு உலக நாடுகள் முனைப்பாக இருந்தன.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை வடிவமைக்கும் சிற்பியாக ஜவஹர்லால் நேரு இருந்தார். அப்போது உலகம் இருந்த நிலைமைகளில் உலக அமைதிக்கான தாக்கத்தைப் பற்றியும், ஒரு புதிய தேசத்தின் தேவைகளைப் பற்றியும் நேரு நன்கு உணர்ந்திருந்தார். இந்தியாவைப் பொருத்தவரை ஒருமைப்பாடு, ஐக்கிய நாடுகளின் அமைப்பில் அதன் பங்கு, ஒரு அமைதியான உலகத்திற்கான அதன் அர்ப்பணிப்பு போன்றவையெல்லாம் பெரும் சவாலாக இருந்தன. புதிய இந்திய தேசத்தின் சமூக-பொருளாதார மேம்பாடு, நவீனமயமாக்குதல், உலக அமைதி, போர் தவிர்ப்பு, பிற நாடுகளின் அமைதியான ஆக்கப்பூர்வமான உறவு, காலனியாதிக்கத்திலிருந்து ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலை, ஐக்கிய நாடுகள் சபையை வலுப்படுத்துவது, பிற நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு ஆகிய இந்தியத் தேவைகளின் அடிப்படையில் நேருவின் அயல்நாட்டுக் கொள்கை உருவாக்கப்பட்டது,

1947ஆம் ஆண்டு இந்திய துணைக் கண்டத்தை பிரித்து, பாகிஸ்தான் உருவாக்கப்பட்டது. இந்த நிகழ்வானது மனித வரலாற்றில் பெருமளவு அகதிகள் புலம்பெயர்வதற்கு காரணமாக இருந்தது. இன்றுவரை இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் காஷ்மீர் சிக்கலானது தொடர்ந்து அடிப்படை விஷயமாக இருந்து வருகிறது. இதுவே தொடர்ச்சியாக நான்கு போர்களுக்கு காரணமாகியது.

**பஞ்சசீலமும் - அணிசேரா இயக்கமும் (1954-1991)**

இந்தியா அவசியம் தனது அண்டை நாடுகளுடன் நெருங்கிய நட்புறவை வளர்த்துக் கொள்வது மிகவும் பராமரிப்பது என்பதில் நேரு மிகவும் உறுதியாக இருந்தார். குறிப்பாக சீனாவுடனான உறவில், இரு நாடுகளும் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு பிணைப்பில் நீண்ட வரலாறு கொண்டிருப்பவையாகும். இது இந்தியா-சீனா ஆகிய இரு நாடுகளுக்கிடையே 1954 ஆம் ஆண்டு

நேரு மற்றும் சீன பிரதமர் சூ-யென்-லாய்-வுடன் பஞ்சசீல ஒப்பந்தம் ஏற்படக் காரணமாகியது. பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் இரு நாடுகளும் உறவுகளைப் பேணுவது என்று இரு நாட்டு தலைவர்களும் முடிவு செய்தனர்.

**பஞ்சசீலக் கொள்கைகள்**

- இரு நாடுகளும் ஒன்றின் எல்லையை, இறையாண்மையை மற்றொன்று மதிப்பது
- ஆக்கிரமிப்பு செய்யாமை
- ஒவ்வொருவரின் உள்நாட்டு விவகாரங்களில் மற்றவர் தலையிடாமல் இருத்தல்
- தூதரக அளவிலான சமத்துவம் மற்றும் ஒத்துழைப்பு
- அமைதியுடன் இணைந்து வாழ்தல்

இந்த ஒப்பந்தங்கள் யாவும் இருந்த போதிலும், 1962ஆம் ஆண்டு இந்தியாவும்-சீனாவும் எல்லை தொடர்பான விவகாரணத்தின் மீது இறுதியாக போரில் குதித்தன. இந்த இரு நாடுகளுக்கிடையேயான எல்லை பிரச்சனை இந்த நாள் வரை இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் மிகவும் முதன்மையாக உள்ளது. பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இருந்தபோதிலும், பஞ்சசீலக் கொள்கையானது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் பரிணாம எழுச்சியின் ஒரு முக்கிய கட்டத்தை குறிப்பதாக இருக்கிறது.

**பாண்டுங் மாநாடு**

பாண்டுங் மாநாடு (இந்தோனேசியா) 1955ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் 29 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டு அணிசேரா இயக்கம் உருவாக்குவது பற்றி விவாதித்தனர்.

பனிப்போர் காலத்தில் இந்தியா தனது கொள்கையை வரையறுக்க வேண்டியிருந்தது. 17ஆண்டுகள் வெளியுறவு விவகாரத்தினை தனது பொறுப்பில் வைத்திருந்த பண்டித ஜவஹர்லால் நேரு (1947-64) பனிப்போரில் சிக்காமல், இந்தியாவுக்கென்று சொந்த வெளியுறவுக் கொள்கைப் பற்றி தெளிவாக இருந்தர். இந்த நிலைப்பாடு 1961ஆம் ஆண்டு அணிசேரா இயக்கம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது. அணிசேரா இயக்கம் தோன்றுவதற்கு எகிப்தின் கமால் அப்துல் நாசர், கானாவின் குவாமி நிக்ருமா, இந்தோனேசியாவின் அகமது சுகர்னோ மற்றும் யூகோஸ்லேவியாவின் ஜோசிப் புரோஸ் டிட்டோ ஆகியோருடன் சேர்ந்து நேருவும் அதன் நிறுவனத் தலைவர்களில் ஒருவர் ஆவார். கூட்டு சேராமை எனும் கருத்தை "நடுநிலை வகிப்பது" என்று பொருள் கொள்ளக் கூடாது என தொடர்ந்து விளக்கினார், இதன் பொருள் நீதிக்கும் அநீதிக்குமான சண்டையில் யார் ஒருவரும் நடுநிலையோடு இருக்க முடியாது என்பதாகும். கூட்டு சேராமை என்பதன் பொருள் ராணுவ ரீதியாக எந்த ஒரு வல்லரசுகளுடனோ அல்லது ராணுவ முகாம்களுடனோ உடன்பாடு செய்துக்கொள்ளக் கூடாது என்பதாகும். ஆனால், நாடுகளுக்கிடையே உள்ள சிக்கலின் தன்மையின் அடிப்படையில் அமைதியான ஒத்துழைப்பு என்ற நோக்கத்துடன் தீர்மானிக்கும் சுதந்திரத்தை தக்கவைத்துக் கொள்வது அணிசேராமை ஆகும். இந்த சுதந்திரமான தெரிவு முறைதான் சீனாவுடனான போரின்போது மேற்கு உலக நாடுகளிலிருந்து ஆயுதங்கள் கோள்முதல் செய்ய வைத்தது, மேலும் சோவியத் ஒன்றியத்துடன் தூதரக அளவிலான உடன்படிக்கையை 1971இல் வங்கதேச நாட்டுடனான போருக்கு முன்னர் செய்து கொள்ளவும் முடிந்தது.

அணிசேரா இயக்கம் தோன்றுவதற்கு முன்பாகவே இரண்டு வல்லரசு கூட்டணிகளுடனும் அணிசேர்க்கை கூடாது என்ற சிந்தனை இருந்தது. 1955 ஆம் ஆண்டு நடைபெற்ற பாண்டுங் ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு அத்தகைய அணிசேரா இயக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா கண்டத்தில் காலனி ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வர குரல் கொடுத்த நேரு, அணிசேரா இயக்கமே அமெரிக்க மற்றும் சோவியத் யூனியனின் ராணுவக் கூட்டமைப்புக்கு மாற்றாக புதிதாக சுதந்திரம் அடையும் நாடுகளுக்கு இருக்கும் என்ற தொலைநோக்குப் பார்வையை கொண்டிருந்தார். இதுவே அணிசேரா இயக்கத்தின் மையக் கருத்தாகும், பல புதிய நாடுகள் இதன் ஒரு பகுதியாக மாற முடிவு செய்தன, அவை பனிப்போர் அரங்கத்தின் ஒரு அங்கமாக தங்களது நாடு இருக்க விரும்பவில்லை.

**சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியும் மற்றும் பொருளாதார தாராளமயமாக்கலும் (1991-முதல் தற்பொழுது வரை)**

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலகமயமாதல் போன்றவை எழுச்சி பெற்றன. இந்தியாவை பெருமளவு சோசலிச பொருளாதாரத்தில் இருந்து சந்தைப் பொருளாதாரத்திற்கு நகர்த்திச் சென்றது. இந்தியா இதன் பிறகு அந்நிய நேரடி முதலீட்டிற்கு (FDI) தனது கதவுகளைத் திறந்து விட்டது. பின்னர் இது அமெரிக்க ஐக்கியநாடுகளுடனான உறவுகள் மேம்பட உதவியாக அமைந்தது.

தற்காலத்தில் இந்தியா புது வகையான சவால்களை சந்திக்கிறது, மாறிவரும் புவிசார் அரசியல் தன்மைகளினால் மையக்கரு மாறாமல், அதன் வெளியுறவுக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

தெற்கு ஆசியாவின் சீனா, உலக வல்லரசுகளில் ஒன்றாக ஆகியிருக்கிறது. அது நமது அண்டை நாட்டு வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாகிறது. வளர்ந்து வரும் பொருளாதாரத்துடன் இந்தியாவும், ஒரு மண்டல அளவிலான சக்தியாகிறது. எனவே முன்பு எப்பொழுதும் இல்லாத வகையில் அதற்கு இன்னும் அதிக உலகளாவிய பொறுப்பு ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றங்களுக்கு ஈடு கொடுத்து இந்தியா தன்னுடைய நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், தன்னுடைய அண்டை நாடுகளுடன் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்வதற்காகவும் தனது வெளியுறவுக் கொள்கையில் சில மாறுதல்களை செய்ய வேண்டியுள்ளது.

இந்தியா மற்ற நாடுகளுடன் உறவை பேணுவதற்கான மற்ற காரணிகளாக பாதுகாப்பு மற்றும் பொது பயன்பாட்டிற்கு அணு ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளும் வலிமையை தன்னகத்தே கொண்டிருத்தல், முக்கிய சர்வதேச அமைப்புகளான பிரிக்ஸ்(Brics), ஜி20(G20), ஷாங்காய் அமைப்பு(SCO) ஏவுகணைத் தொழில்நுட்ப கட்டுப்பாடு அமைப்பு (MTCR) போன்ற அமைப்புகளில் உறுப்பினராக உள்ளது போன்றவற்றைக் கூறலாம். இந்தியா தனது அடையாளத்தில் தொடர்ந்து உயர்ந்து வருவதால், உலகத்தில் உள்ள பல வலிமையான நாடுகள், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் இந்தியாவை நிரந்தர உறுப்பனராக இணைக்க வேண்டும் என்று குரல் கொடுத்து வருகின்றன. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் சாராம்சத்தை நாம் சுருக்கமாக குறிப்பிட வேண்டுமானால், இஸ்ரேல்,ஈரான், பாலஸ்தீனம் மற்றும் சவுதி அரேபியா போன்ற, மாறுபட்ட பண்புகளை கொண்ட நாடுகளுடன் நட்புறவை வைத்திருக்கும் மிகவும் அரிதான தனித்தன்மையைக் கொண்டிருக்கின்ற ஓரே நாடு இந்தியா எனலாம்.

**இந்தியா-அமெரிக்கா உறவுகள்**

அமெரிக்கா உடனான முறையான அரசியல் உறவு இரண்டாம் உலகப்போர் கால கட்டத்தில் தொடங்கியது. முதன்முதலாக 1940ஆம் ஆண்டு தாமஸ் வில்சன் மற்றும் சர் கிரிஜா சங்கர் பாஜ்பாய் ஆகிய தூதர்களை பரிமாறிக் கொள்வது நிகழ்ந்தது. எனினும் 1946ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஹாரி S. ட்ருமன் என்ற குடியரசுத் தலைவரின் தலைமையின்கீழ்தான் இந்தியா-அமெரிக்காவுக்கு இடையே முழுமையான முழுநேர தூதரக உறவுகள் தோன்றியது. 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் மேலும் இது வலுப்படுத்தப்பட்டது. ஜவஹர்லால் நேரு தலைமையின் கீழ், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை "அணிசேராமை" என்ற கருத்தை அடையாளமாகக் கொண்டிருந்தது, இதன் பொருள் என்பது அரசுகளானது, எந்த ஒரு முதன்மையான ராணுவ பலம் கொண்டே அதிகார மண்டங்களுடன் முறையாக சேர்ந்து கொள்வதோ அல்லது எதிராக நிற்பதோ அல்ல. போருக்கு பிந்தைய சர்வதேச உறவுகள் யாவும் இரண்டாம் உலகப்போரின் நிகழ்வுகள் மற்றும் அதிகாரத்தின் விளைவுகளால் வழிநடத்தப்பட்டவையே ஆகும்.

**விவேகானந்தர் இல்லம்**

விவேகானந்தர் இல்லம் சென்னை மெரியான கடற்கரையில் அமைந்துள்ளது. இது ஒரு காலத்தில், ஐஸ் ஹவுஸ் என்று அழைக்கப்பட்டது. இந்திய-அமெரிக்கா உறவுகளுக்கு சான்று பகர்வதாக நிற்கிறது. இந்த இல்லமானது, 1840ஆம் ஆண்டு "டியூடர் ஐஸ்" என்ற நிறுவனம், அமெரிக்காவில் இருந்து கொண்டு வரப்பட்ட பனிக்கட்டிகளை சேமித்து வைக்கும் இடமாக பயன்படுத்தப்பட்டது. 1847ஆம் ஆண்டு ஹென்றி டேவிட் தோரே(Henry David Thoreau) என்ற கவிஞர் "வால்டன்" என்ற குளத்தில் இருந்து டியூடர் நிறுவனத்திற்கு "ஐஸ் குளத்தில் இருந்து

டியூடர் நிறுவனத்திற்கு ''ஐஸ்'' களைப் எடுத்துச் செல்வதை ''வெய்யிலின் தாக்கத்தால் புழுக்கத்திற்கு உள்ளாயிருக்கும் எனது சார்லஸ் டன் மற்றும் நியூ புதிய ஆர்லியன்ஸ் வாழ்விட வாசிகள் மற்றும் சென்னை, பம்பாய் மற்றும் கல்கத்தா வாசிகளும் எனது கிணற்றில் இருந்து நீர் அருந்துகிறார்கள்'' என்று எழுதினார். இன்னும், 1600 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் சென்று பார்த்தோமானால், அமெரிக்க வணிகர்கள் தொடர்ச்சியான வர்க்கத்தையும், லாபத்தையும் தேடி இந்தியா வந்துள்ளனர் என்பது மிகவும் ஆர்வத்திற்கிடமான ஒன்றாகும். பாஸ்டன் நகரில் பிறந்த எலிஹுயேல் என்பவர் 20 ஆண்டுகளாக கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைவராக பணிபுரிந்திருக்கிறார். கனெடிக்கெட் என்ற இடத்தில் இருக்கும் யேல் பல்கலைக்கழகம் இவரின் இறப்பு பிறகு இடப்பெட்ட பெயரே ஆகும். நீண்ட காலத்திற்கு முன்பே வட அமெரிக்காவில் இருக்கும் புலம் பெயர்ந்தோர் யாவரும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ராணுவத்தில் வீரர்களாக இருந்து ஆங்கிலோ-பிரெஞ்சு போரில் சண்டையிடச் சென்றவர்களே ஆவர்.

பொருள் என்பது அரசுகளானது, எந்த ஒரு முதன்மையான ராணுவ பலம் கொண்ட அதிகார மண்டலங்களுடன் முறையாக சேர்ந்து கொள்வதோ அல்லது எதிராக நிற்பதோ அல்ல. போருக்கு பிந்தைய சர்வதேச உறவுகள் யாவும் இரண்டாம் உலகப்போரின் நிகழ்வுகள் மற்றும் அதிகாரத்தின் விளைவுகளால் வழிநடத்தப்பட்டவையே ஆகும்.

பிரிவினையின் பொழுது, காஷ்மீர் ஓர் முடியரசாக இந்தியாவுடன் இணைந்தது. இதனை பாகிஸ்தான் எதிர்த்தது. இது குறித்து பாகிஸ்தான், இந்தியாவுடன் காஷ்மீர் இணைப்பு சட்டவிரோதமானது, கட்டாயத்தினால் செய்யப்பட்டது என்று கூறியது. 1948ஆம் ஆண்டு இந்த சிக்கல் ஐக்கிய நாடுகளின் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது, இதன் விளைவாக இந்தியா பாகிஸ்தானுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் (UNCIP) நிறுவப்பட்டது. இதில் இந்தியா கடுமையாக ஏமாற்றம் அடைந்தது. ''இது முழுவதும் தவறான நடவடிக்கை'' என்றும், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளின் செயற்பாட்டினையும் இந்தியா விமர்சித்தது. தொடர்ந்து நேரு ஐக்கிய நாடுகளுக்கு தன்னுடைய முதற்பயணத்தை மேற்கொண்டார்.

இரண்டு அரசுகளின் தலைமைகளுக்கு இடையே தனித்த ஒத்துணர்வு இல்லாமல் போனதாலும், பரஸ்பரம் இருவரும் குறைகூறிக் கொண்டதாலும், இந்திய-அமெரிக்கா இடையேயான உறவு மேலும் விரிசலடைந்தது. சீட்டோ(SEATO) மற்றும் சென்டோ (CENTO) எனப்படும் அமெரிக்கா வழங்கிய (தென்கிழக்கு ஆசிய ஒப்பந்தம் அமைப்பு மற்றும் மத்திய ஒப்பந்தம் அமைப்பு) நேச உடன்படிக்கை அமைப்பு மேலும் உறவை மேம்படுத்தவில்லை. இந்த அமைப்பில் பாகிஸ்தானை சேர்த்தது மற்றும் பாகிஸ்தான்-அமெரிக்கா ராணுவ ஒப்பந்தம் போன்றவை இருதரப்பு உறவுகளிடையே சிறிதளவு மட்டுமே முன்னேற்றத்திற்கான நம்பிக்கையை எற்படுத்தியது. ஐசனோவர் மற்றும் கென்னடி ஆகியோரின் இரண்டாம் முறை பதவிகாலத்தின் போது, அது மிகச் சிறிய காலமாக இருந்த போதிலும் சிறப்பான சூழ்நிலை நிலவியபோதும், இன்னும் அனைத்து காலங்களுக்கான உறவு நிலவுவதற்கு இன்னும் நீண்ட தூரம் இருந்தது.

அமெரிக்காவின் நிதி உதவி திட்டத்தை நிராகரித்து, வியட்நாமில் படைகள் குவிக்கப்பட்டது. வியட்நாமில் படைகள் குவிக்கப்பட்டது போன்றவை இந்திய-அமெரிக்கா உறவுகளை மேலும் பதற்றத்திற்குள்ளாகியது.

பொதுச்சட்டம் 480 கீழ் 1954ஆம் அண்டு வெளாண் உற்பத்திப் பொருள்களை இந்தியாவிற்கு வழங்குவதற்கு ஐந்து ஒப்பந்தங்கள் இந்திய-அமெரிக்கா இடையே கையெழுத்தானது.

தொழில்மயமாக்கலுக்கு, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகளுக்கு அமெரிக்காவை இந்தியா நாடியபோது, இந்தியா-அமெரிக்காவின் உள்நாட்டு (பொருளாதார) திட்டங்களில் தலையிட மற்றும் ஆதிக்கம் செலுத்த முயற்சித்தது. ஆனால், சோவியத் ஒன்றியம் கனரக தொழில்களின் உள்கட்டமைப்பை கட்டி எழுப்புவதற்கு மிகவும் தாராளமான வகையில் உதவிகளை அளித்தது. இந்தியா சோவியத் ஒன்றியத்துடன் வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. இந்திரா காந்தி தலைமையிலான இந்தியா ஒரு தலைப்பட்சமான அணு-ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு பணிந்து போக மறுத்துவிட்டது. பின்பு வந்த ஆண்டுகளில் ராஜீவ் காந்தி, தனக்கு முன்பிருந்தவர்கள் போல் அல்லாமல் உலகத்திற்கு இந்தியா ஒரு வளர்ச்சி சார்ந்த எழுந்து வரும் பொருளாதாரமாக தனியார் முதலீட்டிற்கு வழி திறந்துவிட்டார்.

**இந்திய-அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்கிடையேயான ராணுவம் சாரா அணு ஒப்பந்தம்**

இந்திய குடியரசுக்கும்-அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட இந்திய-அமெரிக்கா ராணுவம் சாரா அணு ஒப்பந்தம் அல்லது இந்திய-அமெரிக்கா அணு ஒப்பந்தமே, 123 உடன்படிக்கை என்றழைக்கப்படுகிறது. இதற்கான அடிப்படை கட்டமைப்பு வேலைக்காக 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் தேதி அன்று கையெழுத்திடப்பட்டது. இது தொடர்பாக இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் W. புஷ் ஆகியோர் வெளியிட்ட கூட்டு அறிக்கையின்படி, அதில் இந்தியா தனது ராணுவம் மற்றும் ராணுவம் சாராத அணு உலைகள் அமைப்புகளை தனித்தனியாக பிரித்துக் கொள்வது என்பதை ஏற்றுக் கொண்டது.

இந்த ஒப்பந்தமானது, இந்தியா "ராணுவம் சாராத" என்று அடையாளப்படுத்திய அணுக்கரு உலை அமைப்புகளை, நிரந்தர பாதுகாப்பு என்ற ஒப்பந்தத்தின் கீழ் வைத்து விட்டு, பிரச்சனைக்குரிய தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை, குறிப்பாக ராணுவம் சாரா அணுக்கரு செறிவூட்டல் பணிகள் உள்ளிட்ட, மற்றும் மறுசுழற்சி செய்யும் சாதனங்களை, இந்த சர்வதேச அணு ஆற்றல் முகமைகளின் பாதுகாப்பு வரம்பின்கீழ் வருவதைக் கூட செய்யாமல் விதிவிலக்கு பெறும்படியாக செய்து விட்டது.

2008ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ஆம் தேதி அன்று, ராணுவம் சாரா அணு உலை எரிபொருள் மற்றும் தொழில்நுட்பத்தை பரிமாறிக் கொள்வது ஆகியவை உள்ளடங்கிய ஒப்பந்தத்திற்கு அமெரிக்க மேலவை "செனட்" ஒப்புதல் அளித்தது.

**பனிப்போருக்கு பிந்தைய காலம்**

நீண்ட கால காலனியாதிக்க அழிவுகளிலிருந்து மீண்டெடுக்க இந்தியா, சுதந்திரத்திற்கு பிறகு 50 ஆண்டுகளில் மாபெரும் மக்களாட்சி அமைப்பை கொண்ட இந்தியா அமைதியை நிலைநாட்ட உறுதி பூண்டுள்ளது. இந்த இணையதள காலத்தில், இந்தியாவின் பன்மைத்துவம், தகவல் தொழில்நுட்பத்திறன் மற்றும் ஆங்கிலமொழித் திறமை போன்றவை இந்தியாவிற்கு பெரிய சொத்தாக உள்ளது. இந்த புத்தாயிரமாண்டில், ஆசியாவின் இருபெரும் நாடுகளான இந்தியாவும், சீனாவும் அதிகாரமிக்க நாடுகளாக மிளிரத் தொடங்கியுள்ளன.

இது சர்வதேச அதிகாரம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்வதை காட்டுகிறது. நரசிம்ம ராவ் மற்றும் கிளிண்டன் காலத்தில் இந்திய அமெரிக்கா உறவில் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இரு நாடுகளுக்கிடையே ராணுவ ஒத்துழைப்பும் ஏற்பட்டது.

பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டை மீறி கார்கில் போரில் ஈடுபட்ட போது அமெரிக்கா அதை கண்டித்து இந்தியாவின் நிலைக்கு ஆதரவளித்தது. அதை இந்தியாவும் வரவேற்றது. இந்தியாவிற்கு 2000ஆம் ஆண்டில் அமெரிக்கா அதிபர் கிளிண்டனின் வருகை இந்திய-அமெரிக்கா உறவில் ஒரு புதிய அத்தியாயத்தை மலரச் செய்தது. வாஜ்பாய் இந்திய-அமெரிக்கா உறவை பற்றி குறிப்பிடும்போது டிஜிட்டல் உலகில் இந்தியாவும் அமெரிக்காவும் பக்கத்து நாடுகள் மற்றும் பங்காளிகள் என்றார். அதன் பின்பு, அறிவியல் தொழில்நுட்பம், சூழலியல் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம், கல்வி எச்.ஐ.வி, சுனாமி மீட்பு போன்றவற்றில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயல்பட முடிவெடுத்தன. அதன் தொடர்ச்சியாக புஷ் நிர்வாகத்தின் போதும், இதே இணக்கமான பாதையில் இருநாட்டு உறவு பயணித்தது. இரு நாடுகளும் இயற்கையாகவே கூட்டாளிகள் என்றும் கூறப்பட்டன. இந்த உறவு, ஒபாமா அமெரிக்க அதிபரான பிறகு நன்கு பக்குவமடைந்த ஒன்றாக மாறியது, பாதுகாப்பு, அணு ஆற்றல் போன்றவற்றில் புது ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

**எதிர்கால ஒத்துழைப்பு**

டிரம்ப் நிர்வாகத்தில் காணப்பட்ட போக்கு உலக நாடுகளுக்கிடையே பதட்டத்தையும், எதிர்வினையையும் ஏற்படுத்தின. புதிய நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்து இந்திய-அமெரிக்கா உறவுகள் தொடர்ந்த போதிலும், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள்,"அமெரிக்கா முதன்மை" எனும் கொள்கை போன்றவை எல்லாம் மிகவும் முக்கியமான தடைக்கற்கள் ஆகும். மற்றபடி, ஆழந்த நட்புறவு கொண்டிருக்கின்றன. பாரம்பரியமிக்க இந்திய ஈரான் உறவுகளில் அமெரிக்காவின்

தலையீடு இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு சவால்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா வெளியுறவில் எந்த வித தலையீடும் இல்லாத சுதந்திரமான கொள்கையை கடைபிடிக்கிறது.

| இந்திய-அமெரிக்கா உறவுகளின் காலவரிசை | | |
|---|---|---|
| வ.எண் | ஆண்டு | முக்கியமான நிகழ்வுகள் |
| 1 | 1949 | பிரதமர் நேரு அமெரிக்க ஐக்கிய நாடுகள் செல்லுதல் |
| 2 | 1978 | அமெரிக்க அதிபர் கார்ட்டர் இந்தியாவிற்கு வருகை தருதல் |
| 3 | 1991 | பொருளாதார சீர்திருத்தம் |
| 4 | 1998 | இந்தியா அணு ஆயுத சோதனை செய்தல், அமெரிக்கா இந்தியா மீது பொருளாதார தடை விதித்தல் |
| 5 | 2000 | கிளிண்டன் வருகை, உறவுகள் வலுப்படுதல் |
| 6 | 2001 | அமெரிக்கா, இந்தியா மீதான பொருளாதார தடைகளை நீக்குதல் |
| 7 | 2005 | ஆற்றல் பாதுகாப்பு பேச்சுவார்த்தை |
| 8 | 2005 | இந்தியா, அமெரிக்கா புதிய ராணுவ கட்டமைப்பில் கையெழுத்திடுதல் |
| 9 | 2005 | அணு ஒப்பந்தம் |
| 10 | 2010 | பொருளாதார மற்றும் நிதி ஒத்துழைப்பு |
| 11 | 2010 | இந்தியா, அமெரிக்கா பாதுகாப்பு முதல் பேச்சுவார்த்தை துவங்குதல் |
| 12 | 2010 | ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராகும் இந்தியாவின் முயற்சிக்கு ஒபாமா ஆதரவு |
| 13 | 2011 | அமெரிக்கா, இந்தியா வலைதளப் பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடல் |
| 14 | 2015 | ஒபாமா இந்தியாவிற்கு இரண்டாவதாக முறையாக வருதல் மற்றும் மேம்படுத்துதல் |
| 15 | 2016 | இந்தியா ஒரு முக்கியமான ராணுவ கூட்டாளியாக ஒபாமா அங்கீகரித்தல் |
| 16 | 2019 | இந்தியாவின் சிறப்பு வர்த்தக தகுதியை டிரம்ப் முடிவுக்கு கொண்டு வந்தார். |

**இந்திய-இஷ்ய உறவுகள்**

சோவியத் ஒன்றியமானது 1947ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் மிக நெருங்கிய நண்பனாகவும், ராணுவ ரீதியாக ஒரு பங்குதாரராகவும் இருந்திருக்கிறது. இந்த இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவானது பல சவாலான புவியரசியல் மாற்றங்களின் போதும் தொடர்கிறது. அமெரிக்காவைப் போல் அல்லாமல், ரஷ்யாவானது இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ராணுவம் தொடர்பான தன்னாட்சி நிலையை வரலாற்று ரீதியாக புரிந்து கொண்டது மற்றும் மதிக்கிறது. அது (ரஷ்யா) இந்தியாவை மிகப் பழமையான நாகரிகம் மற்றும் மிக உயர்ந்தப் பண்பாடு, அறிவாற்றல், பேரறிவு கொண்ட நாடாகப் பார்க்கிறது. இரு நாடுகளுக்கிடையே தொடரும் உறவின் இந்த அடிப்படைப் பண்பானது, கடந்தக் காலங்களில் இரு தரப்பு உறவுகள் மலர்வதற்கு உத்வேகமாக இருந்தது.

தொடக்கத்தில், இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், சோவியத் ஒன்றியம் (USSR) ஜோசப் ஸ்டாலின் தலைமையின் கீழ் இருக்கும் பொழுது, இந்தியாவினுடைய சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை மற்றும் அணிசேரா கொள்கையின் உண்மைத் தன்மையை சந்தேகித்தது. இருந்தபோதிலும், இந்திய ரஷ்ய நரல்லுறவானது, இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 1955ஆம் ஆண்டு ஜூன் மாதம் சோவியத் ஒன்றியத்தின்பயணம், அதனைத் தொடர்ந்து சோவியத்தின் பிரதமர் நிகிதா குருஷேவின் 1955ஆம் ஆண்டு டிசம்பர் மாத வருகை ஆகியவற்றால் சிறப்புற தொடங்கியது.

இதே காலக்கட்டத்தில் தான் இந்தியா, சோவியத் மாதிரியின் அடிப்படையிலான திட்டமிட்ட பொருளாதார மற்றும் சோசலிச மாதிரியான சமூக அமைப்பை ஏற்றுக்கொண்டது. இந்த சகாப்தத்தில் தான் சோவியத் ஒன்றியம் மேற்கு உலகின் தாக்கத்தை கட்டுப்படுத்த, நிதி உதவி, வர்த்தகம் இருதரப்பும் 1971ஆம் ஆண்டு இந்திய சோவியத் அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. இது இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளில் நிகழ்ந்த சம்பவங்களில் ஒரு மைல்கல் ஆகும்.

இது, இந்த உடன்படிக்கையில் உள்ளவர்களுக்கு எதிராக ஏதேனும் ராணுவ நடவடிக்கை இருக்குமானால் உடனடியாக ஆலோசனை அளிக்கிறது. 1971ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான்

போரின்போது, சோவியத் ஒன்றியம், இந்தியாவிற்கு ஆதரவாக உறுதியான நடவடிக்கை எடுக்க, ஏற்கெனவே அமெரிக்கா தனது 7வது கடற்படைப் பிரிவை வங்காள விரிகுடா கடற்பகுதிக்கு அனுப்பியிருந்த நிலையில் அது இந்தியாவிற்கு எதிராக இருக்குமானால் அதனை எதிர்கொள்ள தனது போர் கப்பல்களை இந்திய பெருங்கடற் பகுதிக்கு அனுப்பி வைத்தது. அதேபோல 1971ஆம் அண்டு இந்திய-பாகிஸ்தான் போரின் விளைவு மற்றும் பங்காளதேஷ் நாட்டின் தோற்றம் போன்றவையெல்லாம் இந்தியா மற்றும் சோவியத் ஒன்றியத்தினியிடையே ஒரு நம்பிக்கையான நட்புறவை நிறுவியது.

**இந்திய-ரஷ்ய உறவுகள் (1991 முதல் இன்று வரை)**

1991ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியுடன், இந்தியாவிற்கும் புதியதாக ஏற்பட்ட ரஷ்யாவிற்கும் இடையேயான இருதரப்பு உறவுகள் ஒரு நிச்சயமற்ற தன்மைக்கு சென்றது. சோவியத் ஒன்றியம் என்ற அரசு இல்லாமல் போய்விட்டதால் 1971ஆம் ஆண்டு செய்து கொண்ட உடன்படிக்கை செயலிழந்து போனது. ரஷ்யாவும் தனது கவனத்தை அதன் உள்விவகாரங்களிலும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா உடனான உறவுகளிலும் கவனம் செலத்தியது. இப்பொழுது இந்தியா, பிற வளரும் நாடுகளைப் போல் இருக்கும் ஆர்வமும் வளர்ச்சிக்கான வாய்ப்பும் இல்லாத ரஷ்யாவுடன் பரஸ்பர உறவை மேற்கொண்டு வருகிறது.

| இந்திய-சோவியத் அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு உடன்படிக்கை 1971 |
|---|
| ❖ இந்திய-சோவியத் அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு உடன்படிக்கையானது 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9ஆம் தேதி கையெழுத்தானது.<br>❖ இரு நாடுகளுக்கிடையே நிலவும் நட்புறவுகளை விரிவாக்கம் செய்ய விருப்பம் தெரிவிப்பது.<br>❖ தேசத்தின் நலன்களை எட்டக்கூடியதாகவும், ஆசியாவிலும், உலகம் முழுவதும் நீடித்த அமைதி நிலவவும், நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வளர்த்தெடுப்பதுமான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>❖ சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்த தக்கவைக்க உறுதியேற்றுக் கொள்ளுதல், சர்வதேச பதட்டத்தை தணித்தல் மற்றும் காலனியாதிக்கத்தின் அனைத்து (அடையாளங்களையும்) மிச்சம் இருப்பவைகளையும் இறுதியாக இல்லாமல் செய்தல்.<br>❖ அமைதியோடு அனைவரும் ஒன்றாக இணைந்திருத்தல் என்ற கோட்பாட்டில் தங்களின் உறுதியை, மற்றும் பல்வேறு அரசியல் மற்றும் சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளிடையே ஒத்துழைப்பை உயர்த்திப்பிடித்தல்.<br>❖ இன்று உலகத்தில் உள்ள சர்வதேச பிரச்சனைகள் அனைத்தையும் ஒத்துழைப்பின் மூலமே தீர்க்க முடியும், போரால் அல்ல என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பது.<br>❖ ஐக்கிய நாடுகள் சபை சாசனத்திற்கு கீழ்படிவது எனும் உறுதியை மறு உறுதிப்படுத்துவது ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. |

ரஷ்ய அதிபர் போரிஸ் எல்ட்சின் தனது 1993ஆம் ஆண்டு இந்திய வருகையின்போது 1971ஆம் ஆண்டு செய்து கொண்ட உடன்படிக்கையை மீண்டும் தூண்டிவிடும் விதமாக புதிய நட்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். எனினும் பழைய உடன்படிக்கையின் அடிப்படைத்தன்மை மாற்றியமைக்கப்பட்டு, புதிய உடன்படிக்கையானது அமைதிக்கு அச்சுறுத்தல் வரும்பொழுது, ஆலோசனையும் ஒருங்கிணைப்பு மட்டும் இருப்பதாக செய்யப்பட்டது.

சோவியத் ஆட்சிக் காலத்தில் இருந்தது போல் அல்லாமல், போரிஸ் எல்ட்சின் இந்தியாவை ஒரு "இயற்கை கூட்டாளி" என்று கூறினாரே தவிர, சிறப்பான உறவு உள்ளது எனும் அளவிற்கு ஒரு உணர்வை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இந்த உறவானது இரு நாடுகளுக்கிடையே 1990ஆம் ஆண்டுகளின் துவக்கம் வரை இருந்தபோதிலும், இக்காலக்கட்டத்தில் ரஷ்யா உறவு மிகச் சாதாரணமாகவே இருந்தது. இந்தியாவை, ரஷ்யா ஓரளவுக்கு புறக்கணித்தாலும், அது இந்தியாவிற்கு எவ்வித தீங்கையும் ஏற்படுத்தவில்லை.

| எஸ்(S)-400 வான் வழி பாதுகாப்பு முறைக்கான வர்த்தக ஏற்பாடு |
|---|
| முன்னதாக இந்தியாவும்-ரஷ்யாவும், எஸ்-400 வான்வழி பாதுகாப்பு ஏற்பாட்டிற்கான (Air Defence System) 5.2 பில்லியன் டாலர் மதிப்பிலான வர்த்தகத்திற்கு கையெழுத்திட்டன. இந்த வான்பாதுகாப்பு ஏற்பாடானது 2020ஆம் ஆண்டிற்குள் வழங்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |

எஸ்-400 டிரையம்ஃப் (triumph) என்பது மேம்பட்ட தரையில் இருந்து வானிற்கு சென்று தாக்கும் ஏவுகணை அமைப்பு முறை ஆகும். இதனை உருவாக்கியது "அல்மாஸ் ஆன்டே" என்ற ரஷ்ய அரசு நிறுவனமாகும். இது எதிரி நாட்டு போர் விமானத்தை மற்றும் கண்டம் தாவும் ஏவுகணைகளை தாக்கி அழிக்கக்கூடியது. இதன் தாக்கும் திறன் 250 கிலோ மீட்டர் தொலைவு ஆகும். மேலும், இதன் சிறப்பு தாக்கும் திறனை 400 கிலோ மீட்டர் தூரம் வரை அதிகப்படுத்தமுடியும்.

விளாடிமிர் புடின் அதிபர் தலைமையிலான (2000 முதல் இன்று வரை) புதிய ரஷ்ய, எல்ட்சின் காலத்து இந்திய-ரஷ்யா இருதரப்பு உறவுகளை மீண்டும் பழையபடி மாற்றி அமைந்தது. ரஷ்யாவானது 2000 ஆம் ஆண்டு இந்தியாவுடன் "ராணுவம் சார்ந்த நட்புறவு பிரகடனத்தில்" கையெழுத்திட்டது. மேலும் 2010ஆம் ஆண்டு இந்த பிரகடனமானது சிறப்பான ராணுவம் சார்ந்த நட்புறவு பிரகடனத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றது. மாஸ்கோ யூரோ-ரஷ்யா பகுதியின் வல்லரசு என்ற வகையில், இந்தியா போன்ற பழைய நண்பருடன் திடமான நட்புறவு இல்லாமல் ஆசியாவின் தோன்றிவரும் ஒரு சக்தி என்பதை அடைய முடியாது என்று ரஷ்யா உணர்ந்துள்ளது.

**ஒத்துழைப்பிற்கான பகுதிகள்**

தற்சமயம், இந்தியா ரஷ்யாவின் ராணுவ தளவாடங்களை கொள்முதல் செய்யும் பெரியளவு இறக்குமதியாளர் ஆகும். சோதனையான காலக்கட்டங்களில் மட்டுமல்லாமல் இந்திய-ரஷ்ய உறவுகளானது மிகவும் வலிமையான தூண் என்பது இரு நாடுகளுக்கிடையே இருந்த ராணுவத் தளவாடங்கள் கொள்முதல் என்பதற்கான ஒப்பந்தமே ஆகம். இந்த ராணுவம் சார்ந்த ஒத்துழைப்பு என்பது பழமையான விற்பனையாளர்-கொள்முதலாளர் என்ற பரிணாமத்தில் இருந்து கூட்டாக உற்பத்தி மற்றும் மேம்பாடு என்ற நிலைக்கு உயர்ந்து – ராணுவ தொழில்நுட்ப பரிமாற்றத்தை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்வதை வலியுறுத்தும் நாடாக இன்று உள்ளது. இது இருவருக்கும் இடையே சுமுகமான உறவை விதைக்கிறது.

இந்தியா, ரஷ்யா மற்றும் இதர அண்டை நாடுகள், சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து பெருவழித் தடத்தை செயற்பாட்டிற்கு கொண்டு வர தங்களை ஈடுபடுத்திக் கொண்டன. இது இரு நாடுகளுக்கிடையே இணைப்பை முன்னோக்கி செலுத்துவதோடு, இரு நாடுகளுக்கிடையே வர்த்தக உறவையும் மேம்படுத்துகிறது. நமது பொருளாதாரத்தை ஒன்றிணைக்கும் ஒரு முக்கியமான புதிய நடவடிக்கையானது, இந்தியா மற்றும் யூரேசிய பொருளாதார ஒன்றியம் தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தை துவக்க வேண்டும் என்பதை ஒத்துக் கொண்டதாகும். இரு நாடுகளும் மூன்றாம் நாடு ஒன்றில் கூட்டாக பல திட்டங்களை எடுத்துக்கொண்டு செயற்படுத்த கூட ஒத்துக் கொண்டன. பங்களாதேஷில் கூட்டு அணுக்கரு உலை உருவாக்கும் திட்டம் மற்றும் வியட்நாமில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்ந்தெடுக்கும் திட்டங்கள் போன்றவை.

அவற்றில் சில, இந்தியா மற்றும் ரஷ்யா பல்வேறுபட்ட துறைகளில் ஆழமான ஒத்துழைப்பைக் கொண்டிருக்கின்றன, அவைகள் முறையே அணு ஆற்றல், வர்த்தகம், எண்ணெய் மற்றும் எரிவாயு, விண்வெளித்திட்டம், அறிவியல் தொழில்நுட்பம் போன்றவை மேலும், ஐக்கிய நாடுகள் சபையுடன், பிரிக்ஸ் நாடுகள் அமைப்புடன், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்புடன் (SCO) மற்றும் விற சர்வதேச மன்றங்களுடனும் ஒத்துழைப்பும் ஆகும். இந்த இரு நாடுகளும் மிகவும் சிக்கலான உலகளாவிய சவால்களான தீவிரவாதம், விண்-புறவெளிப் பகுதி ஆயுதமாக்கப்படல் மற்றும் பேரழிவு தரும் ஆயுதங்களைத் தடுத்தல், இணைய பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் ஆகிய விவகாரங்களில் பொதுவான தளத்தில் கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராக்க ரஷ்யாவும் ஆதரவு தெரிவிக்கிறது. இந்தியாவின் நலனில் முதன்மையான மையமானதுமான காஷ்மீர் சிக்கலில் இன்றும் உறுதியான ஆதரவாளராக ரஷ்யா இருந்து வருகிறது.

**இந்திய-ஐரோப்பிய ஒன்றிய உறவுகள்**

காலனியக்காலத்தில் இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையே தீவிர தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது. காலனியாதிக்க நாடுகள் அல்லாத ஐரோப்பிய நாடுகள் கூட இந்திய "மக்களிடையே பணி செய்ய வந்தன" அல்லது இந்திய பண்பாடு மற்றும் சல்வி, சுகாதார சேவை, சமூக மேம்பாடு ஆகியவற்றில் இந்தியாவின் மேம்பாட்டை ஆய்வு செய்ய வந்தன. ஒருபுறம் காலனியாதிக்கவாதிகளால் (நாடுகளால்) காலனியாக்கப்பட்டு பொருளாதார சுரண்டல் செய்யப்பட்ட காலகட்டமாக இருந்தபோதிலும், இர நாடுகளுக்கிடையே கருத்துகளும் தொழில்நுட்பங்கள் மட்டும்

பரிமாறிக் கொள்ளப்படவில்லை, மாறாக பண்பாடு மற்றும் சமூகத்தின் அனைத்து அடிப்படைப் பண்புகளும் இரு தரப்பிலும் பரிமாறிக் கொள்ளப்பட்டது. இந்தியாவின் அடிப்படையான சமூக இயல்புகளுடன் ஊடுருவியது "தேசியம்" எனும் உணர்வு, இது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பெரிய அளவிலான சுதந்திரத்திற்கான இயக்கம் தோன்றுவதற்கு வழிகோலியது.

வாஸ்கோடகாமா எனும் போர்ச்சுகீசிய மாலுமி 1498ஆம் ஆண்டு இந்தியாவிற்கும்-ஐரோப்பாவிற்கும் இடையேயான கடல் வழியை கண்டறிந்தார். அது இந்தியாவில் ஐரோப்பாவுக்கிடையே நேரடி வர்த்தகத்தை தொடங்கி வைத்தது.

**சுதந்திரத்திற்கு பின்பு உள்ள உறவுகள் (1947 முதல் இன்று வரை)**

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த நிலையில் ஆங்கிலேய அரசால் இந்தியத் துணைக் கண்டத்தின் மீது தனது பிடியை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. எனவே இந்தியாவை மத அடிப்படையிலான இரு நாடுகளாக பிரித்துவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறியது.

1947ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பிறகு இந்தியா ஐரோப்பாவுடன் நெருக்கமாக இருந்தது குறிப்பாக விடுதலையடைந்த நாடுகளின் அங்கம் என்ற வகையில் (Common wealth)இங்கிலாந்துடன் முதன்மையான உறவுகளைக் கொண்டிருந்தது. இதர ஐரோப்பிய நாடுகளுடனான இந்தியாவின் இந்தியாவின் உறவானது பனிப்போரின் சாயலால் ஏற்பட்டவையே ஆகும். 1962ஆம் ஆண்டு சீனாவுடன் ஏற்பட்ட போருக்கு முன்பே, அணிசேரா நிலையை இந்தியா தழுவிக் கொண்டதால், சோவியத் ஒன்றியமானது அதன் நெருக்கத்தை அவநம்பிக்கையுடன் பார்த்தது. 1991 ஆம் ஆண்டு இந்தியா தாராளமயத்தை துவக்கி வைக்கும் வரை வர்த்தகம், தொழில்நுட்பம், கல்வி ஆகியவற்றில் இந்தியா குறைந்த அளவிலே ஐரோப்பிய நாடுகளுடன் பொருளாதார உறவுகளில் ஈடுபட்டிருந்தது.

**ப்ரெக்சிட் (பிரிட்டன் வெளியேற்றம்)**

ஒரு மாதக்கால அமைதிப் பேச்சு வார்த்தைக்கு பிறகு, இங்கிலாந்தும் ஐரோப்பிய ஒன்றியமும் பிரசல்ஸ் உச்சிமாநாட்டில் பிரிட்டனின் வெளியேறும் முடிவினை ஏற்றுக்கொண்டன.

**ப்ரெச்சிட் என்றால் என்ன?**

❖ ப்ரெக்சிட் என்ற பதமானது "பிரிட்டன்" வெளியேறுவதைக் குறிப்பதற்கான வார்த்தையாகும்.
❖ ப்ரெக்சிட் என்பது இங்கிலாந்து (UK) ஆனது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து (EU)வெளியேறுவதாகும். இது 2016ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 23ஆம் தேதி நடைபெற்ற பொது வாக்கெடுப்பில் 51.9% வாக்குப்பதிவு, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கு சாதகமாக பதிவானது.
❖ லிஸ்பன் உடன்படிக்கையின் 50-வது சட்ட உறப்பானது, முன்வைத்த இரண்டு ஆண்டு காலக்கெடு நிகழ்வு முறை மார்ச் 29, 2019ஆம் ஆண்டு இங்கிலாந்து வெளியேறுவதுடன் முடிவடைகிறது.
❖ மார்ச் 21, 2019ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றிய சபை, இங்கிலாந்தின் கோரிக்கையை ஏற்று, வெளியேறும் கெடுவை ஏப்ரல் 12, 2019 வரை நீட்டிக்க ஒத்துக்கொண்டது.

1994ஆம் ஆண்டு இந்திய-ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் ஒத்துழைப்பு உடன்படிக்கை கையெழுத்தானது, இது இந்தியாவை உலகத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உறவை ஏற்படுத்திக் கொண்ட நாடு என்ற முதல் அடையாளத்தைப் பெற்றது. இந்திய-ஐரோப்பிய ஒன்றியத்தின் இறுக்கமற்ற பொருளாதார உறவு முடிவுக்கு வந்தது. எனினும், 2007ஆம் ஆண்டு முதல் தாராள வர்த்தக ஒப்பந்தத்திற்கு இந்தியா எடுத்து வரும் முயற்சிகளுக்கு 2013இல் முட்டுக்கட்டை ஏற்பட்டது. ஐரோப்பிய ஒன்றியமானது 2018-19 ஆம் ஆண்டு 104.3 பில்லியன் வர்த்தகத்துடன் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டணியாக இருந்தது, ஆனால் இப்போது முன்னேற்றம் கொண்டுள்ள உறவில் ஐரோப்பாவிலிருந்து பிரிட்டனின் வெளியேற்றமானது நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்திய-ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகளில் மற்றுமொரு சிக்கலானது, குடியேற்றம் மற்றும் இடம் பெயர்தல் ஆகியவற்றின் மீதான பொதுத் திட்டமாகும். சட்டத்திற்கு புறம்பான குடியேற்றம் மற்றும் குடிமக்கள் இடம் பெயர்வதை ஒழுங்குபடுத்துவது பற்றிக் கொருவதாகும்.

இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் வர்த்தகத்தைக் கடந்து சில பொதுவான நலன்களைக் கொண்டிருக்கின்றன. அவை பருவநிலை மாற்றத்தைத் தடுத்தல்,ஈரான் அணுக்கரு ஒப்பந்தத்தைப் பராமரித்தல், அணு ஆற்றல் கல்வி மற்றும் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பை உயர்த்தியது போன்றவை ஆகும். கூட்டாட்சி அமைப்பு முறையை கொண்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டாட்சி மக்களாட்சி அரசாங்க மாதிரி இந்தியா போன்ற பன்முக கலாச்சாரம் உடைய நாடுகளுக்கு ஒரு முன் மாதிரி ஆகும்.

**இந்திய-ஜப்பான் உறவுகள்**

**வரலாறு**

இந்திய-ஜப்பானுக்கிடையேயான உறவுகளில், ஆறாம் நூற்றாண்டிலே பௌத்த மதம் ஜப்பானை சென்று அடைந்ததிலிருந்து உறவுக்கு ஆதாரமாக இருந்தது. ஜப்பான் நாட்டை சேர்ந்த அறிஞர்கள் இந்தியாவில் உள்ள நாளந்தா பல்கலைக்கழகத்திற்கு தந்துள்ளனர், அதில் மிகவும் புகழ்பெற்றவர் ''டென்ஜிக்கு டோக்குபி'' என்ற பயணி ஆவார். இந்த ''டென்ஜிக்கு''(Tenjiku) என்பது இந்தியாவைக் குறிக்கும் சீன வார்த்தையாகும், இதன் பொருள் ''சொர்க்கத்தின் உறைவிடம்'' என்பதாகும். மிகவும் பழைமையான அரசியல் பரிவர்த்தனையானது, இந்தியாவில் இருந்த போர்ச்சுகீசிய காலனிக்கும் ஜப்பானுக்கும் இடையே நிறுவப்பட்டதாகும், குறிப்பாக கோவா மாநிலம் ஆகும்.

தற்காலத்தில், ஜப்பானோடு நெருங்கிய தொடர்புடைய முக்கியமான நபர்கள் சுவாமி விவேகானந்தர், குருதேவ் ரவீந்திரநாத் தாகூர், ஜே.ஆர்.டி. டாட்டா, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மற்றும் நீதிபதி ராதா பினோத் பால் ஆகியோர் ஆவர். இந்திய-ஜப்பான் கழகமானது 1903ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது, இதற்கு முன்பான அரசியல் பரிமாற்ற உறவு மெய்ஜி (Meiji) சகாப்தத்தின் போது (1868-1912) நிகழ்ந்தது. அது முதல் இரு நாடுகளும் சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார உறவுகளைக் பரிமாறிக் கொண்டிருக்கின்றன.

**சுதந்திரத்திற்கு பிறகான உறவுகள்**

இந்திய-ஜப்பான் இரு நாடுகளுக்கிடையிலான தூதரக உறவுகளானது இரண்டாம் உலகப் போருக்கு பிறகு, 1952ஆம் ஆண்டு இந்தியாவுடன் ஜப்பான் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கையுடன் தொடங்கியது. 1951ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு அழைப்பு விடுத்ததன் மூலம், தூதரக உறவை ஏற்படுத்திக் கொண்ட முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்த உறவுகள் ஜப்பான் பிரதமர் நோபுக்கே கிஷி மற்றும் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேருவும் பரஸ்பரம் பயணம் மேற்கொண்டதன் மூலம் மேலும் வலுவடைந்தது. இந்தியா ஜப்பானின் ''யென்'' கடன் உதவிப்பெறும் முதல் நாடானது மேலும், இந்தியாவிற்கு கடன் வழங்கும் மிகப்பெரிய நாடாக ஜப்பான் மாறியது. பல இந்திய அரசியல் மற்றும் பொருளாதார சிந்தனையாளர்கள் போருக்கு பின்னரான ஜப்பானின் பொருளாதார மறுகட்டுமானம் வெற்றிகரமாக நடந்திருப்பதை புகழ்ந்துள்ளனர், இந்தியாவும் இதனைப் பின்பற்றியது.

இந்த இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகள் பனிப்போர் காலத்தின்போது பின்படைவை சந்தித்தன. ஜப்பான் அமெரிக்காவுடன் அணி சேர்ந்துவிட்டதால், இந்தியா அணிசேராக் கொள்கையினை தேர்வு செய்து கொண்டது. மேலும், இந்த உறவுகளானது, 1962ஆம் ஆண்டு இந்தி-சீனப் போரின்போது நடுநிலை வகித்ததால் தடைக்கல்லாகிப் போனது. 1970-வது மற்றும் 1980ஆம் ஆண்டுகளில் ஜப்பானுடைய தென்கிழக்கு நாடுகளுடனான பொருளாதார செயற்பாடுகள் ஆழமடைந்தன. ஆசியா என்ற வரையறையின் வரம்பிற்குள்ளே இந்தியா விடப்பட்டது. இந்தியா செய்த அணுக்கரு சோதனையை அதன் அணு ஆயுதப் பரவல் நோக்கத்திற்கு அச்சுறுத்தல் என்பதாகவே கருதியது.

ஜப்பானிய பிரதமர் யோஷிரோ மோரி 2000ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வருகை தந்த பிறகு இரு தரப்பு உறவு மேம்படத் தொடங்கியது. சுதந்திரம் மற்றும் மக்களாட்சி விழுமியங்களை உலகெங்கும் பரப்புவதில் இரு நாடுகளும் இணைந்து செயல்படத் தொடங்கின. அமைப்பு ரீதியான பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்த இரு தரப்பு அதிகாரிகளை கொண்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. அதே போல் பொருளாதாரம், வர்த்தகம், நிதிச் சேவை, சுகாதாரம்,

சாலைப்போக்குவரத்து, கப்பல், கல்வி என்ற பல துறைகளிலும் ஒத்துழைக்க அதிகாரிகள் கொண்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

**பொருளாதார உறவுகள்**

இந்தியாவில் ஜப்பான் தனது உற்பத்தி நிறுவனங்களை நிறுவியவுடன் சோனி, யமஹா, ஹோண்டா, டொயோட்டா போன்றவையெல்லாம் வீடு தோறும் இருக்கக் கூடிய பொருள்கள் ஆயின. இந்தியாவின் கார் உற்பத்தி நிறுவனத்துடன் ஜப்பானின் சுசூகி நிறுவனம் இணைந்து மாருதி-சுசூகி எனும் இந்தியாவின் மிகப்பெரிய கார் உற்பத்தி நிறுவனம் தோன்றியது. இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டு முயற்சிக்கு, ஜப்பானின் ஆதரவானது ஆற்றல், போக்குவரத்து, சுற்றுச்சூழல் திட்டங்கள் மற்றும் மனிதனின் அடிப்படைத் தேவையுடன் தொடர்புடையவை போன்றவைகள் முக்கியமானவைகள் ஆகும்.

ஆகஸ்ட் 2000இல் பிரதமர் யோஷிரோ மோரியின் இந்தியா வருகை இந்திய-ஜப்பான் உறவை வலுப்படுத்துவதற்கான வேகத்தை அளித்தது. ஜப்பான் பிரதமர் மோரியும், இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயும்,"ஜப்பானுக்கும்-இந்தியாவுக்கும் இடையில் உலகளாவிய ஒத்துழைப்பு" நிறுவ முடிவு செய்தனர். ஏப்ரல் 2005இல் பிரதமர் ஜூனிச்சிரோ கொய்சுமியின் இந்தியா வருகைக்குப் பின்னர், இந்திய-ஜப்பான் ஆண்டு உச்சி மாநாடு கூட்டங்கள் அந்தந்த தலைநகரங்களில் நடத்தப்பட்டன. 2006 டிசம்பரில் பிரதமர் மன்மோகன் சிங் ஜப்பானக்கு வருகை புரிந்தபோது, இந்திய-ஜப்பான் உறவு "உலகளாவிய இராணுவம் சார்ந்த ஒத்துழைப்பு"க்கு உயர்த்தப்பட்டது.

**பாதுகாப்பு ஒத்துழைப்பு**

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் அக்டோபர் 2008ஆம் ஆண்டு ஜப்பானுக்கு அரசு முறை பயணமாக சென்றார். அங்கே இரு நாட்டு தலைவர்களும் இரு நாடுகளுக்கிடையே பாதுகாப்பு ஒத்தழைப்பிற்கான பிரகடனத்தை வெளியிட்டனர்.

2008ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பாதுகாப்பு ஒத்துழைப்பு மீதான உறுதிமொழியில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன. ஜப்பான் பாதுகாப்பு உறவு கொண்ட நாடுகளுள் இந்தியா மூன்றாவது நாடாகும், இதர நாடுகள் அமெரிக்காவும், ஆஸ்திரேலியாவும் ஆகும். இந்தியாவும் ஜப்பானும் தங்களது இரு தரப்பு உறவுகளை வலிமைப்படுத்திக் காட்டிக்கொள்ள ஆர்வமானது, உலக சமூகத்திற்கு நேர்மறையான தகவலை தந்தது. சீனாவின் வளர்ச்சியும் இப்பகுதியில் இந்தியாவும் ஜப்பானும் தங்களது உறவுகளை மறுசீரமைப்பு செய்வதற்கு ஒரு இன்றியமையாத காரணமாகும். பாதுகாப்பு பேச்சுவார்த்தையில் இந்தியாவையும் ஜப்பானுடன் சேர்த்துக் கொண்டது. அது இப்பொழுது எப்பொழுதும் இல்லாத வகையில் முக்கியத்துவம் கொண்டதாகிறது. பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள், ராணுவ அதிகாரிகள் வருகை, இரு நாடுகளும் கடல்வழி வர்த்தக பாதுகாப்பு (Maritime), தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை, அணு ஆயுத பரவல் எதிர்ப்பு நடவடிக்கை, பேரழிவு மேலாண்மை மற்றும் ஆற்றல் பாதுகாப்பு போன்ற விவகாரங்களில் ஈடுபடுவதில் செயற்பாடுகளைத் துவக்கின.

2014ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி அரசுமுறையிலான சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபேயுடன் ஒரு உச்சி மாநாட்டை நடத்தினார். இருவரும் இந்தியா ஜப்பான் உறவானது, சிறப்புமிக்க யுத்த தந்திர மற்றும் உலகளாவிய நட்புறவு எனும் நிலைக்கு உயர்த்த ஒத்துக்கொண்டார். அதைப்போல 2015ஆம் ஆண்டு ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே இந்தியாவிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார், பிரதமர் நரேந்திர மோடியுடன் ஒரு உச்சி மாநாட்டை நடத்தினார். இந்த இரண்டு பிரதமர்களும் ஜப்பான் இந்திய நட்புறவை மிகவும் ஆழம் கொண்டதாக, அகன்ற அடிப்படை கொண்டதாக மற்றும் செயல் அடிப்படையிலான உறவாக தீர்மானிக்க வேண்டும் என்று முடிவெடுத்தனர். இந்திய பசிபிக் மண்டலம் மற்றும் உலக அமைதி மற்றும் வளர்ச்சிக்கான ஜப்பான் மற்றும் இந்தியாவின் ஒத்துழைப்பு 2025-ஐ ஜப்பான் பிரதமரும், இந்திய பிரதமரும் கூட்டாக அறிவித்தனர்.

2016ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பிரதமர் நரேந்திர மோடி ஜப்பான் நாட்டிற்கு அரசு முறை பயணம் செய்து. பிரதமர் அபேயுடன் ஒரு உச்சி மாநாட்டை நடத்தினார். இது குறித்து பிரதமர் அபே கூறும்போது, இந்த உச்சி மாநாட்டு கூட்டமானது, இந்தியா ஜப்பான் உறவுகளில் கணிசமான அளவு மிகவும் அற்புதமானது என்றார், மேலும் தடையில்லா மற்றும் வெளிப்படையான இந்தியா,

பசுபிக் பகுதி யுத்த தந்தரம், கிழக்கு நோக்கிய செயற்பாடு போன்ற கொள்கைகளின் ஒருங்கிணைப்பின் விளைவாக, இரு நாடுகளும் இந்திய-பசிபிக் பகுதியில் வளமும், உறுதித்தன்மையும் ஏற்படும் என்று நம்பிக்கைத் தெரிவித்தார்.

**பொருளாதார உறவுகள்**

2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிரதமர் மோடியின் ஜப்பான் சுற்றுப்பயணத்தின்போது, 2019ஆம் ஆண்டிற்குள்ளாக, இந்தியாவில் ஜப்பானின் நேரடி முதலீடு மற்றும் கம்பெனிகளின் எண்ணிக்கையை இரண்டு மடங்காகவும் உயர்த்த ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொண்டு, மேலும் இருதரப்பிற்கும் உறவிலும் முழுமையான வெற்றி என்ற உறவை கட்டியமைக்க, மோடி பொருளாதாரம் மற்றும் அபிப் பொருளாதாரம் எனும் ஆற்றல் வழியாக செயல்படுவதெனும் இரு தலைவர்களும் ஒத்துக்கொண்டனர். மேலும் பிரதமர் ஷின்ஷோ அபே, அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் 3.5 டிரில்லியன் யென் அளவிற்கு பொதுத்துறை மற்றும் தனியார் நிதியளிப்பு மற்றும் பங்களிப்பு, இவற்றோடு அலுவலர் மேம்பாட்டு உதவி (Official Development Assistance) போன்றவற்றை நடைமுறைக்கு கொண்டு வர சிரமம் மேற்கொண்டார்.

ஜப்பான் இந்தியாவிடம் விதிமுறைகளை எளிமையாக்குதல் மற்றும் அமைப்பு உறுதித்தன்மை உள்ளிட்ட வியாபாரச் சூழலை எதிர்பார்த்தது. 2014ஆம் ஆண்டு இந்தியா ஜப்பான் நாட்டு நிறுவனங்கள் சந்தித்து வரும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக,"One Stop" எனப்படும் ஒரே இடத்தில் அனைத்தும் கிடைக்கும் படியான ஏற்பாட்டை செய்வதற்கு 'Japan Plus' என்ற அலுவலகத்தை மத்திய வணிகத்துறை அமைச்சகத்தில் ஏற்படுத்தியது. 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் டில்லி-மும்பை பெருவழித்தடம் (DMIC) மற்றும் சென்னை-பெங்களூரு பெருவழித்தடம் (CBIC) ஆகியவற்றைச் சுற்றி பதினொரு ஜப்பான் நிறுவனங்களைக் கொண்ட நகரங்களை நிறுவ ஜப்பானும் இந்தியாவும் ஏற்றுக்கொண்டன. மேலும் ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே, டிசம்பர் 2015 மற்றும் நவம்பர் 2016இல் ஜப்பான் தொழில் நகரத்திற்கான சிறப்பு ஊக்கத் தொகுப்பை அளிப்பதற்கான முடிவை இந்தியா விரைந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஜப்பான் பிரதமர் இந்தியாவிற்கு வருகை தந்தபொழுது "ஷன்கான்சென்" என்ற கட்டமைப்பை அறிமுகப்படுத்த இந்தியா முடிவெடுத்தது. ஜப்பானின் "ஷன்கான்சென்" அமைப்பு என்பது உலகளவில் இருக்கும் பாதுகாப்பு மற்றும் துல்லியம், என்ற வகையில் அதிவிரைவுக் கொண்ட ஜப்பானின் ரயில்வே போக்குவரத்து ஆகும். ஜப்பானும்-இந்தியாவும் 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இதற்கானப் பணிகளைத் தொடங்கி விட வேண்டும், கட்டுமானப் பணிகள் 2018இல் துவங்கும், ரயில்களின் இயக்கம் 2023 ஆம் ஆண்டில் துவங்கும் என்பதை உறுதிப்படுத்தின.

கடந்தப் பத்தாண்டுகளில், ஜப்பான் வழங்கும் அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவி பெரும் மிகப்பெரிய நாடு இந்தியா அலுவலர் மேம்பாட்டு உதவி என்பது ஜப்பான் நாடு வளரும் நாடுகளுக்கு அதிகாரப்பூர்வமாக வழங்கும் பொருளாதார நல மேம்பாட்டுத் திட்டமாகும். ஜப்பானின் ஒத்துழைப்பால் அலுவலர் மேம்பாட்டு உதவி பயன்பாட்டின் மூலம் மிகவும் வெற்றிகரமாக பயனடைந்த ஒரு உதாரணம் டெல்லி மெட்ரோ ரயில் சேவையாகும்.

இந்திய-ஜப்பான் இருதரப்பு வர்த்தகம் 2018ஆம் ஆண்டு 15.17 பில்லியன் டாலரை எட்டியது. இதே காலக்கட்டத்தில் ஜப்பானில் இருந்து இந்தியாவிற்கான ஏற்றுமதி 10.97 பில்லியன் டாலராக இருந்தது. இறக்குமதியானது 4.74 பில்லியன் டாலராக இருந்தது. இந்தியா ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களில் முதன்மையானது, பெட்ரோலியப் பொருள்கள், வேதிப்பொருள்கள், சேர்மங்கள், உலோகம் அல்லாத தாதுக்கள், மின் மற்றும் தயாரிப்பு பொருள்கள், உலோகத் தாதுக்கள் மற்றும் உலோகத் தாதுக்களின் எச்சங்கள் துணிஇழை, நெய்யப்பட்ட ஆடை மற்றும் இயந்திரத் தளவாடங்கள் போன்றவைகள் ஆகும், இந்தியா ஜப்பானிடம் இருந்து இறக்குமதி செய்து கொள்ளும் பொருள்களில் முதன்மையானது இயந்திரத் தளவாடங்கள், போக்குவரத்து சாதனங்கள், இரும்பு மற்றும் எ∴கு மின்னணு பொருள்கள், கரிம வேதிப்பொருள்கள், இயந்திரக் கருவிகள் போன்றவைகளாகும். ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜப்பான் நிறுவனங்கள் இந்தியாவில் பதிவு செய்து வைத்துள்ளன. ஜப்பானின் இந்தியாவில் நேரடி அன்னிய முதலீடானது தானியங்கி வாகனங்கள், மின்சாரக் கருவிகள், தொலைத்தொடர்பு, வேதிப்பொருள்கள் போன்றவை முதன்மையான துறைகளாகும்.

இந்தியாவில், உற்பத்தித் துறையில், மனித வள மேம்பாடு என்ற வகையில், உற்பத்திக்கான இந்திய-ஜப்பான் நிறுவனத்தின் (JIM) மூலம் அடுத்து பத்து ஆண்டுகளுக்கு 30,000 இந்தியருக்கு, இந்தியாவின் "திறன் இந்தியா" மற்றும் "இந்தியாவில் தயாரிப்பு" போன்ற தொழிற்துறையை அடிப்படையாக கொண்ட உற்பத்திக்கு இந்தியா மேற்கொண்டு வரும் துவக்கத்திற்கு, ஜப்பான் தன்னுடைய ஒத்துழைப்பை அறிவித்துள்ளது. அதே போல உற்பத்திக்கான இந்தி-ஜப்பான் நிறுவனம் மற்றும் "ஜப்பானியர்களால் வழங்கப்பட்ட பாடப்பிரிவுகள்"(JEC-Japanese Endowed Courses) என்ற பொறியியல் கல்லூரிகளில் வழங்கும் பாடத்திட்டத்தை, ஜப்பானிய நிறுவனங்களே இந்தியாவில் வடிவமைக்கும் என்பவையெல்லாம் அரச தறைக்கும், தனியார் துறைக்கும் இடையே உள்ள நல்ல ஒத்துழைப்பிற்கான உதாரணங்கள் ஆகும். 2017ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் உற்பத்திக்கான இந்திய-ஜப்பான் நிறுவனமானது, குஜராத், கர்நாடகா, ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகிய முதல் நான்கு மாநிலங்களில் துவங்கப்பட்டது. அதே போல "ஜப்பானியர்களால் வழங்கப்பட்ட பாடப் பிரிவுகள் ஆனது முதன் முறையாக ஆந்திர மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிறகு மேலும் நான்கு ஜப்பானியர்களால் வழங்கப்பட்ட பாடப்பிரிவுகள் மற்றும் இந்திய-ஜப்பான் நிறுவனம் நிறுவனங்களை தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனங்கள் யாவும் ஜப்பானிய மொழியை படிக்க ஆர்வமாக உள்ள நிறைய இந்திய மாணாக்கர்களுக்கு கற்றுக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இருத்தரப்பு உடன்படிக்கைகளும் மறறும் ஒப்பந்தங்களும்**

- அமைதி உடன்படிக்கை (1952)
- வான்வழி சேவைக்கான ஒப்பந்தம் (1956)
- கலாச்சார ஒப்பந்தம் (1957)
- வணிக ஒப்பந்தம் (1958)
- இரட்டை வரிவிதிப்பு நடவடிக்கைக் கூட்டம் (1960)
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் துறையில் ஒத்துழைப்பு ஒப்பந்தம் (1985)
- இந்திய-ஜப்பான் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் (2011)
- இந்திய-ஜப்பான் இடையேயான சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் (2012) மற்றும் (2016)
- ஜப்பான் அரசாங்கம் மற்றும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கு இடையேயான ராணுவத் தளவாட மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் தொடர்புடைய ஒப்பந்தம் (2015) மற்றும் வகைப்படுத்தப்பட்ட ராணுவத் தகவல்களைப் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தம் (2015)
- ஜப்பான் மற்றும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கிடையே அணுக்கரு ஆற்றலை அதிதி பயன்பாட்டினை பயன்படுத்த ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தம்.

**கலாச்சார உறவுகள்**

2012ஆம் ஆண்டு இந்திய-ஜப்பான் இடையேயான தூதரக உறவு நிறுவப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவு செய்வதை குறிக்கிறது. இந்தி-ஜப்பான், இரு நாடுகளுக்கு இடையே பரஸ்பர உறவை மேம்படுத்த "ஏழுச்சிப்பெறும் ஜப்பான், துடிப்பான இந்தியா; புதிய கண்ணோட்டமும், புதிய பரிமாற்றமும்," என்ற கருத்தின் அடிப்படையில் கலாச்சார நிகழ்வுகள் நடைபெற்றன.

2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரதமர் மோடி, ஜப்பானுக்கு சுற்றுப்பயணம் செய்தபோது, இரு நாட்டுப் பிரதமர்களும் 2017 ஆம் ஆண்டு, இந்திய-ஜப்பான், மக்களுக்கிடையேயான நட்புறவை மேலும் பரிமாறிக் கொள்வதற்கான அடையாளமாக கொள்ள ஏற்றுக் கொண்டவர். கலாச்சார உடன்படிக்கை 1957இல் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் 2017ஆம் ஆண்டு கலாச்சார உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து 60 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கிறது. இரு நாடுகளிலும் பல்வேறு கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

## இந்திய-ஆப்பிரிக்கா உறவுகள்
### அறிமுகம்

ஆசியாவும் ஆப்பிரிக்காவும் மிகவும் தொன்மையான நாகரிகங்களுக்குத் தாய் வீடாகும். கடந்த 1000 ஆண்டுகளாக இன்றியமையாத வர்த்தகம், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் அரசியல் பரிமாற்றங்களைக் கொண்டிருக்கின்றன. வர்த்தகத்தில் செதுக்கிய மணிகள், பருத்தி, சுட்ட மண்பாண்டங்கள், தங்கம் போன்ற பொருள்கள் அடங்கும். கி.மு.(பொ.ஆ.மு) 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே தொன்மையான பரிவர்த்தனைகளான உணவுப்பயிர்கள் மற்றும் கால்நடைகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன. இத்தகைய தொன்மையான வர்த்தகம் பற்றிய எழுதப்பட்டக் குறிப்புகள்,"எழுத்திரியக் கடற்பயணம்" என்று அழைக்கப்படும் "பைஸான்டைன் தினசரி குறிப்பு புத்தகம்" கொண்டிருக்கிறது. அதனை தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் மேற்கண்ட இரண்டு பகுதிகளின் நலன்களும், பரந்தும் விரிந்தும் இருந்தன.

ஆப்பிரிக்கா அமைப்பில் உள்ள நாடுகளின் பட்டியல்
அல்ஜீரியா, அங்கோலா, பெனின், போஸ்ட்வானா, பர்கினா பாஸோ, புருண்டி, கேப் எவர்டி தீவுகள், கேமரூன், மத்திய ஆப்பிரிக்கா குடியரசு, சாட், கமோராஸ், காங்கோ, ஐவோரி கோஸ்ட், டிஜிபோட்டி, காங்கோ, ஐவோரி கோஸ்ட், டிஜிபோட்டி, காங்கோ ஜனநாயக குடியரசு, எகிப்து, மத்திய கினி, எரித்ரியா, எத்தியோப்பியா, கர்பான், காம்பியா, கானா, கினி, கினி-பிசாவு, கென்யா, லெசோதோ, லைபிரியா, லிபியா, மடகாஸ்கர், மலாவி, மாலி, மவுரித்தேனியா, மொரிஷியஸ், மொராக்கோ, மொசாம்பிக், நமீபியா, நைஜர், நைஜீரியா, ருவான்டா, சாவோ டோம் மற்றும் பிரின்சிபா, சினேகல், செசல்ஸ், சியாரா லியோன், சோமாலியா, தென் ஆப்பிரிக்கா, தெற்கு சூடான், சூடான், சுவாசிலாந்து, தான்சானியா, டோகோ, துனிசியா, உகாண்டா, ஜாம்பியா, ஜிம்பாப்வே.

### போருக்கு பிந்தைய சகாப்தம்

இந்தியாவின் சுதந்திரம் 1947ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது என்று நம் எல்லோருக்கும் தெரியும். அதேபோல பெரும்பாலான ஆப்பிரிக்கா நாடுகளும் ஐரோப்பாவின் செல்வாக்கில் இருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தன. அந்த வகையில், 1857ஆம் ஆண்டு அமெரிக்காவிடமிருந்து சுதந்திரம் பெற்ற முதல் ஆப்பிரிக்கா நாடு லைபீரியா ஆகும். அதே போல, 1909-ஆம் ஆண்டு முதல் ஆப்பிரிக்கா உள்நாட்டு கக்காசியர்களின் ஆட்சி மற்றும் நிறவெறி இவற்றாலேயே ஐக்கிய அரசிடம் இருந்து உறவுகளை முறித்துக் கொள்ள முடிந்தது. காலனிய எஜமானர்களிடமிருந்தும், கடைசியாக 1977ஆம் ஆண்டு பிரான்சிடம் இருந்து விடுதலையடைந்த ஆப்பிரிக்கா நாடு டிஜிபௌட்டி ஆகும். அதே ஆண்டில் சுதந்திரம் பெற்றும், ஷராவி குடியரசு இன்றும் ஸ்பெயின் மற்றும் மொரொக்கோ ஆகியவற்றின் கைகளுக்குள்ளேயே இருக்கின்றது.

இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டதிலிருந்தது, பல்வேறு பன்முக சர்வதேச அமைப்புகளில், ஆப்பிரிக்காவின் விடுதலைக்கு தன்னுடைய குரலை வலுவாக எடுத்து வைத்தது. இனவெறி போராட்டம் மற்றும் காலனி நீக்கம் போன்றவை, இந்திய ஆப்பிரிக்கா உறவுகள் மேம்படுவதற்கு காரணியாக இருந்தது.

### அணிசேரா இயக்கமும் ஆப்பிரிக்காவும்

அணிசேரா இயக்கம் எனும் கருத்தாக்கமானது, அமெரிக்கா சோவியத் ஒன்றியம் என்ற இரு வல்லரசு தொகுதிகள் பனிப்போர் காலகட்டத்தில் உருவானதன் காரணமாக தோன்றியதாகும். மூன்றாம் உலகப்போரினைத் தடுக்கும் பொருட்டு, புதியதாக காலனி ஆதிக்கத்தில் இருந்து நீக்கம் பெற்ற ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றவை, இருதுருவ வல்லரசுகள் மேற்கொள்ளும் ஆயுதக் குவிப்பில் பங்கேற்பதை மறுத்து நடுநிலை வகிப்பதாக அறிவித்தன. இந்த நிகழ்வினை உருவாக்கியதில் இந்தியாவுடன் அன்றைய எகிப்து மற்றும் கானா நாட்டு அரசு தலைவர்கள் மற்றும் யுகோஸ்லாவியா மற்றும் இந்தோனேஷியாவைச் சேர்ந்த அரசு தலைவர்களும் ஈடுபட்டனர்.

மேலும் அணிசேரா இயக்கம், காலனி எதிர்ப்புக் கூட்டணியாகும், இது போர் நடத்தும் வளம் பெற்ற நாடுகளுடன் சேர்வதை தடுத்து தங்கள் நாடுகள் பின்னடைவை சந்திப்பதை தடுப்பதற்காகவும் துவங்கப்பட்டது. ஆப்பிரிக்க காலனிகளின் உறைவிடங்களாக இருப்பதால், காலனிய சக்திகளை

எதிர்த்து பெரும் எழுச்சியுடன் நடத்தி அதில் பெரும் வெற்றியும் பெற்றன. அந்த கண்டத்தில் அமைப்புரீதியான நிறவெறி மற்றும் அடிமைத்தனம் ஆகியவை நொறுக்கிப்போட எடுத்துக்கொண்ட ஆண்டுகளில்,Dr.நிக்குருமாவுடன் இதர அணிசேரா இயக்கத்தினை உருவாக்கிய பிறத்தலைவர்களும், இனவெறி பாகுபாட்டை எதிர்த்தும், அணிசேரா இயக்கத்தின் கோட்பாடுகளை பாதுகாத்தும் வந்ததில் ஆப்பிரிக்கா எப்பொழுதும் முதலாவதாகும் என்று பறை சாற்றினர். 1970 ஆம் ஆண்டுகளில் நேருவுக்கு பிறகான இந்தியாவானது ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் இனவெறிக்கு எதிரான உலக கண்ணோட்டத்தை முன்னுக்கு எடுத்துச் சென்றது.

**ஆப்பிரிக்காவில் வெளிநாடுவாழ் இந்தியர்கள்**

டயாஸ்போரா எனப்படும் புலம் பெயர்ந்த (அ) வெளிநாடு வாழ்வோர் என்பது, ஒரு குறிப்பான இனப் பின்னணியை கொண்டோர், தங்களுடைய சொந்த மண்ணைவிட்டு வெகு தொலைவு சென்று ஒரு சமூகத்தை ஏற்படுத்திக் கொள்வதைக் குறிக்கும் வார்த்தையாகும். இந்திய-ஆப்பிரிக்கா இடையேயான பல நூற்றாண்டு கால காலனிய வரலாற்றைப் பகிர்ந்து கொண்டது, அவர்களை (இரு பிரதேசங்களும்) நெருக்கமாக நெருங்கி வர செய்தது. ஆங்கிலேயர்கள் பல இந்திய தொழிலாளர்களைச் சர்க்கரை இரப்பர் மற்றும் பணப்பயிர்களை விளைவிப்பதற்காக, ஆப்பிரிக்க-கரீபியன் தீவுகளுக்கும், மலேசியா மற்றும் இலங்கைக்கும் கப்பலில் ஏற்றி அனுப்பினர். காலனி காலத்தில் மட்டும் 7,69,437 இந்தியர்கள் மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா, ரீயூனியன் தீவுகள்(Reunion Islands), செஷல்ஸ் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கா பகுதிகளுக்கு குடியேறினர். தற்சமயம், தென் ஆப்பிரிக்காவில் இருக்கும் டர்பன் நகரம் 13 இலட்சம் இந்தியர்களின் வீடாகிப்போனது. இதுதான் இந்தியாவிற்கு வெளியே இருக்கும் மிகப்பெரிய இந்திய நகரமாகும். இதனை தொடர்ந்து மொரீசியஸ் மற்றும் ரீயூனியன் தீவுகள் இந்த வரிசையில் வருகின்றன.

**நடப்பு சூழ்நிலை**
**இந்திய-ஆப்பிரிக்கா மன்றங்களின் உச்சிமாநாடு**

இந்திய-ஆப்பிரிக்கா மன்றங்களின் உச்சிமாநாடு என்பது, 2008ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும். இது, ஆப்பிரிக்கா அரசுகளுடன் இந்தியா அதிகாரப்பூர்வமாக உறவை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு தளமாகும். இந்த இந்திய-ஆப்பிரிக்கா மன்றங்களின் உச்சி மாநாடு அமைப்பு தனது பரப்பு எல்லைக்குள், வேளாண்மை, வர்த்தகம், தொழில்கள் மற்றும் முதலீடு, அமைதி மற்றும் பாதுகாப்பு, நல்லாட்சி மேம்பாடு மற்றும் குடிமைச்சமூகம், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் போன்றவை ஆகியவற்றின் சிக்கல்களைத் தீர்ப்பதில் தொடர்பான ஒத்துழைப்பு வைத்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக, இந்திய-ஆப்பிரிக்கா உறவுகள் ஈடுபாடு பெருமளவு அதிகரித்துள்ளது. வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம் என்ற வகையில் இந்தியா, ஆற்றல் வளங்களின் தேவையானது, ஆப்பிரிக்கா உடனான அதன் புதிய கோணத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை அதிகரிப்பதை பற்றி பார்க்கும்போது, பெரும்பாலான ஆப்பிரிக்கா நாடுகள், அமெரிக்காவை முழுவதுமாக ராணுவ மயமாகிப் போன நாடாகவும் மற்றும் சீனாவை முதன்மையான வர்த்தக சக்தியாகவும் பார்க்கின்றன. இதற்கு காரணம் அமெரிக்கா முழுவதுமாக ராணுவமயமாகி வருவதும், சீனா வர்த்தக சக்தியாகி வருவதும் ஆகும். ஆப்பிரிக்காவிற்கு இந்தியா ஏற்றுமதி செய்யும் கலாச்சாரப் பொருள் சினிமா ஆகும். நைஜீரியா போன்ற நாடுகளில் இந்தியர்கள் குறைவாக இருந்தாலும் இந்திய திரைப்படங்களுக்கு வரவேற்புள்ள நாடாகும். இந்தியாவும் அமெரிக்காவும் தங்களுக்கு இடையே இருக்கும் வர்த்தகத் தடைகளை குறைக்க வேண்டும், மற்றும் இளைஞர்களுக்கு "திறன்" மாற்றம் செய்தல், அதே நேரத்தில் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை ஊக்குவித்தல் மற்றும் "எண்ணிக்கை" இடைவெளியை இணைத்தல் போன்ற விவகாரங்களில் இந்தியா, ஆப்பிரிக்கா தங்களை ஈடுபடுத்திக் கொண்டன.

**ஆசிய-ஆப்பிரிக்கா வளர்ச்சி பெரு வழித்தடம்**

ஆசிய-ஆப்பிரிக்கா வளர்ச்சி பெரு வழித்தடம் என்பது, ஆசிய-ஆப்பிரிக்காவின் சமூக பொருளாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு, இந்திய-ஜப்பான் இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தமாகும். இந்த ஆசிய-ஆப்பிரிக்கா வளர்ச்சி பெரு வழித்தடத்திற்கான பார்வை

பற்றிய ஆவணத்தை, 2017ஆம் ஆண்டு ஆப்பிரிக்கா வளர்ச்சி வங்கி கூட்டத்தில் இந்தியா வெளியிட்டது. இந்த ஆசிய-ஆப்பிரிக்கா வளர்ச்சி பெரு வழித்தடத்தின் நோக்கமானது, இந்திய ஜப்பான் இணைப்பின் மூலம் ஆப்பிரிக்காவின் உள்கட்டமைப்பு மற்றும் எண்முறை அடிப்படையிலான தொடர்பை வளர்த்தெடுத்தல் என்பனவாகும். இது சீனாவின் நீண்ட நெடு வழி மற்றும் பட்டு சாலை முன்னெடுப்புக்கு (Belt and Road Initiative) இந்தியா ஜப்பானின் எதிர் நடவடிக்கை என்று பார்க்கப்படுகிறது. இந்த ஆசிய ஆப்பிரிக்கா வளர்ச்சி பெரு வழித்தடத்தின் நான்கு தூண்களாக பின் வருபவைக் கருதப்படுகின்றன.

1. கொள்திறன் மற்றும் செயல் திறன் ஆகியவற்றை உயர்த்துதல்.
2. தரமான உள்கட்டமைப்பு மற்றும் நிறுவன ரீதியான இணைப்பு நடவடிக்கை.
3. மேம்பாடு மற்றும் ஒத்துழைப்பு திட்டங்கள்.
4. மக்களுக்கிடையேயான ஒத்துழைப்பு.

**இந்திய-இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுடனான உறவுகள்**

**பின்னணி**

இந்திய-இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்கு இடையேயான உறவுகளானது, நீண்ட காலமாக பெருமளவு முன்னிலைப்படுத்தாமல் இருந்தன. இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடையே இருந்த புவியியல் சார்ந்த இடைவெளி மற்றும் யுத்த தந்திர ரீதியாகவும், பொருளாதார உறவு ரீதியாகவும் கட்டாயம் என்று உயிர்ப்பான வேகத்துடன் இருதரப்பு உறவுகளை கட்டவில்லை. இருந்தபோதிலும், இந்தியா மற்றும் இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் சுமுகமான ஒரு வரலாற்று உறவைப் பராமரித்து வந்தன.

இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் இந்தியாவுடன் காலனிய எதிர்ப்பு என்ற மனநிலையை கொண்டிருந்தன. அவற்றுள் பல நாடுகள் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே (பத்தொன்பதாம் நூற்றாண்டு) சுதந்திரம் அடைந்துவிட்டன. இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளில் உள்ள சமூகங்கள் யாவும், ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் உள்ளது போன்று தொன்மையான மற்றும் வளமான நாகரிகத்தைக் கொண்டிருக்கின்றன. எனவே ஒருவர், இந்தியா மற்றும் இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்கு இடையே உள்ள பகுதிகளில் கலாச்சார ரீதியாக ஒருமைத் தன்மை கொண்ட நடவடிக்கைகள் இருப்பதை காணமுடியும். சூரினாம் மற்றும் கயானா போன்ற லெத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளும் கணிசமான அளவிற்கு இந்திய வம்சாவழியினரைக் கொண்டதாக இருக்கிறது. இவர்கள் யாவரும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாக, காலனி ஆதிக்க சக்திகளால் கூலிகளாக அனுப்பப்பட்டவர்கள் ஆவர். இதுவே, இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுடன் இந்தியா கொண்டிருக்கும் உறவின் அடிப்படையாகும்.

**இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் அமைப்பில் உள்ள நாடுகளின் பட்டியல் - 40**

- இலத்தீன் அமெரிக்கா என்பது பொதுவாக தென் அமெரிக்க கண்டத்தில் அமைந்துள்ள அனைத்து நாடுகள் மற்றும் இதன் கூட மெக்சிகோ, மத்திய அமெரிக்கா, மற்றும் கரீபியன் தீவுகள் ஆகியவை கொண்டவை என்று புரிந்து கொள்ளப்பட்டன.
- அர்ஜென்டினா, பொலிவியா, பிரேசில், சிலி, கொலம்பியா, கோஸ்டோரிகா, கியூபா, டொமினிகன் குடியரசு,ஈகுவடார், எல் சல்வடோர், பிரெஞ்சு, கயானா, காடியோப், கௌத்தமாலா, ஹைதி, ஹோன்டுராஸ், மெக்சிகோ, நிக்காரகுவோ, பனாமா, பராகுவே, பெரு பியூர்டோரிக்கோ, செயிண்ட் பார்தலோமி, செயிண்ட் மார்டின், செயிண்ட்பியரி, மிக்கியூலான், உருகுவே மற்றும் வெனிசுலா போன்றவைகளும்.
- **கரீபியன் நாடுகள் :** ஆன்டிகுவா மற்றும் பெர்முடா, பகாமாஸ், பார்படாஸ், கியூபா, டொமினிகா, டொமினிக்கன் குடியரசு, கிரேனடா, ஹைதி, ஜமைக்கா, செயின்ட் கீட்ஸ் மற்றும் நெவீஸ், செயின்ட்லூசியா, செயின்ட் வின்சன்ட் மற்றும் கிரெனாடின்ஸ், டிரினிடாட் மற்றும் டொபாகோ போன்றவைகள் ஆகும்.

## சுதந்திரத்திற்கு பிந்தைய உறவுகள்

### 1947 முதல் 1991 வரை

இந்தியாவின் சுதந்திரத்திற்கு பிறகு இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுடனான இந்தியா கொண்ட செயற்பாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பொது அவையிலும், பல சர்வதேச சிக்கல்கள் மீதான விவகாரங்களில் மற்றும் அணிசேரா இயக்கத்திலும் அளவானதாகவே இருந்தது. இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் என்பது, 1961ஆம் ஆண்டு நேரு மெக்சிகோ பயணம் மேற்கொண்டது, இந்திராகாந்தி 1968ஆம் ஆண்டு எட்டு இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்ட காலங்கள் கூட மிகவும் சொற்பமானதாகும். மேலும், இக்காலக்கட்டத்தில், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் யாவும் ஏதேச்சதிகார ஆட்சியால் துயரப்பட்டு வந்தது. அவைகள் பனிப்போருக்கான அரங்கமாக மாறின. மற்றொரு பக்கம், 1991 ஆம் ஆண்டு வரை சோசலிச பொருளாதாரமாக இருந்தவரை, இந்திய இலத்தீன் அமெரிக்கா கரீபியன் நாடுகளுடன் பொருளாதார உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இந்த காரணிகளும், புவியியல் ரீதியான நெருக்கமும் இந்திய-இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுடனான ஆழமான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதில் தூரத்தில் அமைந்திருக்கும் கண்டத்துடன் தொடர்புகள் இல்லாததால் இலத்தீன் அமெரிக்கா சுணக்கம் காணப்பட்டது.

### 1991-தற்போது

இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் 1980 மற்றும் 1990ஆம் ஆண்டுகளில் சர்வாதிகார ஆட்சி இருந்து மக்களாட்சி நிகழ்வு முறைக்கான அரசியல் மாறுதலானது தொடங்கியது. இப்பகுதியில் மக்களாட்சியின் வருகையுடன், அவர்களின் கவனக் குவிப்பானது, பொருளாதார அடிப்படைகள், மண்டலப் பகுதிகளின் இணைப்பு மற்றும் சமவாய்ப்பு கொண்ட வளர்ச்சி என்பதை நோக்கி இருந்தது. இந்தியாவின் பொருளாதார சீர்திருத்தம் மற்றும் 1991இல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி ஆகியவை இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுடன் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதும் அவசியமாகியது.

1990ஆம் ஆண்டுகளுக்கு முன்பாக, புறக்கணிக்கத்தக்க அளவிற்கு மிகவும் சொற்பமான ஒரு சில மில்லியன் அமெரிக்க டாலருக்கு குறைவாக இருந்த இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுடனான வர்த்தகமானது, 2017-18ஆம் ஆண்டில் 30பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடையதாக மாறியது. இந்தியாவில் இருந்து பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்கள் போன்றவை இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் முதலீடுகள் செய்தன. இது அடுத்து வரும் ஆண்டுகளில் வர்த்தகம் வளர்ச்சி பெறுவதற்கு பங்களித்தது.

2006 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய இரு நாடுகளையும் உறுப்பாக கொண்டு (BRIC- பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா (பிரிக்ஸ்) எனப்படும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இது, இந்திய-இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளோடு ஊக்கத்துடன் செயல்பட பாலமாக அமைந்தது. உலகத்தின் எழுச்சி பெற்று வரும் இந்த நாடுகளின் ஒத்துழைப்பானது, பெருமளவு இந்திய-இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்கு இடையே பொருளாதார மற்றும் கலாச்சார மாற்றங்களை எற்படுத்த வசதியாக அமைந்தது. 2014 ஆம் ஆண்டு பிரேசிலில் நடந்த உச்சி மாநாடு, இந்தியாவை மற்ற இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளோடு பேச்சுவார்த்தை நடத்த வகை செய்தது.

ஏறத்தாழ 620 மில்லியன் மக்கள்தொகை மற்றும் வளங்கள் அதிகம் கொண்ட நிலமான இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள், இந்தியாவிற்கு உலகளாவிய அளவில் தனது தடத்தைப் பதிப்பதற்கு பெரும் வாய்ப்புகளைத் தருகிறது. தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்துநுட்பங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களால் புவியியல் இடைவெளிகள் குறைக்கப்பட்டு இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளின் பகுதிகளுடன் இந்தியா நெருங்கிய உறவு கொள்ள வழி ஏற்பட்டுள்ளது. இந்திய-இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன்

நாடுகளுடனான வரலாற்று ரீதியிலான நட்பறவானது, 21ஆம் நூற்றாண்டில் மேலும் மேம்படுவதற்கு அடித்தளமாக உள்ளது.

**இந்திய மற்றும் மண்டல அமைப்புகள்**

**சார்க் அமைப்பு (தெற்காசிய நாடு மண்டல ஒத்துழைப்பு அமைப்பு –SAARC)**

சார்க் அமைப்பானது 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எட்டாம் தேதி, டாக்கா நகரில் சார்க் சாசனச் சட்டத்தில் கையெழுத்திட்டதின் மூலம் நிறுவப்பட்டது. சார்க் அமைப்பானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாடு, மக்கள் நலன் மற்றும் தெற்காசிய வரலாற்று மற்றும் பண்பாட்டு தொடர்பை வளர்த்தெடுக்க உருவாக்கப்பட்டது.

சார்க் அமைப்பு எட்டு நாடுகளை உறுப்பினர்களாக கொண்டது. அவை ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூடான், நேபாளம், இந்தியா, மாலத்தீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகும். இந்த அமைப்பின் செயலகம் ஆனது 1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் நாள் காத்மண்டு நகரில் நிறுவப்பட்டது.

இந்த அமைப்பின் நோக்கங்கள், சார்க் சாசனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் மிக முக்கியமாக கவனம் செலுத்தும் பகுதிகளானது.

- ❖ தெற்காசிய மக்களின் நலன்களை வளர்த்தெடுத்தல் மற்றும் அவர்களின் தரமான வாழ்வை உயர்த்துதல்.
- ❖ இந்த மண்டலத்தில் பொருளாதார வளர்ச்சியை, சமூக முன்னேற்றம் மற்றும் கலாச்சார மேம்பாட்டை முடுக்கி விடுதல் மற்றும் ஒவ்வொரு தனிநபருக்கும் கண்ணியத்துடன் வாழவும் மற்றும் அவர்களின் முழுமையான ஆற்றலை உணரவும் வாய்ப்பளிப்பது.
- ❖ தெற்காசிய நாடுகளுக்கு இடையே கூட்டு சுயநம்பிக்கை வளர்த்தெடுப்பதும் வலிமைப்படுத்துவதும்.
- ❖ பரஸ்பர நம்பிக்கைக்கு பங்களிப்பது, ஒருவருடைய பிரச்சனைகளை ஒருவர் புரிந்து கொள்வது, மதிப்பளிப்பது.
- ❖ செயலாக்கமிக்க கூட்டு இணைவை வளர்த்தெடுத்தல் மற்றும் பொருளாதார, சமூக, கலாச்சார, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தளத்தில் பரஸ்பர உதவிகள்.
- ❖ சர்வதேச அரங்குகளில் பொதுவான நலன்களால் தங்களுக்குள்ளாக ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்
- ❖ அதே நோக்கங்களுடன், சர்வதேச மற்றும் மண்டல அளவிலான அமைப்புகளுடன் ஒத்துழைப்பை உருவாக்குதல்.

அமைப்பு வடிவத்தில் சார்க் அமைப்பானது நான்கு அடுக்கு நிறுவனத்தை கொண்டிருக்கிறது. அதில் உச்சி மாநாடுகளும் அதில் அனைத்து தெற்காசிய நாடுகளின் தலைவர்களும் உறுப்பினர்கள் ஆவர். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்கள் சந்திப்பர், அமைச்சரவை குழுவில் வெளியுறவு அமைச்சர்கள் இருப்பார்கள் சார்க் நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்கள் நிலைக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பர். தொழில்நுட்பக் குழு உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் இருப்பர். இந்த ஒருங்கிணைப்பு குழுவானது, ஒவ்வொருவருடைய குறிப்பான ஒத்துழைப்பு விவகாரங்களிலும், திட்டங்களை ஒருங்கிணைப்பது, நடைமுறைப்படுத்துவது மற்றும் கண்காணிப்பது என்பது அதன் பொறுப்பாகும். இப்பொழுது வரை 18 உச்சி மாநாடுகள் உறுப்பு நாடுகளால் நடத்தப்பட்டுள்ளன.

தெற்காசியா பகுதிகளில் வளர்ந்து கொண்டிருக்கும் பொருளாதார நிலைமைகளில், சார்க் உறுப்பினர் நாடுகள், தெற்காசிய தடையில்லா வர்த்தக பகுதிகளாக உருவாக்கிக் கொண்டது. இந்த ஒப்பந்தம் 2006ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. 1993ஆம் ஆண்டு சார்க் நாடுகளின் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்திற்கு அடுத்த தொடர்ச்சியாகும். மேலும், தெற்காசிய தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தின் முதன்மையான நோக்கமானது, தெற்காசிய பகுதியில் உள்ள வளரும் நாடுகளுக்கு சிறப்பான மற்றும் சார்பு தன்மையுடன் நடத்த வேண்டியது அவசியம் என்பதை அங்கீகரிக்க வேண்டும் மற்றும் இப்பகுதி அனைத்தும் வளர்ச்சி பெறுவதற்கான கொள்கைகளை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

**நான்கு தரப்பு பாதுகாப்பு பேச்சுவார்த்தை (QUAD)**

- இந்தோ-பசிபிக் பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்கொள்வதற்காக, இந்தியா, அமெரிக்கா, மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அமைப்புசாரா வழிமுறை மூலம் இணைத்து கூட்டாக செயல்படுவது என விளக்கமளிக்கப்படுவது.
- இந்த நான்கு தரப்பு பாதுகாப்பு பேச்சுவார்த்தை "குவாட்"(QUAD) எனும் கருத்தானது உண்மையில் ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபேயைச் சாரும்.
- இது 2007 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது மற்றும் 2017ஆம் ஆண்டில் மறு ஆய்வு செய்யப்பட்டது.

**தேன்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு(ASEAN)**

இந்த ஆசியான் அமைப்பு 1967ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ஆம் தேதி தாய்லாந்து நாட்டின் பாங்காக் நகரத்தில் நிறுவப்பட்டது. ஆசியான் அமைப்பு கையெழுத்திடப்பட்டு புகழ்பெற்ற பாங்காக் பிரகடனம் என்று அழைக்கப்பட்டது. இதன் நிறுவன தலைவர்களாக இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து போன்றவை உள்ளன. ஆசியான் அமைப்பில் தற்போது பத்து உறுப்பு நாடுகள் உள்ளன. அவைகள் முறையே புருனே தருசாலம் 1984ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் நாளும், வியட்நாம் 1995 ஆம் ஆண்டு ஜூலை 28ஆம் நாளும், லாவோஸ் மற்றும் மியான்மர் ஆகியவை 1997ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் நாளும், கம்போடியா 1999ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதியும் இணைந்துகொண்டன. ஆசியான் அமைப்பானது கிட்டத்தட்ட ஆரம்பத்தில் பத்து உறுப்பினர் நாடுகளை கொண்டிருக்கும் அமைப்பாகும். கிழக்காசிய பகுதியில் மண்டல பொருளாதார ஒத்துழைப்பை ஒருங்கிணைக்கும் அமைப்பாகும். இந்த அமைப்பு கிழக்காசியாவில் பல்வேறு பொருளாதார ஒத்துழைப்பிற்கான துவக்கத்தை ஏற்படுத்தியதற்கும் பொறுப்பாகும்.

அவை;

- ஆசியான் தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் (AFTA)
- ஆசியான் சேவைப் பணிகளுக்கான கட்டமைப்பு ஒப்பந்தம் (AFAS)
- ஆசியான் முதலீட்டு பகுதி (AIA)

இதன் உறுப்புகளான கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியாவின் நட்புறவானது நூற்றாண்டு காலமாக தொடர்ந்தவர்களானது தற்காலத்தில் அதனுடனான உறவானது 1990-களில் தொடங்கியது. இந்த புதிய துவக்கத்தை ஆண்டுகளில், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனான பொருளாதார உறவை தன்னுடைய "கிழக்கு நோக்கி கொள்கை" அடிப்படையிலிருந்து தொடங்கியதாகும். இதற்கிடையே சீனா மற்றும் இதர மேற்கு உலக நாடுகள் மற்றும் பிற ஆசிய நாடுகளும், இந்தியா ஆசியாவின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடு எனவும், அது மண்டல அளவில் தோற்றம் பெற்றுவரும் சக்தி எனவும், உணரத் தொடங்கின. இந்த புரிதலானது 1992ஆம் ஆண்டுகளில் அதன் முழுமையான பேச்சு நடத்தும் அளவிற்கு உரிய கூட்டாளியாகவும் ஆக்கியது. "கிழக்கு நோக்கி கொள்கையானது" வளர்ச்சி அடைந்து செயல்திட்டம் சார்ந்த "கிழக்கு நோக்கி செயல்பாடு" என்பதாக பெயர் மாற்றமடைந்தது.

பன்னிரண்டாவது ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டின் போதும்,நவம்பர் 2014இல், மியான்மரின் நேபைடா- நகரில் நடைபெற்ற கிழக்கு நோக்கி செயல்பாடு" என்ற கொள்கையை முறையாகத் தெளிவாக விளக்கினார். இந்தியாவுக்கும் ஆசியானுக்கும் உடனான உறவானது, இந்தியாவின் வெளியுறவு கொள்கையின் ஒரு முக்கிய தூணாக இருக்கிறது மற்றும் "கிழக்கு நோக்கி செயல்பாடு" (AEP) எனும் கொள்கையின் ஒரு அடித்தளமாக இருக்கிறது.

**ஆசிய மறு உறுதி துவக்கச் சட்டம் (ARIA)**

- இதன் நோக்கம் இந்திய-பசிபிக் பகுதியில் அமெரிக்காவின் ராணுவ பாதுகாப்பு, இதன் பொருளாதார நலன் அதன் மதிப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்ற பன்முகத்தன்மை.

- இந்த புதிய சட்டமானது, தென் சீனா கடல் பகுதியில் சீனா செய்துவரும் சட்டவிரோதக் கட்டுமானம் மற்றும் செயற்கையாக ராணுவமயமாக்கல் மற்றும் அச்சுறுத்தும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அதிகாரம் அளிக்கிறது.
- ஆசிய மறு உறுதி துவக்கச் சட்டம்(ARIA) என்பது இந்திய-அமெரிக்கா இடையேயான மிக அவசியமான யுத்த தந்திர ரீதியிலான நட்புறவை அங்கீகரித்தல் மற்றும் இந்திய பசிபிக் பகுதியில் அமைதி மற்றும் பாதுகாப்பை ஊக்குவிப்பது மற்றும் இரு நாடுகளுக்கு இடையே தூதரக, பொருளாதார மற்றும் பாதுகாப்பிற்கு அழைப்பு விடுத்தல் ஆகும்.
- சிறிது காலத்திற்கு முன்பு அமெரிக்கா முக்கியத்துவம் வாய்ந்த பசிபிக் பகுதி தலைமையை (PACOM) இந்திய-பசிபிக் தலைமை(COMMAND)பகுதி எனப் பெயர்மாற்றம் செய்தது. இது அமெரிக்க அரசாங்கம், கிழக்கு ஆசியா மற்றும் இந்திய பெருங்கடல் பகுதியில் தனித்து போடும் பகுதியாகிறது, மற்றும் இந்திய இந்த போர்திறன் சார்ந்த திட்டமிடலில் ஒரு முக்கிய கூட்டாளியாகும்.
- அமெரிக்கா தன்னுடைய இந்திய-பசிபிக் பகுதிக்கு பொருளாதார தூணாக இருப்பதற்காக இந்திய-பசிபிக் அமைப்பை நிறுவியது.

ஆசியான் அமைப்பு உடனான இந்தியாவின் முக்கியமான உறவுகளில், அரசியல்-பாதுகாப்பு ஒத்துழைப்பு, பொருளாதார ஒத்துழைப்பு, சமூக-கலாச்சார ஒத்துழைப்பு மற்றும் இணைப்பு போன்றவைகளாகும். மேலும் கூடுதலாக, சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு நிதி உதவி அளிக்கும் திட்டங்களும் நிறுவப்பட்டுள்ளது.

**பிரிக்ஸ் (BRICS)**

“பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா என்பதின் சுருங்கிய வார்த்தையான பிரிக்ஸ் (BRICS) என்பது 2001 ஆம் ஆண்டு “கோல்டுமென் சாஸ்” என்ற அமைப்பை சார்ந்த “ஜிம் ஓ நீல்”(Jim O Neil) என்பவரால் உருவாக்கப்பட்டது. இது அடுத்த 50 ஆண்டுகளுக்கான பொருளாதார போக்குகளின் உலகளாவிய பொருளாதார மாதிரி வடிவத்தின் தொலைநோக்கு பார்வையின் விளைவாகும். இவர் அடுத்த 2050ஆம் ஆண்டுக்குள் பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் “டாலர்” என்ற வகையில் மிகவும் தொழில் ரீதியாக வளர்ச்சி அடைந்த ஆறு நாடுகளைக் காட்டிலும் பெரிய நாடாக இருக்கும் என்றும், இது கடந்த 300 ஆண்டுகால “வல்லரசு” என்ற அடிப்படை இயக்கத்தையே முழுவதுமாக மாற்றி அமைக்க போகிறது என்று கணித்தார்.

பிரிக்ஸ் அமைப்பு, தன்னுடைய கூட்டு வலிமையில் இருந்து பெற்ற பலன்களில் இருந்து செயல்படுகிறது. மேலும் அது மிகவும் பரந்த சமூக மற்றும் பொருளாதார, இருதரப்பு பரஸ்பரம் நலன்கள் மற்றும் உலகளாவிய சிக்கலான; நீடித்த வளர்ச்சி இலக்கு, சர்வதேச தீவிரவாதம், பருவநிலை மாற்றம், உணவு மற்றும் கற்றல் பாதுகாப்பு, உலக ஆளுமை நிறுவனங்களின் சீர்திருத்தம், வர்த்தகம் மற்றும் வரி, தொன்மை மருந்துகள், தொழிலாளர்கள், பேரழிவு மேலாண்மை, ஊழல் எதிர்ப்பு, தகவல் மற்றும் செய்தித் தொடர்பு, சுங்க-ஒத்துழைப்பு, தொழில்கள் என்று இன்னும் பிற விவரங்களைக் குறித்து விவாதித்து விவாதித்து செயல்படுகிறது. இவற்றோடு பிரிக்ஸ் நாடுகளானது,“மக்களுக்கிடையே” என்ற அடிப்படையில் கலாச்சாரம் விளையாட்டு, திறன் மேம்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புதுமை ஆகியவை விவகாரங்களிலும் ஒத்துழைக்கின்றன.

பிரிக்ஸ் அமைப்பின் முதன்மையான ஒரு சாதனை என்பது புதிய வளர்ச்சி வங்கியினை நிறுவியதும். இது 2015ஆம் ஆண்டு ஜூலை 7 அன்று பிரிக்ஸ் நாடுகளில் மற்றும் இதர வளரும் நாடுகளில் உள்கட்டமைப்பு மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றுக்காக வளங்களை திருடுவதை தனது கருத்தாக கொண்டு இயங்குவதற்கு வந்தது. இந்த புதிய வளர்ச்சி வங்கியானது தனது உறுப்பினர் நாடுகளில் உள்கட்டமைப்பு மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றுக்காக வளங்களை ஏற்படுத்திக் கொள்வதில் உதவுகிறது. “அவசர கால நிதியிருப்பு ஒப்பந்தம்” என்பது பிரிக்ஸ் அமைப்பு ஏற்படுத்திய மற்றொரு முயற்சியாகும். இது பிரிக்ஸ் நாடுகளுக்கு ஏற்படும் நிதி நெருக்கடி உள்ளாகுமானால், அப்போது நிதி பாதுகாப்புக் கருவியாகப் பயன்படுகிறது.

**புலம் பெயர்ந்த இந்தியர்கள்**

“டயஸ்போரா” என்ற வார்த்தை குறிப்பிடுவது “ஒரு மக்கள் தொகையானது தனது சொந்த (தாய்) நாட்டில் (Homeland) இருந்து புலம் பெயர்ந்து பிற இடங்களுக்கோ அல்லது நாடுகளுக்கோ சென்று விடுவதை குறிக்கும். ஒரே கலாச்சாரத்தை அல்லது ஒரே நாட்டைச் சேர்ந்த மக்கள் கூட்டம் பல்வேறு காரணங்களால் குறிப்பாக பொருளாதார, வாழ்வாதார, அரசியல் மற்றும் இதர சமூக நிலைமைகளால் தங்களுடைய சொந்த நாட்டை காலி செய்துவிட்டு பிற நாடுகளில் சென்று குடியேறுவதை குறிக்கும். சில நேரங்களில் தங்களுடைய நாட்டைவிட்டு வெளியேறி வேறு எங்கேனும் தங்கிவிடுவது: இத்தகைய இடப்பெயர்வானது அல்லது மாறிச் செல்வதானது தன்னிச்சையாகவும் அல்லது கட்டாயத்தின் மீதும் இருக்க முடியும். மிகவும் துன்பகரமான நிகழ்வுகள், போர்கள், காலனி ஆதிக்கம், அடிமைத்தனம், இயற்கை பேரிடர்கள், தொடர் துன்புறுத்தல்கள், இழப்பு, சொந்த நாட்டுக்கு செல்ல வேண்டும் என்ற ஏக்கம் போன்றவையெல்லாம் கட்டாயம் புலம்பெயர்ந்த மக்களின் காரணங்களாகும். தானாகவே முன்வந்து புலம்பெயர்ந்தோர் என்போர், இதைவிட சிறந்த பொருளாதார வாய்ப்பிற்காக தங்களது சொந்த நாட்டை விட்டு சென்றார்கள் ஆவர். உதாரணமாக,பெருமளவிலான குடியேற்றமானது 1800ஆம் ஆண்டுகளில் ஐரோப்பாவின் பின்தங்கியப் பகுதிகளில் இருந்து அமெரிக்காவிற்கு சென்றதை குறிப்பிடலாம். கட்டாயத்தின் காரணமாக புலம் பெயர்ந்த மக்கள் கூட்டத்தினர் போலல்லாமல், தானாக முன்வந்து புலம்பெயரும் மக்கள் பிரிவினர் தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்வது மற்றும் சமூக மற்றும் அரசியல் ரீதியாகவும், எண்ணிக்கையிலும் ஏற்கும் படியாக ஆகிறார்கள்.

தற்போது, புலம்பெயர்ந்தோரின் தேவைக்கான கோரிக்கைகள், வெளிநாட்டு விவகாரங்களில், பொருளாதார வளர்ச்சி முதல் குடியேற்றம் வரையிலான அரசுக் கொள்கையை பாதிக்கின்றன. புலம்பெயர்ந்தோர் தங்கள் தாயகத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்கள் பணம் அனுப்பியவர்களாகவும் செயல்படுகிறார்கள். அவர்கள் பணம் அனுப்பியவர்களாகவும் செயல்படுகிறார்கள், அவர்கள் வர்த்தகம் மற்றும் அந்நிய நேரடி முதலீட்டை ஊக்குவிக்கிறார்கள். தொழில்முனைவோரை உருவாக்கி வளர்க்கிறார்கள் மற்றும் புதிய அறிவு மற்றும் திறன்களைப் பரிமாறிக் கொள்ள உதவுகிறார்கள்.

வெளிநாடு வாழ் இந்தியர் என்பதன் பொதுவான பதம், இந்தியக் குடியரசின் கீழ் வரும் ஒன்றியங்கள் மற்றும் மாநிலங்களிலுள்ள மக்கள் குடியேறுவதை குறிக்கும் இந்த வெளிநாடு வாழ்வோர் தற்சமயம் கிட்டத்தட்ட 30 மில்லியன் மேல் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இதில் (NRI எனப்படும்) இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள் மற்றும் இந்தியாவை பூர்வீகமாக கொண்டு உலகெங்கும் பரவி இருப்போரையும் உள்ளடக்கியதாகும்.

**வெளிநாடு வாழ் இந்தியர் வகைப்படுத்தப்படுதல்**

- வெளிநாடு வாழ் இந்தியர் (NRI)-இவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக இந்திய குடிமக்கள் காலவரையறையின்றி வெளிநாடுகளில் வசிக்கும் குடிமக்களை “வெளிநாடு வாழ் இந்தியர்” என வகைப்படுத்தப்படுகின்றனர்.
- இந்திய வம்சாவழியினர் (PIO)-இவர்கள் வெளிநாட்டு இந்தியர்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றனர். அங்கேயே நிரந்தரமாக தங்கி விடும்வோரை குறிக்கும்.
- அரசற்ற இந்திய வம்சாவழியினர் (SPIO)-இவர்கள் அரசற்ற இந்திய வம்சாவழியினர், இவர்களிடம் தாங்கள் இந்தியர்கள் என்பதற்கு போதுமான ஆதாரங்களை கொண்ட ஆவணங்கள் வைத்து இருக்காதவர்கள் ஆவர்.

இந்திய அரசாங்கம் புலம்பெயர் இந்தியர் இன்றியமையாமையை அங்கீகரித்துள்ளது. ஏனெனில் அது பொருளாதார, நிதி மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த குடிமக்கள் இந்தியாவில் இருந்து வெகுதொலைவில் இருந்தாலும், உலக அரங்கில் இந்தியா பிரகாசிக்கச் செய்ய முயற்சிக்கிறார்கள்.

கிட்டத்தட்ட 31 மில்லியன் இந்திய பிறப்பு அல்லது அதன் வழித்தோன்றல்கள், புலம்பெயர்ந்த இந்தியர்களாக உலகம் முழுவதும் உள்ளனர். அவர்களுள், 3.1 மில்லியனில், 10 சதவீதம் பேர் அமெரிக்காவில் வாழும் அமெரிக்க இந்தியர்கள் ஆவர். அமெரிக்க வாழ் புலம் பெயர்ந்த இந்தியர்கள், இந்தியாவின் பொருளாதார அரசியல் மற்றும் சமூக மேம்பாட்டிற்கு பங்களிப்பிற்கு மிக

இன்றியமையாத ஆதாரமாக விளங்குகிறார்கள்.

இந்தியா விடுதலை அடைந்த காலகட்டத்தில், பிரதமர் ஜவஹர்லால் நேரு புலம்பெயர் இந்தியர் இந்தியர்களிடம் இருந்து “மிகவும் விலகியிருக்கும் கூடிய வகையில் தீவிரக் கொள்கையினை பின்பற்றினார்”. சொந்த நாட்டின் இறையாண்மை பற்றிய விவகாரத்தில் அவர் தந்த முதன்மையினால் இந்த நிலையினை எடுத்தார். நேருவின் இந்தக் கொள்கை வெளிநாடுவாழ் இந்திய பூர்வக்குடி மக்களுக்கு கசப்பானதாக இருந்தது. உலகெங்கும் உள்ள இந்திய சமூகத்தினர் அனைவரும் ‘ஒருவரே’ என்பது தேசிய தினத்தன்று அல்லது இதர முக்கிய நிகழ்வுகளில் மட்டுமே கருதப்படுகிறார்கள்.

பின்னர் ராஜீவ் காந்தியின் ஆட்சியின்போது தான் புலம்பெயர் இந்தியர் கொள்கையில் ஊக்கம் அளிக்கப்பட்டது. 1986ஆம் ஆண்டு பிஜி பிரச்சனையில் இந்தியர்களுக்கு ஆதரவு கொடுத்தார். இவற்றோடு புலம்பெயர் இந்தியர்கள் ஒரு “இந்தியாவின் திட்டங்களில் சொத்து” என உணர்ந்தார். மேலும் 1984ஆம் ஆண்டு வெளிநாடு வாழ்வோருக்கான துறையை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

புலம்பெயர்ந்த இந்தியர்களைப் பற்றிய கொள்கை, அவர்களை தேடிச் சென்றடைவதற்கு, அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையின் போது மீண்டும் தொடங்கியது. இவருடைய காலத்தின் பொழுது, முதன் முதலில் 2003ஆம் ஆண்டு புலம்பெயர்ந்த இந்தியர்களுக்கான “பிரவேசி பாரதிய திவாஸ்” என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இந்த “பிரவேசிய பாரதிய திவாஸ்” தினக் கொண்டாட்டமானது ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி மாதம் 9 நாள், மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவில் இருந்து இந்திய திரும்பிய நாளை குறிக்கும் விதமாக கொண்டாடப்படுகிறது. இந்திய அரசாங்கம் இதனை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடும் விதமாக நிகழ்ச்சிகளை நடத்தி குறிப்பாக புலம்பெயர்ந்த இந்தியர்களில் முக்கியமானவர்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்ச்சிகளும் உள்ளடக்கியதாகும். கடந்த 20 ஆண்டுகளாக, முன் எப்போதும் இல்லாத வகையில் இந்திய அரசாங்கம் எடுத்துவரும் முன் முயற்சிகள் யாவும் புலம் பெயர்ந்த இந்தியர்களின் நாட்டின் மேம்பாட்டிற்கு ஆற்றிவரும் பங்களிப்பானது மிகவும் வலுவானதும் மற்றும் இன்றியமையாதாகிறது. ஊலகளாவிய வெளிநாடு வாழ் இந்தியர்களின் முதலீடு உதவி, தொழில்நுட்பம் பேரின் நடந்ததை ஈர்ப்பதோடு மட்டுமல்லாமல், கூடுதலாக புலம் பெயர்ந்த இந்தியர்கள் 79 பில்லியன் டாலர்கள் தாய்நாட்டிற்கு அனுப்புவதன் மூலம் அந்நியப் பணத்தை பெரும் நாடுகளில், உலக அளவில் முதலிடத்தில் உள்ள நாடு என்ற இடத்தை இந்தியா தக்க வைத்துக் கொண்டது.

**புலம் பெயர்ந்த தமிழர்கள்**

புலம்பெயர்ந்த தமிழர்கள் என்போர் தங்களது மூதாதையர்களின் சொந்த நாடான தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் இலங்கையில் இருந்து குடியேற்றம் பெற்றவர்களை குறிக்கும் சொல்லாகும். அவர்கள் உலகம் முழுவதும் 50 நாடுகளில் பரவி இருக்கின்றனர். தென்கிழக்கு ஆசியா, ஒசியானா, அமெரிக்கா, கரீபியன், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா நாடுகள் ஆகியன இதில் அடங்கும்.

இவ்வாறு மிகவும் ஆரம்பகால குடியேற்ற வகையானது, மொரிஷியஸ், ஜமைக்கா, டிரினிடாட் மற்றும் டொபாகொ, சூரினாம், கயானா போன்ற நாடுகளுக்கு கரும்பு தோட்டத்திற்கு கூலித் தொழிலாளர்களாகச் சென்றது பற்றிய ஆதாரங்கள் மற்றும் மலேசியாவின் ரப்பர் தோட்டம் மற்றும் இருப்புப்பாதை பணி மற்றும் இலங்கையில் தேயிலை தோட்டம் ஆகியவற்றிலும் கூலித் தொழிலாளர்களாக கொண்டு செல்லப்பட்டனர். இதுபோக தாமாகவே சென்று எழுத்தர், நிர்வாகப் பணி மற்றும் ராணுவ பணிக்கு சென்றுள்ளனர். இந்த குடியேற்றம் பெற்றவர்கள்தான் படிப்படியாக வர்த்தகம் மற்றும் நிதி விவகாரங்களில் தென்கிழக்கு ஆசியாவில் செல்வாக்கு பெற்றவராக ஆயினர். குறிப்பாக இதில் மியான்மர், சிங்கப்பூர், மலேசியா மற்றும் தென் ஆப்பிரிக்கா வாழ் தமிழர்களும் இதில் அடங்குவர்.

**உலகம் முழுவதும் தமிழர்களின் நிலை**

1. தமிழ் அலுவல் மொழிகளாக உள்ள நாடுகள் சிங்கப்பூர், இலங்கை ஆகும்.

2. தமிழ் சிறுபான்மை மொழியாக உள்ள நாடுகள் கனடா, மலேசியா, மொரிஷியஸ், செஷல்ஸ், தென் ஆப்பிரிக்கா, ரியூனியன் மற்றும் பிரான்ஸ் ஆகியவையாகும்.

நவீன புலம்பெயர்ந்த தமிழர்கள் திறன் பெற்ற தொழில் நிபுணர்களாக உலகம் முழுவதும் பல நாடுகளில் குடியேறியுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 3.5 மில்லியன் ஆகும். இதில் சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகள் அடங்கும். சிங்கப்பூர் தமிழ் தொலைக்காட்சி அலைவரிசை, வானொலி ஆகியவற்றின் மூலம் தமிழ் மொழியை வளர்த்தெடுக்கிறது. உலகம் முழுவதும் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆண்டுதோறும் நடத்தப்படும் புலம்பெயர்ந்தோரின் விழாக்களில் கலந்து கொள்கின்றனர். தங்கள் சொந்த தாய் மண்ணை விட்டு விலகி சென்றாலும் அவர்கள் பண்பாட்டு வழியில் தங்களது தாய்மண்ணான இந்தியா அல்லது தமிழகத்து பண்பாடுகளை உலகெங்கும் கொண்டு செல்பவராகவே உள்ளனர்.

## அலகு– 10
## இந்தியாவும் அண்டை நாடுகளும்

**அறிமுகம்**

இந்தியா நீளமான கடல் மற்றும் நில எல்லைகளை கொண்டுள்ளது. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான், பூடான், சீனா, மியான்மர், மாலத்தீவு, நேபாளம், இலங்கை போன்றவை இந்தியாவுடன் எல்லைகளைக் கொண்டுள்ளன. அணிசேரா கொள்கை அல்லது இராணுவ மோதல்களில் ஈடுபடாமை ஆகியவற்றை தனது அயல்நாட்டு கொள்கையாகக் கொண்டுள்ளது.

புவியியல் ரீதியாக எல்லை தொடர்பான பல்வேறு பிரச்சனைகளை இந்தியா சந்தித்து வருகிறது. மேலும் அண்டை நாடுகளுடன் கொள்கைகளின் தாக்கமும், இந்தியாவில் பாதிப்பை ஏற்படுத்துவதும் என்பது உண்மையாகும். விடுதலை பெற்றதிலிருந்து இந்தியா அண்டை நாடுகளுடன் நல்ல உறவுமுறைகளை ஏற்படுத்த முயற்சி செய்த வண்ணமே உள்ளது. ஆனாலும் சில அண்டை நாடுகள் எதிர்மறை நிலையை பின்பற்றி வருவதால் சண்டைகளும், பிரச்சனைகளும் தொடர்ந்த வண்ணமேதான் உள்ளன.

அண்டை நாடுகளுடனான உறவுகளில் ஐந்து அம்சம் கொண்ட பஞ்சசீலக் கொள்கையை இந்தியா உறுதியாக பின்பற்றி வருகிறது.

ஆப்கானிஸ்தானுடன் நட்புறவை மேம்படுத்த 1947ல் இருந்து இந்தியா தன்னுடைய கொள்கைத் திட்டத்தை மேம்படுத்தியும் வருகிறது. 1950இல் இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் "நட்புறவை ஒப்பந்தத்தை" ஏற்படுத்திக் கொண்டது.

ஆப்கானிஸ்தான் மன்னா் ஜாஹிர் ஷாவின் ஆட்சிக் காலம் இந்தியாவிற்கான நட்பு உறவில் சிறந்த காலமாக கருதப்பட்டது. 1979இல் சோவியத் ஆக்கிரமிப்பிற்கு முன்பாகவே, பல்வேறு ஒப்பந்தங்களின் வாயிலாகவும், நெறிமுறைகளின் மூலமாகவும், சோவியத் ஆதரவு அரசாங்கங்களுடன் இந்தியா நட்புறவை வளர்த்து வந்துள்ளது. இந்தியாவுடனான ஆப்கானிஸ்தானின் உறவு 1979இல் இருந்து 1989வரை தடைப்பட்டிருந்தாலும், இந்தியா பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் பங்கு பெற்று ஆப்கானிஸ்தானின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானில் 1990-களின் மத்தியில் தாலிபான்களின் ஆட்சி உறுதியானதால், தாலிபான் எதிர்ப்பு குழுமங்களுடன் இந்தியா கைகோர்த்து நட்புறவை வளர்த்தது. ஆப்கானிஸ்தானில் அமைதி திரும்ப இந்தியா அல்லும் பகலும் பாடுபட்டு நன்மதிப்பை சம்பாதித்தது. ஆனாலும் ஆப்கானிஸ்தானில் நிலவிய நிலையற்ற சூழ்நிலையினால் இந்தியாவின் கொள்கைகள் எண்ணங்கள் மற்றும் செயல்பாடுகள் தடைப்பட்டன.

**ஆப்கானிஸ்தான் உடனான நட்புறவில் இந்தியாவின் மேம்பாட்டிற்கு உதவும் 5 தூண்கள்**

**மனிதாபிமான உதவிகள்**

- ஆப்கானிஸ்தானிற்கு 1.1 மில்லியன் மெட்ரிக் டன் கோதுமையை வழங்குதல்
- இந்திரா காந்தி குழந்தைகள் சுகாதார நிறுவனம் (IGICH) இது ஒரு 400 படுக்கை கொண்ட மருத்துவமனை ஆகும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள குழந்தைகள் நலமுடன் இருப்பதற்கு பணியாற்றுகிறது.

**உள்கட்டமைப்பு**

- ஈரான் எல்லைக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் செல்வதற்கு உதவுவதற்காக 218 கி.மீ சாலையானது. சரான்ஜில் இருந்து டெல்லாராம் வரை போடப்பட்டது.
- புல்-இ-கும்ரி முதல் காபூல் வரை 220 கி. வோல்ட் டி.சி. டிரான்ஸ்மிஷன் லைன் மற்றும் சிம்தலாவில் உள்ள 220/110/20 கி.வோல்ட் துணை நிலையம்

**பொருளாதார மேம்பாடு**

- ஆப்கானிஸ்தானில் தனியார் முதலீடு குறிப்பாக இந்திய – ஆப்கானிஸ்தான் வர்த்தகம் மற்றும் முதலீட்டு கண்காட்சி – 2017 மூலமாக செய்யப்பட்டது.
- ஆப்கானிஸ்தானின் 31 மாகாணங்களில் 116 புதிய அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக மேம்பாட்டுத்திட்டங்கள்

**இணைப்புகள்**

- ஈராக்கில் சபாஹர் துறைமுக நடவடிக்கை
- 2017 ஆம் ஆண்டு இந்தியா – ஆப்கானிஸ்தான் இடையே நேரடி வான்வெளி சரக்கு மற்றும் வர்த்தகம் ஏற்படுத்தியது.

**திறன் கட்டமைத்தல்:**

- இந்தியாவில் 3500-க்கும் மேற்பட்ட ஆப்கானிஸ்தானியர்கள் பல்வேறு பயிற்சி திட்டங்களில் கீழ் உள்ளனர்.
- இந்திய கலாச்சார உறவு குழுவின் (ICCR) கீழ் ஆப்கானிஸ் தானியர்களுக்கு ஆண்டுக்கு ₹ 1000 கல்வி உதவித் தொகைகள்
- ஆப்கானிஸ்தான் நிர்வாகம் மற்றும் ஆளுமை ஆகியவை உறுதிப்பட, இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (ITEC) அமைப்பின் 500 திட்ட இடங்கள் ஒதுக்கீடு செய்தது.

இந்தியா 290 மில்லியன் டாலர் மதிப்புக் கொண்ட ஆப்கானிஸ்தான் - இந்தியா கூட்டுறவில் அணையைக் கட்டியது. இதற்கு முன்னதாக சல்மா அணை என்று அறியப்பட்டது. இது ஆப்கானிஸ்தானின் ஹிராட் மாகாணத்தில் உள்ளது. இது காபூல் மின்சாரத் தேவைக்கு அண்டை நாடுகளை சார்ந்திருப்பதை குறைத்தது மற்றும் 75000 ஹெக்டேர் பாசன வசதியையும் பெற்றது.

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்ற கட்டிடம் 90 மில்லியன் டாலர் செலவில் இந்தியாவால் கட்டப்பட்டது.

இந்தியாவின் வளர்ச்சி நிதியில் இருந்து முழுமையாக நிதியளிக்கப்பட்டு டெல்லாராம் - சரான்ஜ் நெடுஞ்சாலையானது 135 மில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்டது.

மேலும், வடக்கு நாடுகளின் கூட்டணியுடனும், மண்டல நாடுகளுடனும் சேர்ந்து தாலிபான்களின் ஆட்சியை நீர்த்துப் போக இந்தியா பாடுபட்டது. ஈரான், ரஷ்யா, கஜகஸ்தான் போன்ற நாடுகளுடன் கைகோர்த்து, இந்தியா வடக்கு நாடுகளின் கூட்டணிக்கு வேண்டிய பொருள் வளங்களை அளித்து வலிமைப்படுத்தியது. 2001 முதல், பல்வேறு வளர்ச்சி திட்டங்களிலும், மனிதாபிமான அடிப்படையிலும் ஆப்கான் நாட்டின் மேம்பாட்டில் இந்தியா ஈடுபட தொடங்கியது. இவை மட்டுமல்லாது, ஆப்கான் நாட்டின் குடிமக்கள் மற்றும் ராணுவத்திற்கு ஆயுத பயிற்சியையும் அளித்தும் உறவுமுறையை பலப்படுத்தியது. ஆப்கானிஸ்தானில், இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்குமான உறவுமுறை போட்டி "பெரும் சவாலாக" உலக அரங்கில் கருதப்படுகிறது.

2005ஆம் ஆண்டு, இந்தியா சார்க் மண்டல அமைப்பில், ஆப்கானிஸ்தான், உறுப்பினராக சேர்வதற்கு வழி மொழிந்தது. 2007ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் தேதி ஆப்கானிஸ்தான் உறுப்பினராக இணைந்தது.

**இந்திய-ஆப்கானிஸ்தான் ராணுவம் சார்ந்த ஒத்துழைப்பு**

ஆப்கானிஸ்தான், இந்தியாவின் இயற்கையான நட்புறவு நாடாகும். ஏனெனில் பாகிஸ்தானின் விருப்பங்களை அறியவும், நடப்பு நிகழ்வுகள் அறியவும், ஆப்கானிஸ்தானை வரையறையில்லாத நட்பு நாடாக இந்தியா போற்றியது. மேலும் ஆப்கானிஸ்தான் ராணுவம் சார்ந்த உறவுமுறையை இந்தியா செயல்படுத்தியதை, பாகிஸ்தான் தடுப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டது.

இது அல்லாது, மனிதபிமான உதவிகளை செய்ததின் மூலமாக, பாரபட்சமில்லாத உறவுமுறையையும் இந்தியா தோற்றுவித்தது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய அடிப்படை இந்திய சமூக கட்டமைப்பில் பல்வேறு அழிவு ரீதியான நடவடிக்கைகள் அரங்கேற்றுவதற்கு வழிவகுத்தது.

**இந்திய-ஆப்கானிஸ்தான் பொருளாதார உறவுகள்**

ஆப்கானிஸ்தானில் இருக்கக்கூடிய கனிம வளங்களான இரும்புத்தாது, லித்தியம், குரோமியம், இயற்கை வாயு மற்றும் பெட்ரோலியத்தின் மொத்த மதிப்பீடு சுமார் ஒன்று ட்ரில்லியன் முதல் மூன்று ட்ரில்லியன் டாலர்கள் ஆகும்.

ஆப்கானிஸ்தானில் மட்டும் இந்திய முதலீடு சுமார் மூன்று பில்லியன் டாலர்கள் இருப்பதால் இந்தியர்களையும் அவர்களது முதலீட்டையும் காப்பது தலையாய கடமையாக உள்ளது. முக்கிய ஏற்றுமதி பொருள்களாக பருப்புகள், மின்சாதனங்கள், பால்பொருட்கள், தேன், ரப்பர் பொருள்கள், மருந்துகள் மற்றும் ஆடைகள், இதர இயந்திர பொருள்கள் விளங்குகின்றன. மேலும் இறக்குமதி பொருள்களாக பழங்கள், உலர் பருப்பு/பழங்கள், காய்கறிகள், எண்ணெய் வித்துக்கள், விலைமதிப்புள்ள கற்கள் ஆகியன உள்ளன. 2003இல் இந்திய-ஆப்கான் வணிகத்தை முன்னேற்றும் பொருட்டு முன்னுரிமை வாணிப ஒப்பந்தத்தில் இவ்விரு நாடுகளும் கையெழுத்திட்டன. இதன் மூலம் சுமார் 38 வகை இறக்குமதி பொருள்களுக்கு, 50லிருந்து 100 விழுக்காடு வரை வரிச்சலுகைகளை இந்தியா அளித்தது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 2011இல் இந்தியா, ஆப்கான் நாட்டிலிருந்து இறக்குமதியாகக் கூடிய அனைத்தும் பொருள்களுக்கும் (மது மற்றும் புகையிலை பொருள்கள் தவிர) அடிப்படை சுங்க வரியை நீக்கியது. இதன் மூலம் மேற்கூறிய அனைத்து பொருள்களுமே இந்திய சந்தையில் சுலபமாக விற்பதற்கு வழி வகுத்தது. ஆப்கானிஸ்தானின் மிக முக்கிய சந்தையாக இந்தியா விளங்குவது, இதன் மூலம் அறியலாம்.

ஈரானில் அமைந்திருக்கக் கூடிய “சபாஹர்” துறைமுகத்தின் மூலம் ஆப்கானிலிருந்து இந்தியாவிற்கும், ஏனைய மற்ற நாடுகளுக்கும் வாணிபம் எளிதாக மேற்கொள்ள வழி செய்யலாம். சமீபத்தில் சபாஹர் துறைமுகத்தில் 85 மில்லியன் அமெரிக்கா டாலர் செலவில் வர்த்தக போக்குவரத்து மையம் ஒன்றை இந்தயா, அமைத்து இது மற்றொரு மைல் கல்லாகும்.

**இந்தியா-ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு உறவுகள்**

ஆப்கான் தாலிபான்களையும் அவர்களின் அச்சுறுத்தல்களையும் 1990-களில் இந்தியா மிகப்பெரிய சவாலாகவே பார்த்தது. மேலும் பாகிஸ்தானும், பல்வேறு தீவிரவாத குழுக்களான லஷ்கர்-இ-தொய்பா, ஹர்கத்-வுல்-முஜாஹிதீன்/ஹர்ஹத்-வுல்-அன்சார் மற்றும் ஹர்ஹத்-வுல்-ஜிஹாத்-அல் இஸ்லாமி போன்றவைகளை வளர்த்தும், இந்தியாவில் செயல்பட வைத்தும் வந்தன. மேற்கூறிய அனைத்து தீவிரவாத குழுக்களும், ஆப்கானிஸ்தானில் பயிற்சிப் பெற்று அல்-கொய்தாவின் நீட்சியாகவே இந்தியாவில் செயல்பட்டன. ஆப்கானிஸ்தான், தீவிரவாதத்தின் சொர்க்க பூமியாகவே செயல்பட்டது. இந்தியாவிற்கு மாபெரும் அச்சுறுத்தலாகவே இருந்தது. மேலும் தீவிரவாத கொள்கைகளும் செயல்பாடுகளும் ஆப்கானில் பரவியதால், இந்தியாவின் பாதுகாப்பிற்கு அது பங்கமாகவே விளைந்தது.

பாகிஸ்தானுடனான ஆப்கானிஸ்தானின் ராணுவம் சார்ந்த உறவுமுறைகளில் பாகிஸ்தானை பலப்படுத்தியும், இந்தியாவை செயலிழக்கவும் செய்தன. ஆப்கானிஸ்தானில் பல்வேறு தீவிரவாத குழுக்களை அதன் எல்லைப் பகுதியில் எங்கு வேண்டுமென்றாலும் செயல்பட வைத்தது பாகிஸ்தான், முக்கிய நகரமாக ‘லோயா பாக்டியா’ செயல்பட்டது. தங்க பிறை எனப்படும்ஈரான், ஆப்கான் மற்றும் பாகிஸ்தானின். ‘தங்க நிலா விளைவானது’ மாபெரும் பிரச்சனையாகவே இருந்தது. முக்கியமாக போதைப்பொருள் விஷயங்களில் பஞ்சாப் அதிகமாக பாதிக்கப்பட்டது. ஈரான் மற்றும் சிரியாவின் பாதிப்பானது ஆப்கான் நாட்டில் கண்கூடாகவே தெரிந்தது.

**ஆப்கானிஸ்தானில் இந்திய வளர்ச்சி திட்டங்கள்**

- ஸ்டோர் அரண்மனையை அதே நகரத்தில் மீட்டெடுப்பது.
- ஹபீபியா உயர்நிலை பள்ளியை தலைநகரத்தில் உதவிநிதி கட்டுவது, அதற்குண்டான தொகையை அளிப்பது.
- ஆப்கான் தேசிய விவசாய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை காந்தஹாரில் நிறுவுவதில் நிதியளிப்பது.
- காபூலில் சிம்ட்டாலா துணை மின் நிலையம் அமைப்பது.
- காந்தஹாரில் நிறுவுவதில் நிதியளிப்பது.
- காபூலில் சிம்ட்டாலா துணை மின் நிலையம் அமைப்பது.
- காந்தஹாரில் கிரிக்கெட் மைதானம் அமைப்பது. ஆப்கானின் கிரிக்கெட் வீரர்கள், இந்திய மைதானத்தை தங்களின் சொந்த மைதானமாக நினைக்க வைப்பது.
- காந்தஹாரில் குளிர்சாதன கிடங்கை உருவாக்குவது.
- தொலைபேசி தகவல் பரிமாற்ற அலுவலகங்களை நியமிப்பது. தேசிய தொலைக்காட்சி வலைத்தளங்களை உருவாக்குவது.
- சில மண்டலங்களில் குழாய் கிணறுகளை தோண்டுவது.
- இந்தியா, பேருந்துகள், ஹெலிகாப்டர்கள் மற்றும் அவசர ஊர்திகளையும் இலவசமாக அளித்துள்ளது.

**இந்திய-ஆப்கானிஸ்தான் ராணுவம் சார்ந்த ஒப்பந்தம்**

2011இல் ஆப்கானிஸ்தான் உடனான ராணுவம் சார்ந்த தொடர்பை ஒப்பந்தத்தின் மூலமாக உறுதி செய்த முதல் நாடு இந்தியாவாகும். அமெரிக்காவின் வேண்டுகொளுக்கு உடன்பட்டு, இந்தியா குறைந்த அளவிலேயே நட்புறவை கொண்டிருந்தது. மேலும் இந்திய-ஆப்கானிஸ்தான் உடனான நட்புறவை, பாகிஸ்தானின் பாதிப்பில்லாத வகையில் மட்டுமே நோக்கியது. இந்திய-பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் முத்தரப்பு நட்புறவானது, பரஸ்பரம் தனித்தன்மையானது என்பதை இந்தியா உறுதியாக்கியது. 1965 மற்றும் 1971 இந்தியாவிற்கு எதிராக போர்களில் ஆப்கான் தனித்து நின்று கொண்டது. காஷ்மீர் பிரச்சனையிலும் பொதுப்படையாக ஆப்கானிஸ்தான் இந்தியாவை ஆதரிக்க தயங்கியது. டியூரண்ட் எல்லை சர்ச்சையில் இந்தியா தனித்து நின்றது.

அனைத்து நாட்டு தலைவர்களுக்கும் அதன் நிலைத்தன்மை, வளர்ச்சி மற்றும் செழிப்பு ஆகியவற்றில் பங்கு இருந்தால் மட்டுமே ஆப்கானிஸ்தானில் நிலைத்தன்மை ஏற்படுத்த முடியும் என்பதை இந்தியா உணர்கிறது. ஆப்கானிஸ்தானில் மண்டல மற்றும் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகளை இந்தியா முன்னெடுத்து வருகிறது. இது தீவிரவாதத்தின் மேலாதிக்கத்திற்கு ஒரு சாத்தியமான கூறாகும் மற்றும் ஜூன் 2012 இல் ஆப்கானிஸ்தானில் டெல்லி முதலீட்டு உச்சி மாநாடு போன்ற முன்னோடி நிகழ்வுகளின் மூலம் அதன் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குகிறது. ஆப்கானிஸ்தானில் அமைதிக்கான திறவுகோலைக் கொண்டுள்ளது என்பதை உணர்ந்து, ஆசியாவின் இதயமான இந்தியா எல்லைக்குள் இந்த செயல்பாட்டின் மூலம் வணிக நம்பிக்கையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுத்து வருகிறது. பலதரப்பு ரீதியாக, ஆப்கானிஸ்தான்-இந்தியா-அமெரிக்கா முத்தரப்பு மற்றும் ஆப்கானிஸ்தான்-இந்தியா-ஈரான் முத்தரப்பு போன்ற பல்வேறு பேச்சுவார்த்தை மூலம் ஆப்கானிஸ்தானில் ஒரு உரையாடலைத் தொடங்க இந்தியா உதவுகிறது. அவை சமாதானத்தையும், செழிப்பையும், பாதுகாப்பதற்கான பொதுவான இலக்கைப் தொடர்ந்து வேறுபட்ட உலக நாடுகளின் சர்வதேச அமைப்புகளுடன் ஆப்கானிஸ்தானை ஒன்றிணைக்க இந்தியா முயற்சிக்கிறது. ஐ.நாவில் ஆப்கானிஸ்தான் மீதான சர்வதேச ஒத்துழைப்புக்கும், ஆப்கானிஸ்தானின் எதிர்காலத்தை மையமாகக் கொண்ட பல்வேறு சர்வதேச மாநாடுகளுக்கும் இந்தியா தனது ஆதரவை வெளிப்படுத்துகிறது. இதில் ஜூலை 2012இல் நடந்த டோக்கியோ மேம்பாட்டு மாநாடு மற்றும் 2014 டிசம்பரில் லண்டன் மாநாடு போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

தாலிபன் ஆட்சிக் காலத்தில் 1999இல் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் IC 814-யை கடத்தி, ஆப்கானிஸ்தானத்தில், கந்தஹாருக்கு கொண்டு சென்றனர் நிறுத்தினர்.

2015இல் ஆப்கானிஸ்தானின் இராணுவத்திற்கு,Mi-25 ரக ஹெலிகாப்டர்களை இந்தியா வழங்கியது. தாக்குதல் பெரிய அளவில் நடத்த ஏதுவான இவ்வகை ஹெலிகாப்டர்களை பரிசாக

அளித்து, பாகிஸ்தானின் எதிர்ப்பை சம்பாதித்தது. மேலும் ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஆப்கான் போர் வீரர்களுக்கு பயிற்சி அளிக்கவும் இந்தியா ஒத்துக்கொண்டது.

**எதிர்கால ஒத்துழைப்பு**

இந்தியாவின் வளர்ச்சி வழிமுறைகள், ஆப்கான் மக்களிடையே மிகுந்த வரவேற்பையும், ஒத்துழைப்பையும் உருவாக்கியுள்ளது. ஆனாலும் இருந்தாலும் ஒரு சக்தி பொருந்திய அதே சமயத்தில் மென்மையான நாடு என்ற தன்மையை கொண்டிருப்பதால் ஒரு சில எல்லை கூறுகளுக்குள்ளேயே செயல்பட வேண்டியுள்ளது. போர் என்பது சரியான நிலைப்பாடு அல்ல என்பது உள்நாட்டின் ஒருமித்த உணர்வு ஆகும். சில நேரங்களில் மென்மையான நாடாகவே தொடர்வதா, அல்லது அதிரடியாக ஆற்றலை வெளிப்படுத்துவதா என்பதில் இந்தியாவிற்கு தயக்கங்கள் உண்டு.

தாலிபான்களுடனான உறவை ஒருபோதும் நேரடியாக வைத்து கொள்ளாத நிலையில் இருந்தாலும், ஆப்கானிஸ்தான் அரசுடன் செய்து கொண்ட அத்துணை ஒப்பந்தங்களையும் இந்தியா தயங்காமல் பின்பற்றியது. பல்வேறு ஆப்கான் குழுமங்களுடன் வலுவான உளவுத்துறை நிறுவனங்களின் மூலமாக ஒரு வழிமுறையை ஏற்படத்தியதன் மூலம் இந்திய விருப்பங்கள், வளர்ச்சி திட்டங்கள் மற்றும் அங்குள்ள மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

ஆப்கான் மக்களுடனான நல்லிணக்கத்தை எப்போதும் இந்தியா வளர்க்க பாடுபட வேண்டும். மேலும் உலக வர்த்தக மற்றும் மண்டலக் கழகங்களும் பேச்சு வார்த்தையின் மூலம் தாலிபான் மற்றும் கடந்த ஆண்டு ஆப்கான் மக்களிடையேயான பிரச்சனைகளை சரிசெய்யும் வகையில் வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் அரசமைப்பு, மக்களாட்சி சட்டத்தின் ஆட்சி, பெண்கள் மற்றும் சிறுபான்மையினருக்கான உரிமைகள் யாவும் நிலைப்படுத்தவும் இந்தியா முயற்சிக்க வேண்டும். தாலிபான்களின் குறைகளிலும் இந்தியா கவனம் செலுத்த வேண்டும். மேலும் ரஷ்யா,ஈரான் போன்ற நாடுகளுடன் கலந்து ஆலோசித்து தாலிபான்களின் கோரிக்கைகளில் கவனம் செலுத்துவது, அவை அவர்களின் சொந்த பாதுகாப்பிற்கே அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடியது என்பதை புரிய வைக்க வேண்டியது போன்றவை இந்தியாவின் கடமை எனலாம்.

**இந்தியா-பாகிஸ்தான் உறவுகள்**

இந்தியாவும், பாகிஸ்தானும் கடந்த 70 ஆண்டுகளாக அண்டை நாடுகளாக, நிலப்பரப்பு, கலாச்சாரம், மதம், மொழி மற்றும் தத்துவம் போன்றவைகளை பகிர்ந்து கொள்ளும் பழமைக்கால நாகரிகங்களாகும். இந்திய-பாகிஸ்தான் பிரிவினையின்போது பெருமளவில் இடப்பெயர்வும் அதனை தொடர்ந்து மத கலவரமும், நடந்தபோது, லட்சக்கணக்கில் முஸ்லிம்கள் பாகிஸ்தானிற்கும், அதே அளவில் இந்துக்களும், சீக்கியர்களும், இந்தியாவிற்கு வந்தடைந்தனர். இப்பிரிவினையின் தொடர்ச்சியாக, இரு நாடுகள் பல போர்கள் மூலமாகவும், அதன் விளைவாக தீவிரவாதமும் எதிர்விளைவை உண்டாக்கி பகைமை நாடுகளாக மாறியது வரலாறு ஆகும்.

**காஷ்மீர் பிரச்சனை**

இவ்விரு நாடுகளுக்கிடையேயான பிரச்சனைகளில், முக்கியமானதாக காஷ்மீர் விளங்குகிறது. 1947இல் விடுதலைக்கு பிறகு நடைபெற்ற மூன்று போர்களில் இரண்டு போர்களுக்கு மேற்கூறிய காரணமே முன்னிலை வகிக்கிறது. இந்திய சுதந்திர சட்டத்தின்படி, எடுக்கப்பட்ட கொள்கை முடிவான பிரிவினை திட்டத்தின்படி, காஷ்மீர் இந்தியாவுடனோ இணைய முழு சுதந்திரம் பெற்றது. ஆரம்பகாலகட்டத்தில் தனி சுதந்திர நாடாக அமைய ஆசைப்பட்ட காஷ்மீர் மஹாராஜா ஹரிசிங், அக்டோபர் 1947இல் பழங்குடியினரின் தாக்குதலால் இந்தியாவுடன் இணைய சம்மதித்தார். அப்போது ஆரம்பித்த போரில், இந்தியா ஐக்கிய நாட்டு சபையின் தலையீட்டை கோரியது.

இப்போரானது, ஜனவரி 1, 1949இல் ஐக்கிய நாட்டு சபையின் தலையீட்டில் முடிவுக்கு வந்து, ஐக்கிய நாட்டு அமைதி காக்கும் படையின் ஆதரவுடன் ''போர் நிறுத்தம்'' மேற்கொள்ளப்பட்டது. இதுவே இந்திய பாகிஸ்தானின் முதல்போர் ஆகும்.

காஷ்மீருக்காக நடைபெற்ற நீண்ட போராகவும், செலவு குறைவான போராகவும் இது விளங்கியது. ஏனெனில் இருதரப்பு நாடுகளும் உபயோகப்படுத்திய துப்பாக்கி உபகரணங்கள் மிகக் குறைவே. இதன் தொடர்ச்சியாக காஷ்மீரில் எல்லை கட்டுப்பாடு அமல்படுத்தப்பட்டு, இரு

நாட்டின் இராணுவமும் மதிக்கும்படியான எல்லைக்கோடு அமைந்தது. மேலும் மூன்று பாகம் பாகிஸ்தானின் எல்லையில் அமையப் பெற்றது.

ஐக்கிய நாடு சபை, கொள்கை முடிவாக 'பொது வாக்கெடுப்பை' சிபாரிசு செய்தது. இவ்வாக்கெடுப்பின் மூலம் காஷ்மீர் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ இணைவதற்கு உரிமை அளிக்கப் பெறுகிறது. ஆனால் அவ்வாறு நடைபெறுவதற்கு முன்னர், இரு நாடுகளும் "ராணுவமல்லாத பகுதியாக" காஷ்மீர் இருப்பதற்கு சம்மதிக்கவில்லை. ஜூலை, 1949இல் இந்தியாவும் பாகிஸ்தானும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஐக்கிய நாட்டு சபையின் பரிந்துரையை நிறைவேற்றின. இந்திய-பாகிஸ்தானுக்கிடையேயான இரண்டாவது போர் 1965ல் நடைபெற்றது.

இவ்வாறு நடந்த போர்களில் 1971இல் நடந்தது மட்டுமே முன் பிரகடனம் செய்யப்பட்டு நடந்தது. ஏனைய போர்கள் யாவுமே எல்லையில் நடந்த சிறு சர்ச்சைகளாக பாவிக்கப்படுகின்றன. சுதந்திரம் அடைந்ததிலிருந்தே இவ்விரு நாடுகளும், போர்களை நிறுத்தி அமைதிக்காக பாடுபட வேண்டும் என்ற கொள்கையை நிலைநிறுத்தி கொண்டன.

அதன் பிறகு 1999 இல் இந்தியா பாகிஸ்தானின் படை பலத்தோடு கார்கில் போரில் ஈடுபட்டது. அச்சமயத்தில் இவ்விரு நாடுகளுமே அணு ஆயுத நாடுகளாக தங்களை பறைசாற்றி கொண்டன. 1989-லிருந்து பிரிவினைவாதிகள் இந்தியாவிற்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டதனால், பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இந்தியா சுதந்திரமடைந்த ஆகஸ்ட் 15, 1947 பிரதமர் நேரு "உலக நாடுகள் மற்றும் அண்டை நாடுகளுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், உங்கள் அனைவரிடமும் அமைதியையும் நட்பையும் பேணும் தேசமாகவே நாங்கள் இருப்போம் என்பதே" என்றார். இன்றைய இந்திய-பாகிஸ்தான் உறவுகள் "மூன்று முக்கியமான பிரச்சினைகளை மையமாக வைத்து இயங்குகிறது. காஷ்மீர், தீவிரவாதம் மற்றும் பொருளாதார உறவுகள், இம்மூன்று பிரச்சனைகளுமே, ஒன்றுக்கொன்று சார்ந்திருந்தாலும், தெற்கு ஆசியாவின் அமைதியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. காஷ்மீரை ஆக்கிரமிப்பு செய்ய முடியாததாலும், பங்களாதேஷ்யை இழந்ததாலும், இந்தியாவை தீவிரவாதத்தின் மூலம் சீர்குலைக்க, பாகிஸ்தான் முனைகிறது.

**சிம்லா ஒப்பந்தம் (1972)**

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமான அமைதி உடன்படிக்கை 1972, ஜூலை 2ஆம் நாளன்று ஹிமாச்சல பிரதேசத்தின் தலைநகரமான சிம்லாவில் கையெழுத்தானது. 1971இல் நடைபெற்ற பங்களாதேஷின் சுதந்திரப் போரின் தொடர்ச்சியாக இந்நிகழ்வு நடந்தது. பங்களாதேஷ் முன்பு கிழக்கு பாகிஸ்தானாக, பாகிஸ்தானின் முன்பு கிழக்கு பாகிஸ்தானாக, பாகிஸ்தானின் ஒரு அங்கமாக இருந்தது. இந்தியா-பங்களாதேஷின் கூட்டணி நாடாக சேர்ந்து, அப்போது இந்திய-பாகிஸ்தான் போராக 1971இல் அறிவிக்கப்பெற்றது. இரு நாட்டு அரசாங்கங்களும் தங்களின் நாடாளுமன்றங்களின் துணையோடு ஒப்புதல் பெற்றன. இவ்வொப்பந்தம் அதிபர் சுல்பிகர் அலி பூட்டோ மற்றும் இந்திய பிரதமர் இந்திரா காந்தியாலும் கையெழுத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் பங்களாதேஷ் தூதரக உறவு மேற்கொள்வதற்கு ஏதுவாக பாகிஸ்தான் கையெழுத்திட்டது.

**முக்கிய விதிகள்**

- ஐக்கிய நாட்டு சபையின் கொள்கைகளும், நோக்கங்களும் இரு நாட்டின் உறவுகளுக்கு வழிகாட்டியாக அமைதல்.
- இரு நாடு தொடர்பான சர்ச்சைகளும், பிரச்சினைகளும் அமைதியான முறையில் உடன்படிக்கை மூலம் தீர்வுக்கு கொண்டு வருதல்.
- நல்லிணக்கம், நல்ல அண்டை நாடு மற்றும் மக்களுக்கிடையேயான நீடித்த அமைதி ஆகியவற்றுக்கான இரு நாடுகளும் அமைதியான வாழ்வுக்கான உறுதிப்பாடாகும்; ஒருவருக்கொருவர் நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை மதித்தல்; மற்றும் ஒருவருக்கொருவர் உள் விவகாரங்களில் சமத்துவம் மற்றும் பரஸ்பர நன்மை அடிப்படையில்

இடைவிடாது இருத்தல்.

- ❖ இரு நாடுகளின் தேசிய ஒருமைப்பாடு, எல்லைப்பரப்பு, அரசியல் சுதந்திரம், இறையாண்மை, சமத்தவம் போன்றவைகளை மதித்தல்.
- ❖ ஐ.நா சபையின் விதிகளுக்கு ஏற்ப, ஒருவருக்கொருவர் அச்சுறுத்தாதிருத்தல் அல்லது படைகளின் மூலம் அச்சுறுத்தாமல் இருத்தல்.
- ❖ ஜம்மு-காஷ்மீரில், டிசம்பர் 17, 1971 ஆம் ஆண்டு போர் நிறுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட கட்டுப்பாட்டுக் எல்லைக்கோடு இரு தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்டு, எந்தவித பாரபட்சமும் இன்றி இருதரப்பும் மதித்தல், பரஸ்பர வேறுபாடுகள் மற்றும் சட்ட விளக்கங்கள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் இருதரப்பும் ஒருதலைபட்சமாக அதை மாற்ற முயற்சிக்க மாட்டார்கள. மேற்கூறிய அறிக்கையை மீறும் அச்சுறுத்தல் அல்லது சக்தியைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு இருதரப்பும் மேற்கொள்கின்றனர்.
- ❖ இவ்வொப்பந்தம் கையெழுத்திட்ட பிறகு, 30 நாட்களுக்கான படைகளை திரும்பப்பெறல் இவையாவும் முக்கிய விதிகளாக கருதப்பட்டு கையெழுத்திடப்பட்டன.

**370-வது உறுப்பை திரும்பப் பெறல்**

2019 ஆகஸ்ட் 5, அன்று இந்திய குடியரசுத்தலைவர் உறுப்பு 370(1)க்கு (ஜம்மு மற்றும் காஷ்மீர் தொடர்பாக) ஒப்புதல் அளித்தார். இதன்படி, உறுப்பு 370-ன் கீழ் உள்ள அனைத்து சலுகைகளும் திரும்பப் பெறப்பட்டது. ஆனாலும், விதி 370(1)ன் கீழே சில திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த திருத்தங்களின் கீழ், இந்திய அரசமைப்பின் அனைத்து விதிகளும் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்துமாறு மாற்றப்பட்டுள்ளது.

**இந்திய-பாகிஸ்தான் உறவுகளில் முக்கிய பிரச்சினைகள்**

**1. சியாச்சின்**

1984 இல் இருந்து இந்திய-பாகிஸ்தான் போர் படைகள், உலகிலே மிகவும் உயரமான போர்க்களமான சியாச்சின் பனிமலையில் தங்களது எல்லைகளை பாதுகாத்து அப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க போராடும் நிலையில், மிஞ்சியது ஏமாற்றமே.

**துல்லியத் தாக்குதல்**

துல்லியத் தாக்குதல் - பாகிஸ்தான் அடுக்கடுக்கான தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவின் குறைந்த பாதிப்புள்ள செயல்முறை திட்டமே "துல்லியத் தாக்குதல்" என அழைக்கப்படுகிறது.

- ❖ இவ்வகை தாக்குதல் குறிப்பிட்ட இராணுவ தளவாடங்களை குறிவைப்பது.
- ❖ குடிமை பகுதிகளுக்கு குறைந்த சேதாரத்தை அளிப்பது.
- ❖ குறைந்த அல்லது மனித சேதமில்லாத தாக்குதல்கள்.

**2. நீர் பங்கீட்டு பிரச்சனை**

காஷ்மீரிலிருந்து உருவாகும் ஆறுகள் பாகிஸ்தானின் "சிந்து நதி" ஆற்று படுகைக்கு செல்லும் பட்சத்தில் நீர் பகிர்வதில் கருத்து ஒற்றுமையின்மை எழுகிறது. 1960இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட சிந்து நதி உடன்படிக்கையின்படி, மூன்று கிழக்கு ஆறுகளிலிருந்து வரும் நீர் இந்தியாவிற்கும், மேற்கு ஆறுகள் மூன்றிலிருந்து வரக்கூடிய நீர் பாகிஸ்தானிற்கும் உபயோகப்படுத்தலாம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்தியா நீர்வரத்து வரும் வழியில் அணைகளைக் கட்டி நீரைதன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதாக, பாகிஸ்தான் தரப்பு குற்றம் கூறுகிறது. இதை இந்தியா மறுக்கிறது.

**3. சர் கிரிக் பிரச்சினை**

**ஒரு நூற்றாண்டு காலச்சிக்கல்**

**1908**

கிரிக் பகுதியில் இருந்து விறகு சேகரிப்பதற்காக கட்ச் பகுதியின் ரான் ஆட்சியாளர்களுக்கும் சிந்து அரசாங்கத்திற்கும் இடையே பிரச்சனை எழுந்தது.

**1914**

மும்பை அரசாங்கத்தின் தீர்மான வரைபடமானது கிரிக் பகுதியின் கிழக்கு கடற்கரைப் பகுதியை எல்லையாக வைத்தது. ஆனால் அந்த தீர்மானத்தின் 10-வது பத்தியானது கால்வாயின் நடுப்பகுதி அதன் எல்லை என்கிறது. இந்தப் பகுதிகள் முழுவதும் மும்பை மாகாணத்தின் அதிகார வரம் பெல்லைக்குள் வருபவைகளாகும்.

**1965 ஏப்ரல் - மே**

இந்திய – பாகிஸ்தான் இராணுவங்கள் ராணாகட்ச் பகுதியில் மோதிக் கொண்டன.

**1966 பிப்ரவரி**

இந்தியா – பாகிஸ்தான் நீர்ப்பாயம் கட்ச் எல்லை தொடர்பான தன்னுடைய அளவீட்டு முறை மூலம் செய்யப்பட்டது. இது இந்தியாவின் உரிமைகோரலில் 90 சதவீதத்தை ஆதரிக்கிறது. ஆனால் அது சர் கிரிக்கை சேராது.

**1997**

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இணக்கமான பேச்சுவார்த்தையை தொடங்கியது. இதில் கிரிக் பகுதி சிக்கல் குறித்த தீர்மானமும் அடங்கும்

**2005 – 2007**

சார்க் பகுதியில் இரண்டு சுற்று கூட்டுறவு எல்லை அளவீடானது இந்தியா – பாகிஸ்தான் கூட்டு நடவடிக்கைக் குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

**2008**

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற நான்காவது இணக்கப் பேச்சுவார்த்தையில் இரண்டு தரப்பும் கூட்டாக அளவீடு (வரைப்படம்) செய்ய ஒத்துக் கொண்டது. இது ஒரு கூட்டு நடவடிக்கை ஆகும்.

**ஜூன் 2012**

சர் கிரிக் பகுதியின் சிக்கல் மீதான பேச்சு வார்த்தை புது டில்லியில் தொடங்கிய பிறகு,இரண்டு தரப்பும், இந்த சிக்கலை, நீடித்தப் பேச்சு வார்த்தையின் மூலம் இணக்கமானத் தீர்வை காண வேண்டும் என்ற தங்களின் விருப்பத்தை வலியுறுத்தின.

காஷ்மீர் மற்றும் சியாச்சின் மட்டுமல்லாது சில பல முக்கியபிரச்சனைகளும் இவ்விரு அணு ஆயுத சக்தி நாடுகளை சுற்றி வலம் வருகின்றன. 70 ஆண்டுகளாக சர் கிரிக் பிரச்சனை தீர்வின்றி கிடப்பில் போடப்பட்டுள்ளது. சர் கிரிக் என்பது 96 கி.மீ நீர் பிரச்சனையாக 'கட்சி வளைகுடா' பகுதியில் அமைந்துள்ளது. இதன் உண்மையான பெயர் பான்கங்காவாகும். பிரிட்டிஷ் பிரதிநிதி சர் கிரிக்கு பின்னே பெயர் மாற்றமாகியுள்ளது. கிரிக் என்பது அரபி கடலில் குஜராத்தில் அமைந்துள்ள கட்ச் மண்டலத்தையும், பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தையும் பிரிக்கின்ற ஒரு பகுதியாகும். கட்சையும், சிந்து மாகாணத்தையும் பிரிக்கின்ற கடல் எல்லையே இந்த பிரச்சனைக்கு காரணியாகும். சுதந்திரத்திற்கு முன்பு, இம்மாகாணங்கள் மும்பையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. ஆனால் இந்திய சுதந்திரத்திற்கு பிறகு, கட்ச் இந்தியாவின் பகுதியாகவும். சிந்து பாகிஸ்தானின் மாகாணமாகவும் பிரிந்தது. இடம் மற்றும் எல்லை தொடர்பான பிரச்சனை மட்டுமல்லாது இவ்விடம் மீன் வளம் அதிகமுள்ள பகுதியாக திகழ்கிறது. இது மட்டுமல்லாது சர் கிரிக் நீர் நிலையில், இயற்கை வாயு மற்றும் எண்ணெய் வளம் மிகுந்து இருப்பதனால் இவ்விரு நாடுகளும் தீர்வு காணமுடியாமல் முடிவில்லாத பிரச்சனையில் ஈடுபட்டுள்ளனர்.

**கிளர்ச்சியாளர் தாக்குதலின் பட்டியல்**

❖ **ஜம்மு-காஷ்மீரின் சட்டசபையில் தாக்குதல்**

2001,அக்டோபர் 1, அன்று சட்டசபையின் அருகே கார் குண்டு வெடித்ததில் 27 நபர்கள் உயிரிழந்தனர். காஷ்மீர் பிரிவினைவாதிகள் குற்றம் சாட்டப்பட்டனர். இந்திய நாடாளுமன்ற தாக்குதல் டிசம்பர் 2001-க்கு நிகராக நடைபெற்ற தாக்குதல்தான் மேற்கூறியதாகும்.

❖ **அப்துல் ஹானி படுகொலை**

அனைத்து கட்சி ஹீரியத் தலைவர் அப்துல் ஹானி அடையாளம் தெரியாத நபர்களால் ஸ்ரீநகரில் படுகொலை செய்யப்பட்டார். படுகொலையின் தொடர்ச்சியாக இந்திய இராணுவத்தை எதிர்த்து அம்மாநிலம் முழுவதும் போராட்டம் மற்றும் கண்டனக் கூட்டம் நடத்தினர். போதுமான பாதுகாப்பு அவருக்கு தரப்படவில்லை என்பதே மக்களின் ஆதங்கமாக காரணம் கூறப்பட்டது.

❖ **2008 மும்பை தாக்குதல்**

நவம்பர் 2008இல் லஷ்கர்-இ-தொய்பாவின் பத்து உறுப்பினர்கள் 12 இடங்களில் துப்பாக்கி சூடு மற்றும் குண்டு வைத்தல் நிகழ்வுகளை நான்கு நாட்களாக அரங்கேற்றினர். உலக அரங்கையே அதிரவைத்த இக்கோரசம்பவம் 26 நவம்பரில் தொடங்கி 29 நவம்பரில் முற்றுப்பெற்றது. இச்சம்பவத்தில் 174 நபர்கள் உயிரிழந்தனர், 300 நபர்கள் படுகாய முற்றனர். தாக்குதல் நடத்திய 9 தீவிரவாதிகளும் இறந்தவர்களில் உள்ளடக்கம்.

❖ **2016 யூரி தாக்குதல்**

ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதியில் உள்ள யூயீல் 18 செப்டம்பர் 2016 அன்று நடந்த பயங்கர தாக்குதலில் 18 நபர்கள் படுகொலை செய்யப்பட்டதோடு, 20 நபர்கள் படுகாயமடைந்தனர். கடந்த 20 ஆண்டுகளில் நடைபெற்ற பல்வேறு தாக்குதல்களில், யூரி தாக்குதல் கடுமையான விளைவை ஏற்படத்தியதாகக் கருதப்படுகிறது.

❖ **2019 புல்வமா தாக்குதல்**

2019 பிப்ரவரி 14 அன்று காஷ்மீரில் புல்வாமா மாவட்டத்தில் ராணுவப் படை வாகனங்கள்,தற்கொலை தீவிரவாதிய வாகனம் மோதியதில் அவ்விடத்திலேயே 38 மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் படுகொலை செய்யப்பட்டனர். தேசிய நெடுஞ்சாலையில் நடந்த இக்கோரச் சம்பவத்தில் பயங்கரவாதியும் கொல்லப்பட்டார். பாகிஸ்தானின் இஸ்லாமிய தீவிரவாத குழுவான ஜெய்ஷ்-இ-முகமது நிகழ்வுக்கு பொறுப்பேற்றது.

| **காலவரிசை இந்திய-பாகிஸ்தான் உறவுகள்** | | |
|---|---|---|
| **வ.எண்** | **ஆண்டு** | **முக்கிய நிகழ்வுகள்** |
| 1 | 1947 | பிரிட்டன் பிரிவினை கொள்கையின் வாயிலாக இந்தியாவையும் பாகிஸ்தானையும் முறையே ஆகஸ்ட் 15,14 தேதிகளில் மதசார்பற்ற நாடுகளாக விடுதலை அளித்து காலனியாதிக்கத்திலிருந்து விலக்கியது. |
| 2 | 1947-48 | இந்தியாவும் பாகிஸ்தானும் பாகிஸ்தானின் பழங்குடியினர் ஆரம்பித்த தாக்குதலால், முதல் போரை சந்திக்க நேரிட்டது. |
| 3 | 1954 | ஜம்மு-காஷ்மீர் மாநிலம் இந்தியாவுடன் இணைவதற்கு உண்டான ஒப்புதல், மாநில சாசனச் சட்ட குழுவின் மூலமாக நிறைவேற்றப்பட்டது. |
| 4 | 1963 | 1962 இந்திய-சீனப்போரை தொடர்ந்து காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் சுவரன்-சிங்கிற்கும், பாகிஸ்தானின் சுல்பிகர் அலி பூட்டோவும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். |
| 5 | 1964 | 1963 பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்சினையை ஐ.நா-வில் முறையிட்டது. |
| 6 | 1965 | இந்தியா, பாகிஸ்தான் இரண்டாவது போர் |
| 7 | 1966 | 1966, ஜனவரி 10 நாளன்று இந்திய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும், பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் தாஷ்காண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு பொருளாதார மற்றும் தூதரக உறவுகளை மீட்பதற்கு உறுதி கொண்டனர். |
| 8 | 1971 | மூன்றாவது முறையாக இந்தியாவும் பாகிஸ்தானும் கிழக்கு பாகிஸ்தான் பிரச்சனைக்காக போரில் ஈடுபட்டனர். |
| 9 | 1972 | பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகர் அலி பூட்டோவும், இந்திய பிரதமர் இந்திரா காந்தியும் சிம்லாவில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். |
| 10 | 1974 | காஷ்மீர் சட்டசபை, அம்மாநிலத்தை இந்தியாவின் ஒரு பகுதியாக உறுதியளித்தது. பாகிஸ்தான் இதை எதிர்த்தது. |
| 11 | 1988 | இரு நாடுகளும் தங்களது அணு ஆயுத தளங்களை தாக்காமல் இருப்பதற்கு உறுதியளித்து கொண்டன. |
| 12 | 1989 | காஷ்மீரில் ஆயுத எதிர்ப்புக்கு நடவடிக்கைகள் தொடங்கியது. |

| | | |
|---|---|---|
| 13 | 1992 | ரசாயன ஆயுதங்களை தடைசெய்வதற்கு இரு நாடுகளும் கூட்டு பிரகடனத்தில் கையெழுத்திட்டன. |
| 14 | 1998 | பொக்ரானில் இந்தியா ஐந்து அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டது. இதை எதிர்த்து பாகிஸ்தான் சாகை குன்றுகளில் ஆறு அணு ஆயுத சோதனைகளை நடத்தியது. |
| 15 | 1999 | இந்திய பிரதமர் வாஜ்பாயும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் லாகூரில் சந்தித்தனர். |
| 16 | 2001 | 38 நபர்கள் காஷ்மீர் சட்ட சபை அருகே கொல்லப்பட்டதை தொடர்ந்து எல்லைக்கோட்டில் பதட்டம் அதிகமாகியது. |
| 17 | 2007 | பிப்ரவரி-18ல் இந்திய-பாகிஸ்தான் இடையேயான ரயில் பானிப்பட் அருகே (டெல்லிக்கு வடக்கு) குண்டு வைத்து தகர்க்கப்பட்டதில் 68 பேர் உயிரிழந்தனர். |
| 18 | 2012 | நவம்பரில் பாகிஸ்தான் குடிமகனான கசாப் தூக்கிலிடப்பட்டார். மும்பை தாக்குதலின் தீவிரவாதியான இவர் சம்பவம் நடந்து நான்கு ஆண்டுகளுக்கு பின்னால் தூக்கிலிடப்பட்டார். |
| 19 | 2016 | பாகிஸ்தான் நிர்வாக காஷ்மீரில் செப்டம்பர் மாதம் இந்தியாவில் துல்லியத் தாக்குதலை மேற்கொண்டது. |
| 20 | 2019 | பிப்ரவரி 26இல் இந்திரா, பாகிஸ்தானின் ஜெய்ஷ்-இ-முகமது குழுவின் தீவிரவாத முகாம்களை வான்வழி தாக்குதல் நடத்தி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. |

**இந்திய-பங்களாதேஷ் உறவுகள்**

பங்களாதேஷ் இந்தியா அண்டை நாடுகளில் முக்கியமான அங்கமாகவும், பங்குதாரர்களில் இன்றியமையாததாகவும், வடகிழக்குப் பகுதியில் நிலைத்தன்மையின் ஆதாரமாகவும், தென்கிழக்கு ஆசியாவிற்கும் பாலமாகவும் அமைந்துள்ளது. “கிழக்கு நோக்கி கொள்கை”க்கு முக்கியமான காரணியாகவும் அமைந்துள்ளது.

1970இல் பாகிஸ்தானிய தேசிய தேர்தலில் அவாமி லீக் கட்சி பெரும்பான்மை பெற்றது. ஆனால் மேற்கு பாகிஸ்தான் அந்த வெற்றியை அங்கீகரிக்காமல், அவாமி லீக் கட்சியினரை மிகவும் மோசமான அணுகுமுறையில் அடக்கியது. இந்நிலைமை கிட்டத்தட்ட போர்க்கலம் போன்ற சூழ்நிலையை கிழக்கு பாகிஸ்தானில் உருவாக்கி “முக்தி வாஹினி” என்ற சுதந்திர இயக்க குழு உருவாக வழிவகுத்தது.

**ரவீந்திரநாத் தாகூர்**

பங்களாதேஷ் உடன் வரலாற்று ரீதியான உறவு முறைக்கு அடித்தளமாக 1947க்கு முன்பாக அமைந்த இந்தியாவின் நிலப்பரப்பில் பார்க்கலாம். இரு நாட்டு மக்களின் கலாச்சாரம், மதம் மற்றும் மொழி ஆகியவையிடையே பல்வேறு ஒற்றுமைகளைக் காணலாம். இவ்விரு நாடுகளின் தேசிய கீதமும் கவிஞர் “ரவீந்திரநாத் தாகூரால்” எழுதப்பட்டதாகும். பங்களாதேஷின் உருவாக்கம் இந்தியாவின் மூலமாக என்பது தெற்காசிய நாடுகளின் மைல்கல் சாதனையாகும்.

கலவரம் பெருகும் பட்சத்தில் அகதிகளாக பெருவாரியான மக்கள் இந்தியாவில் தஞ்சமடைந்தனர். இதனால் சுதந்திர இயக்கத்திற்கு இந்தியா தன்னால் இயன்றவரை பயிற்சி மற்றும் ஆயுதங்கள் என்று உதவி செய்தது. பாகிஸ்தானின் திடீர் தாக்குதல், இந்தியாவை கிழக்குப் பாகிஸ்தான் நோக்கி போரை தொடங்குவதற்கு வழிகாட்டியது. டிசம்பர் 1971இல் பங்களாதேஷ் சுதந்திரம் பெற்று தனிநாடாக மாறியது.

புதிய நாடாக அறிவிக்கப்பட்ட பிறகு இந்தியாவிற்கு அண்டை நாடுகளின் உறவுகளை வலுப்படுத்துவதற்கு நிர்பந்தமாக மாறியது. ஜனவரி 1972இல் ஷேக் முஜிப்பூர் ரஹ்மான் பிரதமராக பதவி ஏற்ற பிறகு, இந்திய-பங்களாதேஷ் உறவுகளில் பொற்காலமாக விளங்கியது. மேலும் இந்திய-பங்களாதேஷ் நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

**இந்திய-பங்களாதேஷ் உறவுகளில் சவால்கள்**

**1. பராக்கா தடுப்பணைகள்**

பல்வேறுபட்ட இந்தியா-பங்களாதேஷ் உறவுகளின் பிரச்சனைகளில் மேற்கு வங்காளத்தில் உள்ள பராக்கா அணை முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்த அணை பங்களாதேஷிலிருந்து இரண்டு மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது. ஹுக்ளி ஆற்றை சுத்தப்படுத்துவதற்கு, அதில் வண்டல்மண் தேங்காமல் இருப்பதற்கும், பராக்கா தடுப்பணை உபயோகமாக உள்ளது. மேலும் மேற்கு வங்காளத்தில் உள்ள கொல்கத்தா துறைமுகம் இயங்கவும், தொழில் துறை மற்றும் விவசாயம் தழைக்கவும் இந்த அணை பயன்பாட்டில் உள்ளதாக இந்தியத் தரப்பு கூறுகிறது. ஆனாலும் 1970களிலிருந்து இந்த அணை தொடர்பான பிரச்சனைகள் இவ்விரு நாடுகளை மட்டுமல்லாது, உலக அரங்கின் கவனத்தையும் ஈர்த்து வருகிறது.

**இந்திய-பங்களாதேஷ் எல்லைக்கோடு**

- இந்திய-பங்களாதேஷ் எல்லைக் கோடானது 2,979 கி.மீ நீளத்தையும், 1,116 கி.மீ ஆற்று வழியையும் உள்ளடக்கியது. இவ்வெல்லை 54 ஆறுகளையும் உள்ளடக்கியது. பிரம்மபுத்திரா உட்பட இந்தியாவின் மேற்கு வங்காளம். மேகாலயா, மிசோரம், அசாம் மற்றும் திரிபுரா போன்ற மாநிலங்கள் பங்காளாதேஷிடன் 4,096 கி.மீ எல்லையை பகிர்ந்து காணப்படுகின்றன.

- திரிபுரா மற்றும் வடகிழக்கு மாநிலங்கள், பங்களாதேஷ், மியான்மர், பூடான் மற்றும் சீனா போன்ற நாடுகளால் சூழப்பட்டும், ஒரே நில மார்க்கம் அசாம் மற்றும் மேற்கு வங்காளம் மூலமாக மட்டுமே அமைந்துள்ளது. இதன் பிரதான புள்ளியாக மேற்கு வங்காளத்தின் சிலிகுரி அமைந்துள்ளது.

**2. டீஸ்டா நதி நீர் பங்கீடு**

டீஸ்டா காங்சே பனிப்பாறையிலிருந்து கிட்டத்தட்ட 7,068மீ (23,189 அடி) உயரத்தில் கிழக்கை நோக்கி, சிக்கிம், மேற்கு வங்காளம் மற்றும் பங்களாதேஷிற்கு பாயக்கூடியதாக உள்ளது. இந்த நதியானது பங்களாதேஷுக்கு நுழையும் பொழுது, பிரம்மபுத்திரா நதியோடு கலந்து பின் வங்காளவிரிகுடாவில் முடிகிறது. 1979இல் மேற்கு வங்காளவிரிகுடாவில் முடிகிறது. 1979இல் மேற்கு வங்காள அரசு தடுப்பணையை இதன் குறுக்கே கட்டியபோது இப்பிரச்சனை தொடங்கியது. இதற்கு எதிர்ப்பாக பங்களாதேஷ் அரசு, அந்நாட்டின் நெற்களஞ்சியமான" ராக்பூர் மாகாணம் பாதிப்பதாக வாதிட்டது. 1983இல் நீர் பங்கீடு தொடர்பாக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஆனாலும் பங்களாதேஷுக்கு தேவையான நீரை இந்தியாவால் வழங்கிட முடியவில்லை. அரசியல் ரீதியாக நீர் பங்கீட்டு பிரச்சனை இன்றளவிலும் தீர்க்க முடியாததாக உள்ளது.

**3. நியூ மூர் தீவு**

நியூ மூர் தீவு அல்லது தென் தளபதி என்பது வங்காள விரிகுடாவில் இருக்கும் மனிதர்கள் நடமாட்டம் இல்லாத ஒரு தீவாகும். இத்தீவு கங்கை-பிரம்மபுத்திரா டெல்டாவில் அமைந்துள்ளதாகும். 1970இல் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் உருவான புயலால் இத்தீவு உண்டானது. இந்திய-பங்களாதேஷ் கடந்த கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக இருந்த இத்தீவு பிரச்சனை, 2010இல் கடல் மட்ட உயர்வால் விடை கண்டது. இந்த நியூ மூர் தீவு சுந்தரவன பகுதிகளால் முழுமையாக மூழ்கியுள்ளது. செயற்கைக்கோள் படங்களும், கடல் ரோந்து படைகளின் தீர்மானமான முடிவுகளின் வழியாக பிரச்சனை ஒரு முடிவுக்கு வந்தது. இத்தீவில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு இருப்பதாக வந்த செய்தியினால் இந்தியாவும், பங்களாதேஷும் பரஸ்பரம் போட்டி போட்டுக் கொண்டன. மேலும் கடல் மட்டம் அதிகமாகும்போது மூர் தீவு காணாமல் போவதும், நீர் மட்டம் குறையும் போது தெரிவதும், வழக்கமாக காணப்படுகிறது. மூர் தீவில் மக்கள் வசிக்காத போதிலும், அதில் நிரந்தர குடியேற்றங்கள் அல்லது நிலையங்கள் எதுவும் இல்லை என்றாலும், இந்தியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இருப்பதைப் பற்றிய ஊகங்களால், இந்தியாவும் பங்களாதேஷும் அதன் மீது உரிமைக் கோரின.

**தீர்மானம்**

நிரந்தர நடுவர் மன்றம் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது, பங்களாதேஷிற்கு ஆதரவாக உள்ளது. ஜுலை 2014இல் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி வங்காள விரிகுடாவில் 19,467 ச.கி.மீ பங்களாதேஷிற்கு சொந்தமானதாக அறிவிக்கப்பட்டது. 25,000 ச.கி.மீ பிரச்சனைக்குரிய வங்காள விரிகுடாவில், மூர் தீவானது இந்தியாவிற்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது.

**4. சக்மா அகதிகள் பிரச்சனை**

சிட்டகாங்க் மலை குன்றுகளில் வாழும் சக்மா மற்றும் ஹஜாங்க் குழுமங்கள் 1964-65இல் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் ஆவர். கர்னாபுலி ஆற்றின் குறுக்கே ‘‘கப்தாய் அணை’’ கட்டும்போது மேற்கூறியவர்கள், தங்களின் பூர்வக்குடி பகுதிகளை இழந்து அகதிகளாக மாறினார்கள். மேலும் அவர்கள் வேறு மதத்தினராய் இருந்தாலும், வங்காள மொழியை பேசாததாலும் பல்வேறு பிரச்சனைகளுக்கு உள்ளானார்கள். இதனால் இந்தியாவில் தஞ்சம்புக விரும்பினார்கள். இந்திய அரசாங்கம், அருணாச்சலப்பிரதேசத்தில் இம்மக்களுக்கு முகாம்களை உருவாக்கி இடம் தந்தது. கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு மேலாக சக்மா அகதிகள் இம்முகாம்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 2011இல் மக்கள் கணக்கெடுப்பின்படி, அருணாச்சலப்பிரதேசத்தில் மொத்தம் 47,471 சக்மா அகதிகள் வாழ்கிறார்கள்.

**5. எல்லை பிரச்சனை**

பங்களாதேஷும், இந்தியாவும் 4096 கி.மீ தங்கள் எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளன. இவ்வெல்லையானது மொத்தம் ஐந்து மாநிலங்கள், மேற்கு வங்காளம், அசாம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரமை கடந்து செல்கிறது. பங்களாதேஷ்ற்கும், இந்தியாவிற்கும் இடையில் மொத்தம் 162 உறைவிடங்கள் காணப்படுகின்றன. இந்த எல்லை உறைவிடங்கள் பெரும்பாலும் கடத்தல்காரர்களுக்கு ஏதுவான நிலையில் உள்ளன. தேசிய எதிர்ப்பு பொருள்கள், ஆள் கடத்தல் மற்றும் கிளர்ச்சியாளர்களுக்கு, இந்த எல்லையானது சொர்க்க பூமியாக அமைந்துள்ளது.

இதனால் எல்லை பாதுகாப்பு என்பது இரு நாடுகளுக்குமே பெரும் சவாலாக உள்ளது. பல்வேறு பேச்சுவார்த்தையின் மூலம் 50 உறைவிடங்கள் இந்தியாவிற்கும், 111 பங்களாதேஷ்ற்கும் பிரிக்கப்பட்டுள்ளது. எல்லைகள் பிரிக்கப்பட்டாலும், ஆயுத கடத்தல், ஆள் கடத்தல், போதை பொருள் மற்றும் தீவிரவாதம் போன்றவைகள் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு பிரச்சனைகளாக தொடர்கின்றன.

**வர்த்தக மற்றும் இணைப்பு**

- ❖ இரு நாடுகளுக்கிடையே வர்த்தகம் நிதானமாக உயர்நிலையை நோக்கி எட்டிக்கொண்டிருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாக இது 17 சதவீதமாக உயர்ந்துள்ளது.

- ❖ பேருந்து மற்றும் ரயில் சேவைகள் டாக்காவிற்கும். கொல்கத்தாவிற்கும் இடையே தொடங்கப்பட்டுள்ளது.

- ❖ இரு நாடுகளுக்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, அசுகன்ஜ்-சகிகன்ஜ் குஷியாரா ஆற்றிலும், ஜமுனா ஆற்றின் சிராஜ்காங்-டைக்காவா நீட்சியும் வளர்ச்சி அடைவதற்கு, இரு நாட்டினிடையே இணைப்பு ஏற்படுத்துவதற்கும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இணைப்பானது பெருவாரியான சரக்கு பொருள்கள் வடகிழக்கு பகுதிகளுக்கு செல்ல ஏதுவாகவும், அதற்கு உண்டான செலவு குறைவாகவும் அமையுமாறு உள்ளது. மேலும் இப்பாதையானது சிலிகுரி ‘‘இரு நாடுகளின் எல்லைகளுக்கருகே அமைந்துள்ள குறுகிய இந்திய நிலப்பரப்பில்’’ கூட்ட நெருக்கடியை குறைப்பதாகவும் உள்ளது.

- ❖ இரு நாடுகளுக்குமான இணைப்பு பாதை பரஸ்பரம் முக்கியமானதாக கருதப்படுகிறது. பயணிகள் மற்றும் சரக்கு இரயில் போன்றவைகள் இரு நாடுகளின் வளர்ச்சிக்கும் துணை புரிகிறது.

- ❖ துணை மண்டல ஒத்துழைப்பிற்கு டாக்காவுடனான கூட்டு முயற்சி முக்கியமானதாக கருதப்படுகிறது. டாக்காவின் பங்கு பூடான், பர்மா, இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளின் நட்புறவு பலப்படுத்தலும் இதற்கு அவசியமாகிறது. கிழக்கு ஆசியாவிற்கும் வங்காள விரிகுடா நாடுகள் வளர்ச்சிக்கும் வித்திடும் வகையில் டாக்கா நடவடிக்கை எடுத்தாலும் அவசியமாகிறது.

- ❖ ஆசிய புவி அரசியலில் தற்போதைய முக்கிய அம்சமாக போக்குவரத்தும், இணைப்புபாதையும் முக்கிய பங்கு வகிக்கின்றன. 2016இல் சீன குடியரசுத்தலைவர் ஜீ ஜின்பிங் பங்களாதேஷ்

வருகை புரிந்த பொது, அந்நாடு "ஒரே பாதை ஒரே சாலை முன்னெடுப்பு" திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க முன்வந்தது.

- ❖ சீனாவின் முதலீடு பன்மங்காக, பல ஆண்டுகளாக பங்களாதேஷில் இருந்து வருகிறது. சிட்டகாங்கில் ஆழ்கடல் துறைமுகம் உட்பட "ஒரே பாதை ஒரே சாலை முன்னெடுப்பு" திட்டக் கொள்கையின் மூலம் மற்ற அனைத்து வளர்ச்சி திட்டங்களும் சிறியதாகி, இந்தியாவின் நட்புறவிற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

**மின்னாற்றல் ஒத்துழைப்பு**

- ❖ இரு நாடுகளின் மின்னாற்றல் பகிர்வு, நேர்மையாகவும் வலிமையாகவும் இருந்து வரும் நிலையில் திரிபுரா மாநிலத்திலிருந்து பங்களாதேஷ்ற்கு 160 மெகா வாட், 2013-லிருந்து மேற்கு வங்காளத்திலிருந்து 500 மெகா வாட் தொடர்ந்து அனுப்பப்படுகிறது.

- ❖ மேற்கொண்டு 100 மெகா வாட் ஆற்றல் கேட்கும் நிலையில் அடுத்த வரக்கூடிய காலக்கட்டங்களில் இரு நாட்டு தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்த உள்ளனர்.

**தற்கால ஒத்துழைப்பு**

- ❖ இந்தியா-பங்களாதேஷ் இராணுவ உடன்படிக்கை என்பது இரு நாடுகளுக்கிடையேயான நீண்ட நாளைய கனவாகவே இருந்து வருகிறது. தகவல் பரிமாற்றம், கூட்டுப் பயிற்சி, பாதுகாப்பு வலிமைப்படுத்தல், இவையாவும் உள்ளடக்கம் ஆகும். ஆனாலும் சீனாவிற்கு, பங்களாதேஷ் மிகப்பெரிய கூட்டாளியாக இருப்பதனால், இந்தியா சற்று கவனமாக முடிவெடுத்தல் அவசியமாகிறது.

- ❖ இந்தியா உடனான பாதுகாப்பு உறவு, உறுதியாக பங்களாதேஷிற்கு உலக அரங்கில் நன்மையை ஏற்படுத்தும். அதேபோல் இந்தியாவிற்கு, பங்களாதேஷ் உடனான வலிமையான இராணுவ நட்புறவே, கிழக்கு துணை கண்டத்தில் அமைதியையும், வளத்தையும் ஏற்படுத்தும்.

- ❖ இராணுவ நட்புறவின் அடித்தளமாக சம இறையாண்மையும் புவிப்பரப்பு உண்மை நிலவரமும் இருக்கும் பட்சத்தில் தொலைதூர வலிமையான நட்புறவாக மாறுவதற்கு வாய்ப்பு இரு நாடுகளுக்கிடையே காணப்படுகிறது.

**முடிவுரை**

இந்தியா-பங்களாதேஷ் உறவுகள் மூன்று "டி"(3T)-க்களில் அமைந்துள்ளதாக காணப்படுகிறது. 1. தீவிரவாதத்தை சமாளித்தல், 2. வாணிபம் மற்றும் போக்குவரத்து 3. டீஸ்டா ஒப்பந்தம். புது தில்லி மற்றும் டாக்கா இடையே வளர்ந்து வரும் பரஸ்பர நம்பிக்கையும், அரசியல் ஆறுதலும் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் பிரச்சினைகளைத் தீர்த்து உறவை முன்னெடுத்து கொண்டு செல்வோம் என்று நம்ப வேண்டும். இந்தியாவின் வடகிழக்குக்கு பகுதிக்கு இது அவசியமானது. மேற்கூறிய அனைத்து பிரச்சனைகளும் தீர்வாகின்ற பட்சத்தில் இந்திய துணைக்கண்டத்திற்கும், வடகிழக்கு பகுதிக்கும், கிழக்கு ஆசிய மண்டலத்திற்கும் இரு நாட்டு உறவுகள் நன்மை பயக்கும்.

**இந்திய-சீன உறவுகள்**

நவீன வரலாற்று பின்னணி கொண்ட இந்தியா சீனா உறவுகள் சீனா 1949இல் கம்யூனிச நாடாக மாறியதிலிருந்து தொடங்குகிறது. கலாச்சாரப்பட்டுசாலை முன்னேடுப்பு, நெருங்கிய பொருளாதார உறவுகளை கொண்டுள்ளது. சீனா மக்கள் குடியரசை அங்கீகரித்த முதல் நாடும் இந்தியாவே ஆகும். எனினும் 1950ஆம் ஆண்டு திபெத்தை சீன ராணுவம் ஆக்கிரமித்த போது இந்தியா அதனை சந்தேகத்துடன் பார்த்த போது, இந்த ஆரம்ப கல நல்லுறவு நீண்ட காலம் நீடிக்கவில்லை. இந்தியரும்-சீனரும் சகோதரர்கள் என்ற அங்கீகாரம் இந்தியாவின் அச்சத்தை சிறிதளவு போக்கியது. இந்த எல்லா முன்னேற்றங்களும் 1962ஆம் ஆண்டு சீனா போரின் மூலம் தொலைந்து போயின. இந்திய-சீன உறவுகளை நாம் விரிவாக மூன்று அம்சங்களைக் கொண்டதாக

வகைப்படுத்தலாம். அவைகள், எல்லைப் பிரச்சனை, பொருளாதார நலன் மற்றும் சர்வதேச விவகாரங்களில் ஒத்துழைப்பு என்பதாகும்.

இந்தியா மற்றும் சீனா ஆகிய இரண்டும் மிக நீண்ட வரலாற்று பின்னணிக் கொண்ட நாகரிகரீதியான (Civilization) சக்திகள் ஆகும். புத்த மார்க்கமானது நூல் வடிவத்திலும், பண்பாட்டு வடிவிலும் இந்தியாவில் இருந்து சீனா சென்றது. பாஹியான், யுவான் சுவாங் போன்றவர்கள் பண்டைய இந்தியாவை ஆய்வு செய்ய வந்த புகழ்பெற்ற சீனப் பயணிகள் ஆவர்.

**எல்லை பிரச்சனை**

இந்தியா மற்றும் சீனா ஏறத்தாழ 4056 கிலோ மீட்டர் நீள எல்லையைப் பகிர்ந்துக் கொள்கின்றன. இந்த எல்லை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை கிழக்கு பூடானுடனான எல்லை, உத்திரப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹிமாச்சலப் பிரதேசங்களுடனான மைய எல்லை மற்றும் ஜம்மு-காஷ்மீர் பகுதிகளான சின்கியாங் மற்றும் திபெத் எல்லைப் பகுதிகள் போன்றவையாகும். இந்திய-சீன எல்லையானது மெக்மோகன் கோடு (Mc Mohon) என்ற எல்லைக்கோட்டினால் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெயர் பிரிட்டிஷ் அமைச்சரவையில் இந்தியாவிற்கான வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த ஹென்றி மெக் மோகன் என்பவர் நினைவாக வைக்கப்பட்டது. இந்த எல்லை வரையறையானது 1914 ஆம் ஆண்டு சிம்லாவில் நடைபெற்ற மாநாட்டில் பிரிட்டிஷ் இந்தியா, சீனா மற்றும் திபெத் பிரதிநிதிகளால் தீர்மானிக்கப்பட்டது. இந்த எல்லைக்கோடானது அனைத்துப் பிரதிநிதிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இருந்தபோதிலும் சீனா, பிற்காலத்தில் இது ஒரு ஏகாதிபத்திய எல்லைக்கோடு என்று கண்டித்தது. இந்தியா இதனை சீனாவுடனான எல்லைக்கோடு என்று தொடர்ந்து ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திபெத்தை சீனர்கள் இணைத்து வைத்துள்ளதைப் பற்றிப் பேசாமல், இந்திய-சீன எல்லைப் பிரச்சனையைப் பற்றி புரிந்துக் கொள்ள முடியாது. இந்திய-சீன எல்லைப் பிரச்சினை ஒரு நூற்றாண்டு காலமுடையதாக இருந்தது. அதன் உடனடிக் காரணம் 1950ஆம் ஆண்டு சீனா திபெத்தை இணைத்து கொண்டதாகும். சீனா திபெத்தை ஆக்கிரமிப்பு செய்ததற்கான காரணம், வரலாற்று அடிப்படையிலான இணைப்பு மற்றும் முதன்மையானதாக, ராணுவம் சார்ந்த கணக்கீட்டின் அடிப்படையில் (Strategic Calculation) எடுத்துக் கொள்ளப்பட்டது என்றும் தெரிகிறது.

நீண்ட உள்நாட்டுப்போர் 1949ஆம் ஆண்டில் முடிவடைந்தவுடன், சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியானது நிறுவப்பட்டது. சீனா திபெத்தை என்றும் தனது மாகாணமாக கருதியது மற்றும் அதனை செஞ்சீனத்துடன் இணைக்க முற்பட்டது. கம்யூனிஸ்ட் ஆட்சியானது அதனை ஒரு தன்னாட்சி மாகாணமாக நடத்தியது. இறையாண்மை அரசாகிய திபெத் சோசலிச சீனாவுடன் இணக்கமாகச் செல்ல முடியவில்லை. திபெத்திய பிரச்சினை, குறிப்பாக திபெத்திய தலைவர் தலாய்லாமா மற்றும் அவரது மக்களுக்கு புகலிடம் வழங்குவது இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான பிளவுக்கு ஒரு காரணமாக இருந்தது.

திபெத் எப்பொழுது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதோ, அன்று முதல் சீனா இந்தியாவின் பல பகுதிகளை தங்களுடையது என கேட்க ஆரம்பித்தது. 1950ஆம் ஆண்டுகளில் இருந்து இரண்டு நாடுகள் பேசி வந்தபோதிலும், எல்லைகளைப் பற்றித் தெளிவான அடையாளத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை.

அது மட்டுமல்லாமல், அடிக்கடி எல்லைத் தாண்டிய ஊடுருவல் இருப்பதாக தகவல் இருக்கிறது. 1961ஆம் ஆண்டுக்குள்ளாக எல்லைகளை உறுதியாக நிறுவுவது மற்றும் ''முன்னெடுக்கும் கொள்கையை'' ஆரம்பித்து வைத்தது, பிரச்சனைக்குரிய பகுதிகளில் ராணுவ(காவல்) நிலைகளை நிறுவுவது என இந்தியாவால் தீர்மானிக்கப்பட்டது. இந்தியாவின் இந்த நடிவடிக்கையால் சீனாவுடன் இணக்கமாக இணைந்து செல்ல முடியவில்லை. 1962ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ஆம் நாள் சீனா லடாக் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தின் மீது மிகப் பெரிய தாக்குதல் நடத்தியது. இந்தப் போரானது 31 நாட்கள் மட்டுமே நீடித்தது. இருந்தபோதிலும், இந்தியாவின் மீது நீண்ட காலம் இருக்கும்படியான அவமானத்தை ஏற்படுத்தியது.

**இந்திய-சீனப் போர் 1962**

❖ சீனா திபெத்தை ஆக்கிரமிக்கும் என்று அறிவித்தவுடன் இந்தியா, நடக்க இருக்கும் திபெத் சிக்கல் பற்றி பேச்சுவார்த்தைக் குறித்த எதிர்ப்பு கடிதம் ஒன்றை அனுப்பியது. மேலும் சீனா இன்னும் அதிகப் படைகளை அக்ஷாய்சின் எல்லையில் மிகவும் மூர்க்கமாக குவித்தது.

❖ 1954 ஆம் ஆண்டு இந்தியாவும் சீனாவும் பரஸ்பர அமைதியாக இணைந்திருப்பது என்ற ஐந்து கோட்பாடுகளை கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்டன. அந்த விதிகளின் அடிப்படையில் திபெத்தில் சீனாவின் ஆட்சியை இந்தியா ஒத்துக்கொண்டது.

❖ ஜூலை மாதம் 1954ஆம் ஆண்டில் நேரு இந்தியா வரைபடத்தில் திருத்தம் செய்வது குறித்து எல்லா எல்லை பகுதிகளின் தீர்க்கமான எல்லைகளைக் கெட்டு ஒரு நினைவூட்டும் கடிதத்தை எழுதியிருந்தார். எனினும் கிட்டத்தட்ட 1,20,000 சதுர கிலோ மீட்டர் இந்திய எல்லை வரைபடத்தில் பிழையிருப்பதாக, சீன மக்கள் குடியரசின் முதல் பிரதமரான சூ-யென்-லாய் வரைபடத்தில் பிழையிருப்பதாக பதிலளித்தார்.

❖ மார்ச், 1959ஆம் ஆண்டு தலாய்லாமா தப்பி ஓடியதால் இந்தியா அவருக்கு அடைக்கலம் கொடுத்து வைத்ததை சீனா மக்கள் குடியரசின் தலைவர், மாசேதுங் அவமானப் படுத்தப்பட்டதாகக் கருதினார். திபெத்தில் உள்ள லாசா கிளர்ச்சிக்கு இந்தியாதான் காரணம் என்று மாவோ கூறியபோது, இரு நாடுகளுக்கு இடையே பதட்டம் அதிகரித்தது.

❖ திபெத்தில் சீனாவின் கட்சிக்கு இந்தியா அச்சுறுத்தலாக உள்ளது என்று எண்ணமானது இந்திய-சீனப் போருக்கு மிக முக்கியமான காரணமாகும்.

❖ கொங்கா கணவாயில் அக்டோபர், 1959ஆம் ஆண்டு இரண்டு இராணுவத்தினருக்கு இவையே நடந்த சண்டையில் பல இந்திய காவல் துறையினர் கொல்லப்பட்டனர். இதன் மூலம் போரில் ஆற்றல் இந்தியாவிற்கு இன்னும் முழுமையாக வரவில்லை என்பதை நேரு உணர்ந்தார். நமது நாடு பிரச்சினைகளை எல்லையைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருந்து பின்வாங்கியது.

❖ 1962ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ஆம் தேதி, லடாக் பகுதியில் சீனமக்கள் விடுதலைப்படை படையெடுத்து, அது வடக்கு கிழக்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மெக்மோகன் எல்லைக்கோட்டைக் கடந்தது.

❖ போர் ஆரம்பிக்கும் தருவாய் வரை, இந்தியத் தரப்பு போர் துவங்காது என்று நம்பியிருந்தது, மற்றும் அது சிறிய அளவு தயாரிப்புடனே இருந்தது. அப்பகுதியில் இந்தியா இரண்டு படைப் பிரிவுகளை மட்டும் நிறுத்தியிருந்தது. சீனாவோ மூன்று படைப்பிரிவுகளை நிறுத்தியிருந்தது.

❖ நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்துபோன பிறகு, இந்தியாவின் சார்பாக அமெரிக்கா தலையிடும் அச்சுறுத்தல் காரணமாக இருதரப்பும் 1962ஆம் அண்டு நவம்பர் 19ஆம் தேதி போர் நிறுத்தத்தை முறையாக அறிவித்தன. “சீனா தற்சமயம் வைத்துள்ள மெக்மோகன் எல்லையில் வடக்கு பகுதியிலிருந்து விலகி கொள்வதாக அறிவித்தது.

இவ்வாறு 1962ஆம் ஆண்டு இந்தியா-சீனப்போர் முடிவுக்கு வந்தது. இந்த பிரச்சினையை சமூகமாகத் தீர்க்க அணிசேரா நாடுகளில் கொழும்பு மாநாடு நடத்தப்பட்டது.

இன்னும் இன்றைய நாட்களில் கூட 1962ஆம் ஆண்டு இந்திய-சீனப் போர் விரிவான விவாத தலைப்பாகவே இருக்கிறது. இந்தப்போரின் விளைவாக இந்திய-சீனாவிற்கு இடையே ஒரு புதிய எல்லைக்கோடு தோன்றியது, இது உண்மையான கட்டுப்பாடு கோடு (LAC) எனப்படுகிறது. 1993ஆம் ஆண்டு உண்மையான எல்லைக்கோடு நெடுகிலும் அமைதியயையும், சமாதானத்தையும் பராமரிக்க, இந்திய-சீன எல்லைப் பகுதியின் மீது, பிரதமர் நரசிம்ம ராவ் சீனப் பயணத்தின்போது ஒரு உடன்படிக்கையானது கையெழுத்தானது.

**ஆறு நாடுகள் அடங்கிய கொழும்பு மாநாடு (டிசம்பர்10,1962)**

- இந்திய-சீனா இடையே தொடரும் போர் பற்றி பேசுவது தொடர்பாக சிறிமாவோ பண்டாரா நாயக்கா கூட்டிய கூட்டம்தான் கொழும்பு மாநாடு என்பதாகும். இது பர்மா, கம்போடியா, எகிப்து, கானா, மற்றும் இந்தோனேஷியா நாட்டுத்தலைவர்கள் அனைவரையும் ஒன்றாகக் கொண்டுவந்து, இரண்டு நாடும் ஆசிய நாடுகளுக்கிடையே உள்ள சிக்கல்களை தீர்க்க ஏற்பாடு செய்தது.

- இந்தியா பேச்சுவாாத்தைகளை துவங்குவதின் ஆரம்பத்தில் கொழும்பு மாநாட்டின் கோட்பாடுகளை அதன் ஆரம்பம் முதல் கோட்பாடு ரீதியாக ஏற்றுக்கொண்டது.

**இந்திய-சீன எல்லை பிரச்சினை**

- இந்தியா-சீனா ஆகிய இரு நாடுகளுக்கிடையே இரண்டு பெரிய மற்றும் பல சிறிய துண்டுத்துண்டான தனித்த பகுதிகள் எல்லை இறையாண்மைக்கான போட்டி நிலவுகிறது.

- கடைக்கோடி மேற்குப் பகுதியான அக்ஷாய்சின் பகுதியானது ஜம்மு மற்றும் காஷ்மீரின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தியா உரிமை கோருகிறது. அதேபோல லடாக் பகுதியை அவ்வாறே உரிமைக் கோரினாலும், ஆனால் அப்பகுதியானது. சீனாவின் சின்ஜியாங் என்ற தன்னாட்சி பிரதேசத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

- இப்பகுதியானது கண்களுக்கு எட்டியவரை வாழ்விடமேயில்லாத சின்ஜியாங்-திபெத் நெடுஞ்சாலை கடக்கும் ஒரு மேட்டு நிலமாகும்.

- மற்றொரு பெரிய பிரச்சனைக்குரியப் பகுதியானது, மெக்மோகன் எல்லைக்கோட்டிற்கு தெற்கே அமைந்துள்ள கடைக்கோடி கிழக்கு பகுதியாகும். இப்பகுதியானது முன்னர் வடகிழக்கு எல்லை மாகாணம் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் இப்பொழுது அருணாச்சலப் பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது. சீனாவின் இப்பகுதியினை உரிமை கோரப்படுகிறது.

- மெக்மோகன் எல்லைக்கோடானது 1914ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியா-திபெத் இடையிலான சிம்லா மாநாட்டின் ஒரு பகுதியாகும், இந்த ஒப்பந்தத்தை சீனா நிராகரித்தது.

**பொருளாதார உறவுகள்**

1980ஆம் ஆண்டுகளின் மத்தியிலிருந்து நெருக்கமான இருதரப்பு பொருளாதார உறவுகள், இந்திய-சீனாவிற்கு இடையே ஆரம்பமானது. இரண்டு நாடுகளின் அரசாங்கங்களுக்கும் துவக்கி வைத்த பேச்சுவார்த்தை செயல்முறை, பொதுவான வர்த்தக நலன்களைப் பற்றி கண்டறிய உதவியாக இருந்தது. இந்தியாவும்-சீனாவும்1984ஆம் ஆண்டு ஒருவர்த்தக உடன்படிக்கையினை எட்டின, இது அவைகளுக்கு இடையே "மிகவும் சாதமகமான தேசம்"(MFN) என்ற தகுதியினை அளித்தது.1992ஆம் ஆண்டு முதல் இந்திய மற்றும் சீனா முழு அளவிலான வர்த்தக உறவில் ஈடுபட்டு வருகிறது.

இந்திய-சீன வர்த்தகம் 2016ஆம் ஆண்டு 71.18 பில்லியன் அமெரிக்கா டாலராக இருந்தது. சீனாவிற்கு இந்தியாவின் ஏற்றுமதி 11.748 பில்லியன் டாலராக இருந்த போது, சீனாவிலிருந்து இந்தியாவின் இறக்குமதியானது 59.428 பில்லியன் டாலராக இருந்தது. சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறைப் 2016ஆம் ஆண்டு 47.68 பில்லியன் டாலராக இருந்தது. சீனப் பொருள்கள் ஏற்றுமதியாவதற்கு இந்தியா ஏழாவது மிகப் பெரிய நாடாகவும், சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதில் இந்தியா 27-வது பெரிய நாடாகவும் இருக்கிறது. சீனாவிற்கு ஏற்றுமதியாவதில் முதன்மையாக இருக்கும் பொருள்கள் வைரம், பருத்தி இழை, இரும்புத்தாது, தாமிரம் மற்றும் கரிம வேதிப் பொருள்கள் போன்றவையாகும். இந்தியாவிற்கு ஏற்றுமதியாகும் சீனாவின் முக்கியமானவைகள் மின்னனு எந்திரங்கள், உபகரணங்கள், உரங்கள், சீன கரிமப் பொருள்கள் உள்ளிட்டனவையாகும். 2018ஆம் ஆண்டு மார்ச் வரையிலான மொத்த சீன முதலீடானது 4.91 பில்லியன் அமெரிக்கா

டாலராகும் மற்றும் சீனாவில் இந்தியாவின் 2017ஆம் ஆண்டு, மார்ச் வரையிலான மொத்த முதலீடு 705 மில்லியன் அமெரிக்கா டாலரை எட்டியது.

**சர்வதேச ஒத்துழைப்பு**

சர்வதேச அரங்கத்தில், இந்தியா-சீனா ஆகிய இரண்டும் வளங்களுக்கான போட்டியாளர்கள் ஆவர். புதிய சக்தியாக தோன்றி வரும் இந்த இரண்டு ஆசிய நாடுகள், வளரும் நாடுகளில் செய்யப்படும் முதலீடுகள் எல்லாம் இந்திய-சீனப் பொருளாதாரத் தேவைகளை எதிர்கொள்வதற்கே ஆகும். பரவலான போட்டி இருந்த போதிலும், இந்தியாவும் சீனாவும் தங்களின் உண்மையான நலன்களைப் ஒன்றுக்கொன்று பெணிக்கொண்டன. இரண்டு நாடுகளும் பன்-முனை உலக ஒழுங்கை ஆதரிக்கின்றன மற்றும் வெளியுறவுக் கொள்கையில் மேற்கத்திய நாடுகளின் தலையீட்டை எதிர்க்கின்றன. இதனோடு, சீனாவும்- இந்தியாவும் மிகப் பரந்த அளவிலான குறிப்பாக பருவநிலை மாற்றம், வர்த்தகப் பேச்சுவார்த்தை, ஆற்றல் பாதுகாப்பு, உலக நிதி நெருக்கடி போன்றவற்றின் மீதான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றன. இந்தியாவும்-சீனாவும் உலக வர்த்தக அமைப்பில் வளர்ந்த நாடுகளிடம் இருந்து வளரும் நாடுகளுக்கு அனுகூலமான கூடுதல் ஆதாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

இந்த இன்றியமையாத பணிகளுடன், கூடுதலாக இந்தியாவும், சீனாவும் மிக முதன்மையான சர்வதேச அமைப்புகளான ''பிரிக்ஸ்'' (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா) ஈ.ஏ.ஸ் (E.A.S)(தென் கிழக்கு ஆசிய உச்சிமாநாடு), எஸ்.சி.ஓ (S.C.O)(ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு) ஆசியான் (தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு) ஆகியவற்றில் ஒரு உறுப்பினராக இருக்கின்றார்கள்.

**இந்தியா-இலங்கை உறவுகள்**

இந்திய-இலங்கை இரு நாடுகளும் முறையே 1947, 1948இல் விடுதலை பெற்றதிலிருந்தே வலிமையான நட்புறவை போற்றி வந்திருக்கின்றன. ஆனாலும் இலங்கையில் உள்நாட்டு பூசல் மற்றும் அரசியல், போன்றவை இந்நட்புறவை பாதிக்கும் வகையில் பல பிரச்சனைகள் நடந்தேறியுள்ளன.

பிரதான காரணமாக இன வேற்றுமை விளங்குகிறது. இலங்கையில் தமிழர் இனத்திற்கும், சிங்கள் இனத்திற்கும் உள்ள பிரச்சனைகள் எப்போதும் இவ்விரு நாடுகளுக்கிடையே எதிர்மறையான தடைகளை வைத்தன. பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளும் வட மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்கள் இனத்தாலும் இந்தியா இலங்கை உறவுகள் நிர்ணயிக்கப்பட்டன என்றால் மிகையாகாது.

**இந்திய-இலங்கை உறவுகளுக்கிடையேயான முக்கிய பிரச்சினைகள்**

இந்தியா இலங்கை உறவுகளில் ஆழமாக பதிந்த ஆரம்பநிலை பிரச்சனையாக இலங்கை குடியுரிமைச்சட்டம் 1948 விளங்குகிறது. இதன்படி விவசாய தமிழர்கள் அல்லது மலைவாழ் தமிழர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டது.

இப்பிரச்சினை இரு நாடுகளின் உறவுகளிலும் பெரிய விரிசல் வர காரணியாக ஆரம்பத்திலிருந்து இருந்து வந்தது. மேலும் இப்பிரச்சினையை இலங்கை, சீனாவை கொண்டு சமாளிப்பதை வாடிக்கையாக வைத்திருந்தது. மேலும் விரிசல் பெரிதாக காரணியாக அமைந்தது. மேலும் இந்தியப் பெருங்கடல் கூட்டணியில் இலங்கை இணைபிரியாத நாடாக விளங்கியது. இக்கூட்டணியில் அயல்நாடு என்பது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக கருதப்பட்டது.

நான்காம் ஈழப்போர் முடிந்ததிலிருந்து இந்திய-இலங்கை உறவுகள் ஆக்கப்பூர்வமாகவும் நேர்மறையாகவும், அமையத் துவங்கியது. சமீப காலத்தில் வாணிபம் பன்மடங்காக உயர்ந்துள்ளது. ஆனாலும் பல்வேறு பிரச்சனைகள் இரு நாடுகள் இடையேயும் தீர்க்கப்படாததாக உள்ளன. அகதிகள் பிரச்சினை தீர்க்கப்படாமலே உள்ளது.

**இனக் கூறுகள்**

1921ஆம் ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பின்படி இலங்கையில் பத்து பெரிய இனங்கள் காணப்பட்டன.

அவற்றுள் மூன்று இனம் துணைப் பிரிவுகளாக அமைந்தன (இலங்கை முன்பு சிலோன்) தலையாய இனங்களாக, 1. கீழ்நாடு மற்றும் கண்டய சிங்களர்கள் 2. இலங்கை மற்றும் இந்திய தமிழர்கள் 3. இலங்கை மற்றும் இந்திய மூர்கள், ஏனைய நான்கு இனங்களாக பர்கர்கள், யூரேசியன்ஸ், மலேயர்கள் மற்றும் வேதாஸ் வாழ்ந்து வந்தார்கள்.

பெருவாரியான மக்கள்தொகையில் சிங்களர்கள் மூன்றில் ஒரு பகுதியாகவம் புத்த இனத்தை சார்ந்தவர்களாகவும் சிங்கள மொழியை பேசக்கூடியவராகவும் இருந்தனர். இலங்கையின் தமிழர்கள் இந்துக்களாகவும், திராவிட மொழியான தமிழை பேசக்கூடியவராகவும் வாழ்ந்தார்கள். இஸ்லாமியர்கள், தமிழ் மற்றும் சிங்கள் மொழியை பேசக்கூடியவர்களாக இருந்தார்கள்.

இந்திய மீனவர்கள் மீண்டும் மீண்டும் வங்காள விரிகுடாவில் தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் வழக்கமாக உள்ளது. இப்பிரச்சனைக்கு பல தீர்வுகள் காணப்பட்டன. ஆழ்கடல் மீன் பிடித்தல், கட்சத்தீவை குத்தகைக்கு விடல், இந்திய மற்றும் இலங்கை மீனவர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாளாக மீன் பிடித்தல் போன்றவை தீர்வுகளாக முடிவ செய்யப்பட்டன. ஆனாலும் மேறகூறிய தீர்மானங்களை இன்று வரை செயல்படுத்த முடியவில்லை.

**இலங்கை தமிழ் அகதிகள் பிரச்சனை**

1948க்கு பிறகு செயல்படுத்தப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டம் தமிழர்களை வேற்றுமைப்படுத்த ஆரம்பித்தது. இலங்கை நாடாளுமன்றத்திலே இயற்றப்பட்ட இந்த சட்டம் தெற்கு இந்தியாவின் பூர்வக்குடிகளாக பல நூற்றாண்டுகளாக இலங்கையில் வாழ்ந்து வந்த தமிழர்களுக்கு அவர்கள் உரிமையை மறுத்தது. கிட்டத்தட்ட 11 சதவீதம் அதாவது ஏழு இலட்சம் தமிழர்கள் தேச அடையாளமின்றி நாடற்றவர்களாக விடப்பட்டார்கள். 1964ல் பண்டார நாயக்கேவும், சாஸ்திரியும் சேர்ந்து ஒரு உடன்படிக்கையை உருவாக்கி அதன் மூலம் தமிழர்களை இந்தியாவிற்கு குடியேற்றம் செய்ய ஏற்பாடு செய்தனர். அடுத்த 30 ஆண்டுகளுக்குள் தமிழர்களை, கிட்டத்தட்ட மூன்று இலட்சம் நபர்களை குடியேற்றம் செய்ய ஏற்பாடு செய்தனர். 2003 வரை இந்நிகழ்வுகள் நடக்கும் தருவாயில் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க இலங்கை அரசு முடிவு செய்தது. அதுவும் பல போராட்டங்களின் பிறகு, இச்சட்டம் நிறைவேற்றிய தருணத்தில் தமிழர்களின் எண்ணிக்கை இலங்கையில் ஐந்து சதவீதம் குறைந்தது.

107 முகாம்களில் அகதிகளாக 62,000 தமிழர்கள் பல்வேறு நிவாரண சலுகைகளை மத்திய மற்றும் மாநில அரசாங்கத்திடம் பெற்று வருகிறார்கள். சமீபகாலத்தில் இலங்கை மாணாக்கர்களுக்கு தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பதற்கு ஏதுவாய் பல சலுகைகளை தமிழ்நாடு அரசு வழங்கியது. இச்சலுகை முகாம்களிலில்லாத 36,800 அகதிகளால் தகுதியுள்ளவர்களுக்கு பயனை அளித்தது.

**நிலை மாற்றங்கள்**

தற்போது, இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் அகதிகள், நாடு திரும்புதல் ஆகியவை முதன்மையான பிரச்சனையாக காணப்படவில்லை. ஆனால் இருக்கிற நிலைமையும் மாறாது வைத்திருக்க இயலவில்லை. தமிழ்நாடு அகதிகளின் அதிக எண்ணிக்கையை சமாளித்து வருகிறது. இரு நாடுகளுக்கிடையேயான நல்லுறவை போற்ற வேண்டுமெனில், அகதிகள் பிரச்சனையை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவது சிறந்தது. இந்திய தரப்பில் நீடித்த பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதும் இலங்கைக்கு இனப்பிரச்சனைக்கு தீர்வு காணுவதும் முதன்மையானது ஆகம். இரு நாடுகளும் தாராள மனப்பான்மையுடன் தீர்வை கொண்டு வரும் பட்சத்தில் தன்னார்வத்தில் நாடு திரும்புதலை முடிவாக அறிவித்து, அதற்கொன்று பிரத்தியோக பிரதிநிதிகளை நியமிப்ப துநன்று. இப்பிரதிநிதித்துவம் தமிழ்நாடு அரசாங்க தரப்பிலும், இலங்கையின் வட மாகாண குழு அமைப்பிலும் அமைவது சிறந்தது.

இந்தியாவிலேயே வசிக்க விரும்பும் மக்களுக்கு குடியுரிமை வழங்குதல் அவசியம். பாகிஸ்தான் மற்றும் ஆப்கான் அகதிகளுக்கு குடியுரிமை வழங்கியது போல இலங்கை அகதிகளுக்கும் வழங்கலாம். பிரச்சனையை உண்டாக்குபவர்க்கு குடியுரிமை வழங்க மறுப்பது அவசியமாகிறது. இவை அனைத்தும் சீராக நடக்கின்ற வேளையில் அனைத்து அகதிகள் முகாம்களையும் மூடும்பட்சத்தில் அனைத்து பிரச்சனைகளும் முடிவுக்கு கொண்டு வரப்படும். ஏனெனில் அகதிகள் பிரச்சனையானது குடிமை போரை விட, வெகு காலம் தொடருகின்ற பெரும் சவாலாக அமைந்துள்ளது.

**கட்சத்தீவு**

கட்சத்தீவு பூர்வீகமாக ராமநாதபுரம் மன்னர்களுக்கு சொந்தமானதாகும். எந்த ஒரு இலங்கையின் வரைபடமும் அதனுடைய நிலப்பரப்பாக கட்சத்தீவை கொண்டிருக்கவில்லை. ஆனாலம் கட்சத்தீவின் அமைவிடத்தை அடிப்படையாக வைத்து இலங்கை அதனை சொந்தம் கொண்டாட ஆரம்பித்தது, முன்னதாக இரு நாடுகளின் தலைவர்களுக்கும் கட்சத்தீவை பற்றி பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்கள்.

ஆனாலும் பூர்வீகமாக ராமநாதபுரம் மன்னர்களுக்கு சொந்தமானதாகும். எந்த ஒரு இலங்கையின் வரைபடமும் அதனுடைய நிலப்பரப்பாக கட்சத்தீவை கொண்டிருக்கவில்லை. ஆனாலும் கட்சத்தீவின் அமைவிடத்தை அடிப்படையாக வைத்து இலங்கை அதனை சொந்தம் கொண்டாட ஆரம்பித்தது. முன்னதாக இரு நாடுகளின் தலைவர்களுக்கும் கட்சத்தீவை பற்றி பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்கள்.

ஆனாலும் 1974இல் இந்திராகாந்தி கட்சத்தீவை ஒப்பந்தம் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கினார். கட்சத்தீவு என்பது 285 ஏக்கர் பரப்பளவில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நடுவே மன்னார் வளைகுடாவில் அமைந்துள்ள ஆளில்லா தீவு ஆகும். அங்கே கத்தோலிக்க கோவில் இருப்பதால் இலங்கை அரசாங்கம் அவ்விடத்தை புனிதத் தன்மை உடையதாக அறிவித்தது. இரு நாடுகளிலிருந்து பக்தர்கள் புனித பயணமாக கட்சத்தீவுக்கு செல்வது வழக்கம். 1974ன் ஒப்பந்தத்தின்படி இந்திய மீனவர்கள் தங்களுடைய மீன் பிடிக்கும் வலையை காய வைப்பதற்கும், அங்கே இருக்கும் தேவாலயத்தை வழிபடுவதற்கும் உரிமை பெற்றிருந்தனர். இதன் பிறகு 1976இல் கடல் போக்குவரத்து எல்லை கட்டுப்பாட்டின் காரணமாக ஐக்கிய நாட்டின் உத்தரவின் பேரில் வலைகளை காய வைப்பதற்கும் மற்றும் தேவாலயத்தை வழிபடும் உரிமையும் இழந்தனர். இதன் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் எண்ணற்ற துன்பங்களையும் சந்தித்து வருகின்றனர்.

**மீனவர்கள் பிரச்சனை**

- இரு நாடுகளின் கூட்டு பணிக்குழு தகவலின்படி தமிழ்நாடு மீனவர்களின்-111 படகுகள் மற்றும் 51 இந்திய மீனவர்களை 2019இல் இலங்கை வடக்கு மாகாணத்தில் கைது செய்யப்பட்டோ அல்லது காவலில் வைக்கப்பட்டோ இருக்கிறார்கள்.

- இப்பிரச்சனைக்கு காரணம் பிரச்சனைக்குரிய கட்சத்தீவு மீன் பிடித்தலும், குழப்பிய குட்டைகளில் மீன் பிடித்து சுற்றுப்புற சூழ்நிலைக்கும் பொருளாதாரத்திற்கும் இடைஞ்சல் விளைவித்தது ஆகும்.

- ஏனைய மற்ற இடங்களில் மீன் வளங்கள் குறைவாக இருப்பதால் பாக்-வளைகுடாவை தவிர்த்து இந்திய மீனவர்களால் வாழ்வாதாரத்தினை மூட இயலாது.

**நேரு-ஜான் கொடெலாவாலா உடன்படிக்கை-1954**

இந்த உடன்படிக்கை இந்தியாவின் பிரதமர் மற்றும் இலங்கையின் பிரதமர் கொடெலாவாலா ஆகிய இருவரும் சேர்ந்து கையெழுத்திட்ட ஒப்பந்தம் ஆகும். (18, ஜனவரி,1954) இந்த ஒப்பந்தமானது இலங்கையில் வகிக்கக்கூடிய இந்திய பூர்வீகக்குடி மக்களின் நிலை மற்றும் எதிர்காலத்தை பற்றியது ஆகும். இம்மக்கள் யாவரும் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தால் தேயிலை, காப்பி மற்றும் தேங்காய் தோட்டங்களில் கூலி வேலை செய்வதற்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, இந்திய மக்கள் இலங்கையிலிருந்து சொந்த நாடு திரும்புவதற்கு வழிவகுப்பதாகும். ஆனாலும் பிரதமர் நேரு, இந்திய குடியுரிமையை தாமாகவே முன்வந்து கோரும் மக்களுக்கு மட்டுமே இச்சலுகையை அனுமதித்தார். இலங்கை குடியுரிமை பெற தகுதியில்லாத மக்கள் அனைவருக்கும் இந்திய குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கையை இந்தியா முற்றிலுமாக நிராகரித்து விட்டது.

2016இல் நவம்பரில் நடந்த இரு நாடுகளுக்கு இடையேயான அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் கூட்டுப் பணிக்குழு தொடர்பான நடவடிக்கைகளில் இந்தியா 3 வருட கால அவகாசம் கேட்டது. மீனவர்கள் தொடர்பான இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்தது.

**சாஸ்திரி – சிறிமாவோ ஒப்பந்தம் 1964**

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்தியாவிற்கு 1964இல் வருகை செய்தார். நீண்ட பேச்சுவார்த்தைக்கு பிறகு பண்டார நாயக்காவிற்கும் சாஸ்திரிக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் 9,75,000 குடியுரிமை அல்லாத நபர்கள் பின்வரும் கணக்கீட்டை பொருத்து பிரிக்கப்படுவார்கள்.

- 3 இலட்சம் மக்கள் இலங்கை குடியுரிமையை பெறுவதாகும்.
- 5 இலட்சம் 25 ஆயிரம் மக்கள் இந்திய குடியுரிமையை பெறுவார்கள்.
- இவர்களுக்கு 15 வருடங்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டு அதற்குள்ளாக இந்தியாவிற்கு வருமாறும் எஞ்சியுள்ள 1.50 லட்சம் குடியுரிமை இல்லாத நர்பளின் நிலையை பின்வரும் காலங்களில் தீர்மானிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

**இலங்கை தமிழர்களுக்கான இந்திய மறுவாழ்வு திட்டங்கள்**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழக்கூடிய தமிழ் மக்களுக்கு 50,000 வீடுகள் கட்டித் தருவதாக பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை குடியரசுத்தலைவர் ராஜபக்சேவுக்கு 2010இல் உறுதி அளித்திருந்தார். 47,000 வீடுகள் 2018ல் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இதற்கான செலவு கிட்டதட்ட 350 மில்லியன்

**ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தம் (இந்தியா-இலங்கை 1987)**

இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை பிரதமர் ஜெ.ஜெயவர்த்தனே இடையேயான தூதரக ஒப்பந்தம்

- வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கிய தன்னாட்சி அமைப்பு (எங்கு தமிழர்கள் செறிவாக இருக்கிறார்களோ) உருவாக்கப்படும்.
- இந்திய மேற்பார்வையாளர்களின் முன்னிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் டிசம்பர் 31, 1987 ஆம் ஆண்டிற்கு நடத்தி முடிக்கப்படும்.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவசர நிலையானது நீக்கப்பட்டுள்ளது.
- தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகியவை இலங்கையின் அலுவல் மொழியாக இருக்கும்.
- இலங்கை ராணுவம் மற்றும் தமிழ் போராளிகளிடையே பகைமையை நிறுத்துவதற்கு உத்தரவாதப்படுத்த இந்திய அமைதி காக்கும் படையை கொண்டுவரப்படும்.

ஒப்பந்தம் இவ்வகையில் கடுமையாக எதிர்க்கப்பட்டது. கொழும்பு விமான நிலையத்தில் அணி வகுப்பு மரியாதையின் போது ராஜீவ் காந்தியை தாக்கவும் முயற்சி நடந்தது.

அமெரிக்கா டாலர்கள். இது இந்தியாவின் மானியங்களிலேயே அதிகபட்சமாகும். இந்திய பிரதமர் மேற்கு இலங்கையில் தலைமன்னார் நகரத்திற்கு புதிய ரயில் பாதையில் பயணிகள் ரயிலை கொடியசைத்து தொடக்கி வைத்தார். தலைமன்னாரில் தொடங்கிய இந்த புது ரயில் பணியானது, உள்நாட்டு போர் முடிவடைந்த பின் வடமாகாணத்தின் வளர்ச்சிக்கான பணியாக தொடங்கியது. இது இந்தியாவின் எல்லைக்கருகே அமைந்துள்ள ஒரு நகரமாகும். இந்திய பிரதமர் மோடியும், இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனாவும் தலைமன்னாரில் ஒரு புதிய ரயில் நிலையத்தை 1650பையர்(Pier)அமைக்க அடிக்கல் நாட்டியுள்ளனர்.

கடைசியாக கட்டப்பட்ட 63 கிலோமீட்டர் ரயில் தடங்கள், ஏற்கனவே தொடங்கப்பட்ட 265 கிலோமீட்டர் தூரமுள்ள பிரத்தியேகமான வடமாகாண ரயில்வே திட்டமாகும். இந்த ரயில்வே அரசாங்க கம்பெனியான IRCON-ல் அமைக்கப்பட்டது.

வட இலங்கையில் 3 லட்சம் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வாழ்கின்றார்கள். இலங்கை

அரசாங்கம் 2011 கணக்கெடுப்பின்படி 2 லட்சத்து 90 ஆயிரம் உள்நாட்டு இடம்பெயர்ந்தவர்கள் மறுகுடியமர்த்தப்பட்டதாகவும், மேலும் 10,000 தமிழர்கள் முகாம்களில் வசிப்பதாகவும் தகவல் வெளிவந்துள்ளது.

இந்திய பூர்வீக தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வுகள் காண சாஸ்திரியின் காலத்திலேயே இரு நாடுகளும் முயற்சி எடுத்தன.

இந்திய அரசாங்கம் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினருக்கு இரண்டில் மூன்று குடியுரிமை வழங்குவதாக ஒத்துக்கொண்டது. ஆனால் தமிழர்களுக்கும், சிங்களர்களுக்குமான இனப்போரின் விளைவாக தமிழகத்தில் அகதிகளின் வரவு பிரச்சனையை தீவிரப்படுத்தியது.

**எதிர்கால ஒத்துழைப்பு**

- கச்சத்தீவை காலவரம்பற்ற குத்தகைக்கு எடுத்துக்கொள்ளும் வகையில் உடன்படிக்கை ஏற்படுத்த இந்தியா முனையலாம்.

- உரிமம் பெற்ற இந்த மீனவர்கள் குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட இப்பகுதியில் மீன் பிடிக்க அனுமதிக்கலாம்.அதுபோலவே இலங்கை மீனவர்களுக்கும் இச்சலுகையை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

- இந்திய அரசாங்கம் மீன்பிடித் தொழிலை நிறுவனப்படுத்த முயற்சி செய்யலாம். இதன் மூலம் வாழ்வாதாரத்திற்கு மாற்றுவழிகள் பெருகும்.

- இந்திய அரசாங்கம் விரிவான திட்டத்தை மேற்கொண்டு இந்திய மீனவர்கள் பாக் வளைகுடாவில் மீன் பிடித்தலை ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சி செய்யலாம்.

மேற்கூறிய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் சரிவர தீர்வுகள் காணும் பட்சத்தில் இந்தியாவும் இலங்கையும் தெற்காசியாவில் தலையாய முடிவெடுக்கும் தன்மையை பெறுவதற்கு வாய்ப்பு அதிகம் உண்டு.

**இந்திய – நேபாள உறவுகள்**

இந்தியா, நேபாளம் ஒன்றுக்கொன்று புவியியல் ரீதியாக அருகே அமைந்துள்ளன. நேபாளம் தாழ்வான நிலப்பகுதியில் பெரும்பாலும் கங்கை சமவெளியின் பாதையில் அமைந்து, இமயத்தின் அடிவாரத்தில் சீனாவிற்கும், ஆசியாவிற்கும் இடையே உள்ளது. இவ்விரு நாடுகளும் கிழக்கே 1,850 கிலோ மீட்டர் எல்லையை பகிர்ந்தும், தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் உள்ள சிக்கிம், மேற்கு வங்காளம், பீகார், உத்திரப்பிரதேசம், உத்தரகாண்ட் போன்ற ஐந்து இந்திய மாநிலங்களால் சூழப்பட்டுள்ளன. முன்னதாக நேபாளம் ஒரு இந்து பெரும்பான்மையான நாடாக விளங்கியது. ஆனாலும் எட்டில் ஒரு பங்கு மக்கள் பௌத்த கொள்கையில் நம்பிக்கை உடையவர்கள் குறைந்த எண்ணிக்கையில் இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

**நேரு-நாடாளுமன்றத்தில் உரை 1950**

நேரு நாடாளுமன்றத்தில்‘‘வெகு காலத்திலிருந்து இமயமலை நமக்கு எல்லையாக இயற்கையாகவே செயல்பட்டு வருகிறது. இந்த இயற்கை தடையை உடைப்பதற்கும், ஊடுருவதற்கும் நாம் அனுமதிக்க முடியாது. இதனால் நேபாளத்தின் விடுதலையை போற்றும் அதே நேரம் அந்நாட்டில் எந்த தவறும் நடக்காமல் பாதுகாக்கவும், இயற்கை தடையை மீறும் எந்த ஒரு செயலையும் நாம் கட்டுப்பாட்டுக்குள்ளும் வைத்தாக வேண்டும். வெளிப்படையாக கூற வேண்டுமெனில், நேபாளத்தில் எந்த ஒரு ஊடுருவலையும் அனுமதிக்க இயலாது. நேபாளத்தின் சுதந்திரத்தை நாம் மதிக்கின்றோம். அதேசமயத்தில் இந்தியாவை கடக்காமல் நேபாளத்திற்கு யாவரும் செல்ல இயலாது என்பது ஒரு குழந்தைக்கும் தெரியும், இதனால் இந்தியா இன்றி நேபாளத்துடன் எந்த ஒரு நாடும் நெருக்கமாக இருப்பதற்கு வாய்ப்பு இல்லை’’ என்றார்.

நேபாளத்தினை இறையாண்மை பெற்ற நாடாக நேரு ஏற்றுக்கொண்டாலும், அதே சமயத்தில் இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஒரு தனிச்சிறப்புடைய பகுதியாகவே அது விளங்குகிறது. சீனா திபெத்தை தன்பிடிக்குள் 1951இல் கொண்டுவந்தபோது நேபாளத்தின் முக்கியத்துவத்தை இந்தியா உணரலாயிற்று. நேபாளத்தின் மூலம் அச்சுறுத்தல் என்பதைவிட, நேபாளத்திற்கு அச்சுறுத்தல் என்பது இந்தியாவிற்கும் பெரும் இழப்பு ஏற்படுத்தும் என்பதினை உணர்த்தியது. இதன் தொடர்ச்சியாக இந்தியா நேபாளத்துடன் அமைதி மற்றும் நட்புறவு உடன்படிக்கையை ஜூலை 31, 1950இல் மேற்கொண்டது.

நேபாளத்துடன் உறவுகளுக்கு இந்தியாவின் பாதுகாப்பு காரணி என்பதுடன் ஏனைய மற்ற காரணிகளும் அடிப்படையாக உள்ளன. மேற்கூறிய ஒப்பந்தம் கையெழுத்திட்ட அதே நாளில் வர்த்தக வாணிப உடன்படிக்கையிலும் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையே வலிமையான பொருளாதார உறவுகளை மேம்படுத்தியது.

**அரசியல் உறவுகள்**

இந்தியாவுடனான நேபாளத்தின் உறவுகள், அரசருக்கும் வம்சாவழி பிரதமர் குடும்பத்திற்கும் இடையேயான போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டே இருந்து வந்தது. 1950இல் நேபாளத்தோடு ஒப்புதல் மேற்கொண்ட இந்தியா, மக்களாட்சிக்கு மாறவும், உரிமைகளை மக்களுக்கு அளிக்குமாறும் வேண்டிக் கொண்டது. ஆனால் அதற்கு சிறிதளவும் ராணா குடும்பத்தினர் செவிசாய்க்காமல் இருந்ததால் இந்திய அரசு நேரடியாக பிரச்சனையில் கவனம் செலுத்தியது.

நேரு இறந்த பிறகு, இந்தியாவின் உறவுகள் ஒரே மாதிரியானநிலை போக்கை கடைப்பிடித்தது. அடுத்தடுத்து பதவியேற்ற, சாஸ்திரி, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி, வி.பி.சிங் மற்றும் சந்திரசேகர் முன்பு வழக்கமாயிருந்த கொள்கையையே பின்பற்றினார். இரு நாட்டின் தலைவர்களும் பல்வேறு சந்திப்புகளை முறையே நடத்தினர்.

1990-களில் இந்தியா "இரு தூண் கொள்கையை" பின்பற்றியது. பலகட்சி முறைமை நேபாளத்தில் தோன்றியதால் இந்நிலையை இந்தியா தேர்ந்தெடுத்தது. இரு தூண் கொள்கையாக அரசியல் சாசனச் சட்டத்தில் மன்னராட்சியும், பலகட்சி மக்களாட்சிமுறையும் அமைய இந்தியா விருப்பம் தெரிவித்தது. ஆனால் புதிய புத்தாயிரத்தில் இக்கொள்கை தொடர்பான நடவடிக்கைகளின் மாற்றம் ஏற்பட்டது. எனெனில் மன்னராட்சியில் மாற்றமும், மாவோ கிளர்ச்சியாளர்களின் செயலும் வேகமும் நேபாளத்தைப் புரட்டி போட்டது,

**இந்தியா-நேபாள உறவுகளுக்கிடையே தற்போதைய பிரச்சினைகள்**

**சூழல்**

❖ வாணிபம் மற்றும் போக்குவரத்து தொடர்பான உடன்படிக்கையை நேபாளமும் சீனாவும் செய்து கொண்டுள்ளது.

❖ பிம்ஸ்டெக் பயிற்சியை (MILEX-2018) இந்தியா நடத்துகின்றபோது நேபாளம் அதில் கலந்து கொள்ளவில்லை.

| |
|---|
| இரு பெரும் பொருளாதார வல்லரசுகளான இந்திய-சீனாவிற்கு தெற்கே இமய மலைப்பகுதியின் இடையில் அமைந்துள்ள நேபாளம் இரண்டு நாடுகளுடனான தனி முக்கியத்துவமான வரலாற்று நட்பு உறவுகளை கொண்டுள்ளது. |

**நட்புறவின் பின்னணி**

❖ இரு நாடுகளும் பிரத்தியேகமான நட்புறவைக் கொண்டுள்ளது. இதன் பகிர்வு பொதுவான கலாச்சாரத்தையும். இமயத்திற்கு தெற்கேயுள்ள பகுதியிலுள்ள இரு நாடுகளுக்கும் நெருக்கமான

பண்பாட்டு உறவுகள் உள்ளன. திருமணம், தொன்மையான சமயம், மொழி, இனம் ஆகியவற்றால் இரு நாடுகளுக்கும் நெருக்கமான பண்பாட்டு உறவுகள் உள்ளன.

❖ இரு நாடுகளின் மக்களுக்கிடையேயான உறவுகளும், மிக நெருக்கமாகவும், பன்முகத்தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.

❖ இநதிய குடியரசு, நேபாளம் அமைதி மற்றும் நட்புக்கான 1950 இந்திய-நேபாள ஒப்பந்தத்துடன் முறையான உறவைத் தொடங்கின. இந்த ஒப்பந்தம் இந்திய-நேபாளத்துடனான தற்போதைய உறவின் மைல்கல்லாகும்.

**நேபாளம் உறவுகளின் முக்கியத்துவம்**

❖ இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே "இடைச்சுவராக நேபாளம் செயல்படுகிறது.

❖ மேலும், நிலம் சூழந்த நாடாக நேபாளம் அமைந்திருப்பதால் வெளிநாடுகளுடன் இணைப்பு பெற இந்தியாவை சார்ந்து இருப்பது அவசியமாகிறது.

பிரதமர் மோடி அவர்கள் "5டி"(5T) சூத்திரத்தைக் கொண்டு வந்துள்ளனர். இந்திய-நேபாள உறவுகள் "பாரம்பரியம், வாணிபம், சுற்றுலா. தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்து" போன்றவைகளால் நிர்ணயிக்கப்படும் என்ற தனது மே 2018 பயணத்தின்போது கூறியுள்ளார்.

**அரசியல் உறவுகள்**

வரலாற்று ரீதியான உறவு முறையை நேபாளமும், இந்தியாவும் கொண்டுள்ளது.

❖ 1950-களிலிருந்து அமைதி மற்றும் நட்புறவு தொடர்பான உறவுமுறை இரு நாடுகளுக்கும் உண்டு.

❖ மேற்கூறிய ஒத்துழைப்பு ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையே இன்றுவரை நட்புறவு வலுப்பெற கருவியாக உள்ளது.

❖ இந்தியா எப்போதும் தெற்காசியாவை அதன் செல்வாக்கு செலுத்தும் ஒரு பகுதியாக கருதுகிறது.

**இந்திய-நேபாள அமைதி மற்றம் நட்புறவுக்கான உடன்படிக்கை**

1950இல் மேற்கொள்ளப்பட்ட அமைதி மற்றும் நட்புறவு உடன்படிக்கையானது நெபாள அரசாங்கத்திற்கும், இந்திய அரசாங்கத்திற்கும் உலகத்தின் ஒற்றுமையை அடிப்படையாக வைத்து அண்டை நாடுகளுடன் உறவுமுறையை வலிமைப்படுத்தும் நோக்கமுடையதாகும். இந்த உடன்படிக்கை 1950ஆம் ஆண்டு ஜூலை 31இல் நேபாள பிரதமர் ஷம்ஷேர் ஜாங் பகதூர் ராணா, இந்திய தூதுவர் சத்ரேஷ்வர் நாராயாணசிங் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி இருநாட்டு மக்களும் தங்குதடையின்றி சுதந்திரமாக இரு நாடுகளுக்கும் செல்வதற்கும், பொருள்கள் ஏற்றுமதி-இறக்குமதி செய்வதற்கும், வெளியுறவுத்துறை விஷயங்களிலும், பாதுகாப்பு துறையில் பரிமாற்றங்கள் ஏற்பட ஏதுவான சூழல் ஏற்படுத்தப்பட்டது.

**கலாச்சார உறவுகள்**

❖ இரு நாடுகளும் ஒரே வகையான கலாச்சாரத்தைப் பின்பற்றுகின்றன. மேலும் இரு நாட்டு மக்களுக்கும் மக்களுக்கிடையேயான உள்ள உறவுமுறைகளுக்கு வரலாற்றில் தனிச்சிறப்பு பெற்றதாக அமைந்துள்ளது.

❖ இருநாட்டு மக்களும் பரஸ்பரம், மத ரீதியான யாத்திரைகளுக்கு அடுத்த நாட்டுக்கு செல்வது வழக்கமாகியுள்ளது. பசுபதி மற்றும் ஜனக்பூர் ஆகிய பிரசித்தி பெற்ற கலாச்சார இடங்கள்

நேபாளத்திலும், வாரணாசி மற்றும் நான்கு புனித ஸ்தலங்கள் இந்தியாவிலும் மக்கள் சென்று வர ஏதுவாய் உள்ளது.

- புத்த புனித ஸ்தலங்களான லும்பினி நேபாளத்திலும், குஷி நகர், கயா, சாரநாத் இந்தியாவிலும் மக்களை ஈர்க்கிறது.

- குறிப்பிட்டு கூறும் வகையில், இந்தியாவிற்கும் நேபாளத்திற்குமான உறவுகள் உணவு மற்றும் குடும்பம் ரீதியாக அமைந்து சிறப்பித்து காணப்படுகிறது.

**ஒத்துழைப்புக்கான பகுதிகள்**

1. **பொருளாதார மற்றும் வாணிபம்**

- நேபாளத்தின் மிகப்பெரிய வாணிப பங்குதாராக இந்தியா செயல்படுகிறது. அந்நிய முதலீட்டிலும், நேபாளத்துடனான வாணிபம், போக்குவரத்து வசதிகளிலும் இந்தியா முன்னிலை வகிக்கிறது.

2. **நேபாளத்தில் இந்திய முதலீடு**

- 40 சதவீதம் வெளிநாட்டு முதலீடானது இந்தியாவிலிருந்து முதன்மையான முதலீட்டாளர்கள் மூலம் நேபாளத்திற்கு செல்கிறது.

3. **நீர் வளங்கள் மற்றும் ஆற்றல் துறைகளின் ஒத்துழைப்பு**

- 2008இல் இந்தியாவிற்கும் நேபாளத்திற்கு இருதரப்பு ஒப்பந்தமானது நீர்வளம் மற்றும் நீர்மின் நிலையம் தொடர்பாக மூன்று அடுக்கு செயல்பழி முறை உருவாக்கப்பட்டது.

- அதிவேகமாக பாய்கின்ற பல ஆறுகள் நேபாளத்தில் இருப்பதால் நீர் மின் நிலையம் மூலமாக மின் ஆற்றல் தயாரிக்க எளிதாகிறது. 80,000 மெகாவாட் உற்பத்தி திறனிலிருந்து நேபாளம் 700 மெகாவாட் மட்டுமே உற்பத்தி செய்கிறது.

- சமீபத்தில் அருண் III என்ற 900 மெகாவாட் மின் ஆற்றல் தயாரிக்கக்கூடிய நீர் மின் நிலையம் நிறுவப்பட்டது.

- 2014இல் இந்தியாவிற்கும், நேபாளத்திற்கும் மின்னாற்றல், வாணிபம் எல்லை கடந்த இடைவெளி இணைப்பு மற்றும் கட்டடம் இணைப்பு தொடர்பாக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

- நீண்ட கால ஒருங்கிணைந்த தொழில்நுட்பத்திட்டம் 2035இல் உருவாக்குவதற்கு உண்டான இணை தொழில்நுட்பக்குழு நிறுவப்பட்டது.

4. **தற்காப்பு ஒத்துழைப்பு**

- இந்திய இராணுவத்தில் கூர்க்கா படையில் ஆள் எடுப்பு பெருவாரியான நேபாள மலைவாழ் மாவட்டங்களிலிருந்து நடத்தப்படுகிறது.

- 1950-லிருந்து இந்தியாவும், நேபாளமுடன் தங்களது தரைப்படை தளபதிகளுக்கு ஜெனரல் பதவியை மரியாதை நிமித்தமாக வழங்குகிறது.

- இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பின் அடிப்படையில், நேபாள ராணுவத்தை நவீனமாக்கவும், பயிற்சிகள் தரவும், பதிய கருவிகள் அளிப்பதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ இந்திய ராணுவ பயிற்சி மையங்களில் ஒவ்வொரு வருடமும் 250 நேபாள ராணுவத்தினர் பயிற்சி பெறுவதற்கு ஏதுவாக இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

❖ 2019இல் இந்தியாவும் நேபாளமும் சூரிய கிரண் XIII என்றழைக்கப்படும் கூட்டு ராணுவ பயிற்சியை, மே 30-லிருந்து ஜூன் 12 வரையில் உத்தரகாண்டில் நடத்தியது.

**5. உள்கட்டமைப்பு மற்றும் இணைப்பு**

❖ அடிப்படையில் உள்கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதற்கு உண்டான வளர்ச்சி உதவிகளை இந்தியா நேபாளத்திற்கு அளிக்கிறது.

❖ சமீபத்தில் ரக்ஸால் காத்மண்டு ரயில் பாதை அமைப்பதற்கு புரிதல் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.தகவல் பரிமாற்ற, தேசிய நெடுஞ்சாலை திட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

❖ இவ்விரு நாடுகளும் உள்நாட்டு நீர்வழி போக்குவரத்தை உருவாக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

**6. இரு நாட்டு மக்களுக்கிடையேயான ஒத்துழைப்பு**

❖ இரு நாடுகளின் அரசாங்கங்களும், மூன்று சகோதர நகரங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. காத்மண்டு-வாரணாசி-லும்பினி-புத்தகயா மற்றும் ஜனக்பூர், அயோத்தியா ஆகிய நகரங்களை மையப்படுத்தி உருவாக்கிய ஒப்பந்தமாகும்.

❖ ஜனபூருக்கும் அயோத்யாவிற்கும் நேரடியாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவை இராமாயண வட்டம் வழியாக இயக்கப்படும் சுதேஷ் தரிசன திட்டத்தை அறிவித்தது.

❖ நேபாளமும் இந்தியாவும் இந்து மற்றும் புத்த பாரம்பரியத்தை பகிர்ந்து கொள்கின்றன. லும்பினி, புத்தரின் பிறந்த இடம் நேபாளத்திலும், அவர் ஞானம் பெற்ற புத்தகயாஇந்தியாவில் உள்ளது. இதேபோல் இரு நாடுகளிலும் இந்து புனித யாத்திரை இடங்கள் பரவி உள்ளன.

**சவால்கள்**

**1. எல்லைப் பிரச்சனைகள்**

❖ இரு பிரதான பிரச்சனைகள் சுஸ்தா மற்றும் கலாபானி (இந்தியா-சீனா-நேபாளம்-முச்சந்திப்பு) ஆகும்.

❖ இரு நாடுகளுக்கிடையேயான பேச்சு வார்த்தைகள் செயலாளர்களிடையே முடிவு செய்யப்பட்ட நிலையில், ஒரே ஒரு பேச்சுவார்த்தை மட்டும் 2015இல் நடத்தப்பெற்றது.

**2. உள்நாட்டு பாதுகாப்பு**

❖ நேபாளத்திற்கும், இந்தியாவிற்கும் இடையில் திறந்தவெளி எல்லை அமைந்துள்ளதால் சட்டபூர்வமற்ற இடம்பெயர்தலும் ஆள்கடத்தலும் எளிதான வகையில் அரங்கேற்கிறது.

❖ இந்த எல்லையானது மாவோஸ்டுகள், தீவிரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மிகச் சுலபமாக உள்ளது.

**3. வாணிபம்**

❖ நேபாளத்தில் வாணிபம் அதிகமாக இறக்குமதி செய்வதாலும் குறைவான ஏற்றுமதியாலும் சமீபகாலத்தில் பற்றாக்குறையாவே நீடிக்கிறது.

- இந்தியாவுக்கான நேபாள வாணிபமானது பற்றாக்குறை 689.85 பில்லியன் நேபாள ரூபாயாக காணப்படுகிறது. ஏற்றுமதியின் மூலம் 42.46 பில்லியன் இலாபமும், இறக்குமதியின் மூலம் 732.31 பில்லியன் செலுத்தியும் உள்ளது.

- இந்தியா-நேபாளம் வாணிபத்தில் அதிகளவில் இந்தியாவிற்கு இலாபம் அளிக்கின்ற நிலை தற்போது உள்ளது.

**4. அமைதி மற்றும் நட்புறவுக்கான ஒப்பந்தம்**

- 1950 இல் கையெழுத்திடப்பட்ட இந்திய-நேபாள ஒப்பந்தம் நேபாள அரசியல் வித்தகர்களால் சமமற்றதாகச் சாடப்பட்டுள்ளது.

- இந்த ஒப்பந்தத்தின்படி, நேபாளம் எந்த ஒரு இராணுவம் தொடர்பான பொருள்கள் வாங்கும்போது இந்தியாவில் ஒப்பதலைக் கேட்க வேண்டும் என்ற விதி அமைப்பு உள்ளது. நேபாளம் இவ்விதியை மாற்ற விருப்பம் தெரிவித்தது.

- நேபாள-இந்திய பிரபலமானவர்கள் குழுமம் இரு நாடுகளுக்கிடையேயான அனைத்து உடன்படிக்கைகளையும் மறு ஆய்வு செய்து ஒரு விரிவான அறிக்கையை அளிக்க உள்ளது. இவ்வறிக்கை இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை சீரமைப்பது பற்றியது ஆகும்.

**5. சீனா-நேபாளம் நெருக்கம் அதிகரித்தல்**

- நேபாளம் இந்தியாவுடன் நட்புறவை ஈடுகட்டுவதற்கு சீனாவுடனான நேபாள உறவுகள், இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது.

- சீனத் தரப்பில், திபெத்தின் பக்கத்திலிருந்து நேபாளத்திற்கு அதிக எண்ணிக்கையில் நெடுஞ்சாலைகள் கட்டப்பட்டு வருகிறது. நேபாளத்தின் அனைத்து கிழக்கு மேற்கு மேற்கு நெடுஞ்சாலை வழியின் கீழ் கட்டப்பட்டுள்ளது.

- வெகு விரைவில் சீன அரசாங்கம் திபெத்திலிருந்த காத்மாண்டிற்கு இரயில் போக்குவரத்தை தொடர்வதற்கு தயார் செய்து கொண்டிருக்கிறது.

- மேலும் “ஒரு பாதை ஒரு சாலை முன்னெடுப்பில்” நேபாளம் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.
- நேபாள குழுமங்களோடு சீனா, இந்திய விற்பனையாளர்களை சீர் கெடுக்கும் போட்டி மனப்பான்மையோடு பணி செய்து வருவது. இந்தியாவிற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

**இடமாற்று மற்றும் போக்குவரத்து ஒப்பந்தம்**

- நேபாளமும், சீனாவும் இடமாற்று மற்றும் போக்குவரத்து ஒப்பந்தத்தை இறுதி செய்தது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் நேபாளம், சீனாவின் நான்கு துறைகளையும் மூன்று உட்பகுதி துறைமுகங்களையும் வாணிபத்திற்காக பயன்படுத்தவும், இதன் மூலம் இந்தியாவை சார்ந்திருப்பது குறைகிறது.
- இம்மாதிரியான தரைவழி மற்றும் ரயில்வே சாலைகளும் நேபாளத்திற்கும் சீனாவிற்குமான உறவுகளை வலிமையாக்கி கொண்டு இந்தியாவுடனான உறவில் சீன-இந்திய எல்லையை சீரழிக்கின்றன.

**நிலத்தால் சூழப்பட்ட (பூட்டப்பட்ட) இமாலய பேரரசு, ஒரு மாற்று வர்த்தகப் பாதையைப் பெற்றது. ஆனால் அது உதவுமா?**

❖ சீனா – நேபாளம் செய்துச் கொண்ட இடமாற்று மற்றும் போக்குவரத்து ஒப்பந்தத்தின்படி நேபாள நாட்டு வர்த்தகர்கள் ரயில், சாலை, துறை மற்றும் கடல் துறைமுகங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

❖ நேபாளத்தின் லாரிகள், நீண்ட சரக்கு லாரிகள் மற்றும் சிறியப் போக்குவரத்துக் கப்பல்கள் ஆகியவற்றில் திபெத்தின் 'சியாக்ட்சே'' பகுதியிலிருந்து கொண்டுவர சீனா அனுமதியளிக்கிறது.

❖ நேபாளம் சீனாவின் ஆறு சோதனைச் சாவடிகளைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

**சாலை வழித்தடை:**

❖ தொலைவு ஒரு முக்கிய சிக்கலாகும் நேபாளத்திலிருந்து சீனத்துறைமுகம் 2000 கி.மீ.க்கும் அப்பால் உள்ளது.

❖ சரியான சாலை வசதி மற்றும் சுங்கம் சார்ந்த உள்கட்டமைப்பு போன்றவை இல்லாமை நேபாளத்தின் பக்கம் இருக்கும் மிகப் பெரிய சவால் என வர்த்தகர்கள் கூறுகிறார்கள்.

**நேபாளத்தை பொறுத்தவரையில் ஏன் இந்தியாவிற்கு மாற்றாக சீனா இருக்கமுடியாது?**

❖ புவி அமைப்பில் இந்தியாவின் இடம் சிறப்பு வாய்ந்ததாகவும் அருகருகே அமைந்துள்ளது. ஆனால் சீனாவின் துறைமுக பாதையோ (அல்லது) ரெயில் பாதையோ நேரடியாக நேபாளததிற்கு வர இயலாத புவி அமைப்பு உள்ளது.

❖ நேபாளம் உபயோகப்படுத்துகிற சீனாவின் துறைமுகம் 3000கி.மீ தொலைவில் உள்ளது. ஆனால் இந்தியாவின் கொல்கத்தா மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்கள் வெகு அருகருகே அமைந்துள்ளது.

**இந்தியா-பூடான் உறவுகள்**

இந்தியாவுடன் பூடானின் நட்பு சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. முற்றிலுமாக நிலம் சூழ்ந்த நாடாக இருப்பதால் பெருமளவில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் இந்தியாவையே சார்ந்திருக்கும் சூழ்நிலை நிலவுகிறது. இந்தியாவும் தன்னாலான உதவிகளை பூடானுக்கு செய்வதால், இரு நாடுகளும் பரஸ்பரம் நல்லுறவு நட்பு நாடுகளாக நட்பு பாராட்டி வருகின்றன.

1968-லிருந்து இந்தியாவுடனான பூடானின் நட்பு வெகு நேர்த்தியாக வளர்ந்து வருகிறது. திம்புவில் இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி பணியமர்த்தப்பட்ட பிறகு கூடுதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு முன்பாக சிக்கிமிலிருந்த அரசியல் அதிகாரியின் மூலம் இந்திய உறவுகள் மேம்படுத்தப்பட்டது.

இந்தியாவின் அணுகுமுறையால், 1965இல் பூடான் கொழும்பு திட்டத்திலும் 1969இல் உலக தபால் பணி குழுவிலும் சேர்ந்தது. இறுதியாக பூடான் உறுப்பினராவதற்கு 1971இல் இந்தியா சிபாரிசு செய்தது. அணிசேரா இயக்கத்துடனான பூடானின் உறவுகளுக்கும் இந்தியா முயற்சிகள் மேற்கொண்டது.

**கால வரிசை நிகழ்வுகளும்**

1. **புனக்ஷா ஒப்பந்தம் (1910):**
   பிரிட்டிஷ் இந்தியாவின் மற்றொரு பாதுகாப்பான அரசாக பூடான் விளங்கியது. இதன் மூலம் மூலம் உள்சுதந்திரத்தை பெற்று இருந்ததே தவிர வெளி சுதந்திரத்தை பெறவில்லை.

2. **நட்புறவு மற்றும் ஒத்தழைப்பின் ஒப்பந்தம்:**

இந்தியாவும் பூடானும் அமைதி மற்றும் நட்புறவு உடன்படிக்கையை 1949, ஆகஸ்டு 8இல் டார்ஜிலிங்கில் கையெழுத்திட்டன.

| |
|---|
| **பிரதமர் ஜவஹர்லால் நேரு, 1958**<br>இந்தியா சக்தி வாய்ந்த நாடாக இருப்பதாலும் பூடான் சிறிய நாடாக இருப்பதாலும், இந்தியா தன் சக்தியை திணிக்கும் என பலர் எண்ணிக் கொண்டிருக்கக் கூடும். இதனால் பூடானியர்களான நிங்கள் சுதந்திரமாகவும், உங்களுக்குகென்று தனி வாழ்க்கையும் வளர்ச்சி பாதையும் நீங்கள் நிர்ணயிக்க வேண்டும். அதே சமயம், இந்தியா, பூடான் இரு நாடுகளும் பரஸ்பரம் நட்பு பாராட்ட வேண்டும். நாம் இருவரும் இமாலயக் குடும்பத்தின் உறுப்பினர்களாக ஒருவருக்கொருவர் உதவி செய்தல் வேண்டும். இரு நாடுகளின் சுதந்திரமும் சேர்ந்து பாதுகாத்தல் அவசியம். இல்லையெனில் வெளிநாடுகளின் மூலம் எதிர்மறை பாதிப்பு அதிகரிக்கக்கூடும் என்று பிரதமர் நேரு தெரிவித்துள்ளார். |

❖ இந்த உடன்படிக்கையானது 1910ஆம் ஆண்டு ஆங்கிலேயே-பூடானிய உடன்படிக்கையின் தொடர்ச்சியாக கருதப்படுகிறது. இதன் மூலம் இமாலயப் பகுதி இந்தியப் பாதுகாப்பின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

❖ பூடான் அயல்நாட்டு கொள்கையில் இந்திய-பூடான் உடன்படிக்கை ஒரு மைல் கல்லாகவே செயல்படுகிறது.

| பூடான் 1949ஆம் ஆண்டு | |
|---|---|
| உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல் | உறுப்பு 2-வெளியுறவுக் கொள்கை இந்தியாவின் வழிகாட்டுதலில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| பாதுகாப்பு | உறுப்பு 6-இந்தியாவிற்கு எதிராகப் போகாதவரை, ஆயுதங்கள் இறக்குமதி செய்துக் கொள்ள அல்லது இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்துக் கொள்ள எந்தத் தடையும் இல்லை. |
| வெளியுறவு உறவுகள் | உறுப்பு 2 |

**மறுசீரமைக்கப்பட்ட உடன்படிக்கை (2007)**

❖ பூடான் வேண்டிகொண்டதன் மூலம் இந்தியா தமது நட்புறவு மற்றும் ஒத்தழைப்பு உடன்படிக்கையை மறுசீரமைத்தது.

❖ இம்மறுசீரமைப்பின்படி இந்தியா வழிநடத்தும், பங்குதாரரின் நிலையிலிருந்து நெருங்கிய நட்புறவாகவும், சமபங்குதாரராகவும் செயல்பட வழிவகுப்பது.

❖ மேலும் புதியதாக இராணுவம் தொடர்பான பொருள்கள் இறக்குமதி செய்வதற்கு இந்தியாவின் அனுமதி பெறத்தேவையில்லை.

❖ வெளிநாடுகளுடனான உறவுகளில் சுதந்திரமும் ஆனால் அதே சமயம் இந்தியாவின் பாதுகாப்பும் அச்சுறுத்தும் வகையில் செயல்படாத வகையில் உறவுகளை மேற்கொள்ளுமாறு சீரமைக்கப்பட்டது.

**3. இந்திய-பூடான் வாணிபம் மற்றும் பரிமாற்ற ஒப்பந்தம் (1972)**

❖ பூடான் ஏற்றுமதி பொருள்கள் எவ்வித வரியுமின்றி வெளிநாடுகளுக்கு செல்லும் வகையில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

❖ நீர் மின்திட்ட கூட்டுறவு ஒப்பந்தம் (2006)ஆம் ஆண்டு வரை பூடான் 10,000 மெகாவாட் அளவு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இநதியா உதவி புரிவதாகவும், தேவைக்கும் அதிகமான மின்சாரம் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் என்றும் கையெழுத்திடப்பட்டது.

**ஒத்துழைப்பிற்கான பகுதிகள்**

## நீர்மின்திட்டம் ஒத்துழைப்பு

❖ இந்தியா பூடானில் மூன்று நீர்மின் திட்டங்களை நிறுவியுள்ளது. இவை அனைத்தும் மொத்தமாக 1416 மெகாவாட் மின்சாரத்தை உருவாக்குகின்றன. (336 மெகா வாட் சுக்கா நீர்மின் திட்டம், 60 மெகா குரிச்சு நீர்மின் திட்டம் மற்றும் 1020 மெகாவாட்-தலா நீர்மின் திட்டம்).

❖ நீர் மின்சாரம் ஏற்றுமதியின் மூலம் பூடானிற்கு 40% உள்நாட்டு வருவாயும் அதன் மூலம் 25% மொத்த உள்நாட்டு உற்பத்தி பெருக்கமும் அடைகிறது.

❖ தற்போது மூன்று நீர் மின்நிலையங்கள் இரு அரசாங்கங்களுக்கிடையே திட்டமிடப்பட்டு கட்டுமான பணியில் உள்ளது. அவை எச்.இ.பி. மாதிரி-1200 மெகாவாட், பனட்சங்ச்சு –I 1020 மெகாவாட், பனட்சங்ச்சு –IIமற்றும் மவ்தேச்சு 720 மெகாவாட் ஆகும்.

## பாதுகாப்பு ஒத்துழைப்பு

❖ இரு நாடுகளும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக கூட்டு பயிற்சி இராணுவ நடவடிக்கையை நடத்தி உள்ளது.

❖ 2004இல் நடைபெற்ற இராணுவ பயிற்சி குறிப்பிடத்தக்கதாகும். பூடான் இராணுவம் உல்ஃபா தீவிரவாத குழுவிற்கு எதிராக நடத்தியது.

## தூதரக ஒத்துழைப்பு

❖ இரு நாடுகளுக்கிடையேயான உயர்மட்ட அரசாங்க பிரதிநிதிகளின் சந்திப்பு ஆரம்பக் காலத்திலிருந்தே வழக்கமாக இருந்து வந்துள்ளது. 2014ஆம் ஆண்டு நரேந்திர மோடி பிரதமரானவுடன் முதல் பயணமாக பூடான் பயணம் அமைந்தது.

❖ இந்தியா தன்னுடைய தூதரக அதிகாரிகளை பூடானுக்கு அனுப்பி தூதரக உறவு மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

❖ தெற்கு ஆசியா மண்டல ஒத்துழைப்பு அமைப்பின் உருவாக்கத்தில் உறுப்பினராக பூடான் விளங்குகிறது. மேலும் பிம்ஸ்டெக், உலக வங்கி, ஐ.எம்.எஃப், ஜி-77 போன்ற பன்னாட்டு கழகங்களிலும் உறுப்பினராக பூடான் விளங்குகிறது.

## பொருளாதார ஒத்துழைப்பு

❖ பூடானின் நாணயம் குல்ட்ரம்(Ngultrum) ஆகும். இந்திய ரூபாயுடன் இணைக்கப்பட்டுள்ளது.

❖ பூடானின் மிகப்பெரிய வர்த்தக நாடாக இந்தியா விளங்குகிறது.

❖ 2016இல் புதிய வாணிப ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் படி இரு நாடுகளுக்கிடையேயான பொருளாதார உறவுகளில் குறைந்த அளவு ஆவணங்களுக்கும் மிகுதியான வாணிப நிலையங்களும் அமைப்பதற்கு ஏதுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ மேலும் இந்தியா பூடானிற்கு சுங்கவரி நீக்கப்பட்ட வர்த்தக சலுகை அளித்துள்ளது. இது இரு நாடுகளும் வர்த்தகத்தை மேம்படுத்த வசதியளித்துள்ளது.

## ஒட்டுமொத்த தேசிய மகிழ்ச்சி

1972இல் பூடானின் நான்காம் மன்னரான ஜிக்மே சிங்கே வாங்சுக் ''ஒட்டுமொத்த தேசிய மகிழ்ச்சி'' என்ற கருத்தை பிரகடனம் செய்தார்.

**கல்வி மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு**

❖ எண்ணிலடங்கா பூடான் மாணாக்கரர்கள் இந்தியாவின் பல்கலைக்கழகங்களில் இளநிலை கல்வியை சுயநிதியை அடிப்படையாக கொண்டு பயின்று வருகிறார்கள்.

❖ 2003ல் இந்திய-பூடான் கழகம் உருவாக்கப்பட்டு இநரு நாடு மக்களுக்கிடையேயான ஒத்துழைப்பு கலாச்சாரம், கல்வி மற்றும் சுற்றுப்புற சூழ்நிலை போன்றவைகளின் வளர்ச்சிக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**பிரச்சனைப் பகுதிகள்**

❖ 2015இல் பங்களாதேஷ், பூடான், இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கிடையேயான மோட்டார் வாகன ஒப்பந்தத்தை பூடானின் மேலவை சுற்றுப்புற காரணியை மையமாக வைத்து தடை செய்தது.
❖ சுரிசமமற்ற வர்த்தக வளர்ச்சியானது இந்தியாவிற்கே ஆதாரமாக உள்ளது. இந்திய சேவை மற்றும் பொருள்கள் வரி, ஏற்றுமதிக்கு குறைவாகவும், இறக்குமதிக்கு அதிகமாகவும் உள்ளதால், பூடானின் வர்த்தக குறைபாடு மேலும் சங்கடத்தை சந்திக்க நேருகிறது.

❖ பூடான் தன்னுடைய ஏற்றுமதி வரியை அதிகரிக்கும் நிலையில் உள்ளது.உற்பத்தி விலையை விட வரி குறைவாக இருப்பதால் பூடான் பாதிப்படைகிறது.

❖ தேசிய குடியரசு கிளர்ச்சி கழகங்களான போடோலான்ட் (NDFB), உல்பா(ULFA), மற்றும் சம்பத்பர் விடுதலை அமைப்பு (KLO)போன்றவை எளிதாக நுழையும்படி பூடான் இருப்பதால், வடகிழக்கு பகுதியின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் அச்சுறுத்தலாக உள்ளது.

**டோக்லாம் பிரச்சனை**

டோக்லாம் என்பது இந்தியா பூடான் மற்றும் சீனா நாடுகளுக்கு இடையேயான 100 கி.மீ-க்கும் குறைவாக உள்ள ஒரு பீடபூமி மற்றும் பள்ளத்தாக்கை உள்ளடக்கியதாகும். இப்பகுதியாவது திபெத்தின் அம்பி பள்ளத்தாக்கு மற்றும் பூடானின் உஹா பள்ளத்தாக்காலும் சிக்கிமாலும் சூழப்பட்டுள்ளது. தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் சீனா மற்றும் பூடானிடையே நடைபெற்றிருந்தாலும், டோக்லாம் பிரச்சினை முடிவுற்றதாக அமைந்துள்ளது. 2017இல் இப்பிரச்சினை வலுப்பெற்று சீனாவிற்கும், இந்தியாவிற்கும் இடையே பிரச்சனைகள் ஏற்பட காரணமாயிருந்தது. இப்பகுதியில் சீனா சாலையை நிறுவ தயார் ஆகும்போது இந்திய இராணுவத்தினர், பூடானிற்கு ஆதரவாக தடை ஏற்படுத்தினர்.

**நீர்மின் திட்டம் பிரச்சனைகள்**

❖ பூடான் இந்தியாவிற்கு குறைந்த விலையில் மின்சாரம் அனுப்புகிறது.

❖ கூட்டு நீர் மின் நிலைய திட்டங்களின் மேலாண்மையில் இந்தியா அதிக பங்கு பெற விரும்புவதாக பூடான் நம்புகிறது.

❖ எல்லை கடந்த வாணிபத்தில் மின்னாற்றல் அமைச்சகத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டு இந்தியாவை ஒரே பங்குதாரராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது நீர்மின் நிலைய முதலீட்டில் பூடானின் சுதந்திரத்தை பாதிக்கிறது.

❖ நீர்மின் நிலையங்கள் சுற்றப்புறச் சூழலும் இணைந்து பார்க்கப்படுகிறது.

**ஒத்துழைப்பிற்கான நடவடிக்கைகள்**

- ❖ இரு நாடுகளுக்கிடையேயும் நட்பு ரீதியான சந்திப்புகள் அடுக்கு நிகழ்வுகளாக நடைபெறுகிறது.
- ❖ பூடானின் 20 மாவட்டங்களுக்கான மின்னணுத்திட்டம் இந்தியாவால் மேம்பாடு அடைகிறது.
- ❖ தற்போதைய பிரதமரால் “B-to-B” என்று (பாரத்-டு-பூடான்) கொள்கை உருவாக்கப்பட்டு இரு நாடுகளுக்கிடையான உறவுகள் வலுப்படுத்தப்படுகிறது.
- ❖ இந்திய வெளிநாட்டுக் கொள்கையில் அதிகம் உதவிகளை பெரும் நாடாக பூடான் விளங்குகிறது.
- ❖ நிரந்தரமாகவே 1000 வீரர்கள் கொண்ட இந்திய இராணுவ பயிற்சி குழு(IMTRAT) மேற்கு பூடானில் செயல்படுகின்றது. இக்குழு பூடான் படைக்கு பயிற்சி அளிக்கிறது. ஏனைய மற்ற இந்திய படைக்கும் ராயல் பூடான் படைக்கும் உதவி புரிகின்றன.

**எதிர்கால ஒத்துழைப்பு**

- ❖ இந்திய-பூடான் உறவுகள் நீருக்கும் பாலுக்குமான உறவாகும். இரண்டையும் பிரிக்க முடியாததாக உறவு அமைந்துள்ளது.
- ❖ இந்தியா, கிடப்பில் போடப்பட்டிருக்கும் சில நீர் மின் நிலைய திட்டங்களை விரைந்து முடித்தல் வேண்டும். போதுமான நிதியில்லாதது காரணமாக கூறப்படுகிறது.
- ❖ இந்தியாவிற்கும், பூடானிற்கும் ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கிறது. ஆனால் இது சீனா பல்வேறு எல்லை பிரச்சனைகளை கொடுக்கின்றது. இந்தியாவுடனான ஒத்துழைப்பை பூடான் நன்றாக பயன்படுத்தி சீனாவின் தவறான கணக்கீட்டிற்கு தகுந்த பதிலடி அளித்தல் வேண்டும்.
- ❖ பூடானுடனான வடகிழக்கு தொடர்பை இந்தியா மண்டல பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும்.
- ❖ பூடானின் மொத்த தேசிய மகிழ்ச்சியை இந்தியா தன்னுடைய பொருளாதார வளர்ச்சியோடு இணைத்து மகிழ்ச்சி மற்றும் நட்பு பகிர்தலை மேற்கொள்ள வேண்டும்.

**இந்திய-மியான்மர் உறவுகள்**

இந்தியாவிற்கும் மியான்மருக்குமான (முன்பு பர்மா) உறவுகளின் வரலாறு 2500 ஆண்டுகள் கொண்டதாகும். பர்மியர்கள் புத்தமதத்தின் தொடர்புகள் இந்தியாவையும் மியான்மரையும் இணைத்துள்ளது என்று நம்புகிறார்கள் ஸ்வேதகான் பகோடா எனகிற புகழ்பெற்றவர் கூற்றின்படி, கோவிலின் இதயப்பகுதி புத்தரின் முடி புதைந்த முடி புதைந்த இடத்தில் உள்ளதாகவும். அவை இரண்டு பர்மா வியாபாரிகளுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டதாகவும் ஒரு நம்பிக்கை உள்ளது. இந்த நம்பிக்கையில் அசோகரை பர்மாவில் பகோடா வகை கட்டுமானத்தை நிறுவுவதற்கு தூண்டியதாகவும் புத்த மதம் பரவுவதற்கு காரணமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அனைத்து புத்த பர்மியர்களும் வாழ்வில் ஒருமுறை இந்தியாவில் அமைந்துள்ள புத்தகயாவில் பிரார்த்தனை செய்வதற்கு விரும்புகிறார்கள். இரு நாடுகளும் சுதந்திரம் பெறுவதற்கு வெகு நாள்கள் முன்னதாகவே, அங்கு இருக்கக்கூடிய மீசோ, நாகா குக்கி, தங்குள், பைட்டே போன்ற குழுக்கள் குடும்ப ரீதியாகவும் உறவு பாராட்டினார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் வந்த பிறகே இரு நாடுகளுக்கிடையே எல்லைகள் உருவாக்கப்பட்டு நாடுகளாக உருப்பெற்றன.

**இனக்கூறுகள்**

பர்மாவின் பாதுகாப்பு என்பது இந்தியாவின் பாதுகாப்பு ஆகும். இதனால் இந்தியாவின் முழு

கவனமும் எல்லையின் மீது இருந்தாக வேண்டும். பர்மாவை பாதுகாப்பதைவிட வேறு எந்த ஒரு செயலும் இந்தியாவிற்கு முக்கியமில்லை என்று கூறுகிறார்.
**-K.M. பணிக்கர்**

**நவீன காலம்**

வரலாற்று ரீதியான வலிமையான உறவுகள் இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் இடையே இருந்தாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் போது, இந்திய இராணுவத்தினர் பர்மா விடுதலை இயக்கத்திற்கு எதிராக போரிட்டதால் பர்மியர்கள் அதிருப்தி அடைந்தனர். இந்தியர்கள் எப்போதும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கைக்கூலியாக பணி புரிவதாக பர்மியர்கள் நினைவு கூறுகிறார்கள்.

**அறிமுகம்**

இந்தியா, பர்மாவுடன் 1600 கி.மீ நில எல்லையும் வங்காள விரிகுடாவில் கடல் எல்லையும் பகிர்ந்து காணப்படுகிறது. இந்தியாவின் நான்கு வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலப் பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர் மற்றும் மிசோரம் மியான்மருடன் எல்லை பகிர்ந்து காணப்படுகிறது.

இந்த புவிசார்ப்பு அமைப்பின் இணைப்பானது இந்தியப் பெருங்கடலில் பெருமளவு இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. மேலும் இரு நாடுகளும் பாரம்பரியம், மத, மொழி மற்றும் இன ரீதியான இணைப்புகளையும் பெற்றுள்ளது.

மேலும் ‘ஆசியான்’ அமைப்பின் உறுப்பினராக மியான்மர் இந்தியாவின் அருகருகே இருப்பதால், தென் கிழக்கு ஆசியாவில் பெருமளவில் பொருளாதார ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு மியான்மர் உதவி செய்யும் என்ற இந்தியா நம்புகிறது. இதற்காகவே உருவாக்கப்பட்ட “கிழக்கு நோக்கி கொள்கை” மற்றும் “கிழக்கு நோக்கி செயல்பாடு” போன்ற திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மியான்மரின் பொருளாதார மேம்பாட்டில் இந்தியாவிற்கு வர்த்தக வாய்ப்புகள் ஏராளமாகவும் அமைத்து காணப்படுகிறது.

**இந்தியாவிற்கு மியான்மரின் முக்கியம் ஏன்?**

**1. புவியமைப்பு**

மியான்மர் வடகிழக்கு மாநிலங்களான மிசோரம், மணிப்பூர், நாகலாந்து, மற்றும் அருணாச்சலப்பிரதேசம் போன்றவைகளுக்கு தெற்கு புறமாக அமைந்துள்ளது. இது இந்திய மியான்மரின் எல்லைகளுக்கு 1600 கி.மீ மேல் நீட்டிக்கப்பட்டுள்ளன.

சீனாவின் தொடர் ஆதிக்க கொள்கையாலும், வட கிழக்கில் எப்போதும் வெடிக்கின்ற கிளர்ச்சிகளால் இந்தியாவுடனான நட்புறவு பங்களாதேஷ்க்கும் மியான்மருக்கும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. மேலும் முக்கிய பிரச்சனைகளான எல்லை, அத்துமீறி நுழைதல், பண மோசடி, ஆள்கடத்தல், போதைப்பொருள், கள்ளநோட்டு போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளும் முற்றுப்பெறாமல் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

**2. இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கை**

இக்கொள்கையின் மூலம் இந்தியா தென் கிழக்கு ஆசியாவில் கலாச்சார, பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்திக்கொள்ளவும் மண்டல சக்தியாக உருவாகவும்,சீனாவிற்கு சிறந்த போட்டியாளராக முன்னேறவும் இந்தியா இராணுவம் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இரு தேசிய நெடுஞ்சாலையும் மியான்மருடன் ஏனைய மற்ற தென்கிழக்கு மண்டலங்களுடன் இணைவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

**3. இந்தியா-மியான்மர்-தாய்லாந்து நெடுஞ்சாலை நட்புறவு**

இந்தியாவும் மியான்மரும், 3200 கி.மீ தொலைவில் உள்ள நான்கு வழிச்சாலை அமைப்பதற்கும், இந்தியா-மியான்மர் மற்றும் தாய்லாந்தை இணைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. இப்பாதை திட்டம் மூலம் வட கிழக்கு பகுதிகளின் வழியாக 1600 கி.மீ நீளத்துக்கு சாலைகள் அமைக்கப்படும். ஏப்ரல் 2021இல் இத்திட்டம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4. வட கிழக்கு அணுகுமுறை**

காலதான் பல்-அடுக்கு இடமாற்று போக்குவரத்து திட்டத்தின்படி கொல்கத்தாவின் கிழக்கு துறைமுகத்தையும், மியான்மரின் சிட்வி துறைமுகத்தையும் இணைக்கும்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மியான்மரின் சிட்வி துமைமுகத்திலிருந்து லேஸ்யோவிற்கு ஆறு வழியாகவும் பின் லேஸ்யோவிலிருந்து மிசோரத்திற்கு தரை வழி போக்குவத்திற்கும் மேற்கொள்ளப்பட்டது.

**வர்த்தக ஒத்துழைப்பு**

1. 1970களில் இரு நாடுகளுக்கிடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டுள்ளது. இரு நாட்டின் வர்த்தகம் மிகச்சிறப்பாக மேல்நோக்கி 2178.44 மில்லியன் அமெரிக்கா டாலராக (2016-17) உயர்ந்துள்ளது. இதில் இந்திய ஏற்றுமதி 1111.19 மில்லியன் அமெரிக்கா டாலர்களாகவும் இறக்குமதி 1067.25 மில்லியன் அமெரிக்கா டாலர்களாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

2. மியான்மரின் ஐந்தாவது பெரிய வர்த்தக பங்குதாரராக இந்தியா விளங்குகிறது.

3. இந்தியாவில் ஏற்றுமதியானது சர்க்கரை (424 மில்லியன் டாலர்) மருந்து பொருள்கள் (184 மில்லியன் டாலர்) போன்றவை உள்ளடக்கியது. மோரே மற்றும் சாவ்காதர் வழியாக எல்லை வர்த்தகம்(87.89 மில்லியன் டாலர்)களை எட்டியது.

4. மியான்மரின் முதலீட்டாகளில் இந்தியா பத்தாவது இடத்தில் நின்று 740.64 மில்லியன் அமெரிக்கா டாலர்களை முதலீடு செய்துள்ளது. இத்தொகையானது 25 நிறுவனங்களின் மூலமாக மியான்மரில் செயல்படுகிறது. (2017 ஜூன் 30 நிலவரப்படி).

5. பெருமளவில் முதலீட்டாளர்கள் எண்ணெய் மற்றும் எரிவாயு துறைகளிலேயே தங்கள் முதலீடுகளை அமைத்துள்ளனர். அயல்நாட்டு நேரடி முதலீட்டின் மூலமாக 100%சில துறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மியான்மரில் முதலீடு செய்வதற்கு இந்திய நிறுவனங்கள் போட்டி போட்டு கொண்டு பல்வேறு ஒப்பந்தங்களை கையெழுத்திட்டுள்ளன.

6. வெகு சாதாரண வர்த்தகத்திலிருந்து, இரு நாடுகளும் நில எல்லையில் தங்கள் பொருள்களை விற்பதற்கும் வாங்குவதற்குமான நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளன. வங்கி துறையில் கூட்டுறவு, முதலீட்டிற்கும், வர்த்தகத்திற்கும் முக்கியமானதாக அமைகிறது. யுனைட்டெட் இந்திய வங்கி(United bank of India)மியான்மரின் வங்கிகளான எம்.எப்.டி.ஆர்(MFTR), எம்.ஐ.சி.பி(MICB), எம்.இ.பி(MEB)மற்றும் ஒன்பது தனியார் வங்கிகளுடன் இரு நாடுகளின் வர்த்தக வளர்ச்சிக்காக ஒப்பந்தம் செய்துள்ளது.

7. ஏனைய நாடுகளுடனான ஆற்றல் தொடர்பான உறவுகளுக்கு மியான்மருடனான கூட்டணி முக்கியமானதாகும். முக்கியமாக பெட்ரோல் மற்றும் இயற்கை வாயு தொடர்பான உறவுகளுக்கு மியான்மருடனான கூட்டணி முக்கியமானதாகும். முக்கியமாக பெட்ரோல் மற்றும் இயற்கை வாயு தொடர்பான துறைகளாகும்.

**வளர்ச்சி தொடர்பான ஒத்துழைப்பு**

1. மியான்மருக்கு மானிய உதவியாக ₹.4000 கோடி (1726 மில்லியன் அமெரிக்கா டாலர்). இந்தியா அளிப்பதாக வாக்கு கொடுத்துள்ளது.

2. மேலும் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்பான நிலையங்கள் அமைப்பதற்கு உதவியாகவும் இருப்பதாக இந்தியா உத்திரவாதம் அளித்துள்ளது.

**கலாச்சார உறவுகள்**

இந்தியாவும் மியான்மரும் நெருங்கிய கலாச்சார உறவுகளையும், புத்த சமய பாரம்பரியத்தையும் தழுவிய பண்பாட்டையும் கொண்டுள்ளன. இப்பாரம்பரிய பகிர்வின் மூலம் பல முக்கியமான முன்னெடுப்புகளையும் நிறைவேற்றியுள்ளன.

1. பாகனில் உள்ள ஆனந்தா கோவிலை மறுசீரமைப்பது.

2. இந்திய அரசாங்கத்தின் அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 16அடி நீளமுள்ள புத்த நிலை (சாரநாத் மாதிரி) யாங்கூனில் உள்ள ஷீவெடககோன் பகோடவில் நிலை நிறுத்தப்பட்டது.

3. "சம்வட்-II" பல்வேறு நம்பிக்கைகள், பண்பாடுகள் பற்றிய பேச்சு வார்த்தையை யாங்கூனில் ஆகஸ்ட் 6-7-2017இல் நடத்தியது.

4. இந்திய கலாச்சார ஆராய்ச்சிக்கான கவுன்சிலும் சிதகு பன்னாட்டு புத்த அமைப்பும் சேர்ந்து புத்த சமய கலாச்சார பரிணாமம் தொடர்பான பன்னாட்டு கருத்தரங்கை நடத்தியது.

5. மியான்மரின் மன்னர்கள் மிண்டான் மற்றும் பாகியதா கட்டிய இரு கோவில்களை புத்த கயாவில் சீரமைப்பது பற்றிய பர்மாவின் விருப்பத்திற்கு இசைந்து கொடுத்தது. இந்த கோவில்களும் அதன் கல்வெட்டுகளும் இந்தியாவின் தொல்லியல் ஆராய்ச்சி துறையின் உதவியோடு மீட்டெடுப்பது இரு நாடுகளின் கொள்கைத் திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**இந்திய புலம் பெயர்ந்தவர்கள்**

1. மியான்மரில், இந்தியர்களின் வருகையின் ஆரம்பம் 19ஆம் நூற்றாண்டின் மத்தியிலே பிரிட்டிஷ் அரசாங்கம் பர்மாவை 1852-இல் ஆண்ட போது தொடங்கியது.

2. இரு நகரங்களான யாங்கூன் மற்றும் மண்டலேயில் இந்திய மக்கள் குடிமைப்பணிகள், வர்த்தகம், வாணிபம் போன்ற துறைகளில் வளர்ச்சியடைந்து இருந்தனர்.

**இரு நாடுகளுக்கிடையேயான மண்டல மற்றும் துணை மண்டல ஒத்துழைப்பு**

**ஆசியான் (ASEAN)**

இந்தியாவுடன் எல்லையை பகிர்ந்து கொள்ளும் ஒரே ஏசியான் நாடு மியான்மர் ஆகும். இந்தியாவிற்கும் ஆசியன் அமைப்பிற்கும் ஒரு பாலமாகவே செயல்படுகிறது.

**பிம்ஸ்டெக் (BIMSTEC)**

பிம்ஸ்டெக் அமைப்பின் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் மியான்மர் கையெழுத்திட்டுள்ளது. ஆற்றல் துறையில் மியான்மர் முன்னோடியாக திகழ்கிறது. பிம்ஸ்டெக் அமைப்பில், மியான்மர் பெரும்பாலும் தாய்லாந்து மற்றும் இந்தியாவுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. மியான்மரின் இந்திய ஏற்றுமதி பொருள்களாக பருப்பு வகைகள் , சோளம் பீன்ஸ் மற்றும் வன உற்பத்திக்கான தேக்கு, கடின மர வகைகள் பொன்றவை உள்ளடக்கம். இந்தியாவிலிருந்து மியான்மர் ரசாயன பொருள்கள், மருந்துகள், மின்சார உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் ஆகியவை இறக்குமதி செய்கிறது.

**மீகாங்-கங்கா ஒத்துழைப்பு**

மீகாங்-கங்கா ஒத்துழைப்பு திட்டத்தில் உறுப்பினராக, இவ்வமைப்பு ஆரம்பித்த 2000ஆம் ஆண்டு முதல் மியான்மர் செயல்படுகிறது. இவ்வமைப்பு, இந்தியாவை மட்டுமல்லாமல் ஐந்து ஆசியன் நாடுகளான கம்போடியா, லாவோஸ், மியான்மர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளை உள்ளடக்கி சுற்றுலா, கல்வி, கலாச்சாரம், போக்குவரத்து மற்றும் தகவல் பரிமாற்றம் போன்ற துறைகளில் நல்லுறவு ஏற்படுத்தும் பொருட்டு உண்டாக்கப்பட்ட அமைப்பாகும். இவ்வமைப்பின் தலைவர் பதவியானது ஆங்கில அகர வரிசையின்டிப மேற்கொள்ளப்படுகிறது.

**சார்க் (SAARC)**

ஆகஸ்ட் 2008இல் மியான்மருக்கு சார்க் அமைப்பு பார்வையாளர் அந்தஸ்தை அளித்தது.

**முடிவுரை:**

1. இந்தியாவில் மியான்மரை "கிழக்கின் நுழைவாயில்" என்று அழைக்கிறோம். ஆனாலும் இரு நாடுகளின் உறவுகளை பார்க்கிறபோது கடக்கக்கூடிய தூரங்கள் நிறையவே இருப்பதாக தெரிகிறது. நீண்ட நிலம் மற்றும் கடல்நீர் எல்லைகளை கொண்டிருப்பதால் புவியியல் அமைப்பை இரு நாடுகளும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. வுரலாற்று ரீதியாக, மியான்மர் நாட்டின் சமூக-பொருளாதார காரணங்களை நிர்ணயிக்கக்கூடிய நாடாக இந்தியா 1960 வரை இருந்தது. இராணுவ சர்வதிகாரத்துவ ஆட்சியும், அதன் பொருளாதார திட்டங்களும் இந்தியாவுடனான மியான்மரின் நட்பை சீர்குலைக்க துவங்கியது.

3. ஆரசியல் மாற்ற நிகழ்வுகளால் தற்போதைய காலக்கட்டம் இந்தியாவிற்கு மிகச் சிறந்த வாய்ப்பை அளித்துள்ளதால் மியான்மருடனான உறவுகளை புதுப்பிப்பதற்கு தகுந்த நேரமாகும்.

**இந்திய-மாலத்தீவு உறவுகள்**

மாலத்தீவு, கிட்டத்தட்ட 1192 தீவுகளை உள்ளடக்கியது. இவற்றுள் 200 தீவுகளில் 4,30,000 மக்கள் வாழ்கிறார்கள். 80 தீவுகளில் சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு உண்டான ஓய்வு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. தலைநகரமான மாலே அதிக மக்கள் வசிக்கின்ற நகரமாக உள்ளது. பெருவாரியாக சன்னி இஸ்லாமியர்கள் வாழும் இந்நாட்டில், ஏனைய மற்ற மதங்கள் தொடர்பான வழிபாடுகள் வீடுகளிலேயே நடைபெறுவது வழக்கமாக உள்ளது.

மாலத்தீவுகளின் பிரதமர் அகமது ஜகி 1974 இந்தியா வந்ததுதான், அந்நாட்டின் முதல் அரசுமுறை பயணமாகும்.

நவம்பர் 1968இல் மாலத்தீவு விடுதலை பெற்றதிலிருந்து இந்தியாவிற்கும், அந்நாட்டிற்கும் முறையான உறவுகள் ஆரம்பித்தன. இந்தியா, மாலத்தீவை அங்கீகரித்த மூன்றாவது நாடாகும். இதன் பிறகு இரு நாட்டின் பிரதிநிதிகளும் உறவுகள் மேம்பட சந்திப்புகளும் பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டன. அவற்றில் மாலத்தீவுகளில் பொருளாதார வளர்ச்சி உச்சநிலையை நோக்கி சென்றது.

இம்மாதிரியான சுமூக உறவுகள், குடியரசுத்தலைவர் நஷீத் பதவி வகித்த காலத்திலும் வழக்கத்தில் இருந்தது. நஷீத் குடியரசுத்தலைவர் ஆனவுடன் முதல் அரசுமுறை வெளிநாட்டுப் பயனமாக 2008இல் நடைபெற்ற இச்சந்திப்பின்போது இந்தியா, மாலத்தீவிற்கு 100 மில்லியன் டாலரை அதனுடைய சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு கடன் அளிப்பதாக உத்திரவாதம் அளித்தது. இதன்பிறகு இரு நாட்டினரின் அரசு தொடர்பான சந்திப்புகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. 2012இல் நஷீத் அவர்கள் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார்.

**பின்னணி**

இந்தியா மற்றும் மாலத்தீவுகள், இனம், மொழி, கலாச்சாரம், மதம் மற்றும் வர்த்தகம் தொடர்பாகவும் சுமுகமான பல்பரிமாண உறவுகளை மேற்கொண்டு வந்துள்ளன. 1965இல் மாலத்தீவுகளின் சுதந்திரத்திற்கு பிறகு அந்நாட்டை அங்கீகரித்த முதல் நாடு இந்தியாவாகும்.

அண்டை நாட்டுடன் முதன்மையான உறவு என்ற கொள்கையின்படி "மாலத்தீவின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு உதவிட முழு உதவியாக இருந்தது. இதன் தொடர்ச்சியாக மாலத்தீவின் எல்லா பிரச்சனைகளுக்கும் இக்கொள்கையை பின்பற்றி நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டது.

**இந்தியா – மலத்தீவின் பாதுகாப்பு முக்கியத்துவம்**

**புவியமைப்பு**

மாலத்தீவு லட்சத்தீவிலிருந்து 700 கி.மீ தொலைவிலும், இந்திய பிரதான இடத்திலிருந்து 1200 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. மேலும் சீனாவின் இருப்பு, இந்தியாவிற்கு மாபெரும் அச்சுறுத்தலை விளைவிக்கிறது.

**மாலத்தீவு ஏன் இந்தியாவிற்கும் முக்கியமானது என்பதற்கான 10 காரணங்கள்**

1. மாலத் தீவானது இந்தியப் பெருங்கடலில் ராணுவ முக்கியத்துவம் காய்ந்த பகுதியில் அமைந்தும் 1200 கோரல் தீவுகளைக் கொண்டதும் சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளுக்கு தடையில்லாமல் ஆற்றல் தேவையை அளித்துவரும் கடலவழி பாதைக்கு அடுத்தும் அமைந்துள்ளது.

2. பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக சீனா, தனது கடற்படை கப்பலை இந்திய பெருங்கடலுக்கு ஏடன் வளைகுடாப் பகுதியில் கடற்கொல்லைக்கு எதிரான நடவடிக்கைக்கு அனுப்பி வைத்தது. இந்த நிலையில்தான் மாலத்தீவானது நிலையான வளர்ச்சி பெற்று இப்பொழுது சர்வதேச புவியரசியலில் இதயமாக விளங்குகிறது.

3. இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஒரு இன்றியமையாத தெற்கு ஆசியா சக்தியின் ஒரு வலைப்பின்னலாக இருக்கும் மாலத்தீவுடன் இந்தியா இராணுவம் மற்றும் பாதுகாப்பு துறையில் அதன் ஒத்துழைப்பு தேவையாகிறது.

4. மாலத்தீவில் சீனாவின் பெருமளவிலான பொருளாதார இருப்பானது. இந்தியாவிற்கு பெருங்குறையாகும். அந்நாடு,70% தனது கடனுக்கு சீனாவிற்கு கடன்பாட்டுள்ளது. இந்தியாவை பின்னுக்கு தள்ளிவிட்டது. தற்பொழுதுள்ள அரசியல் நெருக்கடியானது இந்தியாவிற்கு சரியான வாய்ப்பளித்துள்ளது.

5. பெருவாரியான மக்கள் தொகை நஷீத்தின் எம்.டி.பி (MDP) கட்சியை ஆதரிக்கிறார்கள். இக்கட்சியானது இந்தியா முன்னாள் அதிபர் யாமினுக்கு எதிராக செயல்பட விரும்புகிறது.

6. சார்க் அமைப்பில், மாலத் தீவும் ஒரு உறுப்பினர் நாடாகும். இது இப்பகுதியில் இந்தியா தலைமை தாங்குவதற்கு மாலத்தீவு அதற்கு மிகவும் முக்கியமாகும். யூரி தாக்குதலுக்கு பிறகு, பாகிஸ்தானின் நடக்கும் சார்க் உச்சி மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று இந்தியாவின் அழைப்பை புறக்கணித்து வரும் ஒரே சார்க் நாடு மாலத்தீவே ஆகும்.

7. யாமின் ஆட்சியின் கீழ் தீவிரவாதப் போக்கு மிக வேகமாக அதிகரித்தது. சிரியாவில் வெளிநாட்டு படையனரின் பெரும் பகுதியினர் ஒருவர் மாலத்தீவை சார்ந்தவர்களாக உள்ளனர். இந்தியாவுக்கு கேடு உண்டாக்கும், ஒரு இஸ்லாமிய தீவிரத்தை தடுத்து நிறுத்துவதில் தவறிப்போன அண்டை நாடாக இருக்கிறது.

8. இந்தியாவும் - மாலத்தீவும் இன, மொழி, கலாச்சாரம், மதம் மற்றும் வணிக தொடர்பைக் பகிர்ந்து கொள்கின்றன. 1965 ஆம் ஆண்டு மாலத்தீவு சுதந்திரம் அடைந்தவுடன் முதலில் அங்கீகரித்த நாடு இந்தியாவாகும். பிறகு 1972 ஆம் ஆண்டு 'மாலே''யில் அதன் தூதரகத்தை அமைத்துக் கொண்டது.

9. மாலத்தீவில் 25,000 இந்திய நாட்டினர் வசிக்கிறார்கள் (இது இரண்டாவது புலம் பெயர்ந்த சமூகம் ஆகும்) ஒவ்வொரு ஆண்டும் மாலத்தீவுகள் பெறும் சுற்றுலாப் பயணகளின் எண்ணிக்கையில் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 6% பங்கினைக் கொண்டதாகும்.

10. மாலத்தீவு நட்புணர்வுக்கு கல்வி. மருத்துவ சிகிச்சை பொழுது போக்கு மற்றும் வர்த்தகம் ஆகியவற்றிற்கு விரும்பி வருவதற்கு இந்தியா உகந்த நாடாக இருக்கிறது. வெளியுறவு அலைச்சகமானது அதிக எண்ணிக்கையிலான மாலத்தீவினர் இந்தியாவில் கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதற்கு நீண்ட காலத்திற்கு விசா நீடிப்பை மேலும் மேலும் நீட்டிக்க வேண்டியுள்ளது.

**இந்தியா பெருங்கடல் மேலாதிக்கம்**

மாலத்தீவில் சீனாவின் இருப்பால் நேரடியாகவோ (அல்லது) மறைமுகமாகவோ இந்திய பெருங்கடலில் தன் கட்டுப்பாட்டை நிறுவுவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் வாய்ப்பு அதிகம். மேலும் அரபு நாடுகளிலிருந்து வரக்கூடிய ஆற்றல் பகிர்வு, மாலத்தீவு வழியாகவே வருவது வழக்கமாக உள்ளது.

**மண்டல ஏற்றத்தாழ்வு**

இந்திய பெருங்கடல் மண்டலத்தில் இந்தியா, மாலத்தீவு, செஷல்ஸ், மற்றும் மொரிஷியஸ்போன்ற நாடுகளுடன் இணைந்து நட்பு பாராட்டுவது சீனாவிற்கு பிரச்சினையாக உள்ளது. சீன-மாலத்தீவு நல்லுறவானது இந்தியாவின் நிலையை குறைக்கும் வண்ணம் உள்ளது.

**பொருளாதார உறவுகள்**

**மாலத்தீவில் இந்தியர்கள்**

கிட்டத்தட்ட 25,000 இந்திய மக்கள் மாலத்தீவில் பல்வேறுபட்ட துறைகளில் பணிபுரிந்து, பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கின்றனர்.

**நீல பொருளாதாரம்**

கடல் வளத்தை மையமாக கொண்டதாக மாலத்தீவின் பொருளாதாரம் என்று அழைக்கப்படும் இவ்வகை நடவடிக்கைகளின் பாதுகாப்பிற்கும், நிலையான அபிவிருத்திக்கும் அடித்தளமாக உள்ளது.

**சுற்றுலாத்துறை**

இரு நாடுகளுக்கிடையெ சுற்றுலாத்துறை சார்ந்த உறவுகளும், சந்திப்புகளும் நடந்தவண்ணம் உள்ளது. மேலும் 6%இந்திய சுற்றுலாப் பயணிகளும் ஒவ்வொரு ஆண்டும் மாலத்தீவிற்கு பயணிக்கின்றனர்.

**காக்டஸ் நடவடிக்கைகள் மாலத்தீவை இந்தியா காப்பாற்றியுள்ளது**

1988இல் 80-200 இலங்கை தமிழ் போராளிகள் (PLOTE) அப்துல்லா லுத்துயி என்கிற தொழிலதிபரின் சூழ்ச்சியில் மாலத்தீவை நோக்கி தாக்குதல் நடத்தினர். மாலத்தீவில் ஊடுருவிய பிறகு, அவர்கள் தலைநகரான 'மாலே'வில் ஊடுருவி முக்கியமானப் பகுதிகளை ஆக்கிரமித்தனர்.

குடியரசுத்தலைவர் அப்துல் கயமின் ஆட்சியை கலைப்பதற்கு முனைந்தனர். ஆனால் கயும், மாலத்தீவின் தேசியப் பாதுகாப்பு பணி ஆட்சியை கலைப்பதற்கு முனைந்தனர். ஆனால் கயும், மாலத்தீவின் தேசியப் பாதுகாப்பு பணி தலைமையிடத்தில் தஞ்சம் புகுந்தார். கயும் பல நாடுகளுக்கு அதாவது இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, பிரிட்டன், மலேசியா, இலங்கை பிரச்சினையை விளக்கினார். அமெரிக்காவும், பிரிட்டனும், தங்களால் நேரடியாக நடவடிக்கையில் இறங்க இயலாது என்றும், இந்தியா மூலம் தீர்வு கிடைக்கப்பெறும் என்றும் நம்பிக்கை அளித்தனர். பிரதமர் ராஜிவ் காந்தி மூலமாக இந்தியா வெகுவேகமாக தீர்வு நடவடிக்கையில் இறங்கியது.

குடியரசுத்தலைவர் கயுமின் வேண்டுகோள் கிடைத்த சில மணி நேரங்களில் இந்திய படைவீரர்கள் மாலத்தீவில் இருந்தனர். நவம்பர் 3 1988இல் 15.30 மணி அளவில் நேரங்களில் ஆக்ரா போர் விமான நிலையத்திலிருந்து இல்யுசன் II 76 போர் விமானம் கிளம்பியது. 2,500 கிலோ மீட்டர் கடந்து இந்தியா விமானப்படையின் 44வது ஸ்கோட்ரன், முற்றுகையிடப்பட்ட மாலேதலைநகருக்கு ஒரு கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஹல்ஹிலே விமான நிலையத்தில் இறங்கியது. மேலும் தரையிறக்கப்பட்ட இந்திய விமானப் படைவீரர்கள், குடியரசுத்தலைவர் கயுமை மீட்டெடுத்தனர். போராட்டக்காரர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

இலங்கை தமிழ் போராளிகள் நகரம் முழுவதும் பல முக்கிய பகுதிகளைக் கைப்பற்றியபோது, அவர்கள் கண்காணிக்க மறந்த ஒரு பகுதி ஹல்ஹிலே விமான நிலையம், இந்த நுழைவாயிலை யாரும் கவனிக்காமல், இந்திய விமானப் படைவீரர்கள் தரையிறங்கின. விரைவாக விமான நிலையத்தின் கட்டுப்பாட்டை எடுத்துக் கொண்டனர். பின்னர் கமாண்டோகள் படகுகளைப் பயன்படுத்தி தலைநகருக்குள் நுழைந்து குடியரசுத்தலைவர் கயூமை மீட்டு, போராளிகளை விரட்டியடித்தனர்.

இந்திய தரப்பில் இந்நடவடிக்கையில் எந்தவித இழப்பும் இல்லாதது என்பது சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஆசியாவின் பாதுகாப்பில் இந்தியா மிகச் சிறப்பாக பங்காற்ற முடியும் என்பதை நிரூபித்தது. காக்டஸ் நடவடிக்கை. அமெரிக்கா அதிபர் ரொனால்டு ரீகன் முல் பிரிட்டனின் பிரதமர் மார்கரெட் தாட்சர் வரை உலக சமூகம் அனைத்தும் இந்தியாவின் இந்த உறுதியான நடவடிக்கையை பாராட்டினார்கள்.

**சுகாதாரம்**

பெருவாரியான மாலத்தீவு மக்களுக்கு மருத்துவ ரீதியான முதல் அண்டை நாடாக இந்தியா விளங்குகிறது. இதன் மூலம் இந்திய சுகாதாரத் துறை வளர்ச்சி காண்கிறது.

**அரசியல் உறவுகள்**

**அரசியல் குழப்பம்**

அரசியல் குழப்பம் அரசியலில் நிலைத்தன்மை இல்லாததால் மாலத்தீவில் தீவிரவாதம், மத அடிப்படைவாதம், கடத்தல் மற்றும் போதைப் பொருள் பழக்கம் அதிகமாகவே அச்சுறுத்துகிறது. ஐ.எஸ்.ஐகள் மற்றும் லஸ்கர்-இ-தொய்பா போன்ற தீவிரவாத இயக்கங்களும் மாலத்தீவில் நிலையூன்றி நிற்கின்றன.

**சார்க் அமைப்பு**

சார்க் அமைப்பானது இந்தியாவிற்கும், அண்டை நாடுகளுக்கும் உள்ள உறவுகளை வலுமைப்படுத்துவதாக உள்ளது. ஆனால் சார்க் நாடுகளில் சீனா ஊடுருவி இருப்பதால் இந்தியாவின் நிலை சற்று பின்னோக்கி உள்ளது எனலாம். பாகிஸ்தானின் போக்குவரத்திலும் இலங்கையில் ஹம்பன்தோட்டா துறைமுகம் போன்றவற்றிலும் சீனாவினால் கட்டுமானம் செய்யப்பட்டுள்ளது. சீனாவிற்கு அடுத்த கவனம் மாலத்தீவில் உள்ளது.

**இந்திய-மாலத்தீவு உறவுகளில் தற்போதைய வளர்ச்சி**

ஒரு நாடுகளின் அரசியல் நிலைமையைப் பொறுத்து உறவுகள் பாதிப்பை சந்திக்கின்றது. 2013இல் யாமீன் குடியரசுத்தலைவர் நஷீதை தோற்கடித்தார். யாமீனின் ஆட்சியில் இந்தியாவுடனான உறவுகள் மோசமடைந்த நிலையில் சீனாவுடன் வலிமையான உறவினைக் மாலத்தீவு உண்டாக்கி வருகிறது. இதை பின்வரும் நடவடிக்கைகள் நிரூபிக்கின்றன.

- இந்தியாவுடனான ‘ஜி.எம்.ஆர்’ திட்டம் 2012ல் மாலத்தீவு ரத்து செய்தது. 500மில்லியன் டாலர் மதிப்புள்ள இத்திட்டம் மாலத்தீவு தலைநகரமான “மாலேக்கு” அருகே பன்னாட்டு விமான நிலையம் அமைப்பதற்காக திட்டமிட்டதாகும். இத்திட்டம் தற்போது சீனாவிடம் தரப்பட்டுள்ளது.

❖ 2015ல் இந்திய பிரதமர் மாலத்தீவு பயணத்தை ரத்து செய்தார். மாலத்தீவில் நிலவிய எதிர்மறையான அரசியல் சூழ்ச்சியே காரணமாக காட்டப்பட்டது.

❖ 2017இல் சீனாவிற்கும், மாலத்தீவிற்கும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. பாகிஸ்தானிற்கு அடுத்ததாக சீனாவுடன் மாலத்தீவு இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இந்தியாவுடன் இம்மாதிரியான ஒப்பந்தம் கையெழுத்திடப்படவில்லை என்பது உண்மை.

❖ கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த நடிவக்கை 2018இல் மாலத்தீவிற்கும், பாகிஸ்தானிற்கும் இடையே கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்புதல் பாகிஸ்தானின் இராணுவ படை தளபதியின் பயணத்தின்போது மாலத்தீவில் முடிவு செய்யப்பட்டது. வெளிப்படையாகவே இந்தியாவிற்கும் எதிராக நடத்தப்படும் காயாக இந்நடவடிக்கை விளக்குகிறது.

மேற்கூறிய அனைத்து நடவடிக்கைகளும் இந்தியாவிற்கு எதிராக இருப்பினும், இந்தியா தமது பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் இழக்காமல் மாலத்தீவுடனான உறவுகளை புதுப்பிக்கும் முயற்சி செய்து வருகிறது. ஆனால் 2018 தேர்தல் வெற்றி பெற்ற சோலி குடியரசுத்தலைவராக பதவியேற்கும் நிலையில் பல்வேறு பிரச்சினைகளை சிந்திக்க வேண்டியிருக்கிறது.

❖ இந்திய பெருங்கடல் நாடுகள் அமைப்பிலிருந்து எதிர்ப்பு கிளம்பியபோது இந்தியா மாலத்தீவை இவ்வமைப்பில் மாலத்தீவை இவ்வமைப்பில் இணைப்பதற்கு மூத்த உயரதிகாரிகளை சமாதானப்படுத்தியது. இதன்மூலம், மாலத்தீவு புதிய உறுப்பினராக இந்திய பெருங்கடல் நாடுகள் அமைப்பிலிருந்து எதிர்ப்பு கிளம்பிய போது இந்தியா மாலத்தீவை இவ்வமைப்பில் இணைப்பதற்கு மூத்த உயரதிகாரிகளை சமாதானப்படுத்தியது. இதன்மூலம், மாலத்தீவு புதிய உறுப்பினராக இந்திய பெருங்கடல் நாடுகள் அமைப்பில் சேர்க்கப்பட்டது.

❖ மாலத்தீவுகள் வேணடுதலுக்கு இணங்க டோர்னியர் போர்விமானத்தை உடனடியாக வெளியுறவுத்துறை அமைச்சகம் உறுதி செய்தது.

❖ மாலத்தீவின் புதிய அரசாங்கம், சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதற்கு முடிவு செய்துள்ளது. சீனாவின் ஒரு தலைபட்சமான ஒப்பந்தமாக இருப்பதால் மாலத்தீவு வெளியேற முடிவு செய்தது.

**இந்திய – மாலத்தீவு தொடர்பான இடைவெளிகள்**

**சீனாவின் இருப்பு**

மாலத்தீவுகளில் சீனாவின் உள்கட்டுமான திட்டங்கள் இந்திய நிறுவனங்களுக்கு மாபெரும் போட்டியாக உள்ளது.

**சீனா– மாலத்தீவு சுதந்திர வாணிப ஒப்பந்தம்**

சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான சரியான தீர்வை இன்றளவில் மாலத்தீவு மூலம் வெளியிட தயாராகிறது. மேலும் எதிர்கால முதலீடு தொடர்பாகவும் சரியான நிலைமை மாலத்தீவு தெரிவிக்க மறுக்கிறது.

**இந்திய-மாலத்தீவு வர்த்தகம் குறைப்பு**

இந்தியாவிற்கும் மாலத்தீவிற்கும் இடையே வர்த்தகம் இன்றளவில் 200 அமெரிக்கா டாலர் வரை, குறைவாகவே காணப்படுகிறது.

2018இல் இப்ராஹிம் சோலி மாலத்தீவின் குடியரசுத் தலைவராக பதவியேற்ற பிறகு மாற்றங்களை எதிர்நோக்கி காத்திருக்கிறது. சோலியின் பதவியேற்பு பங்கேற்று அமைதியையும், நட்புறவையும் தெரிவித்தார். இப்ராஹிம் முகமது சோலியினந் இந்தியப் பயணம் 2018, டிசம்பர் 16-18'' அன்று நடந்தது அப்பயணத்தில் "இந்தியாவே முதன்மைத்தும் என்ற கொள்கையை வலியுறுத்தினார்.'' மேலும் இந்தியா மாலத்தீவின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காக 1.4 மில்லியன் டாலர்கள் அளிப்பதாக உறுதி செய்தது.

**எதிர்கால ஒத்துழைப்பு**

சமீபத்திய அரசியல் மாற்றங்கள், இந்தியா மற்றும் மாலத்தீவு நாடுகளுக்கிடையேயான உறவுகளை புதுப்பிக்க, ஒரு சிறந்த வாய்ப்பாக கருதப்படுகிறது. நம்பிக்கை கட்டுமானத்தின் பின்வருவன கவனத்திற்கு உட்பட்டது.

- மாலத்தீவுடனான முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்த ஆலோசனை குழு ஒன்றமைத்து பிரச்சனைக்குரிய பகுதிகளை ஆய்வு செய்வதற்கு முனைய வேண்டும்.மேலும் இக்குழுவானது முதலீட்டில் குறைபாடுகள் உள்ள பகுதிகளை கண்டறியலாம்.

- இலவச (அ) அன்பளிப்பு கொள்கை மாலத்தீவிற்கு அவசியமாக உள்ளது. சீனாவின் பெயரளவிலான முதலீடுகள் தடுப்பதற்கு இந்தியா மேற்கூறிய வழியை பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது.

- இந்தியா தீவிரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை மாலத்தீவுடன் சேர்ந்து உருவாக்குதல் வேண்டும். மாலத்தீவில் காவல்துறை மற்றும் தேசிய பாதுகாப்பு படையுடன் சேர்ந்து பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்துதல் போன்ற வழிகளை பின்பற்ற தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு முயற்சிக்கவும் வேண்டும்.

- நிரந்தரமான அடிக்கடி நிகழக்கூடிய பாதுகாப்பு தொடர்பான பேச்சுவார்த்தையில் இரு நாடுகளுக்கிடையேயான பாதுகாப்பையும், நட்புறவையும் வளர்க்கும் சிறிய நாடுகளான மாலத்தீவை போல உள்ள மற்ற நாடுகளையும் இந்தியா தன் பெருந்தன்மையான அணுகுமுறையின் மூலம் உறவை வளர்க்க வேண்டும். இதற்கு குஜ்ரல் கொள்கை போன்றவைகளை பயன்படுத்தி உண்மையையும் நம்பிக்கையையும் மேம்படுத்தலாம்.

- சார்க் மற்றும் இந்திய பெருங்கடல் நாடுகள் அமைப்பு போன்ற அமைப்புகள் நல்லுறவு நாடுகளாக பயன்படுத்தி பல்வேறு பிரச்சினைகளுக்கு முடிவு காணலாம்.

- மேலும் பல்வேறு உறவுமுறை தொடர்பான பிரச்சினைகளுக்கு இந்தியா இலங்கை மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து முத்தரப்பு செயல் வழிமுறையை உருவாக்கி தீர்வு காணலாம்.

**குஜ்ரல் கொள்கை**

குஜ்ரால் கொள்கை என்பது, இந்தியாவின் அண்டை நாடுகளுடன் நட்பு பாராட்டுவதற்கு உண்டான ஐந்து அம்சங்களை உள்ளடக்கியது ஆகும். இக்கொள்கை முன்னால் வெளியுறவு துறை அமைச்சராகவும், பிரதமராகவும் பதவி வகித்த I.K.குஜ்ரால் அவர்களால் உருவாக்கப்பட்டது. இக்கொள்கையின்படி, இந்தியாவின் நிலையும், வலிமையும் ஏனைய நாடுகளுடன் உள்ள உறவுகளை நிர்ணயிக்கிறது. அண்டை நாடுகளுடன் நட்பு பாராட்டுவது மிகவும் அவசியமாக கருதப்படுகிறது. இக்கொள்கைகள் பின்வருவன:

- முதலாவதாக, அண்டை நாடுகளான பங்களாதேஷ், பூடான், மாலத்தீவு, நேபாளம், இலங்கை போன்ற நாடுகள் இந்தியாவின்மீது வைத்துள்ள நம்பிக்கை, உண்மையின் அடிப்படையில் தன்னாலான அதிகமான உதவிகளையும் எதிர்ப்பார்ப்பில்லாமல் செய்கிறது.

- இரண்டாவதாக, எந்த ஒரு தென்கிழக்கு ஆசிய நாட்டிற்கும், தன் அண்டை நாடுகளுக்கு எதிரான காரியங்களை நிகழ்த்துவதற்கு தன் நாட்டில் இடமளிக்கக்கூடாது.

- மூன்றாவதாக, எந்த ஒரு நாடும், தென்கிழக்கு ஆசியாவின் மற்ற நாடுகளின் உள்ள பிரச்சினைகளில் தலையிடக்கூடாது.

- நான்காவதாக, அனைத்து தென்கிழக்கு ஆசிய நாடுகளும் ஏனைய நாடுகளின்

நிலப்பரப்பையும், இறையான்மையையும் மதித்தல் வேண்டும்.

❖ ஐந்தாவதாக, அவர்கள் தங்கள் மோதல்களை அமைதியான இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

மேற்கூறிய கொள்கையை, அனைத்து நாடுகளும், பின்பற்றுகின்ற பட்சத்தில் நட்புறவும், நம்பிக்கையும் நீடிக்கும். தென் கிழக்கு ஆசிய நாடுகளின் ஒற்றுமையை மேம்படுத்தலாம். இந்திய-பாகிஸ்தானின் மோசமடைந்த உறவுகளையும் சீர்படுத்தலாம் என்பது குஜ்ராலின் நேர்மறை கொள்கை அம்சமாகும்.

**“கிழக்கு நோக்கி கொள்கை” மற்றும் “கிழக்கு நோக்கி செயல்பாடு” இடையேயான வேறுபாடுகள்**

“கிழக்கு நோக்கி கொள்கை” மற்றும் “கிழக்கு நோக்கி செயல்பாடு” இடையேயான வேறுபாடுகள் இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பை உண்டாக்குவதற்காகவே “கிழக்கு நோக்கி கொள்கை” உண்டாக்கப்பட்டது. அதேசமயம் “கிழக்கு நோக்கி செயல்பாடு” என்பது பொருளாதார மற்றும் பாதுகாப்பு கிழக்கு ஆசியாவையும் உள்ளடக்கியது ஆகும்.

**“கிழக்கு நோக்கி கொள்கை”யின் இலக்குகள்**

1. ஆசிய-பசிபிக் மண்டலத்தில் உள்ள நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பு, கலாச்சார, மரபு மற்றும் ராணுவம் சார்ந்த உறவுகளை இரட்டிப்பு மற்றும் பல தரப்பு கட்டங்களில் மேம்படுத்துதல்.

2. வடகிழக்கு மாநிலங்களுடன் அண்டை நாடுகளை இணைக்கும் பரஸ்பர நடவடிக்கைகள் செயல்முறைப்படுத்துதல்.

3. பாரம்பரிய நட்பு நாடுகள் மட்டுமல்லாது, மற்ற நாடுகளை இணைக்கும் பரஸ்பர நடவடிக்கைகள் செயல்முறைப்படுத்துதல்.

**இந்தியாவின் “கிழக்கு நொக்கி கொள்கை”**

இக்கொள்கை திட்டம் 1991இல் பிரதமர் நரசிம்மராவ் அவர்களால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலமே இந்தியாவின் இலக்கு மேற்கிலிருந்து தென்கிழக்கு ஆசியா நாடுகளுடனான பொருளாதார ஒருங்கிணைப்பு தொடர்பான நடவடிக்கைகள் எடுப்பதற்கு திட்டமிடப்பட்டது. 2014 நவம்பர் மாதம் நடைபெற்ற கிழக்கு ஆசியா கூட்டத்தில் ஜனதா ஆட்சியானது, இத்திட்டத்தை “கிழக்கு நோக்கி செயல்பாடு” ஆக மாற்றியது.

**அண்டை நாடுகளே முதன்மை முக்கியத்துவம் பெறுபவை என்றால் என்ன?**

❖ இந்தியாவின் வெளிநாட்டு கொள்கையானது நட்புறவில் அண்டை நாடுகளுக்கு முக்கியத்துவம் அமைந்து நட்புறவை வளர்க்கும் விதமாக வடிவமைக்கப்படல்.

❖ பிரதமர் நரேந்திர மோடி முதன் முறையாக பிரதமர் பதவி ஏற்றபோது, அப்பதவி ஏற்பு விழாவிற்கு தெற்காசியாவின் அனைத்து நாடுகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது பனிபு அவர்களுடன் இரு தரப்பு உறவுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இது ஒரு சிறிய சார்க் மாநாடு என்று கூறப்பட்டது.

❖ முதன் முதலில் பதவி ஏற்றபிறகு பிரதமர் பூடானிற்கு பயணம் செய்தார்.

## அலகு– 11 சர்வதேசஅமைப்புகள்

**அறிமுகம்:**

நாம் சர்வதேச அமைப்புகளை பற்றி சிந்திக்கும் போதெல்லாம், அவை இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த வரலாற்று நிகழ்வுகளாகவும். குறிப்பாக சர்வதேச சங்கம் 1919 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பிகுதோன்றியவையாகவும் கருதுகிறோம். உண்மையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே குறிப்பிட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கான அமைப்பாக உலக நாடுகளால் ஏற்கனவே சர்வதேச அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை 1865 இல் உருவாக்கப்பட்ட சர்வதேச தந்தி கழகம் அழைக்கப்படும் சர்வதேச தொலைதொடர்பு கழகம் (ITU) மற்றும் 1874 இல் தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச அஞ்சல் கழகம் போன்றவையாகும். இவை இரண்டும் தற்பொழுது ஐ.நா-வின் அங்கங்களாக உள்ளன. 1899 இல் தி ஹேக் நகரில் நடைபெற்ற சர்வதேச அமைதிக்கான மாநாடானது அமைதியான வழியில் போரினை தடுப்பதற்கான முறைகளையும் மற்றும் போர் குறித்த சட்டங்களையும் வரையறை செய்தன. சர்வதேசப் பிரச்சனைகளை அமைதியான வழியில் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றிய இம்மாநாடு நாடுகளுக்கிடையேயான பிரச்சனைகளில் சமரசம் செய்வதற்கு ஒரு நிரந்திர தீர்ப்பாயத்தையும் 1902 ஆம் ஆண்டு ஏற்படுத்தியது. இந்த அமைப்பே பின்னாளில் சர்வதேச நீதிமன்றம் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது. ஆனால், 1914ஆம் ஆண்டு தொடங்கி முதல் உலகபோரும், அதனால் ஏற்பட்ட அழிவுகளும் இந்த அமைப்புகளின் குறைவான அதிகார வரம்பை வெளிச்சமிட்டு காட்டின. மேலும், இத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு என்ற சர்வதேச அமைப்பும் முடிவுக்கு வந்தது. நெப்போலியனின் படையெப்புகளுக்கு பின்பு பெரிய அளவில் எந்த போர்களும் நடைபெறாமல் காத்து வந்ததே இந்த அமைப்பின் சாதனையாகும். முதல் உலகப்போர் நடைபெற்ற 1914 ஆம் ஆண்டு முதல் 1919 ஆம் ஆண்டு வரை உலகம் மாபெரும் மனித பேரழிவை கண்டது. இரண்டு கோடிக்கும் அதிகமான மக்கள் மாண்டனர். பேரரசுகளின் வீழ்ச்சி (ஓட்டாமன், ஆஸ்டிரோ - ஹங்கேரியன், தற்காலிமாக ரஷ்ய பேரரசு) மற்றும் புதிய தேசங்களான செக்கோஸ்லாவியா, எஸ்தோனியா மற்றும் பின்லாந்தின் தோற்றம், முற்போக்கு புரட்சியாளர்கள் ரஷ்யாவை வெற்றி கொண்டது மற்றும் ஜெர்மனியின் வீழ்ச்சி என ஒரு புதிய உலக ஒழுங்கமைவு தோன்றியது.

**சர்வதேச சங்கம்**

**உட்ரோவில்சனின் பதினான்கு கருத்துகள் (1919)**

1. வெளிப்படையான தூதாண்மை
2. கடல்கள் மீதான சுதந்திரம்
3. பொருளாதாரத் தடைகளை நீக்குதல்
4. ஆயுதமயமாதலை குறைத்தல்
5. காலனிய உரிமைகள் மீதான நெகிழ்வு
6. ரஷ்ய கட்டுப்பாடு பகுதிகளை விடுவிப்பது
7. பெல்ஜிய இணையாண்மையை பாதுகாப்பது
8. பிரெஞ்சு பிரதேசங்களை விடுவிப்பது
9. இத்தாலியின் எல்லைகளை மறுசீரமைதல்
10. ஆஸ்திரியா - ஹங்கேரியினை பிரிப்பது
11. பால்கன் எல்லைகளை மறுசீரமைத்தல்
12. துருக்கியின் அதிகாரத்தை குறைப்பது
13. போலந்தை சுதந்திர நாடக்குவது
14. நாடுகளின் கூட்டமைப்பான சர்வதேச சங்கத்தை ஏற்படுத்துதல்
15. சர்வதேச சங்கத்தை ஏற்படுத்துதல்.

முதல் உலகப்போரின் இறுதியில் அமெரிக்க அதிபர் உட்ரோவில்சன் 1918 ஆம் ஆண்டு ஜனவரியில் சர்வதேச சங்கத்திற்கான தனது கருத்தினை வெளிப்படுத்தினார். இதற்கு பெரும் அளவிலான ஆதரவு கிடைத்தது. மேலும், முதல் உலகப்போர் ஏற்படுத்திய பெரும் அழிவு இக்கருத்துக்கு வலுசேர்த்தது. இராணுவ மோதல்கள் நடைபெறுவதற்கு முன்பாகவே பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சர்வதேச அமைப்புகள் தேவையென முடிவுக்கு வந்தனர். இருந்தபோதும், அமெரிக்காவானது சர்வதேச

அமைப்பில் இணையவில்லை, ஆன போதும் குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சன் வெர்செல்ஸ் அமைதி மாநாட்டிற்கு தலைமை நடத்தி சர்வதேச அமைப்பு உருவாகச் செய்தார். வில்சன் அமெரிக்க காங்கிரசின் இரு அவையும் இணைந்த கூட்டத்தில் கீழ்கண்டவாறு அறிவித்தார்.

"இது அமைதிக்கான நிச்சயமான ஓர் உத்திரவாதமாகும். ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான வார்த்தைகளை கொண்டது. நாகரீக உலகை கிட்டதட்ட அழிவின் விளிம்பிற்கே கொண்டு சென்ற ஒன்றுக்கு எதிரானது இது. இதன் நோக்கங்கள் அனைவருக்கும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் குற்றம் காணமுடியாத அதிகாரத்தை கொண்டது. இந்த சங்கமானது எந்த ஒரு சர்வதேச பிரச்சனைக்கும் தீர்வு தர வல்லது".

சங்கமானது தற்காலிகமாக லண்டனில் இருந்து செயல்பட்டது. பின்பு 1920 முதல் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரத்தில் இருந்து இயங்கி வந்தது. ஆரம்பத்தில் சில பிரச்சனைகளை தீர்வு காண்பதில் வெற்றி பெற்றது குறிப்பாக பின்லாந்து மற்றும் சுவீடன் இடையலான ஆலன்ட் தீவு பிரச்சனை, ஜெர்மனி மற்றும் போலந்து இடையிலான மேல் சைலேசியா மற்றும் ஈராக் மற்றும் துருக்கி இடையிலான மொசூல் நகரம் மீதான பிரச்சனைகள் ஆகும். மேலும் சில வெற்றிகளை, குறிப்பாக ரஷ்யாவின் அகதிகள் பிரச்சனையை தீர்ப்பதிலும் மற்றும் சர்வதேச அபினி வர்த்தகத்தை ஒழிப்பதிலும் வெற்றிகண்டது. சர்வதேச சங்கத்தின் தலைமையின் கீழ் சர்வதேச அமைப்புகளான தொழிலாளர்களுக்கான சர்வதேச கழகம் மற்றும் சர்வதேச நீதிக்கான நிரந்த நீதிமன்றம் போன்றவை செயல்பட்டன. பிற்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கான சிறந்த முன் உதாரணமாக சர்வதேச சங்கம் அமைந்து இருந்தது.

சர்வதேச சங்கமானது முதல் உலக போரில் வெற்றி பெற்ற நாடுகளின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்தது. இதில் குறிப்பாக பிரான்சு, இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் இத்தாலி நாடுகளின் மேலாதிக்கத்தில் சங்கம் இருந்தது. துவக்கத்தில் இருபத்திஎட்டு உறுப்பினர்களை பிரதிநிதியாக கொண்ட பொதுச்சபையானது பெரும்பாலும் ஐரோப்பிய மற்றும் லத்தின் அமெரிக்க நாடுகளைக் கொண்டவையாகக் காணப்பட்டன. இதன் காரணமாக சர்வதேச சங்கமானது ஐரோப்பிய நாடுகளை மையப்படுத்தியே செயல்பட்டது. அப்போது ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தும் ஐரோப்பிய ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. இப்பகுதிகளில் தங்களுக்கான சுயாட்சி அரசுகளை ஏற்படுத்திகொள்ளவும் மற்றும் விடுதலையையும் பெறுவதற்கான வழிமுறைகளை சங்கம் ஏற்படுத்தி இருந்தது. இந்நிலையில் எந்தக் காரணங்களால் சர்வதேச சங்கம் தோல்வியை அடைந்தது என தற்பொழுது காணலாம். அமெரிக்காவானது இதில் பங்கேற்காதது சங்கம் வலிமை பெறாமல் போனதற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. மேலும் இதன் முக்கியத்துவத்தை குறைக்கும் வகையில் ஜெர்மனி மற்றும் சோவியத் யூனியன் அமைப்பின் எந்த முக்கிய பொறுப்பையும் ஏற்காமல் வெறுமனே உறுப்பினராக மட்டுமே இருந்தன. 1926 இல் ஜெர்மனியானது சங்கத்தில் இணைந்தது பின்பு நாஜிக்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதை அடுத்து 1933இல் அமைப்பில் இருந்து வெளியேறியது. 1933ஆம் ஆண்டு சோவியத் யூனியனானது சங்கத்தில் இணைந்தது. இருந்தபோதும் 1939இல் பின்லாந்து மீது தாக்குதல் தொடுத்ததை அடுத்து சோவியத் யூனியன் சங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டது. சங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட ஒரே நாடு சோவியத் யூனியன் ஆகும்.

ஜப்பான் 1933இல் மஞ்சூரியாவை ஆக்கிரமித்ததை சங்கம் விமர்சித்ததை அடுத்து ஜப்பானும் அமைப்பில் இருந்து வெளியேறியது. மேலும் இதே காரணத்திற்காக எத்தியோப்பியாவின் மீது தாக்குதல் நடத்தி அதனை ஆக்கிரமித்து கொண்ட இத்தாலியின் உறுப்பினர் ஆவதற்கான விருப்பமானது சங்கத்தால் நிராகரிக்கப்பட்டது. இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை சங்கத்தினால் கட்டுபடுத்த முடியவில்லை. மேலும் 1930 இல் ஏற்பட்ட உலக பொருளாதார மந்தநிலையும் இப்பிரச்சனைகளை மேலும் தீவிரமாக்கியது. குறிப்பாக, பிரான்சு மற்றும் பிரிட்டன் இந்த ஆக்கிரமிப்பு போர்களை கண்டிக்கவில்லை. ஏனெனில் இவை அந்நாடுகளின் தேசிய பாதுகாப்பினை உடனடியாக பாதிக்கவில்லை. மேலும் சங்கம் திருப்திபடுத்தும் கொள்கையை கையிலெடுக்க, அதுவும் தோல்வியை தழுவியது.

1938 இல் நடைபெற்ற மூனிச் மாநாட்டில், ஹிட்லரின் அரசு செக்கோஸ்லாவியாவை ஆக்கிரமித்ததையும், சூடட்டன்லாந்தை தன்னுடன் இணைத்து கொண்டதையும் பிரிட்டனும், பிரான்சும் ஏற்றுக் கொண்டன. இறுதியாக, 1939 இல் சோவியத் யூனியன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு ஜெர்மனி போலந்து மிுத தாக்குதல் நடத்தியது. சர்வதேச சங்கத்திற்கான எல்லா வாய்ப்புகளையும்

தகர்த்தெறிந்தது. சர்வதேச சங்கமானது ஆக்கிரமிப்பு நாடுகளின் மீது தனது வலுவான அதிகாரத்தைச் செலுத்த முடியவில்லை. மேலும் ஆக்கிரமிப்புக்கு எதிராக இராணுவ குறுக்கீடு செய்யாமல் வெறும் பெயரளவிலான பொருளாதார தடையை மட்டுமே அந்நாடுகளின் மீது விதிக்க முடிந்தது.

உறுப்பினரல்லாத மற்ற நாடுகளின் மீது சர்வதேச சங்கத்தால் அதிகாரம் செலுத்தவோ கட்டுப்படுத்தவோ முடியவில்லை. உறுப்பு நாடுகள் உறுப்பினரல்லாத நாடுகளுடன் வர்த்தகம் செய்யவும் இயல்வில்லை. 1930 இல் நிலவிய பொருளாதார மந்த நிலையும் சங்கத்தை சிக்கலில் ஆழ்த்தியது. மேலும் சங்கத்திற்கென்று படைகள் என்று எதுவும் இல்லாததால், ராணுவ நடவடிக்கைகளின் போது, உறுப்பு நாடுகள், குறிப்பாக பிரான்சு மற்றும் பிரிட்டன், தங்களது படைகளை அனுப்ப வேண்டியிருந்தது.

**தலைப்பு – சர்வதேச சங்கம் ஏன் உலகில் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை?**

**கீழ்க்கண்ட கருத்துகள் அடிப்படையில் விவாதிக்கவும்.**

1. ஐரோப்பியர்களின் ஆதிக்கம்
2. நிற வெறியை எதிர்க்கத் தவறியது
3. சங்கத்தில் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜப்பானின் ஆதிக்கம்

இருந்தபோதும், எந்த நாடும் மிகவும் செலவு பிடிக்கும் ஆப்பிரிக்க மற்றும் ஆசிய பிரச்சனைகளில் தலையிடுவதை விரும்பவில்லை. இந்த நேரத்தில் சர்வதேச சங்கத்திலிருந்து 1939 இல் சோவியத் யூனியன் வெளியேற்றப்பட்டது. இதுவே சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான முக்கிய காரணமாக கருதப்படுகிறது. மேலும் பின்நாட்களில் அமெரிக்க அதிபர் வில்சன் குறிப்பிட்ட "அமைதிக்கான நிரந்த பாதுகாப்பு" என்பதற்கான வாய்ப்பு பொருளற்றதாக ஆகிவிட்டது. இந்நிலையில் மீண்டும் ஓர் உலப்போர் நிகழ்வதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன. அப்படி ஓர் போர் நிகழாவண்ணம் தடுத்து உலகை காக்கும் திறன்படைத்த சர்வதேச அமைப்பு தேவையாக இருந்தது. ஆனால் அதற்கான திறனற்ற அமைப்பாக அந்நிலையில் சங்கம் இருந்தது.

**ஐக்கிய நாடுகள் சபை**

சர்வதேச சங்கமானது தனது நோக்கத்தில் வெற்றி பெறாததை அடுத்து உலக அமைதியை பாதுகாக்கும் சர்வதேச அமைப்பின் பணியானது ஒரு கனமாக நிறைவேறாமலேயே இருந்தது.

இரண்டாம் உலகப்போர் ஏழு கோடி பேருக்கு மேற்பட்டோரை பலி கொண்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையை தோற்றுவிப்பதற்கான கருத்தானது உலக தலைவர்களை ஒருங்கிணைத்து போரை முடிவுக்கு கொண்ட வந்ததுடன் அமைதியை பாதுகாத்து எதிர்காலத்தில் போர் ஏற்படாமல் இருப்பதற்கான வலுவான ஓர் கட்டமைப்பை ஏற்படுத்தவும் செய்தது. மேலும் பிரிந்திருந்த நாடுகளை ஒருங்கிணைத்து ஓர் உலகம் தழுவிய அமைப்பை ஏற்படுத்துவதற்கான பணியினை மேற்கொள்ள செய்தது.

அமெரிக்க குடியரசுத்தலைவர் பிராங்களின் டி ரூஸ்வெல்ட் ஆல் உருவாக்கப்பட்ட "ஐக்கிய நாடுகள் சபை" என்ற பெயரானது முதன் முதலாக 1942 இல் இருபத்தி ஆறு நாடுகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபைக்கான ஒப்பந்தத்தில் பயன்படுத்தப்பட்டது. மேலும், இந்த அணி அச்சு நாடுகளின் அதிகாரத்திற்கு எதிராக அமைதியை நிலைநாட்ட தொடர்ந்து போராடி வந்தது. சர்வதேச சங்கத்தை போல் அல்லாமல் இது அனைத்து நாடுகளின் கூட்டணியுடன் தொடங்கியது. ஜப்பானின் போர்ல் துறைமுகதாக்குதலுக்கு பிறகு போரில் இறங்கிய அமெரிக்கா, முதல் உலகப்போருக்கு பின் மீண்டெழுந்து அமெரிக்காவுடன் போர் பிரகடனம் செய்த ஜெர்மனியும் இணைந்தது. 1944 இல் ஆகஸ்டில் சீனா, சோவியத் யூனியன், இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் டம்பார்டன் ஓக்ஸில் சந்தித்து புதிய சர்வதேச அமைப்பிற்கான அடிப்படை வரைவை உருவாக்கினர். இது அக்டோபர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனமாக மாறியது.

**ஐ.நா-வின் நான்கு முக்கிய நோக்கங்கள்**

1. இராணுவ பாதுகாப்பு
2. பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு
3. மனித உரிமைகளை பாதுகாப்பது
4. சர்வதேச நீதி

**ஐக்கிய நாடுகள் சபைக்கான புதிய திசைவழிகள்**

இது அனைவருக்குமே சோதனையான காலம் உலகெங்கும் உள்ள அனைத்து மக்களும் அதிக பதட்டம் மற்றும் அச்சத்தில் வாழ்கின்றனர். அமைப்புகள் மற்றும் தலைவர்கள் மீது உலக மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர்.

இந்த நிச்சமற்ற சூழ்நிலையில் நம்முடைய எதிர்காலம் ஐ.நா-வை சார்ந்துள்ளது. ஏனெனில் ஐ.நா. சபை மட்டுமே பல்வேறு நாடுகளையும் ஒன்றிணைக்கிறது. அங்கே வெறுமனே உரையாடலும், விவாதிக்கவும் மட்டுமல்லாமல் செயல்படவும் ஏதுவாகிறது. குடிமை சமூகங்களை, வர்த்தகர்களை, கொடையாளர்களை, சாதாரண மக்களை உலக அரசுகளுக்கு உதவுவதற்காகவும், தற்கால பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும் ஒன்று திட்டுகிறது. மேலும், அமைதியை நிலைநாட்டுகிறது. வளர்ச்சி, மனித உரிமைகள் மற்றும் அனைவருக்குமான நன்மை போன்றவற்றில் ஒவ்வொரு நாடும் உலக மக்கள் அனைவருக்கும் ஒரே நம்பிக்கையாக ஐ.நா. திகழ்கிறது.

நன்றி: ஐ.நா-விற்கான புதிய திசைவழிகள் - கட்டுரையை எழுதிய ஐ.நா.-வின் முன்னாள் பொது செயலாளர் அவர்களுக்கு

குழு விவாதத்திற்கான தலைப்பு: ஐக்கிய நாடுகள் சபை எவ்வளவு வெற்றிகரமாக உள்ளது?

இந்த அடிப்படை குழப்பம் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே தொடர்ந்தது. ஒரு நாட்டின் இறையாண்மைக்கும், சர்வதேச கருத்துகளுக்குமிடையே எவ்வாறு சமநிலை காண்பது, நாடுகள் ஒன்றுக்கொன்று சமமில்லாத நிலையில், எவ்வாறு அனைவருக்கும் சமமான, பொருந்துகிற சாசனத்தை வரைவது, ஐ.நா-வின் முடிவுகளில் விருப்பமில்லாதபோது, ஒரு நாடு ஐ.நா. அமைப்பை விட்டு எளிதாக வெளியேறாமல் தடுப்பது (1930-களின் முற்பகுதியில் ஜப்பான் அவ்வாறு செய்தது). இவற்றிக்கெல்லாம் ஒரு தீர்வாக மறுதலிக்கும் அதிகாரத்தை சாசன வரைவாளர்கள் கொண்டு வந்தனர். மறுதலிக்கும் அதிகாரமானது ஐ.நா-வின் ஐந்து ஆரம்பகால உறுப்பினர்களான சீனா, பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் நிரந்தர ஐந்து (P-5) உறுப்பினராக கருதப்படுகின்றனர். அது மட்டுமல்லாமல் ஐ.நா-வை துவக்கியவர்கள் மிகவும் நன்றாக சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை அறிந்து இருந்ததால் அந்த அனுபவங்களை கொண்டு ஐ.நா-விற்கான சாசனத்தின் முக்கிய கூறுகளை வடிவமைத்தனர். முக்கிய எடுத்துக்காட்டாக, ஐ.நா-வின் சாசனமானது சர்வதேச சங்கத்தின் தீர்மானத்தைபோலவே சர்வதேச பாதுகாப்பை மேம்படுத்துவது மற்றும் அமைதியான வழியில் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை முக்கிய நோக்கமாக கொண்டிருக்கிறது. சாசனமானது மேலும் இரண்டு முக்கிய கூறுகளை முதன்மையாக கொண்டிருக்கிறது.

**ஐ.நா-வின் அமைப்பு**

ஏற்கனவே இதனை பிரதிபலிக்கம் வகையில் ஐ.நா. சாசனத்தின் உறுப்பு 23-வது சாவ்தேச சங்கத்தின் தீர்மானத்தை போலவே சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை அடிப்படை நோக்கமாக கொண்டுள்ளது. சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை வெறும் வார்த்தை அளவில் இல்லாமல் போர்களுக்கு இடைப்பட்ட ஆண்டுகளின் அனுபவத்தை வேராக கொண்டிருக்கிறது. பலரும் குறிப்பிடுவதுபோல 1920 மற்றும் 1930-களில் ஏற்பட்ட உலகப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அரசியல் எழுச்சிகள் பெரும் தேசியவாதத்தை ஏற்படுத்தியதும் அவற்றின் விளைவான ஆக்கிரமிப்புகளுமே இரண்டாம் உலகப்போருக்கான காரணமாக அமைந்தன. இதுவே, ஐ.நா-வானது தோற்றுவிக்கப்பட்டு உலக பிரச்சனைகளில் முனைப்புடன் ஈடுபட செய்தது

**ஐ.நா-வின் அமைப்பு**

1945 இல் ஐ.நா. ஆறு முக்கிய அமைப்புகளை கொண்டதாக இருந்தது. அவை:

1. பொதுச்சபை
2. பாதுகாப்பு குழு

3. பொருளாதார மற்றும் சமூக குழு
4. அறங்காவலர் குழு
5. சர்வதேச நீதிமன்றம் மற்றும்
6. செயலகம் ஆகும்.

இதில் அறங்காவலர் குழுவானது காலனிய ஒழிப்பிற்கான நடைமுறை தேவைகளை கொண்டிருந்தது. காலனிய ஒழிப்பிற்கு பிறகு இதன் பணி தேவையற்றதாக ஆகிவிட்டது. இருந்தபோதும் இது ஐ.நா-வின் முக்கிய அடிப்படை அமைப்புகளில் ஒன்றாக திகழ்கிறது. ஐ.நா-வின் அனைத்து அமைப்புகளும் முறையே கூடி முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாதிக்கின்றனர். உறுப்பினர்களின் ஓட்டெடுப்பின் மூலமே முடிவுகளும், அறிக்கைகளும் வெளியிடப்படுகின்றன. இருந்தபோதும் இதன் ஒவ்வொரு அமைப்பின் நடைமுறைகளும் ஒன்றுக்கு ஒன்று வேறுபடுகின்றன. குறிப்பாக பொதுச் சபையானது ஐ.நா-விற்கான நாடாளுமன்றமாகவும். பாதுகாப்புக் குழு நிர்வாக குழுவாகவும். செயலகம் நடைமுறைபடுத்துவதற்கான அமைப்பாக (அல்லது) ஐ.நா-வின் நிர்வாக பிரிவாக செயல்படுகின்றது.

**பொதுச்சபை:**

ஐ.நா-வின் பொதுச்சபையானது கூடி விவாதிக்ககூடிய ஓர் முக்கிய அமைப்பாக உள்ளது. உறுப்பு நாடுகள் பரப்பளவில் எவ்வளவு பெரியதாக இருந்தாலும். செல்வாக்கு மிக்கதாக இருந்தாலும் அவை அனைத்திற்கும் சமமாக ஒரு ஓட்டு மட்டுமே வழுங்கப்பட்டுள்ளது. இங்கு ஐ.நா-வின் சாசனத்தின் கீழ் ஏழும் பிரச்சனைகள் குறித்த விவாதமானது நடைபெறுகிறது. குறிப்பாக சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு, புதிய உறுப்பினர்களை இணைத்து கொள்வது, ஐநா-விற்கான நிதிநிலை அறிக்கை போன்றவை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒரு நாட்டிற்கு ஒரு ஓட்டு என்ற விதியின் அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன. உறுப்பு நாடுகளால் முன்மொழியப்படும் பிரச்சனைகள் மீது பொதுச்சபையில் தீர்மானங்கள் கொண்டுவரப்படுகின்றன. பொதுச்சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் அடிப்படையில் பரிந்துரைகளே, ஆனால் அவை உலக மக்களில் பெரும்பான்மையோரின் கருத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் இருப்பதால், அந்த பரிந்துரைகள், மதிப்பு மிகுந்ததாக உள்ளது. இதன் அடிப்படையில் சர்வதேச உடன்படிக்கைகளில், ஒப்பந்தங்களில் மற்றும் சாசனங்களில் பல்வேறு நாடுகள் இணைந்து அவற்றின் அம்சங்களை நடைமுறைப்படுத்துகின்றன. பொதுச்சபையின் கூட்டமானது ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் நடைபெறுகிறது. பெரும்பான்மையான தீர்மானங்கள் செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிடையே நிறைவேற்றப்படுகின்றன. சிறப்பு கூட்டத்திற்கான கோரிக்கையானது பாதுகாப்புக் குழுவினாலோ அல்லது பொரும்பான்மை உறுப்பினர்களாலோ முன்மொழியப்பட வேண்டும். பொதுச்சபையின் வழக்கமான கூட்டத்தொடரின் முதல் இரண்டு வாரங்கள் உறுப்பு நாடுகளின் கருத்தை அறியும் வண்ணம் பொது விவாதமாக நடத்தப்படுகிறது. இது மிகவும் பரந்த அளவிலான பிரச்சனைகளை தீவிரவாதம், போர், வறுமை, பசி மற்றும் நோய்கள் குறித்ததாக அமைகிறது. பொதுச்சபையின் பணிகள் ஆறு குழுக்களின் வழியே மேற்கொள்ளப்படுகிறது.

**பொதுச்சபையின் ஆறு முக்கிய குழுக்கள்**

- முதல் குழு (ஆயத குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு)
- சர்வதேச பாதுகாப்பு) இரண்டாவது குழு (பொருளாதாரம் மற்றும் நிதி)
- மூன்றாவது குழு (சமூகம், மனிதநேயம்)
- நான்காவது குழு (சிறப்பு அரசியல் மற்றும் காலனிய ஒழிப்பு)
- ஐந்தாவது குழு (நிர்வாகம் மற்றும் நிதிநிலை அறிக்கை)
- ஆறாவது குழு (சட்டம்)

**ஐக்கியநாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கையின் பட்டியல்**

| வ.எண் | கண்டங்கள் | பணியின் பெயர் | இடம் | பிரச்சனை | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1. | ஆப்பிரிக்கா | காங்கோவில் ஐக்கிய நாடுகளின் செயல்பாடு (ONUC) | காங்கோ ஜனநாயக குடியரசு | காங்கோ நெருக்கடி | 1960 - 1964 |
| 2. | ஆசியா | ஐக்கிய நாடுகள் சபை இந்தியா – பாகிஸ்தான் கண் காணிப்பு பணி (UNIPOM) | இந்தியா, பாகிஸ்தான் | 1965 இந்தியா – பாகிஸ்தான் போர் | 1965 - 1966 |
| 3. | ஆசியா | ஐ.நா-வின் திரும்ப பெறுவதற்கான கண்காணிப்பு படை (UNDOF) | இஸ்ரேல், சிரியா, லெபனான் | யோம் கீப்பூர் போரில் இருந்து இஸ்ரேல் மற்றும் சிரியா படைகளை திரும்ப பெறுவது | 1974 |
| 4. | ஆப்பிரிக்கா | சோமாலியாவில் ஐக்கிய நாடுகளின் செயல்பாடு – ஒன்று UNOSOM – 1) | சோமாலியா | சோமாலியா உள்நாட்டு போர் | 1992- 1993 |
| 5. | ஆப்பிரிக்கா | ருவாண்டாவிற்கான ஐ.நா-வின் உதவித் திட்டம் (UNAMIR) | ருவாண்டா | ருவாண்டா உள்நாட்டு போர் | 1993 – 1996 |
| 6. | வட ஆப்பிரிக்கா | ஐ.நா-வின் தூதுக்குழு ஹைட்டி (UNMIH) | ஹைட்டி | 1991 இல் ஹைட்டியில் ஆட்சி கவிழ்ப்பு மற்றும் இராணுவ ஆட்சி | 1993 – 1996 |
| 7. | ஐரோப்பா | ஐ.நா-வின் தூதுக்குழு போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா (UNMIBH) | போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா | போஸ்னியா போர் | 1995 – 2002 |
| 8. | ஐரோப்பா | ஐ.நா-வின் இடைகால நிர்வாக தூதுக்குழு கோசாவா (UNMIK) | கோசாவா | கோசாவா போர் | 1999 |
| 9. | ஆப்பிரிக்கா | ஐ.நா-வின் தூதுக்குழு சீயரா லியோன் (UUNAMSIL) | சியரா லியோன் | சியரா லியோன் உள்நாட்டு போர் | 1999 – 2006 |
| 10. | ஆப்பிரிக்கா | ஐ.நாவின் தூதுக்குழு எரித்திரியா மற்றும் எத்தியோப்பியா (UNMEF) | எரித்திரீயா | எரித்திரீயா – எத்தியோப்பியா போர் | 2000 – 2008 |
| 11. | ஆப்பிரிக்கா | ஐ.நா-வின் தூதுக்குழு சூடான் (UNMIS) | எத்தியோப்பியா | இரண்டாவது சூடான் | 2005 – 2011 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்நாட்டு போர் | |
| 12. | ஆசியா | ஐ.நா-வின் ஒருங்கிணைந்த தூதுக்குழு தைமூர் - லிஸ்டி (UNMIT) | சூடான் | 2006 கிழக்கு தைமூர் நெருக்கடி | 2006 – 2012 |
| 13. | ஆசியா | ஐ.நா-வின் கண்காணிப்பு தூதுக்குழு சிரியா (UNSMIS) | கிழக்கு தைமூர் | சிரியா உள்நாட்டு போர் | 2012 |
| 14. | வட அமெரிக்கா | ஐ.நா-வின் நீதிக்கு ஆதரவான தூதுக்குழு ஹைட்டி (MINU JUSTH) | சிரியா | 2004 ஹைட்டி கிளர்ச்சி | 2017 |

**ஐ.நா-வின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராகும் இந்தியாவின் விருப்பம்**

பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராக இடம் பெறும் இந்தியாவின் விருப்பமானது அது பாதுகாப்புச் சபையுடன் வரலாற்று பூர்வமாக கொண்டிருக்கும் உறவை வெளிப்படுத்துவதாக உள்ளது. விடுதலை அடைந்த ஆரம்ப ஆண்டுகளில் காஷ்மீர் தொடர்பான பாகிஸ்தானின் ஆயுத மோதல்களை இந்தியா தனது கருத்தியல் கொள்கையின் அடிப்படையில், ஐ.நா-வின் பார்வைக்கு எடுத்துச்சென்றது. பனிப்போர் உச்சத்தில் இருந்த அதிகார சமநிலையில்லாத அந்த காலகட்டத்தில் இந்தியா தனது கருத்தியல் கொள்கையின் அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கு பெரும் விலை கொடுக்க வேண்டியிருந்தது. காஷ்மிர் விவகாரத்தில் ஐ.நா. தலையிட அதுவே வழி வகுத்தது. இது மீண்டும் வெளிவர முடியாத எதிர் விளைவையே ஏற்படுத்தியது. இந்தியா பாதுகாப்புச் சபையில் கலந்து கொண்டு தனது விருப்பத்தை நிறைவேற்ற விடாமல் பெரும் அதிகார அரசியலாக மாற்றியது. மிகவும் குறிப்பாக நிரந்தர உறுப்பினரான சீனா, பாகிஸ்தான் பக்கம் நின்று கொண்டு எந்தவித சாத்தியமான விளைவுகளும் இந்தியாவிற்கு ஏற்படாத வண்ணம் குறுக்கீடு செய்தது.

இந்தியாவின் விருப்பமானது பாதுகாப்புச் சபையில் நீண்ட பல இந்திய வெளியுறவுக் கொள்கை குறித்த விவாதங்களை ஏற்படுத்தியது. தாராளவாத தன்மையுடன் சர்வதேச அமைப்பிற்கான பொறுப்புமிக்க ஒரு நாடாக இருக்குமா அல்லது சர்வதேச நிகழ்வுகளின் மரபுகளை மாற்றியமைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் அரசாக இருக்குமா என்ற விவாதங்கள் நடைபெற்றன. தற்பொழுது நடைமுறையில் இருக்கும் சர்வதேச முறையினை தூக்கி எறியாமல் இந்தியா ஒரு மிதமான சீர்திருத்தவாதியாக உலகளாவிய பார்வையுடன் சர்வதேச மரபுகளில் நெகிழ்வையும் மற்றும் வடிவமைப்பையும் ஏற்படுத்துவதாக பல அரசியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இந்தியா எப்போதுமே மூன்றாம் உலக நாடுகளை வழிநடத்தும் ஒரு அரசாக இருந்து வருகிறது. ஐ.நா-வின் பொதுச்செயலராக இருந்த கோபி அன்னான் புதுதில்லியில் ஒரு கூட்டத்தில் உரையாற்றும்போது மற்ற எந்தநாட்டினரைக் காட்டிலும் இந்தியர்களின் சுதந்திரம் பற்றிய புரிதல் அதிகம் எனவும், வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் யாவும் சுதந்திரத்தினால் விளைந்தவை எனவும் அவை ஒன்றுக்கொன்று மாற்று அல்ல என்பதையும் இந்தியர்கள் அறிந்துள்ளனர் என்று குறிப்பிடுகிறார். இந்தியர்கள் தங்களது பன்மைத்துவ மக்களாட்சி மூலம் பரந்த சுதந்திரம் நோக்கி செல்வதாக மேலும் குறிப்பிடுகிறார்.

**பாதுகாப்புச் சபையில் மறுதலிக்கும் அதிகாரம் குறித்த விமர்சனங்கள்**

மறுதலிக்கும் அதிகாரமானது அதன் மக்களாட்சி பண்புகளற்ற தன்மைக்காக விமர்சிக்கப்படுகிறது. இது பாதுகாப்புச் சபையின் பெரும்பான்மையினரின் முடிவை ஒரு தனிப்பட்ட நாடு தடுப்பதாகும். உதாரணமாக அமெரிக்காவானது தொடர்ச்சியாக இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானங்கள் மீது தனது மறுதலிக்கும் அதிகாரத்தை பயன்படுத்தி வருகிறது. மேலும் நிரந்தர உறுப்பினர்கள் தங்களுக்கு எதிரான விமர்சன தீர்மானங்களின் மீது மறுதலிக்கும் அதிகாரத்தை பயன்படுத்துவதும் வழக்கமானது

ஆகும். 2014 ஆம் ஆண்டு ரஷ்யாவானது, கிரிமியாவை இணைத்துக் கொண்டதற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தனது மறுதலிக்கும் அதிகாரத்தை பயன்படுத்தியது. சர்வதேச பொது மன்னிப்புச் சபை ஐந்து நிரந்தர உறுப்பினர்களும் தங்கள் மறுதலிக்கும் அதிகாரத்தை மக்களின் விருப்பங்களை பாதுகாப்பதற்கு மாறாக தங்களின் சுய அரசியல் விருப்பங்களுக்கும் அல்லது புவிசார் அரசியல் விருப்பங்களுக்கும் பயன்படுத்துவதாக சர்வதேச பொது மன்னிப்புச் சபை குற்றம் சாட்டுகிறது.

சில விமர்சகர்கள் பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களுகே உரித்தான மறுத்தலிக்கும் அதிகாரமானது நியாயமற்றது மற்றும் எதிர்வினைவுகளை ஏற்படுத்துக் கூடியது என்று விமர்ச்சிக்கின்றனர். இந்த 21ஆம் நூற்றாண்டில் மறுதலிக்கும் அதிகாரமானது சர்வதேச அளவில் பார்க்கப்படும் பொழுது சமச்சீரற்ற அதிகாரமாக மேலும் சர்வதேச பிரச்சினைகள் மீதான நடவடிக்கைகளுக்கு தடையாக அமைந்துள்ளது. மறுதலிக்கும் அதிகாரத்தின் அளவற்ற ஆற்றலானது ஐ.நா-வை இன அழிப்பு, கலவரங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களின் போது அதைத் தடுப்பது மற்றும் பொறுப்பேற்பதில் ஆற்றலற்றதாக ஆக்குகிறது. இந்த ஐந்து நிரந்தர உறுப்பினர் தவிர மற்ற பல நாடுகள் குறிப்பாக அணிசேரா இயக்கத்தினர் மற்றும் ஆப்பிரிக்க ஒன்றியம் மறுதலிக்கும் அதிகாரத்தை குறைக்க கோருகின்றன.

“அமைதிக்கான ஒற்றுமை” என்ற தீர்மானத்தை நிறைவேற்றும்போதும் நடைபெற்ற விவாதத்தில் வழக்கமான ஐ.நா. சட்டங்களின் படி பொதுச் சபையின் அதிகாரமானது பாதுகாப்புச் சபையின் ‘மறுதலிக்கும் அதிகார” பிரச்சனையுடன் தொடர்புடையதாகும். 1950 ஆம் ஆண்டு நவம்பர் 3 ஆம் தேதி ஐ.நா-வின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட A/RES/377 தீர்மானமானது குறிப்பிடுவது யாதெனில் ஐ.நா-வின் சாசனப்படி ஒருவேளை பாதுகாப்புச் சபையானது தனது முதன்மை நோக்கமான அமைதியை பாதுகாப்பதில் இருந்து தவறினால் அப்போது சர்வதேச அமைதிக்காக பொதுச்சபை எடுக்கும் மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்தும் நடவடிக்கைகளை பாதுகாப்புச் சபை தடுக்கமுடியாது தடுக்கக் கூடாது. இந்த விளக்கமானது சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு பிரச்சனைகளில் பொதுச்சபையானது இரண்டாவதாக பொறுப்புடையது என்பதை விட இறுதி பொறுப்புடையதாக அங்கீகரிக்கப்படுகிறது. ஐ.நா-வின் பல்வேறு அதிகாரப்பூர்வ மற்றும் அதிகாரப்பூர்வமற்ற அறிக்கைகளில் குறிப்பிடுவது “அமைதிக்கான ஒற்றுமை” தீர்மானமானது ஐ.நா-வின் பொதுச்சபையின் நடவடிக்கைகளை மீறி பாதுகாப்புச் சபையின் மறுதலிக்கும் அதிகாரமானது செயல்பட முடியாது என்பதாகும்.

**பாதுகாப்புச் சபை:**

ஐ.நா-வின் சாசனப்படி பாதுகாப்புச் சபையானது சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான பொறுப்பு மிக்க அமைப்பாகும். இது பொதுச்சபையை போல் வழக்கமாக கூடுவதில்லை மாறாக சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது எந்த நேரத்திலும் இதன் கூட்டமானது நடைபெறும். உறுப்பு நர்டுகள் பாதுகாப்புச் சபையின் முடிவுகளை ஏற்று நடப்பது என்பது சட்ட ரீதியாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அமைதிக்கான அச்சுறுத்தல் ஏற்படும்பொழுது சபையானது பிரச்சனைக்குரிய நாடுகளை அழைத்துபேசி அமைதியான வழியில் ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும், மோதல்களை தவிர்க்கவும் செய்கிறது. மேலும் பாதுகாப்புச் சபையானது பேச்சு வார்த்தையின் மூலம் போர் நிறுத்தத்தை அறிவிக்கவும், பொருளாதார தடை விதிக்கவும் அல்லது ஐ.நா-வின் உறுப்பினர்களின் ஒப்புதலின் பெயரில் அதிகாரபூர்வ அமைப்பாக படைப்பலத்தினை பயன்படுத்தவும் செய்கிறது.

பாதுகாப்புச் சபை அமைதியை நிலைநிறுத்துவதற்கான பாதுகாப்பு நடவடிக்கையையும் மேற்கொள்கிறது. இது ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் உட்பட பதினைந்து உறுப்பினர்களை கொண்டுள்ளது. பிற பத்து உறுப்பினர்கள் பொதுச் சபையினால் இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு சுழற்சி முறையில் தேர்வு செய்யப்படுகின்றனர். பாதுகாப்புச் சபையில் ஓர் தீர்மானமானது இயற்றப்பட பதினைந்தில் ஒன்பது உறுப்பினர்களின் ஒட்டு தேவைப்படுகிறது. இருந்தபோதும் ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் யார் ஒருவரும் தீர்மானத்திற்கு எதிராக ஓட்டு அளிப்பதை மறுதலிக்கும் அதிகாரமாக குறிப்பிடப்படுகிறது. மேலும் அத்தீர்மானமானது நிறைவேற்றப்படுவதில்லை. குழுவில்

மேலும் அதிக நிரந்தர உறுப்பினர்களை இணைப்பதற்கான கோரிக்கைகள் எழுந்தால் அந்த கோரிக்கையானது ஐ.நா-வின் உறுப்பு நாடுகளால் தீர்மானிக்கப்படும்.

**பொருளாதார மற்றும் சமூக குழு**

ஐ.நா-வின் பொருளாதார மற்றும் சமூக குழுவிற்கான ஐம்பத்து நான்கு உறுப்பினர்கள் அனைத்து கண்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூன்று ஆண்டு காலத்திற்கு தேர்வு செய்யப்படுகின்றனர். இது ஐ.நா-விற்கான மைய அமைப்பாக ஐ.நா-வின் பொருளாதார மற்றும் சமூக பணிகளை ஒருங்கிணைத்து மேற்கொள்கிறது. ஐ.நா-வின் எழுபது சதவிகித திட்டங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது, வறுமையை ஒழிக்கும் வகையில் முழு வேலை வாய்ப்பு, பொருளாதாரம், சமூக மேம்பாடு மற்றும் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. இது வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்துவது, மனித உரிமைகளை பாதுகாப்பது, வறுமை மற்றும் வளர்ச்சி இன்மையை ஒழிப்பதற்கான உலகம் தழுவிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்கிறது. இப்பணிகளை மேற்கொள்வதற்கான சிறப்பு முகவாண்மைகளையும் தனக்கு கீழ்இக்குழுவானது கொண்டிருக்கிறது. அவை, உணவு மற்றும் விவசாய கழகம் (FAO), உலக சுகாதார கழகம் (WHO), ஐ.நா-வின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாடு கழகம் (UNESCO), ஐ.நா-வின் வளர்ச்சி திட்டங்கள் (UNDP), ஐ.நா-வின் குழந்தைகளுக்கான நிதி (UNICEF) மற்றும் ஐ.நா-வின் அகதிகளுக்கான உயர் ஆணையர் (UNHCR).

**அறங்காவலர் குழு**

ஐ.நா-வின் சாசனப்படி அறங்காவலர் குழுவானது பதினொரு முன்னால் காலனிய நில பகுதிகளின் நிர்வாகத்தை கண்காணித்து வருகிறது. இரண்டாம் உலகப்போரின் முடிவில், தற்சார்பற்ற இந்நிலபகுதியை சார்ந்த மக்களின் வளர்ச்சியாக சுயாட்சி அரசுகள் ஏற்படவும் அல்லது விடுதலையை அடைவதற்கான ஓர் நவீன முறையாகவும் இது உருவாக்கப்பட்டது.

இந்த பதினொரு பகுதிகளும் மற்றும் ஏழுபதுக்கும் மேற்பட்ட காலனிகளும் விடுதலை அடைவதற்கு ஐக்கிய நாடுகள் சபை உதவியாக இருந்தது. 1994இல் கடைசி பகுதியான பலாவ் ஆனது விடுதலையை அடைந்ததை அடுத்து அறங்காவலர் குழுவானது தனது பணியினை நிறுத்தி கொள்ளவும், தேவைப்படும்போது மட்டும் இக்குழு கூடுவதாகவும் முடிவு செய்தது. சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா கூட்டமைப்பு மற்றும் அமெரிக்காவை இதன் நிரந்தர உறுப்பினர்களாக கொண்டு ஐ.நா. அறங்காவலர் குழுவை அமைத்திருந்தது. அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒருவருக்கு ஒரு ஓட்டு விகிதம் குறைந்தபட்ச பெரும்பான்மையுடன் இதன் முடிவுகள் இயற்றப்படுகின்றன. காலனிய ஒழிப்பு பணிகள் முடிவற்ற இக்கால சூழலில் அறங்காவலர் குழு முக்கியத்துவமற்றதாக காணப்படுகிறது.

**சர்வதேச நீதிமன்றம்**

ஐ.நா-வின் முக்கிய நீதித்துறை அமைப்பாக சர்வதேச நீதிமன்றமானது செயல்படுகிறது. இது நெதர்லாந்தில் உள்ள திஹேக் நகரத்தில் அமைந்துள்ளது. சர்வதேச நீதிமன்றம் அல்லது உலக நீதிமன்றமானது 1945 இல் ஏற்படுத்தப்பட்ட 1946 முதல் செயல்பட்டு வருகிறது. இது ஒரு நிரந்தர நடுவர் நீதிமன்றமாகச் செயல்படுகிறது. இந்நீதிமன்றமானது சர்வதேச சட்டங்களின் படி நாடுகளுக்கு இடையில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்த வைக்கிறது. மாறாக, இது தனிநபர்களின் வழக்குகளை விசாரிப்பது இல்லை. எந்த நாடும் இதன் விசாரணை தேவை இல்லை என கருதினால் தானாகவே விலகி கொள்ளலாம். இதற்கென்று எந்த சிறப்பு ஒப்பந்த விதிமுறைகளும் இல்லை. எந்த நாடு இந்நீதிமன்றத்தின் விசாரணையை ஏற்றுக்கொள்கிறதோ அது கண்டிப்பாக இதன் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

1946 இல் இருந்து சர்வதேச நீதிமன்றமானது 150 க்கும் மேற்பட்ட வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது குறிப்பாக பொருளாதார உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போக்குவரத்துவழிக்கான உரிமைகள், படையை பயன்படுத்தாமல் இருக்கவும், நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமல் இருக்கவும், தூதரக உறவுகள், பணயக்கைதிகளை விடுவிப்பது, அடைக்கல உரிமை மற்றும் தேசிய இன பிரச்சனைகள் போன்றவற்றிக்கும் தீர்வுகண்டிருக்கிறது.

இந்நீதிமன்றத்தின் பதினைந்து நீதிபதிகளும் வெவ்வேறு நாடுகளை சேர்ந்தவர்களாக ஒன்பது ஆண்டு காலத்திற்கு தேர்வு செய்யப்படுகின்றனர். நீதிபதிகளை பொதுச்சபையும், பாதுகாப்புச் சபையும் சேர்ந்து தேர்வு செய்கின்றனர். நெதர்லாந்தின் தி ஹேக் நகரத்தில் அமைந்துள்ள இந்நீதிமன்றமும் அதன் அலுவலகமும் "அமைதிக்கான அரண்மனையாக" திகழ்கின்றன. இதன் கட்டடமானது கார்னேஜ் அறக்கட்டளை என்ற லாபநோக்கம் இல்லாத அமைப்பால் சர்வதேச நீதிக்கான நிரந்தர நீதிமன்றத்தின் தலைமையிடமாக சர்வதேச சங்கத்திற்கு வழங்கப்பட்டது. ஐ.நா-வானது இக்கட்டடத்தை பயன்படுத்துவதற்கான ஆண்டு நிதியை இந்த அறக்கட்டளைக்கு வழங்குகிறது. பாதுகாப்புச் சபை இந்நீதிமன்றமத்திற்கு வழக்குகளை பரிந்துரைசெய்கிறது.

**செயலகம்:**

ஐ.நா-வின் செயலக அதிகாரிகள் ஐ.நா-வின் பிற முக்கிய அமைப்புகளுக்கான திட்டங்களையும் மற்றும் கொள்கைகளையும் வடிவமைக்கின்றனர். இச்செயலகத்திற்கான தலைமை செயலாளரை பொதுச் சபையானது பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பெயரிலேயே நியமிக்கிறது. தலைமை செயலாளர் ஐந்து ஆண்டு காலத்திற்க நியமிக்கப்படுகின்றனர். அவர் மீண்டும் நியமிக்கப்படலாம். தலைமை செயலாளர் ஐ.நா-விற்கான தலைமை நிர்வாக அதிகாரியாக பிற அமைப்புகளையும் அதன் அலுவலர்களையும் இயக்கலாம். இவர்கள் சர்வதேச குடிமைப் பணியாளர்களாக அறியப்படுகின்றனர்.

**பொது செயலாளர்கள் வரிசை**

1. டிரைகிவு லீ (நார்வே) 1946 – 1952
2. டேக் ஹமர்ஸ்கீஜிஓல்டு (சுவிடன்) 1953 – 1961
3. யூ தாண்ட் (பர்மா தற்பொழுது மியான்மர்) 1961 – 1971
4. குர்ட் வல்தீம் (ஆஸ்திரியா) 1972 – 1981
5. சேவியர் பெரஸ் டி குல்லர் (பெரு) 1982 – 1991
6. பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி (எகிப்து) 1992 – 1996
7. கோபி அன்னான் (கானா) 1997 – 2006
8. பான் - கீ - மூன் (கொரிய குடியரசு) 2007 – 2016
9. ஆண்டனியோ குட்ரஸ் (போர்சுகல்) 2017 முதல்

ஒரு குறிப்பிட்ட நாட்டின் பிரதிநிதியாக செயல்படும் தூதர் போல் இல்லாமல் 193 உறுப்பு நாடுகளிலும் சர்வதேச குடிமைப் பணியாளர்களாக இவர்கள் பணியாற்றுகின்றனர். இதற்கான ஆணையை தலைமை செயலாளரிடம் இருந்து பெறுகின்றனர். மாறாக அவர்கள் பணியாற்றும் நாட்டின் அரசிடமிருந்து பெறுவதில்லை. செயலகத்திற்கான தலைமை அலுவலகம் நியூயார்க் நகரில் அமைந்துள்ளது. பிற அலுவலகங்கள் ஜெனிவா, வியன்னா, நைரோபி, அடிஸ்அபாபா, பெய்ரூட், சாண்டியாகோ மற்றும் பாங்காக் நகரங்களில் அமைந்துள்ளன. உறுப்பு நாடுகளில் இருந்து பெற்ற 16,000 ஊழியர்களை கொண்டு செயலக அதிகாரிகள் அமைப்பின் தினசரி பணிகளை மேற்கொள்கின்றனர்.

இதன் பணிகள் மிகவும் பரந்த அளவில் காணப்படுகிறது. அமைதியை நிலைநாட்டுவதற்கான பணி முதல், சர்வதேச பிரச்சனைகளுக்கான நடுநிலையாளராக, சமூக மற்றும் பொருளாதார நிலை குறித்த தகவல்களை திரட்டுவதாக, சர்வதேச ஒப்பந்தங்களுக்கான அடிப்படை பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சர்வதேச மாநாடுகளை நடத்துவது வரை ஆகும். செயலகத்தின் பணியானது பன்முகத்தன்மையுடன் தன் கீழுள்ள தேசிய அரசுகளின் அழுத்தங்களையும் மீறி தனது சர்வதேச குறிக்கோள்களை அடைவதாகும்.

தலைமை செயலாளர் பாதுகாப்புச் சபையின் விவகாரங்களில் கவனம் செலுத்தி சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு இடையூறான சிக்கல்களில் தனது கருத்தினை தெரிவிக்கலாம். குறிப்பாக பிரச்சனைகளை தடுப்பதற்கும் அல்லது பிரச்சனைக்குரிய நாடுகள் அமைதியான வழியில் தீர்வு காண்பதற்கும் இவர் தனது அலுவலகத்தையும் பயன்படுத்தி கொள்ளலாம். மேலும் தலைமை செயலாளர் மனித நேய பிரச்சனைகள் அல்லது சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளுக்கான நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும்.

ஐ.நா-வின் குடும்பம் மிக பெரியது பதினைந்து முகவாண்மைகள், பல திட்டங்கள் மற்றும் நிறுவனங்களைக் கொண்டது. இதில் சில நிறுவனங்கள் சர்வதேச சங்கத்தின் காலத்திலேயே துவக்கப்பட்டுவிட்டன. குறிப்பாக சர்வதேச தொழிலாளர் கழகம் மேலும் சில அமைப்புகள் 1945 இல் தோற்றுவிக்கப்பட்டு குறிப்பிடத்தக்க பிரச்சனைகள் மற்றும் நிகழ்வுகளை தீர்ப்பதற்கான அமைப்பாக ஐ.நா. துவக்கப்பட்டதிலிருந்து செயல்படுகின்றன. இதன் காரணமாக ஐ.நா-வானது பன்முகத்தன்மை வாய்ந்ததாக காட்சி அளிக்கிறது. இந்நிறுவனங்கள் துவக்கப்பட்டதிலிருந்து பின்பு வந்த பல பத்தாண்டுகளில் இவற்றின் பணியானது மிக பரந்த அளவில் கொண்டு செல்லப்பட்டு ஐ.நா-வும் இதனை ஏற்று வழிநடத்த செய்கிறது. இதன் விளைவு, பல புதிய அமைப்புகள் கூடுதலாக தோற்றுவிக்கப்பட்டு நிரந்தரமாகவும், சில தற்காலிக அமைப்பாகவும் செயல்படுகின்றன. குறிப்பாக, ஐ.நா-வின் அகதிகளுக்கான உயர் ஆணையர் (UNHCR) போன்றவை. இவை நிரந்தர அமைப்பாக செயல்படபோவது இல்லை. ஐ.நா-வின் வரலாற்றை பார்த்தால், பல்வேறு காலகட்டங்களில் பலதுணைஅமைப்புகளுடன் இணைந்து பணியாற்றி இருப்பதை காணலாம். ஐ.நா. தற்போது மூவாயிரத்திற்கு மேற்பட்ட அரசு–சாரா நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுகிறது.

தொலைநோக்கு பார்வையுடன் 1945 இல் கொண்டுவரப்பட்ட ஐ.நா. சாசன உறுப்பு 77-வது அரசு–சாரா அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதற்கு ஏதுவாக தேவையான ஏற்பாடுகளை ஐ.நா. செய்து கொள்ளலாம் என்று தெளிவாக கூறுகிறது. இதன் காரணமாக ஐ.நா. நூற்றுக்கும் மேற்பட்ட பிரச்சனைக்குரிய பகுதிகளில் மனிதநேய பணிகளை மேற்கொள்ள முடிகிறது. உதாரணமாக ஐ.நாவின் தூதுக்குழுவானது போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினோவிற்கிடையே 1995 – 2002 ஆம் ஆண்டுகளில் செயல்பட்டதை கூறலாம். 32 அரசு–சாரா அமைப்புகள், ஐ.நா பொதுச்செயலருக்கு ஒரு திறந்தமடல் ஒன்றை 2007 ஆம் ஆண்டு எழுதினர். அதில் ஐ.நா-வின் அமைதிக்காக்கும் படையை போர்பதற்றம் சூழ்ந்த டார்பர் பகுதிக்குள் அனுப்ப அனுமதி மறுக்கும் சூடானை பணியவைக்க கோரியிருந்தனர்.

பொருளாதார மற்றும் சமூக குழுவானது (ECOSOC) ஐ.நா-வின் குடும்ப அமைப்பாக ஐ.நா-வின் பொருளாதார மற்றும் சமூக பணிகளை ஒருங்கிணைக்கிறது. இதன் முக்கிய பணி வளர்ச்சிக்கான சர்வதேச ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதாகும். எவ்வாறு பாதுகாப்புச் சபையானது ராணுவ பாதுகாப்பை வழங்குகிறதோ அதே போல பொருளாதார மற்றும் சமூககுழுவானது (ECOSOC) ஆனது பொருளாதார பாதுகாப்பை வழங்குகிறது. இருந்தபோதும் 1930 இல் உலகபொருளாதாரமந்தநிலையின் காரணமாக இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டதை எளிதாக எடுத்துக் கொள்ள ஐ.நா-வின் சாசனத்தை வரைந்தவர்கள் கருதவில்லை. பொருளாதாரம் மற்றும் சமூக குழுவானது ஐ.நா-வின் எண்ணிடலங்கா வெளியுறவு பணிகள் மற்றும் மண்டலக் குழுக்களுடன் ஒப்பிடும்போதுமிகவும் குறைந்த அதிகாரங்களே கொண்ட அமைப்பாகும். மனித உரிமைக்கான குழுவானது உலக அளவில் மனித உரிமைகளை பாதுகாப்பது மற்றும் கண்காணிப்பது போன்ற பணிகளை செய்கிறது. பிற அமைப்புகள் சமூக வளர்ச்சியை மையப்படுத்தும் விதமாக பெண்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குற்றத்தடுப்பு மற்றும் போதை மருந்து ஒழிப்பு போன்ற பணிகளை மேற்கொள்கின்றன. இருந்தபோதும் பொருளாதாரமற்றும் சமூக குழுவின் நோக்கம் கானல் நீராகவே இருக்கிறது. உண்மையில் உலக பொருளாதார அதிகாரமானது மூன்று சகோதரிகள் அமைப்புகள் என்ற அமைப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவை :

1. உலக வங்கி
2. சர்வதேச நிதி நிறுவனம்
3. உலக வர்த்தக கழகம்

**உலக வங்கி:**

வாஷிங்டன் நகரில் அமைந்துள்ள உலக வங்கியானது உண்மையில் மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச வங்கியாகும். உலக வங்கி அல்லது உலக வங்கி குழுமம் 1945 இல் உருவாக்கப்பட்டு உலகில் வளர்ந்து வரும் நாடுகளில் தேவைக்கான மிகப்பெரும் நிதியையும் மற்றும் ஆலோசனைகளையும் வழங்கிவருகிறது. 'உலக வங்கி' என்ற பெயரானது மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச வங்கியின் பொருளாதார சட்டப்பிரிவினால் 1944ஆம் ஆண்டு ஜூலை 22ல் பிரெட்டன் உட்ஸ் மாநாட்டில் அளித்த அறிக்கையில் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது. இவ்வங்கியின் முதன்மை நோக்கமாக ஏழை மக்கள் மற்றும் ஏழை நாடுகளில் தனது ஐந்து

நிறுவனங்கள் மூலம் வறுமை ஒழிப்பு, பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவது, வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவது போன்ற பணிகளில் தனது நிதி ஆதாரங்களையும் மற்றும் தனது எல்லையற்ற அனுபவங்களையும் கொண்டு செயல்படுகிறது. உலக வங்கியின் நிர்வாகமானது அதன் உறுப்பு நாடுகளால் மேற்கொள்ளப்படுகிறது. அவர்களே கடன் அளிப்பவர், பெறுபவர் மற்றும் நன்கொடையாளராகவும் இருக்கின்றனர்.

உலகின் பெரும்பான்மையான வளரும் நாடுகள் உலக வங்கியின் உதவிகளை கடன் மற்றும் மானியங்கள், தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கை உருவாக்கத்திற்கான அறிவுரைகளை பெறுகின்றன. வங்கியானது மிக பரந்த அளவிலான செயல்பாட்டாளர்களை கொண்டிருக்கிறது. குறிப்பாக அரசுதுறை நிறுவனங்கள், குடிமைச் சமூக அமைப்புகள், பிற உதவி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினர் போன்றோரின் மூலமாக செயல்படுகிறது. உலக வங்கியின் அடிப்படை நோக்கமான வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்க்கை தர மேம்பாடு போன்றவை எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து இருக்கின்றன. ஆனால் தற்பொழுது புதிய பொருளாதார சூழலின் அடிப்படையில் வளரும் நாடுகளுக்கான தேவையை கருதி தனது அணுகுமுறையில் மாற்றம், கொள்கையில் நெகிழ்வை கடைப்பிடிக்கிறது. வளர்ச்சிக்கான தற்போதைய சவால்களை எதிர்கொள்ள நிறுவனங்கள் மக்களுக்கு நெருக்கமாக இருந்தால் மட்டும் போதாது, மேலும் அவை சர்வதேச நெருக்கடிகளை சமாளிக்கும் விதத்தில் அரசு, தனியார் மற்றும் குடிமைச் சமூகத்தில் உள்ள ஆற்றல் மிக்கோரை ஒன்றிணைக்கவும் வேண்டும். இச்சவால்களை எதிர்கொள்ளும் விதமான எதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பதில் வங்கி கவனமாக உள்ளது. அதற்கேகற்றார் பொல் தன்னுடைய நிர்வாக உத்தியில் மாற்றம் மற்றும் ஆளுகையில் முன்னேற்றம் போன்றவற்றை கொண்டு வந்துள்ளது. இந்த மாற்றங்கள் சுயசார்பானதாக, புதுமையானதாக, திறமையானதாக, செயலாக்கம் மிக்கதாக மற்றும் வெளிப்படையானதாக என ஐந்து பகுதிகளை கொண்டாக உள்ளது. மேலும் அவை,

**கடன் முறைகளில் சீர்திருத்தம்:**

மிகவும் நவீனப்படுத்தப்பட்ட நிதி சேவை மற்றும் கடன் முறைகளை கொண்டு, வங்கியானது கடன் பெறுபவரின் தேவையை அறிந்துமிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்கிறது. நெருங்கிய கண்காணிப்பு நடவடிக்கையின் மூலம் நிலையான பயனை அடைவதற்கான அழைப்பை விடுக்கிறது. மேலும் அதிக பாதுகாப்பு அற்ற முதலீடுகளின் மீது நேரடியான நடவடிக்கை வலுப்படுத்துவது மற்றும் கண்காணிப்பை மேம்படுத்துவது போன்றவற்றை மேற்கொள்கிறது.

**பங்கேற்பை அதிகப்படுத்தி குரல்களை ஒலிக்க செய்கிறது**

இயக்குநர்கள் குழுவில் கூடுதல் இடங்களை பின்தங்கிய ஆப்பிரிக்க நாடுகளுக்கு அளிப்பதன் மூலம் வளர்ந்து வரும் நாடுகளின் ஓட்டு அதிகாரத்தை அதிகரிக்கச் செய்கிறது. மேலும் வங்கியானது, வளர்ச்சி மற்றும் மாற்றம் அடைந்து வரும் நாடுகளின் பிரதிநிதித்துவம் மற்றும் அதன் தாக்கத்தை ஆராய்ந்து அந்நாடுகளுக்கு வங்கி குழுமங்களில் இடம் அளிக்கிறது.

**பொறுப்புமிக்கநல்லஅரசைஏற்படுத்துவது :**

இதன் முக்கிய பகுதியாக, வங்கியானது அனைத்து துறைகள் மற்றும் நாடுகளிலும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இதன் முக்கிய அடிப்படையாக வறுமை ஒழிப்பிற்கான திறமைமிக்க மற்றும் பொறுப்புமிக்க அரசாக வளர்ச்சிக்கான அனைத்து வாய்ப்புகளையும் உருவாக்க செய்கிறது.

**உலக வங்கியின் ஐந்து நிறுவனங்கள்**

- மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச வங்கி
- சர்வதேச வளர்ச்சி கூட்டமைப்பு
- சர்வதேச நிதி கழகம்
- பல்தேசிய முதலீட்டு உத்தரவாதத்திற்கான பாதுகாப்புக் குழுமம்
- முதலீடு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான சர்வதேச மையம்

**மிகவும் வெளிப்படையான,பொறுப்புமிக்கதகவல்களைஅளித்தல்:**

வங்கியின் தகவல் கொள்கையானது இதற்கான வாய்ப்பை வழங்குகிறது. வங்கியானது தனது அறிவாற்றல் மற்றும் அனுபவங்களை மிக பரந்த அளவில் அனைவரும் அறியும் வண்ணம் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதன் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் பற்றிய தகவல்களை அளிக்கிறது.

**புதுப்பிக்கப்பட்ட அமைப்பு**

வளர்ச்சிக்கான மிக சிறந்த பங்காளராக வங்கியானது பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. இச்சீர்திருத்தங்கள் மூன்று முக்கிய பகுதிகளை கொண்டது. அவை,

நவீன கடன் அளிப்பு, அறிவாற்றல் உதவி மற்றும் சேவைகளை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. குறிப்பாக, வறுமை ஒழிப்பிற்கான பணிகளில் உதவுகிறது.

மேம்பட்ட வகையில் தனது சிறந்த அறிவினை மற்றும் அனுபவங்களை அமைப்பிற்குள்ளும் மற்றும் வெளியிலும் பகிர்ந்துகொள்வதைமேற்கொள்கிறது.

வங்கியின் அமைப்பு மற்றும் நடைமுறைகளில் நவீனத்துவத்தை கடைப்பிடிப்பதாகும்.

இதன் துவக்கமானது 1946 இல் 33 உறுப்பினர்களை கொண்டு துவக்கப்பட்டது மிகபெரும் அளவிலான மாற்றங்களை இதன் உறுப்பினர்களிடையேயும் மற்றும் உலக அளவிலும் ஏற்படுத்தி உள்ளது. காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை அடைந்த பல நாடுகள் மெல்ல வங்கியில் உறுப்பினர் ஆகின. கூடவே உறுப்பு நாடுகளின் வளர்ச்சிக்கான தேவையும் அதிகரித்தது.

**மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச வங்கி (IBRD):**

இதன் முக்கிய நோக்கமானது நடுத்தர வருவாய் நாடுகள் மற்றும் குறைவான வருவாய்கான கடன்களை பெறும் நாடுகளில் வறுமை ஒழிப்பு மற்றும் சுயசார்பான வளர்ச்சியை ஏற்படுத்துவது, உத்திரவாதம் அளிப்பது, பகுப்பாய்வு மற்றும் ஆலோசனைகளை வழங்குவதாகும். 1945 இல் ஏற்படுத்தப்பட்ட இவ்வங்கியில் 184 உறுப்பு நாடுகள் உள்ளன. இதன் மொத்த வருவாய் மற்றும் நிதியாண்டுகளில் கிடைக்கும் வருவாய் என 2018 ஆம் ஆண்டு ஜுனில் 698 பில்லியன் அமெரிக்க டாலரை கொண்டு இருந்தது.

**சர்வதேச வளர்ச்சி கூட்டமைப்பு (IDA)**

உறுப்பு நாடுகளின் துணையுடன் ஏழை நாடுகளில் வறுமை ஒழிப்பிற்கான வட்டியில்லா கடன்கள், மானியங்களை உறுப்பினர்களிடமிருந்து நிதி உதவியை பெற்று வழங்குகிறது. 1960 இல் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு தனது பொறுப்பில் 24 பில்லியன் அமெரிக்க டாலரை ஜுன் 2018 ஆம் நிதியாண்டில் மேலாண்மை செய்தது

**சர்வதேச நிதி கழகம் (IFC) :**

வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான கடன்களை தனியார் துறையினருக்கு வழங்குகிறது. 1956 இல் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பில் 176 உறுப்பினர்களை கொண்டுள்ளது. 2018 ஆம் நிதியாண்டில் 23.3 பில்லியன் அமெரிக்க டாலரை முதலீடாக செய்து உள்ளது.

**பல்தேசிய முதலீட்டு உத்தரவாதத்திற்கான பாதுகாப்புக் குழுமம் (MIGA):**

இக்குழுமமானது வளரும் நாடுகளில் தனியார் துறையினரின் முதலீட்டினை அதிகரிக்க செய்கிறது. மேலும் ஒப்பந்தங்கள், பிரச்சனைகள், போர் மற்றும் பணப்பரி மாற்று விகிதங்களினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து முதலீட்டிற்கான பாதுகாப்பை வழங்குகிறது. 1988

இல் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பில் 164 உறுப்பினர்கள் கொண்டு அதிக பட்சமாக 5.3 பில்லியன் தொகையை வர்த்தகம் செய்துள்ளது.

**முதலீடு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான சர்வதேச மையம் (ICSID):**

வளரும் நாடுகளில் வெளிநாட்டு முதலீட்டை ஆதரிக்கிறது. மேலும் முதலீடு தொடர்பான பிரச்சனைகளை தீர்த்து வைக்கிறது. 1966 இல் ஏற்படுத்தப்பட்ட இவ்வமைப்பில் 140 உறுப்பினர்கள் உள்ளனர்.

**சர்வதேச நிதி நிறுவனம்**

சர்வதேச நிதி நிறுவனம் அல்லது நிதியமானது உலகின் மிகப் பெரிய முதன்மையான சர்வதேச நிதி நிறுவனமாகும். 1930 இல் ஏற்பட்ட உலக நாடுகளின் பெரும் பொருளாதார மந்த நிலைக்கு பதிலாக 1944 இல் பிரெட்டன் உட்ஸ் மாநாட்டில் இது உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு நாடும் பக்கத்து நாடுகளிடம் கடன் வாங்குவது இதனால் குறைந்தது.

உறுப்பு நாடுகளின் செழித்த நிலை தேவைக்கான குறுகிய மற்றும் இடைக்கால நிதியை வழங்குவதுடன் அந்நாடுகளின் பொருளாதார கொள்கையில் நெகிழ்வை ஏற்படுத்தி பண மதிப்பு இழப்பு போட்டியை தடுத்து வர்த்தகத்தை பாதுகாக்கிறது.

**சர்வதேச நிதி நிறுவனத்தின் தேவை**

- சர்வதேச நிதி நிறுவனம் ஓர் சுதந்திரமான சர்வதேச அமைப்பாகும். இது 185 உறுப்பு நாடுகளை கொண்டுள்ளது. இதன் நோக்கமானது பொருளாதார நிலைதன்மையை ஏற்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுவதாகும். உறுப்பு நாடுகள் இதன் பங்குதாரராக கூட்டுறவு முறையில் சர்வதேச நிதி நிறுவனத்திற்காக மூலதனத்தை தங்கள் நாட்டிற்கான ஒதுக்கீடு அடிப்படையில் வழங்குகின்றன. இதற்காக நிதியமானது அதன் உறுப்பினர்களுக்கு நுண்பொருளாதார கொள்கைக்கான ஆலோசனைகளை, செலுத்து நிலை தேவைக்கான நிதியுதவி, தொழிற்நுட்ப உதவி மற்றும் தேசிய பொருளாதார மேம்பாட்டிற்கான மேலாண்மை பயிற்சிகளை வழங்குகிறது. நிதியமானது ஐ.நா.-வின் பல்வேறு தன்னாட்சி நிறுவனங்களில் ஒன்றாக சிறப்பு முகவாண்மையாக குறிப்பிடப்படுகிறது. மேலும் இது ஐ.நா-வின் நிரந்தர பார்வையாளராகவும் உள்ளது. நிதியத்தின் விதிஎண் ஒன்றானது கீழ்க்கண்ட முக்கிய நோக்கங்களை குறிப்பிடுகிறது.

- ஒரு நிரந்தர அமைப்பாக சர்வதேச அளவில் நிதி ஒத்துழைப்பை ஏற்படுத்துகிறது. மேலும் சர்வதேச பணவியல் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாட்டிற்கான வழிமுறைகளை உருவாக்குகிறது.

- பரந்த அளவிலான சமச்சீரான சர்வதேச வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பை வழங்குகிறது. மேலும் அதிக வேலைவாய்ப்பு மற்றும் வருவாயைப் பாதுகாத்து உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைபிடிக்க உறுப்பு நாடுகளை அறிவுறுத்துகிறது.

- பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்ததன்மை, உறுப்பு நாடுகளிடையே ஒழுங்கமைந்த பரிமாற்றத்திற்கான வழிமுறைகளை ஏற்படுத்துதல் மற்றும் போட்டியின் காரணமாக மதிப்பு குறைத்தலை தடுக்கிறது.

- உறுப்பினர்களுக்கு இடையே நடைபெறும் நடப்பு பரிவர்த்தனையில் பல்தேசிய பண வழங்கல் முறை ஏற்படுவதற்கான உதவியை செய்கிறது மற்றும் உலக வர்த்தக வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் அந்நிய செலாவணி பரிமாற்று விகிதங்களின் மீதான கட்டுபாடுகளை நீக்குகிறது.

* நிதியமானது தனது பொது நிதி வளங்களை உறுப்பினர்களுக்கு தற்காலிகமாக பயன்படுத்தி தங்களை பாதுகாத்து கொள்வதற்கான நம்பிக்கையை அளிக்கிறது. இதன் மூலம் செலுத்து நிலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தாத வகையில் மீட்சி அடைவதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.

* உறுப்பினர்களிடையே செலுத்து நிலையில் ஏற்படும் நிலையற்ற தன்மையின் தாக்கம் மற்றும் அதன் கால அளவினை குறைக்க செய்கிறது.

* முக்கியமாக நிதியமானது தனது ஒற்றை பண்பாக ஓர் சர்வதேச நிதிநிறுவனமாக தொலைநோக்கு பார்வையுடன் தனது பொறுப்புமிக்க நடைமுறையின் மூலம் சர்வதேச வளர்ச்சி மற்றும் நிதி பரிமாற்ற முறைகளை கையாள்கிறது.

**சர்வதேச நிதி நிறுவனத்தின் செயல்பாடுகள்**

நிதியமானது மிக பரந்த அளவினை பணிகளை அதன் முக்கியத்துவம் கருதிமேற்கொள்கிறது.

**உறுப்பினர்களின் பொருளாதார கொள்கையினை கண்காணிப்பது**

எந்த நாடு நிதியத்தில் உறுப்பினராக இணைந்து அதன் கொள்கையினை ஏற்று கொண்டதோ அது தனது பொருளாதார கொள்கையினை நிதியத்தின் நோக்கத்திற்கு இணையானதாக கொண்டு செயல்படவேண்டும். மேலும் உலகின் எல்லா நாடுகளின் பொருளாதார நிலையினை தொடர்ந்து கண்காணிப்பதற்கான முக்கிய ஓரே அமைப்பாக செயல்படுகிறது.

**செலுத்துநிலை தேவைக்கான தற்காலிக நிதிவழங்கல்**

செலுத்துநிலை தேவைக்கான கடன்களை நிதியமானது உறுப்பு நாடுகளுக்கு தற்காலிகமாக வழங்குகிறது. கூடுதலாக நேரடியான நிதியினை உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது. மேலும் நாடுகளின் செலுத்து நிலை தேவைக்கான நிதியினை வெளியிலிருந்து திரட்டும் பணியையும் மேற்கொள்கிறது.

**குறைந்த வருவாய் கொண்ட நாடுகளில் வறுமைதடுப்பு:**

நிதியமானது வருவாய் குறைந்த நாடுகளுக்கு நிபந்தனையற்ற கடன்களை அளித்து அந்நாடுகளில் வறுமை ஒழிப்பிற்கான முயற்சிகளை மேற்கொள்கிறது. இந்த முயற்சியில் நிதியமானது உலக வங்கி மற்றும் பிறவளர்ச்சிக்கான பங்கு தாரர்களையும் கொண்டு பணியாற்றுகிறது. கூடுதலாக நிதியானது கடன்களில் இருந்து மீள்வதற்கான இரண்டு சர்வதேச பணிகளையும் மேற்கொள்கிறது. அவை:

1. மிக அதிக கடனில் உள்ள ஏழை நாடுகள் (HIPC)
2. பல்தேசிய கடனில் இருந்து மீள்வதற்கான முன்னெடுப்பு (MDRI)

**வெளியிலிருந்து நிதியினை திரட்டுவது**

நிதியமானது நாடுகளின் கொள்கை நடைமுறைக்கான நிதியினை பல்தேசிய கடன் அளிப்போர் மற்றும் நன்கொடையாளர்களிடம் இருந்து திரட்டுவதை முக்கிய பணியாக கொண்டிருக்கிறது. நாடுகளின் பொருளாதார எதிர்காலத்தை அறிந்து கொள்வதற்கான முக்கிய தகவல்களை நிதியத்தின் கொள்கை ஆய்வுகள் மற்றும் பரிந்துரைகள் மூலம் முதலீட்டாளர்கள் மற்றும் நிதிசந்தைகளுக்கு அளிக்கின்றது. இதன்மூலம் பொருளாதாரத்தின் மீதான முதலீட்டாளர்கள் மற்றும் சந்தையாளர்களுக்கு நம்பிக்கையை அதிகரிக்க செய்கிறது.

**சர்வதேச பணவியல் முறையை பலப்படுத்துவது**

நிதியமானது சர்வதேச பணவியல் முறைக்கான மைய அமைப்பாக செயல்படுகிறது. தனது உறுப்பினர்களுக்கு சர்வதேச பணவியல் தொடர்பான ஆலோசனைகளையும் மற்றும் உதவிகளையும் வழங்குகிறது. இது தனது பணியாக பிறபல்தேசிய நிறுவனங்களுடன் இணைந்து சர்வதேச

பொருளாதார பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் வகையில் சர்வதேச விதிகளின் துணையுடன் அவற்றை கட்டுப்படுத்துவது மற்றும் மேம்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

**சர்வதேச இருப்பை உலகளவில் வழங்குதலை அதிகரித்தல்**

உலக தேவைகளுக்காக நிதியமானது அதிகாரப்பூர்வ அமைப்பாக தனது சர்வதேச கையிருப்பை வழங்குகிறது. இது சிறப்பு எடுப்பு உரிமை (SDR) என கூறப்படுகின்றது. இந்த் சிறப்பு எடுப்பு உரிமையானது சர்வதேச கையிருப்பை உறுப்பினர்களின் எந்த மாற்றதக்க பணங்களுடனும் பரிமாற்றம் செய்துகொள்ளலாம்.

**தொழில்நுட்ப உதவிமற்றும் பயிற்சியின் மூலம் ஆற்றலை வளர்த்தல்**

நிதியமானது சிறந்த பயிற்சி மற்றும் தொழில் நுட்ப உதவிகளை உறுப்பு நாடுகளுக்கு தங்கள் பொருளாதார கொள்கைக்கான வடிவங்களையும் மற்றும் பொருளாதார மேலாண்மைக்கான திறமையினை மேம்படுத்தும் வகையில் வழங்குகிறது. இந்த உதவியானது கொள்கைகள் தோல்வியடைவதை மற்றும் அதிர்வுகளை ஏற்படுத்துவதை தடுக்கும் வகையில் திட்டங்களுக்கான வடிவங்கள் மற்றும் நடைமுறைகளை வழங்குகிறது. இந்த நடவடிக்கைகள் குறிப்பாக வளரும் நாடுகளுக்கு தங்கள் வளங்களை பாதுகாக்கவும் மற்றும் நிறுவனங்கள் வீழ்ச்சியடையாமல் தடுப்பதற்கும் பயன்படுகிறது.

**தகவல் பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சிகள்**

நிதியமானது உறுப்பு நாடுகளின் பொருளாதார கொள்கைகள் பற்றிய பொருளியல் பகுப்பாய்வுகள் மற்றும் புள்ளி விவரங்களை பெறுவதற்கான முதன்மை அமைப்பாகும். நிதியமானது தனது தகவல்களை அளிக்கும் வகையில் எண்ணிடலங்கா அறிக்கைகள், ஆய்வறிக்கைகள் மற்றும் சிறப்பு வாய்ந்த புள்ளி விவரங்களை வெளியிடுகின்றது. மேலும் குறிப்பாக, தனது பொருளாதார பகுப்பாய்வு மற்றும் உறுப்பு நாடுகளுக்கு அளிக்கும் ஆலோசனைகளை மேம்படுத்தும் வகையில் பல ஆய்வுகளை அதன் முக்கியத்துவம் மற்றும் நடைமுறைகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்கிறது. இதன் வெளியீடுகளை புத்தகமாகவும், இதழ்களில் கட்டுரையாகவும், ஆய்வு அறிக்கைகளாகவும் மற்றும் இணையத்திலும் காணலாம்.

இருந்த போதும் நிதியத்தின் மீதான பொது விமர்சனமானது சேவைத்துறைகளை வணிகமயமாக்குவதன் மூலம் பெருநிறுவன நிறுவனங்களின் விருப்பத்திற்கு ஆதரவாக செயல்படுகிறது என்பதாகும். குறிப்பாக கல்வி, மருத்துவம், மக்கள்நல திட்டங்கள் விருப்பமாக மாற்றுவதுடன் மேலும் இறையாண்மை உடைய அரசுகளை சர்வதேச பெருநிறுவன வணிகத்திற்கு ஆதரவாக சேவையாற்ற கட்டாயப்படுத்துகிறது என்பதாகும்.

**ஆசிய வளர்ச்சி வங்கி**

சர்வசேத நிதி நிறுவனமானது பெரும்பாலும் சுயநிதியினை சார்ந்தது. ஆனால் பல்தேசிய வளர்ச்சி வங்கிகள் தங்கள் சேவைகளுக்கு பெரும்பாலும் பங்குதாரர்களின் பங்களிப்பை சார்ந்தே செயல்படுகின்றன. குறிப்பாக, தங்கள் நிதி நடவடிக்கையான வட்டி குறைவான கடன்களை வழங்குதல், மானியம் அளித்தல் மற்றும் மிகவும் ஏழை நாடுகளுக்கான வட்டியில்லா கடன்கள் போன்றவையாகும்.

பல்தேசிய வளர்ச்சி வங்கிகளை மூன்று வகைகளாக பிரிக்கலாம்.

1. உலக அளவில்
2. மண்டல அளவில் மற்றும்
3. துணை–மண்டலங்கள் என மூன்றாக பிரிக்கலாம்

இதன் மூலம் அவற்றின் ஒற்றுமைமற்றும் வேற்றுமைகளை எளிதில் கண்டறியலாம்.

பல பல்தேசிய வளர்ச்சி வங்கிகள் மேலே குறிப்பிட்ட மூன்று வித பிரிவுகளையும் உள்ளடக்கியதாக குறிப்பிட்ட ஓர் கண்டத்தினை மட்டுமே நேரடியாக கொண்டு செயல்படுகின்றன. அவை, ஆசிய

வளர்ச்சி வங்கி, ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கி. ஆசிய உள்கட்டுமான மற்றும் முதலீட்டு வங்கி. புதிய வளர்ச்சி வங்கி, அமெரிக்க வளர்ச்சி வங்கி, இஸ்லாமிய வளர்ச்சி வங்கி, ஐரோப்பிய முதலீட்டு வங்கி போன்றவையாகும். 1930-களின் பிற்பகுதியில் மற்றும் 1940-களின் முற்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் தற்கால பொருளாதார வளர்ச்சிக்கான கருதுகோள்கள் தோற்றம் எடுத்தன. இது முக்கியமாக ஆங்கிலேய பொருளாதார அறிஞர் ஜான்மேயார்டுகியின்ஸ் குறிப்பிட்டது போல போருக்கு பிந்தையகால பொருளாதார மற்றும் சமூக தேவையாக தோற்றம் எடுத்தன. இதனை மெய்ப்பிக்கும் வகையில் அமெரிக்க பொருளாதார அறிஞரான ஹரிடெக்ஸ்டர் ஒயிட் தொலைநோக்கு பார்வையில் சில நிறுவனங்களை ஏற்படுத்தினார்.

ஒயிட் 1942 ஆம் ஆண்டு இதற்கான பாதையை அமைக்கும் வகையில் வளர்ச்சியை அடிப்படை கொள்கையாக கொண்டு ஓர் கோரிக்கையை ஐ.நா-விற்கு அளித்தார். ஐக்கிய மற்றும் துணை நாடுகளுக்கான சர்வதேச நிதியத்தையும், மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான வங்கியையும் உருவாக்க கோரினார். இது போருக்கு பிந்தைய சர்வதேச பணவியல் சீர்திருத்தங்களுக்கான அடிப்படைகளை வழங்கியது. இந்த கோரிக்கையானது போருக்கு பிந்தைய பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வகையில் இரண்டு நிறுவனங்களையும் அதிகாரம், வளங்கள் மற்றும் கட்டமைப்பை கொண்டதாக உருவாக்க கோரியது.

பல்தேசிய வங்கிகள் உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கிகள் போலவே பொதுவான நிதி நிறுவனங்களாக உறுப்பு நாடுகளின் வளர்ச்சிக்கான பொறுப்புமிக்க அமைப்பாகும். கியூபா மற்றும் வடகொரியாவை தவிர உலகில் பெரும்பான்மையான நாடுகள் பல்தேசிய வளர்ச்சி வங்கியின் உறுப்பினர் ஆகின. பல்தேசிய வளர்ச்சி வங்கியின் உறுப்பினரான எல்லா நாடுகளும் தங்கள் பங்களிப்பை அளித்து வங்கியானது அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து கடன்களை அவர்களுக்கு அளித்து வருகிறது. பல்தேசிய வளர்ச்சி வங்கிகள் பெரும் அளவிலான வளர்ச்சி திட்டங்கள் குறிப்பாக நீர்மின் நிலையங்களுக்கான அணைகள், பாசனத் திட்டங்கள், போக்குவரத்து வளர்ச்சிகள், எண்ணெய் மற்றும் எரிவாயு திட்டங்கள், வறுமையை குறைத்து, பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிக்க செய்து வளர்ச்சிக்கு வித்திடுவதாக இருந்தன.

இருந்தபோதும் இவற்றிற்கு எதிராக பிரச்சனைகள் எழுந்தன. வங்கி கூறுவது போல இல்லாமல் இந்த திட்டங்கள் சுற்றுச்சூழலை மற்றும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கையை அழிப்பதாக எதிர்ப்புகள் எழுந்தன. பலரும் இதன் திட்டங்கள் அம்மக்களின் நலன்களை மட்டுமல்ல சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல்களை பாதித்து எதிரிடையான பலன்களை தந்ததாக வாதிட்டனர்.

“சமைப்பதற்காக வைத்த நெருப்பு வீட்டை எரித்தைப்போல” என்ற ஆசியப் பழமொழி போல இது உண்மைக்கு புறம்பானது. ஆசிய வளர்ச்சி வங்கியின் வளர்ச்சி திட்டங்களுக்கான கடன்கள் அதன் (உறுப்பினர்களான) வளரும் நாடுகளில் காணப்படுவது போல பல வீடுகளில் அடுப்பு எரியவும் உணவு சமைக்கவும் உதவியாக இருந்தது. ஆசிய வளர்ச்சி வங்கி ஓர் மண்டலப் பல்தேசிய நிதி நிறுவனமாகும். இது பொறுப்பு உணர்வுடன் ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளில் வறுமையை குறைப்பதற்கான பணியினை மேற்கொள்கிறது. 1966 இல் உருவாக்கப்பட்ட இவ்வங்கியில் 66 நாடுகள் உறுப்பினராக உள்ளன. இவற்றில் பெரும்பான்மை ஆசிய பகுதியை சார்ந்தவை. வங்கியின் பங்கு முதலீடாக 44 பில்லியன் அமெரிக்க டாலரையும் மற்றும் இருப்பாக 7.9 பில்லியன் அமெரிக்க டாலரையும் கொண்டு உள்ளது. இது தோற்றுவிக்கப்பட்ட 1966 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டுவரை வங்கியானது பொது மற்றும் தனியார் துறையினருக்கு 98.831 பில்லியன் தொகையைகடனாகவழங்கிஉள்ளது. மேலும் ஐந்துபில்லியன் கடன்களைபல்வேறுதிட்டங்களுக்குமண்டலத்திற்குவெளியிலும் வழங்கிஉள்ளது. இதன் ஆண்டுவருவாய் 500 பில்லியன் ஆகும்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் “வறுமை குறைப்பு செயல்திட்டம் (PRS)” ஆனது மைய பொருளாக கொண்டு நீண்டகால செயல்திட்ட கட்டமைப்பு (LIST 2001 – 2015) அமைந்துள்ளது. இந்த பதினைந்து ஆண்டுகால திட்டமானது ஆசிய வளர்ச்சி வங்கி ஐ.நா-வின் நூற்றாண்டு வளர்ச்சியின் வெற்றியாக கொண்டு உலக அளவில் வறுமையில் வாழும் மக்களின் எண்ணிக்கையை நோக்கமாக கொண்டு மேற்கொள்கிறது. வங்கி குறிப்பிடுவதைபோல இதன் வளர்ச்சி திட்டங்கள் ஆசிய மற்றும் பசிபிக் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி உள்ளது. மேலும் குறிப்பாக 900 மில்லியன் ஆசிய மக்கள் ஒரு நாளைக்கு ஒரு டாலருக்கும் கீழான வருவாயில் வறுமையில் வாழ்கின்றனர்.

வங்கியின் முதன்மை நோக்கமாக பொருளாதார வளர்ச்சி, மனித வளர்ச்சி, பெண்கள், நல்ல அரசாங்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தனியார் துறைவளர்ச்சி மற்றும் மண்டல ஒருங்கிணைப்பாகும். ஆசிய வளர்ச்சி வங்கியானது தற்பொழுது ஐந்து புவியில் பகுதியாக நாடுகளை பிரித்து அதற்கு ஏற்பதுறை ரீதியாக பணிகளை கொண்டு செயல்படுகிறது. அவை,

1. கிழக்கு மற்றும் மத்திய ஆசியா
2. திமெக்காங்
3. பசிபிக்
4. தெற்கு ஆசியா
5. தென்கிழக்கு ஆசியா

ஒவ்வொரு மண்டல துறைகளும் அதன் நாடுகளுக்கான திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளையும் மேற்கொள்கின்றன. துணை மண்டலங்கள் குறிப்பிட்ட நாட்டிற்கான உதவிகள் என்பதாக பணிகளை மேற்கொள்கின்றன. பிற வங்கிகளை போலவே ஆசிய வளர்ச்சி வங்கியும் தனக்கான நிதியினை பங்குதாரர்களிடமிருந்து பெறுகிறது. ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் பங்களிப்பு இதன் 62 உறுப்பு நாடுகளை விடமிக அதிகமாக 15.9 சதவிகிதமாகும்.

**ஷாங்காய் கூட்டமைப்பு(SCO)**

**குயிண்டாஓதீர்மானம்**

❖ சீனாவின் விருப்பமான ‘‘பட்டுசாலை முன்னெடுப்பில்’’ இந்தியா இணைவதற்கு மறுத்து விட்டது.

❖ ஷாங்காய் கூட்டமைப்பு பகுதியின் முழுமையான பாதுகாப்பிற்கான செயல் யுக்திகளை இந்தியா வகுத்துள்ளது.

**ஷாங்காய் கூட்டமைப்பு**

❖ இது ஓர் ஐரோப்பிய ஆசிய அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு அமைப்பாக 2001 துவக்கப்பட்டது. இதன் தலைமையகம் பீஜிங்கில் உள்ளது.

❖ இதன் துவக்கத்திற்கு காரணமாக ஷாங்காய் ஐந்து எனப்படும் ஐந்து நாடுகள் அமைந்திருந்தது (1996 இல் சீனா, ரஷ்யா, கஜகிஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் மற்றும் தஜகிஸ்தான் கொண்டபல் தேசிய அமைப்பாக இது ஷாங்காய் நகரத்தில் துவக்கப்பட்டது).

❖ இதன் தத்துவமானது ‘‘ஷாங்காய் உற்சாகம்’’ என அறியப்படுகிறது. இது நல்லிணக்கம், நற்சிந்தனையான பணி, பிற கலாசாரங்களை மதித்தல், பிறநாட்டு உள் விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல் மற்றும் அணிசேராமை ஆகும்.

❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு எட்டு உறுப்பினர்களை கொண்டுள்ளது. அவை இந்தியா, கஜகிஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜ்கிஸ்தான் மற்றும் உஸ்பெக்கிஸ் தான் ஆகும்.

❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு எட்டு உறுப்பினர்களை கொண்டுள்ளது. அவை இந்தியா, கஜகிஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜ்கிஸ்தான் மற்றும் உஸ்பெக்கிஸ்தான் ஆகும்.

❖ 2018 ஆம் ஆண்டில் நடந்த இதன் கூட்டத்தில் இந்தியா அதன் முழுநேர உறுப்பினராக முதல் முறையாக கலந்து கொண்டது. இந்தியாவுடன், பாகிஸ்தானும் 2017இல் கஜகிஸ்தானில் நடந்த அஸ்டானா உச்சிமாநாட்டில் முழுநேர உறுப்பினராக இணைந்தன.

❖ இவ்வமைப்பின் கீழ் நான்கு அரசுகள் இதன் பார்வையாளராகவும் மற்றும் ஆறு அரசுகள் விவாத பங்கேற்பு உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

**ஐ.நா-வின் உலக தீவிரவாத தடுப்பு ஒருங்கிணைப்புநடவடிக்கை:**

❖ இது ஒரு முப்பத்தி ஆறு அமைப்புகள் இன்டர்போல் எனப்படும் சர்வ தேசகாவல் அமைப்பு மற்றும் உலக சுங்க அமைப்பு ஆகியவை ஐ.நா-வின் தலைமையின் கீழ் சர்வதேச தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு உதவுவதற்காக ஏற்படுத்திக் கொண்ட கூட்டணி ஆகும்

**நோக்கம்:**

❖ ஐ.நா-வின் உறுப்பு நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்க ஐ.நா.வின் உலக தீவிரவாத எதிர்ப்பு செயல் உத்திகள் மற்றும் இவை சார்ந்த பிற தீர்மானங்களின்படி உறுப்பு நாடுகள் இடையே ஒருங்கிணையும் திறனை வளர்த்துக் கொள்வதற்கான வழி முறைகளையும் நடைமுறைப்படுத்துகிறது.

❖ பாதுகாப்புச் சபையின் முக்கிய அமைப்புகள் மற்றும் பிறஐ.நா.வின் அமைப்புகள் இடையே விரிவான நெருங்கிய கூட்டிணைவை ஏற்படுத்துகிறது.

❖ ஐ.நா-வின் உலக தீவிரவாத தடுப்பு நடவடிக்கையின் ஒருங்கிணைப்பு குழுவானது தனது மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஐ.நா-வின் தீவிரவாத தடுப்புதுணை பொதுச் செயலாளரின் கீழ் மேற்கொண்டுவ ருகிறது.

❖ இது 2005இல் உருவாக்கப்பட்ட தீவிரவாத எதிர்ப்பு படைக்கு மாற்றாக ஏற்படுத்தப்பட்டது.

**சர்வதேச ஒப்பந்தங்கள்:**
**முழுமையான அணு சோதனை தடை உடன்படிக்கை(CTBT):**

**அணு சோதனை தடை உடன்படிக்கை என்றால் என்ன?**

❖ இது எல்லா விதமான ராணுவ மற்றும் சிவில் சார்ந்த அணுவெடிப்பு பரிசோதனைகளையும் தடைசெய்யும் ஓர் பல்தேசிய உடன்படிக்கையாகும்.

❖ இது ஜெனிவாவில் நடந்த ஆயத குறைப்பு மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1996இல் செப்டம்பர்-24 ஆம் தேதி ஐ.நா-வின் பொதுச்சபையில் கையெழுத்திடப்பட்டது.

❖ இவ்வுடின்படிக்கையானது 183-நாடுகளின் கையெழுத்து மற்றும் 163 ஒப்புதல்களை மிகப்பெரும் ஆதரவுடன் பெற்ற ஆயுதக் குறைப்பிற்கான உடன்படிக்கையாகும்.

❖ இது அணு தொழில்நுட்ப ஆற்றலைக் கொண்ட எட்டு நாடுகளான சீனா, எகிப்து, இந்தியா,ஈரான், இஸ்ரேல், வடகொரியா, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்காவின் ஒப்புதல் பெற்ற பின்பே நடைமுறைக்கு வந்தது.

❖ இந்த உடன்படிக்கையானது முழுமையான அணு ஆயத சோதனை தடை (CTBTO) அமைப்பை ஏற்படுத்தியது. ஆஸ்திரியாவின் வியன்னாவை தலைமையகமாக கொண்டு செயல்படும் இவ்வமைப்பு இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை உறுப்புநாடுகள் பின்பற்றுவதை உறுதிசெய்கிறது.

**CTBT இல் இந்தியாவின் நிலை:**

❖ இவ்வுடன்படிக்கைக்கு 1996-இல் இந்தியா ஆதரவளிக்கவில்லை. பின்வரும் காரணங்களால் இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்காமலே உள்ளது. இந்த உடன்படிக்கை ஆயுதக்குறைப்பை முழுமையாக தடுக்கும் நோக்கில் இல்லை மற்றும் பாதுகாப்புச் சபையின் நிரந்தர

உறுப்பினர்களுக்கு ஆதரவாக அவர்களின் ஆயுதக்குவிப்பை பற்றி கண்டு கொள்ளாமல் இருப்பதாகும்.

❖ மற்றோர் பிரச்சனையான கட்டாயமாக உள்நுழைதல் (EIF) என்பதை இந்தியா உரிமை மீறலாக கருதுவதால் இந்த சர்வதேச உடன்படிக்கையில் இருந்து தனது பங்கேற்பைதானாகவே விலகிக்கொண்டது. நாடுகளின் ஒப்புதலைப் பெற்று இந்த உடன்படிக்கை உருவாக்கப்பட்ட போதே அதன் ஒரு பகுதியாக சர்வதேச கண்காணிப்பு முறையின் (IMS) முக்கிய விதியாக கட்டாயமாக உள்நுழைதல் (EIF) ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் காரணமாகவே இந்தியா கண்காணிப்பு முறையில் (IMS) இருந்து தன துபங்கேற்பைதிரும்பப் பெற்றுக்கொண்டது.

**அணு ஆயத பரவல் தடை ஒப்பந்தம் (NPT)1968:**

❖ இதன் நோக்கமானது அணு ஆயுதம் மற்றம் ஆயத தொழில்நுட்பம் பரவாமல் தடுப்பதாகும். மேலும் அணு சக்தியை அமைதியான வழியில் பயன்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது என்பதுடன் தனது எதிர்கால இலக்காக அணு ஆயத குறைப்பு மற்றும் முழுமையான பொது ஆயுத குறைப்பை கொண்டுள்ளது.

❖ இந்த ஒப்பந்தத்தில் இந்தியா, இஸ்ரேல், வடகொரியா, பாகிஸ்தான் மற்றும் தெற்கு சூடான் பங்கேற்கவில்லை.

**சர்வதேச அரசு – சாரா நிறுவனங்கள்:**

சர்வதேச அரசு – சாரா நிறுவனங்களின் அதிகரித்து வரும் எண்ணிக்கையானது உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவற்றின் செயல்பாட்டு எல்லை, அளவு, உறுப்பினர் எண்ணிக்கை மற்றும் அமைந்துள்ள இடத்தை பொருத்து பெரும் அளவில் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக சர்வதேச பொது மன்னிப்புச் சபை, மனித உரிமை கண்காணிப்பகம், மருத்துவசான்ஸ் பிராண்டியர்ஸ் (MSF ஆனது எல்லை அற்ற மருத்துவர்களாக அறியப்படுகிறது) போன்றவற்றை கூறலாம். சர்வதேச அரசு – சாரா அமைப்புகள் முக்கியமாக கொள்கை உருவாக்கம் மற்றும் அதன் வழிமுறைகளை தீர்மானிப்பதில் பெரும் அளவில் பணியாற்றுகின்றன. சர்வதேச அரசு-சாரா அமைப்புகள் உள்நாட்டு கொள்கை வடிவமைப்பாளர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கொள்கை முடிவுகள் மீதான மனிதநேய குறுக்கீடு, பொருளாதார தடை மற்றம் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்கிறது.

1945இல் ஐ.நா.வின் சாசனம் ஏற்றுக்கொள்ளப்படும் வரை அரசு – சாரா நிறுவனங்கள் என்ற பதமே வழக்கத்தில் இல்லை. 1910 ஆம் ஆண்டு 132 - அமைப்புகள் ஓர் குழுவாக இணைந்து சர்வதேச அமைப்புகளுக்கான சங்கத்தை துவக்கினர். 1929இல் சில அமைப்புகள் தொடர்ச்சியாக சர்வதேச சங்கக் கூட்டங்களில் கலந்து கொண்டன. மேலும் தனியார் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அமைப்புகள் இணைந்து ஜெனிவாவில் ஓர் கூட்டமைப்பை ஏற்படுத்தினர். ஐ.நா.வின் சாசனமானது சான்பிரான்ஸ்கோ மாநாட்டில் இறுதி செய்யப்பட்ட பிறகு சர்வதேச அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகிய இரண்டும் முறையே அங்கீகரிக்கப்பட்டு பொருளாதார மற்றம் சமூக குழுவுடன் (ECOSOC) உறவுகளை மேற்கொள்வதற்கான விதி முறைகளை இயற்றின. இருந்த போதும் இரண்டு அமைப்புகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் இரண்டு சர்வதேச அமைப்புகளும் ஒரே தகுதியுடன் குறிப்பிடப்படுவதை விரும்பவில்லை. உறுப்பு - 57 ஆனது, ஓர் புதிய வரையறையாக சிறப்பு முகவாண்மைகள் என்ற வார்த்தையை அரசுக்களுக்கு இடையேயிலான அமைப்புகளை குறிப்பிட பயன்படுத்தியது. உறுப்பு - 71 ஆனது, இரண்டாவது புதிய வரையறையாக அரசு – சாரா நிறுவனங்கள் என்ற வார்த்தை அறிமுகப்படுத்தியது.

ஐ.நா-வானது, உலக அரசுக்கான அமைப்பாக கருதப்படும் வேளையில் அரசு-சாரா நிறுவனங்கள் உலகில் உள்ள அனைத்து நாட்டுமக்களின் பிரதிநிதியாக கருதப்படுகின்றன.

**71-வது உறுப்பு:**
பொருளாதாரம் மற்றும் சமூக குழுவானது அரசு – சாரா நிறுவனங்கள் தாங்கள் தொடர்புடைய பணிகளில் ஆற்றல்களை வளர்த்து கொள்வதற்கான தகுந்த ஏற்பாடுகளை உருவாக்கி தருகிறது. இந்த ஏற்பாடுகள் சர்வதேச அமைப்புகள் மற்றும் அதன் தேவைக்கானவை, தேசிய அமைப்புகளுடன் கலந்தாலோசித்த பிறகே இவற்றை ஐ.நா. உறுப்பினராக்குகிறது.

**சர்வதேச பொதுமன்னிப்புச் சபை:**

சர்வதேச பொது மன்னிப்புச் சபை ஆனது மிகப் பெரிய சர்வதேச அரசு-சாரா நிறுவனங்களில் ஒன்று. இதன் பணியானது உலகம் தழுவிய அளவில் மனித உரிமைக்கான பிரகடனம் (UDHR) மற்றும் பிற சர்வதேச மனித உரிமைகளுக்கான கருவிகளை கொண்டு எல்லா விதமான மனித உரிமைகளையும் மேம்படுத்துவதற்கான உலக அளவிலான பிரச்சார இயக்கத்தினை மேற்கொள்கிறது. இது உலகின் 150-க்கும் மேற்பட்ட நாடுகளில் 2.2 மில்லியன் மக்களை தனது உறுப்பினராகவும், கையெழுத்திட்டவர்களாகவும் மற்றும் ஆதரவாளராகவும் கொண்டிருக்கிறது. சர்வதேச பொது மன்னிப்புச் சபை ஆனது 1961-இல் இலண்டனில் அதன் ஸ்தாபனரான பீட்டர் பென்சன்-ஆல் தோற்றுவிக்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டு சர்வதேச பொது மன்னிப்புச் சபை ஆனது சித்தரவதைகளுக்கு எதிரான தனது பிரச்சாரத்திற்காக நோபல் பரிசை பெற்றது.

சர்வதேச பொது மன்னிப்புச் சபையின் முக்கிய குறிக்கோள்கள் சிலவற்றை கீழே காண்போம்.

- ❖ பெண்களை பாதுகாத்தல்.
- ❖ குழந்தைகளை பாதகாத்தல்.
- ❖ சித்தரவதைகள் மற்றும் படுகொலைகளை முடிவுக்கு கொண்டு வருதல் (சட்டத்திற்கு புறம்பாக மக்களை சித்திரவதை செய்தல்).
- ❖ கைதிகளின் கருத்துரிமையை பாதுகாத்தல் (உணர்வுகள், கருத்துகளுக்கான சுதந்திரம் மற்றும் கருத்துரிமைக்காக கைது செய்யப்பட்டவர்களை விடுவித்தல்)
- ❖ அகதிகளை பாதுகாத்தல்.
- ❖ உடல் மற்றும் உளவியல் ரீதியான மனித உரிமை மீறல்களிலிருந்து விடுவித்து பாதுகாத்தல்.
- ❖ கைதிகளுக்கான, மரணதண்டனை, சித்திரவதைகள் மற்றும் கொடூரதண்டனை முறைகளை ஒழித்தல்.
- ❖ அரசியல் கைதிகளுக்கான வெளிப்படையான விசாரணை (வெளிப்படையான மற்றும் விரைவான).
- ❖ எல்லா விதமான பாகுபாடுகளையும் முடிவுக்கு கொண்டு வருவது குறிப்பாக பால், இனம், மதம், மொழி, அரசியல் கருத்துகள், தேசியம் (அல்லது) சமூக தோற்றம் மற்றும் பிற.
- ❖ உலக ஆயுத வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவது.
- ❖ மேலே குறிப்பிட்ட பணிகளுடன் கூடுதலாக சர்வதேச பொது மன்னிப்புச் சபை ஆயத மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் மக்களை பாதுகாத்தல், அரசியல் படுகொலைகள், சட்டத்திற்கு புறம்பான படுகொலைகள், காணாமல் போக செய்தலை முடிவுக்கு கொண்டு வருதல் சர்வதேச மனித உரிமை அளவீடுகளில் குறிப்பிட்டுள்ள படிகைதிகக்கான உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் சிறார்களை படை வீரர்களாக இணைத்து கொள்வதை தடுத்தல் போன்ற பல பணிகளையும் மேற்கொள்கிறது.

**மனித உரிமை கண்காணிப்பகம்:**

1978இல் தோற்றுவிக்கப்பட்ட மனித உரிமை கண்காணிப்பகமானது துவக்கத்தில் ஐரோப்பா மற்றும் ஆசிய பகுதிகளின் "ஹெல்சிங்கி வாட்ச்" ஆக அறியப்பட்டது. இது ஓர் சர்வதேச லாப நோக்கம் இல்லாத அரசு – சாரா நிறுவனமாகும். இதன் ஊழியர்களாக மனித உரிமையில் மிகவும் திறமை பெற்றவர்கள் பல்வேறு நாடுகளில் புகழ் பெற்ற அறிஞர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் பல்வேறுபட்ட பின் புலங்களில் தேசங்கடந்த செயல்பாட்டாளர்களைக் கொண்டுள்ளது. மனித உரிமை கண்காணிப்பகத்தின் மிக துல்லியமான ஆய்வுகள், பாரபட்ச மற்ற அறிக்கைகள், ஊடகங்களுக்கும் மேலும் உள்ளூர் மனித உரிமை குழுக்களுக்கும் மிகவும் பயன் உள்ளதாக அறியப்படுகிறது. உலகின் 90-க்கும் மேற்பட்ட நாடுகளின் மனித உரிமை நடவடிக்கைகளைக் குறித்த 100-க்கும் மேற்பட்ட அறிக்கைகளை

வெளியிட்டுள்ளது. மனித உரிமை கண்காணிப்பகம் தனது கொள்கை அறிக்கையில் ‘‘மனித உரிமை கண்காணிப்பகமானது உலகளவில் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும்.

**மனித உரிமை கண்காணிப்பகத்தின் சாதனைகள்:**
மனித உரிமை இயக்கங்களுக்கு பங்களித்தல் மற்றும் கொடுமைகளை முடிவுக்கு கொண்டு வருதல் போன்றவற்றில் சிறப்பான செயல்பாட்டிற்காக மனித உரிமை காண்காணிப்பகத்திற்கு ஐ.நா. விருது வழங்கப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் இந்த விருது, சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 60ஆம் ஆண்டு கொண்டாட்டத்தின் போது 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் -10 ஆம் தேதி அமெரிக்காவின் நியூயார்க்கில் மனித உரிமை கண்காணிப்பகத்திற்கு வழங்கப்பட்டது.

நாங்கள் மனித உரிமை மீறல்கள் குறித்த மிகவும் பொறுப்புமிக்க ஆய்வினை மேற்கொண்டு அதற்கான காரணங்களை பரந்த அளவில் வெளிப்படுத்துகிறோம். இதன் நோக்கம் உரிமைகளை மதித்து நீதியை பாதுகாப்பதற்கான அதிகாரப்பூர்வ அழுத்தத்தைக் கொடுப்பதே ஆகும்.

**ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் அவை (UNHRC)**

- ❖ இது உலக அளவில் மனித உரிமையை பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் 2006-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சிறப்பு நிபுணத்துவம் கொண்ட நிறுவனமாகும்.
- ❖ இந்த அவை 47- உறுப்பினர்களை கொண்டதாக இருக்கிறது. உறுப்பினர்கள் பொது அவையால் ஆண்டுக்கு ஒரு முறை நேரடியாக, ரகசிய வாக்கெடுப்பு முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், பதவிக்காலம் ஓர் ஆண்டாகும்.
- ❖ சில காலம் முன்பு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அவைக்கு இந்தியாவை, அதிக வாக்குஎண்ணிக்கை அடிப்படையில் பொது அவை தேர்ந்தெடுத்து உறுப்பினராக்கியது.
- ❖ இதன் உறுப்பினர்கள் அனைவரும், புவியியல் ரீதியான சமத்துவ - சுழற்சி அடிப்படையில் ஐக்கிய நாடுகளின் ‘‘மண்டலக் குழுக்கள் முறையில்’’ தேர்வு செய்யப்படுவர்.
- ❖ உறுப்பினர் நாடுகள், இரண்டு முறைக்கு மேல் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் பதவியில் இருக்க முடியாது.

மனித உரிமை கண்காணிப்பகம் சுதந்திரமான ஒரு சர்வதேச அமைப்பாகும். இதன் பணியானது ஒரு செயலாக்கமிக்க இயக்கமாக தனிமனித சுயமரியாதையைப் பாதுகாத்து அனைவருக்குமான மனித உதிமைகளை மேம்படுத்துவதாகும். இதன் மதிப்புமிக்க பணிமனித உரிமைக்கான சர்வதேச நெறிமுறைகள் மற்றம் மனிதநேய சட்டங்களை வழிகாட்டியாகக் கொண்டு தனிமனித சுயமரியாதையைமதிக்கச் செய்வதாகும். மனித உரிமை கண்காணிப்பகம் தனது சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் அரசின் நேரடியான (அ) மறைமுகமான உதவிகளையும் (அ) எந்த தனிப்பட்ட நிதிநிறுவனங்களின் ஆதரவையும் பெறுவதற்காக தனது நோக்கம் மற்றும் சுதந்திரமான செயல்பாடுகளை பாதிக்கும் வகையில் சமரசம் செய்துக் கொள்வது இல்லை. மேலும், இது எந்த அரசியல் சார்பும் இல்லாமல் மற்றும் எந்த பாகுபாடுமின்றி ஆயத மோதல்கள் நடைபெறும் இடங்களில் நடுநிலையோடு பணியாற்றுகிறது.

மனித உரிமை கண்காணிப்பகம் மிகவும் உயர்ந்த நுட்பமான மற்றும் வெளிப்படையான தன்மையை கடை பிடிக்கிறது. குறிப்பாக, பல்நோக்கு பார்வையை வளர்க்கும் விதமாக பிரச்சனைகளை மிகவும் ஆழமாக பகுத்து ஆராய்கிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புமிக்க சாட்சியாளராக கண்காணிப்பகம் தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்வது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மேலும், மனித உரிமை கண்காணிப்பகம் செயல் நோக்கத்துடன் அதன் தாக்கத்தை வெளிப்படுத்துகிறது. மனித உரிமை கண்காணிப்பகம் தற்போது குறிப்பாக ஆயத வியாபாரம் மற்றும் மனித உரிமைகள், குழந்தைகள் உரிமைகள், மாற்றுத்திறனாளி உரிமைகள், சுற்றச்சூழல் மற்றம் மனித உரிமைகள், சுகாதாரம் மற்றும் மனித உரிமைகள், சர்வதேச நீதி, ஓரின சேர்க்கையாளர்கள், தன்பால் இனத்தவர், மாற்றுப்பால் இனத்தவர் உரிமைகள், அகதிகள், தீவிரவாதம் மற்றும் தீவிரவாததடுப்பு நடவடிக்கைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் அவசரகால பிரச்சனைகள் என பல்வேறு கருத்துகள் சார்ந்த துறைகள் அல்லது திட்டங்களை கொண்டு செயல்படுகிறது.

**கிரீன்பீஸ் அமைப்பு:**

இது ஓர் அரசு – சாரா சுற்றுச்சூழல் நிறுவனமாகும். இதன் தலைமையகம் நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் நகரில் உள்ளது. மேலும் 39 நாடுகளில் தனது அலுவலகங்களை கொண்டுள்ளது. சூழலியல் செயல்பாட்டாளர்கள் கனடாவை சார்ந்த இர்விங் ஸ்டோவேமற்றும் அமெரிக்காவின் டோரதி ஸ்டோவே என்ற இருவரால் 1971-ஆம் ஆண்டு இந்த அமைப்பு ஏற்ப்படுத்தப்பட்டது. பல்வகை உயிர்களும், தாவரங்களும் செழித்து வளருமாறு அமைந்துள்ள பூமியின் திறனை காப்பதே இதன் நோக்கமாக இந்த அமைப்பு அறிவித்துள்ளது. உலகம் முழுவதும், வன அழிப்பு, பருவநிலை மாற்றம், அளவுக்கதிகமாக கடல் வளங்களை பயன்படுத்துதல் மற்றும் அணு ஆயுதம் போன்றவற்றிற்கு எதிராக இந்த அமைப்பு பிரச்சாரம் மேற்கொண்டுள்ளது.

இதன் குறிக்கோளை அடைவதற்கு களத்தில் நேரடி செயல்பாடு, ஆராய்ச்சி மற்றும் பரப்புரை என பல வழிமுறைகளை கொண்டுள்ளது. இந்த அமைப்பு எந்த அரசாங்கத்திடமிருந்தும், வர்த்தக நிறுவனங்களிடமிருந்தும் அரசியல் நிறுவனங்களிடமிருந்தும் நிதியை பெறுவதில்லை. மாறாக முப்பது இலட்சத்துக்கும் மேலாக உலகம் முழுவதும் உள்ள ஆதரவாளர்களிடமிருந்தும் அறக்கட்டளைகளிடமிருந்தும் இதற்கான நிதியை பெறுகிறது. ஐ.நா-வின் பொருளாதார மற்றும் சமூக அமைப்பிற்கு ஆலோசனை அளிக்கும் குழுவிலும், சர்வதேச அரசு-சாரா நிறுவனங்களின் அமைப்பின் உறுப்பினராகவும், இந்த கிரீன்பீஸ் அமைப்பு உள்ளது. கிரீன்பீஸ் அமைப்பானது அதன் நேரடி கள செயல்பாட்டிற்காக பாராட்டப்பட்டுள்ளது. உலகில் அனைவரும் அறிந்த ஒரு சுற்றுச்சூழல் அமைப்பாக இது விளங்குகிறது.

**முழுவுரை:**

சர்வதேச அமைப்புகள் சர்வதேச வாழ்க்கைக்கான பொது கருத்தியலாக வளர்ச்சியடைந்துள்ளன. சர்வதேச அமைப்புகளின் பெருக்கம் மற்றும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கிடையே ஒப்பந்தங்கள் ஏற்படுவது என்பது வழக்கமான ஒன்றாக சர்வதேச அரசியலில் காணப்படுகிறது. இது மேலும் அமைப்பியல் ஆக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக சர்வதேச அமைப்புகளின் கொடையாக கடந்த பத்தாண்டுகளாக கோட்பாட்டு ரீதியாக ஏன ˙சர்வதேச அமைப்புகள் நீடிக்கின்றன. என்ற புரிதலையும், அதன் செயல்பாடுகளையும், உலக அரசியலைத் தொடர்ந்து சுத்திகரித்த வண்ணம் என்னதாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன என்பதை அனுபவ முறையினை கொண்டு மேலும் வசதியாக பகுத்தாய்வு செய்கிறது. இது மட்டுமின்றி புதிய வடிவிலான புகுத்தாய்வின் துணைக் கொண்டு சர்வதேச அமைப்புகள் குறித்து படிப்பதற்கான புதிய ஆராய்ச்சிக்கான வடிவங்களை உருவாக்குகின்றது. வரக்கூடிய ஆண்டுகளில் மாணாக்கர்களுக்கு மாறி வரும் சர்வதேச அமைப்புகளின் மரபுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு தேவைப்படுகிறது. மேலும் சர்வதேச அமைப்புகளின் நடைமுறைகள் மற்றும் அதன் ஆற்றல்கள் மிகவும் பரந்த அளவில் மாறிவரும் உலகின் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன.

**அருஞ்சொற்பொருள்:**

- **சர்வதேச தொலைத்தொடர்பு கழகம் (ITU):** முன்பு சர்வதேச தந்தி கழகம் என அழைக்கப்பட்டது. 1865ஆம் ஆண்டு மே-17இல் பாரிசில் நடைபெற்ற சர்வதேச தந்தி கழகத்தின் கூட்டத்தில் உருவாக்கப்பட்டது.

- **சர்வதேச அஞ்சல் கழகம் (UPU):** 1874இல் பேர்ன் ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு தற்பொழுது ஐ.நா-வின் சிறப்பு முகவாண்மையாக உறுப்பு நாடுகளிடையே அஞ்சல் கொள்கையையும், கூடுதலாக உலகஅஞ்சல் சேவையினையையும் ஒருங்கிணைத்து வருகிறது.

- **சர்வதேச அமைதி மாநாடு:** இது 1919ஆம் ஆண்டு ஜனவரி-18இல் முதல் உலகப்போரின் முடிவில் நேச நாடுகளின் சார்பில் அமைதியை மைய அதிகாரமாக கொண்டதாக நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாடாகும். இது வெர்சல்ஸ் அமைதி மாநாடு எனவும் அறியப்படுகிறது. இம்மாநாட்டில் 32-நாடுகள் மற்றம் தேசங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு முக்கிய முடிவாக ‘‘சர்வதேச சங்கத்தை’’ உருவாக்கினர்.

- **சர்வதே நீதிமன்றம் (ICJ):** இது உலகநீதிமன்றம் எனவும் குறிப்பிடப்படுகிறது. இந்நீதிமன்றம் ஐ.நா-வின் நீதித்துறை அமைப்பாகும்.

- **நிரந்தர நீதிமன்றதீர்ப்பாயம் (PCA):** நெதர்லாந்தின் திஹேக் நகரில் அமைந்துள்ள இத்தீர்ப்பாயமானது அரசுகளுக்கு இடையிலான ஓர் அமைப்பாகும்.

- **சர்வதேச சங்கம்:** இது ஓர் அரசுகளுக்கு இடையிலான அமைப்பாகும். முதல் உலகப்போரின் முடிவில் நடந்தபாரிஸ் அமைதிமாநாட்டின் விளைவாக 1920இல் ஜனவரி-10இல் இவ்வமைப்பானது உருவாக்கப்பட்டது. இது உலக அமைதியை பாதுகாப்பதை நோக்கமாக கொண்ட அரசுகளுக்கு இடையிலான முதல் உலகளாவிய அமைப்பாகும்.

- **ஐக்கிய நாடுகள் சபை (UN) :** இது ஓர் அரசுகளுக்கு இடையிலான அமைப்பாகும். தனது நோக்கமாக சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பேணுவது, நாடுகளுக்கு இடையே நட்புறவை வளர்ப்பது, சர்வதேச ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது, நாடுகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைக்கான மையமாக செயல்படுவதாகும்.

- **ஐரோப்பிய ஒத்திசைவு:** இது 1815 - களிலும் 1848 - இடையில் நடந்த ஐரோப்பிய அதிகார சமநிலையினை குறிப்பிடுகிறது.

- **சர்வதேச தொழிலாளர் கழகம் (ILO):** முதல் உலகப்போரினை தொடர்ந்து உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின் முகவாண்மையாக இது தோற்றுவிக்கப்பட்டது.

- **சர்வதேச நிதியம் (IMF):** நிதியம் எனவும் அறியப்படும் இது ஒரு சர்வதேச அமைப்பாகும். இதன் தலைமையகம் வாஷிங்டனில் அமைந்துள்ளது. 189 நாடுகளை உறுப்பினராக கொண்டுள்ள இதன் பணியானது விரைவான உலக பணவியல் ஒருங்கிணைப்பை உருவாக்குவது, நிலையான நிதி செயல்பாட்டை பாதுகாப்பது, உலகம் முழுவதும் வறுமையைக் குறைப்பதுஆகும்.

- **உலகவங்கி (WB):** மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச வங்கியாகவும் அறியப்படும். இது ஒரு சர்வதேச நிதிநிறுவனம் ஆகும். தனது சேவையாக வட்டியில்லாக் கடன்கள் மற்றும் மானியங்களை ஏழை நாடுகளின் அரசிற்கு தேவையான குறிப்பாக மூல தனவளர்ச்சி திட்டங்களுக்கு அளிக்கிறது.

- **ஆசிய உள்கட்டுமான முதலீட்டு வங்கி (AIIB):** இது ஓர் பல்தேசிய வளர்ச்சி வங்கியாகும். இதன் நோக்கம் ஆசிய பசிபிக் பகுதியின் உள்கட்டுமானத்தை வளர்ப்பதாகும். இவ்வங்கி தற்போது 70 உறுப்பினர்களை கொண்டுள்ளது. மேலும் தனது நோக்கத்திற்கு ஆதரவாக உலகம் முழுவதும் 27-உறுப்பினர்களை கொண்டிருக்கிறது.

- **ஆசிய வளர்ச்சி வங்கி (ADB):** மண்டல வளர்ச்சி வங்கியாக 1966-ஆம் ஆண்டுடிசம்பர் 19இல் உருவாக்கப்பட்ட இவ்வங்கியானது பிலிப்பைன்ஸ் மெட்ரோ மணிலாவின் மண்டல்யங் நகரில் தனது தலைமையகத்தை கொண்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியானது தன்னை ஓர் சமூக வளர்ச்சிக்கான அமைப்பாகவரையறுத்து கொண்டு ஆசிய மற்றும் பசிபிக் பகுதியின் வறுமை குறைப்பிற்கான பணியினை ஆர்வமுடன் மேற்கொண்டுவருகிறது.

- **சர்வதேச பொது மன்னிப்புச் சபை:** இது ஓர் மனித உரிமைகளுக்கான அரசு-சாரா அமைப்பாகும். இது உலகம் முழுவதுமாக ஏழு மில்லியன் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை கொண்டுள்ளது. சர்வதேச பொது மன்னிப்புச் சபை 1961-இல் தோற்றுவிக்கப்பட்டது.

- **மனித உரிமை கண்காணிப்பகம் (HRW):** இது ஓர் சர்வதேச அரசு-சாரா அமைப்பாகும். 1978இல் தோற்றுவிக்கப்பட்ட இதன் தலைமையகம் நியூயார்க் நகரில் அமைந்துள்ளது. இது மனித உரிமைகள் குறித்த ஆராய்ச்சியையும் மற்றும் ஆலோசனைகளையும் வழங்கிவருகிறது.

- **சர்வதேச சங்கத்தின் குழு:** இது சங்க நாடுகளின் முக்கிய உறுப்புகளான சட்ட மன்றம், மற்றும் நிரந்தர செயலகம் போன்றவற்றில், மற்றும் நிரந்தர செயலகம் போன்றவற்றில் சட்ட மன்றத்தின் முடிவுகளை நடைமுறைபடுத்துவதற்கான நிர்வாக அமைப்பாகும். இது நான்கு நிரந்தர உறுப்பினர்களை கொண்டுள்ளது. மேலும் சர்வதேச நீதிக்கான நிரந்தர நீதி மன்றம் மற்றும் சர்வதேச தொழிலாளர் கழகம் ஆகிய இரண்டு அமைப்புகளையும் தனக்கு கீழ் கொண்டுள்ளது.

- **பொதுச் சபை:** பொதுச் சபையானது ஐ.நா.வின் ஆறு முக்கிய அமைப்புகளுள் ஒன்று. இது மட்டுமே அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் சம பிரதிநிதித்துவத்தை வழங்குகிறது. மேலும் ஐ.நா-வின் பிரதிநிதியாக முக்கிய பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து முடிவெடுப்பது மற்றும் கொள்கையினை வடிவமைப்பது போன்றவற்றை மேற்கொள்கிறது.

- **மூனிச் மாநாடு:** இம்மா நாடு 1938ஆம் ஆண்டு செப்டம்பர்-28 மற்றும் 29-ஆம் தேதிகளில் மூனிச் நகரில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பிரிட்டன், பிரான்ஸ், மற்றும் இத்தாலி நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் ஜெர்மனியானது செக்கோஸ்லோவியா பகுதிகளை தன்னுடன் இணைத்துக் கொண்டதை ஏற்றுக் கொண்டனர்.

- **அறங்காவலர் குழு:** ஐ.நாவின் ஆறு முக்கிய அமைப்புகளுள் ஒன்றாக சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கைவிடப்பட்ட முந்தைய காலணி பகுதிகளில் சிறந்த நிர்வாகமானது செயல்படுவதற்கு உதவுகிறது. இதன் பகுதியாக இரண்டாம் உலகப்போரினால் பாதுகாக்கப்பட்ட பதினொரு பகுதிகளை அறங்காவலர் குழுவானது கொண்டிருந்தது.

- **சர்வதேச அரசுசாரா அமைப்புகள் (INGO):** அரசுசாரா அமைப்புகளை போன்றே சர்வதேச அமைப்பாக உலக அளவில் பல்வேறு நாடுகளில் காணப்படும் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கான பணியை மேற்கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக அரசுசாரா அமைப்புகள் போன்றே சுற்றுச்சூழல் போன்றவற்றை முதன்மையாக கொண்டு செயல்படுகின்றன.

## 12. சுற்றுச்சூழல் அக்கறைகளும் உலகமயமாக்கலும்

**உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

ஒரு உலகளளாவி தேவையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது தொழில் மயமாக்குதலுக்குப் பிந்தைய அம்சமாகும். காடுகள் அழிப்பு, தொழிற்சாலை மாசு, பசுமைக்குடில் வாயு கசிவுகள், ஓசோன் படலத்தின் துளை, புவி வெப்பமாதல் மற்றும் கடல் மட்டம் தொடர்ந்து உயருதல் போன்றவை முக்கிய சுற்றுச்சூழல் பிரச்சனைகளாகவும் கோருவனவாகவும் இல்லாவிடில் மிக மோசமான எதிர் விளைவுகளை உண்டாக்க கூடியதாகவும் உள்ளன. ஐக்கிய நாடுகள் பொது அவை 1982இல் "இயற்கைக்கான உலக சாசனம்" என்ற பிரகடனத்தை வெளியிட்டது. அதில் ஒட்டுமொத்த மனித குலமும் இயற்கையின் அங்கம் எனவும், இயற்கையைச் சார்ந்தே வாழ்க்கை அமைகிறது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. வளம் குன்றா வளர்ச்சி என்ற கருத்துருவின் அடிப்படையிலேயே சுற்றுச்சூழல் அமைப்பு குறித்த தற்கால விவாதங்கள் முன் வைக்கப்படுகின்றன. இவை சுற்றுச்சூழல் மாசுவை தடுக்க உயிர் பன்மையத்தை பராமரித்தல், சதுப்பு நிலப்பகுதிகளை பாதுகாத்தல், சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுதல் ஆகியவற்றிற்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றன. உலக அளவில் உலக சுற்றுச்சூழல் ஆளுகையின் அரண் காப்பாளராக ஐக்கிய நாடுகள் அவை செயல்படுகிறது. அதன் அங்கங்கள் மற்றும் பல்வேறு சிறப்பு முகமைகள் மூலமாக செயல்படுத்தகிறது.

* சீனா
* அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள்
* ஐரோப்பிய ஒன்றியம்
* இந்தியா
* ரஷ்யா
* ஜப்பான்
* ஜெர்மனி
* ஈரான்
* சவுதி அரேபியா
* தென் கொரியா

**நிறுவனப்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பினை உருவாக்குதல்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பராமரித்தலுக்கான விவாதத் தலைப்புகள் என்பது மனித வாழ்க்கைக்கும், சுற்றுச்சூழல் அமைப்பிற்கும் நிலவும் குழப்பமான உறவு நிலைகளிலிருந்து எழுகிறது. இயற்கை தன்னளவில் ஒரு வாழ்க்கை ஆதார அமைப்பு என்ற அளவில் சுற்றுச்சூழல், அமைதி,மோதல், மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு தளங்களில் ஊடாட்டங்களை நிகழ்த்துகிறது. உயிர் வாழ்வை நிலைத்திருக்க செய்வதில் இயற்கை நிகழ்த்தும் பங்களிப்பிற்கு மாற்று கிடையாது. இதனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நிறுவனப்படுத்தப்பட்ட அணுகுமுறை என்பது மிகவும் அவசியமான ஒன்றாக கருதப்படுகிறது. இதற்கான ஒரே வாய்ப்பாக சுற்றுச்கூசூழல் சட்டம் உருவானது.

சுற்றுச்சூழல் சமநிலைக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை இச்சட்டம் செயல்படுத்தும். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் உலகளாவிய ஆர்வம் உருவாகியதால் சட்ட வரையறைகளும் நிறுவனப்படுத்தப்பட்ட செயல்பாடுகளும் இருபதாம் நூற்றாண்டின் உருவாக்கமாக இருந்தபோதிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நிறுவனப்படுத்தப்பட்ட அணுகுமுறை எனும் சிந்தனை விதை 1872ஆம் ஆண்டு முதலே விதைக்கப்பட்டது. ஆர்வம் கொண்ட சில தனி நபர்களால் அரசு-சாரா பேரவை ஒன்று இதன் நோக்கில் அப்போது அமைக்கப்பட்டது. இதுதான் பின்னர் பெர்ன் நகரில் ஆலோசனை ஆணையமாக விரிவடைந்து, உலகளாவிய இயற்கை பாதுகாப்பு பிரச்சனைகளை அணுகியது. இருந்தபோதும் முதல் உலகப் போரால் இந்த அமைப்பு முடக்கப்பட்டது. ஆனால்,

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் நாடுகளுக்கிடையேயான முதல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பாக புத்துருவாக்கம் பெற்று தமக்கான சட்ட அங்கீகாரங்களுடன் செயல்பட்டது.

சுவிஸ் லீக் என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இயற்கை பாதுகாப்பிற்கான ∴புரூனன் மாநாடு 1947 இல் நடைபெற்றது. அதில் இயற்கை பாதுகாப்பிற்கான பன்னாட்டு ஒன்றியம் என்ற புதிய அமைப்பிற்கான அமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதில் சுற்றுச்சூழல் செயல்பாடுகளுக்கான விவகாரங்களுக்கான கூடுதலான நிறுவனப்படுத்தப்பட்ட பரிமாணங்கள் உருவாக்கப்பட்டன. ஐக்கிய நாடுகளை பொறுத்தவரை பொருளாதாரம் மற்றும் சமுதாயத்திற்கான குழு (ECOSOC) என்ற ஒரு அமைப்பு மட்டுமே சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் நேரடி தொடர்பு கொண்டுள்ளது. அத்துடன் ஐக்கிய நாடுகள் வரம்புக்குள் உருவாக்கப்பட்டுள்ள தனித்தன்மை கொண்ட எட்டு அமைப்புகள் சுற்றுச்சூழல் அக்கறைகளில் நேரடியாக ஈடுபடுகின்றன. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (UNESCO) 1945 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதுடன் போருக்குப் பிந்தைய காலகட்டம் சுற்றுச்சூழல் பிரச்சனைகளில் உலகநாடுகள் மத்தியில் ஒருமித்த கருத்து உருவாக்குவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. இந்த வளர்ச்சி போக்கை தொடர்ந்து 1948ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இயற்கை பராமரிப்பிற்கான பன்னாட்டு ஒன்றியம் (IUCL) என்ற அமைப்பு ஒரு முக்கியத் திருப்பமாகும். இந்த அமைப்பு உலகளாவிய சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஒரு மேலான நிலைக்கு எடுத்துச் சென்றது.

அதன் பின்னர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பன்னாட்டு சட்டங்களை உருவாக்கும் முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டன. சுற்றுச்சூழல் சட்டம் என்பது அதன் கொள்கைப் பரிணாமங்களை பொறுத்தவரை உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் சிறப்பு மாநாடுகள், பிரகடனங்கள், கொள்கைகள், தீர்ப்பாயர்களின் கருத்துகள், சுற்றுச்சூழல் உரிமைகள், நடவடிக்கைகள் மீதான நாடுகளுக்கிடையேயான பரஸ்பர அங்கீகாரங்கள் ஆகியவற்றின் தொகுப்பாகும். சுற்றுச்சூழல் சட்டத்தின் வெற்றி என்பது ஒரு குறிப்பிட்ட கொள்கை வரம்பிற்குள் சுற்றுச்சூழல் கொள்கை வரம்பிற்குள் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் குறித்த பன்னாட்டு அரசுகளுக்கிடையே ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைவிற்கான ஒரு செயல் திட்டம் உருவாவதைச் சார்ந்துள்ளது.

சுற்றுச்சூழல் ஊடாட்ட மண்டலம் என்பதை நாடுகளின் எல்லைகளுக்குள் மட்டும் வைத்தோ அல்லது நாட்டு எல்லைகளைக் கணக்கில் கொள்ளாமலோ அணுகப்பட முடியாது என்பதன் புரிதலின் அடிப்படையில் பன்னாட்டுப் பொறுப்புணர்வு என்ற கருத்துரு எழுகிறது. வுரைபடவியல் சொற்களில் கூறுவதென்றால் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் நாடுகளின் அரசியல் வரைபடத்தின் மீது நிலவியல் வரைபடத்தை பொருத்துகிறது.

**பன்னோக்கு சுற்றுச்சூழல் மாநாடுகள்**

சுற்றுச்சூழல் செயல் தந்திரம் என்ற அம்சம் 1970-கிளலிருந்து பன்னாட்டு வாதத்தின் முக்கிய துணை அங்கமாக மாறி வருகிறது. உலக நாடுகள் இடையிலான மட்டத்தில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான எண்ணற்ற முயற்சிகள் முறைசார்ந்தும், முறைசாராமலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திசை வழியில் சுற்றுச்சூழல்அக்கறைகளை முன்னெடுத்துச் சென்று ஒருங்கிணைக்கும் முக்கிய கருவியாக ஐக்கிய நாடுகள் செயல்பட்டு வருகிறது என்பதை அழுத்தி கூறத் தேவையில்லை. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக தொடர்ச்சியான மாநாடுகள் மற்றும் கள அறிக்கைகள் மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பரந்துபட்ட செயல்பாடுகள் பாராட்டுகளைப் பெறுகிறது. அவற்றுள் சில இங்கு விவாதிக்கப்படுகின்றன.

**ராம்சர் சிறப்பு மாநாடு – 1971**

ராம்சர் சிறப்பு மாநாடு என்று அழைக்கப்படும் சதுப்பு நிலங்களுக்கான மாநாடு என்பது "உள்ளூர் மற்றும் தேசிய செயல்கள் மூலம் அனைத்து சதுப்பு நிலங்களையும் சமயோசிதமாக அறிவுபூர்வமாக பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல், உலகம் முழுவதும் வளம் குன்றா வளர்ச்சியை எட்டுவதற்காக நாடுகளிடையேயான ஒத்துழைப்பு ஆகிய நோக்கங்களை எட்டுவதற்கான ஒரு பன்னாட்டு உடன்படிக்கை மேற்கொள்ள அழைப்பு விடுத்தது". 1971 ஆம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற இந்த மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவு 1975-ஆம் ஆண்டு நடைமுறைக்கு

வந்தது. இந்த சிறப்பு மாநாட்டிற்கான நிதி நல்கையை யுனஸ்கோ வழங்கியது. சுவிட்சார்லாந்தில் உள்ள கிலாண்ட் நகரில் இயங்கும் இயற்கை பாரமரிப்பிற்கான பன்னாட்டு ஒன்றிய தலைமையக வளாகத்திற்குள் ராமசர் சிறப்பு மாநாட்டு செயல் அலுவலகம் இயங்குகிறது.

2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21ஆம் நாளன்று நடைபெற்ற ராம்சர் சிறப்பு மாநாட்டில் கலந்து கொண்ட தரப்புகள் ராம்சர் செயல் திட்டத்தின் நான்கு அம்சங்களை 2016-2024 காலகட்டத்திற்குள் செயல்படுத்த ஒப்புக்கொண்டுள்ளன. அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 2ஆம் நாளன்று உலக சதுப்பு நிலநாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மான்டிராக்ஸ் (Montreux) ஆவணம் என்பது "பன்னாட்டு முக்கியத்துவம் கொண்ட சதுப்பு நிலங்களில் தொழில்நுட்ப மேம்பாடுகள், மாசுபடுதல், இதர மனித தலையீடுகள் காரணமாக பாதிப்பு ஏற்படும் சதுப்பு நிலங்களை அடையாளம் கண்டு பதிவு செய்யப்படும் பட்டியலின் பதிவேடு ஆகும்". இது ராம்சர் உடன்படிக்கையின் ஒரு அங்கமாகப் பராமரிக்கப்படுகிறது. சிறப்பு மாநாட்டின் மூன்று முக்கிய அம்சங்களின் கீழ் எதிர்நிலை தரப்புகள் கீழ்கண்டவற்றுள் ஒத்துழைப்பு நல்க உறுதி ஏற்றுள்ளன.

1. தமது அனைத்து சதுப்பு நிலங்களையும் அறிவுபூர்வமாக பயன்படுத்துதல்.
2. ராம்சர் பட்டியலின் கீழ் சேர்க்க தகுதி கொண்ட பன்னாட்டு முக்கியத்துவம் கொண்ட சதுப்பு நிலங்களை அடையாளம் கண்டு பிரகடனப்படுத்தி அவற்றின் திறன் மேலாண்மையை உறுதிப்படுத்துதல்.
3. நாடுகளுக்கு இடையேயான சதுப்பு நிலங்கள், பகிரப்படும் சதுப்பு நில அமைப்புகள் மற்றும் ஜீவராசிகளின் பகிர்தல் அகியவற்றில் பன்னாட்டு ஒத்துழைப்பு நல்குதல்.

**உலக தொன்மைச் சின்னங்கள்**
**(வேர்ல்டு ஹெரிடேஜ்) சிறப்பு மாநாடு – 1972**

உலகின் இயற்கையாக அமைந்த தொன்மைச் சின்னங்கள் மற்றும் பண்பாட்டுத் தொன்மை வாய்ந்த சின்னங்களில், உலகளவில் தன்னிகரற்ற மதிப்பீடு கொண்டவை என்று கருதத்தக்க தொன்மைச் சின்னங்களை அடையாளம் கண்டு பாதுகாக்கும் நோக்கில் உலகதொன்மைச் சின்னங்கள் மாநாடு 1972இல் நடைபெற்றது.

இயற்கை மற்றும் பண்பாட்டுத் தொன்மைச் சின்னங்களை அடையாளம் கண்டு யுனஸ்கோ தொன்மைச் சின்னங்களின் பட்டியலில் இணைப்பதற்கான வரம்புகள் மற்றும செயல்முறை வழிகாட்டுதல் வரையறைகளை இச்சிறப்பு மாநாடு வரையறுத்தது. உலகத் தொன்மைச் சின்னங்கள் நிதியின் கீழ் பன்னாட்டு உதவி பெறுவதற்கான தொன்மைச் சின்னங்களை வரையறை செய்தல். அழிந்து வரும் தொன்மைச் சின்னங்களின் பட்டியல் தயாரித்தல். தொல்லியல் இடங்களுக்கான பாதுகாப்பு மற்றும் புதிய கல்வெட்டுகளை பராமரித்தல் ஆகிய வழிகாட்டுதல்களை இது வழங்குகிறது. யுனஸ்கோ தொன்மைச் சின்ன மையத்தின் ஆதரவின் கீழ் உலக தொன்மைச் சின்னங்கள் இக்குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இதற்கான செயல் அலுவலகம் பாரிஸ் நகரத்தில் அமைந்துள்ளது. இக்குழுவிற்கு உதவிட மூன்று தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் - ஐ.யு.சி.என் (IUCN), ஐ.சி.ஒ.எம்.ஒ.எஸ் (ICOMOS) மற்றும் ஐ.சி.சி.ஆர்.ஒ.எம் (ICCROM) அமைக்கப்பட்டுள்ளன.

**மானுட சுற்றுச்சூழலுக்கான ஐ.நா. மாநாடு**

ஸ்டாக்ஹோல்ம் மாநாடு என்று அழைக்கப்படும் மானுட சுற்றுச்சூழலுக்கான ஐ.நா மாநாடு சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கா நடைபெற்று முதல் முக்கிய பல்நோக்கு மாநாடு ஆகம். 1972ஆம் ஆண்டு ஜுன் 5 முதல் 16 வரை ஸ்வீடனில் உள்ள ஸ்டாக்ஹோல்ம் நகரில் நடைபெற்றது. 114 அரசுகளின் பிரதிநிதகள் மாநாட்டில் கலந்து கொண்டனர். உலக நாடுகளின் ஒத்துழைப்புகளின் அடிப்படையில் ஒரு உலகளாவிய சுற்றுச்சூழல் ஆளுகை மண்டலம் அமைப்பதற்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கான உரையாடல் இதில் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் சுற்றுச்சூழல் அரசியலுக்கான ஒரு புதிய தொடக்கம் உருவானது. இவ்வாறாக, இம்மாநாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் நிகழ்ச்சி நிரல் (UNUP) என்ற செயல்திட்ட முன் முயற்சியும் இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது.

**அழிந்துவரும் அரிய வனங்கள் வாழ் நீர் மற்றும் நில உயிரினங்கள் பன்னாட்டு வர்த்தக சிறப்பு மாநாடு – 1978**

இயற்கை பராமரிப்பிற்கான பன்னாட்டு ஒன்றியம் (IUCN) 1973 அன்று நிறைவேற்றிய தீர்மானத்தின் விளைவாக அழிந்துவரும் அரிய உயிரினங்களான வனங்கள் வாழ், நீர் மற்றும் நில உயிரினங்கள், பன்னாட்டு வர்த்தகம் குறித்த சிறப்பு மாநாடு வாஷிங்டனில் நடைபெற்றது. அதில் அழிந்து வரும் அரிய உயிரினங்கள் மற்றும் அவற்றில் இருந்து எடுக்கப்படும் தயாரிப்புகள் ஆகியவற்றின் மீதான பன்னாட்டு வர்த்தகத்தை தடுக்குமாறும் மற்றும் கட்டுபடுத்துமாறும் உலக நாடுகளிடம் வலியுறுத்தப்பட்டன. இது அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்கும் நேரடியான நடவடிக்கை இல்லை எனினும் வணிக நலன்களுக்கான அழிந்து வரும் அரிய உயிரினங்கள் வேட்டையாடப்படுவது மற்றும் அவைகளின் வாழ்விடங்கள் சூறையாடப்படுவது ஆகியவனவற்றைக் குறைக்கும் நோக்கம் கொண்டுள்ளது. பயனர்கள் தேவையைக் குறைப்பதன் மூலம் சட்ட விரோத சந்தைகளை அகற்றும்படி இம்மாநாடு வேண்டுகோள் விடுத்தது. வாஷிங்டன் சிறப்பு மாநாட்டு தீர்மானம் 1975இல் நடைமுறைக்கு வந்தது.

**வலசை செல்லும் உயிரினங்கள் சிறப்பு மாநாடு – 1979**

வலசை செல்லும் உயிரினங்கள் சிறப்பு மாநாடு அல்லது பான் சிறப்பு மாநாடு என்று அழைக்கப்படும் வலசை செல்லும் வனவிலங்குகள் பாதுகாப்பு சிறப்பு மாநாடு (1979) நிறைவேற்றிய தீர்மானம் 1983 முதல் செயல்பாட்டிற்கு வந்தது. இடம் விட்டு இடம் செல்லும் நில, நீர், ஆகாய உயிரினங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தும் இம்மாநாடு வலசை செல்லும் உயிரினங்களை பாதுகாக்க கடுமையான நிபந்தனைகளை முன்மொழிந்தது. வலசை செல்லும் உயிரினங்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த கூட்டு ஆராய்ச்சிகளுடன் கூடிய பன்நோக்கு உடன்படிக்கைகள் இதன் ஒருங்கிணைந்த சட்டபூர்வ அம்சமாகும். இந்த தீர்மானத்தின் இணைப்பு பட்டியல் 1இல் வலசை செல்லும் பறவைகளில் உடனடியான பன்னாட்டு ஒத்துழைப்பு தேவைப்படும் அழிந்துவரும் அரிய உயிரினங்கள் வகைப்படுத்தப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளது. இணைப்பு பட்டியல் 2இல் சிறப்பு அக்கறை கோரும் உயிரினங்களின் பட்டியல் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**ஓசோன் படலம் பாதுகாப்பு வியன்னா சிறப்பு மாநாடு – 1985**

ஓசோன் படலம் பாதுகாப்பிற்கான வியன்னா சிறப்பு மாநாடு என்பது ஒரு பன்நோக்கு சுற்றுச்சுசூழல் உடன்படிக்கையாகும். புவியின் ஓசோன் படலம் பாதுகாப்பு குறித்த உலகளாவிய ஒத்துழைப்பை இம்மாநாடு தொடங்கி வைத்தது. இத்தீர்மானம் 1985 மார்ச் 22 ஆம் நாளன்று ஏற்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஓசோன் படலத்தை அரிக்கும் பொருட்கள் குறித்த மாண்ட்ரியல் ஒப்பந்தம் 1987 செப்டம்பர் 16ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்டு 1989இல் அமலுக்கு வந்தது. இந்த பன்னாட்டு ஒப்பந்தம் ஓசோன் படலத்தை அரிக்கும் பொருட்களை அகற்றும் நடவடிக்கைகளை கண்காணிக்கிறது. கென்யாவில் உள்ள நைரோபியில் அமைந்துள்ள இதன் தலைமைச்செயலகம் வியன்னா சிறப்பு மாநாடு மற்றும் மாண்ட்ரியல் ஒப்பந்தம் இவ்விரண்டுக்குமான செயலகமாக இயங்குகிறது.

**சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான உலக ஆணையம் - 1987**

சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான உலக ஆணையத்தின் முதல் முதல் தலைவராக பணியாற்றிய குரே ஹார்லெம் புருண்டிட் லேண்ட். அவர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளம் குன்றா வளர்ச்சி ஆகியவனவற்றிக்கான செயல் திட்டங்களை வகுத்த தந்தமையால் புருண்டிட் லேண்ட் ஆணையம் என்று அழைக்கப்படுகிறது. “நமது பொதுவான எதிர்காலம்” என்னும் தலைப்பிலான அதன் இறுதி அறிக்கை 1987இல் பதிப்பிக்கப்பட்டது. அது சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆற்றல் உற்பத்தி போன்ற இதர அம்சங்களோடும் பிணைக்கப்பட்டுள்ளதை அழுத்திக் கூறியது. இதன் மூலம் இந்த ஆவணமே பன்னாட்டு சுற்றுச்சூழல் சட்டமாக இன்று வரை பின்பற்றப்படுகிறது. இந்த முன்னெடுப்பின் மூலமாகவே வளம் குன்றா வளர்ச்சி எனும் கருத்தியல் முதல் முறையாக அலுவல் பூர்வமாக வரையறை செய்யப்பட்டது.

**கேடு விளைவிக்கும் கழிவுகளின் எல்லை கடந்த நடமாட்டம் குறித்த பாஸெல் சிறப்பு மாநாடு – 1989**

1992இல் அமுலுக்கு வந்த பாஸெல் சிறப்பு மாநாட்டுத் தீர்மானம் வளர்ந்த நாடுகள் கடைபிடித்த ‘எனது கொல்லைபுறத்தில் இல்லை’ (Not in my backyard - NIMBY) அறிகுறிக்கான எதிர்வினையாகும். 1980-களில் உற்பத்தி பெருக்கத்தின் காரணமாக ஆபத்து விளைவிக்கும் ரசாயனக் கழிவுகளைத் தமது நாடுகளில் சேமிப்பதை கைவிட்டு அதை ஒரு சந்தையாக்கி சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறைந்த ஏழை நாடுகளில் (LDC) கொட்டும் போக்கு அதிகரித்தது. இதனை எதிர்க்கும் மக்களின் போராட்டம் அதிகரித்ததின் காரணமான இப்பிரச்சனை கவனத்தில் கொள்ளப்பட்டது. குறிப்பாக இது ஒரு லாபம் தரும் தொழிலாக மாறயதால் வளர்ந்த நாடுகளில் உற்பத்தியாகும் கேடு விளைவிக்கும் கழிவுப்பொருட்களைக் கொள்முதல் செய்வதில் ஏழை நாடுகளிடையே போட்டி ஏற்பட்டது. இதனால் வளர்ந்த நாடுகளில் இதற்கான செலவுகள் குறைந்தன. இதுவே‘எனது கொல்லைபுறத்தில் இல்லை’ அறிகுறியாகும். இத்தகைய கழிவுகள் உருவாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் வளர்ந்த நாடுகளில் இருந்து ஏழைநாடுகளுக்கு இத்தகைய கழிவுகளைக் கொண்டு செல்வதைச் சட்ட பூர்வமாகத் தடுப்பது ஆகிய நடவடிக்கைகளை பாஸெல் சிறப்பு மாநாடு வலியுறுத்துகிறது.

**சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான ஐ.நா. மாநாடு - 1992**

புவி உச்சி மாநாடு என்று சிறப்பாக அழைக்கப்படும் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான ஐ.நா மாநாடு ரியோ-டி-ஜெனிரோ நகரில் 1992-ஆம் ஆண்டு ஜூன் 3 முதல் 14 வரை நடைபெற்றது. பன்னாட்டு மாநாடுகள் வரலாற்றில் இந்த உச்சிமாநாடுதான் மிகப்பெரிய பன்னாட்டு மாநாடு என்று புகழப்படுகிறது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அதிகரித்தலுக்கான தேவை, மாற்று ஆற்றல் வளங்கள் மற்றும் போக்குவரத்து அமைப்புகள் முதல் உற்பத்தி வரையறைகள் வரையிலான பல முக்கிய பிரச்சனைகளில் இம்மாநாடு கவனம் செலுத்தியது. இந்த இரு வார உச்சி மாநாட்டின் விளைவுகளாக நிரல் 21, சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த ரியோ பிரகடனம், வனக்கொள்கை வழிகாட்டு ஆவணம், காலநிலை மாற்றத்திற்கான ஐ.நா வரையறை அமைப்பு சிறப்பு மாநாடு, உயிரியல் பன்மைத்துவத்திற்கான ஐ.நா சிறப்பு மாநாடு ஆகிய முக்கிய மாநாடுகளும் ஆவணங்களும் உருவாக்கப்பட்டன. ரியோ உச்சி மாநாட்டின் விளைவாக வளம் குன்றா வளர்ச்சி ஆணையம், வளம் குன்றா வளர்ச்சிக்கான ஊடாட்டமுகமை குழு, வளம் குன்றா வளர்ச்சிக்கான உயர்நிலை ஆலோசனை வாரியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இந்த மாநாடு ‘உலகின் நாடாளுமன்றம்’ என்று சிறப்பிக்கப்படுகின்றது.

**பாலைவனமாதலை தடுப்பதற்கான ஐ.நா சிறப்பு மாநாடு – 1994**

நீடித்த நிலவள மேலாண்மையை கருத்தில் கொண்டு சுற்றுச்சூழல், வளர்ச்சி ஆகிய இரண்டையும் இணைக்கும் வகையிலான ஒரே சட்டப்பூர்வ பன்னாட்டு நடவடிக்கையாக பாலைவனமாதலை தடுப்பதற்கான ஐ.நா சிறப்பு மாநாடு 1994இல் நடைபெற்றது. இது வறண்ட நிலங்கள் என்று அறியப்படும் நீர் பிடிப்பற்ற உலர் நிலங்கள், சேற்று நிலங்கள், அரைகுறை சேற்று நிலங்கள் போன்ற எளிதில் பாதிப்புக்குள்ளாகும் உயிர் மண்டலங்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி மாநாடு கவனம் செலுத்தியது. இதற்காக 2018-2030 செயல் திட்ட சட்டகம் உருவாக்கப்பட்டு இம்மாநாட்டில் ஏற்கப்பட்டது. இதில் ‘நிலம் மாசுபடுதல் சமநிலை’ பற்றிய (LDN) வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டன. மண் வளத்தை மீட்டுருவாக்கம் செய்து அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளாக இந்த வழிகாட்டுதல்கள் அமைந்துள்ளன. ஜெர்மனி பான் நகரில் 1999இல் இதன் செயலகம் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. 2001 முதல் இந்த அமைப்பின் உச்ச கொள்கை முடிவு எடுப்பாளர்களான தரப்புகளின் மாநாடு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை நடைபெறுகிறது, இதுவரை 13 மாநாடுகள் நடைபெற்றுள்ளது. அங்காரா மற்றும் சாங்வாங் முன்னெடுப்புகள் அண்மைகால நடவடிக்கைளாகும்.

**சுற்றுச்சூழலுக்கான ஐ.நா பொது அவை சிறப்பு அமர்வு – 1997**

புவி உச்ச மாநாடு பிரகடனம் நிரல் 21 செயல் திட்டம் எவ்வாறு அமலாக்கப்படுகிறது என்பதையும் அதன் முன்னேற்றத்தையும் சீராய்வு செய்வதற்கான சிறப்பு அமர்வு ஒன்றினை 1997 ஜூன் 23 – 27 ஆகிய தேதிகளில் ஐ.நா பொது அவை ஏற்பாடு செய்தது. இந்த சிறப்பு அமர்வில் நிரல் 21 செயல் திட்டத்ததை உலக நாடுகள் எவ்வாறு பின்பற்றி வந்துள்ளது என்பதை மதிப்பீடு செய்ததுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை மேலும் தீவிரப்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை தீவிரப்படுத்துகிறது. இந்த சிறப்பு அமர்வு 'புவி உச்சி மாநாடு + 5' என்று அழைக்கப்படுகிறது. "நிரல் 21 அமலாக்க முன்னெடுப்புகளுக்கான உறுதிமொழியுடன் கூடிய செயல் திட்டம்" ஒன்றினை இந்த உச்சி மாநாடு நிறைவேற்றியது.

**கியோட்டோ ஒப்பந்தம் - 1997**

கியோட்டோ பரஸ்பர ஒப்பந்தம் 1997 டிசம்பர் 11 அன்று ஏற்கப்பட்டது இது (1992) வரம்புகளை விரிவுபடுத்தும் பன்னாட்டு சுற்றுச்சூழல் உடன்படிக்கையாகும். இதன் மூலம் கையெழுத்திட்ட உறுப்பு நாடுகள் பசுமைக் குடில் வாயு வெளியேற்றத்தை குறிப்பிட்ட அளவிற்கு குறைப்பதாக சட்டப்பூர்வ கடமைப்பாட்டினை குறைப்பதாக சட்டப்பூர்வ கடமைப்பாட்டினை உறுப்பு நாடுகள் ஏற்கச் செய்யப்பட்டது. இது 2005 பிப்ரவரி 16 முதல் அமலாக்கப்பட்டது. பசுமைக்குடில் வாயுக்கள் கட்டுப்படுத்துதல் குறித்த வளர்ந்த நாடுகள் பொறுப்புணர்வு குறித்து இந்த உடன்படிக்கையில் திட்டவட்டமாக வலியுறுத்திக் கூறப்பட்டது. அதிக பசுமைக்குடில் வாயுக்கள் வளர்ந்த நாடுகளே வெளியிடுகின்றன என்ற அடிப்படையில் "பொதுவான ஆனால் வேறுபாட்டுடன் பொறுப்புணர்வுகள்" என்ற கொள்கையின் கீழ் வளர்ந்த நாடுகள் பொறுப்பாளிகளாக்கப்பட்டன. இது முதல் உறுதிமொழி எனப்படுகிறது. 2007 இல் மொராக்கோ, மர்ரகேஷ் எனும் நகரில் நடைபெற்ற COP 7 ஒரு விரிவான செயல் திட்டத்தினை உருவாக்கியது. இது மர்ரகேஷ் ஆவணங்கள் என்று அழைக்கப்படுகிறது. 2012இல் கத்தார் தலைநகர் தோகாவில் டிசம்பர் 8இல் நடைபெற்ற உச்சி மாநாட்டில் ஒப்பந்தம் விரிவுபடுத்தப்பட்டது.

தோகா திருத்தம் 2ஆம் உறுதிமொழி எனப்படுகிறது. இதன்படி இணைப்பட்டியல் 1இல் இடம்பெற்ற நாடுகள் 2013 ஜனவரி 1 முதல் 2020 டிசம்பர் 31 வரை 2-வது உறுதிமொழியை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் ஒப்பந்தத்தின் பல்வேறு விதிகளிலும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இதன்படி, பட்டியல் இடப்பட்ட நாடுகள் பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேற்றம் கட்டுபடுத்துதல் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும. முதல் உறுதிமொழியின்படி பசுமைக் குடில் வாயுக்கள் வெளியேற்றம் 1990-களில் இருந்த அளவை விட ஐந்து விழுக்காடு குறைக்கப்பட வேண்டும். ஆனால் இரண்டாம் உறுதிமொழி படி குறைக்கப்பட்ட அளவை விட மேலும் எட்டு விழுக்காடு குறைக்கப்பட வேண்டும். இதையெட்டி இந்த இலக்குகளை எட்டும் வகையில் மூன்று சந்தை அடிப்படையிலான செயல் அமைப்புகள் அடையாளம் காணப்பட்டன. அவை பன்னாட்டு மாசு வெளியேறுதல் வணிகம், தூய வளர்ச்சி செயல் அமைப்பு, கூட்டு அமலாக்கம் ஆகிய இம்மூன்று அமைப்புகளும் பசுமை முதலீட்டிற்கு ஆதரவு வழங்கி மாசு வெளியேறுதல் இலக்குகளை அடைவதற்கான சிக்கனமான வழிவகைகளை வழங்குகின்றன.

**வளம் குன்றா வளர்ச்சி குறித்த உலக உச்சி மாநாடு – 2002**

ஐ.நா ஆதரவுடன் நடைபெற்ற வளம் குன்றா வளர்ச்சி குறித்த உலக உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்கா தலைநகர் ஜோகன்ஸ்பெர்க் நகரில் 2002 ஆகஸ்ட் 26 முதல் செப்டம்பர் 6 வரை நடைபெற்றது. சுற்றுச்சூழல் மண்டலத்தைப் பாதிக்கும் புதிய சவால்கள் மற்றும் அக்கறைகளை பட்டியலிடுவதில் இம்மாநாடு தொடர் கவனம் செலுத்தியதால் இம்மாநாடு புவி உச்சிமாநாடு என்றழைக்கப்படுகிறது. புதிய வடிவத்தில் புதுபிக்கப்பட்டுள்ள இந்த சுற்றுச்சூழியல் வாரம் புத்தாயிரம் ஆண்டுக்கான சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கான நீடித்த வளர்ச்சியுடன் கூடிய ஒரு வழித் திட்டத்தை வழங்கியது. இந்த உச்சிமாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஆவணமான வளம் குன்றா வளர்ச்சி குறித்த ஜோகன்ஸ்பெர்க் பிரகடனம் கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட பன்னோக்கு முன் முயற்சிகளின் அடிப்படைகளுக்கு மறு அழுத்தம் வழங்கியது. நிரல் 21 உள்ளிட்ட ஏராளமான உடன்படிக்கைகளின் மீது உறுப்பு நாடுகள் கால வரையறைப்படுத்தப்பட்ட செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை இப்பிரகடனம் சுட்டிக்காட்டியது. இருப்பினும், ஒரு புதிய தன்-ஏற்பாட்டினை உருவாக்குவதில் பல தரப்புகளிலிருந்து எழுந்த கடுமையான கருத்து முரண்பாடுகளின் விளைவாக இம்மாநாடு ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லை.

## வளம் குன்றா வளர்ச்சி குறித்த ஐ.நா மாநாடு – 2012

ரியோ+ 20 என்று அழைக்கப்படும் வளம் குன்றா வளர்ச்சி குறித்த ஐ.நா மாநாடு பிரேசில் நாட்டில் ரியோ-டி-ஜெனிரோ நகரில் 2012 ஜூன் 20-22 தேதிகளில் நடைபெற்றது. ஒரு தன்னோக்கம் கொண்ட வளம் குன்றா வளர்ச்சித் திட்டத்தினை உருவாக்குவதில் சமரசமற்ற உறுதியுடன் நின்றதால் வளம் குன்றா வளர்ச்சி இலக்குகளை (SDG) புத்தாயிரம் மேம்பாட்டு இலக்குகளுடன் (MDG) இணைப்பதற்கான ஒரு செயல்முறையை உருவாக்குவதில் கவனம் செலுத்தியது. மேலும் பசுமை பொருளாதார கொள்கைகளுக்கான வழிகாட்டுதல்கள் ஏற்கப்பட்டது. ரியோ+ 20 மாநாட்டின் திருப்புமுனையாகும். மேலும் ஐ.நா பொது அவையின் கீழ் அரசுகளுக்கிடையேயான செயல்முறை குழு ஒன்றினை உருவாக்கியது இம்மாநாட்டின் வெற்றியாகும். இக்குழு நிதி, வளம் குன்றா வளர்ச்சி ஆகியன குறித்த ஒரு செயல் திட்டத்தை உருவாக்குவதை நோக்கமாக கொண்டிருந்தது. வளம் குன்றா வளர்ச்சிக்கான ஒரு உயர்மட்ட அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான ஒரு உடன்படிக்கைய எட்டியது ஒரு சாதனையாகும். “எதிர்காலம் நம் விருப்பம்” எனும் கருப்பொருளில் மாநாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

## ஐ.நா வளம் குன்றா வளர்ச்சி உச்சி மாநாடு – 2015

ஐ.நா பொது அவையில் உயர்மட்ட பிளீனக் கூட்டமாக கூட்டப்பட்ட ஐ.நா வளம் குன்றா வளர்ச்சி மாநாடு 2015, செப்டம்பர் 25 – 27 தேதிகளில் ஐ.நா நியூயார்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் 2015-க்கு பிறகான செயல்நிரல் ஏற்கப்பட்டு “மாறும் நம் உலகம்: வளம் குன்றா வளர்ச்சிக்கான செயல்நிரல் 2030” எனும் தலைப்பில் பிரகடனமாக வெளியிடப்பட்டது. 17 வளம் குன்றா வளர்ச்சி இலக்குகள் (SDG) மற்றும் 169 துணை இலக்குகள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக இப்பிரகடனம் அமைந்தது. இந்த இலக்குகள் 2016இல் அமலுக்கு வந்தது. 2030 வரை வளம் குன்றா வளர்ச்சி செயல்பாடுகளை இந்த இலக்குகள் வழி நடத்தும்.

| **வளம் குன்றா வளர்ச்சி இலக்குகள்** | |
|---|---|
| இலக்கு 01 | அனைத்து இடங்களிலும், அனைத்து வடிவங்களிலும் வறுமையை ஒழிப்பது. |
| இலக்கு 02 | பசிக்கு முடிவு கட்டுதல், உணவு பாதுகாப்பு எட்டுதல், நுண்ணூட்டச்சத்து மற்றும் வளம் குன்றா வேளாண்மையை ஊக்கப்படுத்துதல். |
| இலக்கு 03 | சுகாதார வாழ்வை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைத்து வயதைச் சேர்ந்த அனைவருக்கும் நல்வாழ்வை ஊக்கப்படுத்துதல் |
| இலக்கு 04 | அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவமான தரமான கல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவரும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான வாய்ப்பினை ஊக்கப்படுத்துதல். |
| இலக்கு 05 | பாலின சமத்துவத்தை எட்டுதல் மற்றும் அனைத்து பெண்கள், சிறுமிகளை அதிகாரப்படுத்துதல். |
| இலக்கு 06 | அனைவருக்கும் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை கிடைக்கச் செய்தல்; அனைவருக்குமான வளம் குன்றா நீர் மேலாண்மையை உறுதிப்படுத்துதல். |
| இலக்கு 07 | எளிதில் பெறதக்க, நம்பகமான, வளம் குன்றா, நவீன ஆற்றல்கள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துதல். |
| இலக்கு 08 | நீடித்த, உள்ளடக்கிய, வளம் குன்றா பொருளாதார வளர்ச்சி, முழுமையான மற்றும் உற்பத்திசார்ந்த வேலைவாய்ப்பு, அனைவருக்குமான நாகரிகமான வேலை ஆகியவனவற்றை முன்நிலைப்படுத்துதல். |
| இலக்கு 09 | பொருத்தமான உள்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளிணைக்கப்பட்ட வளம் குன்றா தொழில் மயமாக்குதலை முன்நிலைப்படுத்துதல், படைப்பூக்கத்தை ஆதரித்தல். |
| இலக்கு 10 | நாடுகளுக்கிடையிலும், நாடுகளுக்குள்ளும் ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல். |
| இலக்கு 11 | உள்ளிணைக்கப்பட்ட பாதுகாப்பான உறுதிமிக்க வளம் குன்றா முறையில் நகரங்களையும், மக்கள் குடியிருப்புகளையும் அமைத்தல். |
| இலக்கு 12 | வளம் குன்றா நுகர்வு முறையையும், உற்பத்தி முறைகளையும் உறுதிப்படுத்துதல். |

| | |
|---|---|
| இலக்கு 13 | காலநிலை மாற்றம் பாதிப்புகளை எதிர்கொள்ள உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| இலக்கு 14 | வளம் குன்றா வளர்ச்சி உறுதிப்படுத்தும் வண்ணம் பெருங்கடல்கள், கடல்கள் மற்றும் கடல்நீர் மூலவளங்கள் ஆகியவனவற்றை நீடித்த அளவில் பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தல். |
| இலக்கு 15 | நிலப்பரப்பு சார்ந்த உயிர்மண்டலங்களை பாதுகாத்தல், புத்தாக்கம் செய்தல் மற்றும் நீடித்த பயன்பாட்டினை முன்னிலைப்படுத்துதல், வனங்களில் வளம் குன்றா அளவில் பராமரித்தல், வன அழிப்பை தடுத்தல், நில மாசினை தடுத்தல், புத்தாக்கம் செய்தல், பல்லுயிர் பெருக்க இழப்புகளை தடுத்தல். |
| இலக்கு 16 | வளம் குன்றா வளர்ச்சியினை முன்னிலைப்படுத்தும் வகையில் அமைதியான உள்ளிணைக்கப்பட்ட சமுதாயங்களை ஊக்கப்படுத்துதல், அனைவருக்குமான நீதி பரிபாலனம் வழங்குதல், அனைத்து மட்டங்களிலும் பொறுப்புமிக்க உள்ளிணைக்கப்பட்ட நிறுவனங்களை உருவாக்குதல். |
| இலக்கு 17 | வளம் குன்றா வளர்ச்சி அமலாக்க உறுப்புகளை வலுப்படுத்துதல், வளம் குன்றா வளர்ச்சிக்கான உலகளாவிய பங்குதாரர் முறையை புத்தாக்கம் செய்தல். |

**பாரிஸ் உடன்படிக்கை 2016**

பாரிஸ் உடன்படிக்கை (பிரெஞ்சு மொழியில் LACCARD) என்பது காலநிலை மாற்றத்திற்கான ஐ.நா வடிவமைப்பு (UNFCC) வரம்பிற்குள் உருவாக்கப்பட்ட பன்னோக்கு உடன்படிக்கையாகும். பசுமைக் குடில் வாயு வெளியேற்றத்தினை குறைப்பதற்கான விரிவான செயல் திட்டத்தினை அது வழங்குகிறது. 2016, ஏப்ரல் 22 ஆம் நாளன்று கையெழுத்தாகி 2016, நவம்பர் 4 ஆம் நாளன்று அமலுக்கு வந்தது. இதன்படி, நிதிநல்கை 2020ஆம் ஆண்டு தொடங்குகிறது. தொழில் மயமாதலுக்கு முந்தைய காலகட்ட உலகளாவிய வெப்பநிலையிலிருந்து 2டிகிரி செல்சியஸ் (3.6 ∴பாரன்ஹீட்) அதிகம் என்ற அளவிற்குள் 2050 ஆம் ஆண்டு முதல் 2100 ஆம் ஆண்டிற்குள் கட்டுப்படுத்த புவி வெப்பத்தை பராமரிப்பதையும் முடிந்தால் 1.5 டிகிரி செல்சியஸ் அளவிற்குள் கட்டுப்படுத்துவதையும் பாரிஸ் உடன்படிக்கை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும் மனித செயல்பாடுகளால் வெளியேற்றப்படும் பசுமைக் குடில் வாயுக்கள் அளவை மரங்களும், மண்ணும், கடல்களும் இயற்கையாகத் திரையிட்டுக் கொள்ளும் அளவுக்கு கட்டுப்படுத்துவதிலும் இம்மாநாடு ஒருமித்த கருத்தை எட்டியது. இதனை உறுப்பு நாடுகள் செயல்படுத்துவதின் மீதான சட்டப்பூர்வ சீராய்வுகளுடன் ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்வது என்று இந்த மாநாடு உறுதி செய்தது. அத்துடன் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தம்மைத் தகவமைத்து கொள்ளும் வகையில் வளர்ச்சி குறைந்த நாடுகள் புதுபிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திக்கு மாறும் காலம் முழுவதும் வளர்ச்சி அடைந்த நாடுகள் "காலநிலை நிதி" உதவிகளை தொடர்ந்து வழங்குவதையும் இம்மாநாடு உறுதிப்படுத்தியுள்ளது. 197 உறுப்பு நாடுகளில் இதுவரை 184 உறுப்பு நாடுகள் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

**பாரிஸ் உடன்படிக்கை மீது இந்தியா அளித்துள்ள உறுதிமொழிகள்**

- இந்த புதிய உலகளாவிய உடன்படிக்கையை செயல்படுத்தும் வண்ணம் 2020-ஆம் ஆண்டிற்கு பின்னர் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள செயல்பாடுகளை ஒவ்வொரு நாடும் தாமாக முன்வந்து உறுதிமொழியாக வழங்கியுள்ளன. இது தேசிய அளவில் வரையறுக்கப்பட்டுள்ள பங்களிப்புகள் திட்டமிடல் (INDC) என்று அறியப்படுகிறது.
- இதன் அடிப்படையில் இந்தியா தாம் மேற்கொள்ளவுள்ள பங்களிப்புகளை உறுதிமொழியாக வழங்கியுள்ளது. அதன்படி, 2030ஆம் ஆண்டிற்குள் ஜி.டி.பி.யில் மாசு அடர்த்தி அளவு 33 – 35 விழுக்காடுக்குள் அதாவது 2005 அளவிற்குள் கட்டுப்படுத்தப்படும் என்று இந்தியா உறுதியளித்துள்ளது. அதேபோல புதைப்படிவம் சாராத மின உற்பத்தி அளவு 2030ஆம் ஆண்டிற்குள் 40 விழுக்காடாக உயர்த்தப்படும் எனவும் உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது. தனது வனப்பகுதிகளின் அளவு 2.5 முதல் 3.0 பில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடு வாயுவை கிரகிக்கும் அளவுக்கு விரிவுப்படுத்தப்படும் (புவி வெப்பமாவதற்கு முக்கிய காரணி கார்பன்-டை-ஆக்சைடு ஆகும்).
- அதே நேரத்தில், காலநிலை இலக்குகளை எட்டுவதற்கு பன்னாட்டு நிதி உதவியும்

தொழில்நுட்ப உதவியும் தேவை என்பதையும் இந்தியா வலியுறுத்தியுள்ளது. இந்த வகையில், இப்பொழுதிலிருந்து 2030ஆம் ஆண்டு வரை காலநிலை மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள குறைந்தபட்சம் 2.5 ட்ரில்லியன் டாலர் (2014-15 ஜூலை நிலவரப்படி) நிதி உதவி தேவைப்படுவதாகவும் இந்தியா கூறியுள்ளது.

**சுற்றுச்சூழல் பிரச்சனைகளில் இந்திய நிலைபாடு**

உலகளாவிய சுற்றுச்சூழல் ஆளுகையில் இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். 1972 ஸ்டாக்ஹோல்ம் மாநாடு முதல் 2015 தில்லி COP 21 வரை இந்தியா ராஜதந்திர அளவிலும் நிர்வாக மூலதன முதலீடு அளவிலும் கவரத்தக்க அளவிலான பங்களிப்பை வழங்கியுள்ளது. ஸ்டாக்ஹோல்ம் மாநாட்டில் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி நிகழ்த்திய உரை இப்பிரச்சனையில் புதிய அரசியல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வை உருவாக்கியது. அதாவது, சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் அம்சங்களைக் கட்டுப்படுத்துவதில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இருக்கும் பொறுப்பினை இந்தியா திட்டவட்டமாகச் சுட்டிகாட்டியது. குறிப்பாக, காலநிலை மாற்றம் தொடர்பாக இந்தியா மேற்கொண்டு வரும் சுற்றுச்சூழல் கொள்கைகளின் அடிநாத கோட்பாடுகளை 1992 ரியோ உச்சிமாநாடு நடைபெற்ற காலத்திலிருந்தே காண முடியும். அந்த மாநாட்டின் பிரகடனமாக ''சமத்துவமற்ற ஓர் உலகில் புவி வெப்பமாதல்'' என்ற அம்மாநாட்டு பிரகடனத்தில் புவி வெப்பமாவதில் முக்கிய காரணியான கார்பன் வெளியேற்றத்தில் பெரும் பங்கு மேற்கத்திய நாடுகளுக்கே உள்ளது என்றும், இதனை ''கார்பன் காலனியாக்கம்'' என்றும் மேற்கத்திய நாடுகள் மீது நேரிடியாகக் குற்றம் சாற்றப்பட்டுள்ளது. இதற்கு இந்திய கொள்கைகளின் செல்வாக்கு ஒரு முக்கிய காரணமாகும். பசுமைக் குடில் வாயுக்கள் வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் சுமை வளரும் நாடுகள் மீது சுமத்தப்படுவதை இந்தியா திட்டவட்டமாக எதிர்த்து வந்துள்ளது. ஏனெனில், கார்பன் வாயு வெளியேற்றத்தில் தெற்கு நாடுகளில் பங்களிப்பு மிக மிகக் குறைவாகும். புவி வெப்பமாதல் உச்ச நிலை அடைவதில் மேற்கத்திய நாடுகளின் பங்களிப்பே அதிகம்.

அதே நேரத்தில் உள்நாட்டு மட்டத்திலும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வகையில் அரசமைப்புச் சட்டம் அளவிலும், சட்டப்பொறுப்புகள் அளவிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக இந்தியாவில் அமலாக்கப்படும் முக்கிய சட்ட ஆவணங்கள் பின்வருமாறு:

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் (1986), வன உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டம் (1972), காற்று மாசு கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல் சட்டம் (1981), நீர் மாசுபடுதல், கட்டுப்படுத்துதல் சட்டம் (1974), இந்தியா வனச் சட்டம் (1927). நாட்டில் சுற்றுச்சூழல் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் முதன்மை முகமையாக மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் செயல்படுகிறது. நீதித்துறை செயல்பாட்டுவாதம் அடிப்படையில் அவ்வபொழுது சுற்றுச்சூழல் பிரச்சனைகளில் தலையிடுவதன்மூலம் இந்திய நீதித்துறையும் ஈடு இணையற்ற பங்களிப்பினை ஆற்றி வருகிறது.

**தேசியப் பசுமை தீர்ப்பாயம்**

தேசியப் பசுமை தீர்ப்பாயம் 2015இல் உருவாக்கப்பட்டு சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த அதீத மாசு வெளியேற்ற வழக்குகளை விசாரித்து வருகிறது.

**சுற்றுச்சூழல் பிரச்சனையில் இந்தியா – உலகநாடுகள் ஒத்துழைப்பு**

சுற்றுச்சூழல் குறித்த பல்நோக்கு சிறப்புப் பேரவைகள், உடன்படிக்கைகள், நிறுவனங்கள் ஆகியவனவற்றில் இந்தியா உறுப்பினராக உள்ளது. சுற்றுச்சூழல் சீர்கேட்டில் மேற்கத்திய நாடுகளுக்கு இருக்கும் வரலாற்றுப்பூர்வ பொறுப்பினை இந்திய அரசு தொடர்ந்து சுட்டிகாட்டி வருவதுடன் தனிநபர் மாசு வெளியேற்றத்தை பொறுத்தவரை இந்தியா மிகக் குறைந்த அளவே வெளியேற்றுவதையும் முன்னிலைப்படுத்தத் தயங்குவதில்லை. தேசிய சுற்றுச்சூழல் கொள்கையில் விளக்கபட்டுள்ளவாறு காலநிலை மாற்ம் என்பது ஒரு மேம்பாட்டிற்கான நிலைப்பாடு என்ற நிலையை வகிக்கிறது. ''தலைமுறைகளுக்கிடையில் சமத்துவம்'' (சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இது முக்கிய நிலைபாடாகும்) எனும் அடிப்படையில் தற்போதைய வாழும் தலைமுயையானது வளர்ச்சி என்பதை

உடனடித் தேவைக்கு மட்டும் என பயன்படுத்தி எதிர்வரும் தலைமுறைகளுக்கு இந்த பூமியை காலநிலை மாற்றப் பாதிப்பு ஏதுமற்ற நிலையில் அளிப்பதாகும்.

பாரிஸ் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட நாடு எனும் அடிப்படையில் உடன்படிக்கையின் சாராம்சத்தை அங்கரிக்கிறது மேலும் "சமத்துவம்" மற்றும் பொது என்பதை இந்தியா மீண்டும் வலியுறுத்துவதுடன் பொறுப்புணர்வுகள் மற்றும் தகுதிநிலை சார்புகள் இடையே வேறுபாடுகள் காணப்பட் வேண்டியதன் அவசியத்தையும் (CBDR-RC) வலியுறுத்துகிறது. கார்பன் மயமாக்கல் குறித்து இந்தியா மேற்கொண்டுள்ள உறுதிப்பாட்டின் காரணமாக, மின் உற்பத்தியில் தனது நிலக்கரி சார்பினைக் குறைத்து, புதுப்பிக்கத்தக்க மின உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்கம் செயல்திட்டத்தைத் தழுவியுள்ளது. 2016ஆம் ஆண்டு இந்திய அரசால் முன்மொழியப்பட்ட கருத்துருவான உலகளாவிய சூரிய ஒளி கூட்டணி ஏற்கப்பட்டதன் மூலம் சுற்றுச்சூழல் செயல்நிரலில் இந்தியாவின் பங்களிப்பு புதிய உச்சத்தை அடைந்துள்ளது.

**உலகளாவிய சூரிய ஒளிகூட்டணி**

- உலகளாவிய சூரிய ஒளிகூட்டணி (ISN) என்பது இந்தியாவால் முன்னெடுக்கப்பட்ட கூட்டணியாகும். இதில் 122 நாடுகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை சூரியஒளி வெப்ப நாடுகளாகும். இவை அனைத்தும் கடக, அட்ச ரேகைகளுக்கு இடையில் அமைந்துள்ள நாடுகளாகும். தற்போது ஐ.நா உறுப்பு நாடுகளாகவும் உள்ளன.
- கூட்டணி நாடுகள் சூரிய வெப்ப ஆற்றலைப் பயன்படுத்துவதை பாரிஸ் பிரகடனம் ஊக்கப்படுத்துகிறது.
- சூரிய ஆற்றல் மூலம் ஆயிரம் GW மின்சக்தி உற்பத்தி செய்வது உலகளாவிய சூரிய ஒளி கூட்டணி (ISN) அமைப்பின் முக்கிய இலக்குகளின் ஒன்றாகும். 2030ஆம் ஆண்டிற்குள் இதற்கான மூலதனமாக 1000 மில்லியன் டாலர் முதலீடுகளை திரட்டுவதும் இதன் நோக்கமாகும்.
- இதனைச் செயல்படுத்துவதற்காக, சூரிய ஆற்றல் அபரிமிதமான உள்ள நாடுகளை ஒருங்கிணைத்து உலகின் மின்தேவையை நிறைவு செய்யவும் இதன் மூலம் மின்சார விலையைக் குறைக்கவும் திட்டமிட்டுள்ளது. ஏற்கெனவே,பயன்பாட்டில் இருக்கும் சூரிய ஆற்றல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது கூட்டு சூரிய மின் உற்பத்தி ஆய்வுத் திட்டங்கள் மற்றும் தகுதிப்படுத்துதல் திட்டங்களையும் ஊக்குவிக்கிறது.
- உலகளாவிய சூரிய ஒளி கூட்டணி (ISN) வரையறை உடன்படிக்கை 2017 டிசம்பர் 6 முதல் செயல்பாட்டிற்கு வந்தது. இதன் சட்டபூர்வ தலைமையகம் இந்தியாவின் குருகிராம் நகரில் பன்னாட்டு அரசுகளுக்கு இடையிலான அமைப்பாக இயங்கி வருகிறது.

**கொச்சி பன்னாட்டு விமான நிலையம்**

கேரளாவில் அமைந்துள்ள கொச்சி பன்னாட்டு விமான நிலையமே முழுமையாக சூரிய ஒளி மின்சாரத்தால் இயங்கும் உலகின் முதல் சூரிய ஒளி மின்சார விமான நிலையமாகும்.

இவ்வாறு சொல் அலங்காரமாக புகழப்படும் போதிலும் இந்தியா உலகின் மோசமான சுற்றுச்சூழல் கொண்ட நாடாகவே இருக்கிறது. உலக நாடுகள் வெளியிடும் சுற்றுச்சூழல் மாசு குறித்த உலக கார்பன் திட்ட அறிக்கை 2018இல் வெளியிடப்பட்டது. இதில் உலகில் அதிக காற்றுச் சூழல் மாசு வெளியிடும் நாடுகள் வரிசையில் இந்தியா நான்காவது இடம் வகிக்கிறது. 2017ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் மாசு அளவில் இந்தியாவின் பங்கு 7 சதவீதமாகும். இதேபோல சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பாகச் செயல்படும் நாடுகளின் வரிசையில் சுற்றுச்சூழல் செயல்பாட்டு வரிசை அறிக்கை 2018இல் வெளியிடப்பட்டது. 180 நாடுகள் இடம்பெற்றுள்ள இவ்வரிசையில் இந்தியா 176-வது இடம் வகிக்கிறது. காற்று மாசுவினால் ஏற்படும் மரணம் அதிகரித்ததாலும் சுற்றுச்சூழல் சுகாதாரக் கொள்கை மோசமாக அமலாக்கப்பட்டதாலும் இந்தியா இந்த கீழ் நிலையை அடைந்துள்ளது.

**நகோயா விதிமுறைகள்**

நகோயா விதிமுறைகள் என்பது 1992 உயிரியல் பன்மைய மாநாட்டு என்பது 1992 உயிரியல் பன்மைய மாநாட்டு முடிவுகளின் கீழ் 2010 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட துணை உடன்படிக்கையாகும். இது உயிரியல் பன்மையத்தை பயன்படுத்தவது குறித்து எழுந்த கேள்விகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உடன்படிக்கையாகும். அதாவது, அணுகுதல் மற்றும் பயனடைதலில் பகிர்தல் (ABS) உடன்படிக்கையான இது நகோயா விதிமுறைகள் என்று அழைக்கப்படுகிறது. மரபியல் மூல வளங்களை நியாயமாகவும், சமமாகவும் அணுகி, பயன்களை நியாயமாகவும், சமமாகவும் பகிர்தல் குறித்த விதிமுறைகளை இது கொண்டுள்ளது.

**நகோயா விதிமுறைகள்**

இந்தியா கையெழுத்திட்டுள்ள பன்னாட்டு சிறப்பு பேரவை பிரகடனங்கள், உடன்படிக்கைகள் மற்றும் அமைப்புகள்

* அழிந்துவரும் அரிய வனங்கள் வாழ் நீர் மற்றும் நில உயிரினங்கள் பன்னாட்டு வர்த்தக சிறப்பு மாநாடு
* இயற்கை மற்றும் இயற்கை வளங்கள் பராமரிப்புக்கான பன்னாட்டு ஒன்றியம் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு
* வலசை செல்லும் வன உயிரினங்கள் பாதுகாப்பு சிறப்புப் பேரவை
* பன்னாட்டு திமிங்கல ஆணையம்
* வனப்படுத்துதலுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு
* பன்னாட்டு வெப்ப மண்டல மரங்கள் அமைப்பு
* ராம்சர் சிறப்பு மாநாடு
* உயிரி பல்லுயிர் பெருக்க சிறப்புப் பேரவை
* மூங்கில் மற்றும் ராத்தல் பன்னாட்டு வலைப்பின்னல்
* ஆசியப்பசிபிக் வனமாக்கல் ஆணையம்
* காடுகள் அழிப்பு தடுப்பு ஐக்கிய நாடுகள் சிறப்புப் பேரவை
* காலநிலை மாற்றம் ஐக்கிய நாடுகள் வரையமைப்பு சிறப்புப் பேரவை
* கியோட்டோ ஒப்பந்தம்

**பூர்வக்குடி மக்களும் அவர்களின் உரிமைகளும்**
**வரையறை**

ஒரு பரந்த தளத்தில் பண்பாட்டு பன்மைத்துவம் கொண்ட சமூகப் பிரிவுகளே பூர்வக்குடி மக்கள் என அடையாளப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு சுமார் 5000 பண்பாட்டு குழுக்களை சேர்ந்த 35 கோடி பூர்வக்குடி மக்கள் 20 விழுக்காடு நிலப்பரப்பில் வாழ்கின்றார்கள். பூர்வக்குடி மக்கள் எதிர்க்கொள்ளும் சவால்களியேலே முதன்மையான சவால் என்பது பூர்வக்குடி மக்களுக்கான வரையறைகளை உருவாக்குவதில் ஒருமித்த கருத்து உருவாகாதது ஆகும். பூர்வக்குடிகள் என்ற சொல்லாக்கத்தை புரிந்து கொள்வதிலிருந்து அடிப்படை வேறுபாடுகள் தோன்றுகின்றன. பூர்வக்குடி மக்கள் உரிமைகளுக்காக பணியாற்றும் ஐ.நா பணிக்குழுக்களால் கூட பூர்வக்குடிகளின் உண்மை அடையாளங்களை வரையறை செய்வதில் ஒருமித்த கருத்து எட்ட முடியவில்லை. ஒரு குழுவின் பூர்வக்குடித்தன்மை இவை என்பதை வரையறுப்பதற்கான முழுமையான அளவீடுகளை உருவாக்குவதில் எழும் கருத்து வேறுபாடுகளே முதன்மைக் காரணியாக விளங்குகிறது.

**தன் - அடையாளமாக்கல்**

பூர்வக்குடி மக்களை வரையறை செய்யும் பன்னாட்டு உடன்படிக்கை எதுவும் இதுவரை எட்டப்படவில்லை. பூர்வக்குடி சமுதாயங்களே தங்கள் பூர்வக்குடித் தன்மையை முடிவு செய்து கொள்ள வேண்டும். இதுவே தன் அடையாளமாக்கல் எனப்படும்.

குறைந்த மக்கள் தொகையை பூர்வக்குடிகளுக்கான ஒரு வரையறையாகக் கருத முடியுமா? அல்லது அவர்களது சொந்த வாழ் இடத்திற்கும் அவர்களுக்குமான தொடர்பு அவர்கள், எவ்வளவு காலம் வாழ்கிறார்கள், தொழில் மயமாக்க வாழ்முறை அல்லாத பாரம்பரிய வாழ்க்கை முறை, இவற்றை பூர்வக்குடிகளுக்கான ஒரு வரையறையாக கருத முடியுமா? இதில் வட அமெரிக்க சமுதாயங்கள் மத்தியில் வட அமெரிக்க பூர்வக்குடிகள் / முதல் தேசம், அமேசான் காடுகளில் வாழும் குடிமக்கள், தூர வடக்கு இனியுட் பூர்வக்குடிகள், பப்புவா நியூகினியா பூர்வக்குடிகள் போன்ற சில குழுக்களை வரையறை செய்வதில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டது. பூர்வக்குடித் தன்மையை வரையறை செய்வதில் ஒரு உலகளாவிய அங்கீகாரம் பெறுவதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் ஐக்கிய நாடுகள் அவை உயர் அதிகாரி ஜீலியன் பெர்கர் முன்மொழிந்த வரையறை குறிப்பிடத்தக்கதாகும். அவரின் கூற்றுப்படி "ஒரு தனித்த பண்பாடு பல்வேறுபட்ட கூறுகளை மொழி, மதம், சமூகம், அரசியல் அமைப்புகள், ஒழுக்க நெறிகள், அறிவியல் மற்றும் தத்துவ அறிவு, நம்பிக்கைகள், வீர கதைகள், சட்டங்கள், பொருளாதார அமைப்புகள், தொழில்நுட்பம், கலை, உடை, இசை, நடனம், கட்டடக்கலை போன்ற எண்ணற்ற வேறுபாடுகள் இருந்தாலும் பூர்வக்குடி மக்களே தமது பூர்வக்குடித் தன்மையை வரையறுக்க இயலும்". பூர்வக்குடி மக்கள் வரையறைகளாக அவர்கள் மேலும் கூறுவதாவது:

1. பூர்வக்குடி மக்கள் தங்கள் பூர்வ நிலங்களில் இருந்த ஆக்கிரமிப்பாளர்களால் விரட்டப்பட்டு இடம் பெயர்ந்தவர்களாக இருக்கலாம்
2. நாடோடி மற்றும் அரைக்குறை நாடோடி மக்களாக இருக்கலாம். இடம் விட்டு இடம் பெயர்ந்து பயிரிடுபவர்கள், மேய்ச்சல் குடிகள், வேட்டையாடி உணவு சேமிப்பவர்கள் அல்லது உபரி அதிகமில்லாத உடல் உழைப்பு கோரும் வேளாண் குடிகளாக இருக்கலாம்
3. மையப்படுத்தப்பட்ட அரசியல் நிறுவனங்களாக அல்லாத, சமுதாயமாக அணி திரட்டப்படாதவர்களாக, ஒருமித்த கருத்து அடிப்படையில் இயங்காத குழுக்களாக இருக்கலாம்.
4. தேசிய சிறுபான்மை இனத்திற்குரிய அனைத்து குணங்களையும் உடையவர்களாக இருக்கலாம். பொதுவான மொழி, மதம் பண்பாடு மற்றும் இதர அடையாளங்களைப் பகிர்ந்துக்கொண்ட போதிலும் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் ஒரு ஆதிக்க சமூகம் மற்றும் பண்பாட்டினால் அடக்கி ஆளப்படுகிறது.
5. ஒரு மாறுப்பட்ட உலக கண்ணோட்டம் கொண்டவர்களும் பூர்வக்குடி மக்களாக வரையறுக்கப்படலாம். இவர்கள் நிலம் மற்றும் இயற்கை மூல வளங்கள் மீது பொருளியல் அடிப்படை அல்லாத ஒரு பாரம்பரிய அணுகுமுறையை கொண்டிருக்கலாம். ஆதிக்க சமுதாயத்தின் ஆதாயத்திற்காக வளர்ச்சி என்ற பெயரில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கலாம்.
6. சில தனிநபர்கள் அகவாயக் காரணங்களுக்காக தங்களைத்தாமே பூர்வக்குடி மக்களாக அடையாளம் கண்டுகொண்டு பூர்வக்குடிகளாக அறிவித்துக் கொண்டிருக்கலாம்.

பொதுவாக தற்கால புரிதலில் பூர்வக்குடி மக்கள் என்போர் மிக குறைந்த ஆதிக்க உணர்வு, அரசியல் அதிகாரமின்மை,வரையறுக்கப்படுகின்றனர். வெளி சமுதாயத்தினரின் ஆதிக்கம் அல்லது இனரீதியான ஆதிக்கத்தின் கீழ் இரண்டாம் தர குடிமக்களாக வாழ்வோரும் பூர்வக்குடிகளாக வரையறுக்கப்படலாம். இங்க கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் அதிகாரமின்மையால் மட்டும் பூர்வக்குடி மக்கள் அடையாளப்படுத்தப்படுவதில்லை. மாறாக, தங்களது பூர்வக்குடித் தன்மையின் காரணமாக அதிகாரம் பறிக்கப்பட்டிருக்க வேண்டும். இனக்குழு மதிப்பீடுகள், மரபுகள் காரணமாகத் தமது பாரம்பரிய வாழ்க்கை முறையை விட்டு விலகாமல் வாழும் இத்தகைய குழுக்கள் சமூகம், அரசியல், பொருளாதார நிறுவனங்கள் உதவியால் முன்னேற்றம் அடைந்துள்ள சமுதாயங்களிடமிருந்து விலகி வாழ்கிறார்கள். இந்த "முன்னேற்றத்தினை தங்களுக்கு எதிரான அச்சுறுத்தலாகவும் தமது வாழ்வு முறையை மாற்றிவிடக் கூடியதாகவும் காண்கிறார்கள்". பூர்வக்குடி மக்கள் என்போர் "சமுதாய ரீதியாக நிலைத்த" அல்லது மாறாநிலை கொண்ட குழுக்களாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. ஆதிக்க சமூக அமைப்புகள் அடைந்து வரும் முன்னேற்றத்தை ஏற்பதிலும் தகவமைத்துக் கொள்வதிலும் மிகவும் பின் தங்கியிருப்பதன் காரணமாகவே பூர்வக்குடி மக்களை பழமைவாதிகள் என்று குற்றம் சாட்டுவது உலக வழக்கமாக உள்ளது.

நிலப்பரப்பு சார்ந்த வரையறை எதுவுமில்லையெனும்போதிலும் அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும் சிறு சிறு சமுதாய வடிவங்களிலும் வாழ்வதைக் கவனிக்க முடிகிறது. ஒரு குறிப்பிட்ட நிலத்தில் பல தலைமுறைகளாக வாழ்ந்து தங்கள் நிலத்தையும் அதன் மூல

வளங்களையும் பராமரித்து வருபவதும் பூர்வக்குடித் தன்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் பூர்வ நிலத்தில் இருந்து அடிக்கடி அந்நியப்படுத்தப்படுவது முக்கிய பிரச்சனையாகிறது. பாரம்பரிய அணுகுமுறை நலன்களும், நிலத்துடனான கூட்டு அடையாளப்படுத்துதலும் அவர்களின் வரையறையாக அமைகிறது. இடப்பெயர்வுக்கான காரணிகளும் பூர்வக்குடித் தன்மையை வரையறை செய்வதில் முக்கியத்துவம் பெறுகிறது. "பருவகால வளங்கள்" அடிப்படையிலும் அவர்கள் ஆண்டு முழுவதும் இடம் பெயர்கிறார்கள். மறுபக்கத்தில் இடபெயர்வுகளின் போதும் தமது பண்பாடும் சமூக நடவடிக்கைகளும் துண்டிக்கப்படாமல் நிலைத்து நிற்கும் வகையில் ஒரு வாழ்விடத்தை அவர்கள் காண்கிறார்கள்.

செல்வம் குறித்த மேற்கத்திய அல்லது தொழில் துறையினர் கருத்தாக்கங்களை பூர்வக்குடி மக்கள் குழுக்கள் ஏற்பதில்லை. மேலும், பழைய வரையறைகள் அவர்களுக்கு இடையிலான பகைமை குறித்தும் ஒரு உபரி பொருளாதாரத்துடன் கூடிய வாழ்வியல் வடிவில் காணப்படுகிறது. துல்லியமற்ற பொதுமைத் தன்மைகள் போல் அல்லாமல் நல்ல நிதிநிலைமையுடனும்,நிலையான பொருளாதாரத்துடனும், பூர்வக்குடித் தன்மை வரையறைகளுக்குள் பல சமுதாயங்கள் வாழ்ந்தற்கான பல கிளைகதை ஆதாரங்கள் இருந்தபோதிலும் அவர்களது இனக்குழு வரையறைக்குள் மேட்டிமைத் தன்மையும் காணப்படக் கூடியதாக இருக்கும்.

அதேசமயம், தமது பாரம்பரியத் தொடர்புகளில் இருந்து விலகியிருப்பதாலேயே அவர்களது பூர்வக் குடித்தன்மை நீர்த்துப்போய் விட்டது என்று புரிந்துகொள்ள முடியாது. வரலாற்றுப் பூர்வ சமுதாயங்கள் எனும் அடிப்படையில் கடந்த கால அடக்குமுறைகள், சுரண்டல் அனுபவங்களைக் கூட்டு நினைவுகளாகக் கொண்டிருப்பர். இதன் அடிப்படையில் பல்வேறு சமூக சமத்துவமின்மைகளின் காரணமாக காலனியாக்கம் மற்றும் இயற்கைச் சீர்கேடுகளுக்கு எதிரான போராட்டங்களில் தங்களை ஈடுபடுத்தி வருகிறார்கள். மேலும், பூர்வக்குடி மக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவது குறித்தும் உலகம் முழுவதும் எச்சரிக்கை மணி ஒலிக்கப்படுகிறது. இதனால் சூடான அரசியல் விவாதங்கள் எழுகின்றன.

**உலகில் வாழும் முக்கிய பூர்வக்குடி சமுதாயங்கள் குறித்து பார்க்கலாம்:**

| சமுதாயத்தின் பெயர் | அவர்களின் பூர்விக நிலம் |
|---|---|
| ஹெய்டா | கனடா மேற்குக் கடற்கரை |
| இனுயிட் / எக்ஸ்சிமோ | கனடா / ஆர்ட்டிக் / அலாஸ்கா / கிரீன்லாந்து |
| யானோமணி | அமோசான் படுகை |
| பிளாக்புட் | கனடா / ஐக்கிய மாநிலங்கள் |
| மோஹாவ்க் | கனடா / ஐக்கிய மாநிலங்கள் |
| இன்னு | லாப்ரடார் / கியூபெக் |
| சிட்டகாங் மலைமக்கள் | வங்கதேசம் |
| சமி | ஸ்காண்டிநேவியா |
| புஷ்மன் | சதர்ன் ஆப்பிரிக்கா |
| அகா | கென்யா |
| ஓகியக் | இலங்கை |
| வெட்டா | அந்தமான் தீவுகள் |
| ஜாரவா | பிலிப்பைன்ஸ் |
| அக்டா | போர்னியோ |
| பெனம் | வட மலேசியா |
| ஜஹாய் | ஆஸ்திரேலியா |
| அபாரிஜின் | பிராகுவே |
| அச்சே | டியராடெல் பியூகோ |
| யனமா | ஜப்பான் |
| ஐமு | கிழக்கு சைபீரியா |
| சுக்சி, யுபிக் | வட மத்திய சைபீரியா |
| நியா / ஞானசன் | |

இந்தியாவில் பூர்விகக் குடித்தன்மையை வரையறைப்படுத்துவதில் கோட்பாடு அடிப்படையிலும் நேரடி அனுபவங்களிலும் பின்னடைவே நிலவுகிறது. இந்தியாவில் இதுவரை எந்த ஒரு பூர்வக்குடி மக்களும் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட வில்லை. இருந்தபோதும், இந்திய பூர்வக்குடிகள் அடையாளச் சிக்கல்களுக்கு விடைகாண வல்லுநர்கள் மூன்று கணிப்புகளை வகுத்தளித்துள்ளனர்.

1. ஒரு பகுதி அல்லது நாட்டில் காலனியாக்கம் அல்லது அக்கிரமிப்பு நடைபெறும் முன்பே அங்கு வாழும் மக்கள் குழுக்கள்
2. ஒரு நாடு அல்லது பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு அல்லது காலனியாக்கம் காரணமாக ஒதுக்கப்பட்டுள்ள மக்கள் குழுக்கள்.
3. ஒட்டுமொத்த சமூகம் வகுத்தளித்துள்ள பொது சட்டங்களைப் பின்பற்றாமல் தமக்கான சொந்த சமூக, பொருளாதார, பண்பாட்டு நிறுவனங்களைக் கொண்டு அவற்றின்படி வாழும் குழுக்கள் ஆகியோரை பூர்வக்குடிகள் என வரையறுக்கலாம்.

இந்தியாவில் வாழும் பூர்வக்குடி சமுதாயங்கள் எண்ணற்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். ஆதிவாசிகள், அபாரிஜின்கள், ஆதிம் சாதி (பண்டைய தொல்குடிகள்) அல்லது வனவாசி (வனவாசிகள்). அரசமைப்புச் சட்டப்படி அவர்கள் பட்டியலிடப்பட்ட பழங்குடிகள் என அங்கீகரிக்கப் பட்டுள்ளனர். அவர்களது வாழிடங்கள் பட்டியலிடப்பட்ட பகுதிகள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசு முறையான வரையறை செய்யாவிட்டாலும், "புராதன குடிகள், தனித்த பண்பாடு, நிலவியல் தனிமைப்படுத்தல், பெரும் சமுதாயங்களுடன் பழகுவதில் கூச்சம், பின்தங்கிய நிலை" போன்ற கூறுகளை உருவாக்கிக்கொள்வதன் மூலம் பழங்குடித்தன்மையை ஓரளவுக்குத் தளர்வாக வரையறுப்பதில் சட்டப்பூர்வ ஒருமித்த கருத்து உருவாக்கப்பட்டிருக்கிறது. கோண்டா போன்ற லட்சக்கணக்கில் வாழும் நிலவியல் குழுக்கள் முதல் அந்தமான் தீவில் வாழும் நூற்றுக்கும் குறைவான எண்ணிக்கையில் வாழும் பீல் பழங்குடி மக்கள் வரை இந்த வரையறைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர். மேலும் "இந்தியா" துணைக்கண்டத்தில் பூர்வக்குடி சமுதாயங்கள்" (1988) எனும் புத்தகத்தில் சரத் குல்கர்னி இவ்வாறு கூறுகிறார்.

"இந்தியாவில் வாழும் பூர்வக்குடி மக்கள் பெரும்பாலும் தமது அமைதித்தன்மையை இழந்துவிட்டனர். அவர்கள் தமது தன்னம்பிக்கை மற்றும் அடையாளங்களிலும் சிறிது இழந்துவிட்டனர். அடக்குமுறை சக்திகள் மற்றும் சுரண்டல்காரர்களால் தொல்குடி வாழ்க்கை பெரும் ஆக்கிரமிப்புகளுக்கு ஆளாகி பூர்வக்குடி மக்களில் பலர் கீழான வாழ்நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். பூர்வக்குடி மக்களுக்காக இயற்றப்பட்ட சட்டங்கள் செயலற்ற நிலையிலேயே இருக்கின்றன. இருந்தபோதும் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் சிறிது பயனளித்துள்ளன. தமது உரிமைகளுக்காகப் போராட அவர்களை அணி திரட்டுவதில் சில செயல்பாட்டாளர்கள் வெற்றி கண்டுள்ளனர். இதன் சித்திரம் தெளிவாக இல்லாவிட்டாலும் நம்பிக்கைக் கீற்றுகள் தென்படத் தொடங்கியுள்ள.

விளிம்புநிலை மக்கள் வரையறை செய்யப்படுகிறார்கள். மேலும், இந்தியாவின் பூர்வக்குடி கருத்தாக்கம் "தொல்குடித் தன்மை" என அழைக்கத்தக்கதையே பெரும்பாலும் ஒத்துள்ளது. உலக அளவில், பூர்வக்குடி குழுக்கள் பெரும் மாற்றங்களுக்கு ஆளாகி வருகின்றன. அவர்கள் அடையாளம் காரணமாகவே அவர்கள் "மைய நீரோட்ட" மக்களால் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள். பூர்வக்குடி மக்கள் சந்தித்து வரும் பெரும் சவால்கள் பின்வருமாறு.

**பூர்வக்குடிமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் சவால்களும்:**

- பாகுபாடாக நடத்தப்படுதல் மற்றும் அமைப்புரீதியான வன்முறை
- தங்கள் பூர்விக நிலப்பகுதியில் இருந்து விரட்டப்படுவதால் நில உரிமை பறிக்கப்படுதல்.
- தொழில்நுட்ப அறிவுப் பின்னடைவு காரணமாக மறு குடியமர்த்தப்படுதல்.
- பாரம்பரிய கலைகள் மற்றும் புனைவுகள் போன்ற அறிவுச்செல்வங்கள் சுரண்டப்படுதல்
- பூர்விக நிலப்பகுதிகளில் இருந்து பலவந்தமாக அகற்றப்படுதல்
- பாரம்பரிய மூலவளங்களை அணுகும் உரிமை மறுப்பு
- அழிவு நோக்க வளர்ச்சியும் கட்டாய இட மாற்றமும்

| |
|---|
| • சுயாட்சி மற்றும் சுய நிர்ணய பிரச்சனை<br>• குடிமைச் சமுதாய நிராகரிப்பு<br>• ஒரு சில நாடுகள் மட்டுமே பூர்வ குடிகளைச் சட்டப்பூர குழுக்களாக அங்கீகரித்துள்ளமை<br>• குறைவான அரசியல் பங்கெடுப்பு<br>• வறுமை<br>• சுகாதாரப் பிரச்சனைகள்<br>• வேலையின்மை |

**பூர்வக்குடி மக்கள் உரிமைகள்:**

ஐக்கிய நாடுகள் பூர்வக்குடி உரிமைகள் பிரகடனம் (UNDRIP) 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 அன்று ஐக்கிய நாடுகள் பொது அவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது பூர்வக்குடி மக்கள் உரிமைகளுக்கான ஒருங்கிணைந்த பன்னாட்டு அமைப்பு ஆகும். அந்த வகையில் "உலகில் வாழும் பழங்குடி சமுதாயங்களின் நல்வாழ்க்கை, சுயமரியாதை, குறைந்தபட்ச வாழ்வாதாரங்களை" இப்பிரகடனம் உறுதிப்படுத்துகிறது. பூர்வக்குடி மக்களுக்கான பணிக்குழு 1985 முதல் முயற்சிகள் மேற்கொண்டு நிறைவேற்றப்பட்ட இப்பிரகடனத்தில் 46 பிரிவுகள் உள்ளன. பழங்குடி சமுதாயங்கள் உரிமைகள் தொடர்பாக உலக நாடுகள் பின்பற்றுவதற்கான வழிகாட்டு ஆவணமாகவும் இது திகழ்கிறது. சிறார் உரிமைகள் பிரகடனம், ஐ.எல்.ஓ. சாசனம், பெண்களுக்கு எதிரான அனைத்து இழிவுகளை அகற்றக்கோரும் பிரகடனம் ஆகியனவற்றையும் இது உள்ளடக்கியதாகும்.

| **மனித உரிமைகள், சுய – நிர்ணயம், தேசிய இனம்** | |
|---|---|
| உறுப்புகள் 1 – 6 | • அனைத்து மனித உரிமைகளுக்கான உரிமைகள்<br>• சுதந்திரம், சமத்துவம் உரிமைகள் மற்றும் சுரண்டலுக்கு எதிரான உரிமைகள்<br>• சுய – நிர்ணய உரிமைகள்<br>• சுயாட்சிக்கான உரிமைகள்<br>• தமக்கேயான தனித்த அரசியல் சட்ட, சமூக, பண்பாட்டு அடையாளங்களைப் பராமரிக்கும் உரிமைகள்<br>• தேசிய இன உரிமைகள் |
| **வாழ்க்கை, விடுதலை, பண்பாடு, பாதுகாப்பு** | |
| உறுப்புகள் 7 – 10 | • வாழ்க்கை, விடுதலை, பண்பாடு, பாதுகாப்பு<br>• வாழ்வதற்கும் விடுதலைக்கும் பாதுகாப்புக்குமான உரிமைகள்<br>• கட்டாய அடையாள நீக்கத்துக்கு எதிரான உரிமைகள்<br>• பூர்வக்குடி சமுதாயம் அல்லது நாட்டைச் சேர்ந்தவராக இருப்பதற்கான உரிமைகள்<br>• விரட்டப்படுவது மற்றும் மறுகுடியேற்றத்துக்கு எதிரான உரிமைகள் |
| **பண்பாடு, மதம், மொழி** | |
| உறுப்புகள் 18 – 24 | • பண்பாட்டுக்கான உரிமைகள்<br>• ஆன்மிக, மத நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களுக்கான உரிமைகள்<br>• மொழி, வரலாறுகள், வாய்மொழி மரபுகளைப் பயன்படுத்தும் உரிமைகள் |
| **கல்வி, ஊடகம், வேலைவாய்ப்பு** | |
| உறுப்புகள் 14 – 17 | • கல்வி அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பண்பாட்டு நுண்ணுணர்வுக் கல்வியை அணுகும் உரிமைகள்<br>• கல்வியில் புர்வக்குடி பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் உரிமைகள்<br>• தமது சொந்த மொழி ஊடலங்களை உருவாக்கி புர்வக்குடி மக்கள் அல்லாத மக்களுக்கு பரப்பும் உரிமை<br>• வேலைவாய்ப்பு உரிமை |

| | |
|---|---|
| | **பங்கேற்பு மற்றும் வளர்ச்சி** |
| உறுப்புகள் 18 – 24 | • கொள்கை உருவாக்கத்தில் பங்கேற்கும் உரிமை<br>• சட்டங்கள் கொள்கைகள் உருவாக்கத்தில் சுதந்திரமான கருத்து அளித்து முன் ஒப்புதல் அளிக்கும் உரிமை<br>• தமது சொந்த அரசியல், பொருளாதாரம் சமூக அமைப்புகளை அமைத்துக் கொள்ளும் உரிமைகளும் மேம்பாட்டு உரிமைகளும்<br>• பொருளாதார, சமூக நல் வாழ்வுக்கான உரிமை<br>• பூர்வக்குடி மூத்தோர், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், மற்றுத்திறனாளிகள் புறக்கணித்தல் மற்றும் வன்முறைக்கு எதிரான உரிமைகள்<br>• மேம்பாட்டுக்கான முன் தகுதி மற்றும் செயல்திட்ட ஒதுக்கல் உரிமை<br>• சுகாதாரத்துக்கான உரிமை |
| **நிலம் மற்றும் மூல வளங்கள்** | |
| உறுப்புகள் 25 – 32 | • நிலம் மற்றும் மூல வளங்கள் மீது ஆன்மிக தொடர்பு உரிமை<br>• பாரம்பரிய நிலம் மற்றும் மூல வளங்களை உடமையாக்குதல், பயன்படுத்துதல், மேம்படுத்துதல் உரிமைகள்<br>• நிலம் மற்றும் மூல வளங்கள் மீது பாரம்பரிய சட்டங்கள் கொண்டிருக்கும் உரிமை<br>• முன் ஒப்புதல் இல்லாமல் நிலம் அபகரிக்கப்படுவதற்கு எதிரான உரிமை மற்றும் இழப்பீடு அல்லது திரும்பப் பெறும் உரிமை<br>• முன் அனுமதி இல்லாமல் பாரம்பரிய நிலம் ராணுவமயமாக்கலுக்கு எதிரான உரிமை<br>• பண்பாட்டு அறிவுசார் சொத்துரிமை உரிமைகள்<br>• நிலம் மற்றும் மூல வளங்களின் மேம்பாட்டினை முடிவு செய்யும் உரிமை |
| தன் ஆட்சி மற்றும் பூர்வக்குடி சட்டங்கள் | |
| உறுப்புகள் 33 – 37 | • தனித்த நிறுவனப்படுத்துதல் பழக்க வழக்கங்கள் உரிமை<br>• தனிநபர் பொறுப்பளிப்பு உரிமை<br>• தொடர்புகள், உறவுகள், ஒத்துழைப்பு உரிமை<br>• உடன்படிக்கைகள் ஒப்பந்தங்களை அங்கீரித்தல்,கண்காணித்தல், அமலாக்கம் செய்தல் உரிமை |
| அமலாக்கம் | |
| உறுப்புகள் 38 – 42 | • பிரகடனங்களின் இலக்குகளை எட்டுவதற்காக அரசுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் முன் கலந்தாலோசிக்கும் உரிமை<br>• பிரகடனங்களில் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிக்க அரசுகளால் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கும் உரிமை |
| | • அரசு மற்றும் இதர தரப்புகளுடன் பிரச்சனைகள், தகராறுகள் ஏற்படும் போது நியாயமான நேர்மையான விசாரணை பெறும் உரிமை<br>• பிரகடனங்களை செயலாக்க அளிக்க வேண்டிய பங்களிப்புகளுக்கு ஐ.நா. அமைப்பு மற்றும் அரசுகளுக்கு இடையிலான அமைப்புகள் பொறுப்பேற்றல்<br>• பிரகடன விதிகள் அனைத்தையும் செயலாக்கம் செய்ய ஐ.நா. மற்றும் பூர்வக்குடி பிரச்சனைகளுக்கான நிரந்தர அமைப்பு உள்ளிட்ட நிறுவனங்கள் பொறுப்பேற்றல். |
| **உறுதிமொழியின் இயல்பு** | |
| உறுப்புகள் 43 – 44 | • உறுதியளிக்கப்பட்டுள்ள உரிமைகள் பூர்வக்குடி மக்கள் சுய – மரியாதையுடனும் நலத்துடனும் சக வாழ்வு வாழ்வதற்கான குறைந்தபட்ச தேவைகளாக கருதப்படுகின்றன.<br>• பூர்வக்குடிகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் இருபாலர்களுக்கும் அனைத்து உரிமைகளும் சமமாக உறுதியளிக்கப்படுகின்றன. |

**சமகால வளர்ச்சித் திட்டங்களும் வளர்ச்சிக்கான உரிமையின் அவசியமும்:**

தற்போது நிலவும் உலகளாவிய சவால்கள் குறித்து முன்னர் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றினூடாக வளர்ச்சிக்கான உரிமைகளைப் பெறுவதில் வர்த்தகம், முதலீடு, நிதி, உதவி (நல்கை), கடன், தொழில் நுட்பம், படைப்பாக்க உணர்வு, உலகளாவிய ஆளுகை என அனைத்திலும் தொடர் விளைவுகளைக் கொண்டுள்ளன. இத்தகைய சிக்கலான, பன்முகப்பட்ட பிரச்சனைகள் அச்சத்திலிருந்தும் தனிநபர் விருப்பு வெறுப்புகளிலிருந்தும் சுதந்தரத்தையும் பாதுகாப்பினையும் அளிக்கும் உச்சக் கொள்கை இலக்குகளைக்கொண்ட ஒருங்கிணைந்த, ஒத்திசைவான அணுகுமுறைகளுடன் கையாளப்பட வேண்டும். இந்த உச்ச நோக்கப் பார்வைகள் அனைத்து கொள்கை உருவாக்கங்களிலும் எதிரொலிக்க வேண்டும்.

உதாரணமாக, மர்ரகேஷ் உடன்படிக்கை உருவாக்கிய உலக வர்த்தக ஒப்பந்தம் இவ்வாறு கூறுகிறது. "வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு முயற்சிகள் வளம் குன்றா வளர்ச்சி எனும் இலக்குக்கு ஏற்ப உலகின் மூல வளங்களை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை அனுமதிப்பதுடன் மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தும் நோக்கிலும், முழு வேலைவாய்ப்புகளை உறுதிப்படுத்தும் வகையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்". இதேபோன்று, ஐக்கிய நாடுகள் பொது அவையும் தமது வளர்ச்சிக்கான உரிமை ஆண்டுத் தீர்மானத்தில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதுடன் பன்னோக்கு வர்த்தக பேச்சுவார்த்தைகளின் பன்னோக்கு வர்த்தக பேச்சுவார்த்தைகளின் வழிகாட்டுதல்களின் படி மானுட மேம்பாட்டினையும் உறுதிப்படுத்தும்படியும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றுக்குள் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட உலகளாவிய பங்குதாரர்களை வலுப்படுத்தும்படியும் வலியுறுத்துகிறது.

மேலும் தமது உறுப்பு நாடுகள் வளர்ச்சிக்கான உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் தங்கள் கூட்டுத்தகுதிகளை மேம்படுத்தும் வண்ணம் உலக வர்த்தக அமைப்பு, பன்னோக்கு பன்னாட்டு வங்கிகள், உலகளாவிய வர்த்தகம், முதலீட்டு. நிதி அமைப்புகள் போன்ற அமைப்புகளுக்கான ஒரு செயல்திட்ட வரையறைகளை இத்தீர்மானம் வழங்குகிறது.

வர்த்தக பேச்சுவார்த்தைகள் பரவலாக நடைபெற்றுவரும் இச்சூழலிலும் வர்த்தக – முதலீட்டு உடன்படிக்கைகளால் மனித உரிமைகள் பாதிப்புக்குள்ளாகும் புரிதல் அதிகரித்துள்ள நிலையில் அரசுகள் புதிய வர்த்தக, முதலீட்டு உடன்படிக்கைகளில் கையெழுத்திடும் போது தமது மனித உரிமைகள் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் அவற்றுடன் மனித உரிமைகள், வளர்ச்சிக்கான உரிமைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கும் முயற்சிகளை எடுக்க வேண்டும். இதேபோல், இப்பிரகடனத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கடமைகள் உள்நாட்டு வளங்களைத் திரட்டுவதில் கூட பலவீனமாக உள்ள நாடுகளுக்குள் மிகவும் தேவைப்படும் குழுக்கள், மக்கள் மற்றும் நாடுகளை இலக்காகக் கொண்டு, தேவையான அதிகாரப்பூர்வ உதவிகள் மற்றும் நிதி நல்கைகளுடன் பன்னாட்டு உதவிகளும் தேவையான அளவுக்கும் வெளிப்படையாகவும், பதில் சொல்லும் பொறுப்புகளுடனும் வழங்குவதையும் கோருகிறது.

நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு மற்றும் சமமான பகிர்தலைச் சட்டப்பூர்வமாக்கியுள்ள இத்தீர்மானம் மனித உரிமைகளை நிறைவு செய்வதில் முக்கியப் பங்களிப்பு ஆற்றும் புதிய தொழில்நுட்பங்கள், அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆகியன மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஏழை மக்களின் தேவைகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். உண்மையில், இது நடைமுறையில் இந்த உயிர்காக்கும் தொழில்நுட்பங்கள் பாதிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, விலக்கப்பட்ட ஏழைகளிடமிருந்து அதிக தொலைவில் இல்லாத உயிர்காக்கும் தொழில் நுட்பங்களாக இருப்பதை உறுதிப்படுத்துவதுடன் படைப்பாக்கத்தை ஊக்கப்படுத்தும் அறிவுசார் சொத்துரிமை காப்பு அமைப்பைக் கொண்டிருப்பதைக் கோருகிறது. தொடர்ந்து புதிதாக உருவாகி வரும் சாவல்களை உலகம் எதிர்கொண்டுள்ள நிலையில் அனைத்து மக்கள், அனைத்து தனிநபர்களின் மனித உரிமைகள் நிதர்சனமாக்கப்படுவதன் தேவையையும் பன்னாடுகள் ஒத்துழைப்பினையும் சமத்துவத்தையும் இப்பிரகடனம் வலியுறுத்துவதுடன் புதிய பாதையில் முன்னேறுவதையும் அறிவுறுத்துகிறது.

**2030 செயல்திட்டம், வளம் குன்றா வளர்ச்சி இலக்குகள் மற்றும் தொடர்புடைய செயல்திட்டங்களின் பொறுத்தப்பாட்டில் வளர்ச்சிக்கான உரிமையின் முக்கியத்துவம்:**

வளர்ச்சிக்கான உரிமை 2030 செயல்திட்டம், வளம் குன்றா வளர்ச்சி இலக்குகள், வளர்ச்சிக்கான நிதி மூன்றாவது பன்னாட்டு மாநாட்டின் அடிஸ் அபாபா உடன்படிக்கை ஒவ்வொன்றும் தொடர் தகவல் அளிக்க கோருகிறது. முக்கியமாக, 2030 செயல்திட்டத்திலும் அடிஸ் அபாபா உடன்படிக்கையிலும் வளர்ச்சி உரிமை குறித்த தெளிவான குறிப்புரைகள் காணப்படுகின்றன. அவற்றில் "வளர்ச்சி உரிமை உள்ளிட்ட அனைத்து மனித உரிமைகளும் மரியாதை அளிக்கப்படுவது" உறுதியளிக்கப்பட்டுள்ளன.

வளம் குன்றா வளர்ச்சிக்கான 2030 செயல்திட்டம், வளர்ச்சியில் பலன்கள் அனைத்து நாடுகளாலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும் ஓர் உலகம் உருவாவதை இலக்காகக் கொண்ட அடிஸ் அபாபா உடன்படிக்கை ஆகியனவற்றினை நனவாக்கும் முகமாக உறுப்பு நாடுகளின் கடமைப்பாடுகள் வளர்ச்சி உரிமைக் கொள்கைகள் வழியாக வழிகாட்டப்படுவதை நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும். 2030 செயல்திட்டத்தின் முகப்பரையில் "மக்கள், கோள், செல்வத்துக்கான ஒரு வேலைத் திட்டத்தில்" "ஒத்துழைப்புடன் பங்களிக்கும் அனைத்து நாடுகளும் அனைத்து பங்காளர்களும் வறுமை, இல்லாமை ஆகிய கொடுமைகளில் இருந்து மனித குலத்தை விடுவிப்பதற்காகவும் நமது புவியை பாதுகாத்து ஆற்றுப்படுத்தவும்" பணியாற்றுமாறு கூறப்பட்டுள்ளது.

வளர்ச்சிக்கான உரிமை பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய கொள்கை நெறிகளான பங்கேற்பு, பாகுபாட்டினை, சுய நிர்ணயம், தனிநபர் மற்றும் கூட்டுப்பொறுப்பு, பன்னாட்டு கூட்டுறவு, சமத்துவம் உள்ளிட்ட அனைத்தும் நிகழ்ச்சி நிரல் 2030 தீர்மானத்திலும் இணைக்கப்பட்டு மறுஉறுதிப்படுத்தப்பட்டது. இதோடு ஒருங்கிணைக்கப்பட்ட வளம் குன்றா வளர்ச்சிக்கான இலக்குகள் வாக்கெடுப்பு இன்றியே அனைத்து உறுப்பு நாடுகளாலும் ஏற்கப்பட்டன. மேலும் வளர்ச்சிக்கான உரிமை உள்ளிட்ட மனித உரிமைகள் கடமைகளில் வேரூன்றியுள்ள வளர்ச்சிக்கான பருண்மைகளும் வரையறை செய்யப்பட்டன. உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையுடன் சமத்துவமான வளர்ச்சிக்கும் அழைப்பு விடுக்கும் இத்தகைய இலக்குகள் புத்தாயிரம் வளர்ச்சி இலக்குகளில் மேம்பாடு அடைந்து ஒவ்வொருவரும் பலன் அடைவதற்கான புதிய வாய்ப்புகளை வழங்குகிறது.

இந்த இலக்குகளை அடையும் முகமாக அடிஸ் அபாபா செயல்திட்டத்தினையும் இதன் மூலம் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ள வளர்ச்சிக்கான உரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் 2030 செயல்திட்டம் நேரடியாக ஒருங்கிணைக்கிறது. ஒவ்வொருவருக்கும் சமூக பாதுகாப்பு வழங்குவதற்கான வளர்ச்சி நிதி கடமை உள்ளிட்ட வளர்ச்சி நிதி வாக்குறுதிகளை நிறைவேற்றும் பொறுப்புணர்வு அதிகரிக்கப்பட வேண்டும் என்று அடிஸ் அபாபா செயல்திட்டம் வலியுறுத்துகிறது. மேலும், முதல் முறையாக வளர்ச்சி நிதிக்கான செயல் அமைப்பு சீராய்வு செய்யப்படுவதும் தொடர் கண்காணிப்பும் சேர்க்கப்பட்டது. அடிஸ் அபாபா செயல் திட்டம் அமலாக்கம் பெற மனித உரிமைகள் வாக்குறுதிகளை ஒருங்கிணைத்து வளர்ச்சியின் வாக்குறுதிகளை ஒருங்கிணைத்து வளர்ச்சியின் மையமாக மானுட நபர்களை இருத்த நீதி சமத்துவமும், ஒத்துழைப்பும், வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வும் கொண்ட வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதிய அமைப்பு ஒன்று தேவையாகும்.

இதன் பொருட்டு, வளம் குன்றா வளர்ச்சிக்கான 2030 செயல்திட்டம் மற்றும் வளர்ச்சி வர்குறுதிகளுக்கான நிதி ஒதுக்கீடு அமலாக்கம் குறித்த முறைப்படுத்தப்பட்ட சீராய்வுக் கூட்டங்களில் புறக்கணிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட குழுக்களையும் பங்கேற்கச்செய்வதற்கும் அதிகாரம் அளிப்பதற்குமான அம்சங்கள் உறுதியளிக்கப்பட வேண்டும். உலகளாவிய காலமுறை சீராய்வு, உடன்படிக்கை அமைப்புகள், மனித உரிமைகள் குழுவுக்கான சிறப்பு செயல்முறைகள், தேசிய, பிராந்திட மனித உரிமைகள் அமைப்புகள் போன்ற தற்போதைய மனித உரிமைகள் செயலாக்க அமைப்புகள் வளர்ச்சிக்கான உரிமை செயல்திட்ட அமைப்புகள் வளர்ச்சி முயற்சிகளை செயலாக்கம் செய்வதை உறுதிப்படுத்தும் வண்ணம் சீராய்வுகளிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் பங்கேற்க வேண்டும். சீரிய கண்காணிப்பு மற்றும் சீராய்வு நடவடிக்கைகள் மனித உரிமைகள் அமலாக்க முன்னேற்றங்களையும் உரிய அளவீடுகள் மூலம் அளவிட வேண்டியதும் அவசியமாகும்.

வளம் குன்றா வளர்ச்சி இலக்குகளில் இடம் பெற்றுள்ள முக்கிய இலக்கு 13-ம், வளம் குன்றா வளர்ச்சிக்கான 2030 செயல்திட்டத்தில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதுமான காலநிலை மாற்றம் மனித உரிமை முக்கியத்துவம் கொண்டதுமாகும். இது வளர்ச்சி உரிமை உள்ளிட்ட மனித உரிமைகளை

அனுபவிப்பதற்கு உலகளாவிய அளவில் செயல்படும் நபர்களால் பெரிதும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது. இதன் பாதிப்பு பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேற்றத்தில் மிக மிகக் குறைவான பங்களிக்கும் ஏழை நாடுகள், மற்றும் புறக்கணிக்கப்பட்ட சமுதாயங்கள், குழுக்கள், தனிநபர்கள் மீது பெருமளவு ஏற்படுகிறது.

இதனால் சமூக நீதி பாதிப்புக்குள்ளாகிறது எனும் கண்ணோட்டத்துடன் வளர்ச்சிக்கான தடைகளை அகற்ற அரசுகள் இடையேயான ஒத்துழைப்பினையும் வளர்ச்சி உரிமை பிரகடனம் கோருகிறது (இதற்கு காலநிலை மாற்றமே சிறந்த உதாரணமாகும்). இதர நாடுகளைக்காட்டிலும் சில குறிப்பிட்ட நாடுகள் பசுமைக்குடி வாயுக்களை மிக அதிகமாக வெளியேற்றுகிறது என்பதனையும் இதனைக் குறைப்பது மற்றும் கட்டுப்படுத்துவதில் பெரும் பங்களிப்பு ஆற்றும் ஆற்றலும் திறனும் அந்த நாடுகளுக்கு அதிகமாக உள்ளது என்பதனையும் அங்கீகரித்துள்ள காலநிலை மாற்றம் ஐ.நா. செயல்திட்ட பேரவை "சமத்துவத்தின் அடிப்படையிலும் தமது பொதுவான அதேநேரம் தனிப்பட்ட பொறுப்புகள் மற்றும் உரிய தகுதிகளை உணர்ந்தும்" (உறுப்பு 3(1) காலநிலை மாற்றம் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கோருகிறது. காலநிலை மாற்றத்துக்கு தகவமைக்கும் அல்லது கட்டுப்படுத்தும் தமது முயற்சிகளில் வளர்ச்சி உரிமைக்கும் அர்த்தமுள்ள உரிமை செயலாக ஆற்றல்களுக்கும் மையமாக திகழும் சமத்துவம் மற்றும் பன்னாட்டு வாக்குறுதிகளுக்கு உறுப்பு நாடுகள் முக்கியத்துவம் அளிக்கவும் கோருகிறது.

**உலகமயமாக்கல்: கருத்தில், காரணங்கள், பின் விளைவுகள்**
**பொருள்:**

நாடுகளுக்கு இடையிலான ஒரு ஊடாட்ட அமைப்பை வலியுறுத்தும் உலகமயமாக்கல் ஒரு ஒருங்கிணைந்த உலக பொருளாதாரத்தை நோக்கி இட்டுச் செல்கிறது. இந்த ஊடாட்டம் பல வகை வெளிப்பாடுகளில் செயல்படுகிறது. சமூகம் முதல் அரசியல் வரை; பண்பாடு முதல் பொருளாதாரம் வரை; தொடர்பு அமைப்புகளை

மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள், உள்கட்டமைப்பு, போக்கவரத்து என பல வடிவங்களில் வெளிப்படுகின்றன. ஒரு ஒருங்கிணைந்த உலக பொருளாதாரத்தினை உருவாக்குவதில் பன்னாட்டு வர்த்தகமும் எல்லை கடந்த முதலீடுகளும் முக்கிய விழுமியங்களாக ஏற்கப்பட்டுள்ளன. அதன் உள்ளார்ந்த கூட்டுத்தன்மையை எடுத்துக்கொண்டால் ஒருங்கிணைந்த ஊடாட்டங்கள் குறித்து கூடுதல் ஆய்வுகள் தேவைப்படுகின்றன. கோட்பாட்டளவில், அது எதிர்மறை ஊடாட்டம், நேர்மறை ஊடாட்டம் என இரு துணை உருப்புகளைக் கொண்டுள்ளது. முன்னது, வர்த்தக தடைகள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளை அகற்றக்கோரும் சுதந்திரம் வர்த்தகக் கொள்கையாகும். பின்னது, உலகளாவிய பொருளாதார சட்டங்கள், கொள்கைகளைத் தரப்படுவதில் கவனம் செலுத்துகிறது.

எந்தவொரு கொடுக்கப்பட்ட வரையறையிலும் உலகமயமாக்கல் என்பது அதன் உண்மை அர்த்தத்தில் பொருளாதார, சமூக அடிப்படையிலான ஒரு பன்னாட்டு வலைப்பின்னலை உருவாக்குவது ஆகும். உலகமயமாக்கல் என்ற சொல்லாடல் முதன் முதலில் எப்போது பயன்படுத்தப்பட்டது என்று பார்த்தால் 1930 இல் கல்வியில் மனித அனுபவம் குறித்து சீராய்வு செய்யும் நூலான "புதிய கல்வியை நோக்கி" எனும் புத்தகத்தில் கையாளப்பட்டுள்ளது. 1897 இல் "பன்னாட்டு பெருநிறுவனங்கள்" எனும் சொல்லாடல் சார்லஸ் ரஸ்ஸல் டாஜெல் என்பவரால் எழுதப்பட்ட பொருளாதார இலக்கியத்தில் கையாளப்பட்டுள்ளது. பெரிய நிறுவனங்கள், பெரும் அறக்கட்டளைகள் அழைக்க இச்சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இரு சொல்லாடல்களும் 1960 முதல் 1980 வரை பொருளாதாரம் மற்றும் பிற சமூக அறவியல் துறைகளின் வல்லுனர்களால் மாற்றி, மாற்றி பயன்படுத்தப்பட்டு வந்தன.

உலக வங்கி, "உலகில் பொருளாதாரங்கள் மற்றும் சமுதாயங்கள் இடையே அதிகரிக்கும் ஒருங்கிணைப்பு" என்று உலகமயமாக்கலை வரையறை செய்கிறது. உலகமயமாக்கல் என்ற சொல் கருத்தில் சட்டகத்துக்குள் மாற்றம் பெற்றது புதிய சிந்தனைகளை முடுக்கி விட்டுள்ளது. இது உலக பொருளாதார உரையாடல்களில் புதிய வியாக்கியானங்களையும் விவாதங்களையும் தூண்டியுள்ளது. பனிப்போர் முடியும் தருவாயில், பொருளாதாரம் மற்றும் தகவல் பரிமானத்தில் மேலும் மேலும் உள் இணைக்கப்படும் ஒரு உலகை பிரதிநிதித்துவப்படுத்த இக்கருத்தாக்கச் சொல்லாடல் பயன்படுத்தப்பட்டது. ஒரு தனி – உலகளாவிய செயல்முறை மாற்றங்களின் ஒரு மாதிரியாகச்

செயல்பட்டு, உலகமயமாக்கல், இதுவரையான பன்னாட்டு பொருளாதார வடிவங்களை மாற்றி எழுதும் ஒரு அடிப்படை வளர்ச்சிமாற்றத்தை அவிழ்க்கிறது.

உலக வர்த்தக அமைப்பின் (WTO) படி, "உலகயமாக்கல் அல்லது மக்கள் மற்றும் நாடுகளின் உள் இணைப்புகள், பரஸ்பர சார்பு நிலைகள் அதிகரிப்பு, பொதுவாக ஒரு ஒன்றுக்கொன்று சார்ந்த அங்கங்களால் புரிந்துகொள்ளப்படுகிறது. பொருட்கள், சேவைகள், நிதி, மக்கள் மற்றும் கருத்தாக்கங்கள் எல்லைகடந்து சுதந்தரமாகச் செல்வதை அதிகரிக்க அனுமதித்தல் இவ்வாறு சுதந்தரமாகச் செல்வதை ஆதரிக்கும் கொள்கைகள் மற்றும் நிறுவனமாற்றங்களை தேசிய, பன்னாட்டு அளவில் ஊக்குவிப்பது. உலகமயமாக்கலால் நேர்மறை விளைவுகள் மட்டுமல்லாமல் எதிர்மறை விளைவுகளும் ஏற்படுகின்றன என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது". சமூக-பொருளாதார மற்றும் அரசியல் - தொழில்நுட்ப அடிப்படைகளில் உலகமயமாக்கல் கருத்தியலுக்கு விளக்கம் அளிப்பதில் உலக சுகாதார நிறுவனம் (WHO) ஒரு சிறந்த பார்வையை வழங்குகிறது.

கோட்பாடு மற்றும் நடைமுறைக்கான முக்கிய அங்கம் என்ற அளவில் உலகமயமாக்கல் பல்வேறு களங்களுக்கு இடையிலான ஒரு இணைப்பு கட்டமைக்கப்படுவதை முன்னிறுத்துகிறது. பன்னாட்டு நிதியம் அமைப்பு 2002 இல் உலகமயமாக்கலின் அடிப்படையான நான்கு கோட்டுபாடுகளை அடையாளப்படுத்தியுள்ளது. இதன் மூலம் உலகமயமாக்கல் சொல்லாடல் குறித்த ஐயங்கள் பெருமளவு தெளிவுக்குள்ளாகின்றன. அவை பின்வருமாறு: வர்த்தகமும், பரிவர்த்தனைகளும், மூலதன நகர்வுகளும் முதலீடுகளும், இடம்பெயர்தலும் மக்கள் நகர்வுகளும், அறிவு பரவலாக்கம் ஆகியன ஆகும்.

**உலகமயமாக்கலின் திசை வழிகள்:**

உலகமயமாக்கல் செயல்முறை பல்வேறு மட்டங்களிலான அமைப்புகளின் தொகுப்பாகக் காணப்படுகிறது.

**பொருளாதார பரிமாணம்:**

சுதந்தரமான வர்த்தகம் என்பதே உலகமயமாக்கலின் அச்சாணி ஆகும். இதில் மாற்றுக்கருத்துக்கே இடம் இல்லை. உலகமயமாக்கலின் உயர்மட்டச் செயலாக்கம் இதுதான். கடந்த அண்மைக்காலங்களில் பொருளியல் உலகமயமாக்கல் செயல்முறைகளில் ஐக்கிய மாநிலங்கள், ஜப்பான், சீனா போன்ற வளர்ந்த நாடுகளின் குழுவே ஆதிக்கம் செலுத்துகிறது என்பது கண்கூடு, பன்னாட்டு நிறுவனங்களான கூகுள், மைக்ரோசா.ஃப்ட், ஆப்பிள், மெக்டொனால்ட் போன்றவையும் பன்னாட்டு அமைப்புகளான பன்னாட்டு நிதியம், உலக வங்கி போன்றவையுமே உலகச் சந்தையை நிர்ணயம் செய்பவதில் முன்னணி அமைப்புகளாக உள்ளன. பாட்டரி கூற்றுப்படி, பொருளியல் உலகமயமாக்கல் என்பதை மூன்று மாறுபட்ட அம்சங்களின் கூட்டிணைப்பாகக் கொள்ளமுடியும். அவை பின்வருமாறு:

1. தகவல் மற்றும் தொழில்நுட்பம் மூலம் உலகம் முழுவதும் மூலதன நகர்வு அதிகரிப்பு.
2. உலக வர்த்தக அமைப்பு, பன்னாட்டு நிதியம், உலக வங்கி போன்ற மீ-தேசிய அமைப்புகள் பரவலாக்கம்.
3. நாடுகளுக்கிடையிலான நிறுவனங்களின் செல்வாக்கு அதிகரிப்பு.

**பண்பாட்டுப் பரிமாணம்:**

பண்பாடுகள், கருத்தியல்களின் உலகப் பரிமாற்றங்களுக்கான முகவராக உலகமயமாக்கல் செயல்படுகிறது. உலகமயமாக்கல் எனும் சொல் பெரும்பாலும் நவீனத் தன்மை எனும் சொல்லாடலுடன் இணைத்துப் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் இம்மாதிரியான செயல்முறைகள் ஒரு "ஒற்றைத் தரப்படுத்தப்பட்ட "நடவடிக்கைகள், கருத்தியல்கள், மதிப்பீடுகளைத் திணித்தல், ஒரு ஒற்றைப் பண்பாட்டு உலகை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கி முடுக்கிவிடப்படுவனவாகவே இருக்கும். உலக வர்த்தகம் உருவான காலத்தில் இருந்தே இதன் தடயங்களைக் காணலாம். ஒவ்வொரு நுகர்பொருளும் ஒரு பண்பாட்டை வெளிப்படுத்துகிறது. உதாணரமாக, உள்நாட்டு சந்தையில் மேற்கத்திய ஜவுளி துறை பன்னாட்டு

நிறுவனங்கள் வருகையைத் தொடர்ந்துதான் இந்திய ஆடை வடிவமைப்புத் துறை "டெனிம்" ரக துணியை ஏற்றுக்கொண்டது. மேலும், தொடர்பு தொழில் நுட்பங்களின் வளர்ச்சிக்கும் நன்றி சொல்ல வேண்டும். குறிப்பாக முகநூல், டிவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்கள் பல பகுதிகள் மற்றும் மாறுபட்ட பண்பாடுகளைச் சேர்ந்த தனிநபர்களை ஒருங்கிணைப்பதால் இந்த பரிமாற்றம் எளிதாக நிகழ்கிறது. இவ்வாறு ரத்தமும் சதையுமாக நிகழ்ந்த ஊடாட்டங்கள் தற்போது புதிய செயற்கை மற்றும் மீ வெளி ஊடாட்டங்களில் நிகழ்கின்றன.

இது உலக துணைப் பண்பாடுகளின் புதிய ஒழுங்கை மாற்றி அமைப்பதில் பெரிதும் உதவுகிறது. இதன் பொருளில், சிலர் விமர்சிப்பதைப் போன்று உலகமயமாக்கல் என்பது அமெரிக்கமயமாக்கல் அல்லது மேற்கத்தியமயமாக்கல் என்பதாகக் கொள்ள முடியாது. பண்பாட்டுச் சொல்லாடலில் அது பரஸ்பர கொடுத்து வாங்கலுக்கான ஒரு சட்டகத்தை பிரிதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே, மேற்கத்தியம் அல்லாத சமுதாயங்கள் எவ்வாறு மேற்கத்திய பண்பாட்டு அம்சங்களை எவ்வாறு தகவமைக்கிறது என்பதோடல்லாமல் மேற்கத்திய அமைப்புகள் அன்னிய மதிப்பீடுகளை அனுபவப்பூரமாகவோ இல்லாமலோ எவ்வாறு உள்ளீர்த்துக் கொள்கிறது என்பதையும் பொருத்த அமைகிறது.

**பண்பாட்டுப் பரிமாணம்:**

பண்பாடுகள், கருத்தியல்களின் உலகப் பரிமாற்றங்களுக்கான முகவராக உலக மயமாக்கல் செயல்படுகிறது. உலகமயமாக்கல் எனும் சொல் பெரும்பாலும் நவீனத்தன்மை எனும் சொல்லாடலுடன் இணைத்துப் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் இம்மாதிரியான செயல்முறைகள் ஒரு "ஒற்றைத்தரப்படுத்தப்பட்ட" நடவடிக்கைகள். கருத்தியல்கள், மதிப்பீடுகளைத் திணித்தல், ஒரு ஒற்றைப் பண்பாட்டு உலகை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கி முடுக்கி விடப்படுவனவாகவே இருக்கும். உலக வர்த்தகம் உருவான காலத்தில் இருந்தே இதன் தடயங்களைக் காணலாம். ஒவ்வொரு நுகர்பொருளும் ஒரு பண்பாட்டை வெளிப்படுத்துகிறது.

| **சமூக – வெளி இணைப்புகள்** | **காலம்** | **அரசியல் அமைப்புகளின் வடிவங்கள்** | **தொழில்நுட்பம் (உற்பத்தி கோட்பாடுகள், உற்பத்தி பாய்ச்சல்களை்)** |
|---|---|---|---|
| உள்ளூர் இணைப்புகள் | பொ.ஆ.மு. 3300 வரை | அரசுக்கு முந்தைய (சிறிய, நடுத்தர) அரசியல் அமைப்புகள், முதல் அரசியல் வளர்ச்சி | வேட்டையாடி– உணவு சேகரித்தல், வேளாண்மை உற்பத்தி தொடக்கம் |
| மண்டல இணைப்புகள் | பொ.ஆ.மு 3500 – பொ.ஆ.மு. 490 | பண்டைய அரசுகள், அவற்றின் இணைப்புகள், தொடக்க பேரரசுகள் | வேளாண்மை புரட்சியின் இரண்டாம் கட்டம்: வேளாண்மை உற்பத்திக் கொள்கைகள் முதிர்தல் |
| கண்டங்கள் கடந்த இணைப்புகள் | பொ.ஆ.மு. 490 – பொ.ஆ. 1492 | பேரரசுகள் வலுப்பெறல், முதல் வளர்ந்த அரசுகள் | வேளாண்மை உற்பத்தி கொள்கையின் மூன்றாம் கட்டம் |
| கடல் (இயைிலான) இணைப்புகள் | பொ.ஆ. 1492 – 1821 | வளர்ந்த அரசுகள் வளர்ச்சி, முதல் முதிர்ச்சியான அரசுகள் | தொழில் உற்பத்திக் கொள்கையின் முதல் கட்டம் தொழிற்புரட்சி |
| உலகளாவிய இணைப்புகள் | 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதல் 1960 – கள் 1970-கள் வரை | முதிர்ந்த அரசுகள் வலுப்பெறல், மீ-தேசிய நிறுவனங்கள் உருவாக்கம் | தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டடம், தொழில் உற்பத்திச் கொள்கையின் இறுதிக்கட்டம் |
| கோள்கள் இணைப்புகள் | 1970-கள் முதல் 21 ஆம் நூற்றாண்டு மையப்பகுதி வரை | மீ-தேசிய நிறுவனங்கள் வலுப்பெறல், அரசுகளின் இறையாண்மை மறைதல், பதிய வகையான அரசியல் ஒன்றியங்கள், | அறிவியல் - தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் தொடக்கம். இதன் இரண்டாம் கட்டம் 2030 – கள், 2040-களில் எதிர்பார்க்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவனங்களுக்கான தேடல், கோள்கள் ஆளுகை உருவாக்கம் | |

உதாரணமாக, உள்நாட்டு சந்தையில் மேற்கத்திய ஜவுளி துறை பன்னாட்டு நிறுவனங்கள் வருகையைத் தொடர்ந்துதான் இந்திய ஆடை வடிவமைப்புத் துறை "டெனிம்" ரக துணியை ஏற்றுக்கொண்டது. மேலும், தொடர்பு தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்கும் நன்றி சொல்ல வேண்டும். குறிப்பாக முகநூல், டிவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்கள் பல பகுதிகள் மற்றும் மாறுபட்ட பண்பாடுகளைச் சேர்ந்த தனிநபர்களை ஒருங்கிணைப்பதால் இந்த பரிமாற்றம் எளிதாக நிகழ்கிறது. இவ்வாறு ரத்தமும் சதையுமாக நிகழ்ந்த ஊடாட்டங்கள் தற்போது புதிய செயற்கை மற்றும் மீ வெளி ஊடாட்டங்களில் நிகழ்கின்றன. இது உலக துணைப் பண்பாடுகளின் புதிய ஒழுங்கை மாற்றி அமைப்பதில் பெரிதும் உதவுகிறது. இதன் பொருளில், சிலர் விமர்சிப்பதைப் போன்று உலகமயமாக்கல் என்பது அமெரிக்க மயமாக்கல் அல்லது மேற்கத்தியமயமாக்கல் என்பதாகக் கொள்ளமுடியாது. பண்பாட்டுச் சொல்லாடலில் அது பரஸ்பர கொடுத்து வாங்கலுக்கான ஒரு சட்டகத்தை பிரிதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே, மேற்கத்தியம் அல்லாத சமுதாயங்கள் எவ்வாறு மேற்கத்திய பண்பாட்டு அம்சங்களை எவ்வாறு தகமைக்கிறது என்பதோடல்லாமல் மேற்கத்திய அமைப்புகள் அன்னிய மதிப்பீடுகளை அனுபவப்பூரமாகவோ இல்லாமலோ எவ்வாறு உள்ளீர்த்துத் கொள்கிறது என்பதையும் பொருத்து அமைகிறது.

**அரசியல் பரிமாணம்:**

1945 இல் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்ததில் இருந்து குடிமக்கள் நலன்கள் மீதான அரசுக் கட்டுப்பாடுகள் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. இக்காலகட்டம், மனித உறவுகள் புலத்தில் அரசு சாரா அமைப்புகள், மீ-தேசிய அமைப்புகள் போன்ற அரசு – சாரா நிறுவனங்கள் முக்கியப் பங்காற்றுவது அதிகரித்து வந்துள்ளதைக் குறிக்கிறது. ஐக்கிய நாடுகள் அமைப்பு,

ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பன்னோக்கு அமைப்புகளின் உறுப்பினர்கள் அதிகரிக்கத் தொடங்கியது. சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் கம்யூனிசத்தின் வீழச்சி, மண்டல நிறுவனங்களின் அதிகரிப்பு போன்றவை இக்காலகட்டத்தில்தான் உருவானது என்பதை ஒருவர் கவனிக்கலாம். கருத்தில் ரீதியாக, தேசிய உணர்வுகளுக்குப் பதில் ஒரு பன்னாட்டுப் பண்பாடு அல்லது பெரு நகரப் பண்பாட்டை உலகமயமாக்கல் முன்வைக்கிறது. ஒரு ஒற்றை உலக அரசு சாத்தியமில்லை எனினும், யதார்த்தத்தில், நாடுகள் மத்தியிலான ஒத்துழைப்பு கணிசமான அளவு அதிகரிப்பது சாத்தியமே ஆகும். அரசு – சாரா பிரிவினரின் பங்கு தொடர்ந்து அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளின் மீதான தனது கட்டுப்பாடுகள் தளர்வதால் அரசு அமைப்புகள் தமது இறையாண்மையை இழக்க நேரிடும் என்று விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**உலகமயமாக்கலின் நிறைகள்:**

1. பொருளாதாரம், சமூகம், அரசியல், பண்பாடு அடிப்படையில் மேலும் ஒன்றையொன்று சார்ந்து ஒத்துழைக்க வேண்டிய நிலை உலக நாடுகளுக்கு உருவாகும்.
2. சுதந்திர வர்த்தகத்தால் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். போட்டி உயரும், உழைப்பு இடம் பெயரும், பொருளாதார வளம், பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு குறையும்.
3. தொழில்நுட்பம் மற்றும் அன்னிய மூலதனம் ஊடுருவலால் ஏழை நாடுகளில் பொருளாதார சமநிலை உருவாகும்.
4. வறுமையை ஒழிக்கவும் பொருளாதார வளம் பெருகவும் உதவும்.
5. பண்பாடுகளுக்கு இடையில் பரிமாற்றமும், பல் பண்பாட்டுச் சூழலும் ஊக்கம் பெறும்.

**உலகமயமாக்கலின் இடையூறுகள்:**

1. உலகமயமாக்கல் கொள்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் மிக முக்கிய விமர்சனம் ”உலகமயமாக்கலால் பணக்காரர்கள் மேலும் பணக்காரர் ஆவர்: ஏழைகள் மேலும் ஏழ்மை நிலைக்குத்தள்ளப்படுவர்.” என்பதாகும்.
2. அறிவுசார் சொத்துரிமைத் திருட்டு அதிகரிக்கும் அபாயம்.
3. மூல வளங்களின் சமத்துவமற்ற பகிர்வு

4. பன்னாட்டு குழும நிறுவனங்களின் விருப்பங்களை நிறைவேற்றும் நிலைக்கு அரசுகள் தள்ளப்படும்.

"முதல் இடத்துக்கான போட்: உலகமயமாக்கலின் உண்மைக் கதை" எனும் புத்தகத்தில், உலகமயமாக்கல் என்பது "உலகைச் சுருக்கி, தொலைவுகளைக் குறைத்து மூடிய ஒரு நிலையை உருவாக்குவதுதான் பயன்கள் அடிப்படையில் மட்டும் உலகின் எந்த ஒரு மூலையில் உள்ள ஒருவரும் மறு மூலையில் உள்ள ஒருவருடன் தொடர்புகொள்வதை அனுமதிக்கிறது" என்று தாமஸ் லார்ஸன் கூறியுள்ளார்.

"மிக அண்மைக்காலமான 1960 முதல் 1998 வரையான காலக்கட்டத்தில் ஏற்பட்ட உலக வர்த்தக, முதலீடுகளின் துரித வளர்ச்சி நாடுகளுக்கு உள்ளும் நாடுகளுக்கு இடையிலும் என இரு பக்கங்களிலும் சமத்துவமின்மையை அதிகரிக்கச் செய்துள்ளது. உலக மக்கள் தொகையில் வெறும் 20 விழுக்காடாக உள்ள பணக்காரர்கள் உலகின் மொத்த செல்வத்தில் 86 விழுக்காட்டினை அனுபவிக்கின்றனர். ஆனால் 80 விழுக்காடு ஏழைகள் உலக செல்வத்தில் வெறும் 16 விழுக்காட்டினை மட்டுமே அடைகிறார்கள்" என்று யு.என்.டி.பி. அறிக்கை கூறுகிறது.

**இந்தியாவும் உலகமயமாக்கலும்:**

இந்தியாவைப் பொறுத்தவரை உலகமயமாக்கல் என்பது இந்திய பொருளாதாரத்தினை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பது என்ற அளவில் புரிந்து கொள்ளப்படுகிறது. எனவே, இந்தியாவின் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் அன்னிய நேரடி மூலதனத்தினை (எப்.டி.ஐ) அனுமதிப்பதை அடிநாதமாகக் கொண்ட ஒரு சூழலை உருவாக்கக்கூடிய வகையில் இந்திய பொருளாதாரம் திறந்து விடப்பட வேண்டும் என்பதை இக்கருத்து வலியுறுத்துகிறது. இதனால் உள்நாட்டுச் சந்தையில் பன்னாட்டு குழும நிறுவனங்கள் நுழைவதற்குத் தடையாக இருக்கும் கட்டுப்பாடுகளையும் தடைகளையும் அகற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

பொருளாதார திசைவழியில் இந்தியா அண்மைக்காலமாக காணும் ஏற்றம். 1991 இல் பொருளாதார மந்தத்தைத் தொடர்ந்து, மிகப்பெரிய அளவில் நிதிநிலை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில் கொண்டுவரப்பட புதிய பொருளாதாரக் கொள்கையினால் (நியூ எக்கனாமிக் பாலிசி) விளைந்த ஏற்றம் ஆகும். அது, பொதுவுடமை மாதிரி தடைகளில் இருந்து இந்தியப் பொருளாதாரத்தை விடுவித்து, இந்திய பொருளாதாரத்தின் அடித்தளக்கட்டமைப்பை மாற்றி அமைத்தது. இதனால் ஏழைகள் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. அன்னிய மூலதனத்துக்கு இடமளித்து ஒரு ஏற்றுமதிசார் சூழலை ஆதரிக்கும் கொள்கைகள் கொண்ட ஒரு நாட்டில் வரவு செலவு சமநிலை (பேலன்ஸ் ஆ.்.ப் பேமெண்ட்ஸ்). புதிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பதாக அமையும். பணவீக்கம் ஆண்டுக்கு 17 விழுக்காடு அளவுக்கு உயரும்போதும் செலாவணி கையிருப்பு சுமார் பில்லியன் அளவை எட்டும்போதும் நெருக்கடி உருவாகிறது. மேலும், நிதி பற்றாக்குறை உருவாகி, பொருளாதாரம் நிலை குலையும்.

இந்தியா 1991 முதல் பின்பற்றும் புதிய பொருளாதாரக் கொள்கை தாராளவாதம், தனியார்மயம், உலகமயமாக்கல் (எல்.பி.ஜி) என்றும் அழைக்கப்படுகிறது. தேசிய பொருளாதாரத்தை வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்துக்குத் தக்கவும் உலகளாவிய போட்டிக்குத் தக்கவும் மாற்றுவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் அபரிமிதமான மாற்றத்துக்குத் தொழிற்துறை, வர்த்தகம், நிதி மூன்றும் உள்ளாகிறது. உள்நாட்டிலும் வெளி உலகிலும் ஏற்படும் பொருளாதார நிர்ப்பந்தங்கள் காரணமாக உலகச் சந்தையின் வேகத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் வேகமான மாற்றங்களைக் கொண்டுவருவது அவசியமாகிறது. எல்.பி.ஜி – யின் விளைவாக 1990- களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களால் ஏற்பட்ட விளைவுகளைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

**பொதுத்துறையின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள மூன்று தொழிற்பிரிவுகள்:**

1. ஆயுதங்கள், வெடிமருந்துகள், ராணுவத் தளவாடங்கள், ராணுவ விமானத் தளவாடங்கள், ராணுவ விமானத் தளவாடங்கள், போர்க்கப்பல்கள்.
2. அணு ஆற்றல்
3. ரயில் போக்குவரத்து

**மதிப்பிழப்பு (டிவேல்யுவேசன்)** : 18 – 19 என்ற அளவில் முக்கிய அன்னிய செலவாணிகளுக்கு எதிராக தேசிய செலவாணியின் மதிப்பு குறைக்கப்பட்டது உலகமயமாக்கலை நோக்கி மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கை ஆகும். வரவு செலவு சமநிலை நெருக்கடியைத் தீர்க்க இது உதவுகிறது.

**முதலீடுகளை திரும்பப் பெறுதல் (டி இன்வெஸ்ட்மெண்ட்):** தனியார்மயத்தை ஊக்குவிக்கும் வகையில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை அரசு தனியாருக்கு விற்கத் தொடங்கியது.

**உரிமக் கட்டுப்பாடுகள் (லைசன்ஸ் ராஜ்) அகற்றம்:** தாராளச் சந்தையை ஊக்குவிக்கும் வகையில் தொழில்கள் தொடங்க விதிக்கப்பட்டிருந்த ஏராளமான உரிம முறைகள் அகற்றப்பட்டன. இதனால் ஏராளமான தொழில்கள் அரசின் உரிமக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிக்கப்பட்டன.

அன்னிய நேரடி முதலீடு (எ.ஃப்.டி.ஐ): அன்னிய நிறுவனங்கள் இந்திய சந்தைகளில் நேரடியாக முதலீடுகள் செய்வதை ஊக்குவிக்கும் வகையில் அன்னிய முதலீடுகள் தாராளமாக திறந்து விடப்பட்டன. 2018 இல் ஒற்றை வணிக முத்திரை சில்லறை வணிகம், கட்டுமானம் உள்ளிட்ட பல தொழில்களில் 100% அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**ஏகபோக வர்த்தகத் தடைச் சட்டம் (எம்.ஆர்.டி.பி) நீக்கம்:**

இந்தியாவில் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகளைத் தடுக்கவும் தொழில்களில் ஏகபோக ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவும் ஏகபோக வர்த்தகத் தடைச் சட்டம், 1969 (எம்.ஆர்.டி.பி) கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் தாராளமயத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்திய அரசால் நீக்கப்பட்டது. இதற்குப் பதிலாக, அதாவது ஏகபோகங்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குப் பதிலாக போட்டியை ஊக்குவிக்கும் வகையிலான போட்டிகள் சட்டம், 2002 இல் கொண்டுவரப்பட்டது.

**உரிமம் பெறுவது சட்டப்பூர்வமாக்கப்பட்டுள்ள தொழில்கள் பின்வருமாறு:**

- மது பானங்கள் வடிப்பு ஆலை
- புகையிலைப் பொருள்கள் மற்றும் அதன் துணைபொருள்கள் உற்பத்தி
- மின்னணு விண்வெளி மற்றும் ராணுவ தளவாடங்கள்: அனைத்து வகைகளும்
- வெடி பொருள்கள், பாதுகாப்பு பியூஸ்கள், துப்பாக்கி பவுடர், நைட்ரோ செல்லுலோஸ், தீப்பெட்டிகள்.
- அபாய வேதிப் பொருள்கள்
- மருத்துகள், மருந்து பொருள்கள்